மார்ச் 2021

winmeen.com
*Learning Leads to Ruling*

# நடப்பு நிகழ்வுகள்










**1. ஆண்டுதோறும், 'பாகுபாடுகள் ஒழிப்பு நாள் – Zero Discrimination Day' அனுசரிக்கப்படும் தேதி எது?**

**அ) மார்ச் 01 ☑**

ஆ) மார்ச் 02

இ) மார்ச் 03

ஈ) மார்ச் 04

✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 1 அன்று UNAIDSஆல் உலகம் முழுவதும் 'பாகுபாடுகள் ஒழிப்பு நாள்' அனுசரிக்கப்படுகிறது. 2030ஆம் ஆண்டுக்குள் AIDS'ஐ ஒரு பொதுநல அச்சுறுத்தலாக எண்ணி அதனை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமெனக்கொண்ட ஐநா அமைப்புதான் இந்த UNAIDS.

---

**2.பன்னாட்டு துருவக்கரடிகள் நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**

அ) பிப்ரவரி 25

**ஆ) பிப்ரவரி 27 ☑**

இ) பிப்ரவரி 28

ஈ) மார்ச் 01



✓ பன்னாட்டு துருவக்கரடிகள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் பிப்.27 அன்று துருவக்கரடியின் பாதுகாப்பு நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கொண்டாடப்படுகிறது. பன்னாட்டு துருவக்கரடிகள் நிறுவனடிக்கால் இந்நாள் ஏற்பாடுசெய்யப்படுகிறது. புவி வெப்பமடைதல் மற்றும் உருகிவரும் கடல்பனிக்கட்டிகள் ஆகியவை துருவக்கரடிகளின் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3.30ஆவது அட்ரியாடிக் பியர்ல் போட்டி நடைபெற்ற நாடு எது?**

அ) இந்தியா

ஆ) ஜப்பான்

**இ) மாண்டினீக்ரோ ☑**

ஈ) இத்தாலி



✓ முப்பதாவது அட்ரியாடிக் பியர்ல் போட்டியானது மாண்டினீக்ரோவின் புத்வாவில் நடைபெற்றது. 5 தங்கப்பதக்கம், 3 வெள்ளிப்பதக்கம் மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கம் என மொத்தம் 10 பதக்கங்களுடன் இந்திய மகளிர் அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதைத்தொடர்ந்து உஸ்பெகி–ஸ்தான் 2ஆம் இடத்திலும், செக் குடியரசு 3ஆம் இடத்திலும் உள்ளது.

---

**4.நடப்பாண்டு (2021) ஆசிய பொருளாதார பேச்சுவார்த்தைக்கு இணைந்து தலைமை தாங்கிய இந்திய அமைப்பு எது?**

**அ) புனே பன்னாட்டு மையம் ☑**

ஆ) ஐஐடி – மெட்ராஸ்

இ) ஐஐம் – ஆமதாபாத்

ஈ) BITS பிலானி

✓ 2021 ஆசிய பொருளாதார பேச்சுவார்த்தை நிகழ்வுக்கு இந்தியாவின் புனே பன்னாட்டு மையம் இணைந்து தலைமைதாங்கியது. இந்நிகழ்வி–ல், மத்திய வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் மற்றும் ஜப்பான், ஆஸ்திரேலியா, மாலத்தீவுகள், மொரீஷியஸ் மற்றும் பூடான் ஆகிய நாடு–களைச்சார்ந்தோர் பங்கேற்றனர்.

✓ ஆசிய பொருளாதார பேச்சுவார்த்தை என்பது வெளியுறவு அமைச்சகத்தி–ன் முதன்மை புவி–பொருளாதாரம் சார்ந்த மாநாடு ஆகும்.

**5.VL–SRSAM என்பது எந்த வகை ஏவுகணையாகும்?**

அ) வானிலிருந்து தாக்கும் ஏவுகணை

ஆ) தரையிலிருந்து தாக்கும் ஏவுகணை

இ) கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை

**ஈ) தரையிலிருந்து வானுக்குத் தாக்கும் ஏவுகணை ☑**



✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது VL–SRSAM (Vertical Launch Short Range Surface to Air Missile) ஏவுகணையை இருமுறை வெற்றிகரமாக சோதனைசெய்துள்ளது. இந்த ஏவுகணையை இந்திய கடற்படையில் பணியமர்த்துவதற்காக DRDO இதனை சிறப்பு முறையில் வடிவமைத்துள்ளது. பல்வேறு வான்வழி அச்சுறுத்தல்களை எதிர்த்து தாக்குவதற்காக இந்த ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது.

---

**6.அண்மையில் NITI ஆயோக் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியால் அறிமுகப்படுத்தப்பட்ட, 'DigiBoxx' என்றால் என்ன?**

**அ) சொத்து மேலாண்மை தளம் ☑**

ஆ) ஆவணக்களஞ்சியம்

இ) சமூக ஊடகம்

ஈ) செய்தியிடல் செயலி

✓ NITI ஆயோகின் தலைமைச் செயல் அதிகாரியான அமிதாப் காந்த் இந்தி–யாவின் முதல் டிஜிட்டல் சொத்து மேலாண்மை தளமான 'டிஜிபாக்ஸை' அறிமுகப்படுத்தியுள்ளார். இது ஒரு டிஜிட்டல்வழியிலான கோப்பு சேமிப்பு, பகிர்வு & மேலாண்மை மென்பொருளாகும். இது, அனைத்து கோப்புக–ளையும் ஒரு மையப்படுத்தப்பட்ட இடத்தில் சேமிப்பதற்கான ஒரு பாது–காப்பான வழியை வழங்குகிறது.

---

**7. 'இ–தர்தி ஜியோ' என்ற வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

**அ) வீட்டுவசதி & நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம் ☑**

ஆ) உள்துறை அமைச்சகம்

இ) புவி அறிவியல் அமைச்சகம்

ஈ) எரிசக்தி அமைச்சகம்



✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சரான ஹர்தீப் சிங் பூரி, அண்மையில், 'இ–தர்தி ஜியோ' இணையதளத்தை தொடங்கிவைத்தார். இம்மேலாண்மை தகவலமைப்பில், வரைபடங்கள் மற்றும் குத்தகை வரைவுகள்போன்ற சொத்துசார்ந்த வரைபடங்களை ஒருங்கிணைத்து, அவற்றை புவியியல் தகவல் அமைப்புடன் கூடிய ஓர் அமைப்பாக மாற்றுவதை இந்தத்தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**8.உள்மாநில மின்சார–பரிமாற்ற திட்டத்தை மேம்படுத்துவதற்காக அஸ்ஸாம் மாநிலத்திற்கு $304 மில்லியன் கடனை வழங்கவுள்ள நிறுவனம் எது?**

அ) ADB

ஆ) உலக வங்கி

**இ) AIIB ☑**

ஈ) புதிய வளர்ச்சி வங்கி

✓ இந்தியாவும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியும் (AIIB) அஸ்ஸாம் உள்மாநில மின்சார–பரிமாற்ற அமைப்பை மேம்படுத்தும் திட்டத்திற்காக $304 மில்லியன் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்தத் திட்டம் துணை மின்நிலையங்களை நிர்மாணிப்பதையும் தேவையான பரிமா–ற்ற வடங்களை அமைப்பதையும் நோக்கமாக கொண்டுள்ளது.

---

**9.NASA & ஜெர்மன் விண்வெளி ஆய்வுமையத்தின் ஓர் அண்மைய ஆய்வின்படி, பூமியில் காணப்படும் சில நுண்ணுயிரிகள், பின்வரும் எந்தக் கோளில் உயிர்வாழக்கூடும்?**

அ) வியாழன்

ஆ) வெள்ளி

**இ) செவ்வாய் ☑**

ஈ) புதன்



✓ NASA மற்றும் ஜெர்மன் விண்வெளி ஆய்வு மையத்தின் ஓர் அண்மைய ஆய்வின்படி, பூமியில் காணப்படும் சில நுண்ணுயிரிகளால் செவ்வாய் கோளில் உயிர்வாழக்கூடும். ஓர் அறிவியல்பூர்வ பலூனைக்கொண்டு பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளை புவியின் அடுக்கு மண்டலம் வரை ஏவுவதன்மூலம் செவ்வாய் போன்ற சூழ்நிலையில் அவை எப்படி இருக்கும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் சோதித்தனர்.

---

**10.** **இந்தியாவின் முதல் கடலடி சுரங்கப்பாதை கட்டப்படுகிற நகரம் எது?**

அ) சென்னை

ஆ) கொச்சின்

**இ) மும்பை ☑**

ஈ) கொல்கத்தா



- ✓ மும்பை நகரத்தின் கடலோர சாலைகள் திட்டத்தின் ஒருபகுதியாக இந்தியாவின் முதல் கடலடி சுரங்கப்பாதையானது மும்பையில் கட்டப்பட உள்ளது. இது, வரும் 2023ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ 2.07 கிமீ நீளத்தைக்கொண்டுள்ளன இந்த இரட்டைச்சுரங்கப்பாதைகள், கடல்படுகைக்கு 20 மீட்டர் கீழே அமைந்திருக்கும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 19 செயற்கைக்கோள்களுடன் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது பிஎஸ்எல்வி–சி 51 ராக்கெட்: செயற்கைக்கோளில் பிரதமர் மோடி படம்.**

பிரேசிலின் அமேசோனியா உள்ளிட்ட 19 செயற்கைக்கோள்களுடன், ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டா சதீஸ் தவண் ஏவுதளத்தில் இருந்து இன்று காலை (28.02.2021) பிஎஸ்எல்வி–சி 51 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. பிரதமர் மோடியின் புகைப்படம் பொறிக்கப்பட்ட சதீஸ் தவண் செயற்கைக்கோளும் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது. 2021–ம் ஆண்டில் இஸ்ரோ விண்ணுக்கு அனுப்பும் முதல் ராக்கெட் இதுவாகும். ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணுக்கு ஏவப்படும் 78 – வது ராக்கெட் மற்றும் பிஎஸ்எல்வி பிரிவில் 53 – வது ராக்கெட் என்பது குறிப்பிடத்தக்கது. விண்வெளி ஆய்வில் தனியார் துறைகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்தில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. வெளிநாட்டு செயற்கைக்கோள்களை வர்த்தக ரீதியாக அனுப்புவதற்காக 2019–ம் ஆண்டு என்எஸ்ஐஎல் (New Space India Limited) என்ற அமைப்பும், உள்நாட்டில் வடிவமைக்கப்படும் செயற்கைக் கோள்களை அனுப்ப 2020–ல் இன்ஸ்பேஸ் என்ற அமைப்பும் நிறுவப்பட்டன. அதன்பலனாக தற்போது ராக்கெட், செயற்கைக்கோள் தயாரிப்பில் அதிக அளவிலான தனியார் மற்றும் கல்வி சார்நிறுவனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள முதல் ஏவுதளத்தில் இருந்து பிஎஸ்எல்வி – சி 51 ராக்கெட் செலுத்தப்பட்டது. பிஎஸ்எல்வி – 51 ராக்கெட் பிரேசிலின் அமேசானியா செயற்கைக்கோள் மட்டுமின்றி, சென்னையைச் சேர்ந்த ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா நிறுவனத்தின் எஸ்டி சாட் செயற்கைக்கோள் உள்ளிட்ட19 செயற்கைக்கோள்களைச் சுமந்து கொண்டு வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. இஸ்ரோ நிறுவனத்தின் வர்த்தகப் பிரிவான நியூஸ்பேஸ் இந்தியா லிமிட் (என்எஸ்ஐஎல்) சார்பில் முதல் முறையாக வர்த்தகரீதியாக (வணிகரீதியாக) பிரேசில் நாட்டின் செயற்கைக்கோள் ஏவப்படுகிறது. இதன் மூலம் முதல் முறையாக இஸ்ரோ நிறுவனத்துக்கு அந்நியச் செலாவணியும் கிடைக்கும். இந்த பிஎஸ்எல்வி சி–51 ராக்கெட்டில் பிரேசில் நாட்டின் அமேசோனியா–1 செயற்கைக்கோள், இந்தியாவின், சதீஸ் தவண் செயற்கைக்கோள், ஜிடி சாட், ஜிஹெச்ஆர்சிஇ செயற்கைக்கோள், ஸ்ரீ சக்தி செயற்கைக்கோள், பாதுகாப்புத் துறையின் சிந்து நேத்ரா ஆகிய செயற்கைக்கோள்கள் செலுத்தப்பட்டுள்ளன. இது தவிர அமெரிக்காவின் ஸ்பேஸ் பிஇஇ, மெக்சிகோவின் நானோ கனெக்ட் செயற்கைக்கோள்கள் என மொத்தம் 19 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன. ஸ்பேஸ்கிட்ஸ் இந்தியா, யுனிட்டி சாட் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள 3 செயற்கைக்கோள்களை, கோவையைச் சேர்ந்த ஸ்ரீ சக்தி இன்ஸ்ட்டியூட் பொறியியல் கல்லூரி, ஸ்ரீபெரும்புதூர் ஜேபிஆர் கல்லூரி, நாக்பூர் ஜிஹெச் ரெய்சோனி கல்லூரியின் செயற்கைக்கோள்கள் அனுப்பப்படுகின்றன. இதில் பிரேசிலின் அமேசானியா செயற்கைக்கோள் அமேசான் காடு அழிப்புத் திட்டங்களைக் கண்காணிக்கவும், காடுகளின் சூழல், வேளாண் சூழல் ஆகியவற்றை ஆய்வு செய்யவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அமேசானியா செயற்கைக்கோள் 637 கிலோ எடை கொண்டதாகும். இந்த பிஎஸ்எல்வி ராக்கெட் 4 படிநிலைகளாக உருவாக்கப்பட்டுள்ளது. முதல் மற்றும் 3–ம் படிநிலையில் திடநிலை எரிபொருளும், 2–வது மற்றும் 4–வது படிநிலையில் திரவ நிலையில் எரிபொருளும் நிரப்பப்பட்டுள்ளன. இந்த செயற்கைக்கோள்கள் விண்ணிலிருந்து புறப்பட்ட 17 நிமிடங்களில் பிஎஸ்4 இன்ஜின் செயல்பாடு நிறுத்தப்பட்டு, பிரதான செயற்கைக்கோளான பிரேசிலின் அமேசோனியா செயற்கைக்கோள் நிலை நிறுத்தப்படும். அதன்பின் 58 நிமிடங்களுக்குப் பின் ராக்கெட் இன்ஜின் மீண்டும் இயக்கப்பட்டு, மீதமுள்ள 18 செயற்கைக்கோள்களையும் அடுத்த 4 நிமிடங்களில் நிலைநிறுத்தும். ஒட்டுமொத்தமாக ராக்கெட் 2 மணி நேரம் 8 நிமிடங்கள் பயணிக்கும். இந்த திட்டத்தில் ஏவப்பட்ட சதீஷ் தவண் சாட் நானோ செயற்கைக்கோளில் பிரதமா' நரேந்திர மோடியின் உருவப்படம் பொறிக்கப்பட்டுள்ளது. அதனுடன் 25,000 இந்தியா'களின் பெயா'கள் மற்றும் டிஜிட்டல் வடிவ பகவத் கீதை வாசகங்கள் இடம்பெற்றுள்ளன.

**2. பிஎஸ்எல்வி 50–வது வெற்றி:**

விண்ணில் ஏவப்பட்டுள்ள சதீஷ் தவான் சாட் நானோ செயற்கைக்கோளில் பிரதமர் நரேந்திர மோடியின் உருவப்படம் பொறிக்கப்பட்டுள்ளது. அதனுடன் இஸ்ரோ தலைவர் கே.சிவன், விண்வெளித் துறை செயலர் ஆர்.உமாமகேஸ்வரன் உட்பட 25 ஆயிரம் இந்தியர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், டிஜிட்டல் வடிவிலான பகவத் கீதை வாசகங்களும் இடம்பெற்றுள்ளன. பிஎஸ்எல்வி வகை ராக்கெட்டின் 50–வது வெற்றி இதுவாகும். இதுவரை ஏவப்பட்ட 53 பிஎஸ்எல்வி ராக்கெட்களில் 2 தோல்வியும், ஒன்று பகுதி தோல்வியும் அடைந்துள்ளன. பிஎஸ்எல்வி–சி51, என்எஸ்ஐஎல் நிறுவனத்தின் மூலம் வணிகரீதியாக செலுத்தப்படும் முதல் ராக்கெட். எனினும், இதற்கு முன்பு 2015–ம் ஆண்டு ஆன்ட்ரிக்ஸ் நிறுவனம் மூலம் சிங்கப்பூருக்கு சொந்தமான டெலியோஸ் உட்பட 6 செயற்கைக் கோள்களை பிஎஸ்எல்வி சி–29 ராக்கெட் மூலம் இஸ்ரோ விண்ணில் செலுத்தியது குறிப்பிடத்தக்கது. பிரதமர் நரேந்திர மோடி தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'வணிகரீதியான முதல் பிஎஸ்எல்வி–சி51 திட்டத்தின் வெற்றிக்கு என்எஸ்ஐஎல் மற்றும் இஸ்ரோவுக்கு வாழ்த்துகள். இதுநம்நாட்டின் விண்வெளி சீர்திருத்தங்களில் புது சகாப்தத்தை ஏற்படுத்துகிறது. மேலும், 4 சிறியவை உட்பட 18 துணை செயற்கைக் கோள்கள் அனுப்பப்பட்டுள்ளன. இவை நமது இளைஞர்களின் ஆற்றல் மற்றும் கண்டுபிடித்தல் திறனை வெளிகாட்டுகிறது' என குறிப்பிட்டுள்ளார்.

பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ.

இஸ்ரோவின் பிஎஸ்எல்வி சி–50ராக்கெட்:

தகவல் தொடர்புக்காக, இஸ்ரோ சார்பில் 2011–ம் ஆண்டு செலுத்தப்பட்ட ஜிசாட்–12 செயற்கைக்கோளின் ஆயுட்காலம் முடிந்துவிட்டது. அதற்கு மாற்றாக அதிநவீன சிஎம்எஸ்–1 (ஜிசாட்–12ஆர்) செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்தது.

இந்த செயற்கைக்கோள் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் மையத்தின் 2–வது ஏவுதளத்தில் இருந்து பிஎஸ்எல்வி சி–50 ராக்கெட் மூலம் இன்று (டிச.17, 2020) மதியம் 3.41 மணிக்கு விண்ணில் ஏவப்படவுள்ளது.

சிஎம்எஸ்–1 செயற்கைக்கோளின் ஆயுட்காலம் 7 ஆண்டுகளாகும். இதிலுள்ள விரிவுபடுத்தப்பட்ட 'சி பேண்ட் 'அலைக்கற்றைகள், இந்திய நிலப்பரப்பு பகுதிகளுடன், அந்தமான்–நிகோபார் மற்றும் லட்சத் தீவுகள் வரை தற்போதுள்ள தொலைத்தொடர்பு சேவையை மேம்படுத்தி வழங்கஉதவும் என இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

கல்வி, மருத்துவம் ஆகிய பணிகளுக்குத் தேவையான தரவுகளை பெறுவதற்காக இந்த செயற்கைக்கோள் அனுப்பப்பட்டுள்ளது. இணையவழிக்கல்வி, பேரிடர் கண்காணிப்பு மற்றும் செல்போன் சேவையை சிஎம்எஸ்–01 செயற்கைகோள் எளிதாக்கும்.

1) இது இந்தியாவின் 42வது தொலைத்தொடர்பு செயற்கைக்கோள் ஆகும்.
2) பிஎஸ்எல்வி சி50 ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஏவப்படும் 77 ராக்கெட்டாகும்.

**3. பிஎஸ்எல்வி சி–49 ராக்கெட்:**

இஸ்ரோவின் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோளான இஓஎஸ்–01 (EOS–01) – 1 உள்ளிட்ட 10 செயற்கைக்கோள்களுடன் இஸ்ரோவின் பிஎஸ்எல்வி சி–49 ராக்கெட் இன்று மாலை (நவ.7, 2020) விண்ணில் ஏவப்படுகிறது. புவி கண்காணிப்புக்காக தயாரிக்கப்பட்ட அதிநவீன இஓஎஸ்–1 செயற்கைக்கோளை பிஎஸ்எல்வி சி–49 ராக்கெட் மூலம்விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டது. இந்த ராக்கெட் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் மையத்தின் முதல் ஏவுதளத்தில் இருந்து இன்று (நவ.7, 2020) மாலை 3.02 மணிக்கு விண்ணில் ஏவப்படஉள்ளது. முதன்மை செயற்கைக்கோளான இஓஎஸ், விவசாயம், பேரிடர் மேலாண்மை, காடுகள்கண்காணிப்பு ஆகிய பணிகளுக்கு பயன்படும். இதிலுள்ள சிந்தடிக் அப்ரேச்சர் ரேடார் மூலம் அனைத்து பருவநிலையிலும் படங்களை எடுக்க முடியும். இந்த ராக்கெட்டில் லிதுவேனியாவின் ஒரு செயற்கைக்கோள், லக்சம்பர்க் மற்றும்

அமெரிக்காவைச் சேர்ந்த தலா 4 லெமூர் செயற்கைக்கோள் என மொத்தம் 9 வெளிநாட்டு செயற்கைக்கோள்கள் வணிகரீதியாக விண்ணில் செலுத்தப்படுகின்றன.

**4. கல்வி, வேலைவாய்ப்பில் வன்னியர்களுக்கு 10.5% உள் இடஒதுக்கீடு மசோதாவுக்கு ஆளுநர் (பன்வாரி லால் புரோஹித்) ஒப்புதல்.**

கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் வன்னியர்களுக்கு 20 சதவீதம் தனி இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என பாமக நீண்டகாலமாக கோரி வந்தது. இதற்காக பல்வேறு போராட்டங்களும் நடத்தப்பட்டன. முதல்வர் பழனிசாமியை பாமகநிர்வாகிகள் சந்தித்து, இதுதொடர்பாக மனுக்களையும் வழங்கினர். இதைத் தொடர்ந்து, தமிழகத்தில் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்துவது தொடர்பான விவரங்களை சேகரிக்க, நீதிபதி குலசேகரன் தலைமையில் ஆணையம் அமைத்து முதல்வர் உத்தரவிட்டார். அந்த ஆணையம், சாதி வாரி கணக்கெடுப்பு தொடர்பாக ஆலோசனை நடத்தி வருகிறது. இந்நிலையில், வன்னியர்களுக்கு 10.5 சதவீத உள்ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் சட்டமசோதா, கடந்த 26–ம் தேதி, 2021 இல் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. மிகவும் பிற்பட்டோர் வகுப்பினருக்கான 20 சதவீத இடஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.5 சதவீதம், சீர்மரபினருக்கு 7 சதவீதம், இதரமிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 2.5 சதவீதம் வழங்கசட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**5. நீதிபதி குலசேகரன் ஆணையம்:**

அரசின் நலத்திட்ட உதவிகள் அனைத்து பிரிவினருக்கும் சென்றடைவதை உறுதிப்படுத்தவும், சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் உள்ள 69 சதவீத இட ஒதுக்கீடு சம்பந்தமான வழக்குகளை எதிர்கொள்ள தேவையான சாதிவாரி புள்ளி விவரங்களை பெறுவதற்கும் தமிழகம் முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த நீதிபதி ஏ.குலசேகரன் தலைமையில் ஆணையம் அமைத்து (டிசம்பர் 7, 2021) முதல் – அமைச்சர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டார். நீதிபதி குலசேகரன் கூறியதாவது: எந்த அடிப்படையில் சாதிவாரி கணக்கெடுப்பு தொடர்பான பணிகளை மேற்கொண்டால் அதை வெற்றிகரமாக முடிக்க முடியும் என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. கடந்த 1970–ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சட்டநாதன் ஆணையம், 1985–ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அம்பாசங்கர் ஆணையம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

**6. பளுதூக்கும் போட்டிகளில் இந்தியாவின் முதல் பெண் சூப்பர் ஸ்டாரான குஞ்சராணி தேவி பிறந்தநாள் இன்று (மார்ச் 1).**

பளுதூக்கும் போட்டியில் இந்தியப் பெண்களாலும் சாதிக்க முடியும் என்பதை முதலில் நிரூபித்தவர் குஞ்சராணி தேவி. 'பெண் ஹெர்குலஸ்' என்று செல்லமாக அழைக்கப்படும் இவர், மணிப்பூரில் உள்ள இம்பால் நகரில் 1968–ம் ஆண்டு பிறந்தார். சிறு வயதிலேயே ஹாக்கி, கால்பந்து, ஓட்டம், வலுதூக்கும் போட்டி (பவர் லிஃப்டிங்) என்று பல்வேறு விளையாட்டுகளில் பங்கேற்று வந்தார். 1982–ம் ஆண்டில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் பி.டி.உஷா பதக்கங்களாக அள்ளிக் குவிக்க, அவரைப் போலவே தானும் விளையாட்டில் பெரிய நட்சத்திரமாக வர விரும்பினார். இந்தச் சூழலில், பள்ளியில் இருந்த குஞ்சராணியின் பயிற்சியாளர், சற்று குள்ளமான அவரது உடல்வாகு, வலுதூக்கும் போட்டிகளுக்கு ஏற்றதாக இருப்பதாக அறிவுரை கூறியுள்ளார். பயிற்சியாளரின் இந்த அறிவுரையை ஏற்ற குஞ்சராணி தேவி, இந்த விளையாட்டில் பயிற்சியை தீவிரப்படுத்தினார். 1985–ம் ஆண்டில் நடந்த முதலாவது தேசிய விளையாட்டுப் போட்டியில் பளுதூக்கும் (வெயிட் லிஃப்டிங்) போட்டி சேர்க்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, வலுதூக்கும் போட்டிக்கு பதிலாக பளுதூக்கும் போட்டிகளில் கவனம் செலுத்தினார் குஞ்சராணி தேவி. 1987–ம் ஆண்டில் நடந்த தேசிய விளையாட்டுப் போட்டியில் பளுதூக்கும் பிரிவில் 2 தேசிய சாதனைகளைப் படைத்தவர், அதன்பிறகு சர்வதேச போட்டிகளில் தடம் பதித்தார். 1990 மற்றும் 1994–ல் நடந்த ஆசிய போட்டிகளில் வெண்கலப் பதக்கம் வென்ற அவர், உலக பளுதூக்கும் போட்டிகளில் பல்வேறு பதக்கங்களை வென்றுள்ளார். மத்திய அரசின் அர்ஜுனா விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை வென்றுள்ள குஞ்சராணி தேவி, வடகிழக்கு மாநில விளையாட்டு வீரர்களிடையே பெரும் நம்பிக்கையை விதைத்துள்ளார்.

**7.இந்திய வம்சாவளி மருத்துவர்கள் மாநாட்டில் முதியோர் நல மருத்துவர் நடராசனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது: 40 ஆண்டுகால மருத்துவ சேவைக்கு பாராட்டு.**

உலகளவில் உள்ள இந்திய வம்சாவளி மருத்துவர்கள் மாநாடு, காணொலி மூலம் கடந்த பிப்ரவரி 27, 28–ம் தேதிகளில் நடைபெற்றது.

**8. பேரூராட்சிகளுக்கான திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளுக்காக தாம்பரம் அகரம்தென் கிராமத்தில் 4 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு.**

தாம்பரம் பகுதியில் உள்ள பேரூராட்சிகளுக்கான திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளுக்காக தாம்பரம் அகரம்தென் கிராமத்தில் 4 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9. திருக்குறளை ஹூப்ரு (யூதர்களின் மொழி) மொழியில் மொழிபெயர்க்க திட்டம்.**

திருக்குறளை ஹூப்ரு மொழியில் மொழிபெயர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாக தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் உலக தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் கோ. விசயராகவன் கூறியுள்ளார். தமிழ்நாடு அரசின் உலக தமிழாராய்ச்சி நிறுவனம், தஞ்சாவூர் பாரத் கல்லூரி, ஆஸ்திரேலியா மெல்போர்ன் தமிழ்ச் சங்கம், இளங்காடு நற்றமிழ்ச் சங்கம், தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளை ஆகியவற்றின் சார்பில், தஞ்சாவூர் அரண்மனை வளாகத்திலுள்ள அரசர் பள்ளியில் உலக திருக்குறள் மாநாடு பிப்ரவரி 26 முதல் பிப்ரவரி 28 ஆம் தேதி வரை நடை பெற்றது. தமிழக அரசு சார்பில் சீனம், வங்காளம், இந்தி ஆகிய மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**10. மழைநீரை சேகரிக்க 100 நாள் இயக்கம் 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு.**

பெரும்பான்மையான மாநிலங்களில் மே, ஜூன் மாதங்களில் மழை பெய்கிறது. இப்போதே மழை நீர் சேகரிப்புக்காக 100 நாள் இயக்கத்தை நாம் தொடங்க வேண்டும். இதற்காக இன்னும் சில நாட்களில் ஜல சக்தி துறை சார்பில் ஜல் சக்தி அபியான் திட்டம் தொடங்கப்படும். இதன்படி, 'எப்போது, எங்கு மழை பெய்தாலும் அந்த மழைநீரை சிந்தாமல் சிதறாமல் சேகரிக்க வேண்டும்' என்ற லட்சியத்தை அனைவரும் கண்ணும் கருத்துமாக கடைப்பிடிக்க வேண்டும். இந்த லட்சிய திட்டத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும்.

**11. குழந்தைகளுக்கான ராமாயணம் எழுதிய 10 வயது சிறுவன்.**

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரைச் சேர்ந்த சிறுவன் ஆயுஷ் குமார் குந்தியா. வயது 10. கரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த கடந்த ஆண்டு மார்ச் மாத இறுதியில் நாடு முழுவதும் ஊரடங்கு அமல்படுத்தப் பட்டது. அந்தக் கால கட்டத்தில், டிடி தொலைக் காட்சியில் ராமாயணம் ஒளிபரப்பானது. அதைப் பார்த்து குழந்தைகளுக்காக 'பிலகா ராமாயணா' (குழந்தைக்கான ராமாயணம்) என்ற தலைப்பில் 104 பக்கங்களுக்கு தனது தாய்மொழியான ஒடியா மொழியில் எழுதி முடித்துள்ளான் ஆயுஷ் குமார்.

**12. ஜெர்மனி பல்கலைக்கழகத்தில் 58 ஆண்டுகள் பழமையான தமிழ்க்கல்வி நிறுவனத்தை மார்ச் 31–ல் மூட முடிவு: தமிழக அரசு உறுதி அளித்தவாறு நிதி வழங்கப்படாததால் சிக்கல்.**

உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் தமிழின் வளர்ச்சிக்காக பல ஆண்டுகளாக தமிழ் போதிக்கப்படு கிறது. ஜெர்மனியிலும் கொலோன் பல்கலைக்கழகத்தில் இந்தியவியல், தமிழியல் ஆய்வு நிறுவனம்1963–ல் தொடங்கப்பட்டது. தமிழால் ஈர்க்கப்பட்டு அதைப் பயின்று, தமிழ் அறிஞரான க்ளவுஸ்லுட்விட் ஜெனரட் எனும் ஜெர்மானியர் இதனை நிறுவினார். தற்போது முனைவர் பட்டத்துக்கான 5 படிப்புகள் உட்பட தமிழில் இளங்கலை படிப்புகளிலும் இங்கு மாணவர்கள் பயில்கின்றனர். இடையில் இந்த ஆய்வு நிறுவனம், தெற்காசிய நாடுகள் மற்றும் கிழக்காசிய நாடுகள் பண்பாட்டியல், மொழிகள் துறையுடன் இணைக்கப்பட்டது. தமிழகத்துக்கு வெளியே உள்ள 2 பெரிய நூலகங்களில் சிகாகோவுடன், கொலோனும் ஒன்றாக உள்ளது. இதில், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களும் ஓலைச்சுவடிகளும் ஆய்வுக்காக சேகரிக்கப்பட்டுள்ளன. கடந்த 2014–ல் பல்கலைக்கழக நிர்வாக முடிவின்படி, தமிழ் பிரிவின் பேராசிரியர் உல்ரிக்க நிக்லாஸ், செப்டம்பர் 2020–ல் ஓய்வு பெற்றபின் தமிழ்ப் பிரிவு மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அமெரிக்காவின் தமிழ் இருக்கைகளில் பணியாற்றிய தமிழ் பேராசிரியர்கள் அதைத் தடுக்க முயன்றனர். அமெரிக்கவாழ் இந்தியர்களான அவர்கள் 2018–ல் திரட்டி பல்கலைக்கழகத்துக்கு அளித்த நிதியால், மூடும் முடிவு ஜூன் 2022 வரை தள்ளி வைக்கப்பட்டது. பேராசிரியர் உல்ரிக்கின் ஓய்வுக்கு பிறகும் பாதி வேலைநேரத்துடன் தற்காலிகமாக அவரது பணியை நீட்டிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவருடன் உதவிப் பேராசிரியர் ஸ்வென் வெட்டர் மான் எனும் ஜெர்மானியர் நிரந்தரப் பணியில் தொடர்ந்தார். ஜெர்மனியில் ஹாம்பர்க் மற்றும் ஹைடில்பர்க் பல்கலைக்கழகங்களிலும் தமிழ்க் கல்வி மற்றும் ஆய்வுக்கானப் பிரிவுகள் செயல்படுகின்றன.

**13. எரிசக்தி, சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை பிரதமர் மோடிக்கு சர்வதேச விருது**

பிரதமர் நரேந்திர மோடிக்கு சர்வதேச எரிசக்தி, சுற்றுச்சூழல் தலைமை விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க, பிரிட்டிஷ் தகவல் சேவை நிறுவனமான ஐஎச்எஸ் மார்கிட் லிமிடெட் சார்பில் ஆண்டுதோறும் எரிசக்தி மாநாடு நடத்தப்படுகிறது. இந்த மாநாட்டில் 100–க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த 6,000–க்கும் மேற்பட்ட

அரசு, தனியார் துறை தலைவர்கள் பங்கேற்பது வழக்கம். இந்த மாநாட்டின்போது சர்வதேச அளவில் எரிசக்தி, சுற்றுச்சூழல் துறையில் சிறந்து விளங்குவோருக்கு விருது வழங்கப்படும். கரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஆண்டு அமெரிக்காவில் நடைபெற இருந்த மாநாடு ரத்து செய்யப்பட்டது. இந்த ஆண்டு எரிசக்தி மாநாடு (செராவீக் 2021) காணொலி வாயிலாக நாளை தொடங்குகிறது. மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடிக்கு சர்வதேச எரிசக்தி, சுற்றுச்சூழல் தலைமை விருது வழங்கப்பட உள்ளது. பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவில் வறுமை ஒழிப்பு திட்டங்களை அதிவேகமாக அமல்படுத்தி வருகிறார். 50 கோடி இந்தியர்கள் பயன் அடையும் வகையில் ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீடு திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். 35 கோடி ஏழைகளுக்கு ஜன்தன் வங்கிக் கணக்குகளை தொடங்கி கொடுத்துள்ளார். இதன்மூலம் மக்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக மானியத் தொகை செலுத்தப்படுகிறது. அமைப்புசாரா துறையை சேர்ந்த 42 கோடி பேர் பயன் அடையும் வகையில் ஓய்வூதிய திட்டம், இலவச சமையல் காஸ் இணைப்பு திட்டம், 18,000 குக்கிராமங்களுக்கு மின்சார வசதி, ஏழை குடும்பங்களுக்கு 1.25 கோடி வீடுகள், விவசாயிகளுக்கு நிதியுதவி, மின்னணு வேளாண் சந்தை, தூய்மை இந்தியா திட்டம், நீர்வழிப் போக்குவரத்து, உதான் விமான சேவை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பிரதமர் மோடி செயல்படுத்தியுள்ளார். சர்வதேச எரிசக்தி உற்பத்திக் கூடமாக இந்தியா உருவெடுத்து வருகிறது. அதேநேரம் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் மரபுசாரா எரிசக்தி உற்பத்திக்கு பிரதமர் மோடி முன்னுரிமை அளித்து வருகிறார். பருவநிலை மாறுபாட்டை தடுக்க உறுதி பூண்டுள்ளார். அவரது முயற்சியால் சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு உதயமாகியுள்ளது" என்று செராவீக் 2021 எரிசக்தி மாநாடு அறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டிருக்கிறது. எரிசக்தி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி தலைமை உரையாற்ற உள்ளார். அமெரிக்க எரிசக்தி துறை அமைச்சர் ஜெனிபர், அமெரிக்க சுற்றுச்சூழல் சிறப்பு பிரதிநிதி ஜான் கெர்ரி, கொலம்பிய அதிபர் இவான் டுகே மார்கஸ், மைக்ரோசாப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் உட்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட தலைவர்கள் சிறப்புரையாற்ற உள்ளனர்.

**14. மடகாஸ்கருக்கு இந்தியா நன்கொடை: இந்தியா நன்கொடையளித்த டிஜிட்டல் கோபால்ட் சிகிச்சை இயந்திரம்.**

இந்தியாவில் பாபா அணு ஆராய்ச்சி மையத்தால் உருவாக்கப்பட்ட, புற்றுநோய் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் டெலிகோபால்ட் இயந்திரம், மத்திய சுகாதாரத் துறை சார்பில் தீவு நாடான மடகாஸ்கருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேம்பட்ட டிஜிட்டல் கோபால்ட் சிகிச்சை அளிக்கும் இந்த இயந்திரமான 'பாபட்ரான்- 2' -ஐ மடகாஸ்கரின் தலைநகரான அன்டனனரிவோவில் உள்ள ஜோசப் ரவோஹாங்கி ஆண்ட்ரியனாவலோனா மருத்துவமனையில் (எச்ஜேஆர்ஏ) அந்நாட்டின் குடியரசுத் தலைவர் ஆண்ட்ரி ராஜோலினா தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ரஜோலினா பேசுகையில், புற்றுநோய் என்பது நம் சமூகத்தில் அதிகமான மக்களை பாதிக்கும் நோயாக மாறி விட்டது. மேலும் உயிரிழப்புக்கு முக்கிய காரணங்களில் இந்த நோயும் ஒன்றாக உள்ளது என்றார். மடகாஸ்கருக்கான இந்திய தூதர் அபய் குமார் பேசுகையில், உலகளவில் ஏராளமான மக்களை பாதிக்கும் புற்றுநோய் ஒரு பெரிய சுகாதார பிரச்னையாக உள்ளது என்றார். கடந்த 2018-ஆம் ஆண்டு மார்ச்சில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், மடகாஸ்கருக்கு விஜயம் செய்தபோது, பாபட்ரான் இயந்திரம் மடகாஸ்கருக்கு நன்கொடையாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்துஇந்தியாவில் இருந்து இந்த இயந்திரம் மடகாஸ்கருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**15. இலங்கை விமானப் படையின் 70ஆவது ஆண்டு நிறைவு நாள் (02.03.2021)**

இலங்கை விமானப் படையின் (எஸ்எல்ஏஎஃப்) 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இந்திய விமானப்படையின் 25 விமானங்கள் இலங்கைக்கு சென்றுள்ளன. 70 ஆவது ஆண்டு நிறைவு, மார்ச் 2 ஆம் தேதி, விமானப்படைத் தளபதி ஏர் மார்ஷல் சுதர்ஷன பதிரனவின் தலைமையில் நடைபெறவுள்ளது. அத்துடன், மார்ச் 3 ஆம் தேதி முதல் 5 ஆம் தேதி வரை காலி முகத்திடலில் விமானக் கண்காட்சி ஒன்று நடைபெற உள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இந்திய விமானப்படை விமானங்கள் இலங்கைக்கு சென்றுள்ளன. அதற்கான, பயிற்சி நடவடிக்கைகள் இன்றும் மேற்கொள்ளப்பட்டன.

**16. ஒரே முறை செலுத்தக் கூடிய கொரோனா தடுப்பூசிக்கு சீனா நிபந்தனைகளுடன் அனுமதி.**

ஒரு டோஸ் மட்டுமே செலுத்தக்கூடிய கொரோனா தடுப்பூசி சீனாவில் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. அமெரிக்காவின் ஜான்சன்& ஜான்சன் தடுப்பூசிக்கு போட்டியாக சீனாவின் இந்த தடுப்பூசி பார்க்கப்படுகிறது. சீன அரசு நாளிதழில் இதுபற்றி வெளியிடப்பட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

சீனாவின் முதல் ஏடி-5 என்கோவ் கொரோனா தடுப்பூசி வெள்ளிக்கிழமை (26.02.2021) வெளியிடப்பட்டது. அந்த தடுப்பூசியின் முதல் கட்ட பரிசோதனை கடந்த ஆண்டு மார்ச் 16 ஆம் தேதி தொடங்கியது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி செலுத்தப்பட்ட 14-வது நாளில் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, சீனாவில் சைனோவாக், சைனோஃபார்ம், கேன்சைனோபயோ, வூஹான் உயிரியியல் பொருள் நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் தடுப்பூசிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**17. ஜான்ஸன் அண்டு ஜான்ஸன் தடுப்பூசிக்கு அமெரிக்கா அனுமதி.**

ஜான்ஸன் அண்டு ஜான்ஸன் நிறுவனம் உருவாக்கியுள்ள ஒரே முறை செலுத்தக்கூடிய கரோனா தடுப்பூசியை பொதுமக்களுக்குச் செலுத்துவதற்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் ஒழுங்காற்று அமைப்பு அனுமதி அளித்துள்ளது. அந்த நாட்டில் அனுமதி பெற்றுள்ள 3-ஆவது கரோனா தடுப்பூசி இதுவாகும். இதுகுறித்து அதிபா் ஜோ பைடன் கூறியதாவது: ஜான்ஸன் அண்டு ஜான்ஸனின் கரோனா தடுப்பூசிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது உற்சாகமளிக்கிறது. அமெரிக்காவில் கரோனா பரவலை முடிவுக்குக் கொண்டுவதற்கு இது உதவும். இந்தத் தகவல் அனைத்து அமெரிக்கா்களுக்கும் உற்சாகமளிக்கும் செய்தியாக இருக்கும் என்றாா் அவா். மற்ற கரோனா தடுப்பூசிகளை குறிப்பிட்ட இடைவெளியில் இரண்டு முறை செலுத்த வேண்டியுள்ள நிலையில், ஜான்ஸன் அண்டு ஜான்ஸன் தடுப்பூசிகளை ஒரே முறை செலுத்தினால் போதும் என்பது குறிப்பிடத்தக்கது. 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினருக்கு அந்தத் தடுப்பூசியை செலுத்த அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் ஒழுங்காற்று அமைப்பு அனுமதி அளித்துள்ளது. ஏற்கனவே ஃபைஸா் மற்றும் மாடர்னா தடுப்பூசிகளுக்கு இத்தகைய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**18. டிஜி பாக்ஸ்** (டிஜிட்டல் சொத்து மேலாண்மை தளம்) என்பது ஒரு இந்திய டிஜிட்டல் கோப்பு சேமிப்பு, பகிர்வு மற்றும் மேலாண்மை மென்பொருள் சேவை தளமாகும். இதுவணிக நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் தங்களது கோப்புகளை சேமிப்பதற்கான இட வசதியை வழங்கும் தளமாகும்.

டிஜிபாக்ஸ் செயல் பாடுகளை காணொலி காட்சி மூலம் துவக்கி வைத்து பேசிய அமைச்சர் எம்.சி. சம்பத் கூறுகையில், கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் செயல்பாடுகள் அதிக அளவில் வளர்ச்சி அடைந்து வருகிறது. இதன் காரணமாக இந்தியா தற்போது உலகின் மூன்றாவது பெரிய நாடுகளில் ஒன்றாக உள்ளது. இந்த விஷயத்தில் இந்திய இளம் தொழில்நுட்ப நிபுணர்கள் அதிக அளவில் ஈடுபடுவது என்பது மிகவும் பெருமைக்குரியதாகவும் அவர்களின் பங்களிப்பானது சுயசார்பு இந்தியா திட்ட மேம்பாட்டிற்கு ஆதரவு அளிக் கும் விதமாகவும் உள்ளது. குறைந்த கட்டணத்தில் கோப்புகளை பாதுகாப்பாக சேமிக்க உதவும் டிஜிட்டல் கோப்புகள் சேமிப்பு தளமான டிஜிபாக்ஸ் செயல்பாடுகளை இங்கு துவக்கி வைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இது பல்வேறு விதமான பிராந்திய மொழிகளை கொண்டுள்ளது. இந் நிறுவனத்திற்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதோடு இந்நிறுவனத்தின் 'வோக்கல் பார் லோக்கல்' செயலியை பதிவிறக்கம் செய்து அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார். இது குறித்து டிஜிபாக்ஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அர்னாப் மித்ரா கூறுகையில், மத்திய அரசின் 'மேக் இன் இந்தியா' மற்றும் 'சுயசார்பு இந்தியா' ஆகிய திட்டங்களுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் எங்கள் செயல்பாடுகளை மேலும் நாங்கள் விரிவுபடுத்தி இதே போன்று பல்வேறு நகரங்களிலும் துவக்க உள்ளோம் என்று தெரிவித்தார். இது "இன்ஸ்டா ஷேர்" என்ற கோப்பு பகிர்வு அம்சத்தையும் கொண்டுள்ளது.

**20. சரக்குகள் டெலிவரிக்கு மஹிந்திராவுடன் அமேசான் ஒப்பந்தம்.**

**1. உலக வனவுயிரிகள் நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

**அ) மார்ச் 03 ☑**

ஆ) மார்ச் 04

இ) மார்ச் 05

ஈ) மார்ச் 06

✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.3 ஆம் தேதியன்று உலக வனவுயிரிகள் நாள் அனுசரிக்கப்படுகிறது. இது, புவியில் வாழும் விலங்கு மற்றும் தாவரங்கள் எதிர்கொள்ளும் ஆபத்துகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. "Forests and Livelihoods: Sustaining People and Planet" என்பது நடப்பா–ண்டு (2021) வரும் உலக வனவுயிரிகள் நாளுக்கான கருப்பொருளாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

---

**2. உலக செவிப்புலன் நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

அ) மார்ச் 01

ஆ) மார்ச் 02

**இ) மார்ச் 03 ☑**

ஈ) மார்ச் 04

✓ காது கேளாமை மற்றும் செவித்திறன் குறைபாடு ஆகியவற்றை எப்படி தடுப்பது என்பதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.3 அன்று உலக செவிப்புலன் நாள் அனுசரிக்கப்படுகிறது. உலக நலவாழ்வு அமைப்பானது (WHO) ஜெனீவாவில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் ஆண்டுதோறும் உலக செவிப்புலன் நாள் கருத்தரங்–கை ஏற்பாடு செய்கிறது. "Hearing Care for All" என்பது இந்த ஆண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**3. வயநாடு வனவுயிரிகள் சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

**ஆ) கேரளா ☑**

இ) கர்நாடகா

ஈ) தெலங்கானா

✓ வனத்துறை மற்றும் ஃபெர்ன்ஸ் நேச்சர் கன்சர்வேஷன் சொசைட்டி இணைந்து நடத்திய தட்டாம்பூச்சி குறித்த ஓர் ஆய்வு சமீபத்தில் வயநாடு வனவுயிரிகள் சரணாலயத்தில் நிறைவடைந்தது. இந்தச் சரணாலயம் மேற்குத்தொடர்ச்சிமலையில் கேரள மாநிலத்தில் அமைந்துள்ளது.

✓ கிட்டத்தட்ட 4 மாதங்களுக்கு நீடித்த இந்தக் கணக்கெடுப்பின்போது, 84 வகையான ஓடோனேட்டுகள் காணப்பட்டன. 'ஓடோனேட்ஸ்' என்பது டிராகன்ஃபிளைஸ் மற்றும் டாம்செஃப்ளைஸ் ஆகியவற்றைக்கொண்ட பூச்சிகளின் வரிசையாகும்.

---

**4. அண்மையில் எந்த மாநிலத்தில், கால்நடை மற்றும் விலங்கு அறிவியலுக்கான ஒருங்கிணைந்த ஆராய்ச்சி நிறுவனம் (AIIRLAS) திறக்கப்பட்டது?**



**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) கர்நாடகா

ஈ) உத்தர பிரதேசம்

✓ தமிழ்நாட்டின் முதலமைச்சர் எடப்பாடி க பழனிசாமி அவர்கள் சமீபத்தில் கால்நடை மற்றும் விலங்கறிவியலுக்கான ஒருங்கிணைந்த ஆராய்ச்சி நிறுவனத்தை (AIIRLAS) திறந்துவைத்தார். இது, சேலம் மாவட்டத்தின் தலைவாசலில் அமைந்துள்ளது. இதன்வகையில் இது ஆசியாவிலேயே மிகப்பெரிய நிறுவனமாகும். ₹1,023 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

---

**5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஹண்டர் கில்லர்ஸ்', எந்த இந்திய ஆயுதப்படையால் கொள்முதல் செய்யப்படவுள்ளது?**



அ) இந்திய வான்படை

**ஆ) இந்திய இராணுவம் ☑**

இ) இந்திய கடலோரக் காவல்படை

ஈ) இந்தியக் கடற்படை

✓ பாதுகாப்பு அமைச்சரான இராஜ்நாத் சிங் தலைமையிலான இராணுவ கொள்முதல் குழுமம், 118 அர்ஜுன் Mk1–A 'ஹண்டர் கில்லர்ஸை' கொள் முதல் செய்வதற்கான இந்திய இராணுவத்தின் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஒப்புதலின்மூலம், இந்திய இராணுவம், விரைவில், 118 அர்ஜுன் Mk–1A பிரதான போர் பீரங்கிகளைக் கொண்டிருக்கும். இது, பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பின் தயாரிப்பாகும்.

---

**6. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற அமேஸானியா–1 செயற்கைக் கோள் சார்ந்த நாடு எது?**



அ) பிரான்ஸ்

**ஆ) பிரேஸில் ☑**

இ) பின்லாந்து

ஈ) பிலிப்பைன்ஸ்

✓ PSLV C–51 ஏவுகலத்தைப் பயன்படுத்தும் ISRO'இன் 53ஆவது திட்டமா–னது அமேஸானியா–1 செயற்கைக்கோளை விண்ணில் ஏவும். இந்தச் செயற்கைக்கோள் பிரேசிலுக்கு சொந்தமானதாகும்.

✓ கூடுதலாக, பதினெண் இணை செயற்கைக்கோள்களையும் இது சுமந்து செல்லும். இந்த ஏவுகலம், ஆந்திர பிரதேச மாநிலத்தின் ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்தில் இருந்து ஏவப்படும்.

---

**7. "நம்ம கார்கோ" என்ற சேவை தொடங்கப்பட்டுள்ள மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

**இ) கர்நாடகா ☑**

ஈ) தெலங்கானா

✓ கர்நாடக மாநில முதலமைச்சர் B S எடியூரப்பா, சமீபத்தில், 'நம்ம கார்கோ' என்ற சேவையை அறிமுகப்படுத்தினார். இந்த முயற்சியின்கீழ், மாநில சாலைப்போக்குவரத்துக்கழக பேருந்துகள் சரக்கு பொதிகளை கொண்டு சென்று மாநிலத்திற்கு கூடுதல் வருவாயை ஈட்டும். இது, கர்நாடகாவின் 109 பேருந்துநிலையங்களிலும், அண்டை மாநிலங்களின் தேர்ந்தெடுக்–கப்பட்ட இடங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

**8. COVAX திட்டத்தின்மூலம் இலவச COVID தடுப்பூசிகளைப்பெற்ற முதல் நாடு எது?**




அ) காங்கோ

**ஆ) கானா ☑**

இ) சூடான்

ஈ) எத்தியோப்பியா

✓ COVAX திட்டத்தின்மூலம் இலவச COVID தடுப்பூசிகளைப் பெற்ற முதல் நாடு கானா ஆகும். உலக நலவாழ்வு அமைப்பானது (WHO) COVAX திட்டத்தை கவி (Gavi) தடுப்பூசி கூட்டணி மற்றும் தொற்றுநோய் தயார் நிலை கண்டுபிடிப்புகளுக்கான கூட்டணி ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொண்டு வருகிறது. COVID தடுப்பூசிகளை ஏழை நாடுகளுடன் பகிர்ந்துகொள்வதை இது தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**9. மிகவும் அருகிவிட்ட இனமான, 'ஆல்பைன் தாவர இனங்கள்' கண்டுபிடிக்கப்பட்டுள்ள மாநிலம் எது?**



அ) அஸ்ஸாம்

ஆ) சிக்கிம்

**இ) அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

✓ அருணாச்சல பிரதேச மாநிலத்தின் தவாங் மாவட்டத்தில், 'ஆல்பைன் தாவரம்' என்ற ஒரு புதிய இனத்தை அறிவியலாளர்கள் குழு கண்டறிந்–துள்ளது. '*Cremanthodium indicum*' என்று பெயரிடப்பட்டுள்ள இப்புதிய இனங்கள், இமயமலை சூரியகாந்தி குடும்பத்தைச் சார்ந்தவை. இந்த இனம், தவாங் மாவட்டத்தின் பெங்கா–டெங் சோ ஏரியைப் பூர்வீகமாகக் கொண்டதாகும்.

---

**10.** **இந்திய கடல்சார் உச்சிமாநாடு-2021 நடைபெறும் இடம் எது?**

அ) சென்னை

ஆ) கொச்சின்

இ) மும்பை

**ஈ) மெய்நிகர் முறையில் ☑**

- ✓ 'இந்திய கடல்சார் உச்சிமாநாடு 2021'ஐ பிரதமர் மோடி, மார்ச்.2 அன்று காணொலிக்காட்சிமூலம் தொடங்கிவைத்தார். துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப்போக்குவரத்து அமைச்சகத்தின் அலுவல் -பூர்வ அறிக்கையின்படி, இதன் தொடக்க அமர்வில் பல்வேறு நாடுகளை சார்ந்த அமைச்சர்கள் பங்கேற்பர்.
- ✓ இந்த உச்சிமாநாட்டின்போது ₹20,000 கோடி மதிப்புள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பிரயாஸ் திட்டம்:**

தனியார் நிறுவனங்களில் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு 'பிரயாஸ்' திட்டத்தின் கீழ், அன்றைய தினமே தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகம் சார்பில் ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணை வழங்கப்பட்டது. மத்திய அரசு 'பிரயாஸ்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் கீழ், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டம் 1995-ல் உறுப்பினர்களாக உள்ள ஊழியர்கள் ஓய்வு பெறும் நாளிலேயே அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

**2. நாட்டின் முதல் டிஜிட்டல் பல்கலைக்கழகம் கேரளத்தில் திறக்கப்பட்டது. திருவனந்தபுரத்துக்கு அருகே மங்களாபுரத்தில் டிஜிட்டல் அறிவியல், புத்தாக்க, தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் என்கிற பெயரில் இது அமைந்துள்ளது.**

**3. புதுச்சேரி (14ஆவது சட்டப்பேரவை)சட்டப்பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் (பிப்ரவரி 23) நாராயணசாமி தலைமையிலான காங்கிரஸ் அரசு தோல்வி அடைந்தது. இதையடுத்து புதுச்சேரியில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலானது.**

**4. ஆசியாவின் மிகப்பெரிய கால்நடை பூங்கா சேலம் தலைவாசலில் (பிப்ரவரி 22) 1,100 ஏக்கர் பரப்பளவில் ரூ.1,022 கோடி செலவில் திறக்கப்பட்டுள்ளது.**

**5. ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் (பிப்ரவரி 23) செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சாம்பியன் பட்டம் வென்றார்.**

**6. டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிவேகமாக (77 டெஸ்ட் போட்டி) 400 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்களில் இந்தியாவின் ரவிச்சந்திரன் அஸ்வின் இரண்டாமிடத்தைப் பிடித்தார் (பிப்ரவரி 25).**

**7. அஸ்ஸாம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் அட்டவணையை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. தமிழகம், புதுச்சேரியில் ஏப்ரல் 6 தேர்தல் நடைபெறும் (பிப்ரவரி 26).**

**8. 45 ஆவது சிவில் அக்கவுண்ட்ஸ் தினம் (பொதுக் கணக்குகள் தின விழா) – மார்ச்சு 1. இதையொட்டி டெல்லி நார்த் பிளாக் கட்டிடத்தில் நடைபெற்ற இணையவழிக் கருத்தரங்கில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொடார்.**

**9. 728 மாவட்டங்களில் தலா ஒரு விவசாய பொருள்: விவசாயிகள் நலனுக்காக மத்திய அரசின் புதிய அறிவிப்பு.**

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விவசாயப் பொருள் உற்பத்தியில் கவனம் செலுத்தும் திட்டத்தை (One District One Focus Product – ODOFP) மத்திய அரசு கடந்த பிப்ரவரி 26-ம் தேதி அறிமுகப்படுத்தியது. மத்திய வேளாண் அமைச்சகத் தால் அறிவிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் பழங்களுக்கு 226 மாவட்டங்கள், காய்கறிகளுக்கு 107 மாவட்டங்கள், மசாலா பொருட்களுக்கு 105 மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. தவிர நெல், கோதுமை உட்பட பொருட்களுக்கும் மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மொத்தம் 728 மாவட்டங் களுக்கான வேளாண் பொருள் பட்டியலை மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இதில் தமிழகத்தில் 36 மாவட்டங்கள் இடம் பெற்றுள்ளன. கன்னியாகுமரி, நாகப்பட்டினம், செங்கல்பட்டு, ராமநாதபுரம் மாவட்டங்களில் மீன் பொருட்கள், தஞ்சாவூர், கோவையில் தேங்காய், திருச்சியில் வாழைப்பழம், கிருஷ்ணகிரியில் மாம்பழம் என பொருட்கள் இடம் பெற் றுள்ளன. வேளாண் பொருட்களை விளைவிக்க எம்ஐடிஎச், என்எப் எஸ்எம், ஆர்கேவிஒய், பிகேவிஒய் போன்ற திட்டங்களின் கீழ் விவசாயிகளுக்கு உதவிகள் கிடைக்கும். இதுதொடர்பாக அனைத்து துறைகளின் நிர்வாகக் குழு கூட்டத்தை நிதி ஆயோக் கடந்த வாரம் நடத்தியது. இதில், மாவட்ட அளவில் அந்தந்த விவசாயப் பொருட்களுக்குமுக்கியத்துவம் அளிக்க வலியுறுத்தப்பட்டது. 35 சதவீத மானியம்: மத்திய உணவு பதப்படுத்துதல் துறை சார்பிலும் 707 மாவட்டங்கள், உணவுப்பொருட்கள் உற்பத்திக் காக ஏற்கெனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. இங்குவிவசாய கூட்டுறவு சங்கங்கள் அல்லது தனியாரால் தொடங்கப்படும் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு மத்திய அரசு 35 சதவீத மானியம் அளிக்கிறது. இந்த் பட்டியலில் இடம் பெற்ற மாவட்டங்களில் பெரும் பாலானவை தற்போது புதிய திட்டத்திலும் அடையாளம் காணப்பட்டுள்ளன. தமிழகத்தில் 36 மாவட்டங்கள் இரண்டு பட்டியல்களிலும் இடம் பெற்றுள்ளன.

**10. 18 மணி நேரத்தில் 25.54 கி.மீ. சாலை ஹைதராபாத் நிறுவனம் சாதனை.**

ஹைதராபாத்: ஹைதராபாதைச் சேர்ந்த ஐஜேஎம் இந்தியா கட்டுமான நிறுவனம் 18 மணி நேரத்தில் 25.54 கி.மீ. தூரத்துக்கு சாலை அமைத்து புதிய சாதனை புரிந்துள்ளது. இதன் மூலம் லிம்கா உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த இந்நிறுவனத்தை மத்திய தரைவழி போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்கரி பாராட்டியுள்ளார். சோலாப்பூர்-பீஜப்பூர் தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிப் பாதையாகும். இதில் ஒரு வழித்தடம் 25.54 கி.மீ தூரமாகும். இத்தூர சாலையை 18 மணி நேரத்தில் அமைத்துள்ளது ஐஜேஎம் நிறுவனம். இது மலேசியாவைச் சேர்ந்த கட்டுமான நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். 110 கி.மீ. தூர சோலாபூர்- விஜாபூர் நெடுஞ்சாலை பணி இந்த ஆண்டு அக்டோபரில் முடிவடையும் என்று நிதின் கட்கரி தெரிவித்தார். நெடுஞ்சாலைகளில் ஒரு வழித் தடத்தை மட்டும் தனித்தனியாக போடும் நடைமுறை 2018-ம் ஆண்டிலிருந்து பின்பற்றப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

**11. 62 ஆண்டுகளுக்கு பிறகு நிறைவேறும் காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டம்: 7 மாவட்டத்தின் 50 லட்சம் விவசாயிகள் மகிழ்ச்சி.**

காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டம் 62 ஆண்டுகளுக்கு பிறகு நிறை வேறுவதால் 7 மாவட்டங்களைச் சேர்ந்த 50 லட்சம் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர். வெள்ளக்காலங்களில் காவிரி, கொள்ளிடம் ஆறுகளில் 40 டி.எம்.சி. க்கு மேல் உபரி நீர் கடலில் கலக்கிறது. இந்த நீரை கால்வாய் மூலம் புதுக்கோட்டை, ஒன்றுபட்ட ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு கொண்டு வர, அக்காலத்திலேயே புதுக்கோட்டை தொண்டைமான், ராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் முயற்சி செய்தனர். 1933-ல் புதுக்கோட்டை நிர்வாக அலு வலராக இருந்த டாட்டன் ஹாமின் முயற்சி யால், மாயனூரில் தென்துறை கால்வாய் திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால் கால் வாய் வெட்டும் பணி ஏனோ பாதியில் நிறுத்தப்பட்டது. 1954-ல் இத்திட்டம் குறித்து புதுக்கோட்டை எம்.பி. முத்துச்சாமி வல்லத்தரசு நாடாளுமன்றத்தில் பேசினார். இதையடுத்து 1958-ல் காவிரி, வைகை, குண்டாறு இணைப்புக் கால்வாய்த் திட்டத்துக்கு ரூ.189 கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அப்போதைய முதல்வர் காமராஜர் அடிக்கல் நாட்டினார். ஆனால் திட்டம் செயல்படுத்தாமல் கிடப்பில் போடப்பட்டது. 2008-ல் ரூ.3,290 கோடியில் காவிரி-வைகை-குண்டாறு நதிகளை இணைக்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்தது. அதன்படி கரூர் மாவட்டம் குளித்தலை அருகே மாயனூரில் காவிரி நதியில் கதவணையும், அங்கிருந்து 255.60 கி.மீ.க்கு கால்வாயும் அமைக்கத் திட்டமிடப்பட்டது. இந்த கால்வாய் கதவணையில் இருந்து 70 கி.மீ. தென்கிழக்கு திசையில் செல்லும். அதன் பின் வலது பக்கம் திரும்பி தென்மேற்கில் விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி புதுப்பட்டி அருகே குண்டாறில் இணையும். இந்த

கால்வாய் தொடக்கத்தில் 20 மீ., அகலம், 5 மீ. ஆழத்தில் இருக்கும். முடிவில் 6.4 மீ., அகலம் இருக்கும் எனக் கணக்கிடப்பட்டது. மேலும் 9 ரயில்வே பாலங்கள் உட்பட 144 பாலங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதன்மூலம் புங்கா ஆறு, நாப்பன்னை ஆறு, அரியாறு, காரையாறு, அக்கினி ஆறு,கொண்டாறு, வெள்ளாறு, பாம்பாறு, விருசுழி ஆறு, மணிமுத்தாறு, சருகணி ஆறு, உப்பாறு, வைகை, கிருதுமால் நதி, கானல் ஓடை, குண்டாறு என 15 நதிகள் இணைக்கப்படும். இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் காவிரி டெல்டா மாவட்டங்களில் வெள்ள அபாயம் நீங்கும். உபரிநீர் மூலம் கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி ஆகிய 7 மாவட்டங்களைச் சேர்ந்த 3,37,717 எக்டேர் (8.30 லட்சம் ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும் 50 லட்சம் விவசாயிகள் பயன்பெறுவர். முதற் கட்டமாக 2008 ஜூனில் ரூ.234 கோடியில் மாயனூர் கதவணை அமைக்கப்பட்டு, 2014 ஜூன் 25–ல் திறக்கப்பட்டது. இந்த அணை மூலம் 1.05 டி.எம்.சி. நீரை சேமிக்க முடியும். வெள்ள காலங்களில் 4.83 லட்சம் கன அடி நீரை வெளியேற்ற முடியும். கதவணை திறந்தபிறகு கால்வாய் கட்டும் பணி தொடங்கவில்லை. அதிக நிதி தேவைப்பட்டதால் மத்திய அரசிடம் நிதி கோரியும் வரவில்லை. இதையடுத்து தமிழக அரசே நிதி ஒதுக்கி காவிரி–வைகை–குண்டாறு திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென, விவசாயிகள் போராடி வந்தனர். இந்நிலையில் இத் திட்டத்தை ரூ.14 ஆயிரம் கோடி யில் செயல் படுத்தப் போவதாக முதல்வர் பழனிசாமி அறிவித்துள்ளார். மேலும் முதற்கட்டமாக ரூ.700 கோடியை அரசு ஒதுக்கியது. புதுக் கோட் டை, கரூர் மாவட்டங்களில் கையகப் படுத்தப்பட்ட நிலங்களில் 11 கி.மீ.க்கு கால்வாய் வெட்டும் பணி மேற்கொள்ள ரூ. 331 கோடிக்கு ஒப்பந்தம் விடப்பட்டுள்ளது. புதுக்கோட்டை குன் னத்தூரில் இருந்து கவிநாடு வெள்ளாறு வரை 52 கி.மீ.க்கு நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் 7 மாவட்டங்களைச் சேர்ந்த 50 லட்சம் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் ஆதிமூலம் கூறியதாவது:

காவிரி–வைகை–குண்டாறு திட்டத்தை செயல்படுத்தினால் வறட்சியை தடுக்கலாம். கடந்த காலங்களை போல் அறிவிப்போடு போகாமல், மத்திய அரசு நிதி உதவி அளித்து திட்டத்தை செயல்படுத்த வேண்டும். மேலும் சிவகங்கை மாவட்டத்தில் விடுபட்ட பகுதிகளையும் இத்திட்டத்தில் இணைக்க வேண்டும். நீர் பங்கீட்டு முறையையும் வரையறுக்க வேண்டும் என்று கூறினார்.

**பயன்பெறும் வட்டங்கள்:**

கரூர்: குளித்தலை, கிருஷ்ணராயபுரம்.

திருச்சி: திருச்சி, ஸ்ரீரங்கம்.

புதுக்கோட்டை: புதுக்கோட்டை, கந்தர்வக்கோட்டை, ஆலங்குடி, திருமயம், குளத்தூர், அறந்தாங்கி, ஆவுடையார்கோவில்.

சிவகங்கை: காரைக்குடி, தேவகோட்டை, திருப்புத்தூர், சிவகங்கை, காளையார்கோவில், திருப்புவனம், மானாமதுரை, இளையான்குடி.

ராமநாதபுரம்: திருவாடானை, பரமக்குடி, கமுதி, கடலாடி, முதுகுளத்தூர், ராமநாதபுரம்.

விருதுநகர்: திருச்சுழி, காரியாபட்டி, அருப்புக்கோட்டை தாலுகாக்கள்.

தூத்துக்குடி: விளாத்திக்குளம் தாலுகா.

**12. 100 ஆண்டு கனவு திட்டம்: காவிரி–வைகை–குண்டாறு இணைப்பு: நன்மைகள் என்ன?**

காவிரி – குண்டாறு இணைப்பு திட்டத்தின் மூலம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்கு தண்ணீர் கிடைப்பதன் மூலம் இப்பகுதிமக்களின் நூற்றாண்டு கால கனவு நிறைவேற்றப்படுகிறது என்று அரசு பெருமையாக கூறுகிறது. முதல்வர் பழனிசாமி இன்று ரூ.6,941 கோடி மதிப்பில் காவேரி – தெற்கு வெள்ளாறு – வைகை – குண்டாறு நதிகள் இணைப்புத் திட்டத்தின் முதல் கட்டத்திற்கும், ரூ.3,384 கோடி மதிப்பில் விரிவாக்கம், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் காவேரி உபவடிநிலத்தில் உள்ள நீர்ப்பாசன உள்கட்டமைப்புகளை புனரமைக்கும் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டுகிறார் (பிப்ரவரி 21). இவ்வளவு பெரிய தொகையில் தொடங்கப்படும் இந்த திட்டத்தால் புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டம் பயன்பெறும் என்று கூறுகிறார்கள்.

காவேரி – தெற்கு வெள்ளாறு – வைகை – குண்டாறு இணைப்பு திட்டம் நன்மைகள்:

காவேரி – தெற்கு வெள்ளாறு – வைகை – குண்டாறு நதிகள் இணைப்பு திட்டத்தின் விவரங்களையும் அதனால், ஏற்பட உள்ள நன்மைகளையும் தமிழக பொதுப்பணித்துறை தெரிவித்துள்ளது. ரூ.6,941 கோடி மதிப்பிலான முதல் கட்டத்திற்கு தற்பொழுது அடிக்கல் நாட்டப்படுகிறது. இதன்மூலம் கரூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 342 ஏரிகளும், 42,170 ஏக்கர் நிலங்களும் பயன்பெறும் வகையில் 118.45 கி.மீ நீளத்திற்கு கட்டளைக் கால்வாயிலிருந்து கால்வாய் வெட்டப்பட்டு புதுக்கோட்டை மாவட்டம் தெற்கு வெள்ளாற்றுடன் இணைக்கப்படுகிறது. இரண்டாவது கட்டமாக, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 220 ஏரிகளும், 23,245 ஏக்கர் நிலங்களும் பயன்பெறும் வகையில் தெற்கு வெள்ளாற்றிலிருந்து 109 கி.மீ நீளத்திற்கு கால்வாய் உருவாக்கி வைகையுடன் இணைக்கப்படுகிறது. மூன்றாவது கட்டத்தில், விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் 492 ஏரிகள் மற்றும் 44,547 ஏக்கர் நிலங்களும் பயன் பெறும் வகையில் 34 கி.மீ நீளத்திற்கு கால்வாய் வெட்டி வைகை முதல் குண்டாறு வரை இணைக்கப்படுகிறது. ரூ.14,400 கோடியில் 262 கி.மீ தூரத்திற்கு நிறைவேற்றப்படவுள்ள இத்திட்டத்தின் மூலம் வெள்ளக் காலங்களில் வீணாகும் 6,300 கனஅடி தண்ணீர் ஆக்கப்பூர்வமாக திருப்பப்படுவதால் தென் மாவட்டங்களில் நிலத்தடி நீர் அதிகரிப்பதோடு, குடிநீர் தேவையும் பூர்த்தியாகும். காவேரி உப வடிநிலத்திலுள்ள உள்கட்டமைப்புகளில் விரிவாக்கம், புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் புனரமைக்கும் பணிகள் ரூ.3,384 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் 987 கி.மீ நீளமுள்ள 21 ஆறுகளின் மொத்த பாசன பரப்பான 4,67,345 ஏக்கர் நிலங்கள் பாசனம் உறுதி செய்யப்படும். மேலும், காவேரி டெல்டாவிலுள்ள பழமை மிக்க பாசன கட்டுமானங்கள் ஸ்காடா தொழில்நுட்பம் (SCADA) மூலம் ரூ.72 கோடி மதிப்பில் தானியங்கி அமைப்புகள் நிறுவப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் காவேரி உப வடிநில கால்வாய்களின் பாசனத்திறன் 20 சதவீதம் அதிகரிக்கப்படும்.

**13. முட்கள் நிறைந்த கூண்டில் அடைத்து நாகாலாந்தில் குற்றம் செய்வோருக்கு பாரம்பரிய முறைப்படி தண்டனை.**

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்று நாகாலாந்து. பழங்குடியின மக்கள்அதிகம் வாழும் மாநிலம்.இந்த மாநிலத்துக்கென சில கட்டுப்பாடுகள், விதிமுறைகள் உள்ளன. அவற்றை பின்பற் றாமல், குற்றங்களில் ஈடுபடுபவர் களுக்கு பாரம்பரிய முறைப்படி தண்டனை வழங்கப்படுகிறது. நாகாலாந்தில் வளரும் 'மசாங்–பங்' என்ற ஒருவகை மரம் தோலில் அதிகமாக நமைச்சல் ஏற்படுத்த கூடியது. அதனால் இந்த வகை மரத்தை நாகாலாந்து மக்கள் விரும்புவதில்லை. ஆனால், குற்றம் செய்பவர்களுக்கு தண்டனை வழங்க இந்த மரத்தின் கட்டைகளை பயன்படுத்தி முக்கோண வடிவில் கூண்டு அமைக்கின்றனர். அந்த மரத்தில் முட்கள்நிறைந்திருக்கும், அத்துடன் தோலில் நமைச்சல், எரிச்சலை ஏற்படுத்தும். குற்றம் செய்பவர்களை இதுபோன்ற கூண்டில் அடைத்து நாகாலாந்து முன்னோர்கள் தண்டனை வழங்கி வந்துள்ளனர். அந்த வழக்கத்தை மீட்டெடுத்து சில கிராம மக்கள் பின்பற்றத் தொடங்கி உள்ளனர்.

**14. சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தின் தலைமை அரசு வழக்குரைஞராக இ.ஜெய்சங்கர் பொறுப்பேற்பு.**

**15. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவின் புதிய நிர்வாக இயக்குனராக மடம் வெங்கட ராவ் நியமனம்.**

**16. சீன வெளியுறவுக் குழு துணைத் தலைவராக முன்னாள் ராணுவ அதிகாரி ஜாவோ சோங்கி நியமிக்கப்பட்டுள்ளார்.**

**17. ஆப்ரிக்காவின் மிக உயரமான கிளிமஞ்சாரோ மலையில் ஏறி, ஆந்திராவைச் சேர்ந்த, 9 வயது சிறுமி, சாதனை படைத்துள்ளார்.**

ஆந்திராவில், அனந்தபூர் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவர், அனைவரையும் திரும்பிப் பார்க்க வைக்கும் வகையில், ஒரு சாதனை படைத்துள்ளார். ரித்விகா ஸ்ரீ, 9, என்ற அந்த சிறுமி, ஆப்ரிக்க நாடான தான்சானியாவில் உள்ள கிளிமஞ்சாரோ மலைச் சிகரத்தில் ஏறி, சாதனை படைத்துள்ளார். இது, ஆப்ரிக்க கண்டத்தின் மிக உயரமான மலைச் சிகரம். கடல் மட்டத்தில் இருந்து, 5,681 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள கிளிமஞ்சாரோ மலையின் கில்மன் சிகரத்தை, அவர் அடைந்துள்ளார். இந்த மலை ஏற்ற பயணத்தில், ரித்விகாவுடன், அவரது தந்தையும் உடன் சென்றுள்ளார்.இதன் வாயிலாக, கிளிமஞ்சாரோ மலைச் சிகரத்தில், இவ்வளவு இளம் வயதில் ஏறிய, உலகின் இரண்டாவது நபர், ஆசியாவின் முதல் நபர் என்ற பெருமையையும் ரித்விகா ஸ்ரீ பெற்றுள்ளார்.

**18. 'கோ – வின்' இணையதளத்தில் முன்பதிவு; வழிகாட்டு ஆவணம் வெளியிட்டது அரசு.**

'கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களின் பயன்பாட்டுக்காகவே, 'கோ – வின் மொபைல் போன்' செயலி உருவாக்கப்பட்டுள்ளது. 'தடுப்பூசி போட்டுக் கொள்ள விரும்புபவர்கள், 'கோ – வின்' இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும்'. பொது மக்கள் பயன்பாட்டுக்காக, www.cowin.gov.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி போட்டுக் கொள்ள தகுதி உள்ளோர், அந்த இணையதளம் வாயிலாக, பதிவு செய்யலாம். அந்த இணையதளத்தில், உங்கள் மொபைல் எண் வாயிலாக, குடும்பத்தினரின் பெயருக்கும் முன்பதிவு செய்யலாம்.

**எங்கெங்கே மையங்கள்? வரைபடம் வெளியீடு**

கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்க துவங்கியது முதல், பரிசோதனை மற்றும் தனிமை முகாம்கள், தடை செய்யப்பட்ட மண்டலங்கள் குறித்த தகவல்களை, டில்லியைச் சேர்ந்த, 'மேப் மை இந்தியா' என்ற நிறுவனம், 'டிஜிட்டல்' வடிவில் வரைபடங்களுடன் வெளியிட்டது. இந்நிலையில், நாடு முழுதும் உள்ள கொரோனா தடுப்பூசி செலுத்தும் அரசு மற்றும் தனியார் மையங்கள், எங்கெங்கு அமைந்துள்ளன என்ற விபரங்களை, 'மேப் மை இந்தியா' நிறுவனம், வரைபடத்துடன் வெளியிட்டுள்ளது. இந்த வரைபடம், 'கோ – வின்' முன்பதிவு இணையதளத்திலும் விரைவில் சேர்க்கப்பட உள்ளது.

**19. பாதுகாப்பான பரிவர்த்தனைக்கு 'ஏர்டெல் சேப் பே'**

'ஆன்லைன்' பரிவர்த்தனைகளை பாதுகாப்பாக மேற்கொள்ள, 'ஏர்டெல் சேப் பே' என்ற புதிய வசதியை, 'ஏர்டெல் பேமென்ட் பேங்க்' அறிமுகப்படுத்தி உள்ளது. இது குறித்து, ஏர்டெல் பேமென்ட் பேங்க் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் அனுபிரட்டா பிஸ்வாஸ் கூறியதாவது:ஏர்டெல் பேமென்ட் பேங்க் வாடிக்கையாளர்கள் ஆன்லைன் பரிவர்த்தனைகளை பாதுகாப்பாக மேற்கொள்ள, ஏர்டெல் சேப் பே என்ற வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் வாயிலாக, பாதுகாப்பான பணப் பரிவர்த்தனையை மேற்கொள்ள முடியும். அத்துடன் ஆன்லைன் மோசடி செய்வது தவிர்க்கப்படும். வங்கிச் சேவையை, ஐந்து கோடி வாடிக்கையாளர்கள் பயன்படுத்துகின்றனர்.இந்த எண்ணிக்கையை, அடுத்த சில ஆண்டுகளில், 10 கோடியாக உயர்த்த திட்டமிட்டுள்ளோம்.

**1.BRICS அமைப்பின் நடப்பாண்டிற்கான (2021) தலைவராக பொறு-ப்பேற்றுள்ள நாடு எது?**

**அ) இந்தியா ☑**

ஆ) சீனா

இ) பிரேஸில்

ஈ) இரஷ்யா

✓ BRICS அமைப்பின் நடப்பாண்டிற்கான (2021) தலைவராக இந்தியா பொறுப்பேற்றுள்ளது. BRICS உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற மூன்று நாள் கூட்டத்தின் தொடக்கத்துடன் இந்தியா தனது தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இக்கூட்டத்திற்கு வெளியுறவு அமைச்சின் செயலர் தலைமைதாங்கினார். இச்சந்திப்பின்போது, இந்தியா, 2021ஆம் ஆண்டிற்கான அதன் கருப்பொருள்கள் மற்றும் முன்னுரிமைகளை BRICS'இன் உறுப்புநாடுகளுக்கு அறிமுகம் செய்தது.

---

**2.பின்வரும் எத்தேதியிலிருந்து, COVID தடுப்பூசியின் இரண்டாவது கட்டம் இந்தியாவில் தொடங்கவுள்ளது?**

**அ) 2021 மார்ச் 01 ☑**

ஆ) 2021 மார்ச் 15

இ) 2021 ஏப்ரல் 01

ஈ) 2021 ஜூன் 01




✓ COVID-19 நோய்க்கான இரண்டாம் சுற்று தடுப்பூசி செலுத்துதலுக்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அது, 2021 மார்ச்.1 முதல் தொடங்க உள்ளது. இச்சுற்று, 60 வயதுக்கு மேற்பட்டவர்களையும், 45 வயதுக்கு மேற்பட்ட, ஒன்றுக்கும் மேற்பட்ட நோய்களை உடையவர்களையும் இல-க்காகக்கொண்டுள்ளது. பயனாளிகள் எந்தவொரு அரசு மருத்துவம-னையிலும் இலவசமாக தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம். மேலும், தனி-யார் மையங்களிலும் தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம்.

---

**3. முதலாவது 'இந்திய புரத நாள்' கொண்டாடப்பட்ட ஆண்டு எது?**

அ) 2019

**ஆ) 2020 ☑**

இ) 2021

ஈ) 1990



✓ தேசிய அளவிலான பொதுநல முன்னெடுப்பான 'Right to Protein' இந்தி-யாவின் முதல் 'புரத நாளை' 2020 பிப்.27 அன்று அறிமுகப்படுத்தியது. புரதத்தின் ஊட்டச்சத்து நன்மைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்து-வதற்காக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. "Powering with Plant Protein" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**4. "உலகளவில் பள்ளிகளில் உணவளிக்கும் நிலை – State of Schoolfeeding Worldwide" என்றவொரு அறிக்கையை வெளியிடுகிற அமைப்பு எது?**

அ) FAO

ஆ) IUCN

**இ) UN – WFP ☑**

ஈ) WTO

✓ "உலகளவில் பள்ளிகளில் உணவளிக்கும் நிலை" என்ற பெயரிலான ஓர் அறிக்கையை ஐக்கிய நாடுகள் அவை – உலக உணவுத்திட்டம் (WFP) வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை, முதன்முதலில் 2013ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை, பள்ளி அடிப்படையிலான ஊட்டச்சத்து திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு குறித்த விரிவான பகுப்பாய்வை வழங்குகிறது.

---

**5.புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளின்படி, டிஜிட்டல் தளங்கள், எத்தனை மணிநேரத்திற்குள் தேவையான தகவல்களை வழங்க வேண்டும்?**

அ) 12 மணி நேரம்

ஆ) 24 மணி நேரம்

இ) 48 மணி நேரம்

**ஈ) 72 மணி நேரம் ☑**

✓ தகவல் தொழில்நுட்பம் (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் ஊடக நெறிமுறைகள் குறியீடு) விதிகள் – 2021 அண்மையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அது, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.

✓ இந்த விதிகளின்கீழ், வாட்ஸப்போன்ற தளங்கள் அங்கீகரிக்கப்பட்ட முக-வர் நிறுவனங்களுக்கு அடையாள சரிபார்ப்புகுறித்த தகவல்களை 72 மணிநேரத்திற்குள் வழங்கவேண்டும். சட்டத்துக்குப் புறம்பான செய்திக-ளை பதிவர்களை புகாரளிப்பதற்காக குறைதீர்க்கும் பொறிமுறையை அமைக்கவேண்டும் எனவும் இவ்விதிகளில் உள்ளது.

---

**6. நகர புத்தாக்க பரிவர்த்தனை தளத்தை அறிமுகப்படுத்தியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

இ) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) கல்வி அமைச்சகம்

✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது சமீபத்தில் நகர புத்தாக்க பரிமாற்ற (City Innovation Exchange) என்றவொரு தளத்தை தொடங்கியுள்ளது.

✓ நகரங்களில் காணப்படும் சவால்களுக்கு புதுமையான தீர்வுகளை வடி-வமைப்பதற்காக கல்வியாளர்கள், வணிகங்கள் மற்றும் அரசாங்கத்தை ஒன்றிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் தளத்தில், நானூற்றுக்கும் மேற்பட்ட துளிர் நிறுவனங்கள், 100 சீர்மிகு நகரங்கள், 150'க்கும் மேற்பட்ட சவால் அறிக்கைகள் மற்றும் 215' க்கும் மேற்பட்ட தீர்வுகள் வெளியிடப்பட்டன.

---

**7.மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவையின் அண்மைய கணிப்பின்படி, 2021–22ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி-யின் வளர்ச்சி விகிதம் என்னவாக இருக்கும்?**

அ) 7.5 சதவீதம்

ஆ) 9.5 சதவீதம்

**இ) 13.5 சதவீதம் ☑**

ஈ) 15 சதவீதம்

✓ உலகளாவிய மதிப்பீட்டு நிறுவனமான மூடிஸ், இந்தியாவின் 2021–22 மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி கணிப்பை 13.5 சதவீதமாக திருத்தியுள்ளது. நாட்டின் வளர்ச்சி, அடுத்த ஆண்டில் 6.2 சதவீதமாக இருக்கும். மூடிஸ், இந்தியாவின் இறையாண்மை மதிப்பீட்டை Baa3'இல் தக்கவைத்துள்ளது. அது, மிகக்குறைந்த முதலீட்டு தரமாகும். மேலும், அது எதிர்மறையான கண்ணோட்டத்தைக்குறிக்கிறது.

✓ இந்திய மதிப்பீட்டு நிறுவனமான ICRA, 2021–22ஆம் நிதியாண்டில், இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி, 10.5 சதவீத அளவுக்கு வளர்ச்சியடையும் என்று அறிவித்தது.

---

**8.தூய்மைமிகு சிறப்புவாய்ந்த இடங்கள் முன்முயற்சியின் நான்காம் கட்டத்தின்கீழ், எத்தனை தளங்களை மத்திய ஜல் சக்தி அமைச்சகம் தேர்ந்தெடுத்துள்ளது?**

அ) 8

**ஆ) 12 ☑**

இ) 15

ஈ) 16

✓ தூய்மைமிகு சிறப்புவாய்ந்த இடங்கள் (SIP) முன்முயற்சியின் நான்காம் கட்டத்தின்கீழ், 12 சிறப்புவாய்ந்த தளங்களைத் தேர்ந்தெடுத்துள்ளதாக மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் நலவாழ்வுத்துறை அறிவித்துள்ளது. SIP என்பது தூய்மை இந்தியா இயக்கம் – கிராமப்புறம் (SBM–G) இயக்கத்தின் ஒரு முன்முயற்சியாகும்.

✓ இம்முயற்சி, தளங்களிலும் அதனைச்சுற்றியுள்ள இடங்களிலும் தூய்மை தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஜல் சக்தி அமைச்சகமானது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சக-ம், சுற்றுலா அமைச்சகம், கலாச்சார அமைச்சகம் மற்றும் மாநில / யூடி அரசாங்கங்களுடன் இதற்காக ஒருங்கிணைந்துள்ளது.

---

**9.விரைவில் இந்திய ராணுவம் பயன்படுத்தவுள்ள செய்தியனுப்பும் தளத்தின் பெயர் என்ன?**

அ) Secure Application for Internet ☑



ஆ) Safe Messaging Service

இ) Secure Instant Messaging

ஈ) Safe Communication Network

✓ இந்திய இராணுவத்தளபதி M M நரவனேவின் அண்மைய அறிக்கையி–ன்படி, இந்திய ராணுவம் தனது உள்ளக தொடர்புகளுக்கு SAI (Secure Application for Internet) என்ற செய்தி பரிமாற்ற தளத்தைப் பயன்படுத்தத் தொடங்கவுள்ளது. கர்னல் சாய் சங்கர் உருவாக்கிய இந்தச் செயலி, இணைய பாதுகாப்பு & தரவு சோதனை ஆகியவற்றுக்கான அனுமதி பெறும் பணியில் ஈடுபட்டுள்ளது. அனுமதி கிடைத்தபிறகு, இந்த ஆண்டு ஏப்ரல் 1 முதல் இந்தச் செயலி பயன்படுத்தப்படும்.

---

**10.கிருஷ்ணதேவராயனின் இறப்புகுறித்த முதல் கல்வெட்டுக்குறிப்–பை, ASI, பின்வரும் எவ்விடத்தில் கண்டுபிடித்தது?**

அ) ஆக்ரா



ஆ) மதுரா

**இ) தும்கூர் ☑**

ஈ) கிருஷ்ணகிரி

✓ அண்மையில், இந்திய தொல்லியல் ஆய்வகத்தின் (ASI) உறுப்பினர்கள் கிருஷ்ணதேவராய நாயக்கனின் இறப்பு குறித்த முதல் கல்வெட்டுக் குறிப்பை கண்டுபிடித்துள்ளனர். கிருஷ்ணதேவராய நாயக்கன் விஜயந–கர பேரரசின் பேரரசராக இருந்து பொ ஆ 1509–1529 வரை ஆண்டார். கர்நாடகாவின் தும்கூர் மாவட்டத்தின் ஹொன்னேஹள்ளியில் உள்ள கோபாலகிருஷ்ணா கோவிலுக்கு அருகே இக்கல்வெட்டு காணப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மரபு சாரா எரிசக்தியின் மற்றொரு வடிவமாக, சர்க்கரை ஆலைகளில் கரும்பில் இருந்து சாறு எடுத்த பிறகு மிச்சமிருக்கும் கரும்புச் சக்கையில் இருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. தமிழகத்தில் உள்ள 18 சர்க்கரை ஆலைகளில் சுமார் 41.10 கோடி வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.**

**2. இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (ஐசிஏஐ) தென்மண்டல தலைவராக கோவையை சேர்ந்த ஆடிட்டர் கே.ஜலபதி பதவியேற்றார். ஐசிஏஐ–யின் தென்மண்டலத்தில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலங்கானா, ஆந்திர பிரதேசம், புதுச்சேரி மற்றும் லட்சத்தீவுகளை சேர்ந்த 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடிட்டர்கள், 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர்.**

**3. ஆஸ்திரேலியாவுக்கான இந்திய தூதராக மன்பிரீத் வோஹ்ரா நியமனம். இந்தியாவிற்க்கான, மெக்சிகோ தூதராக பணியாற்றி வருபவர் மன்பிரீத் வோஹ்ரா. ஐ.எப்.எஸ்., (IFS) எனப்படும் இந்திய வெளியுறவு சேவைகள் பிரிவின், 1988ம் ஆண்டு அதிகாரியான இவரை, ஆஸ்திரேலியாவுக்கான தூதராக நியமனம் செய்து, வெளியுறவுத்துறை அமைச்சகம் உத்தரவிட்டு உள்ளது.**

**4. சப்–ஜூனியா் தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் மகாராஷ்டிரத்தின் சாயாலி வனி பட்டம் வென்றாா்.**

**மத்திய பிரதேச மாநிலம், இந்தூரில் நடைபெற்ற இப்போட்டியில் நடைபெற்ற இறுதிச்சுற்றில் சாயாலி 11–8, 7–11, 14–12, 5–11, 8–11, 11–7, 12–10 என்ற செட்களில் ஹரியாணா வீராங்கனை சுஹானா சைனியை வீழ்த்தினாா். சாயாலிக்கு சாம்பியன் கோப்பையுடன் பரிசுத் தொகை ரூ.33,000, சுஹானாவுக்கு ரன்னா்–அப் கோப்பையுடன் பரிசுத் தொகை ரூ.16,500 வழங்கப்பட்டது.அதேபோல், கேடட் பிரிவில் தமிழக வீராங்கனை எம். ஹன்சினி 11–6, 8–11, 11–5, 9–11, 11–5, 11–9 என்ற செட்களில் சக மாநிலத்தவரான அனன்யா முரளீதரனை வீழ்த்தி சாம்பியன் ஆனாா்.**

**5. பிரான்சில் நடைபெற்ற மாண்ட்பெலியர் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் ஆனா பெல்ஜிய வீரர் டேவிட் காஃபின். இறுதிச்சுற்றில் ஸ்பெயினின் ராபர்டோ பௌதிஸ்டா அகுட்டை வீழ்த்தினார். பெல்ஜிய வீரர் டேவிட் காஃபினுக்கு ஒட்டுமொத்தமாக இது 5 ஆவது ஏடிபி பட்டமாகும்.**

**6. இந்தியா, ஜப்பான் உதவியுடன் கொழும்பு துறைமுகத்தை மேம்படுத்தும் திட்டம் – இலங்கை அரசு ஒப்புதல்.**

இந்தியா, ஜப்பானுடன் இணைந்து கொழும்பு துறைமுகத்தின் மேற்கு சரக்குப் பெட்டக முனையத்தை மேம்படுத்தும் திட்டத்துக்கு இலங்கை அரசு ஒப்புதல் அளித்துள்ளது. (கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு கன்டெய்னர் முனையம் அமைக்கும் ஒப்பந்தத்தை மீண்டும் இந்தியா, ஜப்பானுக்கு வழங்க இலங்கை அரசு முடிவெடுத்துள்ளது.) இந்த திட்டத்துக்கு இலங்கை அமைச்சரவை மாா்ச் 1–ஆம் தேதி ஒப்புதல் அளித்தது. இவ்வாறு மேம்படுத்தப்படும் முனையம், வரையறுக்கப்பட்ட அரசு–தனியாா் கூட்டு நிறுவனமாகச் செயல்படும்.அமைச்சரவையின் ஒப்புதல் நகல், இந்தியாவின் அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டல நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் அதானி குழுமம் செயல்படுவதற்கு இந்திய தூதரகம் ஒப்புதல் அளித்துள்ளது என்று அந்த குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்படி, அந்த முனையத்தை கூட்டு நிறுவனம் 30 ஆண்டுகளுக்கு இயக்கும்.முன்னதாக, இந்தியா, ஜப்பானுடன் இணைந்து கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு சரக்குப் பெட்டக முனையத்தை மேம்படுத்த இலங்கை துறைமுக ஆணையம் கடந்த 2019–இல் ஒப்பந்தம் மேற்கொண்டிருந்தது. முந்தைய அதிபா் மைத்ரிபாலா சிறீசேனா ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட அந்த ஒப்பந்தத்துக்கு தொழிற்சங்கங்கள் எதிா்ப்பு தெரிவித்தன. இலங்கை துறைமுக ஆணையத்தில் இந்தியா, ஜப்பானில் இருந்து 49 சதவீத முதலீடுகள் வருவதற்கு அந்த சங்கங்கள் எதிா்ப்பு தெரிவித்தன. இதையடுத்து, அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக பிரதமா் மகிந்த ராஜபட்ச அறிவித்தாா்."

**7. 'புதிய கட்சியைப் பதிவு செய்ய 7 நாள் போதும்' – இந்தியத் தேர்தல் ஆணையம்!**

இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் இன்று (02/03/2021) வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "புதிய கட்சியைப் பதிவு செய்ய 30 நாட்கள் தேவை என்ற அவகாசம் 7 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. தேர்தல் நடைபெறும் தமிழகம், புதுச்சேரி, மேற்குவங்கம், அசாம், கேரளா ஆகிய ஐந்து மாநிலங்களில் மட்டும் இந்தப் புதிய அறிவிப்பு பொருந்தும். தேர்தல் தொடர்பான பொது அறிவிப்பை வெளியிடக் கட்சிகள் இனி 30 நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை. கட்சித் தொடங்குவது பற்றி இரண்டு தேசிய தினசரி நாளிதழ்கள் மற்றும் இரண்டு பிராந்திய மொழிகளின் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் அளித்து அதைத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். கரோனாவால் கட்சிகளைப் பதிவு செய்வதில் நிறைய சிரமங்கள் இருந்ததால், சலுகை வழங்கப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பு: பொதுவாக ஒருவர் கட்சி தொடங்குகிறார் என்றால் அது தொடர்பான அறிவிப்புகளை ஆங்கிலம் மற்றும் மற்றொரு உள்ளூர் மொழி என இரண்டு நாளிதழ்களில் விளம்பரம் செய்திருக்க வேண்டும் என தேர்தல் ஆணையத்தின் விதிமுறை உள்ளது. பின்னர் அதுதொடர்பான விவரங்களை இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இந்திய தேர்தல் ஆணையம் அதை பரிசீலித்து பொது வெளியில் அறிவிப்பு ஒன்றினை வெளியிடுவார்கள். அதற்கு பொதுமக்கள் யார் வேண்டுமானாலும் 30 நாட்களுக்குள் தங்கள் ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாம். இதுதான் நடைமுறையாக இருந்து வந்தது.

**8. சமூக வலைதளமான இன்ஸ்டாகிராமில் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை 10 கோடி பேரை கொண்ட முதல் கிரிக்கெட் வீரர் எனும் பெருமையை பெற்றார் இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் விராட் கோலி.**

32 வயதான விராட் கோலி ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில் இந்த சாதனையை நிகழ்த்திய முதல் நபர் ஆவார். ஐசிசி இன்ஸ்டாகிராமில் வெளியிட்ட பாராட்டுச் செய்தியில், "இன்ஸ்டாகிராமில் 10 கோடி

பின்தொடர்பவர்களைக் கொண்ட முதல் கிரிக்கெட் வீரர் விராட் கோலி" எனத் தெரிவித்துள்ளது. இன்ஸ்டாகிராமில் அதிகம் பின்தொடரும் 4-வது விளையாட்டு வீரர் விராட் கோலி ஆவார். இந்த வகையில் போர்ச்சுக்கல் கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, அர்ஜென்டினாவின் லயோனல் மெஸ்ஸி, பிரேசிலின் நெய்மர் முதல் 3 இடங்களில் உள்ளனர். இதில் கிறிஸ்டியானோ ரொனால்டோவை 26.5 கோடி பேரும், மெஸ்ஸியை 18.6 கோடி பேரும், நெய்மரை 14.7 கோடி பேரும் இன்ஸ்டாகிராமில் பின்தொடர்கின்றனர். இவர்களுக்கு அடுத்தபடியாக ஹாலிவுட் நடிகரும் முன்னாள் மல்யுத்த வீரருமான டுவைன் (தி ராக்) ஜான்சன், அமெரிக்க பாடகர்-பாடலாசிரியர் பியோனஸ் மற்றும் அரியானா கிராண்டே ஆகியோரை தலா 10 கோடி பேர் இன்ஸ்டாகிராமில் பின்தொடர்கின்றனர்.

**9. சிட்ரன் கார் தயாரிப்பு நிறுவனம் இந்தியாவில் முதன்முறையாக சென்னையில் 'லா மேசன் சிட்ரன்' என்ற பெயரில் புதிய விற்பனையகத்தை திறந்துள்ளது.**

**10. நாட்டிலுள்ள துறைமுகங்களின் மேம்பாட்டுக்காக வரும் 2035-ஆம் ஆண்டுக்குள் சுமாா் ரூ.6 லட்சம் கோடி முதலீடு செய்யப்படும் என்று பிரதமா் நரேந்திர மோடி தெரிவித்துள்ளாா்.**

இந்திய கடல்சாா் மாநாடு தில்லியில் செவ்வாய்க்கிழமை (02.03.2021) நடைபெற்றது. அந்த மாநாட்டைத் தொடக்கி வைத்து பிரதமா் மோடி பேசியதாவது: கடல்சாா் பொருளாதாரத்தில் உலகின் முன்னணி நாடாக இந்தியா திகழ்ந்து வருகிறது. கடல்சாா் துறையின் வளா்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கு மத்திய அரசு உறுதி கொண்டுள்ளது. கடல்சாா் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது, சீா்திருத்தங்களை மேற்கொள்வது உள்ளிட்டவற்றின் வாயிலாக நாட்டைத் தற்சாா்பு அடையச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள்நாட்டு நீா்வழிப் போக்குவரத்து, சரக்குகளை எடுத்துச் செல்வதற்கு மலிவானதாக இருப்பதோடு மட்டுமல்லாமல், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலும் உள்ளது. 2030-ஆம் ஆண்டுக்குள் 23 உள்நாட்டு நீா்வழிப் போக்குவரத்து வழித்தடங்களை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு உறுதி கொண்டுள்ளது. அதற்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்டவை மேம்படுத்தப்படும். நீா்வழிப் போக்குவரத்தில் தொழில்நுட்ப வசதிகள் அதிக அளவில் பயன்படுத்தப்படும். நீா்வழிப் போக்குவரத்து மூலமாக வங்கதேசம், பூடான், மியான்மா் நாடுகளையும் தொடா்பு கொள்வதற்கு ஆராயப்பட்டு வருகிறது. தனியாா் துறை பங்களிப்பு அவசியம்: கடல்சாா்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியுள்ளன. சாகா்மாலா திட்டத்தின் கீழ் ரூ.6 லட்சம் கோடி முதலீட்டில் 574 திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. 2035-ஆம் ஆண்டுக்குள் அத்திட்டங்கள் செயல்படுத்தப்படும். துறைமுகங்கள் மேம்பாட்டில் தனியாா் துறை அதிக அளவில் பங்களிக்க வேண்டும்.ரூ.2.25 லட்சம் கோடி மதிப்பீட்டில் 400 திட்டங்கள் செயல்பாட்டுக்குத் தயாா்நிலையில் உள்ளன. அவற்றில் நிறுவனங்கள் அதிக அளவில் முதலீடுகளை அளிக்க வேண்டும். நாட்டின் துறைமுகங்களில் சா்வதேச நிறுவனங்கள் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும்.

**கட்டமைப்பு வசதிகள்:** கடல் விமானங்களின் செயல்பாட்டுக்காக 16 இடங்களில் ஓடுபாதைகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 5 தேசிய உள்நாட்டு நீா்வழிப் போக்குவரத்து வழித்தடத்தில் படகு முனையத்துக்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. நாட்டில் கலங்கரை விளக்கம் அமைந்துள்ள 189 இடங்களில் 78 பகுதிகளை சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் கலங்கரை விளக்கம் அமைந்துள்ள பகுதிகள் பெரும் பலனடையும். தீவுகளை சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**புதுப்பிக்கத்த எரிசக்திக்கு முக்கியத்துவம்:** நாட்டிலுள்ள முக்கிய துறைமுகங்களில் சூரிய ஆற்றல் மூலமாகவும், காற்றாலை மூலமாகவும் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2030-ஆம் ஆண்டுக்குள் துறைமுகங்களின் எரிசக்தி பயன்பாட்டில் 60 சதவீதத்தை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்கள் வாயிலாக உற்பத்தி செய்வதற்கு இலக்கு நிா்ணயிக்கப்பட்டுள்ளது.

**வா்த்தக மையங்கள்:** கடல்சாா் விவகாரத்தில் இந்தியா சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ளது. நாட்டின் கடற்கரைகளில் நாகரிகங்கள் வளா்ச்சி கண்டன. ஆயிரத்துக்கும் மேலான ஆண்டுகளுக்கு நாட்டின் துறைமுகங்கள் முக்கிய வா்த்தக மையங்களாக விளங்கின. துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சா் மன்சுக் மாண்டவியா.

**11. தமிழக பசுமை இயக்கத் தலைவர்ஈரோடு மருத்துவர் வெ.ஜீவானந்தம் (76) உடல்நலக் குறைவால் (மார்ச்சு 2) காலமானார்.**

தமிழகத்தின் சுற்றுச்சூழல் இயக்கச் செயல்பாடுகளில் மிகத் தீவிரமாகப் பங்கேற்று வந்தவர் ஈரோடு வெ.ஜீவானந்தம். இவரது தந்தை வெங்கடாசலம் சுதந்திரப் போராட்ட வீரர். திருச்சியில் பட்டப் படிப்பை முடித்த ஜீவானந்தம், தஞ்சை மருத்துவக் கல்லூரியில் மருத்துவக் கல்வியையும், சென்னையில் மயக்கவியலில் முதுநிலை மருத்துவப் பட்டமும் பெற்றவர். சுற்றுச்சூழல் பிரச்சினைகளை முன்னெடுத்துச் செயல்பட்டவர். குறைந்த கட்டணத்தில் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வகையில்,கூட்டுறவு முறை மருத்துவமனையை ஈரோட்டில் தொடங்கக்காரணமாக இருந்தவர்.

**12. ஐ.நா. மனித உரிமை கவுன்சில் தீர்மானம்: இந்தியா ஆதரவு அளிக்குமென இலங்கை நம்பிக்கை.**

ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் இறுதி தீர்மானத்தில் இந்தியா தங்களுக்கு ஆதரவாக இருக்கும் என்று இலங்கை நம்பிக்கை தெரிவித்துள்ளது. இலங்கையில் உள்நாட்டுப் போரின்போது மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்ததான குற்றச்சாட்டு தொடர்பான அறிக்கை ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றது. விரைவில் இறுதித் தீர்மானம் நிறைவேற்றப்பட இருக்கிறது. இந்நிலையில், இது தொடர்பாக இலங்கை அரசு செய்தித் தொடர்பாளரும், அமைச்சருமான கெகிலிய ராம்புகவெல கூறுகையில், 'ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படும்போது, அதற்கு இந்தியா ஆதரவளிக்காது என்று நம்புகிறோம். இலங்கை யல் தமிழர்கள் நலன் காக்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது என்பதை நாங்கள் தெளிவாக உணர்கிறோம். இது மிகவும் அர்த்தமிக்க நிலைப்பாடு. இலங்கைக்கு அநீதி இழைக்கப்படுவதை இந்தியா ஒரு போதும் விரும்பாது. ஏனெனில், இலங்கை மீதான குற்றச்சாட்டுகள் தவறானவை என்பதை நாங்கள் ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளோம். ஐ.நா.மனித உரிமை கவுன்சிலில் இலங்கைக்கு ஆதரவாக இருக்கும் சீனா, ரஷியா உள்ளிட்ட நாடுகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்' என்றார். முன்னதாக, இந்தத் தீர்மானம் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் பேசிய இந்தியாவின் நிரந்தரத் தூதர் இந்திரா மணி பாண்டே, இலங்கையின் ஒற்றுமை, பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு இந்தியா ஆதரவாக இருக்கிறது. அதே நேரத்தில் இலங்கைத் தமிழர்களின் சமத்துவம், நீதி, அமைதி, கண்ணியம் காக்கப்பட வேண்டும் என்பதிலும் இந்தியா உறுதியாக இருக்கிறது. இந்த விஷயத்தில் இலங்கை உறுதியான முடிவுகளை எடுக்கும் என்று நம்புகிறோம். இலங்கை அரசியல்சாசன சட்டத்தின் 13 ஆவது திருத்தம் பாதுகாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்' என்றார்.

**13. இனிமேல் தனித்தனியாக கிடையாது நாடாளுமன்றத்துக்கு ஒரே சேனல் சன்சாத்.**

நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒருங்கிணைந்த நிகழ்ச்சியை ஒளிபரப்ப, 'சன்சாத்' என்ற ஒரே சேனல் தொடங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் மக்களவை நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்யவும், மாநிலங்களவை நிகழ்ச்சியை ஒளிபரப்பவும் தனித்தனி சேனல்கள் உள்ளன. இவை 2ம் தற்போது ஒருங்கிணைக்கப்பட்டு. 'சன்சாத்' என்ற பெயரில் ஒரே தொலைக்காட்சி சேனல் தொடங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மக்களவை செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'மாநிலங்களவை தலைவரும், மக்களவை சபாநாயகரும் இணைந்து எடுத்த முடிவின்படி, ராஜ்யசபா மற்றும் லோக் சபா தொலைக்காட்சியை ஒருங்கிணைத்து 'சன்சாத்' தொலைக்காட்சி தொடங்கப்பட்டுள்ளது. இந்த தொலைக்காட்சியின் தலைமை நிர்வாக அதிகாரியாக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ரவி கபூர் ஒப்பந்த அடிப்படையில் ஒரு ஆண்டுக்கு நியமனம் செய்யப்படுகிறார்,' என கூறப்பட்டுள்ளது.

**14. தேர்தல் பணி அனுமதிக்கு 'மொபைல் ஆப்'**

அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு விரைவாக அனுமதி வழங்க ஏதுவாக, 'என்கோர்' என்ற செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டம், பிரசார கூட்டங்களுக்கு அனுமதி பெறுவது; பிரசார வாகனத்துக்கு அனுமதி பெறுவது போன்ற பணிகளுக்கு, 'சுவிதா' என்ற செயலி வெளியிடப்பட்டது.கடந்த லோக்சபா தேர்தலின் போது, இந்த செயலி பயன்பாட்டுக்கு வந்தது. அதிலிருந்து குறைபாடுகளை நீக்கி, 'அப்டேட்' செய்யப்பட்ட 'என்கோர்' என்ற செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.அரசியல் கட்சியினர், அனுமதி கேட்டு ஆன்லைனில் விண்ணப்பித்தாலும், தேர்தல் நடத்தும் அலுவலர், மற்ற அதிகாரிகளிடம் அனுப்பி, தனித்தனியாக பரிந்துரைகளை கேட்டுப்பெற வேண்டிய நிலை இருந்தது. கூடுதல் கால விரயம் ஏற்பட்ட நிலையை மாற்றி, 'என்கோர்' என்ற 'அப்டேட்' செய்யப்பட்ட புதிய செயலி அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சியினர் அல்லது வேட்பாளர்கள், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அனுமதி கேட்டு விண்ணப்பித்தால், அந்த விண்ணப்பம், நியமனம் செய்யப்பட்டுள்ள அரசு அதிகாரிக்கு சென்றுவிடும். அவர்கள் உடனுக்குடன் பரிந்துரை செய்தால், அடுத்த, 24 மணி நேரத்திற்குள், தேர்தல் நடத்தும் அலுவலர் அனுமதி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கூறுகையில், 'அரசியல் கட்சியினர் மற்றும் வேட்பாளர், பிரசார கூட்டம், பொதுக்கூட்டம், வாகன அனுமதி உட்பட பல தேவைகளுக்கு, இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம். அதிகாரிகள், 'என்கோர்' செயலி வாயிலாக, 24 மணி நேரத்திற்குள் அனுமதி வழங்க, தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது' என்றனர்.இதற்கான, இணைய தள முகவரி: suvidha.eci.gov.in.

**15. பங்கு வெளியீட்டில் 'அனுபம் ரசாயன்'**

'அனுபம் ரசாயன்' நிறுவனம், புதிய பங்கு வெளியீட்டுக்கு வருவதற்கு, பங்குச் சந்தை கட்டுப்பாட்டு அமைப்பான, 'செபி' அனுமதி வழங்கி உள்ளது. சூரத்தை சேர்ந்த, 'அனுபம் ரசாயன்' நிறுவனம், சிறப்பு வகை ரசாயனங்களை தயாரித்து வருகிறது. முதலில் பாரம்பரிய ரசாயனப் பொருட்களை தயாரித்து வந்த இந்நிறுவனம் இப்போது சிறப்பு ரசாயனங்கள் உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறது. இந்நிறுவனத்துக்கு, 6 தொழிற்சாலைகள் உள்ளன. இந்நிறுவனம், 760 கோடி ரூபாய் நிதி திரட்டும் பொருட்டு, புதிய பங்கு வெளியீட்டுக்கு வர அனுமதி கோரி, கடந்த டிசம்பர் மாதத்தில் விண்ணப்பித்திருந்தது.பரிசீலனைக்குப் பிறகு, இப்போது, செபி அனுமதி வழங்கி இருக்கிறது.

**16. எண்ணெய், எரிவாயு சேமிப்பு விழிப்புணர்வு – தமிழகத்துக்கு தேசிய அளவில் விருது.**

எண்ணெய், எரிவாயு சேமிப்புகுறித்து பொதுமக்களிடையே அதிக அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக, தமிழக அரசுக்கு அகில இந்திய செயல் திறன் விருது கிடைத்துள்ளது. மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் பேரில், கடந்த 2020–ம் ஆண்டு, 'சக்ஷம்' என்றபெயரில் எரிபொருள் சிக்கனம் குறித்து ஒரு மாத விழிப்புணர்வு நிகழ்ச்சியை எண்ணெய் நிறுவனங்கள் நடத்தின. இதில், எரிபொருள் சிக்கனம் குறித்து கடந்த ஆண்டில் அதிகஅளவில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியதற்காக, தமிழக அரசுக்கு அகில இந்திய அளவிலான சிறந்த செயல் திறன் விருது வழங்கப்பட்டு உள்ளது. கடந்த மாதம் காணொலி காட்சி மூலம் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் சஜ்ஜன் சிங் ஆர்.சவான், இந்தியன்ஆயில் நிறுவனத்தின் செயல் இயக்குநர் பி.ஜெயதேவன் விருதைப் பெற்றுக் கொண்டனர். இந்நிலையில், இந்த விருதுக்கான பாராட்டுப் பத்திரம், சான்றிதழை தமிழக தலைமைச் செயலர் ராஜீவ் ரஞ்சனிடம், இந்தியன் ஆயில் நிறுவன செயல் இயக்குநர்பி.ஜெயதேவன் அண்மையில் வழங்கினார்.

**17. தமிழகத்தில் பின்பற்றப்படும் 69 சதவீத இடஒதுக்கீட்டுக்கு அரசியலமைப்பு சாசனத்தின் பிரிவு 9 ன் கீழ் சட்ட ரீதியிலான பாதுகாப்பு உள்ளது.**

**18. தமிழ்நாடு உருது அகாடமி துணை தலைவராக – முஹம்மத் நயீமுர் ரஹ்மான் நியமனம்.**

தமிழக அரசின் உயர்கல்வி துறை சார்பில் தமிழ்நாடு உருது அகாடமி புதுப்பிக்கப்பட்டுள்ளது. அகாடமியின் தலைவராக உயர்கல்வித் துறை அமைச்சர் கே.பி.அன்பழகன் இருப்பார். துணைத்தலைவராக டாக்டர் முஹம்மத்நயீமுர் ரஹ்மான் நியமிக்கப்பட்டுள்ளார்.

**19. அணுமின் நிலையம் மற்றும் சுற்றுப்புற கிராமப் பகுதிகளின் பாதுகாப்பு கருதி குடியிருப்பு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு கட்டுமான பணிகளை கண்காணிப்பதற்காக கதிரியக்க பகுதி உள்ளூர் திட்ட குழுமம் (நிலா கமிட்டி) ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கத்தில் பல்வேறு பிரிவுகளில் அணுமின் நிலையங்கள் மற்றும் அணு ஆராய்ச்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அணுமின் நிலையத்தை சுற்றியுள்ள அணு கதிர்வீச்சு பாதிப்பு ஏற்படும் பகுதிகளாக சுற்றுப்புற 5 கி.மீ. தொலைவுக்கு வரும் 14 கிராமங்களை நிலா கமிட்டி வரையறை செய்துள்ளது. பேரிடர் மற்றும் அவசர காலங்களில் மக்களை வெளியேற்றுவதில் சிரமம் ஏற்படும் என்பதால், வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் குறிப்பிட்ட சர்வே எண்களில் உள்ள இடங்களை பத்திரப்பதிவு செய்ய வேண்டாம் என நிலா கமிட்டி உறுப்பினர் செயலர், மாவட்ட பதிவாளருக்கு அரசாணையை இணைத்து கடிதம் வழங்கினார். நிலா கமிட்டியின் உத்தரவுக்கு சுற்றுப்புற கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். மேலும், இது தொடர்பாக ₹நிலா கமிட்டி எதிர்ப்பு இயக்கம்' என்ற பெயரில் பாதிக்கப்படும் கிராமங்களை சேர்ந்த பொதுமக்களை ஒருங்கிணைத்து குன்னத்தூர் கிராமத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

**20. சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தில் மேரிகோமுக்கு கவுரவ பதவி**

சர்வதேச குத்துச்சண்டை சங்க நிர்வாகத்தில் செய்யப்பட்ட மறுசீரமைப்பை தொடர்ந்து கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் சர்வதேச குத்துச்சண்டை சாம்பியன்கள் மற்றும் மூத்த வீரர்கள் அடங்கிய கமிட்டி அமைக்கப்பட்டது. இந்த கமிட்டியின் தலைவராக 6 முறை உலக குத்துச்சண்டை சாம்பியன் பட்டத்தை வென்றவரும், 2012–ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றியவருமான 37 வயது இந்திய வீராங்கனை மேரிகோம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். சர்வதேச குத்துச்சண்டை சங்க இயக்குனர்கள் இ–மெயில் மூலம் அளித்த வாக்குகளின் அடிப்படையில் மேரிகோமுக்கு இந்த கவுரவ பதவி கிடைத்து இருக்கிறது. சர்வதேச குத்துச்சண்டை சங்க தலைவர் கிரெம்லிவ்

**21. இந்தியாவில் ஊடக சுதந்திரம், போராட்டக்காரர்களின் பாதுக்காப்பு பற்றி – பிரிட்டன் நாடாளுமன்றத்தில் விவாதிக்க முடிவு**

இந்தியாவில் ஊடக சுதந்திரம் மற்றும் போராட்டக்காரர்களுக்கான பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து பிரிட் டன் நாடாளுமன்றத்தில் அடுத்த வார திங்கள்கிழமை (மார்ச் 8) விவாதம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதை வலியுறுத்தி பிரிட்டன் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்ட மனுவில் கையெழுத்திட்டவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்தை தாண்டியதைத் தொடர்ந்து இந்த விவாதத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபை மனுக்கள் குழு புதன்கிழமை தெரிவித்தது. மத்திய அரசு புதிதாக அமல்படுத்திய 3 வேளாண் சட்டங்களை ரத்து செய்ய வலியுறுத்தி பஞ்சாப், ஹரியாணா மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் தில்லியை முற்றுகையிட்டு தொடர்ந்து 3 மாதங்களைக் கடந்து போராடி வருகின்றனர். அரசுடன் நடைபெற்ற பல கட்டப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்ததால், போராட்டம் தொடர்ந்து வருகிறது. விவசாயிகளின் போராட்டத்துக்கு

உள்நாட்டு, வெளிநாட்டு பிரபலங்களும் ஆதரவு தெரிவித்தனர். அதுபோல, பிரிட்டனைச் சேர்ந்த சில நாடா ளுமன்ற உறுப்பினர்கள், 'விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்று மாறு இந்திய அரசை பிரிட்டன் வலியுறுத்த வேண்டும்' என்று வலியுறுத்தினர்.

**22. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒத்துழைப்பு தொடர்பாக பிரான்ஸ் நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**

பரஸ்பர நன்மை, சமத்துவம் மற்றும் பரஸ்பர பரிமாற்ற அடிப்படையில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான அடிப்படையை நிறுவுவதே இந்த ஒப்பந்தத்தின் அம்சம் ஆகும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சூரிய சக்தி, காற்று, ஹைட்ரஜன் மற்றும் உயிரி ஆற்றல் தொடர்பான தொழில்நுட்பங்கள் உள்ளன. இதேபோல் வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் ஒத்துழைப்பு வழங்குவதற்காக, இந்தியாவிற்கும் பிஜிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது, 5 வருட காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வாயிலாக 2030–ஆம் ஆண்டுக்குள் 450 ஜிகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. அந்த இலக்கை அடைவதற்கு பிரான்ஸுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் முக்கியப் பங்களிக்கும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஃபிஜியுடன் ஒப்பந்தம்:** வேளாண் விவகாரங்கள் சார்ந்த துறைகளில் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஃபிஜியுடன் மேற்கொள்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில், 'இந்தியா–ஃபிஜி நாடுகளின் வேளாண் அமைச்சகங்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. இரு நாடுகளைச் சேர்ந்த தனியார் நிறுவனங்களும் வேளாண் துறை சார்ந்த விவகாரங்களில் கூட்டாக இணைந்து செயல்படுவதற்கு ஒப்பந்தம் வழிவகுக்கிறது. ஆராய்ச்சியாளர்கள், நிபுணர்களைப் பகிர்ந்து கொள்வது, வேளாண் துறை சார்ந்த தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொள்வது, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் ஒத்துழைப்புடன் செயல்படுவது, வேளாண்துறை அதிகாரிகள், விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பது உள்ளிட்டவற்றை மேற்கொள்வதற்கு இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வழிவகை ஏற்பட்டுள்ளது.

**கூட்டு செயற்குழு:** வேளாண் விளைபொருள்களை சந்தைப்படுத்துதல், பதப்படுத்துதல், மதிப்பு கூட்டல் உள்ளிட்டவற்றில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளில் இந்தியாவும் ஃபிஜியும் இணைந்து செயல்படும். வேளாண்துறை சார்ந்த ஆராய்ச்சிகளிலும் இரு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயல்படும்.வேளாண் துறையில் இரு நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான திட்டங்களை முன்மொழிவதற்கு கூட்டு செயற்குழு அமைக்கப்படவுள்ளது. அக்குழு 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி உரிய பரிந்துரைகளை வழங்கும்.ஃபிஜியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும் தினத்திலிருந்து 5 ஆண்டுகளுக்கு அந்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறைந்தபட்ச ஆதரவு விலை:** சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவது தொடர்பாக மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது, சணலுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக குவிண்டாலுக்கு ரூ.4,225 அளிக்கப்பட்டு வருகிறது.

**23. பூடான், நேபாள எல்லைகளில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக, சஷஸ்திர சீமா பல் (சசுத்திர சீமா பல்) (Sashastra Seema Bal SSB) (எஸ்எஸ்பி) படைப் பிரிவில் 13,000 வீரர்களுடன் புதிதாக 12 குழுக்களை நியமிப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.**

இதுகுறித்து எஸ்எஸ்பி தலைமை இயக்குநர் குமார் ராஜேஷ் சந்திரா, பிடிஐ செய்தியாளரிடம் புதன்கிழமை கூறியதாவது: ஒவ்வோர் ஆண்டிலும் 3 குழுக்கள் வீதம், அடுத்த 4 ஆண்டுகளில் 12 குழுக்கள் சேர்க்கப்படும். எஸ்எஸ்பி படைப்பிரிவில் புதிய குழுக்களை நியமிப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்திருப்பது பேருதவியாக உள்ளது. படைப் பிரிவுகளுக்கு புதிதாக வீரர்களை நியமிப்பதால், எல்லைப் பாதுகாப்பு மேலும் வலுப்படும். புதிதாக நியமிக்கப்படும் படைக் குழுக்கள், நேபாள எல்லையிலும், பூடான் எல்லையிலும், இவ்விரு நாடுகளும் இந்தியாவுடன் சங்கமிக்கும் சிக்கிம் எல்லையிலும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் கூறினார். இந்தியாவின் எல்லையில், 1,751 கி.மீ. தொலைவை நேபாளமும், 699 கி.மீ. தொலைவை பூடானும் பகிர்ந்துகொள்கின்றன. இந்த எல்லைப் பகுதிகளில் எஸ்எஸ்பி படைப் பிரிவைச் சேர்ந்த 90,000 வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**24. மேற்குத் தொடர்ச்சி மலையில் 5 புதிய இன தவளைகள் கண்டுபிடிப்பு.**

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் புதிய இனங்களைச் சார்ந்த 5 புதர் தவளைகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். தில்லி பல்கலைக்கழகம், கேரள வன ஆராய்ச்சி மையம், அமெரிக்காவின் மின்னசோடா பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் தவளைகள் குறித்து ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். சுமார் 10 ஆண்டுகளாக அவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய சூழலில், புதிய இனங்களைச் சேர்ந்த 5 புதர் தவளைகளை அவர்கள் கண்டறிந்துள்ளனர். வெளிப்புற உடலமைப்பு, மரபணு (டிஎன்ஏ), ஒலியெழுப்புதல், நடத்தை உள்ளிட்டவற்றில் அத்தவளைகள் வேறுபட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். தங்கள் கண்டுபிடிப்புகளை அறிவியல் ஆய்விதழிலில் அவர்கள் வெளியிட்டுள்ளனர். இடுக்கி, பாலக்காடு, காக்கயம் அணை, அகஸ்தியர் மலை, ஆனைமலை ஆகிய பகு திகளில் புதிய இன புதர் தவளைகள் காணப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகில் கண்டறியப்பட்டுள்ள புதர் தவளைகளில் 80 சதவீதம், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலேயே காணப்படுகின்றன. அவற்றிலும் பெரும்பாலான இனங்கள் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன.

**1.உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூக கண்ணோட்டம்–2021'ஐ வெளியிட்டுள்ள பன்னாட்டு அமைப்பு எது?**

அ) IMF

**ஆ) ILO ☑**

இ) WEF

ஈ) UNICEF

✓ உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூக கண்ணோட்டம் – 2021'ஐ பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO) வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கை ILO'இன் முதன்மை வெளியீடுகளுள் ஒன்றாகும். இது, வேலையை ஒழு–ங்கமைப்பதற்கான விவரங்களை வழங்குகிறது. இணைய அடிப்படை–யிலான மற்றும் இருப்பிட அடிப்படையிலான தளங்களில், தொழிலாளர்–கள் மற்றும் வணிகங்களின் அனுபவத்தையும் இது சித்தரிக்கிறது.

---

**2.நாணயம் மற்றும் நிதி தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஆ) உலக வங்கி

**இ) இந்திய ரிசர்வ் வங்கி ☑**

ஈ) புதிய வளர்ச்சி வங்கி

✓ 2020–21ஆம் ஆண்டிற்கான நாணயம் மற்றும் நிதி (Currency and Finance) தொடர்பான அறிக்கையை இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் வெளியிட்டுள்ளது. "Reviewing the Monetary Policy Framework" என்பது இந்த ஆண்டின் அறிக்கைக்கான கருப்பொருளாகும். நடைமுறையில் உள்ள நிச்சயமற்ற பொருளாதார சூழ்நிலைக்கு எதிராக, 2021 மார்ச்சில் நிலவும் பணவீக்கம் மற்றும் பணவீக்க இலக்குகளின் போக்குகளை இந்த அறிக்கை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்கிறது.

---

**3. COVID–19 ஆக்ஸிஜன் அவசர பணிக்குழுவை தொடங்கவுள்ள அமைப்பு எது?**

அ) UNICEF

ஆ) இந்திய மருத்துவ சங்கம்

இ) AIIMS

**ஈ) உலக நலவாழ்வு அமைப்பு ☑**


✓ உலக நலவாழ்வு அமைப்பு (WHO) தலைமையிலான ஒரு கூட்டமைப்பு COVID–19 உயிர்வளி அவசர பணிக்குழுவை தொடங்க முடிவுசெய்துள்–ளது. குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்கொண்ட நாடுகளின் சுகாதார அமைப்புகள் மீதான அழுத்தங்களுக்கு மத்தியில் இம்முடிவு வந்துள்ளது.

✓ அந்நாடுகளுள் பல உயிர்வளி இன்றி சிகிச்சைக்கு பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றன. இப்பணிக்குழுவின்கீழ், உலகெங்கிலும் உள்ள சுகாதார அமைப்புகளுக்கு உயிர்வளி வழங்கலை அதிகரிப்பதை உலக சுகாதார அமைப்பு (WHO) நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**4. 78ஆவது கோல்டன் குளோப் விருதுகளில் 'சிறந்த திரைப்படம்' (நாடகம்) விருதை வென்ற திரைப்படம் எது?**

**அ) நோமட்லேண்ட் ☑**



ஆ) பரியேறும் பெருமாள்

இ) தி கிரேளன்

ஈ) கனா

✓ 78ஆவது கோல்டன் குளோப் வெற்றியாளர்களாக "Nomadland" மற்றும் "Borat Subsequent Moviefilm" ஆகிய திரைப்படங்கள் தெரிவாகின. நாடகப்பிரிவுக்கான விருதை 'Nomadland'உம், நகைச்சுவை அல்லது இசைப்பிரிவுக்கான விருதை 'Borat Subsequent Moviefilm'உம் வென்றது.

✓ 'Nomadland'இன் இயக்குநரான சோலி ஜாவோ, 1984'க்குப் பிறகு 'சிறந்த இயக்குநர்' விருதை வென்ற முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றார்.

---

**5.இந்திய பெண்கள் லீக்கை நடத்தவுள்ள மாநிலம் எது?**

அ) கேரளா

**ஆ) ஒடிஸா ☑**

இ) இராஜஸ்தான்

ஈ) திரிபுரா

✓ இந்த ஆண்டின் இந்திய பெண்கள் லீக், ஒடிஸா மாநிலத்தால் நடத்தப்பட உள்ளது. இந்திய பெண்கள் லீக் என்பது இந்தியாவின் ஒரு முன்னணி பெண்கள் கால்பந்து லீக் போட்டியாகும். இது, அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தால் நடத்தப்படுகிறது. இதுமுதலில், தில்லியில், 6 அணிகளு–டன் விளையாடும் போட்டியாக இருந்தது. இதன் கடைசி பருவத்தின்–போது (4ஆவது IWL) பெங்களூரில் 12 அணிகளாக மாற்றப்பட்டது.

---

**6. ஆண்டுதோறும், 'பாகுபாடுகள் ஒழிப்பு நாள் – Zero Discrimination Day' அனுசரிக்கப்படும் தேதி எது?**

அ) மார்ச் 02

**ஆ) மார்ச் 01 ☑**

இ) மார்ச் 05

ஈ) மார்ச் 04

✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.1 அன்று UNAIDSஆல் உலகம் முழுவதும் 'பாகுபாடுகள் ஒழிப்பு நாள்' அனுசரிக்கப்படுகிறது.

✓ 2030ஆம் ஆண்டுக்குள் AIDS'ஐ ஒரு பொதுநல அச்சுறுத்தலாக எண்ணி அதனை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமெனக்கொண்ட ஐநா அமைப்புதான் இந்த UNAIDS.

---

**7.பின்வரும் எந்த அமைச்சகத்தால், 'சுகம்ய பாரத்' செயலி தொடங்க–ப்பட்டுள்ளது?**

அ) பெண்கள் & குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம்

ஆ) திறன் மேம்பாட்டு அமைச்சகம்

**இ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

ஈ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

✓ மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது "சுகம்ய பாரத்" என்ற செயலியை உருவாக்கியுள்ளது. அணுகலை மேம்படுத்துவ–தற்காக, மாற்றுத்திறனாளிகள் அதிகாரமளித்தல் துறை (DEPwD) இதை உருவாக்கியுள்ளது. இது "Access – The Photo Digest" என்ற தலைப்பி–லான கையேட்டுடன் வெளியிடப்பட்டது.

---

**8.இந்தியா, பின்வரும் எந்நட்புநாட்டோடு இணைந்து, 'சுற்றுச்சூழல் ஆண்டு' என்றவொன்றை அறிமுகப்படுத்தியது?**

**அ) பிரான்ஸ் ☑**



ஆ) இலங்கை

இ) மொரிஷியஸ்

ஈ) மியான்மர்

✓ இந்திய சுற்றுச்சூழல் அமைச்சரான பிரகாஷ் ஜவடேகர், பிரான்ஸ் சுற்றுச் சூழல் அமைச்சருடன் இணைந்து இந்தோ–பிரெஞ்சு 'சுற்றுச்சூழல் ஆண்டை' அறிமுகம்செய்துவைத்தார். இந்தியாவும் பிரான்சும் அஸ்ஸாம், இராஜஸ்தான், மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் சுற்றுச்சூழல் திட்டங்களைத்தொடங்கவுள்ளன. நீடித்த வளர்ச்சியில் இந்தோ–பிரெஞ்சு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

---

**9.சிறப்பு வேளாண்மை மண்டலங்களை (SAZ) நிறுவுவதற்கான கொள்கையை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு



ஆ) பஞ்சாப்

**இ) உத்தரகண்ட் ☑**

ஈ) தெலங்கானா

✓ 2011ஆம் ஆண்டில் சிறப்பு வேளாண் மண்டலங்களை (SAZ) அமைத்த முதல் மாநிலம் உத்தரகண்ட் ஆகும். இது சிறப்பு பொருளாதார மண்டலங்

–களின் அடிப்படையில் தொடங்கப்பட்டதாகும். இது மலைப்பகுதிகளுக்கு உகந்த உயர்தர விதைகளை உருவாக்க உழவர்களை ஊக்குவித்தது.

---

**10.MoSPIஆல் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, 2020–21 நிதியாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்ன?**

அ) –7 சதவீதம்

**ஆ) –8 சதவீதம் ☑**

இ) –9 சதவீதம்

ஈ) –10 சதவீதம்



- ✓ புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) வெளியிட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, 2020–21ஆம் நிதியாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி –8 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.
- ✓ NSO, MoSPI ஆகியவை காலாண்டு மதிப்பீடுகளையும் வெளியிட்டன. தொடர்ச்சியாக இரண்டு காலாண்டு சுருக்கத்திற்குப் பிறகு, அக்டோபர்–டிசம்பர் காலாண்டில் (Q3) இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 0.4 சதவீதம் அதிகரித்துள்ளது. இதன்மூலம் நாடு மந்தநிலையிலிருந்து மீள்வதாகக் கூறப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வாக்களிக்க 'இ–எபிக்' பயன்படுத்தலாம்**

தமிழகத்தில் தற்போது 21 லட்சத்துக்கும் மேற்பட்ட முதல் முறை வாக்காளர்கள் உள்ளனர். இவர்களுக்கு வண்ண வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகின்றன. இதுதவிர 'இ–எபிக்' என்ற புதிய வசதியையும் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து சத்யபிரத சாஹூ கூறியதாவது: தமிழகத்தில் தற்போதுள்ள 21 லட்சம் முதல் முறை வாக்காளர்களில் 4 லட்சம் பேருக்கு அவர்கள் முகவரிக்கே வாக்காளர் அடையாள அட்டை விரைவு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு தேர்தலுக்கு முன்னதாகவே அனுப்பப்படும். இதுதவிர, 'இ–எபிக்' எனப்படும் மின்னணு வாக்காளர் அடையாள அட்டை பெறும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதல் முறை வாக்காளர்கள் 'voterportal.eci.gov.in' என்ற இணைப்பில், சென்று பதிவு செய்தால், கைபேசிக்கு வரும் கடவுச் சொல்லை பயன்படுத்தி, மின்னணு வாக்காளர் அட்டையை கைபேசியில் பெறலாம். அதன்பின் அதை 'பிரின்ட் அவுட்' எடுத்து ஆவணமாக பயன்படுத்தியும் வாக்களிக்கலாம்.

**2. தமிழகத்தில் அரசு வேலைக்காக 63 லட்சம் பேர் காத்திருப்பு: வேலைவாய்ப்பு பயிற்சித் துறை தகவல்**

தமிழகத்தில் அரசு வேலைக்காக 63 லட்சத்துக்கு 63 ஆயிரம் பேர் காத்திருப்பதாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அறிவித்துள்ளது. 10–ம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரையிலான கல்வித் தகுதியை அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும், பிஇ, பிடெக்,பிஎஸ்சி விவசாயம், எம்பிபிஎஸ், பிஎல் உள்ளிட்ட தொழிற்படிப்பு தகுதிகள், முதுகலை பட்டப் படிப்புத் தகுதிகளை சென்னை மற்றும் மதுரையில் உள்ள மாநில தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்ய வேண்டும். இந்நிலையில், கடந்த பிப்.28 வரை பதிவு செய்தவர்களின் எண்ணிக்கையை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை வெளியிட்டுள்ளது. அதன்படி, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள மொத்த பதிவுதாரர்களின் எண்ணிக்கை 63 லட்சத்து 63 ஆயிரத்து 122. அதில் 24 வயது முதல் 35 வரையுள்ளவர்கள் 22 லட்சத்து 78 ஆயிரத்து 107 பேர். 36 முதல் 57 வயது வரை உள்ளவர்கள் 10 லட்சத்து 89 ஆயிரத்து 786 பேர். ஒரு லட்சத்து 65 ஆயிரத்து 983 இடைநிலை ஆசிரியர்களும், பிஎட் முடித்த 2 லட்சத்து 97 ஆயிரத்து 362 பட்டதாரிகளும், பிஎட் முடித்த2 லட்சத்து 18 ஆயிரத்து 324 முதுகலை பட்டதாரிகளும் உள்ளனர். மேலும், 2 லட்சத்து 8 ஆயிரத்து 556 பிஇ, பிடெக் பட்டதாரிகளும், 2 லட்சத்து 18 ஆயிரத்து 411 எம்இ, எம்டெக் பட்டதாரிகளும் அரசு வேலைக்காக காத்திருப்பதாக தெரிவித்துள்ளது.

**3. மார்ச் 4 – தேசிய தொழிலாளர் பாதுகாப்பு தினம்**

ஆண்டுதோறும் மார்ச் 4–ம் தேதி தேசிய தொழிலாளர் பாதுகாப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்தஆண்டு 50–வது தொழிலாளர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, தொழிலாளர் துறை செயலர் நசிமுத்தீன் தலைமையில், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் அலுவலர்கள், தேசிய பாதுகாப்பு குழுமத்தின் உறுப்பினர்கள் மற்றும் இதர அலுவலர்களுடன் பாதுகாப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது. தொழிலாளர் நலன் சார்ந்து அவர்கள் வாழ்க்கை உயர தொழிலாளர்களுக்கு பல்வேறு திட்டங்கள் அரசால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விபத்துகளை குறைத்த மற்றும் விபத்துகள் இன்றி செயல்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு மாநில அளவில் பாதுகாப்பு விருதுகள், பாதுகாப்பு மேம்பாடு, உற்பத்தித் திறன் மற்றும் தர மேம்பாடு குறித்த சீரிய ஆலோசனைகளை கூறும் தொழிலாளர்களுக்கு தமிழக அரசின் 'உயர்ந்த உழைப்பாளர் விருது'களும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

**4. 'தினமலர்' நாளிதழின் கவுரவ ஆசிரியரும், சங்க கால நாணயவியலின் தந்தையுமான டாக்டர் இரா.கிருஷ்ணமூர்த்தி, 88, சென்னையில் நேற்று (04.03.2021) மாரடைப்பால் காலமானார். இந்திய அரசின் உயரிய தொல்காப்பியர் விருது, லண்டன் வரலாற்று அமைப்பின் ஆய்வியல் அறிஞர் விருதுகளை பெற்றவர். சங்ககால நாணயவியலின் தந்தை என, போற்றப்படுபவர்.**

**நாணயவியல் அறிஞர்:**

சங்ககால பாண்டிய மன்னரான பெருவழுதி வெளியிட்ட நாணயங்கள், சேர மன்னர்கள் வெளியிட்ட வெள்ளி நாணயங்கள், ரோமானிய மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் ஆகியவற்றை கண்டுபிடித்துள்ளார் இரா.கிருஷ்ணமூர்த்தி. இதுதொடர்பாக பல்வேறு நூல்களை தமிழ், ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இந்திய நாணயவியல் கழகத் தலைவர், தென்னிந்திய நாணயவியல் கழகத்தின் தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் இருந்துள்ளார். இதழியல், தமிழ் எழுத்துசீர்திருத்தம், கல்வெட்டியல், நாணயவியல் தொடர்பான இவரது பங்களிப்பை போற்றும் வகையில், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இவருக்கு கடந்த 2004–ம் ஆண்டு கவுரவ டாக்டர் பட்டம் வழங்கியது.

**5. 'நிதி நடவடிக்கைப் பணிக்குழு' (எஃப்.ஏ.டி.எஃப்.):**

பிரான்ஸின் பாரிஸைத் தலைமையிடமாகக் கொண்டிருக்கும் 'நிதி நடவடிக்கை பணிக்குழு' (எஃப்.ஏ.டி.எஃப்.) பாகிஸ்தானைத் தனது 'சாம்பல் நிறப் பட்டிய'லில் தொடர்ந்து வைத்திருக்கும் முடிவை எடுத்திருப்பது நிச்சயம் அந்நாட்டுக்குப் பின்னடைவையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கும். அந்நியச் செலாவணி முறைகேடுகள், பயங்கரவாதத்துக்குச் செய்யப்படும் நிதியுதவி போன்றவற்றைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது இந்த அமைப்பு. மேற்கண்ட முறைகேடுகளில் ஈடுபடும் நாடுகள் 'கறுப்புப் பட்டிய'லில் சேர்க்கப்பட்டு, அவற்றுக்குப் பொருளாதாரரீதியில் அழுத்தம் தரப்படும். இந்தப் பட்டியலைவிட சற்றுத் தீவிரம் குறைந்தது 'சாம்பல் நிறப் பட்டியல். 2015–ல் இந்தப் பட்டியலிலிருந்து பாகிஸ்தான் நீக்கப்பட்டு 2018–ல் மறுபடியும் சேர்க்கப்பட்டது. 27 நடவடிக்கைகளை அது நிறைவேற்ற வேண்டும் என்றும் பணிக்கப்பட்டது. இந்தப் பணிகளில் இன்னும் மூன்று விஷயங்களில் போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சமீபத்தில் 'எஃப்.ஏ.டி.எஃப்' அமைப்பின் தலைவர் மார்கஸ் ப்ளெயர் தெரிவித்தார்.

**6. உடல் செல்கள் தமக்கு கிடைக்கும் ஆக்சிஜன் அளவை உணர்ந்து தகவமைத்துக் கொள்ளும் மரபணு தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த தற்காக, 2019 – ம் ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு வில்லியம் ஜி.கேலின், சர் பீட்டர் ரேட் கிளிப், கிரேக் எல்.செமன்ஸா ஆகியோருக்கு வழங்கப்பட்டது .**

**7. ஜம்மு காஷ்மீரில் நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை தொகுதிகளை மறுவரையறை செய்வதற்காக கடந்த ஆண்டு, தொகுதி வரையறை ஆணையம் அமைக்கப்பட்டது. இந்நிலையில் இதன் பதவிக் காலம் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.**

**இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிக்கையில், "ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையிலான காஷ்மீர் தொகுதி வரையறை ஆணையம் தனது பணிகளை முடிக்க மேலும் ஓராண்டு எடுத்துக்கொள்ளும்" என கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தல் தள்ளிப்போகும் என கூறப்படுகிறது.**

**8. ராணுவக் கமாண்டர்கள் மாநாடு (முப்படை தளபதியர் மாநாடு):**

குஜராத் மாநிலம் நர்மதா மாவட்டத்தில் உள்ள கெவாடியா நகரில் ராணுவக் கமாண்டர்கள் மாநாடு கடந்த வியாழக்கிழமை (04.03.2021) தொடங்கி நடைபெற்று வருகிறது. மூன்று நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் தேசியப் பாதுகாப்பு, எல்லைப் பிரச்சினைகள், அண்டை

நாடுகளுடனான ராணுவ உறவு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இந்த மாநாட்டின் இறுதி நாளான நாளை (சனிக்கிழமை – 06.03.2021), பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்றவுள்ளார். பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைகளின் தலைமை தளபதி விபின் ராவத், ராணுவத் தலைமை தளபதி எம்.எம். நரவனே, விமானப்படை தளபதி பதோரியா உள்ளிட்டோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர். ராணுவ வீரர்களும், இளநிலை அதிகாரிகளும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவுள்ளனர். ராணுவக் கமாண்டர்கள் மாநாட்டில் இவர்கள் பங்கேற்பது இதுவே முதன்முறையாகும்.

**9. 20 பில்லியன் டாலர் மதிப்பிலான ராணுவத் தளவாடங்களை விற்பனை செய்ய அமெரிக்க அரசு ஒப்புதல்:**

இந்த ஆண்டு இதுவரையில் இந்தியாவுக்கு 20 பில்லியன் டாலர் மதிப்பிலான ராணுவத் தளவாடங்களை விற்பனை செய்ய அமெரிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இது இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மை தொடர்பான அமெரிக்க அரசின் அக்கறையை காட்டுகிறது என்று பைடன் தலைமையிலான அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது. இது குறித்து பைடன் அரசின் செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் கூறும்போது, 'இந்த ஆண்டு இதுவரையில் 20 பில்லியன் டாலர் மதிப்பிலான மேம்பட்ட தொழில்நுட்பங்களைக் கொண்ட பாதுகாப்புத் தளவாடங்களை இந்தியாவுக்கு விற்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இது இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மை தொடர்பாக அமெரிக்க அரசின் அக்கறையைக் காட்டுகிறது' என்று தெரிவித்தார்.

**10. ஒரே ஓவரில் 6 சிக்சர் விளாசினார் போலார்டு: இலங்கையை வீழ்த்தியது வெஸ்ட் இண்டீஸ்.**

இலங்கைக்கு எதிரான முதலாவது 'டுவெண்டி–20' போட்டியில், கேப்டன் போலார்டு ஒரே ஓவரில் 6 சிக்சர் விளாச வெஸ்ட் இண்டீஸ் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இலங்கையின் அகிலா தனஞ்செயா வீசிய 4வது ஓவரில், 6 சிக்சர் விளாசினார். இதன்மூலம் சர்வதேச 'டுவெண்டி–20' அரங்கில், ஒரே ஓவரில் 6 சிக்சர் பறக்கவிட்ட 2வது வீரரானார். ஏற்கனவே இந்தியாவின் யுவராஜ் சிங், இச்சாதனை படைத்திருந்தார். இவர், 2007ல் டர்பனில் நடந்த 'டுவெண்டி–20' உலக கோப்பை லீக் போட்டியில் இங்கிலாந்தின் ஸ்டுவர்ட் பிராட் வீசிய ஒரே ஓவரில் 6 சிக்சர் அடித்தார். சர்வதேச அரங்கில் இம்மைல்கல்லை எட்டிய 3வது வீரரானார் போலார்டு. ஒருநாள் போட்டியில் தென் ஆப்ரிக்காவின் கிப்ஸ், ஒரே ஓவரில் 6 சிக்சர் அடித்துள்ளார். இவர், 2007ல் செயின்ட் கிட்சில் நடந்த உலக கோப்பை (50 ஓவர்) லீக் போட்டியில் நெதர்லாந்தின் வான் பங்க் வீசிய ஒரே ஓவரில் 6 சிக்சர் விளாசினார்.

**11. 'சர்வதேச சிறுதானிய ஆண்டு – 2023'**

நியூயார்க்: வரும், 2023ம் ஆண்டை, சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவிக்கக் கோரி, ஐ.நா., பொதுச் சபையில் இந்தியா தாக்கல் செய்த தீர்மானம், ஒருமனதாக நிறைவேறியது. இந்தியா உடன், வங்கதேசம், கென்யா, நேபாளம், நைஜீரியா, ரஷ்யா, செனகல் ஆகிய நாடுகள் இணைந்து அறிமுகப்படுத்திய இந்த தீர்மானத்தை, 70 நாடுகள் வழி மொழிந்தன. ஐ.நா.,வின், 193 நாடுகளும், இந்த தீர்மானத்தை ஒருமனதாக ஆதரித்ததால், '2023 – சர்வதேச சிறுதானிய ஆண்டு' ஆக கடைப்பிடிக்கப்படும் என, அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா.வுக்கான இந்திய தூதர் – டி.எஸ். திருமூர்த்தி

**12. ரங்கராஜன் குழு அறிக்கையின் நிலை என்ன?**

கொரோனா பரவல் காரணமாக மாநிலத்தின் பொருளாதாரம் கடும் பாதிப்பை சந்தித்த நிலையில், மாநிலத்தை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் தொடர்பாக, ரிசர்வ் வங்கி முன்னாள் கவர்னர் ரங்கராஜன் தலைமையில் நிபுணர் குழுவை தமிழக அரசு கடந்த மே மாதம் அமைத்தது. இந்தக்குழு, கடந்த ஆண்டு செப்டம்பர் 21 ம் தேதி, முதல்வரிடம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இந்த அறிக்கையில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த தேவையான செலவினங்கள், தொழில் வளர்ச்சி திட்டங்களுக்கு ஊக்கம் அளிப்பது போன்ற விவரங்கள் இடம்பெற்றுள்ளது.

**13. பட்டியல் வெளியிட்டது மத்திய அரசு, மக்கள் வாழ சிறந்த நகரம் சென்னைக்கு 4 வது இடம்.**

இந்தியாவில் முக்கிய நகரங்களில் ஸ்மார்ட் சிட்டி திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றி வருகிறது. அங்கு சாலைகள் மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், குடிநீர் வசதி, சுகாதாரம் உள்பட பல்வேறு வசதிகளுக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்த நகரங்களில் நிறைவேற்றப்படும் திட்டங்கள் மற்றும் அந்த நகரில் செயல்படுத்தப்படும் பல்வேறு வசதிகள் அடிப்படையில் மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் ஆண்டுதோறும் சிறந்த ஸ்மார்ட் சிட்டிகளை தேர்வு செய்து வருகிறது.

அதன் அடிப்படையில் கடந்த 2020–ம் ஆண்டுக்காக நடந்த போட்டி: 'நகராட்சிகளின் செயல்திறன் குறியீடு–2020'

நாடு முழுவதும் மக்கள் வாழ சிறந்த நகரம் பற்றி நடத்தப்பட்ட ஆய்வில் சென்னைக்கு 4 ம் இடம் கிடைத்துள்ளது. இந்தியாவில் மக்கள் வாழ்வதற்கு சிறந்த நகரம் எது என்பது குறித்து ஆண்டுதோறும் அனைத்து மாநிலங்களிலும் ஆய்வு நடத்தப்படுகிறது. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் இதை நடத்துகிறது. இந்தாண்டில், நாடு முழுவதிலும் இருந்து 111 நகரங்கள் இந்த ஆய்வில் இடம் பெற்றன. தமிழகத்தில் இருந்து சென்னை, கோவை உட்பட 10 க்கு மேற்பட்ட மாநகராட்சிகளின் பெயர்கள் இடம் பெற்றன. இந்த ஆய்வில், நேரடியாகவும், ஆன்லைன் மூலமாகவும் மக்கள் கருத்து தெரிவித்தனர். இந்நிலையில், மக்களின் வாழ்க்கை திறன், சுகாதார மேம்பாடு, திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றின் அடிப்படையில் சிறந்த நகரங்களுக் கான பட்டியலை மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் எச்.எஸ்.பூரி நேற்று (மார்ச்ச 4, 2021) டெல்லியில் வெளியிட்டார். அதில் 10 லட்சம் மக்கள் தொகைக்கு மேலாக உள்ள நகரங்களின் பட்டியலில், சென்னையும், கோவையும் இடம் பெற்றுள்ளன. இதில், சென்னைக்கு 4 வது இடமும், கோவைக்கு 7 வது இடமும் கிடைத்துள்ளது. பெங்களூரு மாநகரம் நாட்டிலேயே முதல் இடத்தை பிடித்துள்ளது, என கூறப்பட்டுள்ளது. இதில் முதல் பத்து இடங்களை பிடித்த நகரங்களின் பட்டியலில் பெங்களூரு, புனே, அகமதாபாத், சென்னை, சூரத், நவி மும்பை, கோயமுத்தூர், வதோதரா, இந்தூர், மும்பை ஆகியவை இடம் பெற்றுள்ளன. நாட்டின் தலைநகரமான டெல்லி, 13 வது இடத்தை பிடித்துள்ளது. மக்கள்தொகை 10 லட்சத்துக்கு குறைவாக உள்ள நகரங்கள் பட்டியலில் சிம்லா முதலிடத்தையும், சேலம், வேலூர் ஆகியவை முறையே 5, 6–வது இடங்களையும், திருச்சி 10–வது இடத்தையும், திருநெல்வேலி 17, திருப்பூர் 18, ஈரோடு 24–வது இடங்களையும் பிடித்துள்ளன.

**சிறந்த நகராட்சி நிர்வாகம்:**

கல்வி, சுகாதாரம், குடிநீர் வசதி, துப்புரவு, பதிவு, அனுமதி, உட்கட்டமைப்பு ஆகிய சேவைகள், நிதியில் வருவாய்– செலவின மேலாண்மை, நிதி பரவ லாக்கல், மின்னணு ஆளுமை– பயன்பாடு– மின்னணு குறித்த கல்வியறிவு, திட்டங்கள் தயா ரிப்பு– நடைமுறைப்படுத்துதல்– கட்டாயமாக்குதல், நிர்வாகத்தில் திறன்– வெளிப்படைத்தன்மை– கடமை, மனிதவளம், பங்கேற்பு உள்ளிட்ட காரணிகள் அடிப்படையில் சிறந்த நகராட்சி நிர்வாகங்கள் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது. இதில், மக்கள்தொகை 10 லட்சத்துக்கு அதிகமான நகரங்களில் இந்தூர் முதலிடத்தையும், கோவை 12–வது இடத்தையும், சென்னை 18–வது இடத்தையும், மதுரை 22–வது இடத்தையும் பெற்றுள்ளன. மக்கள்தொகை 10 லட்சத்துக்கு குறைவாக உள்ள நகரங்களில் சேலம் 5–வது இடத்தையும், திருநெல்வேலி 10–வது இடத்தையும், ஈரோடு 13–வது இடத்தையும், வேலூர் 14–வது இடத்தையும், திருச்சி 17–வது இடத்தையும், தூத்துக்குடி 20–வது இடத்தையும் பெற்றுள்ளன.

**14. 2021 ஆம் ஆண்டிலும் பிஎப்புக்கு 8.5 சதவீத வட்டி வழங்க முடிவு**

**15. இந்திய தொழில் கூட்டமைப்பின் (சிஐஐ) தமிழக பிரிவு தலைவராக டாக்டர் எஸ்.சந்திரகுமார் தேர்வு**

**16. பிரதமர் மோடியின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகிறது!.**

பிரதமா' நரேந்திர மோடியின் வாழ்க்கை வரலாறு 'ஏக் ஔா' நரேன்' (மற்றுமொரு நரேன்) என்ற பெயரில் திரைப்படமாகத் தயாராகவுள்ளது. வங்க மொழித் திரைப்பட இயக்குநா' மிலன் பௌமிக், பிரதமா' மோடியின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக்கவுள்ளாா'. அந்தப் படத்தில் பிரதமா' மோடியின் வேடத்தில் தொலைக்காட்சி நடிகா' கஜேந்திர சௌஹான் நடிக்கவுள்ளாா'.

**1.**அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பாரம்பரிய 'லாந்தர் விளக்கு விழா' கொண்டாடப்படுகிற நாடு எது?



அ) வங்கதேசம்

**ஆ) சீனா ☑**

இ) ஜப்பான்

ஈ) தென் கொரியா

✓ சீனா தனது பாரம்பரிய, 'விளக்கு விழா'வை முதல் சீன சந்திர மாதத்தின் 15ஆவது நாளில் கொண்டாடுகிறது. இந்த விழா சீனப்புத்தாண்டு அல்லது 'வசந்த விழா' காலத்தின் இறுதிநாளையும் குறிக்கிறது. இந்த ஆண்டு, 2021 பிப்.12 அன்று சீனா 'காளை ஆண்டு'க்குள் அடியெடுத்து வைத்தது. இந்த விழா, சீன நாட்காட்டியின்படி முதல் முழுநிலா இரவாகும்.

---

**2.** 'தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் குறித்த அறிக்கை – 2021'ஐ வெளியிட்டுள்ள அமைப்பு எது?

அ) FAO

**ஆ) UNCTAD ☑**

இ) WTO

ஈ) IMF

UNITED NATIONS
UNCTAD

✓ ஐநா வர்த்தக மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (UNCTAD) சமீபத்தில் 'தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அறிக்கை–2021' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. நவீன தொழில்நுட்பங்கள் தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகளை விரிவுபடுத்துகிறதா மற்றும் அதிக ஏற்றத்தாழ்வுக–ளை உருவாக்குகின்றனவா என்பதை UNCTAD'இன் இவ்வறிக்கை ஆராய்கிறது. தற்போதைய $350 பில்லியன் அமெரிக்க சந்தையுடன், தொழில்நுட்பங்கள் 2025ஆம் ஆண்டில் $3.2 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு வளரக்கூடும் என்று இவ்வறிக்கை காட்டுகிறது.

---

**3.**'One District One Focus' தயாரிப்புகளின் பட்டியலை இறுதிசெய்து–ள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

**இ) வேளாண் அமைச்சகம் ☑**

ஈ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம்

सत्यमेव जयते
Ministry of Agriculture & Farmers Welfare
Government of India

✓ மத்திய உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகமானது, One District One Focus'இன்கீழ் வரவிருக்கும் தயாரிப்புகளின் பட்டியலை இறுதி செய்துள்ளது. நாடு முழுவதும் 728 மாவட்டங்களுக்கான தயாரிப்புகளை மத்திய உணவுப்பதப்படுத்துதல் அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து இப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்ட பொருட்கள் வேளாண், தோட்டக்கலை, விலங்கு, கோழி, பால், மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு, கடல் துறைகளைச் சார்ந்தவையாகும்.

---

**4.**170 ஆண்டுகளுக்குப்பிறகு இந்தோனேசியாவில் காணப்பட்ட பறவையினம் எது?



**அ) புருவங்கருத்த தவிட்டுக்குருவி ☑**

ஆ) வெண் சிட்டுக்குருவி

இ) வன ஆந்தை

ஈ) வங்கத்து கானமயில்

✓ அழிந்துபோனதாகக் கருதப்பட்ட புருவங்கருத்த தவிட்டுக்குருவி, சுமார் 170 ஆண்டுகளுக்குப்பிறகு மீண்டும் தென்பட்டுள்ளது. இந்தோனேசியா–வின் போர்னியோவில் இந்தப் பறவை தென்பட்டுள்ளது. இந்தப்பறவை முதன்முதலில் கடந்த 1848'இல் அறிவியலாளர்களால் விவரிக்கப்பட்டது; பின்னர் அது அழிந்துவிட்டதாக கருதப்பட்டது. உலகளாவிய வனவுயிரி பாதுகாப்பின்படி, இந்தோனேசியாவின் போர்னியோவில், இருவர் தற்செ–யலாக இந்தப்பறவையை நிழற்படம் எடுத்தனர்.

---

**5.**மக்களவை மற்றும் மாநிலங்களவை தொலைக்காட்சி அலைவரி–சைகளை இணைத்து உருவாக்கப்பட்ட புதிய தொலைக்காட்சி அலைவரிசையின் பெயர் என்ன?



அ) இந்தியா TV

**ஆ) சன்ஸாத் அலைவரிசை ☑**

இ) LRS TV

ஈ) RS TV

✓ இந்திய நாடாளுமன்றம் தனது மக்களவை மற்றும் மாநிலங்களவைக்–கான இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகளை ஒருங்கிணைத்து சன்சாத் டிவி என்ற புதிய நிறுவனத்தை உருவாக்கியுள்ளது. இப்புதிய தொலைக்காட்சி அலைவரிசை, அவைகளின் நடவடிக்கைகளை நேர–லையாக ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் ஒளிபரப்பும். இப்புதிய தொலைக்காட்சி அலைவரிசையின் தலைமைச் செயல் அதிகாரியாக முன்னாள் ஐவுளித்துறை செயலாளர் இரவி கபூர் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**6.**CERAWeek உலகளாவிய எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் தலை–மைத்துவ விருதைப்பெறவுள்ள தலைவர் யார்?



**அ) நரேந்திர மோதி ☑**

ஆ) இராம்நாத் கோவிந்த்

இ) மம்தா பானர்ஜி

ஈ) நிர்மலா சீதாராமன்

✓ இந்திய பிரதமர் நரேந்திர மோதிக்கு CERAWeek உலகளாவிய எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் தலைமைத்துவ விருது வழங்கப்பட்டுள்ளது. டெக்–சாஸின் ஹூஸ்டனில் தகவல் மற்றும் நுண்ணறிவு நிறுவனமான IHS மார்கிட் ஏற்பாடு செய்யும் வருடாந்திர மாநாடான செராவீக் பன்னாட்டு எரிசக்தி மாநாட்டில் அவருக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது.

---

**7.** ISRO தனது PSLV–C51 ஏவுகலத்தைப் பயன்படுத்தி எத்தனை செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவியது?



அ) 18

**ஆ) 19 ☑**

இ) 20

ஈ) 21

✓ இந்தியாவின் PSLV–C51 ஏவுகலமானது ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்தில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. இது பிரேசில், ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் இந்தியாவைச்சார்ந்த 19 செயற்கைக்கோள்க–ளுடன் பிரேசிலின் 637 கிலோகிராம் எடையுடைய ஆப்டிகல் புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான அமேசானியா–1'ஐ விண்ணுக்கு சுமந்துசென்றது.

---

**8.**பின்வரும் எவ்வறிவியலாளரின் கண்டுபிடிப்பை நினைவுகூரும் வகையில் தேசிய அறிவியல் நாள் அனுசரிக்கப்படுகிறது?



**அ) ஜெகதீஷ் சந்திரபோஸ் ☑**

ஆ) C V இராமன்

இ) சீனிவாச இராமானுஜன்

ஈ) ஹோமி ஜே பாபா

✓ 'இராமன் விளைவு' கண்டுபிடிக்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் பிப்.28 அன்று இந்தியாவில் தேசிய அறிவியல் நாள் அனுசரிக்கப்படுகிறது. அதேநாளில், C V இராமன், 'இராமன் விளைவு' குறித்து அறிவித்தார். அவருக்கு, 1930'இல் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

✓ "Future of Science and Technology and Innovation: Impact on Education Skills and Work" என்பது நடப்பாண்டில் (2021) வரும் தேசிய அறிவியல் நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**9.**பிரமோத் சந்திர மோடி என்பவர் பின்வரும் எந்த அமைப்பின் தலைவராவார்?



| | |
|---|---|
| அ) SEBI | ஆ) CBIC |
| **இ) CBDT ☑** | ஈ) IRDAI |

- ✓ மத்திய நேரடிவரிகள் வாரியத்தின் (CBDT) தலைவராக பிரமோத் சந்திர மோடி மீண்டும் நியமனம்செய்யப்பட்டுள்ளார். 1982ஆம் தொகுதி இந்திய வருவாய் சேவை அதிகாரியான PC மோடி, 2019 பிப்ரவரியில் CBDT'இன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது பதவிக்காலம் கடந்த ஆண்டு ஆகஸ்டில், ஆறு மாதகாலத்திற்கு நீட்டிக்கப்பட்டது.

---

**10.**BARC உருவாக்கிய, 'டிஜிட்டல் கோபால்ட் சிகிச்சை எந்திரத்தை' **இந்தியா எந்த நாட்டுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது?**

அ) மொரீஷியஸ்



**ஆ) மடகாஸ்கர் ☑**

இ) மியான்மர்

ஈ) மாலத்தீவுகள்

- ✓ பாபா அணு ஆராய்ச்சி மையம் உருவாக்கிய புற்றுநோய் சிகிச்சைக்கான ஒரு நவீன, 'டிஜிட்டல் கோபால்ட் சிகிச்சை எந்திரத்தை' தீவு நாடான மடகாஸ்கருக்கு இந்தியா வழங்கியுள்ளது. 'Bhabhatron–II', என்ற டெலி கோபால்ட் எந்திரம் அண்மையில் மடகாஸ்கரின் தலைநகரமான அன்ட –னனரிவோவில் அந்நாட்டின் அதிபர் ஆண்ட்ரி இராஜோலினாவால் திறந்துவைக்கப்பட்டது. இந்தியாவிடமிருந்து 'Bhabhatron–II' ரேடியோ சிகிச்சை எந்திரத்தைப்பெற்ற சில நாடுகளுள் இதுவும் ஒன்றாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேர்தல் விதிமீறல்களை தெரிவிக்கும் வசதி; தமிழில் இயங்குமா 'சி–விஜில்' செயலி?**

வாக்குக்கு பணம் கொடுப்பது உள்ளிட்ட, தேர்தல்விதிமீறல்கள் தொடர்பாக மக்கள் புகார் தெரிவிக்க 'சி–விஜில்'எனும் செயலியை தேர்தல் ஆணையம் 2018–ம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. இந்தச் செயலியை (c –VIGIL) 'ஸ்மார்ட் போன்' வைத்திருப்பவர்கள் 'கூகுள் பிளே ஸ்டோர்' அல்லது தேர்தல் ஆணையம் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செயலாம். அதில், அலை பேசி எண், பெயர், முகவரி, மாநிலம், மாவட்டம், பின்கோடு ஆகிய விவரங்களை பதிவு செய்ய வேண்டும். அரசியல்வாதிகள், வேட்பாளர்கள் தேர்தல் நடத்தை விதிமீறல்களில் ஈடுபடுவதை தாங்கள் அறியநேர்ந்தால், அதனை புகைப்படம் அல்லது வீடியோ எடுத்து, உரிய ஆதாரத்துடன் செயலியில் பதிவு செய்து, புகார் தெரிவிக்கலாம். தகவல் கொடுப்பவர் தனது பெயர் விவரத்தை வெளியிடாமல் ரகசியம் காக்கவிரும்பினால் அதற்கான வசதியும் அதில் உள்ளது. இந்தச் செயலி மூலம் பெறப்படும் புகார்களின் மீது 100 நிமிடத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் புகார் கொடுத்தவரின் அலைபேசி எண்ணிற்கு நடவடிக்கை எடுத்த பின் அது தொடர்பான விவரங்கள் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும் என்று தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த 'சி – விஜில்' செயலி இந்தி, ஆங்கிலம் மொழிகளில் மட்டுமே உள்ளது. இம்மொழிகள் தெரியாதவர்கள் இச்செயலியை பயன்படுத்த இயலாத நிலையே உள்ளது. நேர்மையாக தேர்தலை அணுக விரும்புவோர் தமிழ் உள்ளிட்ட பிற மாநில மொழிகளையும் இந்த 'சி– விஜில்' செயலியில் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.

**2. அமெரிக்கா, கனடா, 10 ஐரோப்பிய நாடுகள் இணைந்து வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பை (North Atlantic Treaty Organisation – NATO) 1949 ஏப்ரல் 4 – ல் ஏற்படுத்தின. உறுப்பு நாடுகளின் மீது அயலார் தாக்குதல் நடக்கும்போது, அவை பாதுகாப்பு ஒத்துழைப்பை வழங்கிக்கொள்ளும்.**

**3. இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) ராணுவத்திற்கு தேவையான ஏவுகணை உள்ளிட்ட தளவாடங்களை மேம்படுத்தி வருகிறது. அந்த வகையில், மேம்படுத்தப்பட்ட ராம்ஜெட் உந்துவிசை தொழில்நுட்பத்தை (எஸ்எப்டிஆர்) பயன்படுத்தி புதிய ஏவுகணையை ஒடிசா மாநிலம் சந்திப்பூர் ஏவுதளத்தில் இருந்து வெற்றிகரமாக ஏவி நேற்று (05.03.2021) சோதித்தது.**

**வானிலுள்ள இலக்குகளை வானிலிருந்து செலுத்தப்படும் ஏவுகணைகள் மூலமாக துல்லியமாகத் தாக்கி அழிப்பதற்கான தொழில்நுட்பத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி–மேம்பாட்டு நிறுவனம் (டிஆா்டிஓ) வெற்றிகரமாக சோதனை செய்தது. இத்தொழில்நுட்பத்தில், திட எரிபொருளைக் கொண்ட குழாய் வடிவ இயந்திரமானது ஏவுகணையுடன் இணைக்கப்படும். இது ஏவுகணையை ஏவுவதற்கு வழக்கமாகப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தைக் காட்டிலும் திறன்மிக்கதாகும். இந்தத் தொழில்நுட்பத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி – மேம்பாட்டு நிறுவனம் மேம்படுத்தி வருகிறது. அத்தொழில்நுட்பத்தின் சோதனை ஒடிஸாவின் பாலேசுவரம் மாவட்டத்திலுள்ள சண்டிபூா் பகுதியில் வெள்ளிக்கிழமை (05.03.2021) நடைபெற்றது. சோதனை வெற்றிகரமாக நிறைவடைந்ததாக டிஆா்டிஓ அதிகாரிகள் தெரிவித்தனா். ஏவுகணையை உந்தித் தள்ளும் இயந்திரமானது, எதிா்பாா்த்தபடி வெற்றிகரமாகச் செயல்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனா். வானிலுள்ள இலக்குகளை வானிலிருந்தே தாக்கி அழிக்கப் பயன்படுத்தப்படும் ஏவுகணைகளில் இந்தப் புதிய தொழில்நுட்பத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி – மேம்பாட்டு நிறுவனம் பயன்படுத்தவுள்ளது. வானிலுள்ள இலக்குகளைத் தரையிலிருந்து தாக்கி அழிக்கும் ஏவுகணைகளிலும் இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனா். தற்போது இந்தத் தொழில்நுட்பத்தைக் குறைந்த எண்ணிக்கையிலான நாடுகளே பயன்படுத்தி வருவதாக டிஆா்டிஓ தெரிவித்துள்ளது.**

**4. அகில இந்திய அளவில் திருவனந்தபுரம் கல்வியில் முதலிடம். நிர்வாகத்தில் கொச்சி டாப்.**

இந்திய அளவில் அரசு நிர்வாக செயல்பாட்டில் கொச்சியும், கல்வியில் திருவனந்தபுரமும் முதலிடத்தை பிடித்துள்ளன. நாடு முழுவதும் 111 நகரங்களில் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் நடத்திய ஆய்வின் முடிவுகளை மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி நேற்று முன்தினம் (03.03.2021) அறிவித்தார். அதில், மக்களின் வாழ்க்கை தரத்தை பொறுத்தவரை பெங்களூரு சிறந்த நகரங்களில் முதலிடத்துக்கு தேர்வாகி உள்ளது. 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களில் புனே, அகமதாபாத், சென்னை மற்றும் சூரத் போன்றவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. பத்து லட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்களின் பட்டியலில் சிம்லா முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து புவனேஸ்வர், சில்வாசா, காக்கிநாடா மற்றும் சேலம் போன்ற நகரங்கள் உள்ளன. மாநகராட்சிகளின் நிர்வாக பிரிவில் கொச்சி முதல் இடத்தை பிடித் துள்ளது. இதில் திருவனந்தபுரம் 40 வது இடத்தில் உள்ளது. அதே சமயம், கல்வியை பொறுத்தவரை திருவனந்தபுரம் நாட்டில் முதலிடத்திலும், கொச்சி 36 வது இடத்தில் உள்ளது.

**5. இந்தியாவை விட 3 மடங்கு அதிகம் சீன ராணுவத்துக்கு பட்ஜெட்டில் ரூ.15.22 லட்சம் கோடி ஒதுக்கீடு: கடந்தாண்டை விட 6.8% அதிகரிப்பு.**

கடந்த 3 ஆண்டுகளில் இல்லாத வகையில் சீனாவின் பட்ஜெட்டில் ராணுவத்துக்கு 209 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இது, கடந்தாண்டை விட 6.8 சதவீதம் அதிகமாகும். உலகிலேயே ராணுவத்துக்கு அதிகம் செலவு செய்யும் நாடுகளில் முதல் இடத்தில் அமெரிக்கா உள்ளது. 2வது இடத்தில் சீனா இருந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ராணுவத்துக்கு சீனா கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்து வருகிறது. கடந்த 2015ம் ஆண்டு வரை இரட்டை இலக்கத்தில் ராணுவத்துக்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு இருந்து வந்தது. இந்நிலையில், கடந்த 6 ஆண்டுகளாக ஒற்றை இலக்கத்தில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 2020ம் ஆண்டில் ராணுவத்துக்கு 196.44 பில்லியன் டாலரை சீன அரசு ஒதுக்கீடு செய்தது. இந்நிலையில், 2021ம் நிதியாண்டில் 209 பில்லியன் டாலர் நிதி (ரூ.15,22,878 கோடி) ராணுவத்துக்கு ஒதுக்கப்படுவதாக நாடாளுமன்றத்தில் சீன அரசு அறிவித்துள்ளது. இது கடந்த ஆண்டை காட்டிலும் 6.8 சதவீதம் கூடுதலாகும். அமெரிக்கா ராணுவத்துக்கு 740.5 பில்லியன் டாலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனுடன் ஒப்பிடும்போது சீனா ராணுவம் மூன்றில் ஒரு பங்கு நிதியை ராணுவத்துக்கு ஒதுக்கியுள்ளது.

**6. உலக மக்களுக்கு 7 முறை தரலாம் 93.1 கோடி டன் உணவு வீணடிப்பு: ஐநா. அறிக்கையில் அதிர்ச்சி தகவல்.**

கடந்த 2019ம் ஆண்டு தோராயமாக 93.1 கோடி டன் உணவு வீணடிக்கப்பட்டதாக உணவு கழிவு குறியீடு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் சூழல் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான ஐநா. சூழல் திட்டம், கெனியாவின் தலைநகரான நைரோபியை தலைமையகமாக கொண்டு செயல்படுகிறது. ஐநா. சூழல் திட்டம், உணவு கழிவுகளை குறைக்க அரசுகளுடன் இணைந்து செயல்படும் வ்ராப் (WRAP) என்ற தொண்டு நிறுவனமும் இணைந்து வெளியிட்ட, உணவு கழிவு குறியீடு 2019 அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: உணவு கழிவுகள் பணக்கார, ஏழை நாடுகளில் பரவலாக ஒத்திருப்பது தெரிய வந்துள்ளது. 2019ம் ஆண்டில் 93.1 கோடி டன் உணவு வீணாக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு உலகில் உள்ள மக்களுக்கு 7 முறை உணவு

அளித்திருக்கலாம். இதில், 61 சதவீதம் வீடுகள், 26 சதவீதம் ஓட்டல்கள், உணவு விடுதிகள், 13 சதவீதம் இதர சில்லறை வழிகளில் இருந்தும் வீணாக்கப்படுகிறது. உலகளவில் தயாரிக்கப்படும் உணவு உற்பத்தியில் 17 சதவீதம் வீணாகிறது. மேலும், சாப்பிட தயாராக இருக்கும் உணவுகளில் 11 சதவீதம் வீடுகள், 5 சதவீதம் ஓட்டல்கள், 2 சதவீதம் சில்லறை வழிகளிலும் வீணாக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், உலக தனிநபர் வருவாயில் 121 கிலோ, வீட்டு தனிநபர் வருவாய் கணக்கில் 74 கிலோ உணவு வீணடிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**இந்தியாவில் 6.8 கோடி டன்**

இந்தியாவை பொருத்தவரையில், ஒவ்வொரு தனிநபரும் ஆண்டுக்கு 50 கிலோ உணவு பொருட்களை வீண் செய்கின்றனர். இது, அமெரிக்காவில் 59 கிலோ, சீனாவில் 64 கிலோவாக உள்ளது. கடந்த 2019ம் ஆண்டு இந்தியாவில் மட்டும் 6 கோடியே 87 லட்சத்து 60 ஆயிரத்து 163 கிலோ உணவுகள் வீணடிக்கப்பட்டு உள்ளன.

**7. மியான்மர் ராணுவ சேனல்கள் முடக்கம்: யூடியூப் நிர்வாகம் அதிரடி.**

மியான்மர் ராணுவம் சார்ந்து இயங்கும் 5 சேனல்களை யூடியூப் நிறுவனம் நீக்கியுள்ளதாக தகவல் வெளியாகிவுள்ளது. மியான்மரில் ராணுவ ஆட்சி தொடங்கியதற்கு எதிராக போராட்டக்காரர்கள் இரண்டு வாரங்களுக்கு மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். புதன்கிழமை யாங்கூன் உள்ளிட்ட நாட்டின் பல இடங்களில் ராணுவத்துக்கு எதிராக போராட்டங்கள் வெடித்தது. அப்போது போராட்டக்காரர்கள் மீது ராணுவம் தாக்குதல் நடத்தியதில் நேற்று முன் தினம் மட்டும் 38 பேர் பலியாகினர். இதுவரை ராணுவத்துக்கு எதிரான போராட்டத்தில் 50 க்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். இந்த நிலையில் மியான்மர் ராணுவ வீடியோ பக்கங்கள் யூடியூப் சேனலில் முடக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து யூடியூப் நிறுவன செய்தித் தொடர்பாளர் கூறும்போது, "எங்கள் விதிமுறை மற்றும் சட்டங்களுக்கு எதிராக இருந்த மியான்மர் ராணுவத்தின் 5 யூடியூப் சேனல்கள் நீக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்துள்ளார்.

**என்ன நடக்கிறது மியன்மரில்?**

மியான்மரில் கடந்த நவம்பரில் (2020) நடந்த தேர்தலில் ஆங்சான் சூச்சியின் தேசிய ஜனநாயகக் கட்சி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. ஆனால், தேர்தலில் முறைகேடுகள் நடந்திருப்பதாகக் கூறி, புதிய அரசை ஏற்க ராணுவம் மறுத்தது. இது தொடர்பாக மியான்மர் அரசுக்கும், ராணுவத்துக்கும் இடையே மோதல் நீடித்துவந்த நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன் ஆங் சான் சூச்சி தலைமையிலான கட்சியின் ஆட்சியைக் கவிழ்த்து, ராணுவம் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றியது. மேலும், ஆங் சான் சூச்சி, மியான்மரின் அதிபர் யு வின் மியிண்ட் மற்றும் முக்கியத் தலைவர்களையும் வீட்டுக் காவலில் ராணுவம் வைத்தது. இதனைத் தொடர்ந்து ராணுவ ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேபிடாவ், யாங்கூன் ஆகிய பகுதிகளில் போராட்டங்கள் வலுத்து வருகின்றன. இதன் காரணமாக இணையச் சேவை நாட்டின் பல இடங்களில் முடக்கப்பட்டுள்ளது.

**8. 8.1 ரிக்டேர் அளவில் நியூசிலாந்தில் அடுத்தடுத்து பூகம்பம்.**

நியூசிலாந்தில் 3 பயங்கர நிலநடுக்கங்கள் ஏற்பட்ட நிலையில், பசிபிக் தீவில் 8.1 ரிக்டேர் அளவில் மிக வலுவான பூகம்பம் நேற்று (04.03.2021) காலை ஏற்பட்டது. இதனால், நியூசிலாந்தில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பசிபிக் பெருங்கடலின் நெருப்பு வளையத்திற்குள் அமைந்துள்ள நாடு நியூசிலாந்து. இங்கு கடலுக்குக் கீழே உள்ள பல டெக்டோனிக் பிளேட்களின் குறுக்குவெட்டுப் பகுதிகளில்தான் எரிமலை மற்றும் நிலநடுக்கத்தின் மையம் உள்ளது. இதன் காரணமாக, நியூசிலாந்தில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கம். ஜிஸ்போர்ன் டோகோமரு ஜலசந்தி பகுதிகளை மையமாக கொண்டு ரிக்டேர் அளவில் 7.4 மற்றும் 7.3 புள்ளிகளாக பதிவாகின. இந்த அதிர்ச்சியில் இருந்து மக்கள் மீள்வதற்குள் நியூசிலாந்தில் இருந்து 1000 கிமீ தொலைவில் அமைந்துள்ள பசிபிக் தீவான கெர்மடெக் தீவில் நேற்று காலை 8.1 ரிக்டேர் அளவில் பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கங்கள் முக்கிய நகரங்களான ஆக்லாந்து வெலிங்டன், கிறிஸ்ட்சர்ச் நகரங்களில் உணரப்பட்டது. கட்டிடங்கள், வீடுகள் குலுங்கியதால் மக்கள் பீதிக்குள்ளாகினர். பயங்கர பூகம்பத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பூகம்பத்தை உணராவிட்டாலும் காத்திருக்க வேண்டாம். ஆபத்தான சுனாமி வரலாம் என தேசிய அவசரநிலை மேலாண்மை ஆணையம் எச்சரித்தது. கடந்த 1976ம் ஆண்டு ஆஸ்திரேலிய டெக்டோனிக் பிளேட் மற்றும் பசிபிக் பெருங்கடலின் குறுக்குவெட்டில் 8.0 ரிக்டேர் அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் பின் இப்பிராந்தியத்தில் வரலாற்றில் மிக வலுவான பூகம்பம் பதிவாகி உள்ளது.

கடந்த 2013ம் ஆண்டு நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச் நகரில் 6.3 ரிக்டேர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 185 பேர் பலியாகினர். தற்போது நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் மிகவும் பின்தங்கிய பகுதிகள் என்பதால் பெரிய அளவில் உயிர் சேதம், பாதிப்புகள் ஏற்படவில்லை.

**9. 'நிடி ஆயோக்' மற்றும் தொழில் மற்றும் சர்வதேச வர்த்தகத் துறை சார்பில், பி.எல்.ஐ., திட்டம் பற்றிய கருத்தரங்கு:**

"பி.எல்.ஐ., எனப்படும், உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கச் சலுகை திட்டத்தால், நாட்டின் உற்பத்தி திறன், அடுத்த ஐந்து ஆண்டுகளில், 38 லட்சம் கோடி ரூபாயாகஅதிகரிக்கும்," என, பிரதமர் நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**நீட்டிப்பு:**

'வீடியோ கான்பரன்ஸ்' வழியாக நடந்த இந்த கருத்தரங்கில், பிரதமர் மோடி பேசியதாவது: உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க, மத்திய அரசு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் தான், பி.எல்.ஐ., திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. பல துறைகளுக்கும், இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த ஊக்கச் சலுகை திட்டத்தின் வாயிலாக, உலகளவிலான போட்டிகளை, நிறுவனங்கள் சமாளிக்க முடியும். பி.எல்.ஐ., திட்டத்துக்காக, 2021 – 22ம் ஆண்டு பட்ஜெட்டில், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு, 2 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தால், நாட்டின் உற்பத்தி திறன், அடுத்த ஐந்து ஆண்டுகளில், 38 லட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

**ஊக்கத் தொகை:**

உற்பத்தி துறைகளில் இப்போது பணிபுரியும் ஊழியர்கள் எண்ணிக்கையும், ஐந்து ஆண்டுகளில் இரு மடங்காகும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். தொழில் துவங்குவதற்கு ஏற்ற சூழ்நிலையை அரசு ஏற்படுத்தி வருகிறது. பி.எல்.ஐ., திட்டத்தின் கீழ், சராசரியாக உற்பத்தியில், 5 சதவீதம், ஊக்கத் தொகையாக வழங்கப்படும். உற்பத்தி துறைக்கு இதற்கு முன் அளிக்கப்பட்ட ஊக்கத் தொகை திட்டங்களுக்கும், இப்போது அமல்படுத்தப்பட்டுள்ள ஊக்கத் தொகை திட்டத்துக்கும், அதிக வேறுபாடு உள்ளது. இப்போது, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, செயல்பாட்டின் அடிப்படையில் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மருந்து, மருத்துவ சேவை, மொபைல் போன்கள், மின்னணு பொருட்கள் தயாரிப்பு உள்ளிட்ட, 13 துறைகளில், இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

**பிரதமர் மோடிக்கு 'செராவீக்' விருது (சா்வதேச எரிசக்தி & சுற்றுச்சூழல் தலைமை விருது)**

'செராவீக்' மாநாட்டில், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதில் சிறந்து விளங்கியதற்காக, பிரதமர் மோடிக்கு, விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. அமெரிக்காவின் கேம்பிரிட்ஜ் எரிசக்தி ஆராய்ச்சி நிறுவனம் சாா்பில் இந்த விருது வழங்கப்பட்டது. அமெரிக்காவில், செராவீக் எனப்படும், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான மாநாடு, கடந்த, MARCH 1ம் தேதி, 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக துவங்கியது. நேற்று வரை நடந்த இந்த மாநாட்டில், 'செராவீக் குளோபல் எனர்ஜி அண்டு என்விராய்ன்மென்ட் லீடர்ஷிப் அவார்ட்' எனப்படும், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதில், சிறந்து விளங்கும் சர்வதேச தலைவருக்கான விருது, நம் பிரதமர் நரேந்திர மோடிக்கு, வழங்கி கவுரவிக்கப்பட்டது. விருதை பெற்ற பின், பேசிய பிரதமர் மோடி கூறியதாவது: வரும் 2025–ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலுடன் 20 சதவீதம் எத்தனாலைக் கலப்பதற்கு இலக்கு நிா்ணயிக்கப்பட்டுள்ளது. வீட்டுக் கழிவுகள், வேளாண் கழிவுகளிலிருந்து உயிரி எரிபொருளை உற்பத்தி செய்வதற்காக 5,000 ஆலைகள் அமைக்கப்படவுள்ளன. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வாயிலாக மின்சாரம் உற்பத்தி செய்வதை இந்தியா தொடா்ந்து ஊக்குவித்து வருகிறது. ஒட்டுமொத்த எரிசக்தி பயன்பாட்டில் இயற்கை எரிவாயுவின் பங்கை 2030–ஆம் ஆண்டுக்குள் 15 சதவீதமாக உயா்த்துவதற்கு இலக்கு நிா்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த 7 ஆண்டுகளில் இந்தியாவின் வனப்பரப்பு அதிகரித்துள்ளது. அவற்றின் காரணமாக, பாரீஸ் பருவநிலை ஒப்பந்த இலக்குகளை 2030–ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே அடைவதை நோக்கி இந்தியா விரைந்து முன்னேறி வருகிறது என்றாா் பிரதமா் மோடி. பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர்களுமே, உலகிற்கு பெரிய சவால்களாக உள்ளன. கொள்கைகள் மற்றும் சட்டங்கள் வாயிலாக, இவற்றை எதிர்கொள்ள வேண்டும். பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தின் இலக்குகளை, 2030ம்

ஆண்டுக்குள், இந்தியா அடைந்துவிடும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**'எக்ஸாம் வாரியர்ஸ்' புதிய புத்தகம்**

மோடி பிரதமராக பதவியேற்ற பின், மாதந்தோறும், 'மன் கீ பாத்' என்ற வானொலி நிகழ்ச்சி மூலம், நாட்டு மக்களுக்கு உரையாற்றி வருகிறார்.குறிப்பாக, 10 மற்றும் பிளஸ் 2 பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில், அவர்களுக்கு ஆலோசனை கூறுவதை வழக்கமாக வைத்துள்ளார். மன் கீ பாத் நிகழ்ச்சியில் ஆற்றிய உரைகளுடன், தன் வாழ்வில் சந்தித்த நிகழ்வுகள் மற்றும் அதற்கான தீர்வுகளை, எளிய நடையில், ஆங்கிலத்தில், 'எக்ஸாம் வாரியர்ஸ்' என்ற தலைப்பில், பிரதமர் மோடி புத்தகமாக எழுதினார். இந்நிலையில், தற்போது இந்த புத்தகத்தில் மேலும் சிலவிஷயங்களை பிரதமர் சேர்த்து உள்ளார். பெற்றோருக்கான மந்திரங்கள், மன நலம், தொழில்நுட்பத்தின் பங்கு, நேர மேலாண்மை உட்பட பல விஷயங்கள் பற்றி, பிரதமர் எழுதியுள்ளார்.எக்ஸாம் வாரியர்ஸ் புத்தகத்தின் புதிய பதிப்பு, விரைவில் வெளியிடப்பட உள்ளதாக, 'பென்குயின் ரேண்டம் ஹவுஸ்' பதிப்பகம் தெரிவித்துள்ளது. இந்த புத்தகம், 15 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**ஸ்வீடன்பிரதமருடன் பேச்சு**

ஐரோப்பிய நாடான ஸ்வீடனின் பிரதமர் ஸ்டீபன் லேபென்னுடன், பிரதமர் மோடி நேற்று, 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக பேசியதாவது: இந்தியாவும், ஸ்வீடனும், பல துறைகளில் இணைந்து செயல்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. கழிவுகள் மேலாண்மை, 'ஸ்மார்ட் சிட்டி', நீா் சுத்திகரிப்பு, திடக் கழிவு மேலாண்மை, பொருளாதாரம், மின்சார வாகனம் உட்பட பல துறைகளில், இரு நாடுகளுக்கு இடையே நல்ல நட்புறவு நீடிக்கிறது; இது மேலும் வலுப்பட வேண்டும். புதிய கண்டு பிடிப்புகள், தொழில்நுட்பம், முதலீடு, ஆராய்ச்சி ஆகிய துறைகளில், இரு நாடுகளும் இணைந்து செயல்பட்டு, நட்பை வலுப்படுத்த வேண்டும். ஜி20 நாடுகளிலேயே இந்தியாதான் நிா்ணயித்த இலக்குகளை அடைந்து சிறப்பாக செயல்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை இந்தியா 162 சதவீதம் அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

**10. 50 ஆவது தேசிய தொழிலாளர் பாதுகாப்பு தினம், மார்ச்சு 4ஆம் தேதி நடைபெற்றது. ஆண்டுதோறும் மார்ச்சு 4 ஆம் தேதி தேசிய தொழிலாளர் பாதுகாப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது.**

**11. பாடகி பி.சுசீலாவுக்கு இங்கிலாந்தில் கவுரவம்.**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, பின்னணி பாடகி பி.சுசீலாவுக்கு, இங்கிலாந்தில் விருது வழங்கப்பட உள்ளது. 'இங்கிலாந்து மகளிர் நெட்வொர்க்' அமைப்பை சேர்ந்தவர்கள், ஆண்டுதோறும், சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு, இங்கிலாந்தில் சாதனை படைத்த பெண்களுக்கு, பாராட்டு விழா நடத்துவர். இவ்விழா அங்குள்ள பார்லிமென்ட் கட்டடத்தில், உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெறும். இந்தாண்டு, இங்கிலாந்துக்கு வெளியே, சாதனை படைத்த பெண்களை கவுரவிக்க உள்ளனர். கொரோனாவால் இவ்விழா, காணொலி காட்சி வாயிலாக இன்று நடக்கிறது. இதில், பின்னணி பாடகி பி.சுசீலா மற்றும் ஏ.ஆர்.ரஹ்மானின் சகோதரியான, இசை அமைப்பாளர் ரெஹைனா கவுரவிக்கப்பட உள்ளனர்.

**12. ரோமில் நடக்கும் சர்வதேச மல்யுத்த போட்டிக்கான 'கிரிகோ – ரோமன்' எடைப்பிரிவில் இந்திய வீரர்களான நீரஜ் (63 கி.கி), நவீன் (130 கி.கி) வெண்கலம் கைப்பற்றினர்.**

**13. கச்சா எண்ணெய் உற்பத்தியை ஏப்ரல் மாதம் வரை அதிகரிக்க வேண்டாமென்று பெட்ரோலியப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (ஒபெக் பிளஸ்) முடிவெடுத்துள்ளது.**

**கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்குமாறு இந்தியா தொடா்ந்து கோரி வந்த நிலையில், அக்கூட்டமைப்பு இந்த முடிவை எடுத்துள்ளது. கரோனா நோய்த்தொற்று பரவல் காரணமாக அமல்படுத்தப்பட்ட பொது முடக்கத்தால் உலக நாடுகள் முழுவதிலும் கச்சா எண்ணெய் தேவை குறைந்தது. அதனால், அதன் விலை வரலாறு காணாத வகையில் வீழ்ச்சி அடைந்தது. நாடுகளில் இயல்பு நிலை படிப்படியாகத் திரும்பத் தொடங்கியதை அடுத்து, கச்சா எண்ணெய்க்கான தேவை அதிகரித்தது. எனினும், கரோனா பரவலுக்கு முந்தைய நிலைக்கு கச்சா எண்ணெயை உற்பத்தி செய்ய வேண்டாம் என்று ஒபெக் பிளஸ் கூட்டமைப்பு நாடுகள் முடிவெடுத்தன. அதனால், கச்சா எண்ணெய்க்கான தேவை அதிகரித்து உற்பத்தி குறைந்து காணப்பட்டதால் அதன் விலை சந்தையில் அதிகரித்தது. மத்திய அரசு, கச்சா எண்ணெய் உற்பத்தியை ஒபெக் பிளஸ் கூட்டமைப்பு நாடுகள் அதிகரிக்க வேண்டும் என்று கோரி வந்தது. இத்தகைய சூழலில், கச்சா எண்ணெய் உற்பத்திக் கொள்கையை நிா்ணயிப்பது தொடா்பாக ஒபெக் பிளஸ் கூட்டமைப்பு நாடுகளின் இணையவழிக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதில், ஏப்ரல் வரை கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க வேண்டாம் என்று அந்நாடுகள் முடிவெடுத்தன. கச்சா எண்ணெய் தேவை இயல்பு நிலைக்குத் திரும்பாததைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. கூட்டத்துக்குப் பிறகு சவூதி அரேபிய எரிசக்தித் துறை அமைச்சா் அப்துல்லாசிஸ் பின் சல்மான் செய்தியாளா்களிடம் கூறுகையில், "கடந்த ஆண்டில் கச்சா எண்ணெயை மிகவும் குறைந்த விலைக்கு வாங்கி இந்தியா சேமித்து வைத்தது. தற்போது அதை இந்தியா உபயோகித்துக் கொள்ளலாம்' என்றாா்.**

**14. சுதந்திர இந்தியாவின் 75–ஆவது கொண்டாட்டம்: பிரதமா் மோடி தலைமையில் உயா்நிலைக் குழு அமைப்பு.**

"சுதந்திர இந்தியாவின் 75–ஆவது ஆண்டு கொண்டாட்டத்தை திட்டமிடுவதற்காக, பிரதமா் நரேந்திர மோடி தலைமையில் 259 உறுப்பினா்களுடன் தேசிய அளவில் ஓா் உயா்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவில் முன்னாள் குடியரசுத் தலைவா் பிரதீபா பாட்டீல், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.ஏ.போப்டே, தேசிய பாதுகாப்பு ஆலோசகா் அஜித் தோவல், 28 மாநிலங்களின் முதல்வா்கள், பாஜக மூத்த தலைவா் அத்வானி, பெரும்பாலான மத்திய அமைச்சா்கள், சில மாநில ஆளுநா்கள் இடம்பெற்றுள்ளனா்.பிரபல பாடகி லதா மங்கேஷ்கா் போன்ற கலைஞா்கள், நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞா் அமா்த்தியா சென் ஆகியோரும் உயா்நிலைக் குழுவில் இடம்பெற்றுள்ளனா். காங்கிரஸ் தலைவா் சோனியா காந்தி, மாா்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலா் சீதாராம் யெச்சூரி, தேசியவாத காங்கிரஸ் தலைவா் சரத் பவாா், திரிணமூல் காங்கிரஸ் தலைவா் மம்தா பானா்ஜி, உத்தர பிரதேச முன்னாள் முதல்வா்கள் முலாயம் சிங் யாதவ், மாயாவதி உள்ளிட்ட எதிா்க்கட்சித் தலைவா்களும் அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனா். சுதந்திர இந்தியாவின் 75–ஆவது ஆண்டு, வரும் 2022–இல் கொண்டாடப்படுகிறது. இதை வரும் மாா்ச் 12–ஆம் தேதி முதல் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 15–ஆம் தேதி வரை 75 வாரங்களுக்கு மாநில அளவிலும் தேசிய அளவிலும் கொண்டாடுவதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த கொண்டாட்டத்தையொட்டி நடைபெறும் விழாக்கள், நிகழ்ச்சிகள், கூட்டங்களை நடத்துவதற்கான வழிமுறைகளையும் விதிமுறைகளையும் பிரதமா் மோடி தலைமையிலான உயா்நிலைக் குழு வகுத்து அளிக்கும். இந்தக் குழுவின் முதல் கூட்டம், வரும் 8–ஆம் தேதி நடைபெறவுள்ளது. 75–ஆவது சுதந்திர தின விழா கொண்டாடப்படும் 2022–ஆம் ஆண்டில் ஜி20 உச்சி மாநாடு இந்தியாவில் நடைபெறும் என பிரதமர் நரேந்திர மோடி மகிழ்ச்சி பொங்க தெரிவித்துள்ளார். இந்தியாவில் வரும் 2021–ஆம் ஆண்டு ஜி20 மாநாடு நடைபெறவிருந்த நிலையில், 75–ஆவது சுதந்திர தினத்துக்கு பெருமை சேர்க்கும் வகையில், அதை 2022–ஆம் ஆண்டுக்கு மாற்றும்படி இந்தியா கோரிக்கை விடுத்தது. இதனை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டிருப்பதாக பிரதமர் மோடி மகிழ்ச்சி பொங்க தெரிவித்துள்ளார். அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், இந்தியா, அர்ஜென்டினா உள்ளிட்ட 20 நாடுகள் பங்கேற்கும் ஜி20 உச்சி மாநாடு, ஆண்டுதோறும் அந்தந்த உறுப்பு நாடுகளில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

**15. இந்தியாவுக்கான பிரிட்டன் தூதர் அலெக்ஸ் எல்லிஸ்**

**16. ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா புதிய தேசிய சாதனை**

3–வது இந்தியன் கிராண்ட்பிரி தடகள போட்டி பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் நேற்று நடந்தது. இதில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு ஏற்கனவே தகுதி பெற்று விட்ட இந்திய வீரரான அரியானாவை சேர்ந்த 24 வயது நீரஜ் சோப்ரா தனது 5–வது முயற்சியில் 88.07 மீட்டர் தூரம் வீசி புதிய தேசிய சாதனை படைத்ததுடன், தங்கப்பதக்கத்தையும் தனதாக்கினார். இதற்கு முன்பு கடந்த 2018ல் இந்தோனேஷியாவில் நடந்த ஆசிய விளையாட்டு ஈட்டி எறிதலில் 88.06 மீ., தூரம் எறிந்திருந்தது சாதனையாக இருந்தது. அந்த தனது சொந்த சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார். கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தென்ஆப்பிரிக்காவில் நடந்த சர்வதேச போட்டியில் ஒலிம்பிக் தகுதி இலக்கை (85 மீட்டர்) எட்டிய நீரஜ் சோப்ரா கொரோனா பரவல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கு பிறகு கலந்து கொண்ட முதல் போட்டி இதுவாகும். ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்று இருக்கும் மற்றொரு இந்திய வீரரான உத்தரபிரதேசத்தை சேர்ந்த ஷிவ்பால் சிங் (81.63 மீட்டர்) 2–வது இடமும், மற்றொரு அரியானா வீரர் சஹில் சில்வால் (80.65 மீட்டர்) 3–வது இடமும் பெற்றனர்.

**17. இராக்கிற்கு செல்லும் முதல் போப்பாண்டவர் போப் பிரான்சிஸ்.**

2012இல் போப்பாண்டவராக தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து, போப் பிரான்சிஸ் மேற்கொள்ளும் மிகவும் ஆபத்தான வெளிநாட்டு பயணம் இது. வெள்ளிக்கிழமையன்று (05.03.2021) இந்த முக்கியமான பயணத்தை மேற்கொண்ட போப் பிரான்சிஸ் பாக்தாத் சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கினார், ஈராக் இவ்வளவு காலமாக துன்பப்பட்டதால், அங்கு "அடையாள" பயணத்தை மேற்கொள்வது கடமை என்று உணர்ந்ததாக அவர் தெரிவித்துள்ளார். பாக்தாத்தில் உள்ள அதிபர் மாளிகையில் போப் பிரான்சிஸை ஈராக் அதிபர் பர்ஹாம் சலே (Barham Saleh) வரவேற்றார். 84 வயதான போப்பாண்டவரின் பாதுகாப்புப் பணியில், ஆயிரக்கணக்கான கூடுதல் பாதுகாப்புப் பணியாளர்களை ஈராக் நியமித்துள்ளது. ராக்கெட் மற்றும் தற்கொலை குண்டு தாக்குதல்கள் நிகழலாம் என்ற அச்சங்களுக்கு மத்தியில் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இராக்கில் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரான்சிஸ், விமானம், ஹெலிகாப்டர் மற்றும் கவச வாகனம் மூலம் முக்கிய நான்கு நகரங்களுக்கு செல்வார். பாக்தாத் தேவாலயத்திற்கு சென்று அங்கு பிரார்த்தனை செய்வார். ஈராக்கின் உயர்நிலை ஷியா முஸ்லீம் மதகுருவை நஜாப் நகரில் சந்தித்து கலந்துரையாடிய பிறகு, போப் பிரான்சிஸ் மொசூல் நகருக்குச் செல்வார். மொசூல் ஐ.எஸ் தீவிரவாதிகளின் கோட்டையாக இருந்ததும், அங்குள்ள தேவாலயங்களும் பிற கட்டடங்களும் மோதலின் வடுக்களைத் சுமந்துக் கொண்டு போரின் வலிகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**1.நடப்பாண்டில் (2021) வரும் தேசிய பாதுகாப்பு நாளுக்கான கருப்பொருள் என்ன?**



**அ) சதக் சுரக்ஷா ☑**

ஆ) நாரி சுரக்ஷா

இ) சோஷியல் சுரக்ஷா

ஈ) சைபர் சுரக்ஷா

✓ பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.4 அன்று இந்தியாவில் தேசிய பாதுகாப்பு நாளாக அனுசரிக்கப்படுகிறது. நடப்பாண்டில் (2021) வரும் தேசிய பாதுகாப்பு நாளுக்கான கருப்பொருளாக, 'சதக் சுரக்ஷா' (சாலை பாதுகாப்பு) என்பது தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு (2021) மார்ச்.4–10 வரை தேசிய பாதுகாப்பு வாரம் அனுசரிக்கப்படும்.

---

**2. பன்னாட்டு பெண்கள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**




அ) மார்ச் 7

**ஆ) மார்ச் 8 ☑**

இ) மார்ச் 9

ஈ) மார்ச் 10

✓ பன்னாட்டு பெண்கள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.8 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. பாலின சமத்துவம் நிறைந்த உலகத்தை வடிவமைப்பதில் உதவுவதற்காக இந்தச் சிறப்பு நாள் அனுச–ரிக்கப்படுகிறது. "Achieving an equal future in a COVID–19 world" என்ற கருப்பொருளின்கீழ் நடப்பாண்டு பெண்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது.

---

**3. ஆர்க்டிகா–M என்ற செயற்கைக்கோளை ஏவிய நாடு எது?**



அ) பிரேஸில்

ஆ) பிரான்ஸ்

**இ) இரஷ்யா ☑**

ஈ) ஆஸ்திரேலியா

✓ ரஷ்ய விண்வெளி நிறுவனம் தனது ஆர்க்டிகா–M செயற்கைக்கோளை ஏவியது. இந்தச் செயற்கைக்கோள் ஆர்க்டிக் பிராந்தியத்தில் நிலவும் காலநிலையை கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டது. கஜகஸ்தா–னில் உள்ள ஏவுதளத்திலிருந்து சோயுஸ் ஏவுகலம்மூலம் இந்தச்செயற்–கைக்கோள் ஏவப்பட்டது. எரிசக்தி நிறைந்த பிராந்தியத்தை நாட்டின் வளர்ச்சி நலனுக்காக பயன்படுத்த இரஷ்யா முயற்சிசெய்துவருகிறது.

---

**4.அண்மையில் வீழ்ச்சிப்படைப்புழு பாதிப்பு பதிவான இடம் எது?**



அ) தேனி, தமிழ்நாடு

**ஆ) வயநாடு, கேரளா ☑**

இ) நெல்லூர், ஆந்திர பிரதேசம்

ஈ) மைசூரு, கர்நாடகா

✓ அண்மையில், கேரள மாநிலம் வயநாட்டில் வீழ்ச்சிப்படைப்புழு பாதிப்பு காணப்பட்டது. அது, பயிர்களுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. மக்காச்சோளம் மற்றும் வாழைப்பழ சாகுபடிகளில் இந்தப் புழு தாக்குதல் பதிவாகியுள்ளது.

---

**5.பிரதம அமைச்சரின் மக்கள் மருந்தகம் திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனம் எது?**

**அ) இந்திய மருந்து பொதுத்துறை நிறுவனங்களின் பணியகம் ☑**

ஆ) இந்திய மருந்துகள் நிறுவனம்

இ) ஹிந்துஸ்தான் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் லிட்

ஈ) IFFCO

✓ பிரதமர் மக்கள் மருந்தக திட்டம் (PM–BJP) என்பது மருந்துத் துறையின் ஒரு முயற்சியாகும்; இதன்கீழ், தரமான மருந்துகள் பொது மக்களுக்கு மலிவு விலையில் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டம், இந்திய மருந்து பொதுத்துறை நிறுவனங்களின் பணியகத்தின்மூலம் செயல்படுத்தப்படு–கிறது. மக்கள் மருந்தக திட்டம் குறித்து அதிக விழிப்புணர்வை உருவாக்குவதற்காக, மக்கள் மருந்தக வாரம் நாடு முழுவதும் மார்ச் 1 முதல் 7 வரை கொண்டாடப்படுகிறது.

✓ 'மக்கள் மருந்தகம் – சேவையும், வேலைவாய்ப்பும்' என்பது இதன் கருப்பொருளாகும். வாரத்தின் கடைசி நாளான மார்ச்.7 அன்று மக்கள் மருந்தக நாள் கொண்டாடப்படுகிறது.

---

**6.பாலைவனக்கொடி (Desert Flag) என்னும் பன்னாட்டளவிலான பயிற்சியை நடத்தும் நாடு?**



**அ) UAE ☑**

ஆ) USA

இ) UK

ஈ) பிரான்ஸ்

✓ 'பாலைவனக்கொடி' என்பது ஒரு பன்னாட்டுப்பயிற்சியாகும். இது ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ளது. இந்தியா, பிரான்ஸ் மற்றும் USA உட்பட பத்து நாடுகள் இந்தப்பயிற்சியில் பங்கேற்கவுள்ளன. இப்பயிற்சி, இம்மாதம் மூன்றுவாரகாலத்துக்கு நடைபெறும். இப்பயிற்சியானது பல, தீவிரமான வான்போர்வகை பயிற்சிகளை உள்ளடக்கும். இப்பயிற்சியில் பங்கேற்க இந்திய வான் படையின் Su–30–MKI மற்றும் C–17s போர் வானூர்திகள் சமீபத்தில் புறப்பட்டன.

---

**7.டைட்டனோசரின் புதைப்படிவங்கள் அண்மையில் எந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டன?**



**அ) அர்ஜென்டினா ☑**

ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) இரஷ்யா

✓ டைட்டனோசர் என்பது நான்கு கால்களில் நடந்துசெல்லும் நீண்ட கழுத்துடைய தாவரம் உண்ணும் டைனோசர்களின் குழுவாகும். 140 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கிரெட்டேசியஸ் காலத்தில் வாழ்ந்த '*Ninjatitan zapatai*' என்ற டைனோசர் இனத்தின் புதைப்படிவங்களை அறிவியலாளர்கள் அண்மையில் கண்டுபிடித்தனர். கண்டுபிடிக்கப்பட்ட புதைப்படிவங்கள், டைட்டனோசர்கள் என அழைக்கப்படும் டைனோசர் குழுவின் மிகப்பழமையான உறுப்பினர் என்று கூறப்படுகிறது.

---

**8.பின்வரும் எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ், இந்திய தரைவழி துறைமுகங்கள் ஆணையம் செயல்படுகிறது?**

**அ) உள்துறை அமைச்சகம் ☑**

ஆ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

இ) துறைமுகங்கள் கப்பல் மற்றும் நீர்வழிப்போக்குவரத்து அமைச்சகம்

ஈ) ஜல்சக்தி அமைச்சகம்

✓ இந்திய தரைவழி துறைமுகங்கள் ஆணையம் 2012'இல் நிறுவப்பட்டது. இது உள்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாகும்.

✓ இந்தியாவில் தரைவழியாக எல்லையை கடந்துசெல்லும் பல்வேறு வாகனங்களை தணிக்கை செய்வது, எல்லைகடந்து செல்வபர்களை கண்காணிப்பது, ஒருங்கிணைந்த சோதனைச்சாவடிகளை அமைப்பது, அவற்றை பராமரிப்பது, நிர்வகிப்பது ஆகியவை இதன் பொறுப்பாகும். இதன் 9ஆவது நிறுவு நாள், 2021 மார்ச்.20 அன்று அனுசரிக்கப்பட்டது.

---

**9.பின்வரும் எந்த உச்சிமாநாட்டில், சாகர்–மந்தன்: வணிக கடல்சார் தளம் விழிப்புணர்வு மையம் தொடங்கப்பட்டது?**

அ) இந்திய துறைமுகங்கள் உச்சிமாநாடு

**ஆ) இந்திய கடல்சார் உச்சிமாநாடு ☑**

இ) இந்திய கப்பல் வாணிப உச்சிமாநாடு

ஈ) இந்திய நீர்வழிப்போக்குவரத்து உச்சிமாநாடு

✓ விளையாட்டு, கப்பல் மற்றும் நீர்வழிப்போக்குவரத்து அமைச்சகத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட, 'இந்திய கடல்சார் உச்சிமாநாடு – 2021'ஐ பிரதமர் மோடி திறந்துவைத்தார். இதன்சமயம், சாகர்–மந்தன்: வணிக கடல்சார் தளம் விழிப்புணர்வு மையம் தொடங்கப்பட்டது. இது கடல்சார் பாதுகாப்பு,

தேடல் மற்றும் மீட்புத்திறன்கள், பாதுகாப்பு மற்றும் கடற்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஒரு தகவலமைப்பாகும்.

**10.கீழ்க்காணும் எந்த PSLV'ஐ பயன்படுத்தி, 'சிந்து நேத்ரா' என்ற செயற்கைக்கோள் அண்மையில் வெற்றிகரமாக ஏவப்பட்டது?**

**அ) PSLV–C51 ☑**



ஆ) PSLV–C52

இ) PSLV–C53

ஈ) PSLV–C54

✓ 'சிந்து நேத்ரா' என்னும் செயற்கைக்கோள் சமீபத்தில் விண்வெளியில் வெற்றிகரமாக ஏவப்பட்டது. இந்தியாவின் கண்காணிப்பு திறனை அதிக –ரிப்பதற்கும், இந்தியப்பெருங்கடல் பிராந்தியத்தில் நடவடிக்கைகளை கண்காணிப்பதை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) இதை உருவாக்கியது.

✓ ISRO'இன் PSLV–C51'ஐப் பயன்படுத்தி இச்செயற்கைக்கோள் ஏவப்பட்டது. இந்தச் செயற்கைக்கோள், இந்தியப்பெருங்கடல் பிராந்தியத்தில் உலவும் போர்க்கப்பல்கள் மற்றும் வணிகக்கப்பல்களை தானாக அடையாளம் காணும் திறன்கொண்டது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழகத்தில் கொரோனா ஊரடங்கு காலத்தில் குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கை 76% அதிகரிப்பு: 47% பேருக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை.**

கொரோனா ஊரடங்கு காரணமாக நாடு முழுவதும் பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டன. இதனால் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்கள் கல்வியை தொடர முடியாதநிலை ஏற்பட்டது. குறிப்பாக, சாலையோரம் வசிக்கும் குழந்தைகள் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகள் கல்வியை தொடர முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில், கொரோனா ஊரடங்கு காலத்தில் தமிழகத்தில் குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கை 280 மடங்கு அதிகரித்துள்ள அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. இது தொடர்பாக, குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு பிரசார இயக்கம் ஆய்வு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கொரோனா ஊரடங்கு காலத்தில் குழந்தை தொழிலாளர்களின் நிலை தொடர்பாக தமிழகத்தின் 24 மாவட்டங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இந்த மாவட்டங்களில் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு செப்டம்பர் 2020 முதல் நவம்பர் 2020 வரை 767 குடும்பங்களைச் சேர்ந்த 818 குழந்தைகளிடம் ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வு தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: 818 குழந்தைகளிடம் நடத்தப்பட்ட ஆய்வில் 9 முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகளில் 93 சதவீத ஆண் குழந்தைகளும், 92 சதவீத பெண் குழந்தைகளும் கொரோனா ஊரடங்கிற்கு முன்னதாக பள்ளி சென்று கொண்டு இருந்தனர். 2 சதவீத பேர் மட்டுமே பள்ளிக்கு செல்லவில்லை. 12 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளில் ஆண்களில் 67 சதவீதம் பேர், பெண்களில் 80 சதவீதம் பேர் பள்ளிக்கு சென்றனர். 15 முதல் 18 வயது வரை உள்ளவர்களில் 40 சதவீத ஆண்களும், பெண்கள் 54 சதவீதம் பேர் பள்ளிக்கு சென்றனர்.

கொரோனா தொற்றுக்கு முன்பாக 818 குழந்தைகளில் 553 பேர் பள்ளிகளுக்கு சென்று கொண்டு இருந்தனர். ஆனால், கொரோனா தொற்று ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட பின்பு 553 பேரில் 419 பேர் வேலைக்கு செல்ல தொடங்கிவிட்டனர். கோவிட் தொற்று முன்பாக வேலைக்கு சென்று கொண்டு இருந்த 265 பேரில் 231 தற்போதும் வேலைக்கு சென்று கொண்டுதான் உள்ளனர். இதன்படி, குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரித்து, குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கை 76 சதவீதம் அதிகரித்துள்ளது. பாதிக்கப்பட்ட சமூகங்களில் இருந்து குழந்தை தொழிலாளர்கள் 28 சதவீதம் அதிகரித்து உள்ளனர்.

கொரோனா தொற்றுக்கு முன்பாக பள்ளிக்கு சென்ற 553 குழந்தைகளில் 254 பேருக்கு (47%) ஊரடங்கின்போது எந்தவித உதவியும் கிடைக்கவில்லை. 49 பேருக்கு (9%) உலர் ரேஷன் பொருட்கள் கிடைத்துள்ளது. 177 பேருக்கு புத்தகங்கள், குறிப்பேடுகள் கிடைத்துள்ளன. ஊரடங்கு காலத்தில் பள்ளிக்கு செல்லும் குழந்தைகளில் 24 சதவீதம் பேர் இணையதள வகுப்புகளில் கலந்துகொள்வதே இல்லை. 24 சதவீதம் பேர் 25 சதவீத வகுப்புகளில் கலந்துகொள்கின்றனர். 21.6 சதவீதம் பேர் 50 சதவீத வகுப்புகளில் கலந்துகொள்கின்றனர். 9.1 சதவீதம் பேர் அனைத்து வகுப்புகளிலும் கலந்துகொள்கின்றனர். பங்கேற்றவர்களில் 3ல் ஒருவர் இணைய வழி வகுப்புகள் பயனுள்ளதாக இல்லை என்று கருத்து தெரிவித்துள்ளனர். 90 சதவீதம் பேர் இணைய வகுப்புகளின் தரம் எதிர்பார்த்ததை விட கீழ்நிலையில் உள்ள தெரிவித்து உள்ளனர். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

* என்ன செய்ய வேண்டும்?

குழந்தைகள் மீண்டும் பள்ளிக்கு வருவதை உறுதி செய்ய வேண்டும். கிராம அளவில் குழு அமைத்து பணியாற்ற வேண்டும். சமூக பாதுகாப்பு திட்டங்கள் மூலம் உதவிகள் செய்ய வேண்டும். குழந்தை தொழிலாளர் சட்டத்தை கடுமையாக அமல்படுத்த வேண்டும்.

* ரூ.400 வரை ஊதியம்

குழந்தைகள் தங்களின் வயதை பொறுத்து ரூ.100 முதல் ரூ.400 வரை சம்பாதிக்கிறார்கள். சில வேலைகளில் அதை விட அதிகம் சம்பாதிக்கின்றனர். சிலரிடம் ஊதியம் குறித்த தெளிவான தகவல் இல்லை.

* 17 மாவட்டங்களில் அதிகரிப்பு

ஊரடங்கு காலத்தில் சென்னை, ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, சேலம், கோவை, ஈரோடு, திருப்பூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், நீலகிரி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, விருதுநகர், சிவகங்கை மாவட்டங்களில் குழந்தை தொழிலாளர் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

* கொத்தடிமை முறையில் தள்ளப்படும் அபாயம்

கொரோனா ஊரடங்கு காலத்தில் வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால் பல குடும்பங்கள் அதிக வட்டி விகிதத்தில் நிறைய கடன் வாங்கி உள்ளனர். குறிப்பாக தங்களது முன்னாள் முதலாளிகளிடம் அதிக கடன் வாங்கியுள்ளனர். இதனால், இவர்களில் பலர் கொத்தடிமை முறைக்கு தள்ளப்படும் அபாயம் உள்ளது.

**2. சிறந்த கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலில் வேலூர் விஐடி க்யூ.எஸ். சர்வதேச அமைப்பு வெளியீடு**

இந்திய அளவில் சிறந்த 12 கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலில் வேலூர் விஐடி பல்கலைக்கழகம் இடம்பிடித்துள்ளது. இந்த தரவரிசைப் பட்டியலை குவாக்குவரேலி சைமெண்ட்ஸ் (க்யூ.எஸ்.) என்ற சர்வதேச அமைப்பு வெளியிட்டுள்ளது. இதுகுறித்து, விஐடி பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: உலகம் முழுவதும் 80–க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்கள், அதன் கல்வித்தரம், மாணவர் – ஆசிரியர் விகிதம், ஆசிரியர்கள் பெற்ற விருதுகள், சாதனைகள், மாணவர்கள் விகிதம் உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் தரம் பிரித்து ஆண்டுதோறும் சர்வதேச அளவிலும், இந்திய அளவிலும் சிறந்த கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலை குவாக்குவரேலி சைமண்ட்ஸ் (க்யூ.எஸ்.) என்ற சர்வதேச நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இந்நிறுவனம் நிகழாண்டு வெளியிட்டுள்ள தரவரிசைப் பட்டியலில் உலகின் சிறந்த 450 பல்கலைக் கழகங்களுக்குள் வேலூர் விஐடி பல்கலைக்கழகம் இடம்பெற்றுள்ளது. தவிர, தேசிய அளவில் சிறந்த 12 கல்வி நிறுவனங்களிலும் விஐடி பல்கலைக்கழகம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், விஐடி பல்கலைக்கழகத்தின் 7 பாடப்பிரிவுகள் க்யூ.எஸ்., அமைப்பின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இதில், கணினி அறிவியல், தகவல் தொழில்நுட்பம், மின்னணு மற்றும் மின்னணு பொறியியல், இயந்திரப் பொறியியல், வேதியியல் ஆகிய 4 பாடப்பிரிவுகள் தரவரிசைப் பட்டியலில் கடந்த ஆண்டைக் காட்டிலும் 50 இடங்களுக்கு மேல் முன்னேறியுள்ளன. இவை இந்திய அளவிலும் முதல் 10 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளன.

இதேபோல் விஐடி பல்கலைக்கழகத்தின் கணிதவியல், உயிரியல் பாடப்பிரிவுகள் முதன்முதலாக க்யூ.எஸ். தரவரிசைப் பட்டியலில் உலக அளவில் 500 முதல் 600 இடங்களுக்குள் வந்துள்ளன. இந்த தரவரிசைப் பட்டியலானது மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த பாடப்பிரிவு உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் இருப்பதை எளிதாக அடையாளம் காண வழிவகை செய்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. வருங்காலத்துக்கான நவீனப்படையை உருவாக்க வேண்டும்: பிரதமா் மோடி**

வருங்காலத்துக்கான நவீனப்படையாக இந்திய பாதுகாப்புப் படைகளை உருவாக்க வேண்டும் என்று முப்படைகள் தளபதிகளின் மாநாட்டில் பிரதமா் நரேந்திர மோடி தெரிவித்தாா். இதுதொடா்பாக பிரதமா் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: குஜராத் மாநிலம் கெவாடியாவில் பாதுகாப்பு அமைச்சகம் சாா்பில் ராணுவம், விமானப் படை, கடற்படை ஆகிய முப்படைகளின் தளபதிகள் மாநாடு 3 நாள்கள் நடைபெற்றது. இதில் பிரதமா் மோடி சனிக்கிழமை கலந்துகொண்டாா். அப்போது அவரிடம் முப்படைத் தளபதி விபின் ராவத் மாநாட்டில் நிகழ்ந்த விவாதங்கள் குறித்து எடுத்துரைத்தாா். இதனைத்தொடா்ந்து மாநாட்டின் செயல்திட்டத்துக்கு பிரதமா் மோடி பாராட்டுத் தெரிவித்தாா்.

கடந்த ஆண்டு நாட்டின் வடக்கு எல்லையில் நிலவிய சவாலான சூழலிலும், கரோனா தொற்று பரவலின்போதும் முப்படைகள் வெளிபடுத்திய உறுதியான அா்ப்பணிப்பையும் பிரதமா் மோடி பாராட்டினாா். முப்படைகள் பயன்படுத்தும் ஆயுதங்கள், உபகரணங்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டதாக இருப்பதையும், முப்படைகள் கடைப்பிடிக்கும் போா்க் கொள்கைகள், நடைமுறைகள் அனைத்தும் உள்நாட்டைச் சாா்ந்தவையாக இருப்பதையும் அதிகரிக்க வேண்டும் என்று பிரதமா் மோடி கூறினாா். தேசிய பாதுகாப்பின் கட்டமைப்பில் ஒரு திட்டத்தை குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க தேவைப்படும் நபா்களை மதிப்பிட்டு சரியாக பயன்படுத்த வேண்டிதற்கான தேவையையும் அவா் எடுத்துரைத்தாா். மக்களின் அனைத்துத் தேவைகளுக்கும் உதவிபுரிந்து அவா்களுக்கும், முப்படைகளுக்கும் நடுவில் இருக்கும் இடைவெளியை உடைக்க வேண்டும் என்று அவா் அறிவுறுத்தினாா்.

வேகமாக மாறிவரும் தொழில்நுட்பங்களை கருத்தில் கொண்டு, வருங்காலத்துக்கான நவீனப்படையாக நாட்டின் முப்படைகள் உருவாக வேண்டும் என பிரதமா் மோடி தெரிவித்தாா் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**4. தகவல் தொழில்நுட்ப துறை விற்பனை 5.2% அதிகரிப்பு**

தகவல் தொழில்நுட்ப (ஐடி) துறை விற்பனை மூன்றாவது காலாண்டில் 5.2 சதவீதம் அதிகரிதத்துள்ளதாக ரிசா்வ் வங்கி தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த வங்கியின் புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கரோனா பேரிடா் காலகட்டத்திலும் ஐடி துறையின் விற்பனை ஏற்றம் நிறைந்ததாகவே இருந்தது. அதனை எடுத்துக்காட்டும் வகையில் நடப்பு 2020-21-ஆம் நிதியாண்டின் அக்டோபா் முதல் டிசம்பா் வரையிலான மூன்றாவது காலாண்டில் அத்துறையின் விற்பனை 5.2 சதவீதம் அளவுக்கு ஏற்றம் கண்டுள்ளது. கரோனா தொடா்பான கட்டுப்பாடுகள் தளா்த்தப்பட்டதையடுத்து பொருள்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. அதன் பயனாக, ஐடி துறையைச் சோ்ந்த 1,685 உற்பத்தி நிறுவனங்களின் விற்பனை மூன்றாவது காலாண்டில் 7.4 சதவீதம் உயா்ந்துள்ளது. குறிப்பாக, இந்த மீட்சிக்கு உருக்கு, ஆட்டோமொபைல், சிமெண்ட், ரசாயனம், மருந்து நிறுவனங்களின் பங்கு மிக முக்கியமானதாக இருந்தது.

165 ஐடி நிறுவனங்களின் விற்பனை அக்டோபா்-டிசம்பா் காலாண்டில் 1,05,724 கோடியாக இருந்தது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விற்பனையான ரூ.1,01,001 கோடியுடன் ஒப்பிடுகையில் 5.2 சதவீதம் அதிகமாகும். அதேசமயம், ஐடி துறை சாராத நிறுவனங்களின் விற்பனையில் ஏற்பட்ட பின்னடைவு இரண்டாவது காலாண்டில் -14.5 சதவீதமாக இருந்த நிலையில் மூன்றாவது காலாண்டில் அந்த பின்னடைவு -5.7 சதவீதமாக குறைந்துள்ளது. இதற்கு, தொலைத்தொடா்பு, ரியல் எஸ்டேட், வா்த்தக துறையைச் சோ்ந்த நிறுவனங்களின் சிறப்பான செயல்பாடுகளே முக்கிய காரணம் என ரிசா்வ் வங்கி அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

**5. ரூ.4 இடைக்கால ஈவுத்தொகை: ஐசிஐசிஐ லொம்பாா்டு**

ஐசிஐசிஐ லொம்பாா்டு ஜெனரல் இன்சூரன்ஸ் நடப்பு நிதியாண்டில் இரண்டாவது முறையாக ரூ.4 இடைக்கால ஈவுத்தொகை வழங்குவதற்கு அதன் இயக்குநா் குழு ஒப்புதல் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த நிறுவனம் பங்குச் சந்தையிடம் தெரிவித்துள்ளதாவது: மும்பையில் மாா்ச் 5-ஆம் தேதி நடைபெற்ற ஐசிஐசிஐ லொம்பாா்டு நிறுவன இயக்குநா் குழு கூட்டத்தில் இரண்டாவது முறையாக 40 சதவீத இடைக்கால ஈவுத்தொகை வழங்கும் திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன் மூலம், ரூ.10 முகமதிப்பைக் கொண்ட ஒவ்வொரு பங்குக்கும் இடைக்கால ஈவுத்தொகையாக ரூ.4 கிடைக்கும். ஈவுத்தொகை வழங்குவதற்கான பதிவு தேதி 2021 மாா்ச் 19-ஆம் தேதியாக நிா்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் 4-ஆம் தேதிக்கு முன்னதாகவே முதலீட்டாளா்களுக்கு இந்த இடைக்கால ஈவுத்தொகை வழங்கப்படும் என ஐசிஐசிஐ லொம்பாா்டு தெரிவித்துள்ளது.

காப்பீட்டு நிறுவனங்கள் தங்களது நிதி நிலையை கருத்தில் கொண்டு 2020-21 நிதியாண்டுக்கான ஈவுத்தொகையை அறிவிக்கலாம் என இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆா்டிஏஐ) கடந்த வாரம் தெரிவித்திருந்தது. 2020 டிசம்பா் 31-ஆம் தேதியுடன் முடிவடைந்த காலாண்டில் ஐசிஐசிஐ லொம்பாா்டு ரூ.314 கோடி நிகர லாபத்தை பெற்று 6.6 சதவீத வளா்ச்சியை பதிவு செய்தது.

**6. பங்குகளில் அந்நிய நேரடி முதலீட்டு வரத்து 40% உயா்வு: மத்திய அரசு**

பங்குகளில் அந்நிய நேரடி முதலீட்டு வரத்து நடப்பு 2020-21-ஆம் நிதியாண்டின் ஏப்ரல்-டிசம்பா் காலகட்டத்தில் 40 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து மத்திய வா்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நடப்பு நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய நேரடி முதலீடு 5,147 கோடி டாலராக இருந்தது. இது, கடந்த 2019-20-ஆம் நிதியாண்டின் இதே காலகட்டத்தில் ஈா்த்த அந்நிய நேரடி முதலீடான 3,677 கோடி டாலருடன் ஒப்பிடுகையில் 40 சதவீதம் அதிகமாகும். ஒட்டுமொத்த அளவில் நடப்பு நிதியாண்டில் ஏப்ரல்-டிசம்பா் காலகட்டத்தில் இந்தியா ஈா்த்த அந்நிய நேரடி முதலீடு (மறுமுதலீடு செய்யப்பட்ட வருவாய் உள்பட) கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் 5,514 கோடி டாலரிலிருந்து 22 சதவீதம் வளா்ச்சி கண்டு 6,754 கோடி டாலரைத் தொட்டுள்ளது.

குறிப்பாக, மூன்றாவது காலாண்டில் மட்டும் (2020 அக்டோபா்-டிசம்பா்) அந்நிய முதலீட்டு வரத்து 37 சதவீதம் உயா்ந்து 2,616 கோடி டாலரைத் தொட்டது. டிசம்பரில் இது, 24 சதவீதம் அதிகரித்து 922 கோடி டாலராக இருந்தது என புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நிய நேரடி முதலீட்டை அதிக அளவில் ஈா்க்கும் வகையில் அதன் கொள்கைகளில் மத்திய அரசு பல்வேறு சீா்திருத்தங்களை மேற்கொண்டது. கடந்த ஆறரை ஆண்டுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக அந்நிய நேரடி முதலீட்டு வரத்து தற்போது தொடா்ந்து அதிகரித்து வருகிறது என மத்திய அரசு தெரிவித்துள்ளது. பொருளாதார வளா்ச்சியை ஊக்குவிப்பதில் அந்நிய முதலீடு மிக முக்கிய பங்கினை கொண்டுள்ளது. கடன் அல்லாத நிதிக்கான முக்கிய ஆதாரமாக அது விளங்குகிறது.

**7. சா்வதேச மல்யுத்தம்: சரிதாவுக்கு வெள்ளி**

மேட்டியோ பெலிகோன் தரவரிசை சா்வதேச மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் சரிதா வெள்ளிப் பதக்கம் வென்றாா். இத்தாலி தலைநகா் ரோமில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் இந்தியாவின் சரிதா தனது இறுதிச்சுற்றில் 2-4 என்ற கணக்கில் பல்கேரியாவின் ஜியூலியா பெனால்பெரிடம் தோல்வி கண்டாா். இதனால் அவா் வெள்ளிப் பதக்கத்தோடு வெளியேற நோ்ந்தது. ஆடவா் 72 கிலோ எடைப் பிரிவு கிரேக்கோ ரோமன் பிரிவில் வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் இந்தியாவின் குல்தீப் மாலிக், ரஷியாவின் சிங்கிஸ் லேபஸனோவை வீழ்த்தி வெண்கலம் வென்றாா். அதேநேரத்தில் ஆடவா் 97 கிலோ எடைப் பிரிவு ஃப்ரீஸ்டைல் போட்டியில் இந்தியாவின் சத்திவாா்ட் காடியன் 1-8 என்ற கணக்கில் துருக்கியின் இப்ராஹிம் சிப்ட்சியிடம் தோல்வி கண்டாா்.

**8. மார்ச் 8-ஐ ஏன் கொண்டாடுகிறோம்?**

உலகெங்கும் மார்ச்-8 அன்று சர்வதேச பெண்கள் தினம் கொண டாடப்படுகிறது. கல்வியில், வேலை வாய்ப்பில், பொதுவெளிகளில் பெண்களுக்கு மறுக்கப்பட்ட பல்வேறு உரிமைகளைப் பெண்கள், இன்றைக்கு போராடிப் பெற்று வருகிறார்கள். சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடுவதற்குப் பின்னே, மிக நீண்ட பெண் எழுச்சிக்கான வரலாறு இருக்கிறது. கி.பி. 1789-ம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியின் போது பாரிஸில் பெண்கள் போர்க் கொடி ஏந்தினர். இந்தச் சமுதாயத்தில் பெண்களுக்கு சம உரிமைகள் வேண்டும், உழைப்புக்கேற்ற ஊதியம் வேண்டும், 16 மணி நேர வேலையைக் குறைக்க வேண்டும், வாக்குரிமை வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் பெண்கள் போராட்டத்தில்இறங்கினர். ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தப் போராட்டம் பரவியது.

பெண்கள் வாரிசுகளைப் பெற்றெ டுப்பதற்காகவும், வீட்டு வேலைக் காகவும் மட்டுமே இருப்பதாக எண்ணிக்கொண்டிருந்த காலமாக அன்றைய காலமிருந்தது. பிறகு, பெண்களின் மனதில் விழிப்புணர்வு

ஏற்பட ஆரம்பித்தது. 1907-க்குப் பிறகு போராட்டம் தீவிரமானது. டென்மார்க் நாட்டின் கோபன்ஹேகன் நகரில், 1910-ம் ஆண்டு உலக சோஷலிச பெண்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டில அனைத்து நாட்டிலுள்ள பெண்களும் சேர்ந்து மகளிர் தினம் என்ற ஒன்றை உருவாக்கி, அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றுவலியுறுத்தினார். அத்துடன் பெண்கள்சந்திக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எதிராகப் போராட வேண்டுமென்றும் குரல் கொடுத்தனர்.

பிறகு, ஐக்கிய நாடுகள் சபை, மார்ச் 8-ஐ உலக மகளிர் தினமாக அறிவித்தது. இரண்டு ஆண்டுகள் கழித்து 1977-ல் இது தொடர்பான தீர்மானமும் நிறைவேற் றப்பட்டது. உலகின் முதல் சோஷலிசப் புரட்சி ரஷ்யாவில் 1917-ம் ஆண்டு லெனின் தலைமையில் நடந்தது. அதற்கு முன்னோடியாக மார்ச் 8 அன்று பெண் தொழிலாளர்களின் புரட்சி தொடங்கியது. இதில் ஆண் தொழிலாளர்களும் கலந்து கொண்டார்கள் என்றாலும் பெண்களே பிரதான பங்கு வகித்தனர். இந்தப் புரட்சிதான் ஜார் மன்னர் தனது அரியணையை விட்டிறங்கக் காரணமாக அமைந்தது. அதை நினைவுகூரும் விதமாக மார்ச் 8 தேர்ந்தெடுக்கப்பட்டது.

உலக அளவில், உழைக்கும் வயதில் உள்ள பெண்களில் பாதிப் பேர் மட்டுமே, வேலைக்குச் செல்கின்றனர் என்கிறது ஐ.நா. உழைப்புக்கான உடல் தகுதி, திறன், அறிவுக்கூர்மை இருந்தும் குடும்ப சூழல்களால் வேலைக்குப் போகும் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது. இப்போது உழைக்கும் பெண்களில் குறிப்பிடத்தகுந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. சமுதாயத்தில் ஆணுக்கு நிகராக பெண்களுக்கும் சம உரிமைகள் கிடைக்க வேண்டுமென்பதற்கான போராட்டங்கள் இன்னமும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**9. தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த வீரரின் குடும்பத்துக்கு ம.பி. அரசு ரூ.1 கோடி**

தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த வீரரின் குடும்பத்துக்கு ரூ.1 கோடி வழங்கப்படும் என்று மத்திய பிரதேச அரசு அறிவித்துள்ளது. சத்தீஸ்கர் மாநிலத்தின் 8 மாவட்டங்களில் நக்ஸல், மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்களை ஒடுக்க சிஆர்பிஎப் மற்றும் மாநில போலீஸார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அடர்ந்த வனப்பகுதிகளில் மறைந்து வாழும் நக்ஸல், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை பிடிக்க கடந்த 2016-ம் ஆண்டில் மாவட்ட ரிசரவ் படையை (டிஆர்ஜி) சத்தீஸ்கர் அரசு உருவாக்கியது.

கடந்த 4-ம் தேதி சத்தீஸ்கரின் தந்தேவாடா பகுதியில் டிஆர்ஜி வீரர்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது நக்ஸல் தீவிரவாதிகள் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டு வெடித்து சிதறியது. இதில் லட்சுமிகாந்த் என்ற வீரர் உயிரிழந்தார். இவர் மத்திய பிரதேசத்தின் ரேவா மாவட்டத்தை சேர்ந்தவர். "தீவிரவாத தாக்குதலில் வீரமரணம் அடைந்த லட்சுமிகாந்த் குடும்பத்துக்கு ரூ.1 கோடி வழங்கப்படும். அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணி வழங்கப்படும். அவரது குடும்பத்துக்கு வீடு வழங்கப்படும்" என்று மத்திய பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் அறிவித்துள்ளார்.

**10. செவ்வாய் கிரகத்தில் 'ரோவர்' சோதனை ஓட்டம்**

அமெரிக்காவின் 'பெர்சவரன்ஸ் ரோவர்' வாகனம் செவ்வாய் கிரகத்தில் முதன் முறையாக சோதனை ஓட்டத்தை மேற்கொண்டது. அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான 'நாசா' அனுப்பிய பெர்சவரன்ஸ் ரோவர் வாகனம் கடந்த மாதம் செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக தரையிறங்கி ஏராளமான புகைப்படங்களை அனுப்பி வருகிறது. இந்நிலையில் நாசா வெளியிட்டுள்ள அறிக்கை:செவ்வாய் கிரகத்தில் ஆறு சக்கரங்கள் உள்ள பெர்சவரன்ஸ் ரோவர் வாகனம் முதன் முறையாக 6.5 மீ. தூரம் நடத்திய சோதனை ஓட்டம் வெற்றி பெற்றுள்ளது.முதலில் 4 மீ. தூரம் முன்புறம் சென்ற ரோவர் பின் இடது புறம் திரும்பி 2.5 மீ. பின்னோக்கி நகர்ந்து புதிய தற்காலிக இருப்பிடத்தில் நின்றது.

செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் முதன் முறையாக மொத்தம் 33 நிமிடங்கள் நடந்த இந்த சோதனை ஓட்டம் முக்கிய சாதனையாக கருதப்படுகிறது.சோதனை ஓட்டம் வெற்றி பெற்றதை அடுத்து ரோவர் 200 மீ. தூரம் சென்று செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும்.செவ்வாய் கிரகத்தின் மண், கல் ஆகியவற்றை சேகரிக்கும். பல கோணங்களில் படம் எடுத்து பூமிக்கு அனுப்பும். அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு செவ்வாய் கிரகம் தொடர்பான விஞ்ஞானிகளின் ஆய்வுகளுக்கு ரோவரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க வகையில் இருக்கும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**11. 4-ஆவது டெஸ்ட்: இந்தியா இன்னிங்ஸ் வெற்றி**

இங்கிலாந்துக்கு எதிரான 4-ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 25 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி கண்டது. இந்தியா-இங்கிலாந்து இடையிலான 4-ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஆமதாபாதில் நடைபெற்றது. இதில், முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 75.5 ஓவா்களில் 205 ரன்களுக்கு சுருண்டது. அந்த அணியில் அதிகபட்சமாக பென் ஸ்டோக்ஸ் 55, டான் லாரன்ஸ் 46 ரன்கள் எடுத்தனா். இந்திய தரப்பில் அக்ஸா் படேல் 4 விக்கெட்டுகளையும், அஸ்வின் 3 விக்கெட்டுகளையும் சாய்த்தனா். இதையடுத்து முதல் இன்னிங்ஸை ஆடிய இந்திய அணியில் முன்னணி வீரா்கள் விரைவாக வெளியேறியபோதும், ரிஷப் பந்த்-வாஷிங்டன் சுந்தா் ஜோடி சிறப்பாக ஆடியது. இதனால் இந்திய அணி சரிவிலிருந்து மீண்டது. ரிஷப் பந்த் 118 பந்துகளில் 2 சிக்ஸா், 13 பவுண்டரிகளுடன் 101 ரன்கள் எடுத்து வெளியேறினாா்.

2-ஆவது நாளான வெள்ளிக்கிழமை ஆட்டநேர முடிவில் இந்தியா 94 ஓவா்களில் 7 விக்கெட் இழப்புக்கு 294 ரன்கள் எடுத்திருந்தது. வாஷிங்டன் சுந்தா் 60, அக்ஸா் படேல் 11 ரன்களுடன் களத்தில் இருந்தனா். 3-ஆவது நாளான சனிக்கிழமை தொடா்ந்து ஆடிய இந்திய அணியில் வாஷிங்டன் சுந்தா் சதத்தை நெருங்கிய நிலையில், அக்ஸா் படேல் 97 பந்துகளில் 43 ரன்கள் சோ்த்த நிலையில் ரன் அவுட்டானாா். இதன்பிறகு வந்த இஷாந்த் சா்மா, முகமது சிராஜ் ஆகியோா் ரன் ஏதுமின்றி விக்கெட்டை பறிகொடுக்க, இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் 114.4 ஓவா்களில் 365 ரன்களோடு முடிவுக்கு வந்தது. வாஷிங்டன் சுந்தா் 174 பந்துகளில் 1 சிக்ஸா், 10 பவுண்டரிகளுடன் 96 ரன்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தாா். அவா் 4 ரன்களில் டெஸ்ட் போட்டியில் முதல் சதமடிக்கும் வாய்ப்பை இழந்தாா். இங்கிலாந்து தரப்பில் பென் ஸ்டோக்ஸ் 4 விக்கெட்டுகளையும், ஜேம்ஸ் ஆண்டா்சன் 3 விக்கெட்டுகளையும் சாய்த்தனா்.

இங்கிலாந்து-135: இதையடுத்து முதல் இன்னிங்ஸில் 160 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-ஆவது இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி, இந்திய சுழற்பந்து வீச்சாளா்கள் அஸ்வின், அக்ஸா் படேல் ஆகியோரின் பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் திணறியது. இதனால் அந்த அணியின் தொடக்க வீரரான ஜக் கிராவ்லே 5 ரன்களிலும், பின்னா் களம்புகுந்த ஜானி போ்ஸ்டோ ரன் ஏதுமின்றியும், டாம் சிப்லே 3 ரன்களிலும் விக்கெட்டை பறிகொடுத்தனா். இதன்பிறகு பென் ஸ்டோக்ஸ் 2, ஆலி போப் 15, ஜோ ரூட் 30 ரன்களில் வெளியேற, இங்கிலாந்து அணி 25.1 ஓவா்களில் 65 ரன்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

எனினும் 7-ஆவது விக்கெட்டுக்கு இணைந்த டான் லாரன்ஸ்-பென் ஃபோக்ஸ் ஜோடி 44 ரன்கள் சோ்க்க, அந்த அணி 100 ரன்களைக் கடந்தது. பென் ஃபோக்ஸ் 13 ரன்களில் வெளியேற, அவரைத் தொடா்ந்து களம்புகுந்த டாம் பெஸ், ஜேக் லீச் ஆகியோா் தலா 2 ரன்களில் நடையைக் கட்டினா். கடைசி விக்கெட்டாக டான் லாரன்ஸ் 50 ரன்களில் ஆட்டமிழக்க, இங்கிலாந்தின் 2-ஆவது இன்னிங்ஸ் 54.5 ஓவா்களில் 135 ரன்களோடு முடிவுக்கு வந்தது. இதனால் இன்னிங்ஸ் மற்றும் 25 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி கண்டது. இந்திய தரப்பில் அஸ்வின், அக்ஸா் படேல் ஆகியோா் தலா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினா். இந்தப் போட்டியில் சதமடித்த ரிஷப் பந்த் ஆட்டநாயகனாகத் தோ்வு செய்யப்பட்டாா்.

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்: இந்தப் போட்டியில் வெற்றி கண்டதன் மூலம் 4 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரை இந்தியா 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியதோடு, உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிச்சுற்றுக்கும் முன்னேறியது. லண்டன் லாா்ட்ஸ் மைதானத்தில் ஜூன் மாதம் நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிச்சுற்றில் நியூஸிலாந்தை எதிா்கொள்கிறது இந்தியா.

8-ஆவது முறையாக தொடா் நாயகன் விருது வென்ற அஸ்வின் இந்தத் தொடரில் 32 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய சுழற்பந்து வீச்சாளா் அஸ்வின் தொடா் நாயகன் விருதை வென்றாா். டெஸ்ட் போட்டியில் அவா் தொடா் நாயகன் விருதை வெல்வது 8-ஆவது முறையாகும். இதன்மூலம் டெஸ்ட் போட்டியில் அதிக முறை தொடா் நாயகன் விருதை வென்றவா்கள் வரிசையில் பாகிஸ்தானின் இம்ரான் கான், ஆஸ்திரேலியாவின் ஷேன் வாா்ன், நியூஸிலாந்தின் ரிச்சா்ட் ஹேட்லி ஆகியோருடன் 3-ஆவது இடத்தைப் பகிா்ந்து கொண்டுள்ளாா் அஸ்வின். முதலிடத்தில் இலங்கையின் முத்தையா முரளீதரனும் (11 முறை), 2-ஆவது இடத்தில் தென் ஆப்பிரிக்காவின் ஜாக்ஸ் காலிஸும் (9 முறை) உள்ளனா்.

சாதனைத் துளிகள்... * இந்தியாவுக்கு எதிரான இந்த டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 4 முறை 150 ரன்களுக்குள் ஆட்டமிழந்தது. கடந்த 112 ஆண்டுகளில் ஒரு டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 4 முறை 150 ரன்களுக்குள் ஆட்டமிழப்பது இதுவே முதல்முறையாகும். இதற்கு முன்னா் 1909–இல் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இதேபோன்று ஆட்டமிழந்துள்ளது. * இந்தத் தொடரில் 32 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு, சதத்தையும் விளாசினாா் இந்திய வீரா் அஸ்வின். இதன்மூலம் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 30–க்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு, சதமும் அடித்த முதல் வீரா் என்ற பெருமை அஸ்வின் வசமாகியுள்ளது. மேலும் ஒரு டெஸ்ட் தொடரில் 30 அல்லது அதற்கும் அதிகமான விக்கெட்டுகளை இருமுறை வீழ்த்திய முதல் இந்தியா் என்ற பெருமையும் அஸ்வின் வசமாகியுள்ளது.

* இந்த டெஸ்ட் தொடரில் அக்ஸா் படேல் 27 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் அறிமுக டெஸ்ட் தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இந்தியா் என்ற சாதனையை திலீப் தோஷியுடன் பகிா்ந்து கொண்டாா். திலீப் தோஷி 1979–இல் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அறிமுகமாகி 27 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளாா். * நான்காவது டெஸ்ட் போட்டியின் 2–ஆவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் டெஸ்ட் போட்டியில் 30–ஆவது முறையாக 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறாா் அஸ்வின். இதன்மூலம் ஓா் இன்னிங்ஸில் அதிகமுறை 5 விக்கெட்டுகள் வீழ்த்தியவா்கள் வரிசையில் இங்கிலாந்தின் ஜேம்ஸ் ஆண்டா்சனுடன் 6–ஆவது இடத்தைப் பகிா்ந்துகொண்டுள்ளாா் அஸ்வின்.

**12. கரோனா தடுப்பூசிகளுக்கு காப்புரிமை ரத்து: இந்தியாவின் பரிந்துரைக்கு எதிா்ப்பு**

கரோனா தடுப்பூசிகளுக்கு காப்புரிமைகள் வழங்கக் கூடாது என்று உலக வா்த்தக அமைப்பிடம் இந்தியாவும் தென் ஆப்பிரிக்காவும் விடுத்துள்ள கோரிக்கைக்கு அமெரிக்க குடியரசுக் கட்சியைச் சோ்ந்த 4 எம்.பி.க்கள் எதிா்ப்பு தெரிவித்துள்ளனா். மைக் லீ, டாம் காட்டன், ஜோனி எா்ன்ஸ்ட், டாட் யாங் ஆகிய அந்த 4 எம்.பி.க்கள், இதுகுறித்து அதிபா் ஜோ பைடனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: கரோனா தொற்றுக்கு எதிராக தடுப்பூசிகளை உருவாக்கியுள்ள நிறுவனங்கள், அதற்காகப் பெற்றுள்ள காப்புரிமைகளை ரத்து செய்ய வேண்டும் என்று இந்தியா, தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகள் உலக வா்த்தக அமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அவ்வாறு காப்புரிமைகள் ரத்து செய்யப்பட்டால், கூடுதலாக பல நிறுவனங்கள் உலகம் முழுவதும் கரோனா தடுப்பூசிகளை அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்ய முடியும் என்ற எண்ணத்தில் இவ்வாறு அந்த நாடுகள் பரிந்துரைக்கின்றன. ஆனால், உண்மை நிலவரம் இதற்கு நோ்மாறாக இருக்கும். கரோனா தடுப்பூசிகள் மற்றும் சிகிச்சை மருந்துகளை உருவாக்குவதற்காக பாடுபட்ட அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து அதற்கான காப்புரிமைகள் பறிக்கப்பட்டால், அந்த நோய்க்கு எதிரான அறிவியல் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும். அதிபா் டிரம்ப் பதவிக் காலத்தின்போது தொடங்கப்பட்ட சிறப்புத் திட்டத்தின் கீழ் வரலாறு காணாத வேகத்தில் கரோனா தடுப்பூசி உருவாக்கப்பட்டது. காப்புரிமைகள் பறிக்கப்பட்டால் அந்தத் திட்டம் முடிவுக்கு வந்துவிடும். அமெரிக்க நிறுவனங்களின் காப்புரிமையை அபகரித்தால், தங்களுக்கு சாதகமான சூழல் ஏற்படும் என்று சில நாடுகள் நம்புகின்றன. ஆனால், இது தவறான நம்பிக்கையாகும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**13. உச்சநீதிமன்றத்தில் மாா்ச் 15 முதல் நேரடி வழக்கு விசாரணை தொடக்கம்**

உச்சநீதிமன்றத்தில் வரும் 15–ஆம் தேதி முதல் காணொலி வழக்கு விசாரணையுடன் சோ்த்து நேரடி வழக்கு விசாரணையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கரோனா நோய்த்தொற்று பரவல் காரணமாக கடந்த ஆண்டு மாா்ச் முதல் உச்சநீதிமன்றத்தில் காணொலி வாயிலாக மட்டுமே வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. கரோனா பரவல் குறைந்ததையடுத்து, நேரடி வழக்கு விசாரணையைத் தொடங்க வேண்டும் என்று வழக்குரைஞா்கள் பலா் கோரிக்கை விடுத்தனா். இத்தகைய சூழலில், வரும் 15–ஆம் தேதி முதல் வழக்கு விசாரணை காணொலி வாயிலாக மட்டுமின்றி நேரடியாகவும் நடத்தப்படும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. இது தொடா்பான வழிகாட்டு நெறிமுறைகளை உச்சநீதிமன்றம் சனிக்கிழமை வெளியிட்டது. அதில் கூறப்பட்டுள்ளாவது:

திங்கள், வெள்ளிக்கிழமைகளில் பட்டியலிடப்படும் வழக்குகளின் விசாரணைகள் வழக்கம்போல் காணொலி வாயிலாகவே நடைபெறும். செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் பட்டியலிடப்படும் வழக்குகள், நீதிபதிகளின் விருப்பத்துக்கேற்ப காணொலி வாயிலாகவோ, நேரடியாகவோ நடைபெறும். குறிப்பிட்ட வழக்குகளின் தரப்பினா் எண்ணிக்கை, கரோனா வழிகாட்டு விதிமுறைகளின்படி நீதிமன்ற அறைக்குள் அனுமதிக்கப்பட வேண்டிய நபா்களின் எண்ணிக்கை உள்ளிட்டவற்றைக் கருத்தில் கொண்டு வழக்கு விசாரணையைக் காணொலி வாயிலாக நடத்துவதா, நேரடியாக நடத்துவதா என்று நீதிபதிகள் முடிவெடுப்பா்.

20 நபா்களுக்கு மட்டுமே அனுமதி: சோதனை அடிப்படையில் இந்தப் புதிய நடைமுறை வரும் 15–ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படவுள்ளது. வழக்கு விசாரணை நேரடியாக நடைபெற்றாலும், வழக்கில் தொடா்புடைய நபா்களும் வழக்குரைஞா்களும் காணொலி வழியாகக் கூட விசாரணையில் பங்கேற்க முடியும். வழக்குரைஞா்கள் எந்த முறையில் ஆஜராகின்றனா் என்பதை 24 மணி நேரத்துக்கு முன்பாகவோ, விசாரணை நடத்தப்படவுள்ள வழக்குகளின் பட்டியல் வெளியிடப்பட்டதற்கு அடுத்த நாள் நண்பகல் 1 மணிக்கு முன்னதாகவோ தெரியப்படுத்த வேண்டும். நேரடி வழக்கு விசாரணை நடைபெறும்போது, நீதிமன்ற அறைக்குள் 20 நபா்களுக்கு அதிகமாக இருக்கக் கூடாது. அந்த விதிமுறை மீறப்பட்டால், வழக்கு விசாரணை காணொலி வாயிலாகவே நடைபெறும். நேரடி வழக்கு விசாரணை நடைபெறும்போது, வழக்குரைஞருடன் ஒரு உதவியாளருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

சிறப்பு அனுமதிச் சீட்டு: நேரடி வழக்கு விசாரணையின்போது, விசாரணை தொடங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன் மட்டுமே சம்பந்தப்பட்ட நபா்கள் நீதிமன்ற அறைக்குள் அனுமதிக்கப்படுவா். நேரடி வழக்கு விசாரணையில் பங்கேற்கும் நபா்களுக்கும் வழக்குரைஞா்களுக்கும் சிறப்பு அனுமதிச் சீட்டு வழங்கப்படும். உச்சநீதிமன்ற வளாகத்துக்குள் நுழையும் அனைவரும் முகக் கவசம் அணிய வேண்டியது கட்டாயமாகும். அடிக்கடி சுத்திகரிப்பானைப் பயன்படுத்தி கைகளை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நீதிமன்ற வளாகத்துக்குள் சமூக இடைவெளியை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**14. இந்தியாவிடமிருந்து தடுப்பூசி வாங்குவது ஏழை நாடுகளை பாதிக்காது: பிரிட்டன்**

அஸ்ட்ராஸெனகா கரோனா தடுப்பூசிகளை இந்தியாவின் சீரம் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதால், ஏழை மற்றும் நடுத்தர நாடுகள் பாதிக்கப்படாது என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த நாட்டு தடுப்பூசி கொள்முதல் அமைச்சா் நதீம் ஸஹாவி கூறியதாவது: இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 1 கோடி அஸ்ட்ராஸெனகா தடுப்பூசிகளை பிரிட்டன் வாங்குவதால், ஏழை மற்றும் நடுத்தர நாடுகளின் கரோனா தடுப்பூசி திட்டங்கள் பாதிக்கப்படாது. அத்தகைய நாடுகளுக்கு கரோனா தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்வதில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்ற உறுதிமொழியை அஸ்ட்ராஸெனகா மற்றும் சீரம் நிறுவனங்களிடமிருந்து நாங்கள் கேட்டுப் பெற்றுள்ளோம்.

ஏழை மற்றும் நடுத்தர வருவாய் உள்ள நாடுகளுக்காக சீரம் நிறுவனம் 30 கோடி கரோனா தடுப்பூசிகளை தயாரித்து வருகிறது. ஏற்கெனவே, கானா, பிலிப்பின்ஸ், ஐவரி கோஸ்ட் போன்ற நாடுகளுக்கு அந்த நிறுவனம் தயாரித்த கரோனா தடுப்பூசிகள் அனுப்பப்பட்டுள்ளன. எதிா்காலத்தில், இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகும். எனவே, அந்த நிறுவனம் பிரிட்டனுக்கு கரோனா தடுப்பூசிகளை வழங்குவதால் பின்தங்கிய நாடுகள் பாதிக்கப்படும் என்று கூறப்படுவது தவறாகும். அத்தகைய நாடுகளில் ஐ.நா. ஆதரவுடன் செயல்படுத்தப்படும் 'கோவேக்ஸ்' திட்டத்தின் மூலம் கரோனா தடுப்பூசிகள் விநியோகிக்கப்படுகின்றன என்றாா் அவா்.

**1.உலகின் முதல் வாத்தலகி (platypus) சரணாலயத்தை உருவாக்கு -கிற நாடு எது?**



அ) இந்தியா

ஆ) இலங்கை

இ) பாகிஸ்தான்

**ஈ) ஆஸ்திரேலியா ☑**

✓ நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசாங்கமும் ஆஸ்திரேலியாவின் தரோங்கா பாதுகாப்பு சங்கமும் இணைந்து உலகின் முதல் பிளாட்டிபஸ் சரணாலய -த்தை கட்டுவதாக அறிவித்தன. இது, காலநிலை மாற்றத்தால் அழிவை எதிர்கொண்டுள்ள வாத்தலகி பாலூட்டிகளின் இனப்பெருக்கம் மற்றும் மறுவாழ்வை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சிட்னியில் இருந்து 390 கிமீ தூரத்தில் உள்ள மிருகக்காட்சிசாலையில் இந்த வசதி உருவாக்கப்படவுள்ளது.

---

**2.நடப்பாண்டில் (2021) வரும் உலக செவித்திறன் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) Hearing care for All ☑**

ஆ) Save Hearing

இ) Care for hearing

ஈ) Hearing care

✓ செவித்திறன் இழப்பைத் தடுக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த மார்ச்.3ஆம் தேதி உலக செவித்திறன் நாள் அனுசரிக்கப்படுகிறது. இது உலக சுகாதார அமைப்பின் குருட்டுத்தன்மை மற்றும் காதுகேளாமை தடுப்பு அலுவலகத்தால் ஒவ்வோர் ஆண்டும் நட -த்தப்படும் ஒரு பிரச்சாரமாகும். 2021ஆம் ஆண்டிற்கான பிரச்சாரத்தின் கருப்பொருள் "Hearing care for All".

---

**3.பன்னாட்டு கழிவெடுப்பவர்கள் (Waste Pickers') நாள் கடைபிடிக் -கப்படுகிற தேதி எது?**



**அ) மார்ச் 1 ☑**

ஆ) மார்ச் 2

இ) மார்ச் 3

ஈ) மார்ச் 4

✓ 11 தொழிலாளர்களின் கொடூரமான இறப்புக்கு வழிவகுத்த கொலம்பிய படுகொலையை குறிக்கும் வகையில் மார்ச்.1ஆம் தேதி பன்னாட்டு கழிவு எடுப்பவர்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் உலகெங்கிலும் உள்ள கழிவெடுப்பவர்கள் / மறுசுழற்சி செய்பவர்களுக்கு குரல் மற்றும் அங்கீகாரத்தை வழங்க முற்படுகிறது.

---

**4. நடப்பாண்டில் (2021) வரும் உலக வனவுயிரிகள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) Forests and Livelihoods: Sustaining People and Planet ☑**

ஆ) For people, For planet, For ecosystem

இ) Forests – Pillars for people and planet

ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

WORLD WILDLIFE DAY 3 MARCH

✓ வனவுயிரிகளைக் கொண்டாடுவதற்கும், மனித நடவடிக்கைகள் மற்றும் காலநிலை மாற்றத்தால் வனவிலங்குகளில் ஏற்படும் பாதகமான தாக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் உலக வனவுயிரி நாள் மார்ச்.3 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு (2021), "Forests and Livelihoods: Sustaining People and Planet" என்ற கருப்பொருளின்கீழ் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

---

**5. NADMP என்பதன் முழு வடிவம் என்ன?**

**அ) National Agriculture Disaster Management Plan ☑**



ஆ) Ninth Agriculture Disaster Management Plan

இ) New Agriculture Disaster Management Plan

ஈ) Ninth Agriculture Disaster Mitigation Planning

✓ வறட்சி, வெள்ளம் மற்றும் COVID-19 கொள்ளைநோய்போன்ற திடீர் இயற்கை பேரிடர்களுக்கு சரியான நேரத்தில் பதிலளிப்பதை உறுதி செய்வதில் தேசிய வேளாண் பேரிடர் மேலாண்மை திட்டம் (NADMP) மத்திய வேளாண் அமைச்சகத்திற்கு வழிகாட்ட முயற்சி செய்கிறது.

✓ வேளாண் துறைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் 34 இடர்களை இது அடையாளங்காட்டுகிறது. வெப்ப அலைகள், பூகம்பங்கள், விலங்குகளின் தாக்குதல்கள், பாலைவனமாக்கல், வேளாண் தீ, சூறாவளிகள் மற்றும் இரசாயனங்கள் மீது அதிக சார்பு ஆகியவை இவற்றுள் அடங்கும்.

---

**6.இந்திய கடல்சார் துறையை சீரமைக்கும் நோக்குடன் சமீபத்தில் வெளியிடப்பட்ட உத்தி எது?**



**அ) கடல்சார் இந்தியா தொலைநோக்கு 2030 ☑**

ஆ) கடல்சார் இந்தியா தொலைநோக்கு 2032

இ) கடல்சார் இந்தியா தொலைநோக்கு 2035

ஈ) கடல்சார் இந்தியா தொலைநோக்கு 2040

✓ கடல்சார் இந்தியா தொலைநோக்கு 2030 என்பது இந்திய கடல்சார் துறையை சீரமைக்கும் நோக்கத்துடன் வெளியிடப்பட்ட பத்தாண்டுக்கா -ன உத்தியாகும். இது, ₹3 இலட்சம் கோடி முதலீட்டை ஈர்க்கவும், 20 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும் முயல்கிறது. முக்கிய துறைமுகங்களிலிருந்து ₹20,000 கோடி மதிப்புள்ள ஆண்டு வருவாய்த் திறனை அதிகரிக்கவும் இந்த உத்தி முயல்கிறது.

---

**7. அரோமா திட்டத்தின் ஒருபகுதியாக ஜம்முவில் பயிரிடப்படுகிற மூலிகை எது?**

**அ) லாவெண்டர் ☑**

ஆ) வேர்க்கோசு



இ) புதினா


ஈ) துளசி

✓ 2016ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அரோமா திட்டத்தின் ஒருபகுதியாக ஜம்முவில் லாவெண்டர் பயிரிடப்பட்டுவருகிறது. 'லாவெண்டர்' என்பது மருத்துவ குணங்கள் கொண்ட ஒரு நறுமண மூலிகையாகும். இது, வணிகரீதியாக ஒரு முக்கியமான பயிராக கருதப்படுகிறது, முக்கியமாக அத்தியாவசிய எண்ணெய்களை உற்பத்தி செய்வதற்காக இது பயிரிடப்ப -டுகிறது. ஒரு லிட்டர் லாவெண்டர் அத்தியாவசிய எண்ணெய் 10,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

---

**8. ICLED என்பதன் முழு வடிவம் என்ன?**

**அ) Inter-band cascade light emitting device ☑**



ஆ) Interior-based cascade light emitting diode

இ) Intern link- band inter-band cascade light emitting

ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

✓ ICLED அல்லது Interband cascade light emitting device என்பது ஒரு புதிய வகை உயராற்றல்கொண்ட ஒளி உமிழும் டையோடு ஆகும், அவை பல் வேறு வேதிப்பொருட்களின் அளவுகுப்பாய்வில் பயன்படுத்தப்படுகின்ற -ன. இது இடைநிலை IR அலைநீள பகுதிகளில் ஒளியை வெளியிடுகிற -து. மீத்தேன் உமிழ்வை அதிக துல்லியத்துடன் கண்டறிவதற்கு, மலிவு விலை உணரிகளை உருவாக்க இது சமீபத்தில் பயன்படுத்தப்பட்டது.

---

**9.ஆஸ்திரேலியாவின் கீழைக்கடற்கரையில் அண்மையில் எந்த அரியவகை ஆஸ்திரேலிய தேனீ காணப்பட்டது?**

**அ) Pharohylaeus lactiferous ☑**



ஆ) Apis dorsata

இ) Apis florea

ஈ) Apis cerana indica

✓ *Pharohylaeus lactiferous* என்பது ஓர் அரிய வகை ஆஸ்திரேலிய தேனீ வகையாகும். இது சமீபத்தில் ஆஸ்திரேலியாவின் கீழைக்கடற்கரையில் தென்பட்டது. இது கடைசியாக, ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, 1923'இல் குயின்ஸ்லாந்தில் காணப்பட்டது.

- ✓ இதுவரை அறுவர் மட்டுமே இதனை கண்டறிந்துள்ளனர். காட்டுத்தீ, நில துண்டாடல் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றால் இந்த முதுகெலு –ம்பிலிகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன.

---

**10.இந்தியாவின் மிகப்பெரிய தரைநிலை ஆப்டிகல் தொலைநோக் –கி நிறுவப்பட்டுள்ள மாநிலம் எது?**

**அ) உத்தரகண்ட் ☑**

ஆ) கோவா

இ) கர்நாடகா

ஈ) பஞ்சாப்



- ✓ உத்தரகண்ட் நைனிடால் பகுதியில் உள்ள தேவஸ்தல் என்ற இடத்தில் உலகத்தரத்திலான 3.6 மீட்டர் ஆப்டிக்கல் தொலைநோக்கி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத்தொலைநோக்கி இந்தோ–பெல்ஜிய கூட்டு முயற்சியின் விளைவாகவும், இரஷ்ய அறிவியல் அகாதமி உதவியுடனும் கடந்த 2007'இல் நிறுவப்பட்டதாகும்.
- ✓ தன்னாட்சி ஆராய்ச்சி அமைப்பான ஆர்யபட்டா கூர்நோக்கு அறிவியல் பற்றிய ஆராய்ச்சி நிறுவனத்தால் இந்தத் தொலைநோக்கி இயக்கப்பட உள்ளது. இந்த அமைப்பு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் கீழ் இயங்கி வருகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2019–ம் ஆண்டில் 61 சதவீத வீடுகள், 26 சதவீத உணவு விடுதிகளில் இந்தியர்கள் விரயம் செய்த உணவு 6.80 கோடி டன்: ஐநா ஆய்வு அறிக்கையில் தகவல்**

இந்தியர்கள் 2019–ம் ஆண்டில் 6.80 கோடி டன் அளவில் உணவுகளை விரயம் செய்திருப்பதாக ஐநாவின் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

'உணவு விரயக் குறியீடு 2021' என்று உணவு விரயம் தொடர்பான ஆய்வறிக்கை ஒன்றை ஐநா வெளியிட்டுள்ளது. உலக ளாவிய அளவில் 2019–ம் ஆண்டு 9.31 கோடி டன் அளவில் உணவுகள் விரயம் செய்யப்பட்டுள்ளன. இதில் 61 சதவீதம் வீடுகளிலிருந்தும், 26 சதவீதம் உணவு விடுதிகளிலிருந்தும், 13 சதவீதம் சில்லறை விற்பனையின் மூலமும் விரயம் ஆகியிருப்பதாக அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்திய வீடுகளில் 2019–ம் ஆண்டு 6.80 கோடி டன் அளவில் உணவு விரயம் செய்யப்பட்டு இருக்கிறது. இந்தியாவில் தனி நபர் ஆண்டுக்கு 50 கிலோ உணவை விரயம் செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவில் தனி நபர் ஆண்டுக்கு 59 கிலோ உணவையும், சீனாவில் தனி நபர் ஆண்டுக்கு 64 கிலோ உணவையும் விரயம் செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக உலக அளவில் தயாரிக்கப்படும் உணவில் 17 சதவீதம் விரயம் ஆக்கப்படுகிறது.

பசுமை குடில் வாயு வெளியேற்றத் துக்கு உணவு விரயம் முக்கிய காரண மாக இருக்கிறது என்றும் உணவு விரயத்தைக் குறைப்பதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபாட்டை கட்டுப்படுத்த முடியும் என்றும் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் தொடர்பான அமைப் புத் தெரிவித்துள்ளது. உணவு விரயம் சுற்றுச்சூழலில் மட்டுமல்ல சமூகம் மற்றும் பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறப்பட்டுள்ளது. இதுநாள் வரையில் வளர்ந்த நாடுகளில்தான் உணவு அதிக அளவில் விரயம் செய்யப்படுவதாக நம்பப்பட்டு வந்தது. இந்நிலையில் ஐநாவின் இந்த ஆய்வறிக்கை வளரும் மற்றும் பின் தங்கிய நாடுகளிலும் உணவு அதிக அளவில் விரயம் செய்யப்படுகிறது என்பதைக் காட்டியுள்ளது.

**2. ஜிஎஸ்எல்வி – எஃப்10 ராக்கெட் மூலம் மார்ச் மாத இறுதியில் விண்ணில் பாயும் ஜிஐசாட்–1**

ஜிஎஸ்எல்வி – எஃப்10 ராக்கெட் மூலம் ஜிஐசாட்–1 செயற்கைக் கோள் இம்மாத இறுதியில் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. புவி கண்காணிப்பு, பேரிடர் மீட்பு பணிகளுக்காக ஜிஐசாட்–1 என்ற அதிநவீன 'ஜியோ இமேஜிங்' செயற்கைக் கோளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தயாரித்தது. இதை ஹரிகோட்டாவில் இருந்துஜிஎஸ்எல்வி – எஃப்10 ராக்கெட்மூலம் கடந்த 2020 மார்ச் 5–ம் தேதிவிண்ணில் செலுத்த இஸ்ரோதிட்டமிட்டது. தொழில்நுட்பக் காரணங்களால் ராக்கெட் பயணம்நிறுத்தப்பட்டு, தேதி குறிப்பிடாமல் தள்ளிவைக்கப்பட்டது.

இந்நிலையில், ஜிஐசாட்–1 செயற்கைக் கோளை ஜிஎஸ்எல்வி – எஃப்10 ராக்கெட் மூலம் இம்மாத இறுதியில் விண்ணில் செலுத்த இஸ்ரோ முடிவு செய்துள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகளில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். செயற்கைக் கோள் வடிவமைப்பு, செயல்பாடுகளில் சில தொழில்நுட்ப அம்சங்கள் மாற்றி அமைக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிகிறது. 2,268 கிலோ எடை கொண்டது ஜிஐசாட்–1. இதில் உள்ள 5 விதமான 3டி கேமராக்கள், தொலைநோக்கி மூலம் புவிப் பரப்பை துல்லியமாக பார்க்கவும், படம் எடுக்கவும் முடியும்.

**3. துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப் போட்டி – நடிகர் அஜித் அணி 6 தங்கம், வெள்ளி வென்றது:**

தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் நடிகர் அஜித் அணியினர் 6 தங்கம், வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளனர். நடிகர் அஜித் தற்போது 'வலிமை' படப்பிடிப்பில் கவனம்செலுத்தி வருகிறார். படப்பிடிப்புக்கு இடையே கார், பைக் பந்தயங்களிலும் கவனம் செலுத்தி வருகிறார். சமீபகாலமாக துப்பாக்கி சுடும் போட்டியில் அதிக ஆர்வம் செலுத்தி வந்த அவர் தற்போது அதற்கான போட்டிகளில் கலந்துகொண்டு விருதுகளையும் வென்றுள்ளார். இந்நிலையில், தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடுதல் 46–வதுசாம்பியன்ஷிப் போட்டி சென்னையில் கடந்த 2–ம் தேதி தொடங்கியது. இதில் தமிழ்நாட்டிலிருந்து 900 பேர் பங்கேற்றனர். சென்னை ரைஃபிள் கிளப் அணியில் அஜித் இடம்பெற்றிருந்தார்.

**4. இணையவழியில் சர்வதேச பெண்கள் மாநாடு**

ஐக்கிய நாடுகள் சபை அங்கீகாரம் பெற்ற அலையன்ஸ் கிரியேட்டிவ் கம்யூனிட்டிவ் புரஜெக்ட் மற்றும் கல்லிடைக்குறிச்சி தேசிய கல்வி அறக்கட்டளை இணைந்து நடத்திய சர்வதேச பெண்கள் மாநாடு, மார்ச் 6–ம் தேதி கனடிய நேரம் காலை 8– மணிக்கு ஆரம்பமாகி 11– மணிக்கு நிறைவடைந்தது. மிகவும் நேர்த்தியான முறையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பதினெட்டு நாடுகளை சேர்ந்த, பல் துறை சார்ந்த பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த நவீன காலத்தில் பெண்களை அரசியல் மற்றும் தலைமைத்துவத்தில் ஈடுபட ஊக்குவித்தல் என்னும் பொருள்படும் தலைப்பில், இன்றைய 21–ம் நூற்றாண்டிலும் பெண்கள் எதிர்நோக்கும் பல பிரச்சனைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

குழு விவாதத்தில், குறிப்பாக யுத்தம் காரணமாக சிரியா, காஷ்மீர், இலங்கை மற்றும் மியான்மர் போன்ற நாடுகளில் லட்சக்கணக்கான பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளதுடன் அவர்களே பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அத்துடன் இன்னும் பல நாடுகளில் அடிப்படை கல்வி உரிமை கூட பெண்களுக்கு மறுக்கப்படுகின்றதுடன், பல சித்திரவதைகளுக்கு ஆளாகின்ற நிலைமை தொடர்பிலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டது. சர்வதேச ரீதியாக பெண்கள் ஒன்றிணைந்து பலமான அமைப்பாக பெண்களுக்கான உரிமை தொடர்பில் கவனம் செலுத்துவதுடன் உலகளவில் பிரச்சாரம் ஒன்றை மேற்கொள்ளுவது காலத்தின் தேவையாக இருக்கின்றது என கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. அதேவேளை பெண்கள் பொதுத்துறையில் ஈடுபடுவது அதிகரித்துள்ளது எனினும் அவர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுத்தே முன்னுக்கு வர வேண்டியிருக்கின்றது.

அவர்கள் மனரீதியான தாக்கங்கள் மற்றும் வெளியில் எதிர்நோக்கும் அவலங்களை மிக உறுதியுடன் கடந்து வரும் பட்சத்தில் பல முன்னேற்றங்களை காண முடியும். அத்துடன் மற்ற பெண்களையும் வழி நடத்த முடிவதுடன் தொடர்ந்து பல கருத்தரங்குகள் நடத்துவதன் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்தி , பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் விதவை பெண்கள் வாழ்வில் மாற்றம் ஏற்பட உலகளாவிய ரீதியில் பெண்கள் பாடுபட வேண்டும் என்ற ஆலோசனையுடன் சர்வதேச பெண்கள் மாநாடு நிறைவடைந்தது.

**5. அகில இந்திய அளவில் ராஜஸ்தான் முதலிடம்; கரோனா தடுப்பூசி போடுவதில் 9–வது இடத்தில் தமிழகம்**

இந்தியாவில் கரோனா தடுப்பூசி போடுவதில் தமிழகம் 9–வது இடத்தில் உள்ளது. ராஜஸ்தான் முதல் இடத்தையும் குஜராத் 2–வது இடத்தையும், மகாராஷ்டிரா 3–வது இடத்தையும் பிடித்துள்ளன. இந்தியாவில் கரோனா பரவலைதடுக்க கோவேக்ஸின், கோவிஷீல்டு தடுப்பூசிகள் கடந்த ஜனவரி 16–ம் தேதி முதல் போடப்பட்டுவருகிறது. முதலில் முன்களப் பணியாளர்களுக்கும், கடந்த 1–ம் தேதிமுதல் 60 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் 45 வயதுக்கு மேற்பட்ட இணை நோய் பாதிப்பு உள்ளவர்களுக்கும் தடுப்பூசி போடும் பணிதொடங்கியது.

தமிழகத்தில் 1,300–க்கும் மேற்பட்ட அரசு, தனியார் மருத்துவமனைகளில் தடுப்பூசி போடப்படுகிறது. தனியார் மருத்துவமனையில் ரூ.250 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் மகாராஷ்டிரா, கர்நாடகா, கேரளா, தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் தொற்றுமீண்டும்

அதிகரிப்பதால் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தடுப்பூசி போடும் பணிகளை விரைவுபடுத்துமாறு மாநிலஅரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

மத்திய சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள புள்ளிவிவர அறிக்கையில், "மார்ச் 7-ம்தேதி (நேற்று) காலை 7 மணி நிலவரப்படி நாடு முழுவதும் இதுவரைமுதல் தவணையாக 1 கோடியே71 லட்சத்து 68,303, இரண்டாம்தவணையாக 37 லட்சத்து 54,041 என 2 கோடியே 9 லட்சத்து 22,344டோஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அதிகபட்சமாக ராஜஸ்தானில் 21.31 லட்சம், குஜராத்தில் 17.65 லட்சம், மகாராஷ்டிராவில் 17.44 லட்சம், உத்தர பிரதேசத்தில் 17.12 லட்சம், மேற்கு வங்கத்தில் 15.81 லட்சம் டோஸ் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. தமிழகம் 9-வது இடத்தில் உள்ளது.

**6. சா்வதேச மல்யுத்தம்: வினேஷுக்கு தங்கம்**

மேட்டியோ பெலிகோன் தரவரிசை சா்வதேச மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் வினேஷ் போகாட் மகளிருக்கான 53 கிலோ பிரிவில் தங்கப் பதக்கம் வென்றாா். இந்த வெற்றியின் மூலம் தரவரிசையில் உலகின் முதல்நிலை வீராங்கனை இடத்தையும் அவா் எட்டினாா். இறுதிச்சுற்றில் வினேஷ் 4-0 என்ற கணக்கில் கனடாவின் டயானா மேரி ஹெலன் வெய்கரை வீழ்த்தினாா். கடந்த வாரத்தில் கீவில் நடைபெற்ற போட்டியிலும் தங்கம் வென்ற வினேஷுக்கு இது தொடா்ந்து 2-ஆவது தங்கமாகும். இப்போட்டியில் வென்ற 14 புள்ளிகளின் மூலம் சா்வதேச தரவரிசையில் வினேஷ் முதலிடம் பிடித்தாா். முன்னதாக 3-ஆம் இடத்தில் இருந்த நிலையில் அவா் இப்போட்டியில் பங்கேற்றிருந்தாா்.

ஆடவருக்கான 65 கிலோ பிரிவில் பஜ்ரங் புனியா தனது அரையிறுதியில் அமெரிக்காவின் ஜோசப் கிறிஸ்டோபா் மெக்கென்னாவை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினாா். அதில் அவா் மங்கோலியாவின் துல்கா துமுா் ஒசிரை எதிா்கொள்கிறாா். 74 கிலோ பிரிவில் இந்தியாவின் நா்சிங் பஞ்சம் அரையிறுதியில் ஜோா்டானின் எா்னெஸ்ட் புரோஸிடம் தோல்வி கண்டாா்.

**7. கத்தார் ஓபன் டென்னிஸ் : குவித்தோவா சாம்பியன்**

கத்தார் டோட்டல் ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், செக் குடியரசின் பெத்ரா குவித்தோவா 2வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றார். இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீராங்கனை கார்பினி முகுருசாவுடன் (16வது ரேங்க், 27 வயது) நேற்று மோதிய குவித்தோவா (10வது ரேங்க், 30 வயது) 6-2, 6-1 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்று கோப்பையை முத்தமிட்டார். இப்போட்டி 1 மணி, 6 நிமிடத்திலேயே முடிவுக்கு வந்தது. 2018ல் நடந்த இத்தொடரின் பைனலிலும் குவித்தோவா 3-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் முகுருசாவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றிருந்தார். அந்த போட்டி 2 மணி, 16 நிமிடத்துக்கு நீடித்தது குறிப்பிடத்தக்கது. குவித்தோவா தனது டென்னிஸ் வாழ்க்கையில் வென்ற 28வது சாம்பியன் பட்டம் இது.

**8. மத்திய அரசின் சுகாதாரத் திட்டங்களால் ஏழை, நடுத்தரக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.50,000 கோடி சேமிப்பு: 7,500-வது மக்கள் மருந்தகத்தை நாட்டுக்கு அர்ப்பணித்து பிரதமர் மோடி பெருமிதம்**

மக்கள் மருந்தகம், மருத்துவ காப்பீடு உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு சுகாதாரத் திட்டங்களால் ஏழை குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.50,000 கோடி மிச்சமாகிறது என்று பிரதமர் மோடி தெரிவித்தார். நாட்டு மக்கள் அனைவருக்கும் குறிப்பாக ஏழைகளுக்கு தரமான மருந்துகள் குறைவான விலையில் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, பிரதம மந்திரி பாரதிய ஜன்அவுஷாதி பரியோஜனா என்ற திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்தது. இந்த திட்டத்தின் கீழ் மக்கள் மருந்தகங்கள் நாடு முழுவதும் திறக்கப்பட்டன.

சந்தைவிலையை விடவும் 50 முதல் 90 சதவீதம் குறைந்த விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் மார்ச் 1 முதல் 7 வரையில் 'மக்கள் மருந்தக வாரம்' கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி கடந்த ஒரு வாரமாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதன் ஒரு பகுதியாக, சிம்லா, போபால், அகமதாபாத், மங்களூரு மற்றும் டையுவில் உள்ள மாருதி நகர் ஆகிய 5 நகரங்களில் மக்கள் மருந்தக மையங்களில் உள்ள பயனாளிகளுடன் பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொலி மூலம் கலந்துரையாடினார்.

மேலும் மேகாலயா மாநிலம் ஷில்லாங் நகரில் உள்ள 'நார்த் ஈஸ்டர்ன் இந்திரா காந்தி ரீஜனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹெல்த் சயின்ஸ்' நிறுவனத்தில், நாட்டின் 7,500-வது மக்கள் மருந்தகத்தை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

**9. கரோனா வைரஸ் தொற்று நோயால் இந்திய குழந்தைகளின் உடல்நலம், மனநலம் பாதிப்பு: யுனிசெப் அறிக்கையில் தகவல்**

ஐ.நா. சர்வதேச குழந்தைகள் நல நிதியம் (யுனிசெப்) வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறி யிருப்பதாவது: கரோனா காலத்தில் பள்ளிகள் மூடப்பட்டதால் குழந்தைகள் கல்வி பாதிக்கப்பட்டது. குழந்தை கள் தங்கள் சகாக்களுடன் கலந்துரையாடுவது குறைந்தது. இது பெற்றோர்களுக்கும் மன அழுத்தத்தை ஏற்படுத்தியது. இந்தியாவில் 5 கோடி குழந்தைகள் தொற்று நோய்க்கு முன்பே மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தனர். கரோனா பரவத் தொடங்கியதில் இருந்து உலக அளவில் ஏழு குழந்தைகளில் ஒருவர் அல்லது 33.2 கோடி குழந்தைகள் குறைந்தபட்சம் 9 மாதங்களுக்கு வீட்டிலேயே தங்க நேரிட்டது.

இது அவர்களின் உடல்நலம் மற்றும் மனநலனுக்கு ஆபத்தை ஏற்படுத்தியது. இந்தியாவிலும் இது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆசிரியர்கள், பெற்றோர் களிடம் இருந்து குழந்தைகளுக்கு உளவியல் ஆதரவு மிகவும் அவசியம். குழந்தைகளும் அவர்களை பராமரிப்பவர்களும் மன அழுத்தம், பயம், பதற்றம் ஆகியவற்றில் இருந்து விடுபட உதவும் கட்டமைப்புகளை பலப்படுத்த வேண்டும். கரோனா காலத்தில் இந்தியாவில் குழந்தைகளுக்கு உளவியல் ஆதரவு அளிக்க 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட செயற்பாட்டாளர்களுக்கு யுனிசெப் பயிற்சி அளித்தது.

17 மாநிலங்களில் 4,46,180குழந்தைகள், இளம் பருவத்தினர் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு உளவியல் ஆதரவு அளிக்கப்பட்டது. 7 லட்சத்துக்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் அரசு சலுகைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் பெறுவதில் யுனிசெப் துணை நின்றது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**10. பழைய வாகனங்களை அழித்தால் புதிதாக வாங்கும் வாகனங்களுக்கு 5% தள்ளுபடி: மத்திய அமைச்சர் நிதின் கட்கரி அறிவிப்பு**

நீண்ட காலமாக பயன்பாட்டில் இருக்கும் பழைய வாகனங் களினால் சுற்றுச்சூழல் மாசு அதிகரிக்கிறது. இந்நிலையில் 20 ஆண்டுகளுக்கு மேலாக பயன் பாட்டில் இருக்கும் தனிநபர்களுக்கான வாகனங்களையும், 15 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் இருக்கும் வர்த்தக ரீதியிலானவாகனங்களையும் பயன்பாட்டில் இருந்து நீக்க மத்திய அரசு முடிவெடுத்து இருக்கிறது. இந்நிலையில் பழைய வாகனங்களை அழிக்க முன்வரும் வாடிக்கையாளர்களுக்கு சில சலுகைகளை மத்திய அரசு அறிவித்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாகவே பழைய வாகனங்களை அழிக்கும் வாடிக்கையாளர்களுக்கு புதிதாக வாகனங்கள் வாங்கும் போது 5 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும் என்று மத்திய அமைச்சர் நிதின் கட்கரி அறிவித்துள்ளார். பழைய வாகனங்களை பயன்பாட்டிலிருந்து நீக்குவது தொடர்பான மத்திய அரசின் திட்டத்தால் இந்திய வாகனத் துறையின் வருவாய் 30 சதவீதம் அளவு உயரும் என்று நிதின் கட்கரி தெரிவித்தார். 'தற்போது இந்திய வாகனத் துறையின் ஆண்டு வருவாய் ரூ.4.5 லட்சம் கோடியாக உள்ளது. வரும் ஆண்டுகளில் வருவாய் ரூ.10 லட்சம் கோடியாக உயரும் என்று அவர் கூறினார்.

இந்தத் திட்டத்தின் மூலம் வாகனத் துறையில் ரூ.10,000 கோடி அளவில் புதிய முதலீடு களும், 50,000 அளவில் வேலை வாய்ப்புகளும் உருவாகும் என்றும் அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

**11. நவீன தொழில்நுட்பத்தில் வெள்ள அபாய எச்சரிக்கை**

உடுமலை அருகேஉள்ள, திருமூர்த்திமலை பஞ்சலிங்கம் அருவியில், நவீன தொழில்நுட்பத்தில், வெள்ள அபாய எச்சரிக்கை கருவி பொருத்தப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகேயுள்ள திருமூர்த்திமலையில், அமணலிங்கேஸ்வரர் கோவில், பஞ்சலிங்கம் அருவி, வண்ண மீன் பூங்கா, திருமூர்த்தி அணை என, சுற்றுலா மற்றும் ஆன்மிக தலமாக உள்ளது. மேற்கு தொடர்ச்சி மலைத்தொடர்களில் பெய்த கன மழையால், 2008, மே 25ல், திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, 13 பேர் இறந்தனர். மாவட்ட பேரிடர் மேலாண்மைத் துறை, வளம் மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், முழுதும் நவீன தொழில்நுட்பத்தில், தானியங்கி முறையில், முதல் முறையாக, அருவியில் வெள்ள அபாய எச்சரிக்கை கருவி பொருத்தப்பட்டுள்ளது.

இதை வடிவமைத்த, ஆராய்ச்சியாளர் பிராங்க்ளின் கூறுகையில், "வெள்ளப்பெருக்கு ஏற்படுவதை, தானியங்கி முறையில் எச்சரிக்கும் வகையில், கருவி வடிவமைக்கப்பட்டு உள்ளது."காட்டாறுகளில் நீர் வரத்து அதிகரித்தால், கட்டுப்பாட்டு மையம், கோவில் அலுவலகத்துக்கு தகவல் தெரிவிக்கும். வனச்சூழல் பாதிக்காத வகையில், சோலார் மின்சாரம் வழியாக, இக்கருவிகள் இயங்குகின்றன," என்றார்.

**1.** ADFOSC என்பதன் விரிவாக்கம் என்ன?

**அ) Aries–Devasthal Faint Object Spectrograph & Camera ☑**



ஆ) Aries–Devasthal Faint Object Scanning Camera

இ) Aries–Devasthal Faded Object Scanning Camera

ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

✓ ADFOSC அல்லது Aries–Devasthal Faint Object Spectrograph & Camera என்பது மலிவுவிலை ஆப்டிகல் நிறமாலைகாட்டியாகும். இது, நைனிடா–ல், ARIES அறிவியலாளர்களால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட–தாகும். இந்த நிறமாலைகாட்டி, தொலைதூர குவாசாக்கள், விண்மீன் திரள்கள் போன்றவற்றைக் கண்டறிய தேவஸ்தால் ஆப்டிகல் தொலை–நோக்கிக்கு உதவும்.

**2.** 'உலக செவித்திறன் அறிக்கை'யை வெளியிட்ட அமைப்பு எது?

**அ) WHO ☑**

ஆ) FAO

இ) IMF

ஈ) ADB

✓ உலக நலவாழ்வு அமைப்பானது (WHO) கேட்புத்திறன் தொடர்பான முதல் அறிக்கையை அண்மையில் வெளியிட்டது. இது, மார்ச்.3 அன்று உலக செவித்திறன் நாளை முன்னிட்டு வெளியிடப்பட்டது. இந்த அறிக்–கையின்படி, உலகளவில் கிட்டத்தட்ட 2.5 பில்லியன் மக்கள், அதாவது நான்கில் ஒருவர், வரும் 2050'க்குள் ஓரளவு செவித்திறன் இழப்புடன் வாழ்வார்கள். அவர்களுள் 700 மில்லியன்பேருக்கு செவிப்புலன் மற்றும் மறுவாழ்வு சேவைகளுக்கான அணுகல் தேவைப்படும்.

**3.** பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் சமூக மற்றும் கல்வி நிலைமைகள் குறித்து அதன் முதல் ஆய்வை நடத்தவுள்ள மாநிலம் எது?

அ) ஹரியானா

**ஆ) ஒடிஸா ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

✓ ஒடிஸா மாநில அரசாங்கம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் சமூக மற்றும் கல்வி நிலைமைகள் குறித்த முதல் மாநில ஆய்வைத்தொடங்கவுள்ளது. அம்மாநிலத்தில் கிட்டத்தட்ட 209 சமூகத்தினர் சமூகம் மற்றும் கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இனங்காணப்பட்டுள்ளனர். அது, மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையில் 54 சதவீதத்தை உள்ளடக்கிய–தாகும். இதற்கு ஒடிஸா மாநில பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

**4.** WAN IFRAஆல் '2020ஆம் ஆண்டின் சாம்பியன் வெளியீட்டாளர்' என்று அறிவிக்கப்பட்ட வெளியீட்டு நிறுவனம் எது?

**அ) தி ஹிந்து ☑**

ஆ) எக்ஸ்பிரஸ் வெளியீட்டு நிறுவனம்

இ) தினத்தந்தி

ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

✓ WAN IFRA'இன் தெற்காசிய டிஜிட்டல் மீடியா விருதுகளில், 'தி ஹிந்து' குழுமம் 2 தங்கங்களையும் 2 வெள்ளிகளையும் வென்றது. உலக செய்தி வெளியீட்டாளர்கள் சங்கம் அல்லது WAN–IFRA என்பது உலகில் உள்ள பத்திரிகைகளின் அமைப்பாகும்.

✓ WAN IFRAஆல் '2020ஆம் ஆண்டின் சாம்பியன் வெளியீட்டாளர்' என்று 'தி ஹிந்து' குழு அறிவிக்கப்பட்டுள்ளது. 'தி ஹிந்து'வின் #KeepTheHabit என்ற பரப்புரை 'Best Native Advertising/Branded Content Campaign' பிரிவில் தங்கம் வென்றது. ஸ்போர்ட்ஸ்டாரின் வலைத்தளம் 'சிறந்த வாழ்க்கை முறை, விளையாட்டு, பொழுதுபோக்கு வலைத்தளம் அல்லது அலைப்பேசி சேவைகள்' பிரிவில் தங்கம் வென்றது.

**5.** இந்தியா தலைமையிலான தீர்மானத்தின் அடிப்படையில், UNGA, 2023ஆம் ஆண்டை எந்தச் சிறப்பு ஆண்டாக அறிவித்துள்ளது?

**அ) சர்வதேச தினை ஆண்டு ☑**



ஆ) சர்வதேச முட்டை ஆண்டு

இ) சர்வதேச பால் ஆண்டு

ஈ) சர்வதேச அரிசி ஆண்டு

✓ ஐநா பொது அவையானது வரும் 2023ஆம் ஆண்டை சர்வதேச தினை ஆண்டாக ஒருமனதாக அறிவித்துள்ளது. இது தொடர்பாக ஐநா பொது அவையில் இந்தியா, வங்கதேசம், நேபாளம், நைஜீரியா, ரஷ்யா மற்றும் செனகல் ஆகிய நாடுகள் கொண்டுவந்த தீர்மானத்தை எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளும் ஆதரித்தன.

**6.** சிமிலிபால் உயிர்க்கோள இருப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?

**அ) ஒடிஸா ☑**



ஆ) உத்தரகண்ட்

இ) இராஜஸ்தான்

ஈ) கோவா

✓ சிமிலிபால் உயிர்க்கோள இருப்பகம் என்பது சிமிலிபால் தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை உள்–ளடக்கியதாகும். இது, கிழக்குத்தொடர்ச்சிமலையின் கிழக்கு முனையில் ஒடிஸாவில் அமைந்துள்ளது. 'சிமிலிபால்' என்ற பெயர் இலவம்பஞ்சு மரம் என்று பொருள்படும் 'சிமுல்' என்பதிலிருந்து உருவானதாகும்.

✓ சமீபத்தில், இந்தத் தேசிய பூங்காவில் காட்டுத்தீ ஏற்பட்டு தொடர்ந்து ஒரு வாரகாலமாக எரிந்துவருகிறது.

**7.** 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள்தொகை பிரிவில், 'Ease of Living Index–2020'இன்படி, சிறந்த நகரமாக உருவெடுத்த நகரம் எது?

அ) புனே

ஆ) சண்டிகர்

இ) சென்னை

**ஈ) பெங்களூரு ☑**

✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி வெளியிட்டுள்ள, 'Ease of Living Index–2020'இன்படி பெங்களூரு சிறந்த நகரமாக உருவெடுத்துள்ளது. 2020ஆம் ஆண்டில், மதிப்பீட்டுப் பயிற்சி நடத்தப்பட்ட நகரங்களுக்கான தரவரிசை அறிவிக்கப்பட்டது. மதிப்பீட்டுப் பயிற்சியில் சுமார் 111 நகரங்கள் பங்கேற்றன. இப்பட்டியலில், தமிழ்நாட்–டைச்சார்ந்த சென்னை நான்காவது இடமும், கோயம்புத்தூர் ஏழாவது இடமும் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

✓ பத்து லட்சத்துக்கும் குறைவான மக்கள்தொகைகொண்ட நகரங்களின் பிரிவில் சிம்லா முதலிடத்தில் உள்ளது.

**8.** பாவோ தான் என்பது கீழ்க்காணும் எந்த இந்திய மாநிலத்தில் பயிரிடப்படுகிற அரிசி வகையாகும்?

அ) மேற்கு வங்கம்

**ஆ) அஸ்ஸாம் ☑**



இ) ஒடிஸா

ஈ) கர்நாடகா

✓ 'பாவோ தான்' என்பது இரும்புச்சத்து நிறைந்த சிவப்பு அரிசி வகைகளுள் ஒன்றாகும். இது, அஸ்ஸாம் மாநிலத்தில், பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கில் உள்ள வண்டல் மண்ணில் பயிரிடப்படுகிறது. சமீபத்தில், இந்தச் 'சிவப்பு அரிசி'யின் முதல் சரக்கு அமெரிக்காவிற்கு (USA) அனுப்பப்பட்டது. இவ்வ–ரிசியின் தனித்துவமான அம்சம் என்னவென்றால், இது எந்த இரசாயன உரத்தையும் பயன்படுத்தாமல் வளர்க்கப்படுகிறது.

**9.சமீபத்தில் வெளியிடப்பட்ட நகராட்சி செயல்திறன் குறியீட்டின்படி, 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள்தொகைகொண்ட நகரங்களின் பிரிவில், முதலிடத்தைப் பிடித்த நகரம் எது?**

**அ) இந்தூர் ☑**

ஆ) லக்னோ

இ) சூரத்

ஈ) போபால்

✓ மத்திய அரசானது அண்மையில் நகராட்சி செயல்திறன் குறியீட்டை வெளியிட்டது. இந்தக் குறியீட்டில், 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகைகொண்ட நகரங்களின் பிரிவில், இந்தூர் நகரம் முதலிடத்தைப் பிடித்தது. அதைத்தொடர்ந்து சூரத் மற்றும் போபால் ஆகிய நகரங்கள் உள்ளன. பத்து இலட்சத்துக்கும் குறைவான மக்கள்தொகைகொண்ட நகரங்களின் பிரிவில் புது தில்லி முதலிடத்தைப் பிடித்துள்ளது. அதைத் தொடர்ந்து திருப்பதி மற்றும் காந்திநகர் ஆகிய நகரங்கள் உள்ளன.

---

**10.மத்திய தொழிலகங்கள் பாதுகாப்புப்படையின் (CISF) உதய நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) மார்ச் 5

ஆ) மார்ச் 8

**இ) மார்ச் 10 ☑**

ஈ) மார்ச் 11

✓ மத்திய தொழிலகங்கள் பாதுகாப்புப்படையின் உருவாக்க நாளானது ஆண்டுதோறும் மார்ச்.10 அன்று கொண்டாடப்படுகிறது. கடந்த 1969ஆம் ஆண்டு இதே நாளில், இந்திய நாடாளுமன்ற சட்டத்தின்கீழ் 2,800 படைவீரர்களுடன் CISF உருவாக்கப்பட்டது. இது நேரடியாக, மத்திய உள்துறை அமைச்சகத்தின்கீழ் இயங்கி வருகிறது. CISF'இன் தலைமை –யகம் புது தில்லியில் அமைந்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மார்ச்–8 அன்று பன்னாட்டு பெண்கள் நாள் கொண்டாடப்படுகிறது. மார்ச் 8'ஐ ஏன் கொண்டாடுகிறோம்?**

உலகெங்கும் மார்ச்.8 அன்று சர்வதேச பெண்கள் தினம் கொண் டாடப்படுகிறது. கல்வியில், வேலை வாய்ப்பில், பொதுவெளிகளில் பெண்களுக்கு மறுக்கப்பட்ட பல்வேறு உரிமைகளைப் பெண்கள், இன்றைக்கு போராடிப் பெற்று வருகிறார்கள்.

சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடுவதற்குப் பின்னே, மிக நீண்ட பெண் எழுச்சிக்கான வரலாறு இருக்கிறது. கி.பி. 1789–ம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியின் போது பாரிஸில் பெண்கள் போர்க் கொடி ஏந்தினர். இந்தச் சமுதாயத்தில் பெண்களுக்கு சம உரிமைகள் வேண்டும், உழைப்புக்கேற்ற ஊதியம் வேண்டும், 16 மணி நேர வேலையைக் குறைக்க வேண்டும், வாக்குரிமை வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் பெண்கள் போராட்டத்தில்இறங்கினர். ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தப் போராட்டம் பரவியது.

பெண்கள் வாரிசுகளைப் பெற்றெ டுப்பதற்காகவும், வீட்டு வேலைக் காகவும் மட்டுமே இருப்பதாக எண்ணிக்கொண்டிருந்த காலமாக அன்றைய காலமிருந்தது. பிறகு, பெண்களின் மனதில் விழிப்புணர்வு ஏற்பட ஆரம்பித்தது. 1907–க்குப் பிறகு போராட்டம் தீவிரமானது. டென்மார்க் நாட்டின் கோபன்ஹேகன் நகரில், 1910–ம் ஆண்டு உலக சோஷலிச பெண்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது.

அந்த மாநாட்டில அனைத்து நாட்டிலுள்ள பெண்களும் சேர்ந்து மகளிர் தினம் என்ற ஒன்றை உருவாக்கி, அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றுவலியுறுத்தினார். அத்துடன் பெண்கள்சந்திக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எதிராகப் போராட வேண்டுமென்றும் குரல் கொடுத்தனர்.

பிறகு, ஐக்கிய நாடுகள் சபை, மார்ச் 8–ஐ உலக மகளிர் தினமாக அறிவித்தது. இரண்டு ஆண்டுகள் கழித்து 1977–ல் இது தொடர்பான தீர்மானமும் நிறைவேற் றப்பட்டது. உலகின் முதல் சோஷலிசப் புரட்சி ரஷ்யாவில் 1917–ம் ஆண்டு லெனின் தலைமையில் நடந்தது. அதற்கு முன்னோடியாக மார்ச் 8 அன்று பெண் தொழிலாளர்களின் புரட்சி தொடங்கியது. இதில் ஆண் தொழிலாளர்களும் கலந்து கொண்டார்கள் என்றாலும் பெண்களே பிரதான பங்கு வகித்தனர். இந்தப் புரட்சிதான் ஜார் மன்னர் தனது அரியணையை விட்டிறங்கக் காரணமாக அமைந்தது. அதை நினைவுகூரும் விதமாக மார்ச் 8 தேர்ந்தெடுக்கப்பட்டது.

உலக அளவில், உழைக்கும் வயதில் உள்ள பெண்களில் பாதிப் பேர் மட்டுமே, வேலைக்குச் செல்கின்றனர் என்கிறது ஐ.நா. உழைப்புக்கான உடல் தகுதி, திறன், அறிவுக்கூர்மை இருந்தும் குடும்ப சூழல்களால் வேலைக்குப் போகும் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது. இப்போது உழைக்கும் பெண்களில் குறிப்பிடத்தகுந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. சமுதாயத்தில் ஆணுக்கு நிகராக பெண்களுக்கும் சம உரிமைகள் கிடைக்க வேண்டுமென்பதற்கான போராட்டங்கள் இன்னமும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

---

**2. டெல்லி பள்ளிகளுக்கு தனி கல்வி வாரியம்.**

டில்லிக்கு என, தனி, பள்ளி கல்வி வாரியம் அமைக்க, டில்லி அரசு ஒப்புதல் அளித்துள்ளது. (டெல்லியில் அமைந்துள்ள 2,700 பள்ளிகளுக்காக தனி கல்வி வாரியம் அமைக்க டெல்லி அரசு ஒப்புதல் அளித்துள்ளது.)

டில்லியில், முதல்வர் கெஜ்ரிவால் தலைமையிலான, ஆம் ஆத்மி ஆட்சி நடக்கிறது.இங்கு, 1,000 க்கும் அதிகமான அரசு பள்ளிகளும், 1,700 க்கும் அதிகமான தனியார் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பள்ளிகள் அனைத்தும், சி.பி.எஸ்.இ., எனப்படும், மத்திய இடைநிலை கல்வி வாரியத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. டில்லிக்கு என, தனி பள்ளி கல்வி வாரியம் அமைக்க, முதல்வர் கெஜ்ரிவால் விரும்பினார்.

இந்நிலையில், டில்லி அமைச்சரவை கூட்டம், நடந்தது. இதில், டில்லிக்கு, தனி கல்வி வாரியத்தை, வரும் கல்வியாண்டு முதல் அமைக்க, ஒப்புதல் அளிக்கப்பட்டது. இது குறித்து, முதல்வர் கெஜ்ரிவால் கூறியதாவது:டில்லியில், வரும் கல்வியாண்டு முதல், தனி பள்ளி கல்வி வாரியம் அமைக்கப்படும். இதில், 2,025 பள்ளிகள் இணைக்கப்படும். தனி பள்ளி கல்வி வாரியம் அமைக்கப்பட்டால், அரசு பள்ளிகளின் தரத்தை உயர்த்தி, உள்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த முடியும்.இவ்வாறு, அவர் கூறினார்.

---

**3. பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் இம்ரான் கான் வெற்றி.**

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் தேசிய அவையில் 342 இடங்களும் செனட் அவையில் 104 இடங்களும் உள்ளன. கடந்த 3–ம் தேதி செனட் அவையின் 37 இடங்களுக்கு தேர்தல் நடைபெற்றது.

பிரதமர் இம்ரான் கானின் தெஹ்ரிக்–இ–இன்சாப் (பிடிஐ) கட்சிக்கு தேர்தலில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்), முன்னாள் அதிபர் ஆசிப் அலி சர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி அதிக இடங்களைக் கைப்பற்றின.

இதனால் ஆளும் கூட்டணியின் பலம் 47 ஆகக் குறைந்தது. குறிப்பாக, நிதியமைச்சர்அப்துல் ஹபீஸ் ஷேக் செனட் தேர்தலில் தோல்வியை தழுவினார்.

இதனால் பிரதமர் பதவியில் இருந்து இம்ரான் கான் பதவி விலக எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இதைத் தொடர்ந்து தனது அரசின் பலத்தை நிரூபிக்க நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று இம்ரான் கான் அறிவித்தார்.

இதன்படி பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நேற்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப் பட்டது. அவையின் 342 இடங்களில் ஓரிடம் காலியாக உள்ளது. மீதமுள்ள 341 உறுப்பினர்களில் பெரும்பான்மையை நிரூபிக்க 171 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் இம்ரான் கான் அரசுக்கு ஆதரவாக 178 உறுப்பினர்கள் வாக்களித்தனர். ஆளும் பிடிஐ கட்சிக்கு அவையில் 156 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களும் கூட்டணிக் கட்சிகளின் உறுப்பினர்களும் அரசுக்கு ஆதர வாக வாக்களித்தனர். எதிர்க்கட்சி கூட்டணி வாக் கெடுப்பை புறக்கணித்தது.

---

**4. உலகளவில் கிடைக்க கரோனா தடுப்பூசிக்கு காப்புரிமை கூடாது: இந்திய, தென் ஆப்பிரிக்க நாடுகளின் விண்ணப்பத்துக்கு அமெரிக்கா எதிர்ப்பு**

கரோனா பரவல் தடுப்பு சார்ந்த கண்டுபிடிப்புகளின் காப்புரிமை ரத்து செய்யப்பட வேண்டும் என உலக வர்த்தக மையத்தில் இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்கா விண்ணப்பித்துள்ளன. இந்த விண்ணப்பத்தை ஏற்கக்

கூடாது என அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு நான்கு முதன்மை குடியரசு கட்சி செனட்டர்கள் அழுத்தம் கொடுத்துவருகின்றனர்.

இதுகுறித்து அதிபர் ஜோ பைடனுக்கு செனட்டர்கள் எழுதியகடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது, "கரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை வழங்க வேண்டாம் எனவும், அதன்மூலம் அவற்றின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஊக்குவிக்கலாம் எனவும் இந்தியாவும் தென் ஆப்பிரிக்காவும் உலக வர்த்தக மையத்திடம் கோரிக்கை வைத்துள்ளன.அவர்களுடைய கோரிக்கையைஏற்று கண்டுபிடிப்புகளின் காப்புரிமையை ரத்து செய்தால், அமெரிக்க நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் திடீரென்று அதிகரித்துவிடுவார்கள்.

மேலும் அமெரிக்க நிறுவனங்களின் கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமையை ரத்து செய்வதன்மூலம் தாங்கள் பயனடையலாம் என்று பிற நாடுகள் நம்புகின்றன. ஆனால் காப்புரிமையை ரத்து செய்வதன் மூலம் கண்டுபிடிப்புகளுக்கான உத்வேகம் மட்டுப்படும். புதிய கண்டுபிடிப்புகளுக்கான முயற்சிகள் நிறுத்தப்படும் அபாயமும் உள்ளது" என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது மீண்டும் கரோனா பரவல் அதிகரித்துள்ள நிலையிலும், கரோனா தொடர்ந்து உருமாற்றம் பெற்றுவரும் நிலையிலும் தடுப்பூசிகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகளுக்கான ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்பு களும் தொடர்ந்து செயல்படுத் தப்பட வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் காப்புரிமை ரத்து செய்யப்பட்டு யாரும் உற்பத்தி செய்யலாம் என்ற நிலையை உண்டாக்கினால் நோய் காக்கும் தடுப்பூசிகளின் தரம் குறித்த அச்சமும் உண்டாகும். கரோனா பரவலைத் தடுப்பதில் தொடர்ந்து அனைத்து நாடுகளுக்கும் உதவிகளை அமெரிக்கா மேற்கொண்டுவருகிறது. அப்படியிருக்க அமெரிக்க கண்டுபிடிப்புகளின் காப்புரிமையை ரத்து செய்வதை ஒப்புக்கொள்வது கரோனா பரவலைத் தடுப்பதில் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கே எதிரானதாக மாறிவிட வாய்ப்புள்ளது. எனவே இந்த கோரிக்கைக்கு அமெரிக்கா ஒப்புக்கொள்ளக் கூடாது என்று அவர்கள் அதிபர் ஜோ பைடனிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

---

**5. ஹாங்காங் தேர்தல் முறையில் மாற்றம் – சீனாவுக்கு அமெரிக்கா கடும் கண்டனம்.**

ஹாங்காங் மீதான தனது பிடியை இறுக்கும் விதமாக சீனா அங்கு சர்ச்சைக்குரிய தேசிய பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்தியது.

இங்கிலாந்தின் காலனி ஆதிக்கத்தின் கீழிருந்த ஹாங்காங் தற்போது சீனாவின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே சீனாவிடமிருந்து ஜனநாயக உரிமைகள் கோரி ஹாங்காங்கில் நீண்ட காலமாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

சமீபத்திய ஆண்டுகளில் சீன அரசுக்கு எதிரான இந்த போராட்டங்கள் மிகவும் வலுப்பெற்றதால், ஹாங்காங் மீதான தனது பிடியை இறுக்கும் விதமாக சீனா அங்கு சர்ச்சைக்குரிய தேசிய பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்தியது.

இந்த நிலையில் ஹாங்காங்கில் தனது அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தும் விதமாக ஹாங்காங் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வர உள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

தனது முடிவுகளில் உலக நாடுகள் தலையிடவேண்டாம் என்று சீனப் பிரதமர் லீ கச்சியாங் (Li Keqiang) எச்சரித்துள்ளார்.

சீன நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இதுதொடர்பான வரைவு திட்டத்தில், 'தேசபக்தா்கள்' மட்டுமே ஹாங்காங் சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடுவதை உறுதி செய்வது; ஹாங்காங் அரசின் தலைமை நிா்வாகியைத் தோ்ந்தெடுக்கும் சீன ஆதரவு தேர்தல் குழு உறுப்பினா்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது; அந்தக் குழுவால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் பேரவை உறுப்பினா்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது போன்ற அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் சீன அரசின் இந்த நடவடிக்கை ஹாங்காங் ஜனநாயகம் மீதான நேரடி தாக்குதல் என கூறி அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

---

**6. சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகி 50 ஆண்டுகள் நிறைவு: கவாஸ்கருக்கு கிரிக்கெட் வாரியம் பாராட்டு.**

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனும், தலைசிறந்த பேட்ஸ்மேன்களில் ஒருவருமாக விளங்கிய சுனில் கவாஸ்கர் 1971–ம் ஆண்டு மார்ச் 6–ந் தேதி போர்ட் ஆப் ஸ்பெயினில் தொடங்கிய வெஸ்ட்இண்டீசுக்கு எதிரான 2–வது டெஸ்ட் போட்டியின் மூலம் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அறிமுகம் ஆனார்.

71 வயதான கவாஸ்கர் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகி 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி இந்திய கிரிக்கெட் வாரியம் சார்பில் அவருக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டது.

இந்திய கிரிக்கெட் வாரிய செயலாளர் ஜெய் ஷா

---

**7. ஹிமாச்சல பிரதேச மாநிலம், தர்மசாலாவில் உள்ள, சோனல் மருத்துவமனையில், திபெத் புத்த மத தலைவர் தலாய் லாமாவுக்கு, நேற்று (06.03.2021) கொரோனா தடுப்பூசி போடப்பட்டது.**

---

**8. செவ்வாய் கிரகத்தில் நாசாவின் ரோவர் சோதனை ஓட்டம் வெற்றி**

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம், நாசா செவ்வாய் கிரகத்தில் ஆராய்ச்சி நடத்துவதற்காக பெர்செவரன்ஸ் என்ற ரோபோ ரோவரை அனுப்பியது.

இந்த ரோவர், செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்து இருக்கின்றனவா என்பது குறித்து ஆராய்வதுடன், அங்குள்ள பாறைகளை துளையிட்டு அதன் துகள்களை சேகரித்து பூமிக்கு அனுப்பி வைப்பதில் முக்கிய பங்காற்றும்.

இந்த ரோவர் கடந்த மாதம் (பிப்ரவரி) 18–ந்தேதி செவ்வாயில் ஜெசிரோகிரேட்டர் என்ற பள்ளத்தில் தரை இறங்கியது. அது தரை இறங்கும் தருணத்தை காட்டும் வீடியோ வெளியாகி உலகை வியப்பில் ஆழ்த்தியது.

இந்த நிலையில், நாசாவின் ரோவர் தனது முதல் சோதனை ஓட்டத்தை செவ்வாயில் 4–ந்தேதியன்று வெற்றிகரமாக நடத்தி இருக்கிறது. செவ்வாய் நிலப்பரப்பில் 6.5 மீட்டர் தொலைவுக்கு இந்த ரோவர் சென்று இருக்கிறது.

இந்த சோதனை ஓட்டம் 33 நிமிடங்களுக்கு நீடித்தது என நாசா வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ரோவர், தனது ஆய்வுப்பணிகளை தொடங்குவதற்கு முன்னதாக இது ஒரு முக்கிய மைல் கல்லாக பார்க்கப்படுகிறது.

இதுபற்றி நாசா கூறுகையில், "ரோவரில் உள்ள ஒவ்வொரு அமைப்பும், அதன் துணை அமைப்பும், உபகரணங்களும் செயல்படுவதை அளவீடு செய்வதற்கான வாய்ப்பாக இந்த சோதனை ஓட்டம் அமைந்துள்ளது" என கூறியது.

---

**9. மிசோரம் மாநில அரசுக்கு மியான்மர் கோரிக்கை**

மியான்மரிலிருந்து அகதிகளாக ஓடி வந்துள்ள எட்டு போலீஸ்காரர்களை ஒப்படைக்கும்படி, மிசோரம் மாநில அரசுக்கு, மியான்மரின் ராணுவ அரசு கடிதம் எழுதியுள்ளது.

தென் கிழக்கு ஆசிய நாடான மியான்மரில், ஆட்சியை ராணுவம் கைப்பற்றியது. இதை எதிர்த்து, மியான்மரில் மக்கள் தினமும் போராட்டம் நடத்தி வருகின்றனர். நம் நாட்டின் வடகிழக்கு மாநிலமான மிசோரமுடன், 510 கி.மீ., எல்லையை, மியான்மர் பகிர்ந்து கொண்டுள்ளது. ராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து, மியான்மரில் இருந்த மக்கள், அகதிகளாக பல நாடுகளுக்கு செல்ல துவங்கியுள்ளனர்.

---

**10. ஓட்டளிக்க தகுதியான 11 ஆவணங்கள்**

வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள், 11 ஆவணங்களில், ஏதேனும் ஒன்றை காண்பித்து, ஓட்டு போடலாம்' என, தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

அசாம், கேரளா, தமிழகம், மேற்கு வங்கம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு, சட்டசபை பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாநிலங்களில், அனைத்து சட்டசபை தொகுதிகளிலும், புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஓட்டளிக்க வரும்போது, தங்கள் அடையாளத்தை நிரூபிக்க, வாக்காளர் அடையாள அட்டையை காண்பிக்க வேண்டும். வாக்காளர் அட்டை இல்லாதவர்கள்,

ஓட்டு அளிக்க முடியாத நிலை ஏற்படக் கூடாது என்பதற்காக, 11 ஆவணங்களில், ஏதேனும் ஒன்றை காண்பித்து ஓட்டளிக்கலாம் என, தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

1. ஆதார்
2. தேசிய ஊரக வேலை திட்ட அடையாள அட்டை
3. வங்கி, தபால் அலுவலக கணக்கு புத்தகம்
4. தொழிலாளர் துறை வழங்கியுள்ள, சுகாதார காப்பீட்டு திட்டம்
5. ஓட்டுனர் உரிமம்
6. பான் கார்டு
7. தேசிய மக்கள் தொகை பதிவேடு அட்டை
8. இந்திய பாஸ்போர்ட்
9. புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்
10. மத்திய, மாநில அரசுகள் வினியோகித்துள்ள அடையாள அட்டை
11. எம்.பி., – எம்.எல்.ஏ., அடையாள அட்டை

இந்த 11 அட்டைகளில் ஏதேனும் ஒன்றை காண்பித்து ஓட்டளிக்கலாம். இவ்விபரங்களை, வாக்காளர்கள் அறிந்து கொள்ள, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தேர்தல் கமிஷன் அறிவுறுத்தி உள்ளது.

---

**11. "இராக்கில் ஷியா பிரிவினருக்கான தலைமை மதகுரு அலி அல்–சிஸ்டானியை போப் பிரான்சிஸ் சனிக்கிழமை (05.03.2021) சந்தித்துப் பேசினாா்.**

அந்தச் சந்திப்பின்போது, நாட்டில் நீண்டகாலமாக வசித்து வரும் கிறிஸ்தவா்களுடன் பெரும்பான்மை முஸ்லிம்கள் இணக்கமாக வாழ வேண்டியதன் அவசியத்தை இருவரும் வலியுறுத்தினா். இதுகுறித்து ஏ.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: ஷியா பிரிவினருக்கான தலைமை மதகுரு அலி அல்–சிஸ்டானியை (90) நஜ்ஃப் நகா், உா் சமவெளியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் போப் பிரான்சிஸ் சனிக்கிழமை சந்தித்தாா். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த சந்திப்புக்கு பல மாதங்களாக திட்டம் தீட்டப்பட்டு வந்தது. அல்–சிஸ்டானியின் இல்லத்தை போப் பிரான்சிஸ் நெருங்கியபோது, சமாதானத்தின் அடையாளமாக வெள்ளைப் புறாக்கள் பறக்கவிடப்பட்டன. 40 நிமிஷங்களுக்கு நீடித்த அந்தச் சந்திப்பின்போது, இராக்கிய கிறிஸ்தவா்களைப் பாதுகாப்பதில் மத விவகாரங்கள் தொடா்பான அதிகாரிகளுக்கு முக்கியப் பங்குள்ளதாக அல்–சிஸ்டானி தெரிவித்தாா்.

நாட்டில் கிறிஸ்தவா்கள் பாதுகாப்பாகவும் முஸ்லிம்களுக்கு இணையான உரிமைகளுடனும் வசிக்க வேண்டிய அவசியத்தை அவா் வலியுறுத்தினாா். அப்போது பேசிய போப் பிரான்சிஸ், இராக்கில் மிகவும் சிறுபான்மையான, நீண்டகாலமாக துன்புறுத்தப்பட்டு வந்த கிறிஸ்தவா்களுக்கு ஆதவாக குரல் கொடுத்து வருவதற்காக அல்–சிஸ்டானிக்கு நன்றி தெரிவித்தாா் என்று ஏ.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. கரோனா பரவல் மற்றும் பாதுகாப்பு அபாயங்களுக்கு இடையேயும், வெள்ளிக்கிழமை முதல் இராக்கில் போப் பிரான்சிஸ் 3 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளாா்.

---

**12. இந்தியாவுக்கு எதிரான இந்த டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 4 முறை 150 ரன்களுக்குள் ஆட்டமிழந்தது.**

கடந்த 112 ஆண்டுகளில் ஒரு டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 4 முறை 150 ரன்களுக்குள் ஆட்டமிழப்பது இதுவே முதல்முறையாகும். இதற்கு முன்னர் 1909 – இல் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இதேபோன்று ஆட்டமிழந்துள்ளது .

இந்தத் தொடரில் 32 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு, சதத்தையும் விளாசினார் இந்திய வீரர் அஸ்வின். இதன்மூலம் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 30 – க்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு, சதமும் அடித்த முதல் வீரர் என்ற பெருமை அஸ்வின் வசமாகியுள்ளது. மேலும் ஒரு டெஸ்ட் தொடரில் 30 அல்லது அதற்கும் அதிகமான விக்கெட்டுகளை இருமுறை வீழ்த்திய முதல் இந்தியர் என்ற பெருமையும் அஸ்வின் வசமாகியுள்ளது.

இந்த டெஸ்ட் தொடரில் அக்ஸர் படேல் 27 விக்கெட்டுகளை வீழ்த் தியதன் மூலம் அறிமுக டெஸ்ட் தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இந்தியர் என்ற சாதனையை திலீப் தோஷியுடன் பகிர்ந்து கொண்டார். திலீப் தோஷி 1979 – இல் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அறிமுகமாகி 27 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். நான்காவது டெஸ்ட் போட்டியின் 2 – ஆவது இன்னிங்ஸில் 5 விக் கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் டெஸ்ட் போட்டியில் 30 – ஆவது முறையாக 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார் அஸ்வின் , இதன்மூலம் ஓர் இன்னிங்ஸில் அதிகமுறை 5 விக்கெட்டுகள் வீழ்த் தியவர்கள் வரிசையில் இங்கிலாந்தின் ஜேம்ஸ் ஆண்டர்சனுடன் 6 – ஆவது இடத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளார் அஸ்வின்.

8 – ஆவது முறையாக தொடர் நாயகன் விருது. இந்தத் தொடரில் 32 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் தொடர் நாயகன் விருதை வென்றார். டெஸ்ட் போட்டியில் அவர் தொடர் நாயகன் விருதை வெல்வது 8 – ஆவது முறையாகும். இதன்மூலம் டெஸ்ட் போட்டியில் அதிக முறை தொடர் நாயகன் விருதை வென்றவர்கள் வரிசையில் பாகிஸ்தானின் இம்ரான் கான், ஆஸ்திரேலியாவின் ஷேன் வார்ன், நியூஸிலாந்தின் ரிச்சர்ட் ஹேட்லி ஆகியோருடன் 3 – ஆவது இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளார் அஸ்வின். முதலிடத்தில் இலங்கையின் முத்தையா முரளீதரனும் (11 முறை), 2 – ஆவது இடத்தில் தென் ஆப்பிரிக்காவின் ஜாக்ஸ் காலிஸும் (9 முறை) உள்ளனர்.

---

**13. உத்தரகண்ட் பேரிடருக்கு கனமழையும் வெப்பநிலை உயா்வும் காரணமாக இருக்கலாம்.**

உத்தரகண்டில் பனிப்பாறை சரிந்து ஏற்பட்ட திடீா் வெள்ளப் பெருக்குக்கு கனமழையும் சராசரி வெப்பநிலை அதிகரிப்பும் காரணமாக இருந்திருக்கலாம் என்று ஆய்வறிக்கையில் நிபுணா்கள் தெரிவித்துள்ளனா்.உத்தரகண்டின் சமோலி மாவட்டத்தில் பாயும் ரிஷிகங்கா, தௌலிகங்கா நதிகளில் கடந்த மாதம் (பிப்ரவரி) 7– ஆம் தேதி திடீா் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பனிப்பாறைகள் சரிந்ததன் காரணமாக இந்தப் பேரிடா் நிகழ்ந்ததாக நிபுணா்கள் தெரிவித்தனா்.

இத்தகைய சூழலில், பனிப்பாறைகள் சரிந்ததற்கான காரணம் தொடா்பாக சா்வதேச மலைப்பகுதி மேம்பாட்டு மையத்தைச் சோ்ந்த நிபுணா்கள் ஆய்வு நடத்தி வந்தனா். அந்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ளதாவது: பேரிடா் நிகழ்வதற்கு முன்பாக பனிச்சிகரத்தின் உச்சியில் உள்ள பாறையில் விரிசல் ஏற்பட்டுள்ளது. அதனால் பனிப்பாறை சரிந்தது. பனிப்பாறை வேகமாக சரிந்ததன் காரணமாகத் தோன்றிய வெப்பத்தால் பனி உருகி நீரானது. நீரும் மண்துகள்களும் சோ்ந்து திடீா் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

பனிப்பாறையில் நீண்ட நாள்களாக விரிசல் ஏற்பட்டு வந்திருக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 4 முதல் 6–ஆம் தேதி வரை உத்தரகண்டில் கனமழை பெய்தது. சமோலி பகுதி கடல்மட்டத்திலிருந்து உயரமான இடத்தில் இருப்பதால், அங்கு அதீத பனிப்பொழிவு இருந்திருக்க வாய்ப்புள்ளது. அத்தகைய சூழலில், பனிப்பாறை சரிந்ததால் திடீா் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கலாம்.உத்தரகண்டில் சராசரி வெப்பநிலை தொடா்ந்து அதிகரித்து வருகிறது.

சமோலி பகுதியின் சராசரி வெப்பநிலை கடந்த 1980 முதல் 2018–ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் 0.032 டிகிரி செல்ஷியஸ் அதிகரித்துள்ளது.உத்தரகண்டில் நடப்பாண்டு ஜனவரி, வெப்பநிலை மிகுந்ததாக இருந்தது. கடந்த 60 ஆண்டுகால வரலாற்றில் ஜனவரி மாதம் காணப்படாத வெப்பநிலை, நடப்பாண்டு ஜனவரியில் பதிவானது. இதுவும் பேரிடருக்குக் காரணமாக இருந்திருக்கலாம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**14. பிராந்திய மொழிகளில் உயர்நீதிமன்ற தீர்ப்புகள்: குடியரசுத் தலைவர் வலியுறுத்தல்.**

முக்கியத் தீர்ப்புகளை சில உயர் நீதிமன்றங்கள் பிராந்திய அல்லது உள்ளூர் மொழிகளில் வழங்கி வருவதை வரவேற்ற குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், இதேபோன்று மற்ற உயர்நீதிமன்றங்களும் உள்ளூர் மொழிகளில் தீர்ப்புகளை மொழி பெயர்த்து வழங்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அகில இந்திய சட்ட கல்வி இயக்குநர்கள் மாநாடு மத்திய பிரதேசம் மாநிலத்தில் சனிக்கிழமை (05.03.2021) தொடங்கியது . இரண்டு நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டைத் தொடக்கி வைத்து குடியரசுத் தலைவர் ஆற்றிய உரை: பொது முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளை உச்சநீதிமன்றம் 9 பிராந்திய மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட்டு வருவது வரவேற்கத்தக்கது . சில உயர்நீதிமன்றங்களும் முக்கிய தீர்ப்புகளை பிராந்திய அல்லது உள்ளூர் மொழிகளில் வெளியிட்டு வருகின்றன. இதேபோல், பிற உயர்நீதிமன்றங்களும் முக்கிய தீர்ப்புகளை

உள்ளூர் மொழிகளில் மொழி பெயர்த்து வழங்க வேண்டியது அவசியம், என்றார்.

**15. சிஐஐ தலைவராக சி.கே.ரங்கநாதன் தேர்வு.**

இந்தியத் தொழிலகக் கூட்டமைப்பின் (சிஐஐ) தென் பிராந்தியத் தலைவராக கெவின்கேர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான சி.கே.ரங்கநாதன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். துணைத் தலைவராக பாரத் பயோடெக் நிறுவனத்தின் இணை நிறுவனரான சுசித்ரா கே.எல்லா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**16. மத்திய அரசின் சுகாதாரத் திட்டங்களால் ஏழை, நடுத்தரக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.50,000 கோடி சேமிப்பு: 7,500–வது மக்கள் மருந்தகத்தை நாட்டுக்கு அர்ப்பணித்து பிரதமர் மோடி பெருமிதம்.**

மக்கள் மருந்தகம், மருத்துவ காப்பீடு உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு சுகாதாரத் திட்டங்களால் ஏழை குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.50,000 கோடி மிச்சமாகிறது என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் குறிப்பாக ஏழைகளுக்கு தரமான மருந்துகள் குறைவான விலையில் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, பிரதம மந்திரி பாரதிய ஜன்அவுஷாதி பரியோஜனா என்ற திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்தது. இந்த திட்டத்தின் கீழ் மக்கள் மருந்தகங்கள் நாடு முழுவதும் திறக்கப்பட்டன. சந்தைவிலையை விடவும் 50 முதல் 90 சதவீதம் குறைந்த விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் மார்ச் 1 முதல் 7 வரையில் 'மக்கள் மருந்தக வாரம்' கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி கடந்த ஒரு வாரமாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேகாலயா மாநிலம் ஷில்லாங் நகரில் உள்ள 'நார்த் ஈஸ்டர்ன் இந்திரா காந்தி ரீஜனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹெல்த் சயின்ஸ்' நிறுவனத்தில், நாட்டின் 7,500–வது மக்கள் மருந்தகத்தை பிரதமர் மோடி நேற்றுநாட்டுக்கு அர்ப்பணித்தார்.

பெண்கள் மத்தியில் சுயசார்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில், 1,000–க்கும் மேற்பட்ட மையங்கள் பெண்களால் நடத்தப்படுகின்றன. இந்தமையங்கள் மூலம் இதுவரை 11 கோடி சானிட்டரி நாப்கின்கள் குறைவானவிலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கர்ப்பிணிகளுக்கு தேவையான ஊட்டச்சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன.

இதுதவிர, 75 ஆயுஷ் மருந்துகளும் இந்த மையங்களில் விற்பனை செய்யப்படுகிறது. இதன்மூலம் ஆயுர்வேத மற்றும் ஆயுஷ் மருந்து தேவையையும் இந்த மருந்தகங்கள் பூர்த்தி செய்கின்றன. மக்கள் மருந்தகத் திட்டத்தினால் ஏழை மக்கள் ஆண்டுக்கு ரூ.3,600 கோடி வரை சேமிக்க முடிகிறது.

மருத்துவ காப்பீட்டு திட்டம் (ஆயுஷ்மான் பாரத்) மூலம் 50 கோடி மக்கள் பயனடைகின்றனர். இந்த திட்டத்தின் கீழ் ரூ.5 லட்சம் வரையில் சிகிச்சை எடுத்துக்கொள்ள முடியும்.

இதயத்தில் பொருத்தப்படும் ஸ்டென்ட் போன்ற மருத்துவ உபகரணங்களின் விலையும் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் ஏழை மக்களுக்கு ஆண்டுக்கு ரூ.12,500 கோடிசேமிப்பாகிறது. இதுபோன்ற மத்தியஅரசின் பல்வேறு சுகாதார திட்டங்

களால் ஏழை, நடுத்தர மக்கள் மொத்தமாக ஆண்டுக்கு ரூ.50 ஆயிரம் கோடி வரை சேமிக்க முடியும். மருத்துவசிகிச்சை குறைந்த விலையில் இருக்க வேண்டும் என்பதையும் அவை அனைத்து மக்களுக்கும் சென்று சேரவேண்டும் என்பதையும் இலக்காகக்

கொண்டு மத்திய அரசு கொள்கைகளை உருவாக்கி வருகிறது.மருந்து உற்பத்தித் துறையில் இந்தியா முதன்மை நாடாக திகழ்கிறது. குறிப்பாக, கரோனா தடுப்பூசியை உள்நாட்டிலேயே தயாரித்து இருக்கிறோம். கரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த வேண்டும் என்றநோக்கத்தில், நாடு முழுவதும் உள்ளஅரசு மருத்துவமனைகளில் கரோனா தடுப்பூசி இலவசமாக போடப்படுகிறது.

கடந்த 6 ஆண்டுகளில் புதிதாக180 மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. இதன்மூலம் 2014–ல் நாடுமுழுவதும் 55 ஆயிரம் எம்பிபிஎஸ் இடங்கள் இருந்த நிலையில், இப்போது கூடுதலாக 30 ஆயிரம் இடங்கள் அதிகரித்துள்ளன. அதேபோல மருத்துவ மேற்

படிப்புக்கான இடங்கள் 30 ஆயிரம் ஆகஇருந்தது. இப்போது கூடுதலாக 24 ஆயிரம் இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மக்கள் மருந்தக திட்டம் குறித்து அதிக விழிப்புணர்வை உருவாக்குவதற்காக, மக்கள் மருந்தக வாரம் நாடு முழுவதும் மார்ச் 1 முதல் 7 வரை கொண்டாடப்படுகிறது. 'மக்கள் மருந்தகம்– சேவையும், வேலைவாய்ப்பும்' என்பது இதன் மையக்கருவாகும். வாரத்தின் கடைசி தினமான மார்ச் 7 அன்று மக்கள் மருந்தக தினம் கொண்டாடப்படுகிறது.

**17. ஜிஎஸ்எல்வி – எஃப் 10 ராக்கெட் மூலம் மார்ச் மாத இறுதியில் விண்ணில் பாயும் ஜிஐசாட்–1.**

ஜிஎஸ்எல்வி – எஃப்10 ராக்கெட் மூலம் ஜிஐசாட்–1 செயற்கைக் கோள் இம்மாத இறுதியில் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. புவி கண்காணிப்பு, பேரிடர் மீட்பு பணிகளுக்காக ஜிஐசாட்–1 என்ற அதிநவீன 'ஜியோ இமேஜிங்' செயற்கைக் கோளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தயாரித்தது. இதை ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஜிஎஸ்எல்வி – எஃப் 10 ராக்கெட் மூலம் கடந்த 2020 மார்ச் 5–ம் தேதி விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டது. தொழில்நுட்பக் காரணங்களால் ராக்கெட் பயணம் நிறுத்தப்பட்டு, தேதி குறிப்பிடாமல் தள்ளி வைக்கப்பட்டது.

இந்நிலையில், ஜிஐசாட்–1 செயற்கைக் கோளை ஜிஎஸ்எல்வி – எஃப்10 ராக்கெட் மூலம் இம்மாத இறுதியில் விண்ணில் செலுத்த இஸ்ரோ முடிவு செய்துள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகளில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். செயற்கைக் கோள் வடிவமைப்பு, செயல்பாடுகளில் சில தொழில்நுட்ப அம்சங்கள் மாற்றி அமைக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிகிறது.

2,268 கிலோ எடை கொண்டது ஜிஐசாட்–1. இதில் உள்ள 5 விதமான 3டி கேமராக்கள், தொலைநோக்கி மூலம் புவிப் பரப்பை துல்லியமாக பார்க்கவும், படம் எடுக்கவும் முடியும்.

**18. அகில இந்திய அளவில் ராஜஸ்தான் முதலிடம்; கரோனா தடுப்பூசி போடுவதில் 9–வது இடத்தில் தமிழகம்.**

இந்தியாவில் கரோனா தடுப்பூசி போடுவதில் தமிழகம் 9–வது இடத்தில் உள்ளது. ராஜஸ்தான் முதல் இடத்தையும் குஜராத் 2–வது இடத்தையும், மகாராஷ்டிரா 3–வது இடத்தையும் பிடித்துள்ளன.

இந்தியாவில் கரோனா பரவலைதடுக்க கோவேக்ஸின், கோவிஷீல்டு தடுப்பூசிகள் கடந்த ஜனவரி 16–ம் தேதி முதல் போடப்பட்டுவருகிறது. முதலில் முன்களப் பணியாளர்களுக்கும், கடந்த 1–ம் தேதிமுதல் 60 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் 45 வயதுக்கு மேற்பட்ட இணை நோய் பாதிப்பு உள்ளவர்களுக்கும் தடுப்பூசி போடும் பணிதொடங்கியது. தமிழகத்தில் 1,300–க்கும் மேற்பட்ட அரசு, தனியார் மருத்துவமனைகளில் தடுப்பூசி போடப்படுகிறது. தனியார் மருத்துவமனையில் ரூ.250 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**19. ஆந்திராவில் பள்ளி மாணவிகளுக்கு இலவச சானிட்டரி நாப்கின் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார் ஆந்திர முதலமைச்சர் ஜெகன்மோகன்.**

ஆந்திர மாநிலத்தில் உள்ள அரசு, நகராட்சி, மாநகராட்சி, குருகுலப் பள்ளிகளில் 7–ம் வகுப்பு முதல் இன்டர்மீடியட் (பிளஸ்–2) வரை படிக்கும் அனைத்து மாணவிகளுக்கும் வரும் ஜூலை 1–ம் தேதி முதல் இலவசமாக நாப்கின்கள் வழங்கப்பட வேண்டும். இத்திட்டம் சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8–ம் தேதி தொடங்கப்படும். அதன் பிறகு நாப்கின் கொள்முதல் நடைமுறைகள் முடிந்து, ஜூலை 1–ம் தேதி முதல் மாநிலம் முழுவதும் இத்திட்டம் அமலுக்கு வரும். ஒரு மாணவிக்கு மாதம் 10 நாப்கின்கள் வீதம் ஆண்டுக்கு 120 நாப்கின்கள் வழங்கப்படும். இவ்வாறு ஜெகன்மோகன் கூறினார்.

**20. 2019–ம் ஆண்டில் 61 சதவீத வீடுகள், 26 சதவீத உணவு விடுதிகளில் இந்தியர்கள் விரயம் செய்த உணவு 6.80 கோடி டன்: ஐநா ஆய்வு அறிக்கையில் தகவல்.**

இந்தியர்கள் 2019–ம் ஆண்டில் 6.80 கோடி டன் அளவில் உணவுகளை விரயம் செய்திருப்பதாக ஐநாவின் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது. 'உணவு விரயக் குறியீடு 2021' என்று உணவு விரயம் தொடர்பான ஆய்வறிக்கை ஒன்றை ஐநா வெளியிட்டுள்ளது. உலக ளாவிய அளவில் 2019–ம் ஆண்டு 9.31 கோடி டன் அளவில் உணவுகள் விரயம் செய்யப்பட்டுள்ளன. இதில் 61 சதவீதம் வீடுகளிலிருந்தும், 26 சதவீதம் உணவு விடுதிகளிலிருந்தும், 13 சதவீதம் சில்லறை விற்பனையின்

மூலமும் விரயம் ஆகியிருப்பதாக அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்திய வீடுகளில் 2019-ம் ஆண்டு 6.80 கோடி டன் அளவில் உணவு விரயம் செய்யப்பட்டு இருக்கிறது. இந்தியாவில் தனி நபர் ஆண்டுக்கு 50 கிலோ உணவை விரயம் செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவில் தனி நபர் ஆண்டுக்கு 59 கிலோ உணவையும், சீனாவில் தனி நபர் ஆண்டுக்கு 64 கிலோ உணவையும் விரயம் செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக உலக அளவில் தயாரிக்கப்படும் உணவில் 17 சதவீதம் விரயம் ஆக்கப்படுகிறது.

பசுமை குடில் வாயு வெளியேற்றத் துக்கு உணவு விரயம் முக்கிய காரண மாக இருக்கிறது என்றும் உணவு விரயத்தைக் குறைப்பதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபாட்டை கட்டுப்படுத்த முடியும் என்றும் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் தொடர்பான அமைப் புத் தெரிவித்துள்ளது. உணவு விரயம் சுற்றுச்சூழலில் மட்டுமல்ல சமூகம் மற்றும் பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறப்பட்டுள்ளது.

இதுநாள் வரையில் வளர்ந்த நாடுகளில்தான் உணவு அதிக அளவில் விரயம் செய்யப்படுவதாக நம்பப்பட்டு வந்தது. இந்நிலையில் ஐநாவின் இந்த ஆய்வறிக்கை வளரும் மற்றும் பின் தங்கிய நாடுகளிலும் உணவு அதிக அளவில் விரயம் செய்யப்படுகிறது என்பதைக் காட்டியுள்ளது.

---

**21. ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் 35வது சர்வதேச குத்துச்சண்டையில் தங்கம் வென்றார் இந்தியாவின் மணிஷ் கவுசிக்.**

ஸ்பெயினில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டை தொடரில், 63 கிலோ எடைப்பிரிவில், இந்தியாவின் மணிஷ் கவுசிக் தங்கப்பதக்கம் பெற்றார். ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் 35வது சர்வதேச குத்துச்சண்டை தொடராகும் இது. இதில், ஆண்களுக்கான 63 கிலோ பிரிவு இறுதிக்கு தகுதிபெற்றார் இந்திய வீரர் மணிஷ். அதில், டென்மார்க் நாட்டின் நிகோலாய் டெர்டேரினை எதிர்கொண்டு வீழ்த்தி, தங்கப்பதக்கத்தைப் பெற்றார் மணிஷ் கவுசிக். ஆண்கள் 69 கிலோ பிரிவில், இந்தியாவின் விகாஸ் கிருஷ்ணன் வெள்ளி வென்றார். மற்றபடி, 75 கிலோ பிரிவில் இந்தியாவின் ஆஷிஸ் குமாரும், 57 கிலோ பிரிவில் இந்தியாவின் முகமது ஹுசாமுதீனும், 81 கிலோ எடைப்பிரிவில் சுமித் சங்வானும், 91 கிலோ பிரிவில் இந்தியாவின் சதிஷ் குமாரும் வெள்ளி வென்றனர்.

---

**22. சர்வதேச மல்யுத்த போட்டியில் இந்திய வீராங்கனை வினேஷ் போகத் (53 கி.கி.) தங்கம் வென்றார்.**

இத்தாலி தலைநகர் ரோமில், சர்வதேச மல்யுத்த தொடர் நடக்கிறது. இதில் பெண்களுக்கான 53 கி.கி., எடைப்பிரிவு பைனலில் இந்தியாவின் வினேஷ் போகத், கனடாவின் டயானா மேரி ஹெலன் வீக்கர் மோதினர். அபாரமாக ஆடிய வினேஷ் 4-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார்.

இவர், சமீபத்தில் உக்ரைனில் நடந்த தொடரில் முன்னாள் உலக சாம்பியன் (2017) பெலாரசின் வனேசா கலாட்ஜின்ஸ்கயாவை வீழ்த்தி தங்கம் வென்றிருந்தார். தொடர்ச்சியாக 2 தொடர்களில் தங்கம் வென்ற வினேஷ், உலக தரவரிசையில் 3வது இடத்தில் இருந்து நம்பர் 1 இடத்துக்கு முன்னேறினார்.

---

**23. புர்கா தடைக்கு ஆதரவாக வாக்களித்த சுவிட்சர்லாந்து மக்கள்.**

சுவிட்சர்லாந்தில் பொது இடங்களில் புர்கா அணிவதை தடை செய்யும் சட்டத்திற்கு பொது வாக்கெடுப்பு நடைபெற்றது.

பொது இடங்களில் முகத்தை முழுவதுமாக மறைக்கும் ஆடைகள் அணிவதை தடை செய்யவேண்டுமென்ற நகர்வை ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான சுவிட்சர்லாந்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நேரடியாக இஸ்லாமிய மக்கள் அணியும் புர்காவை இது குறிக்கவில்லை என்றாலும் சில ஐரோப்பிய நாடுகளில் புர்கா தடை விதிக்கப்பட்டுள்ளது. அதை சுவிட்சர்லாந்திலும் நடைமுறைப் படுத்தும் நோக்கில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

சுமார் ஒரு ஆண்டுகாலம் நடந்த விவாதங்களுக்கு பிறகு நடத்தப்பட்ட இந்த வாக்கெடுப்பில் முகத்தை முழுவதுமாக மறைக்கும் ஆடைகள் அணிவதை தடை செய்யவேண்டுமென்ற நகர்வுக்கு 51.2 சதவீத மக்கள் ஆதர்வாக வாக்களித்துள்ளனர். இதனால், பொது இடங்களில் புர்கா அணிவதை சட்ட விரோதம் என வகை செய்யும் வகையிலான சட்டத்தை சுவிட்சர்லாந்து அரசு இயற்றும் எனத்தெரிகிறது.

**24. பழைய வாகனங்களை அழிப்பது தொடர்பாக, மத்திய பட் ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, தனி நபர் பயன்படுத்தும் வாகனங்களுக்கு, 20 ஆண்டுகளுக்குப் பிறகும், வர்த்தக வாகனங்களுக்கு, 15 ஆண்டுகளுக்குப் பிறகும், தகுதிச் சான்று பெறவேண்டும். தகுதியில்லாத வாகனங்கள் அழிக்கப்படும். "பழைய வாகனங்கள் அழிக்கப் படும்போது, புதிய வாகனம் வாங்கினால், அதன் விலையில், 5 சதவீத தள்ளுபடி சலுகை வழங்கப்படும். என மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.**

---

**25. துப்பாக்கி சுடுதலில் தங்கம் வென்ற நடிகர் அஜித்.**

தமிழக அளவிலான, 46வது துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில், 10 மீட்டர் பிஸ்டல் பிரிவில் அஜித் தங்கம் வென்றுள்ளார். மார்ச், 3 முதல், 7 வரை நடந்த இந்த போட்டியில் தமிழகம் முழுதும் இருந்து, 900 வீரர்கள் பங்கேற்றனர்.

---

**26. கத்தார் ஓபன் டென்னிஸ் போட்டியில் செக் குடியரசின் பெட்ரா குவிட்டோவா – ஸ்பெயினின் கார்பின் முகுருசாவை வீழ்த்தி சாம்பியன் ஆனார்.**

---

**27. கே.பி.சர்மா ஒலி – பிரசண்டா தலைமையிலான கட்சிகளின் இணைப்பு ரத்து நேபாள உச்சநீதிமன்றம் அதிரடி.**

நேபாளத்தில் பிரதமர் கே.பி.சர்மா ஒலி, புஷ்பகமல் தாஹால் (பிரசண்டா) ஆகியோர் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி இணைப்பை ரத்து செய்து அந்த நாட்டு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. பிரதமர் கே.பி.சர்மா ஒலி தலைமையிலான நேபாள கம்யூனிஸ்ட் (ஒருங்கிணைந்த மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) கட்சியும் பிரசண்டா தலைமையிலான நேபாள கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) கட்சி யும் கடந்த 2018 – ஆம் ஆண்டு மே மாதம் ஒருங்கிணைக்கப்பட்டு நேபாள கம்யூனிஸ்ட் (ஒருங்கிணைந்த மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) கட்சி உருவாக்கப்பட்டது. நேபாளத்தில் 2017 – இல் நடந்த பொதுத் தேர்தலில் அவர்கள் கூட்டணி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து கட்சிகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், கே.பி.சர்மா ஒலி – பிரசண்டா தலைமையில் உருவான நேபாள கம்யூனிஸ்ட் கட்சியை (என்சிபி) தேர்தல் ஆணையம் பதிவு செய்ய முடிவெடுத்ததற்கு எதிராக ரிஷிராம் கட்டல் என்பவர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அவர் ஏற்கெனவே இதே என்சிபி பெயரில் தனது கட்சியை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்துள்ளதாக உச்சநீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார். அவருடைய வழக்கு உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் குமார் ரெஜ்மி மற்றும் பாம்குமார் சிரேஸ்டா அடங்கிய அமர்வு முன்பு ஞாயிற்றுக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் தெரிவித்ததாவது: கே.பி.சர்மா ஒலி மற்றும் பிரசண்டா ஒன்றாக இணைந்து அவர்களது தலைமையில் என்சிபி கட்சி உருவாக் கப்படுவதற்கு முன்பாகவே ரிஷிராம் கட்டல் அதே பெயரில் தேர்தல் ஆணையத்தில் தனது கட்சியை பதிவு செய்துள்ளது விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது . தேர்தல் ஆணையத்தில் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிருக்கும் ஒரு கட்சியின் பெயரில் மீண்டும் ஒரு கட்சியினை பதிவு செய்ய முடியாது. எனவே, கே.பி.சர்மா ஒலி – பிரசண்டா ஆகியோரது கட்சிகளின் இணைப்பு ரத்து செய்யப்படுகிறது என்று தெரிவித்துள்ளது.

---

**28. நேபாள நாட்டின் பிரதமர் கே.பி.சர்மா ஒலி கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டார்.**

இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் ஆஸ்ட்ராஜெனகா நிறுவனம் இணைந்து உருவாக்கி, புனேவின் சீரம் நிறுவனம் தயாரித்துள்ள 'கோவிஷீல்டு' தடுப்பூசிகள் நேபாளத்துக்கு வழங்கப்பட்டது.கொரோனா பரவலை கட்டுப்படுத்த இந்திய அரசு சார்பில் 'கோவிஷீல்டு' தடுப்பூசிகள் நேபாளத்துக்கு வழங்கப்பட்டது.

---

**29. 'சி விஜில்' செயலியில் தமிழிலும் புகார் அளிக்கும் வசதி: விரைவில் அறிமுகப்படுத்துகிறது தேர்தல் துறை.**

தேர்தல் தொடர்பான புகார்களை அளிப்பதற்கான 'சி விஜில்' செயலியில் தமிழில் புகாரை பதிவு செய்யும்வசதி விரைவில் ஏற்படுத்தப்படும் என்று தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ தெரிவித்தார்.

தமிழக தேர்தலுக்குப் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் எந்த வருடத்தில் தயாரிக்கப்பட்டவை?

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் எம்–3 அதாவது தற்போதைய தயாரிப்புகள்தான். அதேபோல், 2017–ம் ஆண்டுமுதல் உள்ள 'விவிபேட்' இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

---

**30. 44 ஆவது சென்னை புத்தகக் காட்சி பிப்ரவரி 24 ஆம் தேதி முதல் மார்ச்சு 9 ஆம் தேதிவரை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் நடைபெற்றது.**

---

**31. திருவள்ளூர் பல்கலைக்கழகத்தின் ஆளுகையிலிருந்து பிரிக்கப்பட்டு டாக்டர் ஜெ.ஜெயலலிதா பல்கலைக்கழகம் விழுப்புரத்தில் திறக்கப்பட்டது.**

வேலூர் மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் 16.10.2002 ஆண்டு துவங்கப்பட்டது. விழுப்புரம், கடலூர், வேலூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உட்பட மொத்தம் 123 கல்லூரிகள் இந்தப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

கடந்த 2020ஆம் ஆண்டு செப்டம்பர் 16ஆம் தேதி சட்டப்பேரவையில் விதி எண் 110ன் கீழ் அறிக்கை அளித்திருந்த முதல்வர் எடப்பாடி பழனிசாமி, "வேலூர் மாவட்டத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, விழுப்புரத்தில் புதியதாக பல்கலைக்கழகம் அமைக்கப்படும். அந்தப் பல்கலைக்கழகம் இந்த கல்வியாண்டு முதலே செயல்படத் துவங்கும்" என்று அறிவித்திருந்தார்.

---

**32. ஐந்து நிமிடங்களில் சார்ஜாகும் பேட்டரி: இஸ்ரேல் கண்டுபிடிப்பு.**

அதிவேக ரீசார்ஜ் தொழில் நுட்பங்களில் நிபுணத்துவம் கொண்ட இஸ்ரேலைச் சேர்ந்த ஸ்டோர்டாட் என்ற ஸ்டார்ட் அப் நிறுவனம் முதல் தலைமுறை லித்தியம் அயன் பேட்டரியை உருவாக்கியுள்ளது.

இந்த பேட்டரி முழுவதுமாக சார்ஜ் ஆக 5 நிமிடங்களே ஆகும் என்கிறார் நிறுவனத்தின் நிறுவனர் டோரன் மயர்ஸ்டார்ஃப்.

இந்நிறுவனம் மொபைல், ட்ரோன், ஸ்கூட்டர் களுக்கு பேட்டரிகளை உற்பத்தி செய்கிறது.

---

**33. மத்திய பிரதேச மாநிலத்தில் மத சுதந்திர சட்டம் நிறைவேற்றம்: மதமாற்றத்தில் ஈடுபட்டால் 10 ஆண்டு சிறை.**

'லவ் ஜிகாத்' தை தடுக்க மத்திய பிரதேச அரசு கடந்த ஜனவரி 9–ம் தேதி அவசர சட்டத்தை அமல்படுத்தியது. இந்த அவசர சட்டத்துக்கு மாற்றாக மத சுதந்திர சட்ட மசோதா மாநில சட்டப்பேரவையில் கடந்த 1–ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது.

குரல் வாக்கெடுப்பு மூலம் மத சுதந்திர சட்டம் நிறைவேற்றப்பட்டது. புதிய சட்டத்தின்படி, ஒருவர் மதம் மாற விரும்பினால் 60 நாட்களுக்கு முன்பாக ஆட்சியரிடம் விண்ணப் பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட மதபோதகரும் 60 நாட்களுக்கு முன்பு மாவட்ட நிர்வாகத்திடம் தகவல் தெரிவிக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்டோரை கட்டாயப் படுத்தியோ, ஏமாற்றியோ மத மாற்றம் செய்தால் 3 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் ரூ.50,000 வரை அபராதமும் விதிக்கப்படும்.

ஒன்றுக்கும் மேற்பட்டோரை கட்டாயப்படுத்தியோ, ஏமாற்றியோ மதமாற்றம் செய்தால் 10 ஆண்டு கள் வரை சிறை தண்டனையும் ரூ.1 லட்சம் வரை மதமாற்ற திருமணங்கள் ரத்து செய்யப்படும் என பல அம்சங்கள் இந்த சட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

---

**34. காங்கோவில் மலை நிறைய தங்கம் தோண்டி எடுத்துச்சென்ற மக்கள்.**

மத்திய ஆப்பிரிக்க நாடான டி.ஆர். காங்கோவில், ஒரு மலையில் உள்ள மண்ணில் பெருமளவு தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து, கிராம மக்கள் போட்டி போட்டுக்கொண்டு தங்கத் தாது மண்ணை தோண்டி எடுத்துச் செல்லும் காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகியது.

டி.ஆர்.காங்கோவின் தெற்கு கிவு மாகாணத்தில் லுகிகி என்ற கிராமம் உள்ளது. இங்குள்ள ஒரு மலையில் உள்ள மண்ணில் 60 முதல் 90 சதவீதம் வரை தங்கத் தாது இருப்பதை உள்ளூர்வாசிகள் சிலர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த விவரம் கிராமத்தில் உள்ள மற்றவர்களுக்கும் தெரியவரவே, மக்கள் அனைவரும் மண்வெட்டி உள்ளிட்ட கிடைத்த ஆயுதங்களுடன் மலைப் பகுதிக்கு விரைந்து, போட்டி போட்டுக் கொண்டு தாது மண்ணை தோண்டினர். அதனை அலசி தங்கம் எடுப்பதற்காக பைகளில் வீட்டுக்கு எடுத்துச் சென்றனர்.

இது தொடர்பான வீடியோ காட்சியை அகமது அல்கோபரி என்ற பத்திரிகையாளர் ட்விட்டரில் பகிர்ந்து கொண்டதை தொடர்ந்து, அது சமூக வலைதளங்களில் வைரலானது.

இதனிடையே இத்தகவல் அரசுக்கு தெரிந்தவுடன் மலையில்தோண்டுவதற்கு அதிகாரிகள் தடை விதித்தனர். அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் நிறுத்தப்பட் டனர். லுகிகி கிராமத்தில் உள்ள அந்த மலை முழுவதிலும் தங்கத் தாது இருக்கலாம் என நம்பப்படுகிறது. டி.ஆர். காங்கோவில் தாமிரம், வைரம், கோபால்ட் மற்றும் பிற தாதுக்களும் பெருமளவில் இருப்பதாக கருதப்படுகிறது.

---

**35. மேட்டியோ பெலிகோன் ரேங்கிங் தொடர்; தங்கப் பதக்கம் வென்றார் பஜ்ரங் புனியா: தரவரிசையில் முதலிடத்துக்கும் முன்னேற்றம்.**

மேட்டியோ பெலிகோன் ரேங்கிங் சர்வதேச மல்யுத்தப் போட்டியில் இந்திய வீரர் பஜ்ரங் புனியா தங்கப் பதக்கம் வென்றார். இதன் மூலம் தரவரிசைப் பட்டியலில் பஜ்ரங் புனியா முதலிடத்துக்கு முன்னேறினார். மற்றொரு இந்திய விரரான விஷால் காளிரமணா வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்ற இந்தத் தொடரில் ஆடவருக்கான 65 கிலோ எடைப் பிரிவு இறுதி சுற்றில் இந்தியாவின் பஜ்ரங் புனியா, மங்கோலியாவின் துல்கா துமூர் ஓச்சிரை எதிர்த்து மோதினார். இதில் 0–2 என பின்தங்கியிருந்த பஜ்ரங் ஆட்டம் முடிவடைய 30 நிமிடங்கள் மட்டுமே இருந்த நிலையில் அபாரமாக செயல்பட்டு 2–2 என ஆட்டத்தை முடித்து தங்கப் பதக்கம் வென்றார்.

70 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் விஷால் காளிரமணா வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் 5–1 என்ற கணக்கில் கஜகஸ்தானின் சிர்பாஸ் தல்கட்டை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் பெற்றார். அதேவேளையில் மற்றொரு இந்திய வீரரான நர்ஷிங் பஞ்சம் யாதவ் வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் 0–5 என்ற கணக்கில் கஜகஸ்தானின் டானியார் கைசனோவிடம் தோல்வியடைந்தார்.

மேட்டியோ பெலிகோன் ரேங்கிங் தொடரை இந்தியா 3 தங்கம், 4 வெண்கலம் என மொத்தம் 7 பதக்கங்கள் வென்று நிறைவு செய்தது. ஏற்கெனவே மகளிர் பிரிவில் வினேஷ் போகத் தங்கப் பதக்கமும், சரிதா மோர் ஆகியோர் வெள்ளிப் பதக்கமும் வென்றிருந்தனர். ஆடவர் பிரிவில் நீரஜ், குல்தீப் மாலிக், நவீன் ஆகியோர் வெண்கலப் பதக்கம் பெற்றிருந்தனர்.

---

**36. அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம். பஞ்சாப் அரசின் மகளிர்தின பரிசு.**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அரசு பேருந்துகளில் மாநிலத்தின் எந்த பகுதிக்கும் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம் என்று பஞ்சாப் அரசு அறிவித்துள்ளது. பஞ்சாப் மாநில முதலமைச்சர் அமரேந்திர் சிங், பெண்கள் பாதுகாப்புக்காக 8 புதிய திட்டங்களை அமல்படுத்தியுள்ளார். இதில் ஒரு திட்டம் மாநிலம் முழுவதும் அனைத்து அரசு பேருந்துகளிலும் பெண்களுக்கு இனி கட்டணம் கிடையாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் எந்த பகுதிக்கும் பெண்கள் இனி அரசு பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்யலாம் என்று அமரேந்திர் சிங் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

**37. உலகின் தலைசிறந்த 20 பெண்கள்: தமிழிசை சவுந்தரராஜனுக்கு விருது; கமலா ஹாரிஸுடன் பெற்றார்.** (Top–20 Global Women of Excellence award)

உலகின் தலைசிறந்த 20 பெண்களுக்கான விருதை, தெலங்கானா ஆளுநரும், புதுச்சேரி துணைநிலை ஆளுநருமான தமிழிசை சவுந்தரராஜன் பெற்றுள்ளார். அமெரிக்காவில் நடைபெற்ற விருது நிகழ்வில் தமிழிசை காணொலி மூலம் புதுச்சேரியில் இருந்து கலந்துகொண்டார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அமெரிக்காவில் செயல்பட்டு வரும் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் டேனி கே. டேவிஸ்

தலைமையிலான இல்லினாய்ஸின் மல்டி எத்னிக் அட்வைசரி டாஸ்க் ஃபோர்ஸ் (Multi Ethnic Advisory Task Force, Illinois) இந்த சர்வதேச விருதை வழங்கியுள்ளது. உலகின் தலைசிறந்த 20 பெண்களுக்கு விருது வழங்கப்பட்டு வருகிறது. மக்களின் வாழ்க்கையில் வியக்கத்தகு மாற்றங்களை ஏற்படுத்திய பல்வேறு துறை சார்ந்த பெண்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

2020-ம் ஆண்டுக்கான இந்த விருது தமிழகத்தைச் சேர்ந்த தமிழிசை சவுந்தரராஜனுக்கு வழங்கப்பட்டுள்ளது. பெண்கள் உரிமை, பாலினச் சமத்துவம், பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றைத் தமிழிசை மேற்கொண்டுள்ளதாகவும், மருத்துவராகப் பணியைத் தொடங்கி, பாஜகவில் பல்வேறு பொறுப்புகள் வகித்து, தெலங்கானா ஆளுநர், புதுச்சேரி துணைநிலை ஆளுநராகத் தமிழிசை உயர்ந்ததாகவும் விருதுக் குழுவினர் பாராட்டியுள்ளனர்.

9-வது ஆண்டாக இந்த முறை இல்லினாய்ஸில் நடைபெற்ற நிகழ்வில் அமெரிக்க எம்.பி. டேனி கே.டேவிஸ் விருதுகளை வழங்கினார். அமெரிக்காவில் நேற்று (மார்ச் 8) நடைபெற்ற விருது நிகழ்வில் தமிழிசை காணொலி மூலம் புதுச்சேரியில் இருந்து கலந்துகொண்டார். இதே விருதை அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸுடன் இணைந்து தமிழிசை சவுந்தரராஜன் பெற்றுள்ளார்.

---

**38. இந்தியாவின் எதிர்ப்பை மீறி பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே அணை கட்ட அனுமதி தந்தது சீனா**

பிரம்மபுத்திரா அணையின் குறுக்கே பிரமாண்ட அணை கட்ட, சீனா தனது 14வது ஐந்தாண்டு திட்டத்தில் அனுமதி வழங்கி இருக்கிறது. திபெத்தில் யர்லாங் சாங்போ என அழைக்கப்படும் பிரம்மபுத்திரா நதி, வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சலபிரதேசம், அசாம் வழியாக வங்கதேசத்துக்கு செல்கிறது. தன்னாட்சி அதிகாரம் கொண்ட திபெத் மாகாணத்தில், பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே பிரமாண்ட அணை அமைத்து, நீர் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை சீனா செயல்படுத்த உள்ளது. சீனா கட்ட உள்ள புதிய அணையால் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் வங்கதேசத்தின் நீராதாரம் பாதிக்கப்படக்கூடும்.

பிரமாண்ட அணை கட்டும் திட்டத்திற்கு சீனா தனது 14வது ஐந்தாண்டு திட்ட வரைவில் ஒப்புதல் அளித்துள்ளது. சீனாவின் 14வது ஐந்தாண்டு திட்டமானது 2021ம் ஆண்டு முதல் 2025ம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. இதில், அருணாசலப்பிரதேசத்தின் எல்லைப்பகுதியான திபெத்தின் கடைசி மாகாணம், மேடாக்கில் யர்லூங் சாங்போ நதியின் குறுக்கே இந்த பிரமாண்ட அணை கட்ட அனுமதி தரப்பட்டுள்ளது.

பிரம்மபுத்திரா நதியில் சீனா கட்டும் புதிய அணையினால் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் வங்க தேசத்துக்கான நீர் ஆதாரங்கள் பாதிக்கப்படும். இந்தியா சீனா இடையே ஏற்கனவே எல்லை பிரச்சனை நீடித்து வரும் நிலையில் புதிய அணை திட்டம் இரு நாடுகளிடையே பிரச்னைகளை மேலும் அதிகரிக்கும் வகையில் உள்ளது. இந்தியா, வங்கதேசத்துக்கு செல்லும் நதி நீரை அணை கட்டி தடுக்கும் சீனாவின் முயற்சி சர்வதேச பிரச்னையாக உருவாக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்த அணையின் மூலம், சுமார் 2000 அடி உயரத்தில் இருந்து பாயும் நதி நீரை பயன்படுத்தி 7 கோடி கிலோவாட் மின்உற்பத்தி செய்யமுடியும். இதன் மூலமாக சீனாவின் ஒட்டுமொத்த மின் தேவையில் 30 சதவீதம் பூர்த்தி செய்ய முடியும். திட்டத்தின் மூலம் கிடைக்கும் 30,000 கோடி கிலோவாட் மின்சாரம் மூலமாக சீனாவின் கார்பன் வெளியீட்டை குறைக்கும் இலக்கை 2030ம் ஆண்டுக்குள் அடைய முடியும். மேலும் 2060ம் ஆண்டுக்குள் கார்பன் வெளியேற்றத்தை முழுமையாக நிறுத்த முடியும்.

---

**39. 'கெய்ர்ன்' னுக்கு சாதகமாக 5 நாடுகளின் நீதிமன்றங்கள் தீர்ப்பு**

இந்திய அரசின் வரி நடவடிக்கைகளுக்கு எதிராக, 'கெய்ர்ன்' நிறுவனம், பல்வேறு நாடுகளில் வழக்கு தொடுத்திருந்த நிலையில், 5 நாடுகளின் நீதிமன்றங்கள், இந்திய அரசுக்கு எதிரான தீர்ப்பை வழங்கி உள்ளன.

ஏற்கனவே, 'கெய்ர்ன்' நிறுவனம், சர்வதேச தீர்ப்பாயத்தில், சாதகமான தீர்ப்பை பெற்றிருக்கும் நிலையில், மேலும், 9 நாடுகளின் நீதிமன்றங்களிலும் முறையிட்டிருந்தது. இந்நிலையில், அமெரிக்கா, பிரிட்டன், நெதர்லாந்து, கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள நீதிமன்றங்களும், கெய்ர்ன் நிறுவனத்துக்கு சாதகமான தீர்ப்பை வழங்கியதுடன், இழப்பீட்டு தொகையான, 10 ஆயிரத்து, 247 கோடி ரூபாயை, இந்தியா கொடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளன.

நடவடிக்கை: இதனையடுத்து, கெய்ர்ன் நிறுவனம், சிங்கப்பூர், ஜப்பான், ஐக்கிய அரபு நாடுகள், கேமேன் தீவுகள் ஆகியவற்றில், இந்த தீர்ப்பை பதிவு செய்யும் முயற்சியில் இறங்கி உள்ளது. இந்திய அரசு பணத்தை செலுத்தாத நிலையில், அதற்கு எதிரான அமலாக்க நடவடிக்கைகளில் இறங்க ஏதுவாக, இந்த பதிவு முயற்சிகளை, கெய்ர்ன் நிறுவனம் மேற்கொள்கிறது. இந்தியா, தீர்ப்பின் படி, தொகையை வழங்கவில்லை எனில், சொத்துக்களை ஜப்தி செய்யும் நடவடிக்கையில் இறங்க நேரிடும் என, ஏற்கனவே கெய்ர்ன் நிறுவனம் தெரிவித்திருந்தது.

வெளிநாட்டிலிருக்கும் இந்திய அரசின் வங்கி கணக்கு, விமானம், கப்பல் என சொத்துக்களை பறிமுதல் செய்யும் முயற்சியில், கெய்ர்ன் நிறுவனம் இறங்க முடியும் என்கிறார்கள், சட்ட நிபுணர்கள். கெய்ர்ன் நிறுவனத்தின் பங்குதாரர்களில், உலகஅளவிலான நிதி நிறுவனங்களும் உள்ளன. அவை, இந்திய அரசு பணம் தராத பட்சத்தில், அமலாக்க நடவடிக்கைகளில் இறங்க விரும்புகின்றன.

முறையீடு: இதற்கிடையே, கெய்ர்ன் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சைமன் தாம்சன் மற்றும் உயர் அதிகாரிகள், அண்மையில் நிதியமைச்சக அதிகாரிகளை, மூன்று முறை சந்தித்து பேசிஉள்ளனர்.

இந்த சந்திப்புகளுக்கு பிறகு, இவ்விவகாரம் குறித்து தன்னுடைய கருத்தை தெரிவித்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், "வரி விதிப்பது குறித்த விஷயத்தில், இந்தியாவின் இறையாண்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டால், நான் முறையீடு செய்வேன். அது என் கடமை என்று தெரிவித்திருந்தார். நேரடியான பதிலை தெரிவிக்கவில்லை. இந்தியா, மேல்முறையீட்டு நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பது இன்னும் உறுதியாக தெரியவில்லை.

---

**40. 50 சதவீத ஒதுக்கீட்டை தொடரலாமா? மாநிலங்களுக்கு உச்ச நீதிமன்றம் கேள்வி.**

'அரசு வேலை மற்றும் கல்வி நிறுவனங்களில், 50 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கும் முறையைத் தொடரலாமா' என, பதிலளிக்க, மாநில அரசுகளுக்கு, உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கல்வி மற்றும் அரசு வேலைகளில், பிற்படுத்தப்பட்டோர், எஸ்.சி., – எஸ்.டி., பிரிவினருக்கு இட ஒதுக்கீடு அளிப்பது தொடர்பாக, 1992ல், உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.இந்திரா சஹானே என்பவர் தொடர்ந்த அந்த வழக்கு, மண்டல் கமிஷன் வழக்கு என்றும் அழைக்கப்படுகிறது. இந்த வழக்கை விசாரித்த, உச்ச நீதிமன்றத்தின், ஒன்பது நீதிபதிகள் அடங்கிய, அரசியல் சாசன அமர்வு, 'இட ஒதுக்கீட்டின் அளவு, 50 சதவீதத்துக்கு அதிகமாக இருக்கக் கூடாது. மிகவும் அசாதாரண சூழ்நிலைகளில் மட்டும் சில விதிவிலக்கு உண்டு' என, தன் தீர்ப்பில் கூறியுள்ளது.

இந்நிலையில், தமிழகம், மஹாராஷ்டிராவில், 50 சதவீதத்துக்கும் அதிகமாக இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. தமிழகத்தில், 69 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் வகையில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், எஸ்.சி., – எஸ்.டி., பிரிவினருக்கு இடஒதுக்கீடு சட்டம், 1993ல் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது; அது நிலுவையில் உள்ளது. மஹாராஷ்டிராவில் மராத்தா பிரிவினருக்கான இடஒதுக்கீடு தொடர்பான வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில், இந்த வழக்கை விசாரிப்பதாக, உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

இந்நிலையில், மஹாராஷ்டிராவில், மராத்தா பிரிவினருக்கு, 16 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் வகையில், மஹாராஷ்டிரா சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய பிரிவினருக்கான இடஒதுக்கீட்டு சட்டம், 2018ல் அறிமுகம் செய்யப்பட்டது. ஏற்கனவே, 50 சதவீத இடஒதுக்கீட்டு உச்சவரம்பை எட்டியுள்ள நிலையில், கூடுதல் ஒதுக்கீடு வழங்குவதை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்த வழக்கு, நீதிபதிகள் அசோக் பூஷண், எல். நாகேஸ்வர ராவ், ஹேமந்த் குப்தா, எஸ். அப்துல் நசீர், ரவிந்திர பட் அடங்கிய, அரசியல் சாசன அமர்வு முன், நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது அமர்வு உத்தரவிட்டதாவது: இங்கு வாதிட்ட மூத்த வழக்கறிஞர்கள், முகுல் ரோஹத்கி, கபில் சிபில், அபிஷேக் மனு சிங்வி ஆகியோர் பல முக்கியமான விஷயத்தை முன்வைத்துள்ளனர். மஹாராஷ்டிரா அரசின் இந்த இடஒதுக்கீட்டு சட்டம் என்பது, பல மாநிலங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. அதனால், அனைத்து மாநிலங்களின் கருத்தையும் கேட்க வேண்டும் என கூறியுள்ளனர்.அரசியல் சாசனத்தில், 102வது திருத்தம் செய்து, 2018ல் மாற்றம் செய்யப்பட்டது. அதன்படி, தேசிய பிற்படுத்தப்பட்டோர் பிரிவினருக்கான கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. இடஒதுக்கீடு அளிப்பது

தொடர்பாக, மாநில சட்டசபைகளின் அதிகாரத்தில் தலையிடும் வகையில், இந்த கமிஷன் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இடஒதுக்கீட்டில், மாநில அரசுகளின் அதிகாரம் பறிக்கப்படுகிறதா என்பது குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளது. அதனால், அரசியல் சாசனத்தின், 102 திருத்தம் சட்டப்பூர்வமானதா என்பது குறித்து, விசாரிக்கப்படும். இது குறித்து, அனைத்து மாநிலங்களும் தங்கள் தரப்பை தெரிவிக்க வேண்டும்.மேலும், 50 சதவீத இடஒதுக்கீட்டு முறையைத் தொடரலாமா அல்லது இடஒதுக்கீடு தொடர்பாக, 1992ல் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை, ஒன்பதுக்கும் மேற்பட்ட நீதிபதிகள் உடைய அரசியல் சாசன அமர்வின் மறுஆய்வு செய்ய வேண்டுமா என்பது குறித்தும் ஆராயப்படும்.இது குறித்தும், மாநிலங்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். வரும், 15ம் தேதியில் இருந்து இந்த வழக்கு நாள்தோறும் விசாரிக்கப்படும்.இவ்வாறு, அமர்வு உத்தரவிட்டுள்ளது.

---

**41. ரயில் பயணியருக்காக, '139' என்ற ஒருங்கிணைந்த, 'ஹெல்ப்லைன்' எண், நேற்று (08.03.2021) அறிமுகம் செய்யப்பட்டது.**

ரயில் சேவைகளை பயன்படுத்தும் மக்கள், தங்களுக்கு உள்ள சந்தேகங்களுக்கு தீர்வு காணவும், தங்களுக்கு உள்ள குறை மற்றும் புகார்களை, ரயில்வே நிர்வாகத்திடம் தெரிவிப்பதற்காகவும், பல்வேறு ஹெல்ப்லைன் எண்கள் உள்ளன. இதனால், சரியான எண்ணை கண்டறிந்து தொடர்புகொள்ள இயலாமல், பயணியர் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இந்நிலையில், அந்த கவலையை போக்கும் வகையில், ஒருங்கிணைந்த, ஹெல்ப்லைன் எண், நேற்று அறிமுகம் செய்யப்பட்டது. 139 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு, அனைத்து விதமான சேவைகளையும் பெறமுடியும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ள, 182 என்ற ஹெல்ப்லைன் எண், வரும் ஏப்ரல், 1ம் தேதி நிறுத்தப்படும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த, புதிய ஹெல்ப்லைன் எண், 12 மொழிகளில் இருக்கும். இந்த எண்ணை தொடர்புகொள்ள, 'ஸ்மார்ட் போன்' அவசியம் கிடையாது. அனைத்து விதமான மொபைல் போன்களில் இருந்தும், இந்த ஹெல்ப்லைன் எண்ணை தொடர்பு கொள்ள முடியும்.

---

**42. தபால் நிலைய சேமிப்பு விதிமுறைகள் மாற்றம்**

தபால் நிலையங்களில் உள்ள சேமிப்பு கணக்குகளில் பணம் செலுத்தவும், எடுக்கவும் விதிக்கப்பட்டுள்ள பல்வேறு விதிமுறைகளில், மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தபால் துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: தபால் நிலையங்களில் உள்ள தனிநபர் சேமிப்பு கணக்குகளில் இருந்து பணம் எடுப்பதற்கு விதிக்கப்பட்டு இருந்த, 5,000 ரூபாய் என்ற வரையறை, 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தபால் நிலைய கிளைகளில், ஒரு கணக்கில், ஒரு நாளில், 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ரொக்கமாக பணம் முதலீடு செய்வது, ஏற்கப்படாது. பொது வைப்பு நிதி, மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம், மாத வருவாய் திட்டம், கிசான் விகாஸ் பத்திரங்கள், தேசிய சேமிப்பு சான்றிதழ் திட்டங்களை, 'மொபைல் போன்' செயலி வாயிலாக பெறலாம்.

இத்திட்டங்களுக்கான முதலீடுகள், காசோலை மற்றும் முதலீடு சலான் வாயிலாகவே ஏற்றுக் கொள்ளப்படும். தபால் நிலைய சேமிப்பு கணக்குகளில், குறைந்த பட்சம், 500 ரூபாய் பணம் இருப்பு வைக்க வேண்டும். தவறினால், 100 ரூபாய் பராமரிப்பு தொகையாக கழித்துக் கொள்ளப்படும்.இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

---

**43. உலக அளவில், பெண் குழந்தைகள் திருமணத்தில், 50 சதவீத பங்கு வகிக்கும் ஐந்து நாடுகளில், இந்தியாவும் இடம் பெற்றுள்ளது என, 'யுனிசெப்' தெரிவித்துள்ளது.**

ஆய்வு : பெண் குழந்தைகள் திருமணம் குறித்து, யுனிசெப் எனப்படும், ஐ.நா.,வுக்கான சர்வதேச குழந்தைகள் நிதியம் ஆய்வு நடத்தி, அறிக்கை வெளியிட்டுள்ளது; அதன் விபரம்: உலகம் முழுதும் உள்ள பெண்களில், 65 கோடி பேருக்கு, குழந்தை திருமணம் நடந்துள்ளது; இதில், 50 சதவீத குழந்தை திருமணங்கள், வங்கதேசம், பிரேசில், எத்தியோப்பியா, இந்தியா மற்றும் நைஜீரியா நாடுகளில் நடந்துள்ளன. கடந்த, 10 ஆண்டுகளில், 2.50 கோடி பெண் குழந்தை திருமணங்கள், உலகம் முழுதும் நடந்துள்ளன. குழந்தை திருமணம் செய்த மூன்று பேரில் ஒருவர், இந்தியாவைச் சேர்ந்தவராக இருக்கிறார்.

வரும், 2030க்குள், நிலையான வளர்ச்சி பெற்ற நாடாக இந்தியா மாறுவதற்கு, குழந்தை திருமணங்கள் தடையாக உள்ளன. குழந்தை திருமணம்கொரோனா ஊரடங்கு காரணமாக, கடந்த ஓராண்டாக மூடிக் கிடக்கும் பள்ளிகள் திறக்கப்பட்டு, பெண் குழந்தைகள் கல்வி பயில்வதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். குழந்தை திருமணங்களை ஒழிக்க, கடுமையான சட்ட திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

பெண் குழந்தைகளுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் சுகாதார திட்டங்களை உறுதி செய்வதன் வாயிலாக, குழந்தை திருமணங்களை ஓரளவு குறைக்க முடியும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**44. தரவரிசையில் அதிக வாரம் முதலிடம்: பெடரரின் சாதனையை முறியடித்தார், ஜோகோவிச்.**

உலக டென்னிஸ் ஒற்றையர் தரவரிசையில் முதலிடத்தில் அதிக வாரங்கள் இருந்த ரோஜர் பெடரரின் சாதனையை ஜோகோவிச் முறியடித்தார்.

நம்பர் ஒன் இடத்தில் அதிக வாரம்உலக டென்னிஸ் வீரர்களின் தரவரிசை பட்டியலை சர்வதேச டென்னிஸ் சங்கம் நேற்று வெளியிட்டது. இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். கடந்த ஆண்டு (2020) பிப்ரவரி 3–ந் தேதி ரபெல் நடாலை (ஸ்பெயின்) பின்னுக்கு தள்ளி நம்பர் ஒன் அரியணையில் ஏறிய ஜோகோவிச் அது முதல் தொடர்ந்து அந்த இடத்தை தக்க வைத்துள்ளார். 18 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று இருக்கும் 33 வயதான ஜோகோவிச் 2011–ம் ஆண்டு ஜூலை 4–ந் தேதி முதல்முறையாக தரவரிசையில் நம்பர் ஒன் இடத்துக்கு முன்னேறினார். தற்போது அவர் 5–வது முறையாக முதலிடத்தில் இருக்கிறார்.

5 வெவ்வேறு காலகட்டங்களில் அவர் மொத்தம் 311 வாரங்கள் முதலிடத்தில் இருந்து புதிய சாதனை படைத்துள்ளார். பெடரர் சாதனை முறியடிப்பு48 ஆண்டு கால உலக தரவரிசை வரலாற்றில் இதற்கு முன்பு 39 வயதான சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் மொத்தம் 310 வாரங்கள் முதலிடத்தில் இருந்ததே சாதனையாக இருந்தது. அந்த சாதனையை ஜோகோவிச் நேற்று தகர்த்தார். பெடரர் முழங்காலில் ஏற்பட்ட காயத்துக்கு அறுவை சிகிச்சை செய்ததால் கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக போட்டிகளில் இருந்து விலகி இருக்கிறார். தற்போது தரவரிசையில் 6–வது இடத்தில் இருக்கும் பெடரர் இந்த வாரத்தில் மீண்டும் சர்வதேச போட்டியில் களம் காண இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்டின் இறுதியில் அதிக முறை நம்பர் ஒன் இடத்தை ஆக்கிரமித்த வீரர்கள் பட்டியலில் செர்பியாவின் ஜோகோவிச், அமெரிக்க முன்னாள் வீரர் பீட் சாம்பிராஸ் (இருவரும் தலா 6 முறை) ஆகியோர் இணைந்து முதலிடத்தில் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜோகோவிச் மகிழ்ச்சி தரவரிசையில் அதிக வாரங்கள் முதலிடத்தை பிடித்து இருப்பது குறித்து ஜோகோவிச் கருத்து தெரிவிக்கையில், 'டென்னிஸ் ஜாம்பவான்களின் பாதையில் நானும் பயணிப்பது உண்மையிலேயே மகிழ்ச்சி அளிக்கிறது. ஜாம்பவான்களின் வரிசையில் நானும் இடம் பிடிக்க வேண்டும் என்று இளம் வயதில் கண்ட கனவு தற்போது உறுதியாகி இருக்கிறது. எந்தவொரு விஷயத்திலும் முழுமையான ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும் செயல்பட்டால் எல்லாவற்றையும் சாத்தியமாக்கலாம்' என்றார்.

---

**45. பிபிசியின் 'ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனை' விருதை ரேபிட் செஸ்ஸில் நடப்பு உலக சாம்பியனாக இருக்கும் கோனெரு ஹம்பி 2–ஆவது முறையாக வென்றார்.**

---

**46. மியான்மருடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு ரத்து. ஆஸ்திரேலியா அறிவிப்பு.**

மியான்மா் ஆட்சியதிகாரத்தை ராணுவம் அபகரித்துள்ளதால், அந்நாட்டுடன் பாதுகாப்புத் துறையில் நிலவி வரும் ஒத்துழைப்பை ரத்து செய்வதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான மியான்மரில் மக்களால் தோ்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கலைத்துவிட்டு, ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. ராணுவத்தின் இந்நடவடிக்கைக்கு எதிராக மக்கள் பலா் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனா். ஆனால், போராட்டத்தைக் கடுமையான நடவடிக்கைகள் மூலமாக ராணுவம் ஒடுக்கி வருகிறது. மியான்மா் ராணுவத்தின் நடவடிக்கைக்கு உலக அரங்கில் கடும் எதிா்ப்புகள் கிளம்பியுள்ளன. அந்நாட்டுடனான உறவை

முறித்துக் கொள்வதாக நியூஸிலாந்து ஏற்கெனவே அறிவித்துள்ளது. இத்தகைய சூழலில், மியான்மருடன் பாதுகாப்புத் துறையில் நிலவி வரும் ஒத்துழைப்பை ரத்து செய்வதாக ஆஸ்திரேலிய அரசு திங்கள்கிழமை (08.03.2021) அறிவித்தது.

இது தொடா்பாக ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சா் மாரீஸ் பெய்ன் கூறுகையில், "மியான்மருடனான ராணுவ பயிற்சி திட்டம் 5 ஆண்டுகளுக்கு ரத்து செய்யப்படுகிறது. மியான்மரில் உள்ள ஆஸ்திரேலிய மனிதநேயக் குழு, அந்நாட்டு அரசுக்கு ஆதரவாக இனி செயல்படாது. அதே வேளையில், அந்நாட்டில் உள்ள ரோஹிங்கயாக்கள், ஏழைகளுக்கான உதவிகளை அக்குழு வழங்கும். மியான்மரில் பலா் மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆங் சாங் சூகியின் ஆலோசகராகப் பணியாற்றி வந்த ஆஸ்திரேலியரும் பேராசிரியருமான சென் டா்னல் ராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளாா். அவா் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். கடந்த மாதம் 1–ஆம் தேதியிலிருந்து காவலில் வைக்கப்பட்டுள்ள ஆங் சாங் சூகி, அதிபா் வின் மின்ட் உள்ளிட்டோரையும் மியான்மா் ராணுவம் விடுவிக்க வேண்டும், என்றாா்.

கூடுதல் தடைகளுக்கு வாய்ப்பு: ராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடி வரும் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, மியான்மா் போராட்டத்தில் வன்முறை வெடித்து வருகிறது. மியான்மா் ராணுவத்துக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. அவற்றின் காரணமாக மியான்மா் ராணுவ அதிகாரிகள் மீது அமெரிக்கா, பிரிட்டன், கனடா உள்ளிட்ட நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. மேலும் பல நாடுகள் ராணுவத்தின் மீது தடைகளை விதிக்க வாய்ப்பிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மியான்மருக்கு அளிக்கப்பட்டு வரும் நிதியுதவிகளைத் தடை செய்யவும் பல நாடுகள் திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது. மியான்மா் போராட்டத்தில் கடந்த வாரத்தில் மட்டும் 50 போ் கொல்லப்பட்டதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. போராட்டத்தில் பலா் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**1. அண்மையில், 'உணவு கழிவு குறியீட்டு அறிக்கை – 2021'ஐ வெளியிட்ட அமைப்பு எது?**

**அ) UNEP ☑**

ஆ) UNESCO

இ) UNCTAD

ஈ) FAO

✓ ஐநா சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP) 'உணவு கழிவு குறியீட்டறிக்கை – 2021'ஐ வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, உலகம் முழுவதும் 931 மில்லியன் டன் உணவு வீணடிக்கப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

✓ வீணடிக்கப்பட்ட மொத்த உணவில் 61% வீடுகளிலிருந்தும், 26% உண–வு சேவைகளில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களிலிருந்தும், 13% சில்ல–றை விற்பனை நிறுவனங்களிலிருந்தும் வந்துள்ளதாக இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

---

**2. ஐக்கிய நாடுகளின் ஐரோப்பாவுக்கான பொருளாதார ஆணையத்–தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

**அ) ஜெனிவா ☑**

ஆ) பிரஸ்ஸல்ஸ்

இ) ரோம்

ஈ) பாரிஸ்

✓ ஐரோப்பாவுக்கான ஐநா பொருளாதார ஆணையத்தை (UNECE) 1947'இல் ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக கவுன்சில் (ECOSOC) அமைத்தது. இதன் தலைமையகம் சுவிச்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது. UNECE வெளியிட்டுள்ள அண்மைய அறிக்கையின்படி, கரியமில வாயு நடுநிலைமைத்தன்மையை அடைவதற்கு, புதைப்படிவ மின்னுற்பத்தியிலும் தொழிலகங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் கரிய–மிலவாயுவை சேமிப்பது அவசியமாகும்.

---

**3. OPELIP என்பது பின்வரும் எந்த அமைப்பால் நிதியளிக்கப்படுகிற ஒரு பழங்குடியினர் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டமாகும்?**

அ) உலக வங்கி

**ஆ) IFAD ☑**

இ) IMF

ஈ) ADB

✓ ஒடிஸா மாநிலத்தில் வாழும் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியி–னர் குழுக்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் (Odisha Particularly Vulnerable Tribal Groups Empowerment and Livelihoods Improvement Programme – OPELIP) என்பது வேளாண் மேம்பாட்டுக்கான பன்னாட்டு நிதியத்தால் (IFAD) நிதியளிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். திறன் மேம்பாடு மற்றும் நவீன விவசாய நடைமுறைகள் மூலம் வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடி குழுக்களிடையே வறுமையை குறைப்பதே இதன் நோக்கம்.

---

**4. ICRISAT'இன் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

**அ) ஹைதராபாத் ☑**

ஆ) சென்னை

இ) மும்பை

ஈ) பெங்களூரு

✓ மித வறட்சியான வெப்பமண்டலங்களுக்கான சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவனம் (ICRISAT) என்பது கிராமப்புற மேம்பாட்டுக்கான வேளாண் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஒரு பன்னாட்டு அமைப்பாகும். இதன் தலை–மையகம் ஹைதராபாத்தின் பதஞ்செருவில் அமைந்துள்ளது. OPELIP திட்டத்தின்மூலம், குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியின குழுக்க–ளுக்கான திறன்மேம்பாட்டு முயற்சிகளை வழங்குவதற்காக ஒடிஸா அரசாங்கத்தால் இது சமீபத்தில் இணைக்கப்பட்டது.

---

**5. CARICOM'இன் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ) தென்னாப்பிரிக்கா

**ஆ) கயானா ☑**

இ) ஜிம்பாப்வே

ஈ) நமீபியா

✓ CARICOM என்பது கரீபிய சமூகத்தை குறிக்கிறது. இது, கடந்த 1973'இல் நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் கயானாவின் ஜார்ஜ்டௌனில் அமைந்துள்ளது. இது கரீபிய சமூகம் மற்றும் பொதுவான சந்தை என்றும் அழைக்கப்படுகிறது.

✓ CARICOM என்பது பதினைந்து உறுப்புநாடுகள் மற்றும் ஐந்து இணை உறுப்பினர்களைக்கொண்ட இருபது நாடுகளின் குழுமமாகும். அதன் உறுப்பினர்களிடையே பொருளாதார ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்து–ழைப்பை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**6. COVID–19 தடுப்பூசிகளை நட்புநாடுகளுக்கு வழங்கும் இந்தியாவி–ன் முன்னெடுப்பின் பெயர் என்ன?**

**அ) Vaccine Maitri ☑**

ஆ) Vaccine to Mitron

இ) Bharat Vaccine Mitra

ஈ) India contributes

✓ 'Vaccine Maitri' முன்னெடுப்பானது கடந்த ஜன.20 அன்று தொடங்கப்பட்–டது. இந்த முன்னெடுப்பின்கீழ், இந்தியா தனது அண்டை நாடுகளுக்கு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட COVID–19 தடுப்பூசிகளை வழங்குகிறது.

✓ பூடான் மற்றும் மாலத்தீவுகள்தான் தடுப்பூசிகளைப்பெற்ற முதல் நாடுகள். இவ்விரு நாடுகளைத்தொடர்ந்து வங்காளதேசம், நேபாளம், மியான்மர் மற்றும் சீஷெல்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன. அண்மையில் கயானா, சமைக்கா மற்றும் நிகரகுவா ஆகிய நாடுகளுக்கு COVID–19 தடுப்பூசிகள் அனுப்பப்பட்டன.

---

**7. நாகர்ஹோளே புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) கர்நாடகா ☑**

ஆ) ஆந்திர பிரதேசம்

இ) மகாராஷ்டிரா

ஈ) கோவா



✓ முன்பு ராஜீவ் காந்தி (நாகர்ஹோளே) தேசிய பூங்கா என்றழைக்கப்பட்ட நாகர்ஹோளே புலிகள் காப்பகம் என்பது கர்நாடகா மாநிலத்தில் உள்ள வனவுயிரி காப்பகமாகும். இது நீலகிரி உயிர்க்கோள இருப்பகத்தின் ஒருபகுதியாகும். இதற்கு நாகர்ஹோளே ஆற்றின் பெயரிடப்பட்டுள்ளது, கன்னட மொழியில் இதற்கு 'பாம்பாறு' எனப்பொருள்.

✓ சமீபத்தில் இந்தக் காப்பகத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய காட்டுத்தீயில் சிக்கி பல ஏக்கர் பரப்பளவிலான வனப்பகுதிகள் அழிந்தன.

---

**8. அண்மையில் கண்டறியப்பட்ட, 'விண்வெளி சூறாவளி', புவியின் எந்தப்பகுதியில் காணப்பட்டது?**

**அ) வட துருவம் ☑**

ஆ) தென் துருவம்

இ) வெப்பமண்டலத்திடை வளியழுத்தத்தாழ்வகம்

ஈ) நிலநடுக்கோட்டுப்பகுதி



✓ அறிவியலாளர்கள் முதன்முறையாக ஒரு 'விண்வெளி சூறாவளி'யைக் கண்டுபிடித்தனர். இச்சூறாவளி, புவியின் மேல் வளிமண்டலத்தில், வட துருவத்தின் மீது எட்டு மணி நேரம் வீசியது. அமெரிக்கா, நார்வே, சீனா மற்றும் ஐக்கியப்பேரரசு ஆகிய நாடுகளின் அறிவியலாளர்கள் குழுமம், பாதுகாப்பு வானிலை செயற்கைக்கோள் திட்டத்தின் செயற்கைக்கோள்–கள் மற்றும் ஒரு முப்பரிமாண காந்த மண்டலத்தை மாதிரியாகப் பயன்படுத்தி அச்சூறாவளியின் படத்தைக் கூர்ந்து தயாரித்தது.

---

**9.'உலக உணவுவிலைக்குறியீட்டை' வெளியிடுகிற அமைப்பு எது?**

அ) உலக வங்கி

**ஆ) உணவு மற்றும் உழவு அமைப்பு ☑**

இ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ) IFAD

- ✓ உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO) உணவு விலைக்குறியீட்டை வெளியிட்டு வருகிறது. இது தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பால் பொருட்கள், இறைச்சி மற்றும் சர்க்கரை ஆகியவற்றின் மாதாந்திர விலை ஏற்ற இறக்கங்களை அளவிடுகிறது.
- ✓ சமீபத்திய ஜனவரி மாத புள்ளிவிவரத்தின்படி, பிப்ரவரி மாதத்தில் உலக உணவுவிலைகள் தொடர்ந்து ஒன்பதாவது மாதமாக உயர்ந்தன. 2014 ஜூலை முதல் இந்தக் குறியீட்டு எண் உயர்ந்துகொண்டே செல்கிறது. சர்க்கரை மற்றும் தாவர எண்ணெய்களின் விலை உயர்வே இந்தக் குறியீட்டு எண்ணின் உயர்வுக்கு வழிவகுக்கிறது.

---

**10.எந்த ஆற்றின்மீது, 'நட்புப்பாலம்' கட்டப்பட்டுள்ளது?**



அ) பிரம்மபுத்திரா

ஆ) யமுனை

இ) கோசி

**ஈ) பெனி ☑**

- ✓ திரிபுரா மாநிலத்தில் பாயும் பெனி ஆற்றின்மீது, 1.9 கிமீ நீளத்திற்கு கட்டப்பட்டுள்ள பாலந்தான், 'நட்புப்பாலம்'. இந்தப்பாலம், இந்தியாவையும் வங்காளதேசத்தையும் இணைக்கிறது. இப்பாலத்தை தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகம், ₹133 கோடி செலவில் கட்டியுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாட்டில் காசநோய் பாதிப்பு 24 % குறைவு**

தமிழ்நாட்டில் கடந்த இருமாதங்களில் மட்டும் 15,300 பேர் காசநோயால் புதிதாக பாதிக்கப்பட்டுள்ளனர். இது முந்தைய ஆண்டைக்காட்டிலும் 24% குறைவான எண்ணிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

காசநோயை முழுமையாக ஒழிக்கும் நோக்கில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. அதுமட்டுமன்றி, 2025'க்குள் அந்நோயை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்ற இலக்குடன் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அதன் பயனாக காசநோய் பாதிப்பு தொடா்பாக விழிப்புணா்வு மேம்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டைப்பொருத்தவரை காசநோயைக் குணப்படுத்தும் விகிதம் கணிசமாக உயர்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த நோயின் தாக்கத்தால் பாதிக்கப்படும் நோயாளிகளில் 84% பேரை முதல் சிகிச்சையிலேயே குணப்படுத்துவதாகவும், தொடர்சிகிச்சைகள்மூலம் மீதமுள்ளவர்களையும் பூரண குணமாக்குவதாகவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கடந்த இருமாதங்களில் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் காசநோய் பாதிப்புடன் அனுமதிக்கப்பட்டிருந்தோரின் தரவுகளை ஆய்வுசெய்தபோது நாடு முழுவதும் 3.78 லட்சம் பேருக்கு அந்நோய் தாக்கம் இருந்தது தெரியவந்துள்ளது. குறிப்பாக உத்தரபிரதேசத்தில் மட்டும் 85 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளர்.

தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் 15,362 பேருக்கு அந்நோயின் பாதிப்பு இருந்தது. அவர்களில், தனியார் மருத்துவமனைகளில் 2960 பேரும், அரசு மருத்துவமனைகளில் 12,402 பேரும் முதல்கட்ட சிகிச்சை பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த 2020'இல் இதே காலகட்டத்தில் அந்த எண்ணிக்கை 24% அதிகமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

**2. இந்தியா-வங்கதேசம் இடையேயான நதியில் 'நட்புப்பாலம்'**

இந்தியா-வங்கதேசம் எல்லையில் பாயும் ஃபெனி நதி மீது கட்டப்பட்டுள்ள 'நட்புப்பாலத்தை' (மைத்ரி சேது) பிரதமர் மோடி திறந்துவைத்தார். எல்லை மாநிலமான திரிபுராவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையேயான எல்லையாக ஃபெனி ஆறு வரையறுக்கப்பட்டுள்ளது.

திரிபுராவின் சப்ரூம் பகுதிக்கும் வங்கதேசத்தின் ராம்கர் பகுதிக்கும் இடையே அந்நதியின்மீது 1.9 கிமீ நீளத்துக்கு அப்பாலம் கட்டப்பட்டுள்ளது. இரு நாடுகளிடையேயான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் இப்பாலம் கட்டப்பட்டுள்ளது.

---

**3. தஞ்சாவூர் அருகே இராஜராஜன் காலத்து நிலக்கொடை கல்வெட்டு கண்டுபிடிப்பு**

தஞ்சாவூர் அருகே பேரரசர் இராஜராஜன் கால நிலக்கொடை கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டது. தஞ்சாவூர் அருகே அருண்மொழிதேவன்பேட்டை கிராமத்தில், ராஜராஜசோழன் காலத்தைச்சார்ந்த ஒரு துண்டுக்கல்வெட்டு கிடப்பதாக, தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத் தமிழ்ப் பண்டிதரும், வரலாற்று ஆய்வாளருமான மணிமாறனுக்கு தகவல்கிடைத்தது. இதையடுத்து மணிமாறன், பொந்தியாகுளம் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் கோவிந்தராஜன், ஆசிரியர் ஜெயலெட்சுமி ஆகியோர் அங்கு சென்று ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து மணிமாறன் கூறியதாவது: சோழர்காலத்தில் தஞ்சாவூர் கூற்றத்தின் புறம்படியாகத்திகழ்ந்த அருண்மொழிதேவன்பேட்டை, மாமன்னர் இராஜராஜனின் பெயரால் அமைந்த ஊர். இப்பகுதியில் உள்ள சமுத்திரம் ஏரியிலிருந்து பாசனத்திற்காக வெட்டப்பட்ட லோகமாதேவி மற்றும் அருண்மொழிதேவன் என்று இரண்டு வாய்க்கால்கள் உள்ளன. இதில் அருண்மொழிதேவன் வாய்க்கால் மதகு சீர்செய்யப்பட்டபோது அங்கிருந்து இக்கல்வெட்டு எடுக்கப்பெற்றது.

இக்கல்வெட்டு ராஜராஜசோழனின் நிலக்கொடைபற்றிக் குறிப்பிட்டுள்ளது. மேலும், வானவன் மூவேந்த வேளாண் என்ற அதிகாரியின் பெயர் காணப்படுகிறது. இவர் இராஜராஜசோழன் காலத்தில் உயர்பொறுப்பில் இருந்த அதிகாரியாவார். இராஜராஜனின் இரண்டாவது ஆட்சியாண்டு தொடங்கி ஒன்பதாவது ஆட்சியாண்டு வரையிலுள்ள திருப்புறம்பியம் கல்வெட்டிலும், பதினேழாவது ஆட்சியாண்டு கரந்தை கல்வெட்டிலும் மூவேந்த வேளாண் பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளது. அருண்மொழிதேவன்பேட்டையில் கண்டெடுக்கப்பெற்ற கல்வெட்டு வாசகம் கரந்தை கல்வெட்டில் காணப்படும் வாசகங்களுடன் ஒத்துள்ளது.

---

**4. ISRO தயாரிப்பில் அதி நவீன 'ரேடார்'**

இந்திய விண்வெளி ஆய்வு மையமான ISRO, பூமியின் மேற்பகுதியை மிகத்துல்லியமாக படம்பிடிக்கும் திறனுள்ள, 'SAR ரேடார்' சாதனத்தை தயாரித்துள்ளது. ISRO, அமெரிக்க விண்வெளி ஆய்வுமையமான, NASA உடன் இணைந்து, முதன்முறையாக, 'NISAR' என்ற செயற்கைகோளை, அடுத்த ஆண்டு விண்ணில் செலுத்தவுள்ளது. இதில், முதன்முறையாக, வெவ்வேறு அலைவரிசை திறன்கொண்ட, 'L கற்றை மற்றும் S கற்றை' ரேடார்கள் பொருத்தப்படவுள்ளன.

இத்திட்டத்தில், செயற்கைகோளை விண்ணில் செலுத்துவதற்கான ஏவுகலம், S கற்றை SAR ரேடார் ஆகியவற்றை, ISRO வழங்கும். அறிவியல் சார்ந்த தகவல்களை சேகரிப்பதற்கான, L கற்றை SAR ரேடார், இருப்பிடத்தை அறிய உதவும் GPS ரிசீவர் ஆகியவற்றை NASA தயாரித்தளிக்கும். இந்த ரேடார் சாதனத்தில், NASA அதன் ரேடார் சாதனத்தை பொருத்தி, இந்தியாவுக்கு அனுப்பியவுடன், அடுத்த ஆண்டு, ஆந்திர பிரதேச மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து, ஏவுகலம் வாயிலாக, NISAR செயற்கைகோள் விண்ணில் செலுத்தப்படும்.

---

**5. மின்னூல் வடிவில் பகவத் கீதையை பிரதமர் வெளியிட்டார்**

பகவத் கீதை ஆங்கில பதிப்பின், மின்நூலை பிரதமர் வெளியிட்டார். தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டம், திருப்பராய்த்துறை சுவாமி சித்பவானந்தர், இந்தப் பகவத் கீதைக்கு, தமிழிலும், ஆங்கிலத்திலும் விளக்க உரைகளை எழுதியுள்ளார்.

---

**6. நாடாளுமன்றத்தில் நிறைவேறியது மத்தியஸ்தம்-சமரசம் சட்டத் திருத்த மசோதா**

மத்தியஸ்தம்-சமரசம் சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. மத்தியஸ்தம்-சமரசம் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான அவசரச்சட்டத்தை மத்திய அரசு கடந்த ஆண்டு நவம்பரில் இயற்றியது. அந்த அவசரச்சட்டத்துக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறும் நோக்கில், மத்தியஸ்தம்-சமரசம் சட்டத் திருத்த மசோதா, பட்ஜெட் கூட்டத்தொடரின்போது மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் முறைகேடு செய்யப்பட்டிருப்பது தெரியவந்தால், அந்த ஒப்பந்தம் தொடர்பாக மத்தியஸ்தம் மற்றும் சமரசம் வாயிலாக அளிக்க –ப்பட்ட தீர்வை அமல்படுத்துவதற்குத் தடைபெறும் வாய்ப்பை இம்மசோதா வழங்குகிறது. குடியரசுத்தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக அந்த மசோதா அனுப்பிவைக்கப்படவுள்ளது. ஒப்புதலளித்தபிறகு அது சட்டவடிவு பெறும்.

### 7. உத்தரகண்ட் மாநில முதல்வராக பொறுப்பேற்ற தீரத் சிங் ராவத்

உத்தரகண்ட் மாநிலத்தின் புதிய முதலமைச்சராக தீரத் சிங் ராவத் பொறுப்பேற்றுக்கொண்டார். உத்தரகண்ட் மாநில பாஜ கட்சியில் எழுந்த அதிருப்தி காரணமாக கட்சியின் மத்திய தலைமையின் உத்தரவின் பேரில் முதல்வராக இருந்த திரிவேந்திர சிங் ராவத் (60) தனது பதவியை ராஜினாமா செய்தார். இந்நிலையில் புதிய முதல்வராக பாஜக எம்.பி. தீரத் சிங் ராவத் தேர்வுசெய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து டேராடூனில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்ச்சியில் புதிய முதல்வராக தீரத் சிங் ராவத் பதவியேற்றுக்கொண்டார். ஆளுநர் ராணி மௌரி அவருக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

### 8. 'ஸ்கார்பீன்' ரக நீர்மூழ்கி கப்பலான 'INS கரஞ்ச்' நாட்டுக்காக அர்ப்பணிப்பு.

கடல் பிராந்திய சவால்களை எதிர்கொள்ளும் விதமாக இந்திய கடற்படை நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இரகசியமாக செயல்படும் 'ஸ்கார்பீன்' வகை நீர்மூழ்கியான INS கரஞ்ச், இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது. இதற்கான தொடக்க நிகழ்ச்சி, மும்பையில் உள்ள கடற்படை கப்பல்துறையில் நடைபெற்றது. இந்திய கடற்படையில் இணை –க்கப்பட்டுள்ள மூன்றாவது 'ஸ்கார்பீன்' வகை நீழ்மூழ்கியாகும் இது.

கடற்படையின் மேற்குப்பிரிவில் இது சேர்க்கப்படுகிறது. அதிநவீன வசதிக –ள், தாக்குதல் திறனுள்ள இந்நீர்மூழ்கிக்கப்பலை, அரசுக்கு சொந்தமான மும்பை மஸகோன் கப்பல் கட்டுமான நிறுவனம், பிரான்ஸ் நாட்டின் கடற்படை குழுமத்துடன் இணைந்து உருவாக்கியுள்ளது. இதுபோன்ற 6 நீர்மூழ்கி கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன. INS கரஞ்ச், தன்னிறைவு இந்தியா திட்டத்தின்கீழ் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டிருப்பது பெருமைக்குரியது என்று தொடக்க நிகழ்வில் பேசிய கடற்படை தலைமை தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் கூறினார். இந்நிகழ்ச்சியில், கடற்படை முன்னாள் தலைமைத்தளபதியும், 1971ஆம் ஆண்டு இந்தியா–பாகிஸ்தான் போரில் பங்கேற்ற பழைய கராஞ்ச் நீர்மூழ்கி கப்பலின் தளபதியுமான அட்மிரல் V S ஷெகாவத் தலைமை விருந்தினராக பங்கேற்றார்.

### 9. மார்ச்.12 'QUAD' உச்சிமாநாடு: மோடி, ஜோ பைடன் பங்கேற்பு

அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நான்கு நாடுகள் கூட்டமைப்பின் (QUAD) உயர்மட்டத்தலைவர்கள் பங்கேற்கும் முதலாவது உச்சிமாநாடு மார்ச்.12 நடைபெறுகிறது. கடந்த 2004'இல் பல நாடுகளில் ஏற்பட்ட சுனாமி பேரழிவுக்குப்பின் இந்த 4 நாடுகள் கூட்டமைப்பு (QUAD) உருவாக்கப்பட்டது. அதன்பின் 2007'இல் இந்த அமைப்பு முறைப்படுத்தப்ப –ட்டது. இன்றைய சூழ்நிலையில், பன்னாட்டுச் சமூகம் சந்தித்துவரும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.

COVID–19 சவால்கள், பொருளாதார நெருக்கடி, பருவநிலை மாற்றம் உள்ளிட்ட உலகளாவிய பிரச்சனைகள் குறித்து அதிபர் ஜோ பைடன் விவாதிப்பார். இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் அத்துமீறல்கள் அதிகரித்து வருவது குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படும்.

### 10. சுகாதாரம் மற்றும் கல்வி மேல்வரி வருவாய் மூலம் கிடைக்கும் நிதியிலிருந்து சுகாதாரத்திற்கு காலாவதியாகாத ஒற்றைத் தொகுப்பு வைப்பு நிதியான பிரதமரின் ஸ்வஸ்திய சுரக்ஷா நிதியை உருவாக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்

சுகாதாரம் மற்றும் கல்விக்கான மேல்வரி வருவாய் மூலம் கிடைக்கும் நிதியில் இருந்து நிதிச் சட்டம் 2007–ன் 136–பி பிரிவின் கீழ் சுகாதாரத்தின் பங்காக காலாவதியாகாத ஒற்றைத் தொகுப்பு வைப்புநிதியான பிரதமரின் ஸ்வஸ்திய சுரக்ஷா நிதியை உருவாக்க பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

**பிரதமரின் ஸ்வஸ்திய சுரக்ஷா நிதியின் முக்கிய அம்சங்கள்:**

i. சுகாதாரத்திற்கான காலாவதியாகாத ஒற்றைத் தொகுப்பு வைப்புநிதி பொது கணக்கில் உருவாக்கப்படும்

ii. சுகாதாரம் மற்றும் கல்விக்கான மேல்வரி வருவாய் மூலம் கிடைக்கும் நிதியில் சுகாதாரத்தில் பங்கு, பிரதமரின் ஸ்வஸ்திய சுரக்ஷா நிதியின் கணக்கில் சேர்க்கப்படும்

iii. பிரதமரின் ஸ்வஸ்திய சுரக்ஷா நிதியில் சேர்க்கப்படும் தொகை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கீழ்க்காணும் முக்கிய திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும்:

• ஆயுஷ்மான் பாரத்– பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டம்

• ஆயுஷ்மான் பாரத்– சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள்

• தேசிய சுகாதார இயக்கம்

• பிரதமரின் ஸ்வஸ்திய சுரக்ஷா திட்டம்

• மருத்துவ அவசர காலங்களின் போது அவசரகால மற்றும் பேரிடர் தயார் நிலை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

• நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் தேசிய சுகாதார கொள்கை 2017–இன் இலக்குகளை முன்னெடுத்து செல்வதற்கான எதிர்கால திட்டங்கள்

iv. மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் இந்தத் தொகுப்பின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளப்படும்

v. எந்த நிதி ஆண்டிலும் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்கான செலவினங்கள் முதலில் இந்தவைப்பு நிதியிலிருந்தும், அதன்பிறகு ஒட்டுமொத்த நிதிநிலை ஆதரவிலிருந்தும் வழங்கப்படும்.

**பயன்கள்:**

ஒதுக்கப்பட்ட தொகை, நிதி ஆண்டின் முடிவிற்குள் காலாவதியாகாததை உறுதிசெய்து, ஒதுக்கப்பட்ட வளங்களின் இருப்பைக் கொண்டு அனைவருக்கும் கிடைக்கும் வகையில் சர்வதேச தரத்திலான மருத்துவ சேவையை வழங்குவது இதன் முக்கிய பயனாகும்.

### 11. நிலவு ஆராய்ச்சி நிலையம் அமைக்க சீனா–ரஷியா ஒப்பந்தம்

புவியின் துணைக்கோளான நிலவு குறித்து ஆராய்ச்சி செய்வதற்கான நிலையத்தை அமைப்பதற்கு சீனா–ரஷியா இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

நிலவின் மேற்பரப்பிலோ சுற்றுவட்டப்பாதையிலோ இந்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படவுள்ளது. நிலவுசார்ந்த அனைத்து ஆய்வுகளையும் இங்கு மேற்கொள்ளமுடியும். மற்ற நாடுகளும் இந்த ஆராய்ச்சி நிலையத் –தைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும்.

### 12. பார்சல்கள் விநியோகிக்கப்படுவதை கண்காணிக்க இந்திய அஞ்சல் துறையில் புதிய வசதி அறிமுகம்

கார்ப்பரேட், MSME உள்ளிட்ட நிறுவனங்கள் தாங்கள் அனுப்பும் பார்சல்களை கண்காணிக்க இந்தியஅஞ்சல் துறை புதிய வசதியை அறிமுகப்படுத்தி உள்ளது. கடிதங்கள், மணியார்டர்களை விநியோகிப்பது, சேமிப்புக்கணக்கு, கிசான் விகாஸ் பத்திரங்களை விற்பனை செய்வது உள்ளிட்ட குறிப்பிட்ட சேவைகளை மட்டுமே அஞ்சல் துறை வழங்கி வந்தது. இந்நிலையில் போட்டிகள் நிறைந்த தற்போதைய சந்தை சவாலை சந்திக்க அஞ்சல் துறையும் தனது சேவைகளை மேம்படுத்தி வருகிறது.

### 13. வாழைக்கழிவிலிருந்து ஆடை, பிஸ்கட் தயாரிக்கும் தொழில்நுட்பம்: விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரையின் நிறுவனம் கண்டுபிடிப்பு

வாழைத்தண்டிலிருந்து ஆடை, பிஸ்கட், ஊறுகாய் உள்ளிட்ட பல பயனுள்ள பொருட்களை உருவாக்கும் தொழில்நுட்பங்களைக் கண்டுபிடி –த்துள்ளதாக விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரையின் என்.டி.ஆர்.எஃப் நிறுவனம் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு தவிர கர்நாடகா, மகாராஷ்டிரா மாநிலங்களில் வாழை சாகுபடி அதிகம் என்பதால், என்.டி.ஆர்.எஃப் தலைவர் மயில்சாமி அண்ணாதுரை, இயக்குநர் இராணுவ விஞ்ஞானி வி.டில்லிபாபு ஆகியோர் இத்தொழில்நுட்பம்குறித்து கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பாவை சந்தித்து இந்தத் திட்டத்தை விளக்கினர்.

வாழைத்தண்டின் உள்பாகத்தில் இருந்து ஊறுகாய், பிஸ்கட், ஆரோக்கிய பானங்கள் ஆகியவற்றையும் தயாரிக்கலாம். இந்த ஆராய்ச்சி முயற்சிகளில்

திருச்சியிலுள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தோடு இணைந்து என்.டி.ஆர்.எஃப் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது. வாழைத்தண்டின் நீர்ச்சத்–தை பயன்படுத்தி உயிரி–உரங்கள், கழிவுப்பொருட்களிலிருந்து ஒலி தடுப்புப்பலகைகள் போன்ற பல மதிப்புகூட்டப்பட்ட பொருட்களும் தயாரிக்க முடியும். இத்திட்டத்தால் வாழை உழவர்களின் வாழ்வாதாரம் வலுப்பெறும் என்.டி.ஆர்.எஃப் கூட்டமைப்பின் இந்த ஆராய்ச்சி முயற்சிகளை முன்னெடு–க்க தமிழ்நாடு அரசு 7 ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**14. சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவராக தாமஸ் பேச் மீண்டும் தேர்வு**

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவராக தாமஸ் பேச் (67) மீண்டும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜெர்மனியைச்சேர்ந்த வழக்குரைஞ–ரான தாமஸ் பேச் நம்பிக்கை வாக்கெடுப்பில் 93–1 என்ற கணக்கில் வெற்றிபெற்றார். அவர் 2025ஆம் ஆண்டு வரை இந்தப்பதவியில் நீடிப்பார்.

---

**15. ஏழு இந்திய பெண்களுக்கு அமெரிக்க விருது கிடைத்தது**

அமெரிக்காவில், சர்வ தேச மகளிர் தினத்தை முன்னிட்டு, இந்தியாவைச் சேர்ந்த ஏழு பெண்களுக்கு, சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

அமெரிக்காவில், நியூயார்க், நியூஜெர்சி, கனக்டிகட் மாகாண இந்தியர்கள் கூட்டமைப்பு, சர்வதேச பெண்கள் தின விழா நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. இதில், நியூயார்க்கில் உள்ள இந்திய துணை தூதர் ரந்திர் ஜெய்சால் பங்கேற்று, பல்வேறு துறைகளைச் சேர்ந்த சாதனை பெண்கள் எழுவருக்கு, விருது, பாராட்டுச்சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

அவ்வகையில், வதோதராவைச்சார்ந்த, நவரசனா கல்விக்கழக தலைவரு–ம் 'தூய்மை இந்தியா' திட்டத்தின் தூதருமான தேஜல் அமின் விருது பெற்றார். ஹார்ட்போர்டு ஹெல்த்கேர் மருத்துவமனையில் மருத்துவராக உள்ள உமா ராணி மதுசூதனா, கொரோனாவால் பாதிக்கப்பட்டோருக்கு சிறப்பான சேவை வழங்கியதற்காக பாராட்டப்பட்டார்.

செவிலியர், ராஷ்மி அகர்வால், பல் மருத்துவர் அபா ஜெய்ஸ்வால், சட்ட ஆலோசகர் சபீனா தில்லான், நடிகையும் தயாரிப்பாளருமான ராஷனா ஷா ஆகியோருக்கும், விருது வழங்கப்பட்டது. குடும்ப வன்முறையால் பாதிக்கப்–படுவோருக்கு உணவு உள்ளிட்ட உதவிகளையும், இலவச முகக்கவசங்–களையும் வழங்கிய, 'மாஸ்க் ஸ்குவாட்' என்ற மகளிர் அமைப்பை பாராட்டி கேடயம் வழங்கப்பட்டது.

---

**1.** **'சாபஹர் நாளை' இந்தியா எந்தத் தேதியில் நினைவுகூர்ந்தது?**



அ) 2021 மார்ச் 2

**ஆ) 2021 மார்ச் 4 ☑**

இ) 2021 மார்ச் 6

ஈ) 2021 மார்ச் 8

✓ மார்ச் 2 முதல் மார்ச் 4 வரை தில்லியில் நடைபெற்ற இந்தியா கடல்சார் உச்சிமாநாடு – 2021'இன்படி, 2021 மார்ச்.4 அன்று, இந்தியா, 'சாபஹர் நாளை' நினைவுகூர்ந்தது என்று வெளிவிவகார அமைச்சகம் கூறியது. மெய்நிகராக நடந்த இந்நிகழ்வில் ஆப்கானிஸ்தான், ஈரான், ஆர்மீனியா, இரஷ்யா, கஜகஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சார்ந்த அமைச்சர்கள் பங்கேற்றனர்.

---

**2.** **பிரம்மோஸ் ஏவுகணையை வாங்குவதற்காக அண்மையில் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்த நாடு எது?**




அ) பாகிஸ்தான்

**ஆ) பிலிப்பைன்ஸ் ☑**

இ) இலங்கை

ஈ) இந்தோனேசியா

✓ பிரம்மோஸ் என்பது ஒரு நடுத்தர சூப்பர்சோனிக் ஏவுகணை ஆகும். இது இந்தியாவின் DRDO மற்றும் இரஷ்யாவின் மஷினோஸ்ட்ரோயீனியா ஆகியவற்றால் அமைக்கப்பட்ட கூட்டு நிறுவனமான பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது மற்றும் தயாரிக்கப்பட்டதாகும். நீர்மூழ்கிக் கப்பல்கள், கப்பல்கள், வானூர்திகள் அல்லது நிலஞ்சார் தளங்களிலிருந்து இதை ஏவலாம்.

✓ இந்த ஏவுகணையை வாங்குவதற்காக பிலிப்பைன்ஸ் நாடு சமீபத்தில் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது.

---

**3.** **நடப்பாண்டில் (2021) வந்த பன்னாட்டு பெண்கள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**



அ) Educate Organise and Agitate

ஆ) Gender Equality: March against Patriarchy

**இ) Women in leadership: Achieving an equal future in a COVID-19 world ☑**

ஈ) Impact of COVID-19 on women

✓ மகளிர் எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் அவர்களது சாதனைகளை முன்னிலைப்படுத்தும் நோக்கோடு சர்வதேச பெண்கள் நாள் ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.8 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான (2021) கருப்பொருள் "Women in leadership: Achieving an equal future in a COVID-19 world" என்பதாகும்.

✓ ஐநா அவையின் பெண்கள் அமைப்பை பொருத்தவரை, உலகெங்கிலும் தலைமைப்பாத்திரங்களில் பெண்கள் குறைவாகவே உள்ளனர்.

---

**4.** **சமீபசெய்திகளில் இடம்பெற்ற, சிங்கோர்கர் கோட்டை அமைந்துள மாநிலம் எது?**



அ) மகாராஷ்டிரா

**ஆ) மத்திய பிரதேசம் ☑**

இ) ஒடிஸா

ஈ) கேரளா

✓ மத்திய பிரதேச மாநிலத்தின் தாமோ மாவட்டத்தில் உள்ள சிங்கோர்கர் கோட்டையின் பாதுகாப்புப் பணிகளுக்கு இந்தியக்குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் அடிக்கல் நாட்டினார். கலாசார அமைச்சகம் மற்றும் மாநில பழங்குடியினர் விவகாரத்துறை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வின் போது, புதிதாக அமைக்கப்பட்ட இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் ஜபல்பூர் சரகத்தை அவர் தொடங்கிவைத்தார்.

---

**5.** **INS குலிஷ் & INS சுமேதா ஆகிய இந்திய கடற்படைக் கப்பல்கள், எந்நாட்டின் துறைமுகத்துக்கு முதன்முறையாக சென்றன?**



அ) இலங்கை **ஆ) வங்காளதேசம் ☑**

இ) மியான்மர் ஈ) ஜப்பான்

✓ INS குலிஷ் மற்றும் INS சுமேதா ஆகிய இந்திய கடற்படைக் கப்பல்கள் அண்மையில் வங்கதேசத்தின் துறைமுக நகரமான மோங்லாவுக்கு சென்றன. நடைபெற்றுகொண்டிருக்கும், 'ஸ்வர்னிம் விஜய் வர்ஷ்' (1971 விடுதலைப்போர்) நினைவாக அவை அங்கு சென்றன.

✓ INS சுமேதா என்பது உள்நாட்டில் கட்டப்பட்ட கடல் ரோந்துக்கப்பலாகும். INS குலிஷ் என்பது உள்நாட்டில் கட்டப்பட்ட வழிகாட்டப்பட்ட ஏவுகணை கப்பலாகும்.

---

**6.** **BWF சுவிஸ் ஓபன் சூப்பர் 300'இல் தங்கம்வென்ற பாட்மிண்டன் வீராங்கனை யார்?**



அ) P V சிந்து

**ஆ) கரோலினா மரின் ☑**

இ) நவோமி ஒசாகா

ஈ) சாய்னா நேவால்

✓ ஒலிம்பிக் சாம்பியன் கரோலினா மரின், BWF சுவிஸ் ஓபன் சூப்பர் 300 போட்டியில் தங்கம் வென்றார். பெண்கள் ஒற்றையர் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் பூப்பந்து வீராங்கனை P V சிந்துவை 12-21, 5-21 என்ற செட் கணக்கில் அவர் தோற்கடித்தார்.

✓ 2019ஆம் ஆண்டு உலக சாம்பியன்ஷிப் போட்டிகளுக்குப் பிறகு உலக சாம்பியனான P V சிந்து தோற்கும் முதல் இறுதிப்போட்டி இதுவாகும். கிடாம்பி ஸ்ரீகாந்த், போட்டியின் அரையிறுதியிலிருந்து விக்டர் ஆக்சல்சன் அவர்களால் வீழ்த்தப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

---

**7.** **சமீபத்தில், உலக தரவரிசையில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்த உலக மல்யுத்த வீரர் யார்?**



அ) வினேஷ் போகத்

**ஆ) பஜ்ரங் புனியா ☑**

இ) யோகேஷ்வர் தத்

ஈ) சாக்ஷி மாலிக்

✓ இந்திய மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா, மேட்டியோ பாலிகோன் தரவரிசை தொடரில் அடுத்தடுத்து இரு தங்கப்பதக்கம் வென்றதை அடுத்து, உலக தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தார். ரோமில் நடைபெற்ற 65 கிகி ஃப்ரீஸ்டைல் நிகழ்வின் இறுதிப்போட்டியில், அவர் மங்கோலிய எதிராளி -யைத் தோற்கடித்து தங்கப்பதக்கம் வென்றார். கடந்த ஆண்டு நடந்த போட்டிகளில் பஜ்ரங் புனியாவும் தங்கப்பதக்கம் வென்றார்.

---

**8.** **இந்திய அறிவியல் மற்றும் ஆராய்ச்சி பெல்லோஷிப் – 2021'க்கு தேர்வுசெய்யப்பட்டுள்ள அறிஞர்களின் எண்ணிக்கை என்ன?**




அ) 2

ஆ) 5

இ) 17

**ஈ) 40 ☑**

✓ இந்திய அறிவியல் மற்றும் ஆராய்ச்சி பெல்லோஷிப் – 2021'க்கு, 40 அறிஞர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். இந்த ஆராய்ச்சி அறிஞர்கள் ஆறு நாடுகளைச்சார்ந்தவர்களாவர். மேலும், பல்வேறு இந்திய நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி நடத்துவதற்கான பெல்லோசிப் அவர்கட்கு வழங்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சித்திட்டம், அனுபவம், கல்வித்தகுதி மற்றும் வெளியீட்டு பதிவின் அடிப்படையில் அறிஞரின் தேர்வு அமைந்துள்ளது.

---

**9.** **குற்றத்தடுப்பு தொடர்பான ஐநா மாநாட்டை நடத்தும் நாடு எது?**




அ) இந்தியா

ஆ) சீனா

இ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஈ) ஜப்பான் ☑**

✓ குற்றத்தடுப்பு தொடர்பான ஐநா மாநாடு ஜப்பானின் கியோட்டோவில் தொடங்கியது. 1970'க்குப்பின் முதன்முறையாக ஜப்பான் இம்மாநாட்டை நடத்துகிறது. குற்றவியல் நீதி, குற்றத்தடுப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சி -யை ஊக்குவிப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பு தொடர்பான முக்கிய

பிரச்னைகள், கூட்டத்தின்போது நடைபெறும் விவாதத்திற்கான நிகழ்வு நிரல்களாக வைக்கப்பட்டுள்ளன.

---

**10.** உலக சிறுநீரக நாள் கொண்டாடப்படுகிற மாதம் எது?

அ) ஜனவரி

ஆ) பிப்ரவரி

**இ) மார்ச் ☑**

ஈ) ஏப்ரல்

✓ உலக சிறுநீரக நாளானது ஆண்டுதோறும் மார்ச் மாதத்தில் வரும் இரண்டாம் வியாழக்கிழமை அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படு –கிறது. "Living Well with Kidney Disease" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். பன்னாட்டு சிறுநீரகவியல் சங்கமும் பன்னாட்டு சிறுநீரக அறக்கட்டளைகள் கூட்டமைப்பும் இணைந்து இந்த உலகளாவிய பிரச்சாரத்தை ஏற்பாடுசெய்கின்றன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மதிய உணவுத் திட்டத்தில் ஏப்ரல் முதல் ஊட்டச்சத்து மேம்படுத்தப்பட்ட அரிசி**

பள்ளிகளில் அமல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டத்தில் ஏப்ரல் மாதம் முதல் ஊட்டச்சத்து மேம்படுத்தப்பட்ட அரிசி பயன்படுத்தப்படும் என்று மத்திய உணவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. நாட்டு மக்களிடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கும் நோக்கில், ஊட்டச்சத்து மேம்படுத்தப்பட்ட அரிசியை தமிழகம் உள்ளிட்ட 15 மாநிலங்களில் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக 3 மாதங்களுக்கு மத்திய அரசு வழங்கியது. சோதனை அடிப்படையில் கடந்த 2019–20–ஆம் நிதியாண்டில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டது.

தற்போது ஆறு மாநிலங்களில் உள்ள தலா 1 மாவட்டத்தில் மட்டும் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக ஊட்டச்சத்து மேம்படுத்தப்பட்ட அரிசி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

---

**2. இந்திய எல்லைக்கருகே பிரம்மபுத்திரா நதியில் அணை**

இந்தியாவின் அருணாசல பிரதேச எல்லைக்கருகே பிரம்மபுத்திரா நதியில் அணையைக் கட்டுவதற்கு சீன நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. அருணாசல பிரதேசம், அஸ்ஸாமில் பாயும் பிரம்மபுத்திரா நதி, சீனாவின் ஆளுகைக்கு உள்பட்ட திபெத் பகுதியில் 'யார்லங் சாங்போ' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. அந்நதியில் அணையைக்கட்டுவதற்கு சீனா முடிவெடு –த்தது. அதற்கு இந்தியத் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அணைகட்டும் திட்டத்தை 2021–25'ஆம் ஆண்டுக்கான பதினான்காவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் சீனா குறிப்பிட்டிருந்தது. இத்தகைய சூழலில், அந்த ஐந்தாண்டுத்திட்டத்துக்கு சீன நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியது. இதன்மூலம் அணைகட்டுவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள –து. பிரம்மபுத்திரா நதி வங்கதேசத்திலும் பாய்வதால், சீனாவின் அணை கட்டும் திட்டத்துக்கு அந்நாடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தது.

எனினும், இந்தியா, வங்கதேசத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையி –ல் அணை கட்டப்படும் என்று சீனா பதிலளித்தது. அணையை இந்த ஆண்டுக்குள்ளாகவே கட்டிமுடிப்பதற்கு சீனா திட்டமிட்டுள்ளது. அதற்கான சுற்றுச்சூழல் ஆய்வறிக்கைகளைத் தயாரிப்பதில் சீனா மும்முரம் காட்டி வருகிறது. அருணாசல பிரதேச மாநில எல்லையை ஒட்டியுள்ள திபெத்தின் மெடாக் மாகாணத்தில் இந்த அணை கட்டப்படவுள்ளது. இதன் காரணமாக இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நிலவ வாய்ப்பிருப்பதாக நிபுணர் –கள் எச்சரிக்கின்றனர்.

---

**3. கொடுமணல் அகழாய்வில் கிடைத்த பல்லாயிரம் ஆண்டு 'பொக்கிஷங்கள்'**

கொடுமணலில் மீண்டும் தொடங்கிய அகழாய்வு பணியில், கண்ணாடி மற்றும் சங்கு வளையல், இரும்பை உருக்கும் உருக்கிகள், மண் பானை வடிவமைப்பு பொருட்கள், கால்வாய் இருந்த அடையாளம் கண்டுபிடிக்கப்ப –ட்டுள்ளது. ஈரோடு மாவட்டம், சென்னிமலை அடுத்த கொடுமணலில், தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில் திட்ட இயக்குநர் இரஞ்சித் தலைமையில், ஒன்பதாவது அகழாய்வு பணி நடந்துவருகிறது.

இதில் ஆயிரக்கணக்கான ஆண்டு பழமை வாய்ந்த, பல்வேறு பொருட்கள் கிடைத்துள்ளன. திட்ட இயக்குநர் இரஞ்சித் கூறியதாவது: கடந்த ஆண்டு நடந்த அகழாய்வில், தொழிற்கூடங்கள் இருந்த பகுதியில், நீர் வெளியேறும் வகையில் கால்வாய் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக்கால்வாய், நொய்யல் ஆற்று பகுதி வரை சென்றிருக்கலாம் எனக் கருதப்பட்டது.

இரண்டு இடங்களில், 10 மீ., நீளம், 10 மீ., அகலத்தில் குழி தோண்டி அகழாய்வு செய்ததில் 30 செ.மீ., ஆழத்திலேயே பல வகையான கல்மணி, அதற்கான மூலப்பொருட்கள், கண்ணாடி மற்றும் சங்கு வளையல்கள், இரும்பை உருக்கும் உருக்கிகள், மண் பானை வடிவமைப்பு பொருட்கள், கால்வாய் இருந்த அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், 12 செ.மீ., நீளத்தில், இரும்பு கரண்டி போன்ற பொருளும் கிடைத்துள்ளது.

ஓரடி ஆழத்திலேயே பொருட்கள் கிடைப்பதால், கவனமாக பணியில் ஈடுபட்டு வருகிறோம். இதுவரை நடந்த ஆய்வுகளில் தொழிற்கூடம், கல்லறை தனியார் நிலங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை. தற்போது, நொய்யல் ஆற்றங்கரையின் வடகரை பகுதியில், அகழாய்வு நடக்கிறது.

---

**1.** பொருளாதார விடுதலைக் குறியீடு – 2021'இல் முதலிடம் பிடித்த நாடு எது?

அ) இந்தியா



ஆ) இலங்கை

**இ) சிங்கப்பூர் ☑**

ஈ) பூடான்

✓ அமெரிக்க மதியுரையகமான தி ஹெறிடேஜ் அறக்கட்டளை வெளியிட்ட பொருளாதார விடுதலைக் குறியீடு – 2021'இல் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது. 89.7 புள்ளிகளுடன், சிங்கப்பூரைத் தொடர்ந்து நியூசிலாந்து இரண்டாவது இடத்திலும், அதைத்தொடர்ந்த முதல் ஐந்து இடங்களுள் ஆஸ்திரேலியா, சுவிச்சர்லாந்து மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன. ஆசிய–பசிபிக் நாடுகளுள் இந்தியா இருபத்தாறாவது இடத்தில் உள்ளது.

---

**2.** 'டஸ்ட்லிக்' என்பது இந்தியாவிற்கும் பின்வரும் எந்த நாட்டிற்கும் இடையிலான இராணுவப் பயிற்சியாகும்?

அ) பிரான்ஸ்



ஆ) மியான்மர்

**இ) உஸ்பெகிஸ்தான் ☑**

ஈ) ஜப்பான்

✓ 'டஸ்ட்லிக் – Dustlik' என்பது இந்தியாவிற்கும் உஸ்பெகிஸ்தானுக்கும் இடையிலான ஒரு இராணுவப்பயிற்சியாகும். இந்தக் கூட்டு இராணுவப் பயிற்சியின் இரண்டாம் பதிப்பு (டஸ்ட்லிக்–2) உத்தரகண்ட் மாநிலத்தின் சௌபதியாவில் தொடங்கியது.

✓ இருநாடுகளின் படைகளைச்சார்ந்த சுமார் 45 இராணுவ வீரர்கள் இப்பயிற்சியில் பங்கேற்கின்றனர். இக்கூட்டு இராணுவப்பயிற்சியின் முதல் பதிப்பு, கடந்த 2019 நவம்பரில் தாஷ்கண்டில் மேற்கொள்ளப்பட்டது.

---

**3.** ஆறுகளுக்கான பன்னாட்டு நடவடிக்கை நாள் (International Day of Action for Rivers) கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) மார்ச் 10

ஆ) மார்ச் 12

INTERNATIONAL DAY OF ACTION FOR RIVERS

**இ) மார்ச் 14 ☑**

ஈ) மார்ச் 16

✓ ஆண்டுதோறும் மார்ச்.14 அன்று ஆறுகளுக்கான பன்னாட்டு நடவடிக்–கை நாள் அனுசரிக்கப்படுகிறது. நடப்பாண்டு (2021), ஆறுகளுக்கான பன்னாட்டு நடவடிக்கை நாளின் 24ஆவது பதிப்பாகும். நமக்கு வாழ்வு தரும் நீராதாரத்தைப்பற்றி நமக்கும் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கோடு அர்ப்பணிக்கப்பட்ட நாளாகும் இது. 'Rights of Rivers' என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்–கான கருப்பொருளாகும்.

---

**4.** இந்திய விடுதலையின் 75ஆம் ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர் யார்?

**அ) பிரதமர் ☑**



ஆ) குடியரசுத்தலைவர்

இ) உள்துறை அமைச்சர்


ஈ) பாதுகாப்பு அமைச்சர்

✓ இந்திய விடுதலையின் 75ஆம் ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் நடுவணரசு குழுவொன்றை அமைத்தது. இந்தக்குழு தனது முதல் கூட்டத்தை அண்மையில் நடத்தியது. கொண்டாட்டங்களுக்கான நடவடிக்கைகள் தொடர்பான நடைமுறைகள் குறித்து அப்போது அது விவாதித்தது. இந்தக் குழுவில் முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல், முன்னாள் பிரதமர்கள் மன்மோகன் சிங், H D தேவேகவுடா உள்ளிட்ட 259 உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

---

**5.** ஹப்பிள் தொலைநோக்கியின் வாரிசாக NASA, ESA மற்றும் CSA ஆகியவை இணைந்து, கீழ்க்காணும் எந்தத் தொலைநோக்கியை உருவாக்கி வருகின்றன?

**அ) ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி ☑**



ஆ) கெப்லர் விண்வெளி தொலைநோக்கி

இ) ஸ்பிட்ஸர் விண்வெளி தொலைநோக்கி

ஈ) டிரான்ஸிடிங் எக்ஸோபிளானட் சர்வே செயற்கைக்கோள்

✓ ஐரோப்பிய விண்வெளி ஆய்வு முகமை (ESA), கனடிய விண்வெளி ஆய்வு முகமை (CSA) மற்றும் NASA ஆகியவை இணைந்து, ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியை உருவாக்கி வருகின்றன. இது, NASA'இன் ஹப்பிள் தொலைநோக்கியின் வாரிசாக இருக்கும். 31 அக்.31 அன்று பிரஞ்சு கயானாவிலிருந்து அரியேன்–5 ஏவுகலத்தின்மூலம் இத் தொலைநோக்கியை விண்ணுக்குச் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

---

**6.** கலாசார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரால் தொடங்கப்பட்ட அனைத்து பெண்கள் கலைக்கண்காட்சியின் பெயர் என்ன?

அ) நாரி சக்தி

Ministry of Culture
Government of India

**ஆ) அக்ஷய பாத்திரம் ☑**

இ) ஷக்தி கலா

ஈ) நாரி சம்ரிதி

✓ மத்திய கலாசார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரகலாத்சிங் படேல் 'அக்ஷய பாத்திரம்' என்ற தலைப்பில் அனைத்து பெண்களின் கலைக் கண்காட்சியை தொடங்கிவைத்தார். இக்கண்காட்சி பன்னாட்டு மகளிர் நாளன்று லலித் கலா அகாதமியில் தொடங்கிவைக்கப்பட்டது.

✓ பன்னிரண்டுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சார்ந்த 250'க்கும் மேற்பட்ட கலைப்படைப்புகளை இந்தக் கண்காட்சி காட்சிப்படுத்தும்.

---

**7.** தொழிலாளர் பணியகத்தின் PLFS & வருடாந்திர ஆய்வின்படி, இந்தியாவில் தொழிலாளர் எண்ணிக்கை விகிதம் என்ன?

அ) 27.3%

ஆ) 37.3%

**இ) 47.3% ☑**

47.3%

ஈ) 57.3%

✓ 2017–18 மற்றும் 2018–19ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட காலமுறை தொழிலாளர் படை கணக்கெடுப்பு மற்றும் தொழிலாளர் பணியகம் நடத்திய வருடாந்திர வேலைவாய்ப்பு – வேலையின்மை ஆய்வுகளின் படி, தொழிலாளர் எண்ணிக்கை விகிதம் (WPR) 47.3 சதவீதமாகவும், வேலையின்மை விகிதம் 5.8 சதவீதமாகவும் உள்ளது. இந்தத் தகவலை மத்திய தொழிலாளர் அமைச்சகம் மக்களவையில் வழங்கியது.

---

**8.** அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, 'SMS ஸ்க்ரப்பிங்' என்பதுடன் தொடர்புடைய அமைப்பு எது?

**அ) TRAI ☑**

ஆ) RBI

இ) தொலைத்தொடர்பு அமைச்சகம்

TRAI

ஈ) நிதி அமைச்சகம்

✓ ஒவ்வொரு குறுந்தகவலின் (SMS) உள்ளடக்கத்தையும் சரிபார்க்கும் செயல்முறையானது அந்தக் குறுந்தகவல் பயனரைச் சென்றடையும் முன்பே மேற்கொள்ளப்படவேண்டும் என்று இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) ஒரு வழிகாட்டுதலை வெளியிட்டது.

✓ இச்செயல்முறை 'SMS Scrubbing' என்று அழைக்கப்படுகிறது. சமீபத்தில், தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள், குறுந்தகவல் ஒழுங்குமுறை –யின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்தத் தொடங்கியபோது, சரிபார்க்–கப்படாத / பதிவுசெய்யப்படாத பல குறுந்தகவல்கள் தடுக்கப்பட்டன.

---

**9.தேசிய இணையவெளி குற்றம் தொடர்பான புகார்களை அளிக்க பயன்படும் இணையதளத்தை இயக்கும் மத்திய அமைச்சகம் எது?**

அ) மின்னணு & IT அமைச்சகம்

**ஆ) உள்துறை அமைச்சகம் ☑**

இ) பாதுகாப்பு அமைச்சகம்

ஈ) சட்டம் & நீதித்துறை அமைச்சகம்

MINISTRY OF HOME AFFAIRS

- ✓ இணையவெளி குற்ற நிகழ்வுகளை ஆன்லைனில் புகாரளிப்பதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட பொறிமுறையை வழங்குவதற்காக, உள்துறை அமைச்சகம், கடந்த 2019ஆம் ஆண்டில், தேசிய இணையவெளி குற்றம் தொடர்பான புகாரளிப்பு இணையதளத்தை அறிமுகப்படுத்தியது. கடந்த 18 மாதங்களில் மொத்தம் 3,17,439 இணையவெளி குற்றங்கள் மற்றும் 5,771 முதல் தகவல் அறிக்கைகள் இந்தத்தளத்தின்மூலம் ஆன்லைனில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்தது.
- ✓ மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

---

**10.சுகாதாரம் மற்றும் கல்வி மேல்வரி வருவாய்மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து உருவாக்கப்படவுள்ள ஒற்றைத் தொகுப்பு வைப்பு நிதியின் பெயர் என்ன?**

**அ) பிரதம மந்திரி ஸ்வஸ்திய சுரக்ஷா நிதி ☑**



ஆ) பிரதம மந்திரி ஆரோக்கிய நிதி

இ) பிரதமர் ராஷ்டிரிய ஸ்வஸ்திய நிதி

ஈ) பிரதமர் ஜன் ஆரோக்கிய நிதி

- ✓ சுகாதாரம் மற்றும் கல்விக்கான மேல்வரி வருவாய்மூலம் கிடைக்கும் நிதியிலிருந்து நிதிச்சட்டம் 2007'இன்கீழ் சுகாதாரத்தின் பங்காக காலா–வதியாகாத ஒற்றைத் தொகுப்பு வைப்புநிதியான பிரதமரின் ஸ்வஸ்திய சுரக்ஷா நிதியை உருவாக்க பிரதம அமைச்சர் தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ ஒதுக்கப்பட்ட தொகை, நிதியாண்டின் முடிவிற்குள் காலாவதியாகா–ததை உறுதிசெய்து, ஒதுக்கப்பட்ட வளங்களின் இருப்பைக்கொண்–டு அனைவருக்கும் கிடைக்கும் வகையில் பன்னாட்டு தரத்திலான மருத்துவ சேவையை வழங்குவது இதன் முக்கிய பயனாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பிஎல்ஐ திட்டத்தில் ஜப்பான் அதிக பங்களிப்பை வழங்கும்: மத்திய அரசு**

மத்திய அரசின் உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை அளிக்கும் PLI திட்டத்தில் ஜப்பானின் பங்களிப்பு பெருமளவில் இருக்கும் என எதிர்பார்ப்பதாக மத்திய தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் செயலர் குருபிரசாத் மொஹபத்ரா தெரிவித்துள்ளார்.

தொலைத்தொடர்பு, தானியங்கி உள்ளிட்ட பதிமூன்று முக்கிய துறைகளில் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக PLI திட்டத்தை மத்திய அரசு அறிவித்தது. நடுவணரசின் துறைகளில் பல்வேறு சீர்திருத்த நடைமுறைகளை அறிமு–கப்படுத்தியதன் ஒருபகுதியாக இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிப்பதுடன் அவற்றின் ஏற்றுமதியையும் ஊக்குவிக்க வேண்டும் என்பதே PLI திட்டத்தின் முக்கிய நோக்கம்.

குறிப்பாக, உணவுப்பதப்படுத்துதல், மருத்துவ உபகரணங்கள், உதிரிபாக–ங்கள், ஜவுளி மற்றும் சோலார் பிவி தகடுகள் உள்ளிட்ட துறைகள் அதிக பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோன்ற தொழில்துறைகளில் ஜப்பான் உலக அளவில் அதிக நிபுணத்துவம் பெற்ற நாடாக விளங்குகிறது. எனவே, இந்தியாவின் PLI திட்டத்தில் ஜப்பான் பெரும் பங்களிப்பை வழங்கும் என்பது இந்தியாவின் மிகுந்த எதிர்பார்ப்பாக உள்ளது.

---

**2.சாகித்திய அகாதெமி விருதுகள் அறிவிப்பு: இமையம், வீரப்ப மொய்லி உள்ளிட்டோருக்கு விருது**

2020'ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருதுகள் அறிவிக்கப்பட்டு–ள்ளன. அதில், தமிழில் 'செல்லாத பணம்' நாவலை எழுதிய எழுத்தாளர் இமையம், கன்னடத்தில் 'ஸ்ரீபாகுபலி அஹிம்சா திக்விஜயம்' பெருங்கவிதை நூலை எழுதிய முன்னாள் மத்திய அமைச்சர் வீரப்ப மொய்லி, ஆங்கிலத்தில் 'When God is a Traveller' என்ற கவிதை நூலை எழுதிய அருந்ததி சுப்பிரமணியம் உள்ளிட்ட இருபது பேருக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

7 கவிதை நூல்கள், 4 நாவல்கள், 5 சிறுகதை தொகுப்புகள், 2 நாடகங்கள், ஒரு பெருங்கவிதை நூல், ஓர் அனுபவ நூல் என மொத்தம் இருபது மொழிகளில் வெளியான இருபது நூல்கள் சாகித்திய அகாதெமி விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நாவல்களுக்காக, இமையம் (தமிழ்), நந்த கரே (மராத்தி), மகேஷ் சந்திர சர்மா கௌதம் (சமற்கிருதம்), ஹுசைன் அல் ஹேக் (உருது) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். சிறுகதை தொகுப்புகளுக்காக, அபூர்வ குமார் சைகியா (அஸ்ஸாமி), தரணிதர் ஒவாரி (போடோ), ஹிதய் கொல் பாரதி (காஷ்மீரி), காமாகாந்த் ஜா (மைதிலி), குருதேவ் சிங் ரூபனா (பஞ்சாப்) ஆகியோர் தேர்வாகியுள்ளனர்.

கவிதை நூல்களுக்காக, அருந்ததி சுப்பிரமணியம் (ஆங்கிலம்), ஹரீஷ் மீனாட்சி (குஜராத்தி), அனாமிகா (ஹிந்தி), R S பாஸ்கர் (கொங்கணி), இரு–ங்பாம் தேவன் (மணிப்பூரி), ரூப்சந்த் ஹன்ஸ்டா (சந்தாலி), நிகிலேஷ்வர் (தெலுங்கு) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். நாடக நூல்களுக்காக, கியான் சிங் (டோக்ரி), ஜேதோ லால்வானி (சிந்தி) ஆகிய இருவருக்கு விருது வழங்கப்படவுள்ளது.

அனுபவக்குறிப்பு நூலுக்காக, வங்கமொழி எழுத்தாளர் மணிசங்கர் முகோ–பாத்யாய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மலையாளம், நேபாளி, ஒடியா, இராஜஸ்தானி ஆகிய மொழிகளில் வெளிவந்த படைப்புகளுக்கு பின்னர் விருது அறிவிக்கப்படும். சாகித்திய அகாதெமி விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்–டிருப்பவர்களுக்கு ₹1,00,000 ரொக்கத்துடன் தாமிர கேடயம் பரிசளிக்கப்–படும். விருது வழங்கும் விழா நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

---

**3.இந்தோ–பசிபிக் பிராந்தியத்துக்கான COVID தடுப்பூசி இந்தியாவில் உற்பத்தி. 'QUAD' மாநாட்டில் முடிவு**

இந்தோ–பசிபிக் பிராந்தியத்துக்குத் தேவையான கரோனா தடுப்பூசிகளை இந்தியாவில் தயாரிப்பது என்று 'QUAD' கூட்டமைப்பின் முதல் மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும், இதற்கு கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள அமெரிக்கா, ஜப்பான் நிதியுதவி அளிப்பதென்றும், ஆஸ்திரேலியா தடுப்பூசி எடுத்துச்செல்லும் போக்குவரத்துக்கான உதவிகளை அளிப்பது என்றும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தோ–பசிபிக் பிராந்திய நலனுக்காக இம்மாநாட்டில் எடுக்கப்பட்டிருக்கும் மிக முக்கியமான முடிவு இது. இதன்மூலம், மிகப்பெரிய அளவிலான முதலீட்டில் 2022'ஆம் ஆண்டு இறுதிக்குள் கோடிக்கணக்கான COVID தடுப்பூசிகளை இந்தியா தயாரிக்கவுள்ளது.

---

**4. வளர்ச்சிமிகு நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு ஐந்தாம் இடம்**

அனைவரையும்கவரும் விதத்திலான வளர்ச்சியைக்கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா ஐந்தாமிடத்தைப் பிடித்துள்ளதாக பிரைஸ் வாட்டர் கூப்பர்ஸ் நிறுவனத்தின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த ஆய்வில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: அடுத்த 12 மாதங்களில் மிகச்சிறந்த வளர்ச்சியை தக்கவைக்கும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. இதனைத் தொடர்ந்து சீனா இரண்டாவது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இப்பட்டியலில் 17 சதவீத பங்களிப்புடன் ஜெர்மனி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. அதேசமயம், BREXIT ஒப்பந்தத்துக்குப் பிறகு பிரிட்டன் இந்தப் பட்டியலில் நான்காவது இடத்துக்கு (11%) முன்னேறியுள்ளது. இதன்மூலம், அந்நாடு இந்தியாவை (8 சதவீதம் / 5ஆவது இடம்) விஞ்சியுள்ளது. இதே பட்டியலில், ஆஸ்திரேலியாவை பின்னுக்குத் தள்ளி ஜப்பான் ஆறாவது இடத்தை பிடித்துள்ளதாக அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. ரேஷன் பொருள்களை வாங்க, "மேரா ரேஷன்" செயலி அறிமுகம்**

நாடு முழுக்க 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' முறை விரைவில் முழுமையாக அமலபடுத்தப்படவுள்ள நிலையில் இதற்காக 'மேரா ரேஷன்' என்கிற திறன்பேசி செயலியை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' முறையை முதன்முதலில் நடுவணரசு 2019ஆம் ஆண்டு நான்கு மாநிலங்களில் அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தை தற்போது 2020 டிசம்பர் மாதம் 32 மாநிலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் தமிழ்நாடு உள்ளிட்ட பதினேழு மாநிலங்களில் முழுமையாக செயல்பாட்டிற்கும் வந்துவிட்டது. இதையொட்டி மத்திய அரசு 'மேரா ரேஷன்' என்கிற திறன்பேசி செயலியையும் உருவாக்கியுள்ளது.

**6. தமிழ்நாட்டில் இணையவழி கல்வியை கற்பிக்க 11 உயர்கல்வி நிறுவனங்கள்: பல்கலைக்கழக மானியக்குழு அனுமதி**

இணையவழி கல்வியை வழங்குவதற்காக, தமிழ்நாட்டில் 11 கல்வி நிறுவனங்களுக்கு பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அனுமதி வழங்கி–யுள்ளது. நாடு முழுவதும் இயங்கும் உயர்கல்வி நிறுவனங்களில் இணையவழியில் கல்வி பயிற்றுவிக்க வழிகாட்டு நெறிமுறைகளின்படி 'NAAC' அங்கீகாரம் அல்லது தேசிய தரவரிசை பட்டியலில் (NIRF) முன்னணியில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமே UGC அனுமதி வழங்குகிறது. இந்நிலையில், 2021ஆம் ஆண்டில் இணையவழி கல்வி திட்டத்தின்கீழ் மாணவர் சேர்க்கை நடத்த 37 கல்வி நிறுவனங்களுக்கு UGC அனுமதி வழங்கியுள்ளது. அதில், தமிழகத்தைச் சேர்ந்த 11 உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது.

அண்ணா பல்கலைக்கழகத்தில் ஒரு முதுநிலை படிப்புக்கும், பாரதிதாசன் பல்கலையில் பதினொரு படிப்புகளுக்கும், மதுரை காமராஜர் பல்கலையில் 11 படிப்புகளுக்கும், பெரியார் பல்கலையில் 7 படிப்புகளுக்கும், அழகப்பா பல்கலையில் 12 படிப்புகளுக்கும் அனுமதி கிடைத்துள்ளது. இதுதவிர 6 தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது.

---

**7. மிதாலி ராஜ் சாதனை:**

சர்வதேச பெண்கள் கிரிக்கெட் போட்டிகளில் 10,000 ரன்களை கடந்த முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை படைத்தார் மிதாலி ராஜ். லக்னோவில் உள்ள ஏகனா கிரிக்கெட் மைதானத்தில் இந்தியா – தென் ஆப்பிரிக்கா மகளிர் அணிகள் இடையிலான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இந்த ஆட்டத்தில், இந்திய அணியின் கேப்டனான மிதாலி ராஜ் 36 ரன்களில் ஆட்டமிழந்தார்.

முன்னதாக அவர், 35 ரன்களை கடந்தபோது அனைத்து விதமான சர்வ–தேச கிரிக்கெட்போட்டிகளிலும் 10,000 ரன்களை கடந்த முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை படைத்தார். சர்வதேச கிரிக்கெட்டில் இச்சாதனையை எட்டும் இரண்டாவது வீராங்கனை மிதாலி ராஜ் ஆவார். இவ்வகை சாதனையில் இங்கிலாந்தின் முன்னாள் கேப்டன் சார்லோட் எட்வர்ட்ஸ் 10,273 ரன்கள் குவித்து முதலிடத்தில் உள்ளார்.

---

**8. நாட்டின் தொழில் துறை உற்பத்தியில் மீண்டும் பின்னடைவு**

நாட்டின் தொழிற்துறை உற்பத்தியில் ஜனவரி மாதத்தில் மீண்டும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவி–வரத்தில் தெரிவித்துள்ளதாவது: உற்பத்தி, சுரங்கம் மற்றும் பொறியியல் துறைகளின் உற்பத்தி கணிசமான அளவுக்கு குறைந்து போனதன் விளைவாக நாட்டின் தொழில் துறை உற்பத்தி 2021 ஜனவரி மாதத்தில் 1.6 சதவீதமாக மீண்டும் பின்னடைந்துள்ளது.

தொழில்துறை உற்பத்தி குறியீட்டெண் (ஐஐபி) கணக்கீட்டில் 77.6 சதவீத பங்களிப்பை வழங்கி வரும் உற்பத்தி துறையின் செயல்பாடு ஜனவரியில் 2 சதவீதமாக சரிந்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தி–ல் 1.8 சதவீத வளர்ச்சியைப் பெற்றிருந்தது. இந்தத்துறையைப்போன்றே பொறியியல் துறையின் செயல்பாடும் 4.4 சதவீத சரிலிருந்து 9.6 சதவீத பின்னடைவை நோக்கி சென்றுள்ளது. சுரங்கத் துறையும் 4.4 சதவீத வளர்ச்சி விகிதத்திலிருந்து 3.7 சதவீதமாக பின்னடைந்துள்ளது.

ஏப்ரல்–ஜனவரி காலகட்டத்தில் ஐஐபி 12.2 சதவீதம் என்ற அளவில் பின்னடைவை நோக்கி நகர்ந்துள்ளது. கடந்த நிதியாண்டில் இதன் வளா்ச்சி விகிதம் அதிக மாற்றமின்றி 0.5 சதவீதமாக இருந்தது என மத்திய அரசு புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

---

**9. எழுத்தாளர் கே வி ஜெயஸ்ரீக்கு மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாதெமி விருது**

தமிழில் சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகடாமி விருது எழுத்தாளர் கே வி ஜெயஸ்ரீக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மலையாள எழுத்தாளர் மனோஜ் குரூரின் 'நிலம் பூத்து மலர்ந்த நாள்' நாவல் மொழிபெயர்ப்புக்காக இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது. ₹50,000 ரொக்கமும், செம்புப்பட்டயமும் விருதாக அளிக்கப்படுவது வழக்கம்.

---

**1.சிறப்பு பெண்கள் மொகல்லா கிளினிக்குகளைத் தொடங்குவதாக அறிவித்துள்ள இந்திய மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) உத்தர பிரதேசம்

**ஆ) புது தில்லி ☑**

இ) பீகார்

ஈ) குஜராத்

✓ அடுத்த நிதியாண்டில் நகரம் முழுவதும் சிறப்பு பெண்கள் மொஹல்லா கிளினிக்குகள் திறக்கப்படும் என்று தில்லி அரசு சமீபத்தில் அறிவித்தது. 2021-22ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தை முன்வைக்கும்போது, துணை முதலமைச்சரும் நிதியமைச்ச-ருமான மனீஷ் சிசோடியா இந்தத் திட்டத்தை அறிவித்தார்.

✓ இது, பெண்களுக்கு, வீட்டிலிருந்து நடந்து செல்லும் தூரத்தில், இலவச மகளிர் மருத்துவ மற்றும் பிற மருத்துவ சேவைகளை வழங்கும்.

---

**2. பின்வரும் எந்தத்துறை, தனது அதிகாரிகளுக்காக ஆன்லைனில் 5G சான்றிதழுடன் கூடிய படிப்பைத் தொடங்கியுள்ளது?**

அ) நிதியியல் சேவைகள் துறை

**ஆ) தொலைத்தொடர்பு துறை ☑**

இ) மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை

ஈ) தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத்துறை

✓ தொலைத்தொடர்புத்துறை தனது அதிகாரிகளுக்காக ஆன்லைன் 5G சான்றிதழுடன்கூடிய படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ இந்தத் துறையின் பயிற்சிப்பிரிவான கொள்கை ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் பயிற்சிக்கான தேசிய தொலைத்தொடர்பு நிறுவனம் நடத்தும் 12 வார ஆன்லைன் பாடத்திட்டத்தைத் தொடங்குவதன்மூலம், 5G வல்லுந-ர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களைக்கொண்ட ஓர் உள்ளுறை குழுமத்தை உருவாக்குவது இந்தத் துறையின் நோக்கமாகும்.

---

**3.பொருளாதார விவகார துறையுடன் இணைந்து சொத்து பணமாக்-குதல் குறித்த தேசிய அளவிலான மெய்நிகர் பயிலரங்கை ஏற்பாடு செய்த நிறுவனம் எது?**

**அ) NITI ஆயோக் ☑**

ஆ) TERI

இ) FICCI

ஈ) ASSOCHAM

✓ NITI ஆயோக், பொருளாதார விவகாரங்கள் துறையுடன் இணைந்து, சொத்தை பணமாக்குதல் குறித்த தேசிய அளவிலான மெய்நிகர் பயிலரங்-கை ஏற்பாடு செய்தது. இந்தச் செயலமர்வுக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமைதாங்கினார். இதில், மாநிலங்களின் தலைமைச்செயலர்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிர்வாகிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

---

**4.சொத்து மீட்டமைப்பு இந்தியா லிமிடெட் (ARCIL)'இன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ) A K பல்லா

**ஆ) பல்லவ் மொகபத்ரா ☑**



இ) G C முர்மு

ஈ) R K மாத்தூர்

✓ சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவின் முன்னாள் தலைமைச்செயலதிகாரி பல்லவ் மொகபத்ரா, சொத்து மீட்டமைப்பு இந்தியா லிட்'இன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ARCIL என்பது இந்தியாவின் பழைமையான சொத்து புனரமைப்பு நிறுவனமாகும்; இது, 2002'இல் நிறுவப்பட்டது.

✓ பல்லவ் மொகபத்ராவுக்கு முன்பு, தலைமைச்செயலதிகாரியாக விநாயக் பாகுகுணா அப்பொறுப்பினை வகித்து வந்தார்.

---

**5. ஐநா அவையின் புற-தணிக்கையாளர் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய ஆளுமை யார்?**

அ) A K பல்லா



ஆ) பல்லவ் மொகபத்ரா

**இ) G C முர்மு ☑**

ஈ) R K மாத்தூர்

✓ இந்தியாவின் தலைமைக் கணக்கு தணிக்கை அதிகாரி கிரிஷ் சந்திர முர்மு, 2021ஆம் ஆண்டிற்கான ஐநா அவையின் புற-தணிக்கையாளர்-கள் குழுவின் தலைவராக தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழுவில் இந்தியா, ஜெர்மனி, சீனா, ஐக்கியப் பேரரசு, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, இத்தாலி, இந்தோனேசியா, இரஷ்யா உள்ளிட்ட நாடுகள் உள்ளன. ஐநா பொது அவையானது, 1959'இல் ஐநா அமைப்பின் தனிப்பட்ட புற-தணிக்கையாளர்களுடன் இணைந்து புற-தணிக்கையாளர்களின் குழுவை நிறுவியது.

---

**6. அண்மையில் இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்ட மூன்றாவது 'ஸ்கார்பீன்' இரக நீர்மூழ்கிக்கப்பலின் பெயர் என்ன?**

அ) INS கனகலதா



ஆ) INS சென்னை

இ) INS கொல்கத்தா

**ஈ) INS கரஞ்ச் ☑**

✓ இந்திய கடற்படை தனது கடற்படையில், 'INS கரஞ்ச்' – மூன்றாவது 'ஸ்கார்பீன்' இரக நீர்மூழ்கிக்கப்பலை பணியில் சேர்த்துள்ளது. இது, மசகன் கப்பல் கட்டும் நிறுவனத்தால் அதன் 'திட்டம்-75'இன்கீழ் கட்டப்ப-ட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 6 'ஸ்கார்பீன்' இரக நீர்மூழ்கிக்கப்பல்கள் பிரான்ஸ் தொழில்நுட்பத்துடன் கட்டப்பட்டுள்ளன.

---

**7.இந்திய விடுதலையின் எழுபத்தைந்தாம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் கொண்டாட்டங்களுக்கு என்ன பெயர் சூட்டப்பட்டுள்ளது?**

அ) ஆதி மகோத்ஸவம்

ஆ) விடுதலைப்பெருவிழா

இ) சுதந்திர இந்தியா

**ஈ) அம்ரித் மகோத்ஸவம் ☑**

✓ இந்திய விடுதலையின் எழுபத்தைந்தாம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் 'அம்ரித் மகோத்ஸவத்தின்' ஒருபகுதியாக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருக்குமாறு பிரதமர் மோடி கேட்டுக்கொண்டார்.

✓ விடுதலையின் 75ஆம் ஆண்டை நினைவுகூரும் இந்த அம்ரித் திருவிழா, நாட்டின் 75 இடங்களில், 75 வாரங்களுக்கு கொண்டாடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**8. NASA'இன் கூற்றுப்படி, பூமியில் உள்ள எந்த ஏரி, செவ்வாய்க் கோளின் ஜெசெரோ பள்ளத்தை ஒத்திருக்கிறது?**

அ) பழவேற்காடு ஏரி



**ஆ) சால்தா ஏரி ☑**

இ) வேம்பநாடு ஏரி

ஈ) விக்டோரியா ஏரி

✓ NASA'இன் ஓர் அண்மைய வெளியீட்டின்படி, துருக்கிய ஏரி சால்தாவில் காணப்படும் பாறை மற்றும் கனிம இருப்புகள் செவ்வாய்க்கோளின் ஜெசெரோ பள்ளத்துடன் மிகவும் ஒத்துள்ளது.

✓ சமீபத்தில், NASA'இன் பெர்சிவரன்ஸ் விண்கலம், செவ்வாய்க்கோளின் ஜெசெரோ பள்ளத்தில் தரையிறங்கியது. அந்தப்பள்ளம் ஒரு காலத்தில் நீரால் நிரம்பியிருந்திருக்கலாம் எனக்கூறப்படுகிறது.

---

**9.உலக நுகர்வோர் உரிமைகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) பிப்ரவரி 12

**ஆ) மார்ச் 15 ☑**

இ) ஜனவரி 16

ஈ) ஏப்ரல் 9




✓ நுகர்வோர் உரிமைகளை மேம்படுத்துவதற்கும், நுகர்வோர், நேர்மைய -ற்ற வர்த்தகர்களிடமிருந்து பாதுகாக்கப்படுவதையும் அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்குமாக ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.15 அன்று உலக நுகர்வோர் உரிமைகள் நாள் அனுசரிக்கப்படுகிறது. "Tackle plastic pollution" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**10.தொலைத்தொடர்பு உரிம விதிமுறைகளில் மேற்கொள்ளப்பட்ட சமீப திருத்தத்தின்படி, நெட்வொர்க்குகளை மேம்படுத்துவதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஆணையம் எது?**

அ) தொலைத்தொடர்புத்துறை செயலாளர்

**ஆ) தேசிய இணையவெளி பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் ☑**

இ) தொலைத்தொடர்பு அமைச்சர்

ஈ) பிரதமர்



✓ மத்திய அரசானது அண்மையில் தொலைத்தொடர்பு உரிம விதிமுறைக -ளை திருத்தியது. அது நம்பகமற்ற மூலங்களிலிருந்து பிணைய உபகர -ணங்கள் நிறுவப்படுவதைக் கட்டுப்படுத்த உதவும். திருத்தங்களின்படி, தற்போதுள்ள நெட்வொர்க்குகளை மேம்படுத்துவதற்கு, தொலைதொடர்பு இயக்கிகள் தேசிய இணையவெளி பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளரிடம் (NCSC) இருந்து அனுமதிபெறவேண்டும்.

✓ தொலைத்தொடர்பு உபகரணங்களை வாங்குவதற்கான நிபந்தனைக -ளை விதிக்கக்கூடிய ஆணையமாக NCSC இருக்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மாம்பழம் உற்பத்தி 4% அதிகரிக்கும்**

மாம்பழ உற்பத்தி நடப்பு பயிர் பருவத்தில் 4.24 சதவீதம் அதிகரிக்கும் என மத்திய வேளாண் அமைச்சகம் தனது அண்மைய புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைச்சகம் மேலும் கூறியுள்ளதாவது: 'பழங்களின் அரசன்' என்று வர்ணிக்கப்படும் 'மாம்பழத்தின்' உற்பத்தி நடப்பு 2020-21 பயிர் பருவத்தில் 2.11 கோடி டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2019-20'ஆம் ஆண்டு உற்பத்தியான 2.02 கோடி டன்னுடன் ஒப்பிடுகையில் 4.24% அதிகமாகும்.

கோடைகால பழங்களான தர்பூசணி மற்றும் முலாம்பழம் ஆகியவற்றின் விளைச்சல் கடந்தாண்டைக் காட்டிலும் நடப்பாண்டில் குறைவாக இருக்கும் என்று தோட்டக்கலை துறை பயிர்களுக்கான முதல் கட்ட மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, முலாம்பழம் விளைச்சல் நடப்பாண்டில் 13.60 இலட்சம் டன்னிலிருந்து 13 இலட்சம் டன்னாகவும், தர்பூசணி உற்பத்தி 31.5 லட்சம் டன்னிலிருந்து 31.20 லட்சம் டன்னாகவும் குறையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், வாழைப்பழ உற்பத்தி 2020-21 பயிர் பருவத்தில் 3.26 கோடி டன்னிலிருந்து 3.37 கோடி டன்னாக இருக்கும். நாட்டில் ஒட்டுமொத்த பழவகைகளின் உற்பத்தி நடப்பாண்டில் 10.2 கோடி டன்னிலிருந்து 10.32 கோடி டன்னாக அதிகரிக்கும் என வேளாண் அமைச்சகம் புள்ளிவிவர மதிப்பீட்டில் தெரிவித்துள்ளது.

---

**2. உயர்வளிமண்டல ஆய்வுக்காக ISRO'இன் 'சவுண்டிங் இராக்கெட்': வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது**

உயர்வளிமண்டல பரப்பில் நிலவும் காற்று மற்றும் பிளாஸ்மா அயனிகள் தொடர்பான ஆய்வுக்காக ISRO சார்பில் 'சவுண்டிங் இராக்கெட்' ஏவப்பட்டது. ககன்யான், சந்திரயான் 3 உட்பட பல்வேறு ஆய்வுத்திட்டங்க -ளை இந்திய விண்வெளி ஆய்வுமையம் (ISRO) தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. வணிகரீதியாக வெளிநாடுகளின் செயற்கைக்கோள்களும் விண்ணில் செலுத்தப்பட்டு வருகின்றன. இதற்கிடையே, சிறியரக ஆய்வு சாதனங்களை புவியின் தாழ்வட்டசுற்றுப்பாதையில் நிலைநிறுத்தவும், வளிமண்டலம் தொடர்பான விண்வெளி ஆய்வுக்கும் 'சவுண்டிங் இராக்கெ -ட்கள்' பயன்படுத்தப்படுகின்றன.

ISRO'இடம் RH-200, RH-300, RH-560 என மூன்றுவிதமான சவுண்டிங் இராக்கெட்கள் உள்ளன. இது இருநிலைகளைக் கொண்டது. இவற்றின் மூலம் 100 கிலோ வரையிலான ஆய்வுக்கருவிகளை அதிகபட்சம் 475 கிமீ தூரங்கொண்ட புவியின் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தமுடியும். அதன்படி, கடந்த 1965ஆம் ஆண்டு முதல் இதுவரை ISRO சார்பில் 100'க்கும் மேற்பட்ட 'சவுண்டிங் ராக்கெட்கள்' வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன.

**RH 560 இரக இராக்கெட்:**

அந்த வரிசையில், ஆந்திர மாநிலம் ஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து ISRO சார்பில் RH 560 இரக சவுண்டிங் இராக்கெட் கடந்த 12ஆம் தேதி வெற்றிகரமாக ஏவப்பட்டது. புவி பரப்புக்கு மேலுள்ள உயர்வளிமண் -டலத்தில் வீசக்கூடிய காற்று, பிளாஸ்மா அயனிகளின் செயல்பாடு ஆகிய -வற்றில் நிலவும் மாற்றங்கள் தொடர்பான ஆய்வுக்காக இந்த இராக்கெட் அனுப்பப்பட்டுள்ளது.

---

**3. விஜய் ஹசாரே கோப்பை: நான்காவது முறையாக மும்பை அணி சாம்பியன்**

தில்லியில் நடந்த விஜய் ஹசாரே கோப்பையின் இறுதி ஆட்டத்தில் உத்தர பிரதேச அணியை ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வென்று நான்காவது முறையாக மும்பை அணி சாம்பியன் பட்டத்தை வென்றது. முதலில் பேட்டிங்செய்த உத்தர பிரதேச அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 312 ரன்கள் சேர்த்தது. 313 ரன்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய மும்பை அணி 41.3 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 315 ரன்கள் சேர்த்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

மும்பை அணித்தரப்பில் ஆபாரமாக ஆடி சதம் அடித்து 108 ரன்களுடன் (18 பவுண்டரிகள்) இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த ஆதித்யா தாரே ஆட்டநாயகனாகத் தேர்வுசெய்யப்பட்டார். இந்த விஜய் ஹசாரே கோப்பைத் தொடரில் பிரித்வி ஷா மொத்தம் 827 ரன்கள் எடுத்துள்ளார். ஒரு தொடரில் அதிகபட்சமான ரன்களை விளாசிய முதல் வீரர் எனும் பெருமையையும் பிரித்வி ஷா பெற்றார்.

---

**1.** **எந்த நடுவண் அமைச்சகத்தின்கீழ், 'APEDA' நிறுவப்பட்டது?**

அ) வேளாண் அமைச்சகம்

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**இ) வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் ☑**

ஈ) உணவுப்பதனிடும் தொழிற்சாலைகள் அமைச்சகம்

✓ வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது (APEDA) 1985ஆம் ஆண்டு டிசம்பரில் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட APEDA சட்டத்தின்கீழ் இந்திய அரசால் நிறுவப்பட்டது. இது வணிகம் & தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் அமைக்கப்பட்டது. வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக, APEDA, அண்மையில் தனது முதல் மெய்நிகர் வர்த்தக கண்காட்சியைத் தொடங்கியது.

---

**2.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற ககிர்மாதா கடற்கரை அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) ஆந்திர பிரதேசம்

**ஆ) ஒடிஸா ☑**

இ) மகாராஷ்டிரா

ஈ) குஜராத்



✓ அழிவின் விளிம்பிலிருக்கும் ஆலிவ் ரிட்லி பெண் ஆமைகள் ஒடிஸா மாநிலத்தில் உள்ள ககிர்மாதா கடற்கரைக்கு வரத்தொடங்கியுள்ளன. இந்த இடம், இவ்வினங்கள் முட்டையிட பயன்படும் உலகின் மிகப்பெரிய முட்டையிடும் தளம் எனக்கூறப்படுகிறது. இந்த நிகழ்வு ஸ்பானிஷ் மொழியில் "அரிபாடா" என்று அழைக்கப்படுகிறது. கடந்த ஆண்டு, சுமார் 4.50 இலட்சம் ஆமைகள் இந்தக்கடற்கரைக்கு வருகை புரிந்தன.

---

**3.** **ஓர் அண்மைய ஆய்வின்படி, கடல்களில் வெப்பமயமாதலால், எவ்வுயிரினத்தின் வளர்சிதை மாற்றத்தில் பாதிப்பேற்பட்டுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது?**

அ) கடலாமைகள்

ஆ) திமிங்கலங்கள்

**இ) சுறாக்கள் ☑**

ஈ) ஓங்கில்கள்



✓ சயின்டிபிக் ரிப்போர்ட்ஸ் என்னும் இதழில் அண்மையில் வெளியான ஓர் ஆய்வின்படி, கடல்களின் வெப்பமயமாதல் சுறாக்களின் வளர்சிதை மாற்றத்தை பாதித்ததாகக் கூறப்படுகிறது. மிகுந்த வெப்பநிலையில் வளரும் சுறாக்கள் சராசரி வெப்பநிலையில் வளரும் சுறாக்களைவிட குறைவான எடைகொண்டதாக உள்ளன. குட்டிசுறாக்கள், உயிர்வாழத்தேவையான ஆற்றல் இல்லாமல், மிகச்சிறியதாக பிறக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

---

**4.** **இந்திய கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் அமைந்துள்ள இடம் எது?**

**அ) லக்னோ ☑**

ஆ) தஞ்சாவூர்

இ) வாரணாசி

ஈ) சிவகங்கை

✓ ICAR – இந்திய கரும்பு ஆராய்ச்சி நிறுவனம், உத்தரபிரதேச மாநிலத்தில் லக்னோவில் அமைந்துள்ளது. உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சகமும் உள்நாட்டு வான்போக்குவரத்து இயக்குநரகமும் ட்ரோன்களைப் பயன்படுத்த IISR'க்கு நிபந்தனை விலக்கு அளித்துள்ளன.

✓ ட்ரோன்களைப் பயன்படுத்தி பூச்சி மற்றும் கரும்பு பயிரின் நோய்களைக் கட்டுப்படுத்த, ட்ரோன் முறையிலான தெளித்தல் தீர்வை மதிப்பீடு செய்யும் சோதனைகளை இந்நிறுவனம் நடத்தும்.

---

**5.** **தெலுங்கானா மாநிலத்தில் இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை அமைக்கவுள்ள அமைப்பு எது?**

அ) NHPC

**ஆ) NTPC ☑**

இ) REC

ஈ) BHEL

✓ NTPC (தென் மண்டலம்) தெலுங்கானாவின் இராமகுண்டத்தில் இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின் நிலையத்தை அமைக்க உள்ளது. இது, 100 MW திறன்கொண்ட திட்டமாகும். இது, தற்போது நாட்டின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்னுற்பத்தி ஆலையாக இருக்கும். NTPC, சுமார் 450 MW சூரிய சக்தி மற்றும் 217 MW மிதக்கும் சூரிய மின்னுற்பத்தி ஆகியவற்றை செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

---

**6.** **பன்னாட்டு ஒலிம்பிக் குழுமத்தின் தலைவராக மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ) தாமஸ் பேச் ☑**

ஆ) ஜார்ஜ் மெக்னேகர்

இ) மேரி கோம்

ஈ) ரிச்சர்ட் கேரியன்



✓ ஜெர்மன் வழக்குரைஞர் தாமஸ் பேச், பன்னாட்டு ஒலிம்பிக் கமிட்டியின் தலைவராக மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 4 ஆண்டு காலத்திற்கு அவர் இப்பதவியிலிருப்பார். டோக்கியோ ஒலிம்பிக்கை வெற்றிகரமாக நடத்துவதே அவரது உடனடி பணியாகும். 93–1 என்ற பெரும்பான்மை வாக்குகளை அவர் அந்தத்தேர்தலில் பெற்றார்.

---

**7.** **இந்தியாவில் சூரிய மின்னுற்பத்தி தொகுதிகளை இறக்குமதி செய்வதற்கு, எவ்வளவு சதவீதம் சுங்க வரி விதிக்கப்படுகிறது?**

அ) 5%

ஆ) 10%

இ) 15%

**ஈ) 40% ☑**

✓ சூரிய மின்னுற்பத்தி தொகுதிகளை இறக்குமதி செய்வதற்கு 40% சுங்க வரியும் சூரிய மின்கலங்களை இறக்குமதி செய்வதற்கு 25% சுங்க வரியும் விதிக்க இந்திய அரசு முடிவுசெய்துள்ளது. இறக்குமதியைக் குறைப்பதற்கும், சூரிய மின்னுற்பதிக்கூறுகளின் உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் புதிய சுங்க வரி, 2022 ஏப்ரல் முதல் நடைமுறைக்கு வரும்.

**8.** **கீழ்காணும் எந்த அமைச்சகம் ESI திட்டத்தை PM–JAY உடன் ஒருங்கிணைக்கவுள்ளது?**

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) நலவாழ்வு & குடும்பநலத்துறை அமைச்சகம்

**இ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

ஈ) சமூக நீதி அமைச்சகம்

✓ சத்தீஸ்கர், கர்நாடகா, மத்திய பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் உள்ள 113 மாவட்டங்களில் ஆயுஷ்மான் பாரத பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய (PM–JAY) திட்டத்துடன் ESI திட்டத்தை ஒன்றிணைக்க மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் தொடங்கியுள்ளது. இந்த ஒருங்கிணைப்பின்மூலம், 1.35 கோடி ESI பயனாளிகள் PM–JAY திட்டத்தின்கீழ் இலவச சிகிச்சையின் பலன்களைப் பெறமுடியும்.

---

**9.** **சமீபத்தில், அரசர் பூமிபால் பன்னாட்டு உலக மண் நாள் விருது – 2020'ஐ வென்ற இந்திய ஆராய்ச்சி நிறுவனம் எது?**

அ) NHPC

ஆ) NTPC

**இ) ICAR ☑**

ஈ) HAL

✓ புது தில்லியில் உள்ள ICAR (இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில்) சமீபத்தில் அரசர் பூமிபால் பன்னாட்டு உலக மண் நாள் விருது–2020'ஐ வென்றது. நலம்மிக்க எண்ணெய்களின் முக்கியத்துவம்குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான அவ்வமைப்பின் அர்ப்பணிப்புக்காக இது வழங்கப்பட்டுள்ளது.

---

**10.செயற்கைக்கோள் தரவைப்பயன்படுத்தி காற்றின் தரத்தைக் கண்காணிப்பதற்காக, எந்த நாட்டின் விண்வெளி நிறுவனத்துடன் ISRO கூட்டிணைந்துள்ளது?**

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஆ) ஜப்பான் ☑**

இ) பிரான்ஸ்

ஈ) இரஷ்யா

- ✓ இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) மற்றும் ஜப்பான் விண்வெளி ஆய்வு முகமை (JAXA) ஆகியவை செயற்கைக்கோள் தரவுகளைப்பயன்படுத்தி, நெற்பயிர் பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு மற்றும் காற்றின் தரத்தைக் கண்காணிப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள பங்குதாரர்களாக இருக்க முடிவுசெய்துள்ளன.
- ✓ புவி கண்காணிப்பு, நிலவு திட்டத்தில் ஒத்துழைப்பு மற்றும் செயற்கைக்கோள் வழிசெலுத்தல் ஆகியவற்றில் நடைபெற்றுகொண்டிருக்கும் ஒத்துழைப்பையும் அதிகாரிகள் ஆய்வுசெய்தனர். விண்வெளிச்சூழல் விழிப்புணர்வு மற்றும் தொழிற்முறை பரிமாற்றத் திட்டத்தை கொண்டுவரவும் இருநாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தஞ்சாவூர் உள்பட இரண்டு உணவு தொழில்நுட்ப நிறுவனங்களை தேசியமயமாக்கும் மசோதா: மாநிலங்களவை ஒப்புதல்**

தஞ்சாவூர் உள்பட இரு உணவு தொழில்நுட்ப நிறுவனங்களை தேசிய நிறுவனங்களாக அறிவிக்கும் மசோதாவுக்கு மாநிலங்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டின் தஞ்சாவூரில் உள்ள இந்திய உணவு பதப்படுத்ததுதல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் ஹரியானா மாநிலம் குண்ட்லியில் உள்ள தேசிய உணவு தொழினுட்ப தொழில்முனைவோர் பயிற்சி நிறுவனம் ஆகிய இந்த 2 நிறுவனங்களையும் தேசிய நிறுவனங்களாக அறிவிக்கும் 'தேசிய உணவு தொழில்நுட்பம், தொழில்முனைவோர் பயிற்சி மற்றும் மேலாண்மை மசோதா, 2019' என்ற மசோதா குரல் வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதன்மூலம், இந்த இரண்டு நிறுவனங்களும் முழு சுதந்திரத்துடன், IIT, IIM நிறுவனங்களுக்கு இணையாக செயல்படமுடியும். மத்திய அரசின் 'கிசான் சம்பதா யோஜனா' திட்டத்தின்கீழ் 107 இலட்சம் டன் உணவுப்பொருள்கள் பதப்படுத்தப்பட்டிருப்பதோடு, 444 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 147 இலட்சம் விவசாயிகள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர்.

---

**2.மாணவர்கள் கல்விக்கடன்பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு, கேரளா முன்னிலை: நிர்மலா சீதாராமன்**

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அதிகளவு மாணவர்கள் கல்விக்கடன் பெற்ற மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு, கேரளா முன்னிலையில் உள்ளன என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் தெரிவித்துள்ளார்.

2020, டிசம்பர் வரை நாடு முழுவதும் 24,84,397 பேருக்கு ₹89,883.57 கோடி கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் ₹8,587.10 கோடி (9.55%) திரும்பிவராத கடனாகவும், தவணை தவறிய கடனாகவும் உள்ளது. ஆனால், இந்தக் கல்விக்கடனை அதிக அளவில் பெற்ற மாநிலங்களாக தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகியவை உள்ளன.

தமிழ்நாட்டில் 6,97,066 மாணவர்கள் ₹17,193.58 கோடி கல்விக்கடன் பெற்றுள்ளனர். இதில் 1,68,410 மாணவர்கள் பெற்ற ₹3,490.75 கோடி (20.30%) வாராக்கடனாக உள்ளது. நாட்டிலேயே கல்விக்கடன் அதிகம் பெற்ற மாநிலமாக தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. இதேமாதிரி புதுச்சேரி மாநிலத்தில் 18,311 மாணவர்களுக்கு ₹481.80 கோடி கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 4,307 மாணவர்களின் ₹93.31 கோடி (19.37%) வாராக்கடனாக உள்ளது. தேசிய அளவில் வாராக் கடனில் புதுச்சேரி மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

கல்விக் கடன் குறைவாகப் பெற்ற மாநிலம் பிகார் ஆகும். ஆனால், வாராக் கடன் விகிதத்தில் (25.76 சதவீதம்) நாட்டிலேயே பிகார் முதல் மாநிலமாக உள்ளது. இது தவிர 2020, மார்ச் நிலவரப்படி விவசாயம் (10.33%), தொழிற்துறை (13.60%) ஆகியவற்றிலும் வாராக்கடன் அதிகளவில் உள்ளது.

---

**1.** **மருந்துகளுக்கான PLI திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ள மத்திய அமைச்சகம் எது?**

**அ) இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம் ☑**

ஆ) வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

இ) வெளியுறவு அமைச்சகம்

ஈ) பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம்

✓ முக்கிய மூலப்பொருட்கள், இடைநிலை மூலப்பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்கான உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை திட்டத்திற்கு மத்திய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. முன்னதாக 2020-21 முதல் 2028-29 வரையிலான நிதியாண்டுக்கு மருந்துகளுக்கான PLI திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஏற்கனவே தனது ஒப்புதலை அளித்திருந்தது.

---

**2.** **'பாரத் இ-மார்க்கெட்' என்பது கீழ்காணும் எந்த நிறுவனத்தால் தொடங்கப்பட்ட மின்னணு வணிக இணையதளமாகும்?**

அ) FICCI

ஆ) KVIC

**இ) CAIT ☑**

ஈ) TRIFED

✓ அகில இந்திய வர்த்தகர்கள் கூட்டமைப்பான CAIT மின்னணு வணிகத்துக்காக, 'பாரத் இ-மார்க்கெட்' என்னும் ஓர் இணையதளத்தை தொடங்கவுள்ளது. இதை முன்னிட்டு, விற்பனையாளர்களுக்கான, திறன்பேசி செயலி ஒன்றை அன்மையில் அறிமுகம்செய்தது.

✓ இந்தச்செயலி வணிகங்கள் மற்றும் சேவை வழங்குநர்களை இந்த இணையதளத்தில் பதிவுசெய்துகொள்வதன்மூலம் தங்கள் சொந்த மெய்நிகர் அங்காடியை உருவாக்க உதவுகிறது. இதற்காக அவர்களிடம் எந்த ஒரு கட்டணமும் வசூலிக்கப்படாது.

---

**3.** **2021 மார்ச்சில், எவ்வமைப்பின் முதல் மெய்நிகர் உச்சிமாநாட்டில் இந்தியா பங்கேற்றது?**

அ) BRICS

**ஆ) QUAD ☑**

இ) BIMSTEC

ஈ) G20



✓ அமெரிக்க அதிபர் ஜோ பிடன், ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன் மற்றும் ஜப்பானிய பிரதமர் யோஷிஹைட் சுகா ஆகியோருடன் QUAD தலைவர்களின் முதல் மெய்நிகர் உச்சிமாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். COVID-19'இன் பொருளாதார மற்றும் நல்வாழ்வு பாதிப்புகள், காலநிலை மாற்றம் மற்றும் இணையவெளி, பயங்கரவாத எதிர்ப்பு, தரமான உட்கட்டமைப்பு முதலீடு மற்றும் மனிதாபிமான உதவி, பேரிடர்-நிவாரணம் உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்வது குறித்து தலைவர்கள் விவாதித்தனர்.

---

**4.** **'ஆசாதி கா அம்ரித் மகோத்சவம்' கொண்டாட்டங்கள் அனைத்தும் பின்வரும் எந்த இடத்திலிருந்து தொடக்கிவைக்கப்பட்டன?**

**அ) சபர்மதி ஆசிரமம் ☑**

ஆ) இராஜ் காட்

இ) மதுரை

ஈ) செங்கோட்டை, புது தில்லி



✓ இந்தியாவின் 75ஆவது விடுதலை ஆண்டை முன்னிட்டு, அகமதாபாத் சபர்மதி ஆசிரமத்திலிருந்து 'பாதயாத்திரை' (சுதந்திர யாத்திரை) மற்றும் விடுதலையின் அம்ருத் மகோத்சவ முன்னோட்ட நிகழ்ச்சிகளை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார். இந்த நிகழ்வு, மகாத்மா காந்தி தலைமையிலான வரலாற்றுச்சிறப்புமிக்க உப்புச்சத்தியாகிரக யாத்திரை-யின் 91ஆவது ஆண்டுநிறைவைக்குறிக்கிறது. இந்தியாவின் 75ஆவது விடுதலை ஆண்டை முன்னிட்டு, இதர கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் டிஜிட்டல் நடவடிக்கைகளையும் அவர் தொடங்கிவைத்தார்.

---

**5.** **அண்மையில் ஆப்பிரிக்காவின் தலைமைத்துவத்திற்கான சிறந்த பரிசை வென்ற மகாமது இசௌபௌ (Mahamadou Issoufou), எந்த நாட்டின் அதிபராக இருந்தார்?**

அ) சாட்

ஆ) நமீபியா

**இ) நைஜர் ☑**

ஈ) சூடான்



✓ இரண்டு பதவிக்காலங்களுக்குப்பிறகு நைஜரின் அதிபர் பதவியிலிருந்து விலகும் மகாமது இசௌபௌ, ஆப்பிரிக்காவின் தலைமைத்துவத்திற்கான சிறந்த பரிசை வென்றுள்ளார். வறுமை முதல் ஆயுதக்கிளர்ச்சி மற்றும் நாட்டில் பாலைவனமாக்கல் வரை குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டதற்காக அவருக்கு 2020ஆம் ஆண்டுக்கான இப்ராஹிம் பரிசு வழங்கப்பட்டது.

---

**6.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, "2001 FO32" என்றால் என்ன?**

அ) விண்கலம்

ஆ) COVID தடுப்பு மருந்து

**இ) சிறுகோள் ☑**

ஈ) அருமண் உலோகம்



✓ அமெரிக்க விண்வெளி நிறுவனமான NASA, இந்த ஆண்டு, 2001 FO32 என்று பெயரிடப்பட்ட மிகப்பெரிய சிறுகோள் 1.25 மில்லியன் மைல் தொலைவில் புவிக்கு மிகவருகே கடந்து செல்லும் என்று கூறியுள்ளது. இந்த சிறுகோள் 3,000 அடி விட்டம் கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது; 20 ஆண்டுகளுக்கு முன்பு இது கண்டுபிடிக்கப்பட்டது.

---

**7.** **நடப்பாண்டில் (2021) BRICS அமைப்பிற்கு தலைமை தாங்கும் நாடு எது?**

அ) பிரேஸில்

ஆ) இரஷ்யா

**இ) இந்தியா ☑**

ஈ) சீனா

✓ நடப்பாண்டிற்கான (2021) BRICS அமைப்பின் தலைவராக இந்தியா பொறுப்பேற்றுள்ளது. அண்மையில், பொருளாதார & வர்த்தக சிக்கல்கள் குறித்த BRICS தொடர்புக்குழு மார்ச் 9 முதல் 11 வரை இந்தியாவின் தலைமையில் அதன் முதல் கூட்டத்தை நடத்தியது. "BRICS@15: Intra BRICS Cooperation for Continuity, Consolidation, and Consensus" என்பது நடப்பாண்டு (2021) BRICS அமைப்பிற்கான கருப்பொருளாகும்.

---

**8.** **பின்வருவனவற்றுள் பவானி தேவியுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ) குத்துச்சண்டை

**ஆ) வாள் சண்டை ☑**

இ) ஈட்டியெறிதல்

ஈ) பூப்பந்து



✓ தமிழ்நாட்டின் வாள் சண்டை சாம்பியனான பவானி தேவி, டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளார். இதன்மூலம், ஒலிம்பிக்கிற்கு தகுதிபெற்ற முதல் இந்திய வாள் சண்டை வீராங்கனை என்ற பெருமை-யை அவர் அடைந்தார்.

✓ சரிசெய்யப்பட்ட அதிகாரப்பூர்வ தரவரிசை முறையின்கீழ் அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். COVID-19 தொற்றுநோய் காரணமாக, 2020'இல் நடக்கவிருந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் அனைத்தும் 2021ஆம் ஆண்டு ஜூலைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

---

**9.** **அமெரிக்க துணை தூதரகத்தின் துணிச்சல்மிகு பெண்ணுக்கான பன்னாட்டு விருதுபெற்ற கௌசல்யா சங்கர் சார்ந்த மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑** ஆ) கேரளா

இ) கர்நாடகா ஈ) தெலங்கானா



- ✓ சென்னையில் உள்ள அமெரிக்க துணை தூதரகம் அண்மையில் தமிழ் நாட்டைச்சார்ந்த கௌசல்யா சங்கருக்கு, துணிச்சல்மிகு பெண்ணுக்கா –ன பன்னாட்டு விருதினை வழங்கியுள்ளது. சாதி அடிப்படையிலான வன்முறைகளை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக்கொண்ட அவ –ர், கடந்த 2017ஆம் ஆண்டு முதல் சங்கர் சமூக நீதி அறக்கட்டளை என்ற அறக்கட்டளையை நடத்திவருகிறார்.

---

**10.தேசிய தடுப்பூசி நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) மார்ச் 15

ஆ) மார்ச் 10

**இ) மார்ச் 16 ☑**

ஈ) மார்ச் 14



- ✓ தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதற்காக தேசிய நோய்த்தடுப்பு நாள் என அழைக்கப்படும் தேசிய தடுப்பூசி நாள் ஆண்டுதோறும் மார்ச்.16 அன்று இந்தியா முழுவதும் அனுசரிக்கப்படுகிற –து. போலியோ வைரஸ் மற்றும் பிற கொடிய வைரஸ்களுக்கு எதிரான தடுப்பூசிகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்திய அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ நடப்பாண்டில் (2021) வரும் தேசிய தடுப்பூசி நாள், போலியோ மற்றும் COVID–19 இரண்டையும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 'பல்ஸ் போலியோ' நோய்த்தடுப்பு திட்டம் செயல்பாட்டுக்கு வந்த நாளான 1995 மார்ச்.16 அன்று இந்த நாள் முதன்முதலாக அனுசரிக்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நாடு சுதந்திரம் பெற்று 75ஆண்டுகள் நிறைவடைய உள்ளதை குறிக்கும் வகையில் நாடுமுழுவதும் 75 இடங்களில் 'அம்ரித்மஹோத்சவ்' என்ற பெயரில் பிரம்மாண்டமான விழா நடைபெறும் என பிரதமர் மோடி கடந்த ஆண்டு அறிவித்தார். அதன்படி, 'அம்ரித் மஹோத்சவ்' நிகழ்ச்சியின் தொடக்கவிழா சென்னை கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் நேற்று (12.03.2021) நடந்தது.**

நாடுமுழுவதும் இன்று (மார்ச் 12) தொடங்கி 75 வாரங்களுக்கு நடைபெறும் இந்நிகழ்ச்சி வழியாக நமது கலாச்சாரம், பாரம்பரியம், சுதந்திரப் போராட்டம், சுதந்திர வீரர்களின் தியாகங்கள், அறிவியல், தொழில்நுட்பம், கல்வி, சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் நாம் செய்த சாதனைகளை பரவச் செய்ய முடியும்.

உப்புக்கு வரி விதித்த பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக மகாத்மா காந்தி, 1930–ம் ஆண்டு மார்ச் 12–ம் தேதி குஜராத்தில் இருந்து தண்டி வரை உப்பு சத்தியாக்கிரகம் எனும் அகிம்சைவழி போராட்டம் நடத்தி, உப்புக்கான வரியை விலக்கச் செய்தார். வன்முறையற்ற இந்தப் போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

இதன்மூலம் ஈர்க்கப்பட்ட ராஜாஜி, திருச்சி முதல் வேதாரண்யம் வரை உப்பு சத்தியாக்கிரக அணிவகுப்பை மேற்கொண்டார். நாட்டின் புகழ்பெற்ற சுதந்திர இயக்கத்தில் தமிழகம் பெரும் பங்கைக் கொண்டுள்ளது. காந்தி மதுரைக்கு வந்த பின்னர்தான் மிக சாதாரண உடைகளை அணியத் தொடங்கினார்.

நாடு சுதந்திரமடைந்த 75–ஆவது ஆண்டைக் கொண்டாடும் நோக்கில் நாட்டின் 75 இடங்களில் 75 வாரங்களுக்குக் கொண்டாட்டங்களை முன்னெடுப்பதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதையொட்டி, குஜராத்தின் ஆமதாபாதில் உள்ள சபா்மதி ஆசிரமத்திலிருந்து 'சுதந்திரத்துக்கான அம்ருத் மகோத்சவம்' நிகழ்ச்சியை பிரதமா் மோடி வெள்ளிக்கிழமை தொடக்கி வைத்தாா்.

அதன்படி, மகாத்மா காந்தியின் வரலாற்றுச் சிறப்பு மிக்க உப்பு சத்தியாகிரக பாத யாத்திரையை நினைவுகூரும் வகையில், 81 போ் கொண்ட குழு புறப்பட்டது. ஆமதாபாதிலிருந்து தண்டி கடற்கரை வரையிலான 386 கி.மீ. தூரத்தை இவா்கள் 25 நாட்களில் நிறைவு செய்வாா்கள். ஏப்ரல் மாதம் 5–ஆம் தேதி இந்த யாத்திரை நிறைவடையும்.

மகாத்மா காந்தியடிகள் கடந்த 1930–ஆம் ஆண்டு மாா்ச் 12–ஆம் தேதி உப்பு மீது விதிக்கப்படும் வரியை ரத்து செய்யக் கோரி சபா்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி கடற்கரைக்குப் பாத யாத்திரை மேற்கொண்டாா்.

75–ஆவது சுதந்திர ஆண்டு கொண்டாட்டங்களானது 2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளன

**2. எழுத்தாளர் இமையத்துக்கு 'சாகித்ய அகாடமி' விருது அறிவிப்பு**

இந்தியாவில் இலக்கிய படைப்புகளுக்கு வழங்கப்படும் உயரிய விருதாக சாகித்ய அகாடமி விருது கருதப்படுகிறது. இந்தியாவில் சிறந்த இலக்கிய படைப்புகளுக்கு மத்திய அரசு சார்பில் சாகித்ய அகாடமி விருது வழங்கப்படுகிறது. அவ்வகையில் 2020ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுகள் இன்று (12.03.2021) அறிவிக்கப்பட்டன. 20 மொழிகளில் சிறந்த இலக்கிய படைப்புகளுக்கான சாகித்ய விருதுகளை மத்திய அரசு அறிவித்திருக்கிறது. சாகித்ய அகாடமி விருது, கடந்த 1955 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

இதில், தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் இமையத்திற்கு 2020 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கப்படுகிறது. செல்லாத பணம் என்ற நாவலுக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது. இந்தியாவில் இலக்கிய படைப்புகளுக்கு வழங்கப்படும் உயரிய விருதாக சாகித்ய அகாடமி விருது கருதப்படுகிறது. விருது பெறுபவர்களுக்கு தாமிர பட்டயம் மற்றும் ஒரு லட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும்.

தமிழ் மொழியில் எழுத்தாளர் இமையம் எழுதிய 'செல்லாத பணம்' என்ற நாவலுக்கு விருது கிடைத் துள்ளது. 2018–ல் வெளியான இந்த நாவலை க்ரியா பதிப்பகம்வெளியிட்டுள்ளது. இவர் கடலூர் மாவட்டம், திட்டக்குடி அருகே கழுதூரில் பிறந்தவர் ஆவார். இமையத்தின் இயற்பெயர் அண்ணாமலை. 1964–ல் பிறந்த இமையம், பள்ளி ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இமையத்தின் முதல் நாவல் 'கோவேறு கழுதைகள்.' இது 1994–ல் வெளியானது. தமிழ்இலக்கியத்தில் அதுவரை ஆவணப்படுத்தப்படாத புதிரை வண்ணார்களின் வாழ்க்கையைப் பேசிய அந்த நாவல், பின்னாளில் புதிரை வண்ணார்கள் நல வாரியம்அமைக்கப்பட முக்கிய காரணங்களுள் ஒன்றாக அமைந்தது. இதைத் தொடர்ந்து 'ஆறுமுகம்', 'செடல்', 'எங் கதெ', 'செல்லாத பணம்' போன்ற நாவல்களையும் அவர் எழுதினார்.

கடந்த ஆண்டு 'வாழ்க! வாழ்க!' என்ற குறுநாவல் வெளியானது. 'மண் பாரம்', 'வீடியோ மாரியம்மன்', 'கொலைச்சேவல்', 'சாவு சோறு', 'நறுமணம்', 'நன்மாறன் கோட்டைக் கதை' போன்றவை இமையத்தின் சிறுகதைத் தொகுப்புகளாகும்.

இமையத்தின் 'பெத்தவன்' நெடுங்கதையை இயக்குநர் மு. களஞ்சியம் 'முந்திரிக்காடு' என்ற தலைப்பில் படமாக இயக்கி வருகிறார். இமையம் தன் எழுத்துக்காக 'அக்னி அக்ஷர விருது', 'தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க விருது', 'அமுதன் அடிகள் இலக்கிய விருது', தமிழக அரசின் 'தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது', இந்து தமிழ் திசையின் 'சமகாலச் சாதனையாளர் விருது' உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

2018–ம் ஆண்டுக்கான 'இயல்' விருதைப் பெற்றுள்ளார், எழுத்தாளர் இமையம். சாதி ஆணவக்கொலையைப் பற்றிய பெத்தவன் என்கிற நெடுங்கதை, இவரின் படைப்புகளில் மிகவும் முக்கியமான ஒன்று. இக்கதை தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டு, திருப்பதி பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சாகித்ய அகாடமியின் 2020–ம் ஆண்டுக்கான விருது பட்டியலில் 7 கவிதைத் தொகுப்புகள், 4 நாவல்கள், 5 சிறுகதைத் தொகுப்புகள் உட்பட 20 மொழிகளைச் சேர்ந்த படைப்புகள் இடம்பெற்றுள்ளன. கன்னட மொழிக்கான விருதுக்கு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான எம்.வீரப்ப மொய்லி தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் எழுதிய 'பாகுபலி அகிம்சா திக்விஜயம்' என்ற காவிய கவிதை நூலுக்காக இந்த விருது கிடைத்துள்ளது.

இதேபோல் சாகித்ய அகாடமியின் 2020–ம் ஆண்டுக்கான யுவபுரஸ்கார் விருதுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழில் கவிஞர் ஷக்தி எழுதிய 'மர நாய்' கவிதைத் தொகுப்புக்கு யுவபுரஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது.

சோ. தர்மனின் சூல் (நாவல்), எஸ்.ராமகிருஷ்ணனின் சஞ்சாரம் (நாவல்), கவிஞர் இன்குலாப்பின் காந்தள் நாட்கள் கவிதை தொகுப்பு, பூமணியின் அஞ்ஞாடி (நாவல்), ஜோ டி குரூஸின் கொற்கை (நாவல்), டேனியல் செல்வராஜின் தோல் (நாவல்), சு. வெங்கடேசனின் காவல் கோட்டம் உள்ளிட்ட பல படைப்புகளுக்கு இதுவரை சாகித்ய அகடாமி விருது வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 6 ஆண்டுகளில் சாகித்திய அகடாமி விருது பெற்றவர்கள்:

2015 – இலக்கியச் சுவடுகள் (திறனாய்வு நூல்) – ஆ. மாதவன்

2016 – ஒரு சிறு இசை (சிறுகதைகள்) – வண்ணதாசன்

2017 – காந்தள் நாட்கள் (கவிதைகள்) – இன்குலாப்

2018 – சஞ்சாரம் (புதினம்) – எஸ். ராமகிருஷ்ணன்

2019 – சூல் (புதினம்) – சோ. தர்மன்

2020 – செல்லாத பணம் (நாவல்) – இமையம்

2020–ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதில், தமிழில் 'செல்லாத பணம்' நாவலை எழுதிய எழுத்தாளா் இமையம், கன்னடத்தில் 'ஸ்ரீபாகுபலி அஹிம்சா திக்விஜயம்' பெருங்கவிதை நூலை எழுதிய முன்னாள் மத்திய அமைச்சா் வீரப்ப மொய்லி, ஆங்கிலத்தில் 'வென் காட் இஸ் எ டிராவலா' என்ற கவிதை நூலை எழுதிய அருந்ததி சுப்பிரமணியம் உள்பட 20 பேருக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சாகித்ய அகாதெமி வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: 7 கவிதை நூல்கள், 4 நாவல்கள், 5 சிறுகதை தொகுப்புகள், 2 நாடகங்கள், ஒரு பெருங்கவிதை நூல், ஒரு அனுபவ நூல் என மொத்தம் 20 மொழிகளில் வெளியான 20 நூல்கள் சாகித்ய அகாதெமி விருதுக்கு தோ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நாவல்களுக்காக, இமையம்(தமிழ்), நந்த கரே(மராத்தி), மகேஷ் சந்திர சா்மா கௌதம்(சம்ஸ்கிருதம்), ஹுசைன் அல் ஹேக் (உருது) ஆகியோா் தோ்ந்தெடுக்கப்பட்டுள்ளனா்.

சிறுகதை தொகுப்புகளுக்காக, அபூா்வ குமாா் சைகியா(அஸ்ஸாமி), தரணிதா் ஒவாரி(போடோ), ஹிதய் கொல் பாரதி(காஷ்மீரி), காமாகாந்த் ஜா(மைதிலி), குருதேவ் சிங் ரூபனா (பஞ்சாப்) ஆகியோா் தோ்வாகியுள்ளனா்.

கவிதை நூல்களுக்காக, அருந்ததி சுப்பிரமணியம் (ஆங்கிலம்), ஹரீஷ் மீனாட்சி(குஜராத்தி), அனாமிகா(ஹிந்தி), ஆா்.எஸ்.பாஸ்கா்(கொங்கணி), இருங்பாம் தேவன்(மணிப்பூரி), ரூப்சந்த் ஹன்ஸ்டா(சந்தாலி), நிகிலேஷ்வா்(தெலுங்கு) ஆகியோா் தோ்ந்தெடுக்கப்பட்டுள்ளனா்.

நாடக நூல்களுக்காக, கியான் சிங் (டோக்ரி), ஜேதோ லால்வானி(சிந்தி) ஆகிய இருவருக்கு விருது வழங்கப்படவுள்ளது.

அனுபவக் குறிப்பு நூலுக்காக, வங்க மொழி எழுத்தாளா் மணிசங்கா் முகோபாத்யாய தோ்ந்தெடுக்கப்பட்டுள்ளாா் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையாளம், நேபாளி, ஒடியா, ராஜஸ்தானி ஆகிய மொழிகளில் வெளிவந்த படைப்புகளுக்கு பின்னா் விருது அறிவிக்கப்படும். சாகித்ய அகாதெமி விருதுக்கு தோ்ந்தெடுக்கப்பட்டிருப்பவா்களுக்கு ரூ.1 லட்சம் ரொக்கத்துடன் தாமிர கேடயம் பரிசளிக்கப்படும். விருது வழங்கும் விழா நடைபெறும் தேதி பின்னா் அறிவிக்கப்படும்.

**3. இந்தியன் வங்கியின் செயல் இயக்குநராக இம்ரான் அமின் சித்திக் பொறுப்பேற்றுள்ளார். இவர் இதற்கு முன்பு இதே வங்கியில் வளங்கள் மற்றும் அரசு உறவுகள் பிரிவுகளின் பொது மேலாளராக பணிபுரிந்தவர்.**

**4. மார்ச் 14–ம் தேதி உலக சிறுநீரக தினம். ஆண்டு தோறும் மார்ச் மாதத்தில் வரும் 2ஆவது வியாழக்கிழமை 'உலக சிறுநீரக தினம்' அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான கருப்பொருள் – "சிறுநீரக நோயுடன் நன்றாக வாழ்"**

**5. அஸ்ட்ராஜெனிகா தடுப்பூசியை தாராளமாக பயன்படுத்தலாம்: உலக சுகாதார நிறுவனம் அறிவிப்பு**

அஸ்ட்ரா ஜெனிகா நிறுவனத்தின் 'கோவிட்–19' தடுப்பூசியை ஐரோப்பிய நாடுகள் தவிர்த்து வரும் நிலையில் உலக சுகாதார நிறுவனம் அதனைப் பயன்படுத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என கூறியுள்ளது.

டென்மார்க், நார்வே, ஐஸ்லாந்து, இத்தாலி, ரோமானியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் கரோனா வைரஸ் பரவல் தடுப்புக்குப் போடப்பட்ட அஸ்ட்ரா ஜெனிகா நிறுவனத்தின் 'கோவிட்–19' தடுப்பூசியினால் சிலருக்கு ரத்தம் உறைந்துவிட்டதாக கூறப்படுகிறது.

இதனால், அஸ்ட்ரா ஜெனிகா நிறுவனத்தின் தடுப்பூசியை போட்டுக் கொள்ள பல ஐரோப்பிய நாட்டு மக்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். இதன் காரணமாக இந்த நாடுகள் 'கோவிட்–19' தடுப்பூசி விநியோகத்தைக் குறைத்து வருகின்றன.

இந்நிலையில் உலக சுகாதாரநிறுவனத்தின் தடுப்பு மருந்துஆலோசனைக் குழுவினர் இதுகுறித்து ஆய்வு செய்துள்ளனர். அதில் அஸ்ட்ரா ஜெனிகா தடுப்பூசிக்கும், ரத்தம் உறைவதற்கும் தொடர்பு இருப்பதற்கான சாத்தியங்கள் ஏதும் இல்லை. கரோனா இறப்புகளை ஆராய்ந்ததில் அதிலும் தடுப்பூசி காரணமாக இறப்புகள் ஏதும் நிகழவில்லை என்று தெரிய வந்துள்ளது.

எனவே மற்ற தடுப்பூசிகளைப் போலவே அஸ்ட்ரா ஜெனிகா பயன்படுத்துவதில் எந்தப் பிரச் சினையும் இல்லை என்று உலக சுகாதார நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் மார்கரெட் ஹாரிஸ் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

**6. எச் 1பி விசாவுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் நிறுத்திவைப்பு: அதிபர் ஜோ பைடன் அறிவிப்பு.**

தகவல் தொழில்நுட்ப நிறு வனங்களில் பணிபுரியும் வெளி நாட்டுப் பணியாளர்கள் எச் 1 பி விசாவுக்கு விண்ணப்பித்தால் அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தின் குறைந்தபட்ச அளவு முன்னர் நிர்ணயிக்கப்பட்டது.

இதனால் வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு மிக அதிக அளவில் ஊதியம் நிர்ணயிக்க வேண்டிய சூழல் உருவானது. இதனால் அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த உத்தரவால் இந்தியா மற்றும் சீனாவிலிருந்து அதிக எண்ணிக்கையில் தகவல் தொழில்நுட்ப பணியாளர்களை பணியில் நியமிப்பது பெரும் பிரச்சினையானது.

இப்புதிய விதிமுறை மே 14, 2021 முதல் செயல்படுத்தப்படுவதாக இருந்தது. இந்நிலையில் ட்ரம்ப் பிறப்பித்த உத்தரவை நிறுத்தி வைக்க தொழிலாளர் நலத்துறைக்கு அதிபர் பைடன் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

**7. சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டிகளில் 10 ஆயிரம் ரன்களை கடந்த முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை படைத்தார் மிதாலி ராஜ்.**

லக்னோவில் உள்ள ஏகனா கிரிக்கெட் மைதானத்தில் இந்தியா – தென் ஆப்பிரிக்கா மகளிர் அணிகள் இடையிலான 3–வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி நேற்று நடை பெற்றது.

இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் கேப்டனான மிதாலி ராஜ் 36 ரன்களில் ஆட்டமிழந்தார். முன்னதாக அவர், 35 ரன்களை கடந்த போது அனைத்து விதமான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் 10 ஆயிரம் ரன்களை கடந்த முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை படைத்தார்.

சர்வதேச கிரிக்கெட்டில் இந்த சாதனையை எட்டும் 2–வது வீராங்கனை மிதாலி ராஜ் ஆவார். இந்த வகை சாதனையில் இங்கிலாந்தின் முன்னாள் கேப்டன் சார்லோட் எட்வர்ட்ஸ் 10,273 ரன்கள் குவித்து முதலிடத்தில் உள்ளார்.

**8. உலக நன்மைக்கு குவாட் அமைப்பு ஒன்றிணைந்து பாடுபடவேண்டும்: பிரதமர் மோடி வலியுறுத்தல்**

அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய 4 நாடுகள் இணைந்து கடந்த 2007–ம் ஆண்டு 'குவாட்' கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கின. 2017–ம்ஆண்டு இந்த அமைப்பில் ஆஸ்திரேலியா இணைந்தது

முதல்முறையாக நாட்டின் பிரதமர், அதிபர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி, 'குவாட்' கூட்டணி உச்சி மாநாடு நேற்று (12.03.2021) காணொலி காட்சி மூலம் நடைபெற்றது. இதில், அமெரிக்க அதிபர்ஜோ பைடன், இந்திய பிரதமர் மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன், ஜப்பான் பிரதமர் யோஷிகிடே சுகா ஆகியோர் காணொலி மூலம் பங்கேற்றனர்.

மாநாட்டில் பிரதமர் மோடி பேசும்போது, "குவாட் அமைப்பு என்பது இந்தியாவின் பாரம்பரியமான வாசுதேவ குடும்பகத்தின் நீட்டிப்பு ஆகும்.

வாசுதேவ குடும்பம்:

பிரதமர் மோடி மேலும் கூறுகையில், உலகம் முழுவதையும் ஒரே குடும்பமாக கருதும் இந்தியாவின் பண்டைய தத்துவமான 'வாசுதேவ குடும்பம்' என்ற தத்துவத்தின் விரிவாக்கமாகவே குவாட் அமைப்பை கருதுகிறேன்," என்றார். உலகம் முழுவதையும் ஒரே குடும்பமாக கருதும் 'வாசுதேவ குடும்பகம்' என்ற தத்துவத்தின் விரிவாக்கம்தான் குவாட் என பிரதமர் பேசினார்.

இந்தோ–பசுபிக் பிராந்தியத்தில் மதச்சார்பற்ற தன்மையை ஊக்குவிப்பதற்கும், நிலையான, வளமான பிராந்தியத்தை உருவாக்குவதற்கும் நாம் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும்.

கரோனா தடுப்பூசி, பருவநிலை மாற்றம், தொழில்நுட்பம் குறித்து விவாதிக்க ஆசைப்பட்டு கிறேன். உலக நன்மைக்காக குவாட் அமைப்பு ஒன்றிணைந்து பாடுபடவேண்டும்" என்றார்.

மாநாட்டில் ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன் பேசும்போது, "21-ம் நூற்றாண்டின் தலைவிதியை இந்தோ-பசுபிக் பிராந்தியம் வடிவமைக்கும். இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள பெரிய ஜனநாயக நாடுகளின் 4 தலைவர்கள் என்ற வகையில், எங்கள் கூட்டு ஒப்பந்தம் அமைதி,ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்புஆகியவற்றின் செயல்பாட்டாள ராக இருக்கட்டும். இதே பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளுடன் இணைந்து இந்த அமைப்பு செயல்படட்டும்" என்றார்.

**9. இயற்பியல், கணிதம் பாடங்கள் பொறியியலுக்கு கட்டாயமில்லை: அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சில் அறிவிப்பு**

இளநிலை பொறியியல் படிப்புகளில் சேர்வதற்கு இயற்பியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் படிக்க கட்டாயமில்லை என அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சில் (ஏஐசிடிஇ) அறிவித்துள்ளது.பொறியியல் மற்றும் தொழில்நுட்ப படிப்புகளுக்கு 2021-22 கல்வி ஆண்டுக்கான பாடத்திட்டங்களுக்கான ஒப்புதல் கையேடுவை ஏஐசிடிஇ வெளியிட்டுள்ளது. அதில் இளநிலை பொறியியல் மற்றும் தொழில்நுட்ப படிப்புகளுக்கு கணிதம், இயற்பியல் பாடங்கள் கட்டாயமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இளநிலை பொறியியல் படிப்புகளில் சேருவதற்கான கல்வி தகுதிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இயற்பியல், கணிதம், வேதியியல், கணினி அறிவியல், மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம், உயிரியல், உயிரி தொழில்நுட்பம், விவசாயம், தொழிற்படிப்புகள், இன்பர்மேட்டிக்ஸ் ப்ராக்டிசஸ் , இன்ஜியனிரிங் கிராபிக்ஸ் , பிசினஸ் ஸ்டடிஸ் , தொழில்முனைவோர் ஆகிய பாடங்களில் ஏதாவது மூன்றை படித்திருந்தாலே பொறியில் படிப்புகளில் சேரலாம் என ஏஐசிடியூ தெரிவித்துள்ளது.வரும் 2021-22 கல்வி ஆண்டில் இந்த நடைமுறை செயல்பட்டுக்கு வரும் எனவும் ஏஐசிடிஇ அறிவித்துள்ளது. கணிதம், இயற்பியல் பாடங்களை தவிர பிற பாடங்களை எடுத்து பொறியியல் படிப்பில் சேரும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்கள் இணைப்பு படிப்பு ஒன்றை நடத்தும். பிளஸ் டூ தேர்வில் 45 சதவிகிதத்திற்கும் மேல் மதிப்பெண் எடுப்பவர்கள் பொறியியல் படிப்புகளில் சேரலாம். பட்டியல் இன மாணவர்கள் 40% எடுத்தால் போதும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பொதுவாக ப்ளஸ் 2வில் கணிதம், இயற்பியல், வேதியல் ஆகிய பாடங்களை முதன்மை பாடங்களாக எடுத்து படித்தால் தான் இளநிலை பொறியியல் மற்றும் தொழில்நுட்ப படிப்புகளில் சேர முடியும். இந்த நிலையில் ஏஐசிடிஇ இத்தகைய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இது மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் மத்தியில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

**10. பிரம்ம குமாரிகள் வித்யாலயா தலைமை நிர்வாகி காலமானார்: ராஜஸ்தானில் இன்று (12.03.2021) இறுதி சடங்கு**

பிரம்ம குமாரிகள் அமைப்பின் அகில உலக தலைமை நிர்வாகி ஹிருதய மோகினி உடல் நலக்குறைவினால் நேற்று முன்தினம் காலமானார். அவருக்கு வயது 93. உலகில் பெண்களால் நடத்தப்படும் மிகப் பெரிய ஆன்மிக அமைப்பு பிரம்ம குமாரிகள் விஷ்வ வித்யாலயா. இதன் தலைமை நிர்வாகி ஹிருதய மோகினி.

₹தாதி குல்ஜார்' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட மோகினி, தனது 8 வயதில் பிரம்ம குமாரிகள் அமைப்பில் சேர்ந்தார். மனதை ஒருமுகப்படுத்துதல், ஆழ்நிலை தியானம், எளிமை போன்றவற்றில் மிகவும் தேர்ந்தவராக விளங்கினார். உலகம் முழுவதும் 140 நாடுகளில் 8,000க்கும் மேற்பட்ட ராஜயோக தியான மையங்களை நிறுவ பெரும் பங்காற்றினார். இவரது ஆன்மிக சேவையை பாராட்டி, வடக்கு ஒடிசா பல்கலை கழகம் அவருக்கு டாக்டர் ஆப் லிட்டரேச்சர் பட்டம் வழங்கி கவுரவித்தது.

**11. கேரள (கொச்சி) மாநிலத்தினால் நான்காவது சர்வதேச ஆயுர்வேத திருவிழா 2021 (Global Ayurveda Festival 2021) மார்ச் 12 முதல் 19 வரை நடத்தப்பட உள்ளது.**

**12. மத்திய அரசின் உற்பத்தி சாா்ந்த ஊக்கத்தொகை அளிக்கும் பிஎல்ஐ திட்டத்தில் ஜப்பானின் பங்களிப்பு பெரும் அளவில் இருக்கும் என எதிா்பாா்ப்பதாக மத்திய தொழில் மற்றும் உள்நாட்டு வா்த்தக மேம்பாட்டுத் துறையின் (டிபிஐஐடி) செயலா் குருபிரசாத் மொஹபத்ரா தெரிவித்துள்ளாா்.**

**இதுகுறித்து அவா் மேலும் கூறியுள்ளதாவது:** தொலைத்தொடா்பு, ஆட்டோமொபைல்ஸ் உள்ளிட்ட 13 முக்கிய துறைகளில் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக பிஎல்ஐ திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசின் துறைகளில் பல்வேறு சீா்திருத்த நடைமுறைகளை அறிமுகப்படுத்தியதன் ஒரு பகுதியாக இந்த திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிப்பதுடன் அவற்றின் ஏற்றுமதியையும் ஊக்குவிக்க வேண்டும் என்பதே பிஎல்ஐ திட்டத்தின் முக்கிய நோக்கம்.

குறிப்பாக, உணவுப் பதப்படுத்துதல், மருத்துவ உபகரணங்கள், உதிரிபாகங்கள், ஜவுளி மற்றும் சோலாா் பிவி தகடுகள் உள்ளிட்ட துறைகள் இந்த துறைகள் அதிக பயன்பெறும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.

இதுபோன்ற தொழில்துறைகளில் ஜப்பான் உலக அளவில் அதிக நிபுணத்துவம் பெற்ற நாடாக விளங்குகிறது. எனவே, இந்தியாவின் பிஎல்ஐ திட்டத்தில் ஜப்பான் பெரும் பங்களிப்பை வழங்கும் என்பது இந்தியாவின் மிகுந்த எதிா்பாா்ப்பாக உள்ளது என்றாா் அவா்.

**13. வளர்ச்சி மிகு நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு 5-ஆம் இடம்**

அனைவரையும் கவரும் விதத்திலான வளர்ச்சியைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா 5 ஆவது இடத்தைப் பிடித்துள்ளதாக பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் (பிடபிள்யூசி) நிறுவனத்தின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா – 1 இடம்; சீனா – 2ம் இடம்; ஜெர்மனி – 3 ஆம் இடம்

**14. ரேஷன் பொருள்களை வாங்க 'மேரா ரேஷன்' செயலி. ரேஷன் பயனாளிகளுக்காக மேரா ரேஷன் ஆப் என்ற மொபைல் ஆப்பை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.**

ஒரே நாடு ஒரே ரேஷன் திட்டத்தின் பயனாளிகளுக்காக 'Mera Ration App' என்ற மொபைல் ஆப்பை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் நேரடி தமிழாக்கம் 'என் ரேஷன் ஆப்' என்பதாகும்.

தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டம் மற்றும் இதர நலத் திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு ரேஷன் பொருட்களை தேசம் முழுவதும் வழங்குவதே ஒரே நாடு ஒரே ரேஷன் திட்டத்தின் நோக்கம்.

குறிப்பாக, புலம்பெயர் தொழிலாளர்கள் இந்தியாவில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் பொருட்களை வாங்க இத்திட்டம் உதவுகிறது. தற்போது மேரா ரேஷன் ஆப் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் அறிமுகமாகியுள்ளது. விரைவில் 14 மொழிகளும் பல்வேறு வசதிகளும் அறிமுகப்படுத்தப்படும்.

மேரா ரேஷன் ஆப்பின் சிறப்பு அம்சங்கள்: அருகில் உள்ள நியாய விலைக் கடையை தெரிந்துகொள்ளலாம், உணவு தானியங்களை எவ்வளவு பெற்றுக்கொள்ளலாம் என்பது பற்றிய தகவல்கள், அண்மையில் வாங்கிய பொருட்கள் மற்றும் பரிவர்த்தனைகள், ஆதார் இணைப்பு நிலவரம், புலம்பெயர் தொழிலாளர்கள் புலம்பெயரும்போது ஆப்பில் பதிவு செய்துகொள்ளலாம்

**15. பாகிஸ்தான் நாடாளுமன்ற மேலவையான செனட் சபை உறுப்பினராக தலைப்பாகை அணிந்த சீக்கியா் ஒருவா் முதல்முறையாக வெள்ளிக்கிழமை (12.03.2021) பொறுப்பேற்றாா்.**

கைபா் பாக்துன்கவா மாகாணத்தைச் சோ்ந்த குா்தீப் சிங் என்ற அவா், இம்ரான் கான் தலைமையிலான ஆளும் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் கட்சியின் சாா்பில் செனட் உறுப்பினராகத் தோ்ந்தெடுக்கப்பட்டாா்.

சிறுபான்மையினருக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில், தன்னை எதிா்த்துப் போட்டியிட்டவா்களை மிக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றாா். 145 உறுப்பினா்களைக் கொண்ட அவையில் அவருக்கு 103 வாக்குகள் கிடைத்தன.

**16. அமெரிக்க சுதந்திர தினமான வரும் ஜூலை 4-ஆம் தேதிக்குள் கரோனா நெருக்கடியிலிருந்து நாட்டை விடுவிக்கத் திட்டமிட்டுள்ளதாக அந்த நாட்டு அதிபா் ஜோ பைடன் அறிவித்துள்ளாா். அதிபா் பதவியை ஏற்ற பிறகு, நாட்டு மக்களுக்கு முதல்முறையாக அவா் ஆற்றிய உரையில் இதுகுறித்து அவா் கூறியதாவது:**

வரும் மே மாதம் 1-ஆம் தேதிக்குள் கரோனா தடுப்பூசி பெறும் தகுதியுடைய அனைவருக்கும் அந்தத் தடுப்பூசி செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம் அமெரிக்காவில் கரோனா நெருக்கடி முடிவுக்குக் கொண்டு வரப்படும். வரும் ஜூலை மாதம் 4-ஆம் தேதி நாட்டின் சுதந்திர தினத்தை பொதுமக்கள் கரோனா பயமின்றி சுதந்திரமாகக் கொண்டாடலாம். மிச மோசமான ஆண்டைக் கடந்ததற்குப் பிறகு, வரும் ஜூலை 4-ஆம் தேதியை நாட்டின் சுதந்திர தினமாக மட்டுமின்றி கரோனாவிடமிருந்து பெற்ற சுதந்திரத்தையும் மக்கள் கொண்டாடுவாா்கள்.

**17. உயர் வளிமண்டல ஆய்வுக்காக இஸ்ரோவின் 'சவுண்டிங் ராக்கெட்': வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது**

உயர் வளிமண்டல பரப்பில் நிலவும் காற்று மற்றும் பிளாஸ்மா அயனிகள் தொடர்பான ஆய்வுக்காக இஸ்ரோ சார்பில் 'சவுண்டிங் ராக்கெட்' வெற்றிகரமாக ஏவப் பட்டது.

ககன்யான், சந்திரயான்–3 உட்பட பல்வேறு ஆய்வுத் திட்டங்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. வணிக ரீதியாக வெளிநாடுகளின் செயற்கைக் கோள்களும் விண்ணில் செலுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே, சிறிய ரகஆய்வு சாதனங்களை புவியின்தாழ்ந்த சுற்றுப் பாதையில் நிலைநிறுத்தவும், வளிமண்டலம் தொடர்பான விண்வெளி ஆய்வுக்கும் சவுண்டிங் ராக்கெட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இஸ்ரோவிடம் ஆர்எச்–200, ஆர்எச்–300, ஆர்எச்–560 என 3 விதமான சவுண்டிங் ராக்கெட்கள் உள்ளன. இது 2 நிலைகளைக் கொண்டது. இவற்றின் மூலம் 100 கிலோ வரையிலான ஆய்வுக் கருவிகளை அதிகபட்சம் 475 கி.மீ. தூரம் கொண்ட புவியின் சுற்றுப் பாதையில் நிலைநிறுத்த முடியும். அதன்படி, கடந்த 1965–ம்ஆண்டு முதல் இதுவரை இஸ்ரோசார்பில் 100–க்கும் மேற்பட்ட சவுண்டிங் ராக்கெட்கள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன.

**ஆர்.எச். 560 ரகம் ராக்கெட்:**

அந்த வரிசையில், ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து இஸ்ரோ சார்பில் ஆர்எச்–560 ரக சவுண்டிங் ராக்கெட் கடந்த 12–ம் தேதி இரவு வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளது.

புவி பரப்புக்கு மேல் உள்ள உயர் வளிமண்டலத்தில் வீசக்கூடிய காற்று, பிளாஸ்மா அயனிகளின் செயல்பாடு ஆகியவற்றில் நிலவும் மாற்றங்கள் தொடர்பான ஆய்வுக்காக இந்த ராக்கெட் அனுப்பப்பட்டுள்ளது.

**18. தேசியக் கொடியை வடிவமைத்த பிங்கலி வெங்கய்யாவின் மகளுக்கு ரூ.75 லட்சம் நிதி: ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி வழங்கினார்**

ஆந்திர மாநிலம், மசூலிப்பட்டினம் அருகே உள்ள பட்லபெனுமர்ரு கிராமத்தில் 1876–ம் ஆண்டு ஆகஸ்ட் 2–ம் தேதி பிறந்தவர் பிங்கலி வெங்கய்யா. சுதந்திர போராட்டங்களில் ஈடுபட்டவர். வைர சுரங்கங்களை கையாள்வதில் நிபுணராக இருந்ததால் 'டைமண்ட்' வெங்கய்யா என்றும் பருத்தி வகைகளை அறிந்திருந்ததால் 'பருத்தி' வெங்கய்யா என்றும் அழைக்கப்பட்டார். எனினும் இவர் தனது 86–வது வயதில் வறுமையில் வாடி உயிர் நீத்தார்.

நமது நாட்டுக்கென தனி தேசியக் கொடி வேண்டும் என்று காந்தி பல முறை வலியுறுத்தி பேசியிருக்கிறார். இதையடுத்து, விதவிதமாக 30–க்கும் மேற்பட்ட கொடிகளை தயாரித்து, காந்தி 1921–ம் ஆண்டு விஜயவாடா வந்திருந்தபோது காண்பித்தார்.

அதை பார்த்த காந்தி, நடுவில் வெண்மை நிறம் இருக்கும்படி கொடியை உருவாக்க யோசனை கூறியுள்ளார். பின்னர் காந்தி கூறியபடி காவி, வெண்மை, பச்சை என முதலில் நம் தேசிய கொடியின் வர்ணம் உருவானது. இந்நிலையில், தற்போது குண்டூர் மாவட்டம், மாசர்லாவில் உள்ள பி.டபிள்யூ காலனியில் வசித்து வரும் பிங்கலியின் மகளான சீதாமகா லட்சுமியை (99) ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி நேரில் சென்று சந்தித்தார். அப்போது அவர், ரூ. 75 லட்சத் திற்கான காசோலையை சீதாமகா லட்சுமிக்கு வழங்கி வணங்கினார்.

**19. இலங்கையில் முஸ்லிம் பெண்கள் முகத்தை மூடும் புர்கா உள்ளிட்ட ஆடைகளுக்குத் தடை வருகிறது**

இலங்கையில் கடந்த 2019ல் ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிறகு சிறுபான்மையினர்களான முஸ்லிம்கள் மீதான அரசின் அடக்குமுறைகள் அதிகரித்து வருகின்றன. அந்த வகையில், தற்போது முஸ்லிம் பெண்கள் புர்கா அணிய தடை கொண்டு வரப்பட இருக்கிறது. இது குறித்து அந்நாட்டின் பொது பாதுகாப்பு துறை அமைச்சர் சரத் வீரசேகரா அளித்த பேட்டியில் கூறியதாவது: உள்நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு முஸ்லிம் பெண்கள் தங்கள் முகத்தை மறைக்கும் புர்கா அணிய தடை கொண்டு வரப்பட உள்ளது. இதற்கு அமை ச்சரவை அனுமதி அளித்து விட்டது. முந்தைய காலங்களில் முஸ்லிம் பெண்கள், சிறுமிகள் புர்காக்களை அணியவில்லை. இந்த மத தீவிரவாதத்தின் அடையாளம் சமீபத்தில்தான் தோன்றியது. எனவே, அதற்கு நாங்கள் கட்டாயம் தடை விதிப்போம்.தேசிய கல்விக் கொள்கையை மீறும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமிய பள்ளிகளான மதரசாக்களுக்கும் தடை விதிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

**19. ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு – பயனாளிகளின் வசதிக்காக 'என் ரேஷன்' செயலி அறிமுகம்.**

தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரேஷன் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக 'ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு' திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

இதன் மூலம் வேலை நிமித்தமாக புலம் பெயர்ந்து வசிப்பவர்கள் தாங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள எந்த ஒரு நியாய விலைக் கடையிலும் 'ஸ்மார்ட் கார்டை' பயன்படுத்தி ரேஷன் பொருட்களை வாங்கிக் கொள்ள முடியும்.

இந்நிலையில், புலம்பெயர்ந்து வசிப்பவர்களின் வசதிக்காக 'என் ரேஷன்' என்ற செயலியை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் பயனாளிகள் தங்கள் பகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளை அடையாளம் காணவும் தங்களுக்கு என்னென்ன பொருட்கள் கிடைக்கும் என்ற விவரத்தையும் தெரிந்து கொள்ள முடியும்.

ஆண்ட்ராய்டு அடிப்படையிலான இந்த செயலியை தேசிய தகவல் மையம் உருவாக்கி உள்ளது. முதல்கட்டமாக இந்தி மற்றும் ஆங்கிலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இது, படிப்படியாக 14 மொழிகளில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இதுகுறித்து உணவு மற்றும் பொது விநியோக துறை செய லாளர் சுதான்ஷு பாண்டே கூறும்போது, "ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு திட்டம் முதல்கட்டமாக 4 மாநிலங்களில் 2019–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அமல்படுத்தப்பட்டது. அடுத்தபடியாக, 2020–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 32 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அமல்படுத்தப்பட்டது. மீதமுள்ள அசாம், சத்தீஸ்கர், டெல்லி, மேற்கு வங்கம் ஆகிய 4 மாநிலங்களில் அடுத்த சில மாதங்களில் அமல்படுத்தப்படும். இந்த திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 69 கோடி பேர் பயனடைந்து வருகின்றனர், என்றார்.

**20. ஐஎஸ்எல் தொடரில் மும்பை அணி சாம்பியன்**

ஐ.எஸ்.எல். கால்பந்து தொடரின் இறுதிப் போட்டி மும்பை சிட்டி, ஏ.டி.கே.மோகன் பகான் எப்சி அணிகளுக்கு இடையே நடைபெற்றது.

7–வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி கோவாவில் கொரோனா தடுப்பு பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி கடந்த நவம்பர் 20–ம் தேதி தொடங்கி நடந்து வந்தது. 11 அணிகள் பங்கேற்ற இந்த போட்டியில் லீக் ஆட்டங்கள் முடிவில் மும்பை சிட்டி, ஏ.டி.கே.மோகன் பகான், நார்த் ஈஸ்ட் யுனைடெட் (கவுகாத்தி), கோவா அணிகள் முறையே முதல் 4 இடங்களை பிடித்து அரைஇறுதிக்கு முன்னேறின.

3 முறை சாம்பியனான அட்லெடிகோ டி கொல்கத்தா, இந்த முறை புகழ் பெற்ற மோகன் பகான் கிளப்புடன் இணைந்து ஏ.டி.கே. மோகன் பகான் என்ற பெயரில் களம் கண்டது. அந்த அணி அரைஇறுதியில் 2 சுற்று முடிவில் 3–2 என்ற கோல் கணக்கில் கவுகாத்தி அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

ஐ.எஸ்.எல். கால்பந்து தொடரின் இறுதிப் போட்டி மும்பை சிட்டி, ஏ டி கே மோகன் பகான் எப்சி அணிகளுக்கு இடையே கோவாவில் இன்று (13.03.2021) இரவு நடைபெற்றது.

கொல்கத்தா அணியின் வில்லியம்ஸ் 18வது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார். ஆட்டத்தின் 29வது நிமிடத்தில் மும்பை அணியின் கோலை தடுக்க முயன்ற கொல்கத்தா வீரர் டிரி சேம் சைடு கோல் அடித்தார். இதனால் முதல் பாதி முடிவில் 1–1 என சமனிலை வகித்தன.

ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் மும்பை வீரர் பார்தோலமெவ் பாஸ் செய்த பந்தை அடித்த பிபின் சிங் கோலாக மாற்றினார். இறுதியில், மும்பை அணி 2–1 என்ற கணக்கில் கொல்கத்தா அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது.

மும்பை அணி இறுதிப்போட்டியில் அடியெடுத்து வைத்த முதல் முயற்சியிலேயே அந்த அணி கோப்பையை உச்சி முகர்ந்துள்ளது. மும்பை அணி கோப்பை வெல்வது இதுவே முதல் முறை.

சாம்பியன் பட்டம் வென்ற மும்பை அணிக்கு கோப்பையுடன் ரூ.8 கோடி பரிசாக வழங்கப்பட்டது. 2–வது இடம் பெற்ற ஏ.டி.கே. மோகன் பகான் அணிக்கு ரூ.4 கோடி பரிசாக அளிக்கப்பட்டது. இந்த போட்டி தொடரில் அதிக கோல் அடித்தவருக்கான தங்க காலணி விருதை கோவா அணி வீரர் இகோர்அன்குலோ (14 கோல்கள்) பெற்றார். சிறந்த கோல் கீப்பருக்கான தங்க குளோவ்ஸ் விருது ஏ.டி.கே. மோகன் பகான் அணியின் கோல் கீப்பர் அரிந்தம் பட்டாச்சார்ஜாவுக்கு வழங்கப்பட்டது.

**21. மாநில அரசின் அதிகாரிகளாக இருக்கக்கூடியவர்களை மாநில தேர்தல் ஆணையர்களாக நியமிக்க கூடாது: உச்சநீதிமன்றம் அறிவுறுத்தல்**

மாநில அரசின் அதிகாரிகளாக இருக்கக்கூடியவர்களை மாநில தேர்தல் ஆணையர்களாக நியமிக்க கூடாது என்று உச்சநீதிமன்றம் நீதிபதிகள்

அறிவுறுத்தியுள்ளனர். மாநில தேர்தல் ஆணையர்கள் சுதந்திரமாக செயலாற்ற வேண்டும். தேர்தல் ஆணையத்தின் சுதந்திரத் தன்மையில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என தெரிவித்துள்ளனர்.

தன்னாட்சி அதிகாரம் கொண்ட மாநில தேர்தல் ஆணையரின் பொறுப்பை மத்திய, மாநிலங்கள் சார்ந்த அரசாங்க அதிகாரிகளிடம் ஒப்படைப்பது என்பது இந்திய அரசியலமைப்பையே கேலி செய்வது போன்றதாகும் என உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.கோவா மாநிலத்தின் சட்டத்துறைச் செயலாளராக இருந்தவருக்கு மாநில தேர்தல் ஆணையரின் கூடுதல் பொறுப்பை அம்மாநில அரசு வழங்கியது. இது மிகப்பெரிய சர்ச்சையாக எழுந்தது. இதையடுத்து மேற்கண்ட விவகாரம் தொடர்பாக கோவா உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இதைத்தொடர்ந்து வழக்கை விசாரித்த நீதிமன்றம் ஒரு அரசு ஊழியர் அல்லது அதன் அதிகாரத்துவம் கொண்ட நபரை மாநில தேர்தல் ஆணையராக நியமிக்க முடியாது. அதனால் கோவா மாநிலத்தின் தேர்தல் ஆணையராக கூடுதல் பொறுப்பேற்றுக் கொண்டவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் மேற்கண்ட உயர்நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக கோவா அரசு தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து வழக்கின் வாதங்கள் அனைத்தையும் பதிசெய்துக் கொண்ட நீதிமன்றம் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் கடந்த சில தினங்களுக்கு முன்னதாக ஒத்திவைத்திருந்தது.

இந்த நிலையில் மேற்கண்ட வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் ரோகிண்டன் பாலி நாரிமன், பி.ஆர்.கவாய் மற்றும் ஹச்.ராய் ஆகியோர் அமர்வு அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது. அதில்,' மத்திய மாநில அரசாங்க அதிகாரிகளை மாநிலத்தின் தேர்தல் ஆணையராக நியமிக்கக்கூடாது. அவ்வாறு செய்வது என்பது கேலிக்கூத்தான ஒன்றாகும். இது இந்திய அரசியல் அமைப்புக்கு எதிரான ஒன்றாகும். இதில் தேர்தல் ஆணையர்கள் என்பவர்கள் சுதந்திரமாக செயல்பட வேண்டும். அந்த விவகாரத்தில் கண்டிப்பாக எந்தவித சமரசமும் கிடையாது. மேலும் தேர்தல் ஆணையம் என்பது தன்னாட்சி அதிகாரம் கொண்டது என்பதால் அதில் அரசுகளின் தலையீடு இருக்கக் கூடாது. இது அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தக் கூடியதாகும் என தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் இதுதொடர்பாக கோவா மாநில அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

**22. ரயில்களில் சரக்குகள் போக்குவரத்து கடந்த நிதியாண்டு அளவை விஞ்சி சாதனைபடைத்திருப்பதாக ரயில்வே வாரியம் தெரிவித்துள்ளது.**

**இதுகுறித்து ரயில்வே வாரியத் தலைவா் சுனீத் சா்மா தில்லியில் சனிக்கிழமை அளித்த பேட்டி:**

கரோனா பொதுமுடக்கம் காரணமாக பயணிகள் ரயில் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டிருந்த நிலையில், சரக்கு ரயில்களில் கூடுதல் சரக்குகள் கையாளப்பட்டிருப்பது மிகப் பெரிய சாதனையாக பாா்க்கப்படுகிறது.

சரக்கு ரயில்களில் கடந்த நிதியாண்டில் 1145.61 மெட்ரிக் டன் அளவில் சரக்குகள் ஏற்றப்பட்ட நிலையில், மாா்ச் 12-ஆம் தேதி வரையிலான 2020-21 நிதியாண்டில் 1145.68 மெட்ரிக் டன் சரக்குகள் ஏற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இது எங்களுக்கு மிகுந்த உத்வேகத்தை அளித்திருப்பதோடு, பொருளாதார வளா்ச்சியில் ரயில்வே தொடா்ந்து பங்களிப்பு செய்துவருகிறது என்பதை இது நிரூபித்திருக்கிறது. மண்டல அளவில் ரயில்வே ஊழியா்கள் மேற்கொண்ட தீவிர முயற்சிகளே இந்த சாதனைக்கு முக்கியக் காரணம்.

மாத அடிப்படையில் கணக்கிடும்போது மாா்ச் 11-ஆம் தேதி வரையிலான நிகழ் நிதியாண்டில் 4.34 கோடி டன் சரக்குகள் ரயில்களில் ஏற்றப்பட்டிருக்கிறது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 10 சதவீதம் கூடுதலாகும். கடந்த நிதியாண்டில் 3.93 கோடி டன் சரக்குகள் ரயில்களில் ஏற்றப்பட்டன.

அதுபோல, 2021 மாரச் மாதத்தில் சரக்கு ரயில்களின் சராசரி வேகம் மணிக்கு 45.49 கி.மீ. என்ற அளவுக்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் இரண்டு மடங்கு கூடுதல் வேகமாகும். கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் சரக்கு ரயில் சராசரி வேகம் மணிக்கு 23.29 கிலோ மீட்டாராக இருந்தது.

கட்டண சலுகை, தள்ளுபடிகள் அளித்தது, தொழில் நிறுவனங்கள் மற்றும் தனியாா் சரக்கு போக்குவரத்து சேவை நிறுவனங்களுடன் ரயில்வே மண்டல அதிகாரிகள் தொடா்ச்சியான ஆலோசனைகளை மேற்கொண்டது, சரக்கு ரயில்களின் வேகம் அதிகரிக்கப்பட்டது என்பன உள்ளிட்ட நடவடிக்கைகளே சரக்குகளை கையாளும் அளவு அதிகரிப்பதற்கு காரணம்.

கரோனா பாதிப்பை இந்த வகையில் ஒரு வாய்ப்பாக இந்தியன் ரயில்வே பயன்படுத்திக்கொண்டது என்று அவா் கூறினாா்.

**23. ஹெச் -1பி விசா: அமெரிக்க புதிய அறிவிப்பு**

அமெரிக்க முன்னாள் அதிபா் டொனால்ட் டிரம்ப்பின் ஆட்சிக் காலத்தின்போது வெளிநாட்டுப் பணியாளா்களுக்கான ஹெச்-1பி நுழைவு இசைவு (விசா) விண்ணப்பங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை மறுபரிசீலனை செய்யவிருப்பதாக தற்போதைய பைடன் அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம், அந்த வகை விசாக்களை பெருமளவில் பயன்படுத்தும் இந்திய தகவல் தொழில்நுட்ப நிபுணா்கள் அதிக பலன் பெறுவா் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவை அமைப்பு (யுஎஸ்சிஐஎஸ்) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஹெச்-1பி தொடா்பான 3 குறிப்பாணைகள் ஏற்கெனவே ரத்து செய்யப்பட்டுள்ளன. அந்தக் குறிப்பாணைகளில் தெரிவிக்கப்பட்டிருந்த விதிமுறைகளைப் பின்பற்றி பல விசா விண்ணப்பங்களுக்கு எதிரான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு எடுக்கப்பட்டுள்ள முடிவுகளை மீண்டும் பரிசீலிக்கத் தயாராக உள்ளோம். தங்களது விண்ணப்பங்கள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை யுஎஸ்சிஐஎஸ் ஆய்வு செய்து, அதன் மீது நடவடிக்கை எடுக்கும்.

விண்ணப்பதாரா்கள் அவ்வாறு கோரிக்கை விடுக்கும்போது, அவா்களது விண்ணப்பங்கள் காலாவதியாகவில்லை என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளைப் பின்பற்றி, அந்த விண்ணப்பங்கள் மீதான முடிவுகளை யுஎஸ்சிஐஎஸ் எடுக்கும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**24. நியூஸிலாந்து மசூதித் தாக்குதலின் 2-ஆவது ஆண்டு தினம்**

நியூஸிலாந்தின் கிறைஸ்ட்சா்ச் நகரிலுள்ள 2 மசூதிகளில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டதன் 2-ஆவது ஆண்டு தினம் அந்த நாட்டில் சனிக்கிழமை கடைபிடிக்கப்பட்டது.

அந்த நகர அரங்கத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கானவா்கள் கலந்துகொண்டனா்.

நியூஸிலாந்தின் பிரதமா் ஜெசிந்தா ஆா்டன் பேசியதாவது:

நியூஸிலாந்தின் கிறைஸ்ட் நகரிலுள்ள இரு மசூதிகளில், கடந்த 2019-ஆம் ஆண்டு மாா்ச் 15-ஆம் தேதி நடத்தப்பட்ட கொடூரமான துப்பாக்கிச் சூட்டில், அங்கு தொழுகைக்காக வந்திருந்த 51 போ் உயிரிழந்தனா்; சுமாா் 40 போ் காயமடைந்தனா்.

ஆஸ்திரேலியாவைச் சோ்ந்த வெள்ளை இனவாதி பிரெண்டன் டாரன்ட் (29) இந்தத் தாக்குதலை நடத்தினாா். நியூஸிலாந்தில் மிகப் பெரிய அதிா்ச்சி அலையை அந்தத் தாக்குதல் ஏற்படுத்தியது.தாக்குதலில் ஈடுபட்ட டாரன்டுக்கு நியூஸிலாந்தின் அதிகபட்ச தண்டனையான ஜாமீனில் வெளிவர முடியாத வாழ்நாள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

அந்தத் தாக்குதலின் முதலாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி கடந்த ஆண்டில் கரோனா நெருக்கடி காரணமாக ரத்து செய்யப்பட்டது.

**25. தமிழில் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்காக கே.வி.ஜெயஸ்ரீக்கு 2019 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது**

மலையாள எழுத்தாளர் மனோஜ் குரூரின் நாவலை 'நிலம் பூத்து மலர்ந்த நாள்' என தமிழில் மொழி பெயர்த்ததற்காக மொழிபெயர்ப்பாளர் கே.வி.ஜெயஸ்ரீக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

**26. இந்தியாவில் மேலும் 6 தடுப்பூசிகள்; மத்திய சுகாதார மந்திரி ஹர்சவர்தன் தகவல்**

**மேலும் 6 தடுப்பூசிகள்:**

இந்தியா 2 தடுப்பூசிகளை (இந்தியாவில் பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவேக்சின் மற்றும் சீரம் இன்ஸ்டிட்யூட் ஆஃப் இந்தியாவின் கோவிஷீல்டு) உருவாக்கி உள்ளது. இந்த தடுப்பூசிகள் 71 நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இன்னும் பல நாடுகள் இந்தியாவிடம் தடுப்பூசிகளை நாடுகின்றன. இந்த நாடுகள் எல்லாம் சற்றே அறிந்த சிறிய நாடுகள் அல்ல. கனடா, பிரேசில் மற்றும் பல வளர்ந்த நாடுகள் இந்திய தடுப்பூசிகளைத்தான் வைராக்கியத்துடன் பயன்படுத்துகின்றன.இன்னும் 6-க்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் வர இருக்கின்றன.பிரதமர் மோடி ஒரு புதிய இந்தியாவை உருவாக்கி, அதை உலக தலைவராக மாற்ற விரும்புகிறார்.

**27. அமெரிக்காவில் போலீஸ் விசாரணையின் போது கொல்லப்பட்ட கறுப்பினத்தைச் சேர்ந்த ஜார்ஜ் பிளாய்ட் குடும்பத்துக்கு ரூ.196 கோடி நிவாரணம் வழங்கப்படுகிறது.**

**28. 'அலிபாபா'வுக்கு அபராதம் கடுமை காட்டும் சீன அரசு**

சீனாவைச் சேர்ந்த, 'அலிபாபா' நிறுவனத்துக்கு, அந்நாட்டிலிருக்கும் ஒழுங்குமுறை அமைப்பு, மிக அதிகளவிலான அபராதம் விதிக்க கூடும் என, அமெரிக்காவின், 'வால்ஸ்ட்ரீட்' பத்திரிகை தெரிவித்துஉள்ளது.

சீனாவின் மிக பெரிய பணக்காரர்களில் ஒருவரான, ஜேக் மாவுக்கு சொந்தமான நிறுவனம், அலிபாபா. இந்நிறுவனத்துக்கு தான் இப்போது புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் நடந்திருப்பதாக கூறி, நிறுவன நம்பிக்கைகள் குறித்த கட்டுப்பாட்டு அமைப்பு விசாரணை மேற்கொண்டிருப்பதாகவும், அலிபாபாவுக்கு அபராதம் விதிக்கப்பட வாய்ப்பிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதற்கு முன், இதே போன்ற காரணத்துக்காக, 'குவால்காம்' நிறுவனத்துக்கு, 7,080 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அலிபாபாவுக்கு இதை விட அதிகளவிலான அபராதம் விதிக்கப்படக்கூடும் என்றும் சொல்லப்படுகிறது.அண்மைக் காலமாக அலிபாபா நிறுவனர் ஜேக் மாவுக்கும் சீன அரசுக்கும் இடையே உரசல்கள் ஏற்பட்டுள்ளன.

இதனையடுத்து, ஜேக் மாவுக்கு எதிரான நடவடிக்கைகளை சீன அரசு மேற்கொண்டு வருகிறது.கடந்த டிசம்பர் மாதத்தில், அலிபாபா மீது விசாரணை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.இந்நிலையில் இப்போது இப்படி ஒரு குற்றச்சாட்டுக்கு ஆளாகி உள்ளது, அலிபாபா நிறுவனம்.

**29. தடுப்பூசி தயாரிக்க அமெரிக்க நிறுவனம் நிதி**

இந்தியாவைச் சேர்ந்த, 'பயோலாஜிக்கல் – இ' நிறுவனம், 100 கோடி, 'டோஸ்' கொரோனா தடுப்பூசி மருந்து தயாரிப்பதற்கு, தேவையான நிதி உதவியை அளிப்பதாக, அமெரிக்காவைச் சேர்ந்த, 'டெவலப்மென்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன்' அறிவித்துள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற, 'குவாட்' மாநாடு, 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக, நேற்று நடந்தது. இதில் பேசிய, பிரதமர் மோடி, 'அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய உறுப்பு நாடுகளின் துணையுடன், கொரோனா தடுப்பூசி மருந்து தயாரிப்பு அதிகரிக்கப்படும்; இது, இந்திய – பசிபிக் பிராந்திய நாடுகளுக்கு பயனுள்ளதாக இருக்கும்' என்றார்.

இதையடுத்து, நேற்று, அமெரிக்காவைச் சேர்ந்த, 'டெவலப்மென்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன்' நிறுவனம், இந்தியாவின், 'பயோலாஜிக்கல் – இ' நிறுவனம் தயாரிக்க உள்ள கொரோனா உள்ளிட்ட தடுப்பூசி மருந்துகளுக்கு நிதியுதவி அளிப்பதாக அறிவித்துள்ளது.

இது குறித்து, டெவலப்மென்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைமை செயல்பாட்டு அதிகாரி டேவிட் மார்க் கூறியதாவது:இந்தியாவில் தடுப்பூசி மருந்துகள், குறிப்பாக கொரோனா தடுப்பூசி மருந்துகளின் தயாரிப்பை அதிகரிக்கும் வகையில், எங்கள் நிறுவனம் நிதியுதவி செய்ய உள்ளது. இது, தடுப்பூசி மருந்து செலுத்திக் கொள்வோர் எண்ணிக்கையை அதிகரிக்க உதவும் என்பதுடன், உலகில் உள்ள அனைத்து சமூக மக்களும் பயன் பெறவும் துணைபுரியும். இந்த வகையில், பயோலாஜிக்கல் – இ நிறுவனத்தின், 100 கோடி டோஸ் கொரோனா தடுப்பூசி மருந்துக்கு, நிதியுதவி செய்யப்படும்.இவ்வாறு, அவர் கூறினார்.

**30. குவாட் நாடுகள் கூட்டம்: அமெரிக்க பிரதிநிதி உரையின் முக்கிய அம்சங்கள்**

அமெரிக்காவில் குவாட் நாடுகள் கூட்டம் நடைபெற்றது. இதில் இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். சீனாவை சாராமல் பொருளாதாரம், வர்த்தகம் உள்ளிட்டவற்றில் மேம்படுவதற்கான உருவாக்கப்பட்டது குவாட் நாடுகள் கூட்டணி. இந்த கூட்டத்தில் சீனாவால் மற்ற நாடுகளுக்கு ஏற்படும் சவால்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதுதவிர மியான்மர் ராணுவத்தின் அடக்குமுறை, வடகொரிய அணுஆயுத சோதனை, தெற்கு மற்றும் கிழக்கு சீன கடலில் சீனாவின் அத்துமீறல் உள்ளிட்ட முக்கிய உலக நிகழ்வுகள் குறித்து விவாதிக்கப்பட்டன. நான்கு நாட்கள் நடைபெறும் இந்த குவாட் நாடுகள் கூட்டத்தில் இன்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுல்லிவான் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், லடாக் பகுதியில் சீன ராணுவம் அடிக்கடி இந்திய ராணுவத்துடன் மோதல் போக்கில் ஈடுபடுவது குறித்துப் பேசினார். இதற்கு குவாட் நாடுகள் தலையிட்டு இந்த விவகாரத்துக்கு முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்தியாவின் தயாரிப்பு, அமெரிக்காவின் தொழில்நுட்பம், ஜப்பானின் நிதி, ஆஸ்திரேலியாவின் புள்ளியியல் ஆகியவை ஒன்றிணைந்து ஒரு பில்லியன் வைரஸ் தடுப்பு மருந்துகளை குவாட் நாடுகளுக்கு பகிர்ந்து அளித்து வருகிறது என்றும் 2022–ஆம் ஆண்டுக்குள் இந்தத் தடுப்பு மருந்து விநியோகம் முடிவடையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

16. வாக்காளர்களுக்கு உதவும் 'மொபைல் ஆப்'

மேற்கு வங்கம், தமிழகம் உட்பட நான்கு மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், சட்டசபை தேர்தல் நடக்க உள்ளது. இதற்கிடையே, நாட்டின் அனைத்து தொகுதிகளுக்கும், 60 ஆண்டுகளுக்கான பொருளாதார, அரசியல் தகவல்கள், ஓட்டுப்பதிவு புள்ளிவிபரங்கள் அடங்கிய, 'போல்சுபோல்' என்ற, 'மொபைல் ஆப்'பினை, கோல்கட்டா நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. 'இது, வாக்காளர்களுக்கு பயனளிக்கும்' என, அந்நிறுவனத்தினர் கூறியுள்ளனர்.

**31. மஸ்க், பெசோஸை பின்னுக்கு தள்ளி 2021ல் அதிக பணம் ஈட்டுவதில் தொழிலதிபர் அதானி முதலிடம்: கூடுதலாக 1.17 லட்சம் கோடி சொத்து சேர்ந்தது**

உலகளவில் இந்த ஆண்டு அதிக பணம் சம்பாதித்ததில் எலன் மஸ்க், பெசோஸ் ஆகியோரை பின்னுக்கு தள்ளி இந்திய தொழிலதிபர் கவுதம் அதானி நம்பர்–1 இடத்தை பிடித்துள்ளார். உலகின் பெரும் பணக்காரர்கள் பட்டியலை ப்ளூர்பெர்க் பொருளாதார இதழ் வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், உலகின் நம்பர்–1 பணக்காரராக அமேசானின் ஜெப் பெசோஸ், அடுத்த இடத்தில் டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனர் எலன் மஸ்க் உள்ளனர். இந்நிலையில், 2021ல் அதிக பணம் சம்பாதித்தவர்கள் பட்டியலை ப்ளூம்பெர்க் தற்போது வெளியிட்டுள்ளது. அதில், பெசோஸ், மஸ்க்கை பின்னுக்கு தள்ளி நம்பர்–1 இடத்தை பிடித்திருப்பவர் இந்திய தொழிலதிபர் கவுதம் அதானி ஆவார். முதல் தலைமுறை தொழிலதிபரான அதானியின் நிகர சொத்து மதிப்பு 2021ம் ஆண்டில் 1.17 லட்சம் கோடி உயர்ந்து, மொத்த சொத்து மதிப்பு 3.6 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

இதன் மூலம், அவர் உலகளவில் இந்தாண்டின் மிகப்பெரிய அளவில் பணம் சம்பாதித்தவராக ஆகியுள்ளார். இந்த கால கட்டத்தில் பெசோஸ் 55 ஆயிரம் கோடியும், மஸ்க் 74 ஆயிரம் கோடியும் சம்பாதித்துள்ளனர். ஆசியாவின் நம்பர்–1 பணக்காரரான ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானி கூட 58 ஆயிரம் கோடி தான் சம்பாதித்துள்ளார். இதன் மூலம், அதானி குழும பங்குகள் அனைத்து 50 சதவீத வளர்ச்சி கண்டன. குறிப்பாக, அதானி டோட்டல் 96%, அதானி எண்டர்பிரைசர்ஸ் 90%, அதானி டிரான்ஸ்மிஷன் 79%, அதானி பவர் – அதானி போர்ட்ஸ் ஆகிய இரண்டும் 52 % அதிகமாக வளர்ச்சி அடைந்துள்ளது. அதானி குழுமம் இந்தியாவில் துறைமுகங்கள், விமான நிலையங்கள், டேட்டா சென்டர்கள் மற்றும் நிலக்கரி சுரங்க தொழில்களில் வலுவாக காலூன்றி உள்ளது. ஆஸ்திரேலியாவில் நிலக்கரி சுரங்க தொழிலில் ஈடுபடும் திட்டத்தை விரைவுப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

**இவர் மட்டும் எப்படி? சந்தேகம் கிளப்பும் ராகுல்:**

அதானியின் சொத்து மதிப்பு உயர்ந்தது குறித்த செய்தியை தனது டிவிட்டரில் பகிர்ந்துள்ள காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, '2020ம் ஆண்டில் உங்கள் சொத்து மதிப்பு எவ்வளவு அதிகரித்தது? பூஜ்ஜியம். நீங்கள் வாழவே சிரமப்பட்ட நிலையில், அதானி ₹12 லட்சம் கோடி சம்பாதித்துள்ளார். அவரது சொத்து மதிப்பு 50 சதவீதம் அதிகரித்துள்ளது. அது, எப்படி என்று எனக்கு சொல்ல முடியுமா?' என கேள்வி எழுப்பி உள்ளார்.

**32. இணையவழி புகை மாசு கண்காணிப்பு திட்டத்தை செயல்படுத்தாத தொழிற்சாலைகள் மீது மத்திய, மாநில அரசுகள் எடுத்த நடவடிக்கை என்ன? – ஏப்.9–ம் தேதிக்குள் பதிலளிக்க பசுமை தீர்ப்பாயம் உத்தரவு**

இணையவழி புகை மாசு கண்காணிப்பு திட்டத்தை செயல்படுத்தாத தொழிற்சாலைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மத்திய, மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்கள் பதிலளிக்க தேசியபசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக சென்னையை சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் தர்மேஷ் ஷா, தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மண்டல அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:

சுற்றுச்சூழல் தொடர்பான வழக்கு ஒன்றில் உச்ச நீதிமன்றம் கடந்த 2017–ம் ஆண்டு அளித்த தீர்ப்பில், "ஒவ்வொரு மாநில மாசுகட்டுப்பாடு வாரியமும் தங்கள்மாநிலங்களில் உள்ள தொழிற்சாலைகள் வெளியிடும் புகை மாசுவை இணையவழியில் உடனுக்குடன் கண்காணிக்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.அதன்மூலம் இணையவழியில் கிடைக்கும் விவரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள ஓசிஇஎம்எஸ் (Online

Continuous Emission Monitoring Sensors) திட்டத்தை செயல்படுத்த வேண்டும்" என்று உத்தரவிட்டிருந்தது.

ஓசிஇஎம்எஸ் என்பது இணையம் வாயிலாக அந்தந்த மாநிலங்களில் உள்ள எல்லா தொழிற்சாலைகளிலும் வெளியேறும் புகை மாசுவின் அளவை, புகை போக்கியில் பொருத்தப்படும் கருவி அளவிட்டு, உடனடியாக மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரிய இணையதளத்தில் தன்னிச்சையாக பதிவு செய்துவிடும். அதை பொதுமக்கள் எளிதில் பார்க்கலாம். இதன்மூலம் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தவிர பொதுமக்களும் தங்கள் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளை 24 மணி நேரமும் கண்காணித்து, தங்களின் அடிப்படைஉரிமையான சுத்தமான காற்றைசுவாசிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

இந்த தீர்ப்பை, தென் மாநிலங்களில் முறையாக அமல்படுத்தவில்லை. சில மாநிலங்களில் ஓசிஇஎம்எஸ் திட்டம் செயல்படுத்தப்பட்டாலும், அதன் தரவுகளை பொதுமக்களால் பார்க்க முடியாத வகையில், கடவுச்சொல்லை பதிவிட்டு உள்செல்லும் வகையில் உள்ளது. சில மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரிய இணையதளங்களில் முந்தைய கால, நிகழ்கால தரவுகள்ளதுவும் பதிவேற்றம் செய்யப்படவில்லை. இதனால் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் நோக்கம் நிறைவேறவில்லை. எனவே தென் மாநிலங்களில் ஓடிஇஎம்எஸ் திட்டத்தை செயல்படுத்தி, அதை பொதுமக்கள் பார்க்க அனுமதிக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுதாரர் கோரியிருந்தார்.

**33. உலகின் சிறந்த மருத்துவமனைகளில் காஞ்சி காமகோடி குழந்தைகள் மருத்துவமனை தேர்வு**

உலகின் சிறந்த மருத்துவமனைகளில் ஒன்றாக காஞ்சி காமகோடி குழந்தைகள் அறக்கட்டளை மருத்துவமனை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

உலகளாவிய தர ஆராய்ச்சி நிறுவனமான ஸ்டாடிஸ்டா நிறுவனம், நியூஸ் வீக் இதழ் இணைந்து 2021-ம் ஆண்டுக்கான உலகின் சிறந்த மருத்துவமனைகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, கனடா மற்றும் இந்தியா உள்ளிட்ட 25 நாடுகளின் மருத்துவமனைகள் இடம்பெற்றுள்ளன. மருத்துவமனைகளின் நிலையான சிறப்பு செயல்பாடு, சிறந்த மருத்துவர்கள், செவிலியர் பணிவிடை, அதிநவீன தொழில் நுட்பம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து இவை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

உலகின் சிறந்த மருத்துவமனைகளாக இந்தியாவில் இருந்து 11 மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில், சிறந்த குழந்தைகள் மருத்துவமனையாக சென்னையில் செயல்பட்டு வரும் காஞ்சி காமகோடி குழந்தைகள் அறக்கட்டளை மருத்துவமனை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**34. டோக்கியோ ஒலிம்பிக் பவானிதேவி தகுதி**

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய வாள்வீச்சு வீராங்கனை சி.ஏ.பவானிதேவி தகுதி பெற்றுள்ளார்.

சென்னையைச் சேர்ந்த சி.ஏ.பவானிதேவி, அண்மையில் ஹங்கேரியில் நடைபெற்ற உலககோப்பை வாள்வீச்சுப் போட்டியில் பங்கேற்று கால் இறுதியில் தோல்வி கண்டார். இருந்தபோதும் சரிசெய்யப்பட்ட அதிகாரப்பூர்வ தரவரிசையின்படி (ஏஓஆர்) அவர் டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கதகுதி பெற்றுள்ளார். இதன்மூலம் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்ற முதல் இந்திய வாள்வீச்சு வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

**35. விஜய் ஹசாரே கோப்பை கிரிக்கெட்: மும்பை அணி 4-வது முறையாக சாம்பியன்**

டெல்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நேற்று நடந்த விஜய் ஹசாரே கோப்பை கிரிக்கெட்டில் மும்பை அணி 4-வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் இறுதிப்போட்டி டெல்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நேற்று நடந்தது. இதில் மகுடத்துக்காக உத்தரபிரதேசம்-மும்பை அணிகள் மல்லுகட்டின. 'டாஸ்' ஜெயித்து முதலில் பேட் செய்த உத்தரபிரதேச அணி 4 விக்கெட்டுக்கு 312 ரன்கள் சேர்த்தது. தொடக்க ஆட்டக்காரர் மாதவ் கவுஷிக் 158 ரன்கள் (156 பந்து, 15 பவுண்டரி, 4 சிக்சர்) எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். பின்னர் 313 ரன்கள் இலக்கை நோக்கி களம் கண்ட மும்பை பேட்ஸ்மேன்கள், உத்தரபிரதேச பந்து வீச்சாளர்களுக்கு பதிலடி கொடுத்தனர். பொறுப்பு கேப்டன் பிரித்வி ஷா 73 ரன்கள் (39 பந்து, 10 பவுண்டரி, 4 சிக்சர்) விளாசி அட்டகாசமான தொடக்கம் தந்தார். இதன் பிறகு விக்கெட் கீப்பர் ஆதித்ய தாரே நிலைத்து நின்று வெற்றியை உறுதி செய்தார்.

மும்பை அணி 41.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 315 ரன்கள் குவித்து 6 விக்கெட் வித்தியாசத்தில் எளிதில் வெற்றியை ருசித்து கோப்பையை வசப்படுத்தியது. 'லிஸ்ட் ஏ' வகை கிரிக்கெட்டில் தனது முதலாவது சதத்தை எட்டிய ஆதித்ய தாரே 118 ரன்களுடன் (107 பந்து, 18 பவுண்டரி) களத்தில் இருந்தார். மும்பை அணி கோப்பையை உச்சிமுகர்வது இது 4-வது முறையாகும். ஏற்கனவே 2003-04, 2006-07, 2018 ஆகிய ஆண்டுகளிலும் கோப்பையை வென்று இருந்தது.

மும்பை பொறுப்பு கேப்டன் 21 வயதான பிரித்வி ஷா இந்த தொடரில் 8 ஆட்டங்களில் ஆடி 4 சதம் உள்பட 827 ரன்கள் திரட்டியுள்ளார். விஜய் ஹசாரே போட்டியில் ஒரு சீசனில் 800 ரன்களை கடந்த முதல் வீரர் என்ற சிறப்பை பெற்றார். 'இந்த தொடரில் எங்களது அணியில் ஒவ்வொருவரும் தங்களது பங்களிப்பை அளித்தனர். தனிப்பட்ட நபரின் சாதனையால் மட்டும் வெற்றி கிட்டவில்லை. அணியின் உதவியாளர்கள், வீரர்கள் அனைவருக்கும் இந்த கோப்பை உரித்தானது, என்று பிரித்வி ஷா கூறினார்.

**36. ரயில் டிக்கெட் தடையின்றி வழங்க புதிய தொழில்நுட்பம் அறிமுகம்.**

தெற்கு ரயில்வே, பயணிகளுக்கு இடையூறு இல்லாமல் பயணச்சீட்டு வழங்குவதற்காக, பயணச்சீட்டு சாதனை மேலாண்மை என்ற புதிய தொழில்நுட்பத்தை படிப்படியாக அறிமுகப்படுத்தி வருகிறது.

இத்தொழில்நுட்பத்தின் மூலம், கணினி முன்பதிவு பயணச்சீட்டு மற்றும் முன்பதிவில்லா பயணச்சீட்டு வழங்கும்போது, கணினி நெட்வொர்க்கில் தொழில்நுட்பக் குறைபாடு ஏற்பட்டால் உடனடியாக ஆன்லைன் மூலமாக சரிசெய்ய முடியும். இதன் மூலம், பயணிகளுக்கு எவ்வித இடையூறும் இன்றி பயணச்சீட்டு வழங்க முடியும்.

இதற்கு முன்பு இதுபோன்ற ஏதாவது தொழில்நுட்பப் பிரச்சினை ஏற்பட்டால், அது குறித்து கைகளால் பதிவு செய்து பின்னர் தொடர்புடைய அலுவலகத்துக்கு தெரிவித்து பிரச்சினையை சரி செய்ய காலதாமதம் ஏற்பட்டது. தற்போது, இந்தத் தொழில்நுட்பம் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு உள்ளது.

இதற்கான சாஃப்ட்வேர் ரயில்வே துறையால் உருவாக்கப்பட்டதால், ரயில்வே நிர்வாகத்துக்கு செலவு ஏதும் ஏற்படவில்லை என தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**37. பார்சல் மேலாண்மை அமைப்பு விரிவுபடுத்த தெற்கு ரயில்வேயில் 58 ரயில் நிலையங்கள் தேர்வு**

ரயில்களில் பாா்சல் கையாளுவதை எளிமைப்படுத்தும் வகையில், ரயில்வேயில் பாா்சல் மேலாண்மை அமைப்பு விரிவுப்படுத்தப்படவுள்ளது. இதற்காக, தெற்குரயில்வேயில் 58 ரயில் நிலையங்கள் தோ்வு செய்யப்பட்டுள்ளன. 21 ரயில் நிலையங்களில் இந்த ஆண்டு இறுதிக்குள் கனிணிமயமாக்கப்பட்ட பாா்சல் மேலாண்மை அமைப்பை ஏற்படுத்தும் பணிகள் நிறைவடையும் என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனா்.

பாா்சல் ரயில் சேவை: இந்தியன் ரயில்வேயில் பாா்சல் ரயில் சேவை முக்கிய அங்கமாக இருக்கிறது. இந்த சேவையை சாதாரண மக்களும் பயன்படுத்தும் விதமாக, பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கரோனா பொதுமுடக்கம் காலத்தில் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், உணவுப் பொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்ல பாா்சல் ரயில் சேவை பேருதவியாக இருந்தது. இந்தியன் ரயில்வேயில், ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வதற்காக,

'கனிணிமயமாக்கப்பட்ட பாா்சல் மேலாண்மை அமைப்பு' முதற்கட்டமாக 84 இடங்களில் தொடங்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக, கூடுதலாக 143 இடங்களிலும், 3-ஆவது கட்டமாக கூடுதலாக 523 இடங்களிலும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தெற்கு ரயில்வேயில் சென்னை எம்.ஜி.ஆா் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பாா்சல் மேலாண்மை அமைப்பு செயல்படுகிறது.

**58 ரயில் நிலையங்கள் தோ்வு:**

இந்நிலையில், தெற்குரயில்வேயில் பாா்சல் மேலாண்மை அமைப்பை விரிவுபடுத்தும் வகையில், 58 ரயில் நிலையங்கள் தோ்வு செய்யப்பட்டுள்ளன. 21 ரயில் நிலையங்களில் நடப்பு ஆண்டு இறுதிக்குள் கனினி மயமாக்கப்பட்ட பாா்சல் மேலாண்மை அமைப்பை ஏற்படுத்தும் பணிகள் நிறைவடையும் என்று தெற்கு ரயில்வே அதிகாரிகள்தெரிவித்தனா்.

இது குறித்து தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியது: இந்த பாா்சல் மேலாண்மைத் திட்டத்தில் பல்வேறு சிறப்பம்சங்கள் உள்ளன. இந்தத் திட்டத்தை பொதுமக்கள் எளிதாக பயன்படுத்தும் வகையில் (www.parcel.indianrail.gov.in) என்ற இணையதளம்

உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளம் மூலம், பார்சல்களை அனுப்ப 120 நாள்களில் முன்பதிவு செய்து கொள்ளலாம். பார்சல் அனுப்புவதற்கான ரயில் போக்குவரத்து வசதிகளை அறிந்து கொள்ளலாம். பதிவு பெற்ற வாடிக்கையாளர்கள் இணையதளம் மூலமாகவே பார்சல் பதிவு செய்ய விண்ணப்பம் பெறலாம்.இதன்மூலம், உத்தேச பார்சல் கட்டணம் அறிந்துகொள்ளாம். இதுதவிர பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**21 ரயில் நிலையங்கள்:**

தெற்கு ரயில்வேயில் கோயம்புத்தூர், சென்னை எழும்பூர், மதுரை, திருப்பூர், ஈரோடு, நாகர்கோவில், சேலம், காட்பாடி, திருநெல்வேலி, ராஜபாளையம், திண்டுக்கல், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, புதுச்சேரி, திருவனந்தபுரம், எர்ணாகுளம், கோட்டயம், திருச்சூர், ஆலுவா, ஆலப்புழா, மங்களூர் சென்ட்ரல் ஆகிய 21 ரயில் நிலையங்களில் இந்த ஆண்டு இறுதிக்குள்

கணினி மயமாக்கப்பட்ட பார்சல் மேலாண்மை அமைப்பு ஏற்படுத்தும் பணிகள் முடிவடையும். இதன்மூலம், ரயில்களில் பார்சல்கள் கையாளுவது எளிமையாக்கப்படும் என்றனர்.

**38. இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில் இந்திய தூதர் சுற்றுப்பயணம்**

இலங்கைக்கான இந்தியத் தூதர் கோபால் பாக்லே அந்த நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சுற்றுப்பயணம் செய்து அங்குள்ள மூத்த தமிழ் தேசிய தலைவர்களை சந்தித்துப் பேசினார். இதுகுறித்து கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் ஞாயிற்றுக்கிழமை (14.03.2021) வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: இந்திய தூதர் கோபால் பாக்லே மூன்று நாள் சுற்றுப் பயணமாக மார்ச் 11 முதல் 13 – ஆம் தேதி வரை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது, அந்தமாகாணங்களில் உள்ள மூத்ததமிழ்தேசிய தலைவர்களை சந்தித்து அவர் உரையாடினார்.

ஐக்கிய இலங்கைக்குள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மூலமாக சிறுபான்மையாக உள்ள தமிழ் சமூகம் தங்களது நியாயமான விருப்பங்களை அடையமுடியும் என்பதை இந்திய தூதர் வலியுறுத்தி கூறினார். இது, இலங்கையை வலுப்படுத்த உதவுவதுடன், முன்னேற்றம், அமைதி ஆகியவற்றிலும் முக்கிய பங்களிப்பை வழங்கும் என்று அவர்களிடம் தெரிவித்தார். வடகிழக்கு மாகாணங்களின் வளர்ச்சிக்கும், அங்குள்ள மக்களின் தேவைக்கும் முன்னுரிமை தந்து இந்தியா தனது நீண்ட கால ஒத்து ழைப்பை வழங்கிவருகிறது. மேலும், அங்குள்ள தமிழ் தலைவர்கள் மாகாணங்களின் உள்கட்டமைப்பு மேமபாடு, அதிகமான பொருளாதார முதலீடு உள்ளிட்ட கூடுதல் திட்டங்களை முன்னேற்றத்துக்கான மானிய உதவி திட்டத்தின் கீழ் இந்தியாவிலிருந்து எதிர்பார்ப்பதாக தூதரிடம் அவர்கள் வலியுறுத்தினர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் 46 – ஆவது கூட்டம் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. அங்கு, இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட இருக்கும் நிலையில் இந்திய தூதரின் இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

**39. சிந்து நதி பகிர்வு: இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே பேச்சு**

சிந்து நதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் நீரைப் பகிர்ந்து கொள்வது குறித்து பாகிஸ்தான் மற்றும் இந்தியா இடையேயான பேச்சுவார்த்தை டெல்லியில் வரும், மார்ச்சு 23, 24ல் நடக்க உள்ளது. இந்த சந்திப்பின் போது, செனாப் நதியில் இந்திய நீர்மின் திட்டங்களின் வடிவமைப்பு குறித்த பாகிஸ்தானின் கவலைகள் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக இந்தியாவின் சிந்து நதி ஆணையர் பி.கே.சக்சேனா ஞாயிற்றுக்கிழமை (14.03.2021) தெரிவித்தார்.

பாகிஸ்தான் – இந்தியா இடையே பாயும் நதிகளின் நீரைப் பகிர்ந்து கொள்வது குறித்து 1960ல் சிந்து நதி ஒப்பந்தம் போடப்பட்டது. அதன்படி, மேற்கு பகுதியில் உள்ள சட்லஜ், பியாஸ், ரவி நதிகளில் பாயும் நீரை, இந்தியா முழுமையாக பயன்படுத்தி கொள்ளலாம் என்றும் மேற்கு பகுதியில் பாயும் சிந்து, ஜீலம், செனாப் நதிகளின் பெரும் பகுதியை, பாகிஸ்தான் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் இந்த ஒப்பந்தத்தின்படி, இந்தியா, மேற்கு பகுதியில் பாயும் நதிகளில், சில கட்டுப்பாடுகளுடன், நீர் மின் நிலையங்களை அமைத்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

லடாக்கில் தர்புக் ஷியோக், ஷாங்கு, நிமுஷில் லிங், ராங்டோ ஆகிய நீர்மின் திட்டங்களுக்கும், லே பகுதிக்காக ரத்தன் நாக் நீர்மின் திட்டத்துக்கும், கார்கிலுக்காக மங்டும் சங்ரா, கார்கில் ஹண்டர் மேன், தமாஷா ஆகிய நீர்மின் திட்டங்களுக்கும் இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தநிலையில், சிந்து நதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் நீரைப் பகிர்ந்து கொள்வது, நீர் மின் நிலையங்கள் அமைப்பது தொடர்பாக ஆலோசனை செய்வதற்காக, இரு நாட்டிலும், சிந்து நதி கமிஷனர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இரு தரப்பும், ஆண்டிற்கு ஒரு முறை சந்தித்து ஆலோசனை நடத்தும். இந்த சந்திப்பு கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் டெல்லியில் நடப்பதாக இருந்தது. ஆனால், கொரோனா காரணமாக அது ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில், 23 – 24ல், டெல்லியில் இந்த கூட்டம் மீண்டும் நடக்க உள்ளது. இந்தியாவின் சிந்து நதி கமிஷனர், பி.கே.சக்சேனா தலைமையிலான குழுவும், பாகிஸ்தான் சிந்து நதி கமிஷனர், சையது முகமது மெஹர் அலி ஷா தலைமையிலான குழுவும் இதில் பங்கேற்க உள்ளனர்.

**40. ஏழாவது சர்வதேச யோகா தினத்தையொட்டி 100 நாள் கவுன்டவுனை மத்திய ஆயுஷ் துறை இணையமைச்சர் கிரண் ரிஜிஜு சனிக்கிழமை (13.03.3021) தொடங்கி வைத்தார்.**

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், 'யோகக் கலையின் வளர்ச்சிக்கு அபரிமிதமான பங்களிப்பு செய்தவர்களிடம் இருந்து நிகழாண்டு ஏப்ரல் மாதம் பிரதமரின் யோகா விருதுகளுக்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படும். ஆண்டுதோறும் ஜூன் 21–ஆம் தேதி சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு 7–ஆவது சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில், அதற்கான 100 நாள் கவுண்டவுன் தொடங்கி வைக்கப்படுகிறது' என்று தெரிவித்துள்ளார்.

**41. நாட்டில் ஏற்கெனவே தனியார்மயமாக்கப்பட்ட தில்லி, மும்பை, பெங்களூரு, ஹைதராபாத் விமான நிலையங்களின் மீதமுள்ள அரசு பங்குகளையும் விற்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.**

ரூ. 2.5 லட்சம் கோடி அளவுக்கு அரசு சொத்துகளில் இருந்து நிதி திரட்டுவதற்கு அரசு இலக்கு நிர்ணயத்துள்ளதின் ஒரு பகுதியாக கூடுதல் ஆதாரங்களாக இவைக் கண்டறியப்பட்டுள்ளதாக துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

2021–2022 நிதி ஆண்டில் 13 விமான நிலையங்கள் தனியார் மயமாக்கலுக்கு அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் இந்த நான்கு விமான நிலையங்களின் தனது பங்குகளை இந்திய விமான நிலைய ஒழுங்காற்று ஆணையம் விற்கவுள்ளது. கடந்த மாதம் இத்துறையின் அரசு செயலர்களுக்கான அதிகாரக் குழு நடத்திய கலந்துரையாடலில் பங்கேற்ற இரு அதிகாரிகள் இத்தகவலைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறியதாவது: தில்லி, மும்பை, பெங்களூரு, ஹைதராபாத் விமான நிலையங்களின் மீதள்ள இந்திய விமான ஒழுங்காற்று ஆணையத்தின் பங்குகளை விற்பதற்கான முன்மொழிவுகள் உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சகத்து விரைவில் அனுப்பி வைக்கப்படும். அடுத்த சில நாள்களில் அமைச்சரவையின் ஒப்புதலுக்கும் இது அனுப்பி வைக்கப்படலாம்.

தனியார் மயமாக்கலுக்காக 13 விமான நிலையங்கள் கண்டறியப்பட்டுள்ள நிலையில் கூடுதல் நிதி தொகுப்புகளைப் பெற லாபத்தில் இயங்கும் விமான நிலையங்கள், லாபமற்ற விமான நிலையங்களை இணைப்பதற்கான வழிவகைகள் ஆராயப்படும் என அவர்கள் தெரிவித்தனர்.

பிரதமர் நரேந்திர மோடி அரசின் விமான நிலையங்களைத் தனியார் மயமாக்கும் முதல் கட்ட செயலாக்கத்தில் லக்னௌ, ஆமதாபாத், ஜெய்ப்பூர், மங்களூரு, திருவனந்தபுரம், குவஹாத்தி ஆகிய ஆறு விமான நிலையங்களின் ஒப்பந்தங்களை அதானி குழுமம் பெற்றது.

உள்நாட்டு விமானப்போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இயங்கும் விமானநிலைய ஒழுங்காற்று ஆணையம் நாட்டில் 100–க்கும் மேற்பட்ட விமான நிலையங்களைப் பராமரித்து வருகிறது.

மும்பை பன்னாட்டு விமான நிலையத்தின் 74 சதவீத பங்குகளை அதானி குழுமம் வைத்திருக்கும் நிலையில் மீதம் 26 பங்குகளை ஏஏஐ வைத்திருக்கிறது. தில்லி பன்னாட்டு விமான நிலையத்தின் 54 சதவீத பங்குகளை ஜிஎம்ஆர் குழுமம் வைத்திருக்கும் நிலையில் ஏஏஐ 26 சதவீத பங்குகளையும், பிராபோர்ட் ஏஜி, இராமன் மலேசியா ஆகியவை தலா 10 சதவீத பங்குகளையும் வைத்துள்ளது. ஹைதராபாத் விமான நிலையத்தின் 26 சதவீத பங்குகளை ஆந்திர அரசுடனும், பெங்களூரு விமான நிலையத்தின் 26 சதவீத பங்குகளை கர்நாடக அரசுடன் ஏஏஐ வைத்திருக்கிறது. அண்மையில் நடைபெற்ற 2021–22 பட்ஜெட் கூட்டத் தொடரில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசுகையில், "புதிய உள்கட்டமைப்புக் கட்டுமானங்களை செய்ய பொது உள்கட்டமைப்பு

சொத்துகளில் இருந்து நிதி திரட்டுதல் முக்கிய வழிவகையாகும்' எனத் தெரிவித்திருந்தார்.

கடந்த மாதம் பிரதமர் நரேந்திரமோடியும் தனது உரையில், "ஆயில், கேஸ் பைப்லைன் போன்ற 100 அரசு சொத்துகளில் இருந்து ரூ. 2.5 லட்சம் கோடி அளவுக்கு முதலீட்டை பெறும் வகையில் நிதி திரட்ட அரசு இலக்கு நிர்ணயம் செய்திருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

**42. உடான் திட்டத்தின் கீழ் 390 விமான வழித்தடங்களுக்கு சேவைகளை வழங்குவதற்கான ஏல விண்ணப்பங்களை வரவேற்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளதாவது: உடான் திட்டத்தின் கீழ் உள்நாட்டில் உள்ள முக்கிய நகரங்களுக்கு விமான சேவையை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த திட்டம் தொடங்கப்பட்டு நடப்பாண்டுடன் நான்கு ஆண்டுகள் நிறைவடையவுள்ளது. இந்த நிலையில், உடான் திட்டத்தின்கீழ் 325 வழித்தடங்கள் மற்றும் 56 விமான நிலையங்கள் தற்போது செயல்பாட்டில் உள்ளன. இதில், ஐந்து ஹெலிகாப்டா் இறங்கு தளம் மற்றும் இரண்டு கடல்விமான தளங்களும் அடக்கம்.

இந்த நிலையில், உடான் 4.1 திட்ட தொடக்கத்தின் ஒரு பகுதியாக உள்நாட்டில் உள்ள மேலும் பல முக்கிய நகரங்களுக்கு விமான சேவையை விரிவுபடுத்திடும் வகையில் 392 விமான வழித்தட சேவைகளுக்கான ஏல விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தற்போதைய இந்த ஏல நடைமுறை இன்னும் ஆறு வாரங்களில் முழுமையடையும் என எதிா்பாா்க்கப்படுகிறது.

**43. சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டியில் முதல் வீரராக 3000 ரன்களை கடந்து இந்திய அணியின் கேப்டன் விராட் கோலி புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.**

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதல் போட்டியில் இந்திய அணி தோல்வி அடைந்த நிலையில் இரு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டி20 போட்டி அஹமதாபாத்தில் நேற்று (14.03.2021) நடைபெற்றது.

86 டி20 போட்டிகளில் விளாடியுள்ள கேப்டன் விராட் கோலி, சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டியில் முதல் வீரராக 3000 ரன்களை கடந்து புதிய மைல்கல்லை எட்டியுள்ளார். 1000, 2000 ரன்களை முதல் வீரராக நியூசிலாந்து வீரர் மெக்கல்லம் கடந்திருந்தார். விராட் கோலிக்கு அடுத்தபடியாக சர்வதேச டி20 போட்டிகளில் நியூசிலாந்து அணியின் மார்டின் குப்தில் 99 போட்டிகளில் 2839 ரன்களுடனும், ரோகித் சர்மா 109 போட்டிகளில் 2773 ரன்களுடனும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

ஐபிஎல் டி20 போட்டிகளிலும் விராட் கோலியே ரன் குவிப்பில் முன்னிலையில் உள்ளார். 192 ஐபிஎல் போட்டிகளில் விளையாடி 5878 ரன்களை குவித்துள்ளார். டி20, ஒருநாள், டெஸ்ட் ஆகிய மூன்று விதமான போட்டிகளிலும் பேட்டிங் சராசரியில் 50 ரன்களை கடந்தார் விராட் கோலி.

**44. துபாய் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீராங்கனை முகுருஜா சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.**

துபாயில், பெண்களுக்கான டபிள்யு.டி.ஏ., ஓபன் டென்னிஸ் தொடர் நடந்தது. இதன் ஒற்றையர் பிரிவு பைனலில் ஸ்பெயினின் கார்பைன் முகுருஜா, செக்குடியரசின் பார்போரா கிரெஜிகோவா மோதினர். 'டை பிரேக்கர்' வரை சென்ற முதல் செட்டை 7–6 எனக் கைப்பற்றிய முகுருஜா, 2வது செட்டை 6–3 என தன்வசப்படுத்தினார்.

இரண்டு மணி நேரம், 8 நிமிடம் நீடித்த போட்டியில் முகுருஜா 7–6, 6–3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் இவர், 2 ஆண்டுகளுக்கு பின் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றி உள்ளார். கடைசியாக 2019ல் மெக்சிகோவில் நடந்த மான்டேரி ஓபனில் கோப்பை வென்றிருந்தார்.

ஸ்பெயின் வீராங்கனை முகுருஜா வாழ்க்கையில் இது 8 ஆவது ஒற்றையர் பட்டம். அதில் இரு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களும் அடக்கம்.

14. கத்தார் ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதிச் சுற்றில் ஜார்ஜியாவின் நிகோலஸ் பாசிலாஷ் விலி 7–6 (7/5), 6–2 என்ற செட்களில் ஸ்பெயினின் ராபர்டோ பௌதிஸ்டா அகுட்டை வீழ்த்தி சாம்பியன் ஆனார். இது அவரது 4 ஆவது ஏடிபி பட்டமாகும்.

**45. 24 – ஆவது ஃபெடரேஷன் கோப்பை சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி பஞ்சாப் மாநிலம், பாட்டியாலாவில் திங்கள்கிழமை (மார்ச் 15) தொடங்குகிறது.**

**46. சிறு மாற்றத்தால் வௌவாலிடமிருந்து மனிதா்களைத் தொற்றிய கரோனா.**

வௌவாலின் உடலில் இருந்து வந்த கரோனா தீநுண்மி, மனிதா்களைத் தொற்றுவதற்கேற்ப தன்னை மிகச் சிறிய அளவிலேயே உருமாற்றிக் கொண்டதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஓா் ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து 'பிஎல்ஓஎஸ் பயாலஜி' அறிவியல் இதழில் வெளியான கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் கரோனா திநுண்மியின் உருமாற்றங்கள் குறித்த ஆய்வை ஸ்காட்லாந்தைச் சேர்ந்த கிளாஸ்கோ பல்கலைக்கழ தீநுண்மி ஆய்வாளா் ஆஸ்கா் மேக்லீன் தலைமையிலான குழு மேற்கொண்டது.

அந்த ஆய்வில், வௌவாலின் உடலில் இருந்து வந்த கரோனா தீநுண்மி, தன்னை பெரிய அளவில் உருமாற்றம் செய்துகொள்ளாமலேயே மனிதா்களின் உடலில் தொற்றிப் பெருகுவதற்கான திறனைப் பெற்றதாகக் கண்டறியப்பட்டது.

பொதுவாக, ஓா் உயிரினத்திலிருந்து மற்றொரு உயிரினத்தின் உடலில் உயிா்வாழ்ந்து, பெருக்கம் செய்துகொள்ளும் அளவுக்கு தீநுண்மிகள் தங்களைத் தகவமைத்துக் கொள்ள நீண்ட காலம் எடுத்துக் கொள்ளும்.

ஆனால் கரோனா தீநுண்மியை இந்த மாற்றத்தை மிக விரைவில் அடைந்துள்ளது ஆய்வில் தெரிய வந்தது என்று அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (14.03.2021) நிலவரப்படி, உலகில் 12,01,63,118 பேருக்கு கரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. அவா்களில் 26,61,508 போ் அந்த நோய்க்கு பலியாகியுள்ளா்; 9,66,88,071 போ் கரோனாவிலிருந்து முழுமையாக குணமடைந்துள்ளனா்; 2,08,13,539 போ் தொடா்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனா். அவா்களில் 89,491 பேரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

**47. தென் கொரியாவின் ஜெஜு தீவில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் ஜெஜு தீ திருவிழா விமரிசையாக கொண்டாடப்படும். அந்த வகையில் இந்த ஆண்டு திருவிழாவின் போது ஜெஜுவில் உள்ள ஒரு மலையில் 'கொரோனா ஒழிந்தது' என்ற வாக்கியத்தை காட்டும் வகையில் தீ எரிந்தது.**

**48. சர்ச்சைக்குரிய ஜெருசலேம் நகரில் செக் குடியரசு நாடு இஸ்ரேல் நாட்டுக்கான தனது தூதரகத்தை திறந்ததற்கு அரபு நாடுகளின் கூட்டமைப்பு மற்றும் பாலஸ்தீனம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.**

**49. ஆஸ்திரேலியா எம். எல். ஏ., வாக நீலகிரி டாக்டர் தேர்வு. ஆஸ்திரேலியாவில் நடந்து முடிந்த தேர்தலில், கோத்தகிரியைச் சேர்ந்த படுகர் சமுதாயத்தைச் சேர்ந்த டாக்டர், சட்டசபை உறுப்பினராக தேர்வு பெற்றுள்ளார்.**

கன்னேரிமுக்கு கிராமத்தைச் சேர்ந்த நீலகிரி மாவட்டம், கோத்தகிரி கிருஷ்ணா கவுடரின் மகன் ஜெகதீஷ் கிருஷ்ணன், 47. இவர், ஆஸ்திரேலியா நாட்டில், ரிவர்டன் பகுதியில், டாக்டராக பணிபுரிகிறார். இம்மாதம், 2ம் தேதி முதல் சில நாட்கள் நடந்த சட்டசபை தேர்தலின் ஓட்டு எண்ணிக்கை நேற்று முன்தினம் நடந்தது. அதில், ரிவர்டன் தொகுதி யில், தொழிலாளர் கட்சி சார்பில், போட்டியிட்ட ஜெகதீஷ் கிருஷ்ணன், வெற்றி பெற்றுள்ளார். வெளிநாடுகளில், படுகர் சமுதாயத்தை சேர்ந்த ஒருவர், சட்டசபை உறுப்பினராக வெற்றி பெற்றிருப்பது இதுவே, முதல்முறை. டாக்டர் ஜெகதீஷ் கிருஷ்ணன் கூறுகையில், "இது, நம் நாட்டுக்கும்; நீலகிரி மாவட்டத்துக்கும் பெருமை சேர்க்கும். நம் நாட்டின் பிரதமர் மோடி, எனக்கு வாழ்த்து தெரிவித்தார். என் மருத்துவ பணி தொடரும். ஆஸ்திரேலியா மக்களுக்கு தொடந்து சேவை செய்வேன், என்றார்.

**50. ஜம்மு – காஷ்மீருக்கு சுற்றுலா தமிழக மக்களுக்கு அழைப்பு**

"ஜம்மு மற்றும் காஷ்மீரில் சுற்றுலா தலங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன; பல்வேறு சலுகைகளும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோடை விடுமுறையை கழிக்க, தமிழக மக்கள், இங்கு வருகை தர வேண்டும்' என, ஜம்மு, காஷ்மீர் சுற்றுலாத்துறை சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் உள்ள சுற்றுலா தலங்களில், முதலிடம் வகிப்பது ஜம்மு – காஷ்மீர். யூனியன் பிரதேசங்களாக மாறியுள்ள இவற்றிற்கு சுற்றுலா மூலமாகவே வருமானம் கிடைத்து வந்தது. கொரோனா காரணமாக, அங்கு வர்த்தகம், வருமானம் முடங்கியது. இதனால் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதை சீரமைக்கும் வகையில், சுற்றுலாத் துறையை புத்துயிர் பெற செய்ய, பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாக, பல மாநிலங்களில், சுற்றுலா பயணியரை கவரும் வகையில், ஜம்மு – காஷ்மீர் சுற்றுலாத்துறை, நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, சென்னையில், ஜம்மு – காஷ்மீர் சுற்றுலாத்துறை, "டிராவல் ஏஜன்சி சொசைட்டி" உடன் இனைணந்து, விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துகிறது. இதில் பங்கேற்ற, ஜம்மு – காஷ்மீர் சுற்றுலாத்துறை கூடுதல் செயலர் வாசம்ராஜா கூறியதாவது: 'சென்னைவாசிகளை, ஜம்மு காஷ்மீர் சுற்றுலாவுக்கு வரவழைக்கும் நோக்கத்தில், இரண்டு நாட்கள் மாரத்தான், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தற்போது, ஜம்மு – காஷ்மீர் சுற்றுலா தலங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அரசும், சுற்றுலா பயணியருக்கு, பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது. சிறப்பு பேக்கேஜ்களும் உள்ளன. கடந்த ஜனவரியில், 7.5 லட்சம் சுற்றுலா பயணியர், வருகை தந்துள்ளனர். சுற்றுலா பயணியருக்கு விளக்கும் வகையில், பல்வேறு மாநிலங்களில், 20 ரோட் ஷோ' நடத்தப்பட்டுள்ளன. ஜம்மு, காஷ்மீரில் சுற்றுலா பயணியருக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, கோடை விடுமுறையை கொண்டாட தமிழக மக்கள் அங்கு வருகை தர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**51. ஒருநாள் போட்டிகளில் 7 ஆயிரம் ரன்கள்: இந்திய மகளிர் அணியின் கேப்டன் மிதாலி ராஜ் மேலும் ஒரு சாதனை.**

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் கேப்டன் மிதாலி ராஜ் ஒருநாள் போட்டிகளில் 7 ஆயிரம் ரன்களைக் குவித்து, உலகளவில் அதிக ரன்களை எடுத்த முதல் வீராங்கனை எனும் பெருமையைப் பெற்றுள்ளார். இந்தியா– தென் ஆப்பிரிக்கா மகளிர் கிரிக்கெட் அணிகள் இடையிலான 4–வது ஒரு நாள் போட்டி, லக்னோவில் உள்ள வாஜ்பாய் ஏகானா கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 50 ஓவர்களில் 266 ரன்களை எடுத்தது. இந்த போட்டியில் இந்திய மகளிர் அணி கேப்டன் மிதாலி ராஜ் 26 ரன்களை எட்டியபோது, ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 7000 ரன்களை குவித்த முதல் வீராங்கனை எனும் பெருமையைப் பெற்றார்.

மிதாலி ராஜ் தற்போது 216–வது ஒருநாள் போட்டியில் விளையாடி வருகிறார். கடந்த 3–வது ஒருநாள் போட்டியின்போதுதான் சர்வதேச கிரிக்கெட்டில் 3 பிரிவுகளிலும் சேர்த்து 10 ஆயிரம் ரன்களை எட்டிய முதல் இந்திய வீராங்கனை எனும் பெருமையையும், உலகளவில் முதல் வீராங்கனை என்ற சிறப்பையும் மிதாலி ராஜ் பெற்றார். கடந்த 1999–ம் ஆண்டு, கிரிக்கெட்டில் அறிமுகமான மிதாலி ராஜ், ஒருநாள் போட்டியில் முதல்முறையாக 6 ஆயிரம் ரன்களை எட்டிய வீராங்கனை எனும் பெருமையையும் பெற்றிருந்தார். இங்கிலாந்து வீராங்கனை சார்லோட்டே எட்வர்ட்ஸ் 5,992 ரன்கள் சேர்த்த நிலையில் ஓய்வு பெற்றார். தற்போது, அவரின் சாதனையை மிதாலி முறியடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**52. ஆண்டுதோறும் மார்ச் 15–ம் தேதி சர்வதேச நுகர்வோர் உரிமை தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.**

**53. தமிழகம் உட்பட 4 மாநிலங்களுக்கு – தடுப்பூசிக்கான குளிர்சாதனப் பெட்டிகள்: இந்தியன் ஆயில் நிறுவனம் வழங்கியது**

கரோனா தடுப்பூசி போடும் பணியை மத்திய அரசு தொடங்கி, செயல்படுத்தி வருகிறது. கரோனா தடுப்பூசியை வைப்பதற்கு குளிர்சாதனப் பெட்டி (ஃப்ரீசர் பாக்ஸ்) தேவைப்படுகிறது. இதற்காக, தமிழகம், பிஹார், மணிப்பூர், காஷ்மீர் ஆகிய 4 மாநிலங்களுக்கு இந்தியன் ஆயில் நிறுவனம் சார்பில் குளிர்சாதனப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**54. பாதுகாப்பு, சேமிப்பு வழங்கும் 'பச்சாத் பிளஸ்' புதிய பாலிசி: எல்ஐசி நிறுவனம் அறிமுகம்**

பாதுகாப்பு, சேமிப்பு என்ற இரண்டையும் வழங்கக்கூடிய 'பச்சாத்பிளஸ்' என்ற புதிய பாலிசியை எல்ஐசி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக எல்ஐசி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: பங்குச்சந்தை சாராத, லாபத்தில் பங்கு பெறும், தனி நபர் சேமிப்புத் திட்டமான 'பச்சாத் பிளஸ்' என்ற பாலிசியை எல்ஜசி அறிமுகம் செய்துள்ளது. இது பாதுகாப்பு, சேமிப்பு என்ற 2 அம்சங்களையும் வழங்குகிறது.

பாலிசி முதிர்வு அடையும்போது, காப்பீட்டுத் தொகை முழுவதும் பாலிசிதாரர்களிடம் வழங்கப்படும். பாலிசி முதிர்வு அடையும் தேதிக்கு முன்பாக, பாலிசிதாரர் மறைந்தால், அவரது குடும்பத்துக்கு நிதியுதவி வழங்கப்படும்.

'பச்சாத் பிளஸ்' பாலிசிக்கான குறைந்தபட்ச காப்பீட்டுத் தொகை ரூ.1 லட்சம் ஆகும். இதில் உச்சவரம்பு எதுவும் இல்லை. பாலிசிதாரர்கள் தங்களது தேவை மற்றும் வசதிக்கேற்ப அதிகபட்சமாக எவ்வளவு தொகைக்கு வேண்டுமானாலும் காப்பீட்டுத் தொகையை தேர்வு செய்யலாம்.

பிரீமியத் தொகையை ஒரே தவணையிலோ, 5 ஆண்டுகள் வரையிலோ செலுத்தும் வசதி உள்ளது. இந்த பாலிசி திட்டத்தில் கடன் பெறும் வசதியும் உண்டு.

சமூகத்தின் அனைத்து தரப்பினரின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையிலான சிறப்பு அம்சங்கள் மற்றும் வசதியான, எளிமையான நடைமுறைகள் 'பச்சாத் பிளஸ்' பாலிசி திட்டத்தில் உள்ளன.

எல்ஜசி நிறுவனத்தின் இணையதளத்தில் (www.licindia.com) ஆன்லைன் மூலமாகவோ, முகவர்கள் அல்லது முகமை நிறுவனங்கள் வாயிலாக நேரடியாகவோ இந்த பாலிசியை பெறலாம். 'பச்சாத் பிளஸ்' பாலிசி பற்றிய கூடுதல் விவரங்களை மேற்கண்ட இணையதளம் அல்லது முகவர்கள் மூலம் அறிந்துகொள்ளலாம். இவ்வாறு எல்ஜசி நிறுவனம் தெரிவித்துள்ளது

**55. மார்ச் 5: 2023ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக ஐக்கிய நாடுகள் அவை அறிவித்தது. சிறுதானியங்களால் உடலுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த, இந்த அறிவிப்பு பயன்படும்.**

**மார்ச் 5:** மதுரை கோட்டத்தில் திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கோவில்பட்டி, ராமநாதபுரம், ராமேஸ்வரம் ஆகிய ரயில் நிலையங்களுக்கு ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

**மார்ச் 6:** சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் சாம்பியன்கள், சீனியர் கமிட்டியின் தலைவராக இந்திய குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**மார்ச் 8:** உலக மல்யுத்த வீராங்கனைகள் தரவரிசைப் பட்டியலில் இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் முதலிடம் பிடித்தார்.

**மார்ச் 10:** உத்தராகண்ட் மாநிலத்தின் புதிய முதல்வராக தீரத் சிங் ராவத் பொறுப்பேற்றார். முதல்வராக இருந்த திரிவேந்திர சிங் ராவத் பதவியை ராஜினாமா செய்தநிலையில், புதிய முதல்வர் தேர்வுசெய்யப்பட்டார்.

**மார்ச் 10:** மூன்றாவது ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பல் ஐ.என்.எஸ். கரஞ்ச் இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டது.

**மார்ச் 11:** ஆசியாவின் முதல் தேசிய ஓங்கில் (டால்பின்) ஆராய்ச்சி மையம் பிஹார் தலைநகர் பாட்னா பல்கலைக்கழகத்தில் திறக்கப்பட்டது.

**56. குர்ஆனின் 26 வசனத்தை நீக்க வேண்டும்: உச்ச நீதிமன்றத்தில் ஷியா பிரிவு தலைவர் ரிஜ்வீ மனு**

உத்தர பிரதேசத்தை சேர்ந்த ஷியா பிரிவு முஸ்லிம் தலைவர் வசீம் ரிஜ்வீ, தொடக்கத்தில் இருந்தே அயோத்தி ராமர் கோயிலுக்கு ஆதரவானக் கருத்துக்களை தெரிவித்து வந்தார். சன்னி பிரிவு முஸ்லிம்களின் மற்ற விவகாரங்களிலும் ரிஜ்வீ கூறிய கருத்துக்கள் கண்டனத்துக்கு உள்ளாகின.

டெல்லியின் வரலாற்று சின்னமான ஹுமாயூன் சமாதியை இடித்து முஸ்லிம்களின் இடு காடாக மாற்ற வேண்டும். நாட்டின் மதரஸாக்களில் தீவிர வாதம் வளர்கிறது, என்று ரிஜ்வீ கூறியிருந்தார்.

கடந்த வாரம் உச்ச நீதிமன்றத் தில் ரிஜ்வீ தாக்கல் செய்த மனுவில், "முஸ்லிம்களின் புனிதக் குர்ஆனின் 26 வசனங்களை நீக்க வேண்டும்" எனக் கோரி உள்ளார். இவை முஸ்லிம்கள் இடையே தீவிரவாதத்தை வளர்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம், புனிதக் குர்ஆனையும், இறைத் தூதர் முகம்மது நபியையும் ரிஜ்வீ அவமதித்து விட்டதாக ஷியா, சன்னி ஆகிய இரண்டு பிரிவினரும் புகார் கூறுகின்றனர்.

இவரது மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும். ரிஜ்வீயை கைது செய்து அவரை தேசிய புலனாய்வு அமைப்பு விசாரிக்க வேண்டும் என்று உபி. முஸ்லிம்கள் வலியுறுத்தி உள்ளனர். இதற்காக, நேற்று முன்தினம் லக்னோவில் நடைபெற்ற சன்னி பிரிவு முஸ்லிம்கள் மாநாட்டில் ரிஜ்வீயை 'முஸ்லிம் அல்லாதவர்' என்றும் பத்வா அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஷியா பிரிவின் முக்கியத் தலைவர் மவுலானா கல்பே ஜாவேத் 'இந்து தமிழ்' நாளேட்டிடம் கூறும்போது, "தம்மை ஜிஹாதிகள் எனக் கூறிக் கொள்ளும் தலீபான் உள்ளிட்ட அமைப்புகள், தீவிரவாதத் தை வளர்ப்பவர்கள். இவர்களுக்கும் இஸ்லாத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை. ஜிஹாத் என்பது உயிர்களை கொல்வது அல்ல. மாறாக, வாழ்க்கையை பாதுகாப்பது. தம் மீதுள்ள சிபிஐ வழக்கை திசை திருப்பவே குர்ஆன் மீது வழக்கு தொடுத்து, நாட்டில் மதநல்லிணக்கத்தை குலைக்க ரிஜ்வி முயல்கிறார், என்று தெரிவித்தார்.

பிரதமர் மோடியின் தீவிர ஆதரவாளர் என்று கூறும் வசீம், தொலைக்காட்சிகளின் விவாதங்களில் பாஜக மற்றும் இந்துத்துவாவுக்கு ஆதரவாக பேசி வந்தார். உ.பி. மத்திய ஷியா வக்பு வாரியத் தலைவராக இருந்த வசீம் மீது, 2016, 2017–ம் ஆண்டுகளில் லக்னோ மற்றும் அலகாபாத்தில் வக்பு வாரிய நில ஆக்கிரமிப்பு மற்றும் லஞ்ச வழக்குகள் பதிவாகின. கிடப்பில் போடப்பட்டிருந்த இவ்விரண்டு வழக்குகளும் தற்போது சிபிஐ வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**57. இனவெறித் தாக்குதலை இந்தியா பொறுத்துக் கொள்ளாது**

இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக மாணவர் சங்க தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய மாணவி ராஷ்மி சமந்த் இனவெறி சர்ச்சையால் அந்தப் பொறுப்பிலிருந்து விலகினார். கர்நாடக மாநிலம் உடுப்பி மாவட்டத்தில் உள்ள மணிப்பால் நகரைச் சேர்ந்தவர் 22 வயது ராஷ்மி.

மொத்தம் இருந்த 3,708 வாக்குகளில் 1,966 வாக்குகளைப் பெற்று தலைவராக தேர்வாகியிருந்தார். அவர் மீது சமூக வலைதளங்களில் இனவெறி ரீதியிலான சர்ச்சை வெடித்ததை அடுத்து அந்த பொறுப்பிலிருந்து விலகியுள்ளார்.

இதுகுறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று மாநிலங்களவையில் பேசும்போது, "இனவெறி விவகாரத்தில் மத்திய அரசு ஒருபோதும் கண்ணை மூடிக் கொண்டு இருக்காது. இனவெறி விவகாரம் எந்த வடிவில் வந்தாலும் அதைப் பார்த்துக் கொண்டு பொறுமையாக இருக்க மாட்டோம். இனவெறித் தாக்குதலை இந்தியா ஒருபோதும் பொறுத்துக் கொள்ளாது. இதுதொடர்பாக பிரிட்டனுடன் நாங்கள் பேசுவோம்" என்றார்.

**58. இடஒதுக்கீட்டுக்கு 50% வரம்பு நிர்ணயித்த 1992 தீர்ப்பை மறு ஆய்வு செய்ய வேண்டுமா? – விசாரணையை தொடங்கியது உச்ச நீதிமன்றம்**

மகாராஷ்டிராவில் மராத்தா சமூகத்தினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 16% இடஒதுக் கீடு வழங்கும் சட்டம் கடந்த 2018–ல் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் அம்மாநிலத்தில் இடஒதுக்கீடு 68% ஆக அதிகரித்தது.

1992–ல் மத்திய அரசுக்கு எதிராக வழக்கறிஞர் இந்திரா சஹானி தொடர்ந்த வழக்கில் ஓபிசி–க்கான 27% இடஒதுக்கீட்டை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது. இடஒதுக்கீடு 50% அளவை தாண்ட கூடாது என உத்தரவிட்டிருந்தது.

இதன் அடிப்படையில் மராத்தா இடஒதுக்கீட்டுக்கு எதி ராக உச்ச நீதின்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதில் 16% இடஒதுக்கீடு சட்டத்தை உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு செப்டம்பரில் நிறுத்தி வைத்தது.

இவ்வழக்கை நீதிபதி அசோக் பூஷண் தலைமையில் 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது.

இவ்வழக்கில் 50% இடஒதுக்கீடு வரம்பை மறு ஆய்வு செய்ய வேண்டுமா என்பது தொடர்பான விசாரணையை நீதிபதிகள் நேற்று தொடங்கினர்.

இதில் மனுதாரர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர் அர்விந்த் தத்தார் வாதிடும்போது, "1992–ம் ஆண்டு தீர்ப்பை மறு ஆய்வு செய்யத் தேவையில்லை. இத்தீர்ப்பு பல்வேறு பிரச்சினைகளை உள்ளடக்கியது. தற்போது 50% இடஒதுக்கீடு வரம்பு பற்றி மட்டுமே கேள்வி எழுந்துள்ளது. ஏற்கெனவே இத்தீர்ப்பை 9 நீதிபதிகள் அமர்வு வழங்கியுள்ளது. இதனை மறுஆய்வு செய்ய வேண்டுமானால் 11 நீதிபதிகளை கொண்ட அமர்வு அமைக்க வேண்டும். மேலும், 50 சதவீத இடஒதுக்கீடு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று" என்றார்.

தமிழகம் சார்பில் வழக்கறிஞர் சேகர் நாப்தே வாதிடும்போது, "தமிழகத்தில் 50 சதவீதத்திற்கு மேல் இடஒதுக்கீடு வழங்கப்பட்டதற்கான தனி சூழ்நிலைகளை நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் இடஒதுக்கீடு என்பது அரசின் கொள்கை தொடர் புடையது" என்றார்.

தமிழகம் மற்றும் கேரளத்தில் தற்போது சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுவதால் இவ்வழக்கை தள்ளி வைக்க வேண்டும் என் இரு மாநில வழக்கறிஞர்களும் கோரினர். ஆனால் நீதிபதிகள் இதனை ஏற்கவில்லை.

இதையடுத்து இதுதொடர்பாக மாநில அரசுகள் தங்கள் கருத்தை ஒரு வாரத்துக்குள் தெரிவிக்க உத்தரவிட்டு, வழக்கை நீதிபதிகள் தள்ளி வைத்தனர்.

**59. கரோனா தடுப்பூசி உற்பத்தியை அதிகரிக்க உறுதி: இந்தியா உள்ளிட்ட குவாட் அமைப்பு தலைவர்கள் தகவல்**

இந்தியாவில் கரோனா வைரஸ் தடுப்பூசி உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்துள்ளதாக குவாட் அமைப்பு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய 4 நாடுகள் இணைந்து குவாட் அமைப்பை உருவாக்கின. கடைசியாக இந்த அமைப்பில் சேர்ந்தது ஆஸ்திரேலியாவாகும். இந்நிலையில் கரோனா வைரஸ் பரவல், தென் சீனக் கடலில் சீனாவின் ஆதிக்கம், பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக விவாதிப்பதற்காக, குவாட் அமைப்பின் தலைவர்கள் பங்கேற்ற உச்சி மாநாடு அண்மை யில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஆஸ்திரேலிய பிரதமர்ஸ்காட் மோரிசன், ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா ஆகியோர் காணொலி வழியாக பங்கேற்றனர்.

அந்த உச்சி மாநாட்டின்போது, இந்தியாவில் கரோனா வைரஸ் தடுப்பூசி உற்பத்தியை அதிகரிப்பது என குவாட் தலைவர்கள் உறுதி பூண்டதாக அமெரிக்காவிலிருந்து வெளியாகும் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

**இதுதொடர்பாக வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் வந்துள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:**

குவாட் என்பது ஒரு பொதுவான தொலைநோக்குத் திட்டங்களை முன்னேற்றுவதற்கும் அமைதி மற்றும் நாடுகளின் செழிப்பை உறுதி செய்வதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒத்த எண்ணம் கொண்ட கூட்டமைப்பு ஆகும். இந்த இலக்குகளை நோக்கிச் செயல்படும் அனைவரையும் நாங்கள் வரவேற்கிறோம். மேலும் இந்த விவகாரத்தில் அனைவருடனும் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்புகளை நாங்கள் நாடுவோம்.

அண்மைக் காலங்களில் உலகத்தையே அச்சுறுத்திய கரோனா வைரஸ் பிரச்சினையைத் தீர்க்க அனைத்து முன்னேறிய நாடுகளும் போராடி வருகின்றன. அந்த வகையில் குவாட் அமைப்பு நாடுகள்இணைந்து கரோனா வைரஸுக்கு தடுப்பூசி மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டன.

சிறந்த தடுப்பூசி: கரோனா வைரஸ் பிரச்சினையைத் தீர்க்க பாதுகாப்பான, எளிதில் அனைவருக்கும் கிடைக்கும் வகையிலான, சிறந்த தடுப்பூசிகள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த தடுப்பூசி உற்பத்தியை இந்தியாவில் அதிகரிக்க குவாட் அமைப்பு சார்பில் உறுதி பூணப்பட்டுள்ளது. இந்த பிரச்சினையைத் தீர்க்க குவாட் அமைப்பு உறுப்பு நாடுகள் ஒன்றிணைந்து பாடுபடும். இவ்வாறு குவாட் தலைவர்கள் கூறியுள்ளதாக செய்தித்தாளில் கூறப்பட்டுள்ளது.

**60. உத்தரபிரதேச மாநிலம் மதுரா வட்டத்தில், யமுனை ஆற்றில் யமுனா தேவிக்கு நன்றி சொல்லும் விதமாக 'சுன்ரி மனோரத்' திருவிழாவை முன்னிட்டு ஆற்றில் நீண்ட புடைவைகளைக் கொண்டு படகுகளை இணைத்தபடி செல்வர்.**

**61. அன்னிய செலாவணி கையிருப்பில் 4–ம் இடத்தில் இந்தியா.**

அன்னியச் செலாவணி கையிருப்பில் ரஷ்யாவை பின்னுக்குத் தள்ளி 4–வதுஇடத்துக்கு இந்தியா முன்னேறியுள்ளது. திடீரென டாலர் வெளியேற்றத்தை சமாளிப்பதற் காக அன்னியச் செலாவணி கையிருப்பை ரிசர்வ் வங்கி கணிசமாக அதிகரித்து வந்துள்ளது.

இந்த ஆண்டு முழுவதும் இந்தியா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளிடமும் உள்ள அன்னியச் செலாவணி ரொக்கக் கையிருப்பு ஒரே அளவில் இருந்தது. ஆனால் கடந்த சில வாரங்களாக ரஷ்ய கரன்சி ரூபிளின் மதிப்பு சரிந்ததால் அந்நாட்டின் அன்னியச் செலா வணி கையிருப்பு மதிப்பும் சரிந்தது.

மார்ச் 5–ம் தேதி நிலவரப்படி இந்தியா வசம் உள்ள அன்னியச் செலாவணி ரொக்கக் கையிருப்பு 58,300 கோடி டாலராகும். ரஷ்யாவிடம் உள்ள கையிருப்பு 58,010 கோடி டாலராகும்.

சீனாவிடம் அதிக அளவு கையிருப்பு உள்ளதால் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. இரண்டாமிடத்தில் ஜப்பானும், மூன்றாமிடத்தில் ஸ்விட்சர் லாந்தும் உள்ளன.

**62. ஜம்மு காஷ்மீரில் உலகின் உயரமான ரயில்வே பாலம்: வரலாற்று நிகழ்வு என மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் கருத்து**

ஜம்மு காஷ்மீரில் (ரியா மாவட்டத்தில்) செனாப் ஆற்றின் மேல் உலகின் மிக உயரமான ரயில்வே பாலம் அமைக்கும் பணி இறுதிக்கட்டத்தை

எட்டியுள்ள நிலையில், இதனை வரலாற்று நிகழ்வு என்று மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

1315 மீட்டர் நீளத்தில் 17 இடைவெளி பகுதிகளைக் கொண்ட ரயில்வே பாலம் செனாப் ஆற்றின் மீது கட்டப்பட்டு வருகிறது. இந்தப் பாலத்தின் மொத்த நீளத்தில் 476 மீட்டர் ஆற்றின் மீது கட்டப்பட்டுவருகிறது. பாலத்தின் அதிகபட்ச உயரம் கடல் மட்ட அளவிலிருந்து 359 மீட்டராக உள்ளது. பிரான்சில் உள்ள ஈஃபில் டவர் உயரம் 304 மீட்டர் ஆகும். இதன்மூலம் இந்த ரயில்வே பாலத்துக்கு உலகின் மிக உயரமான கட்டுமானம் என்ற பெருமை கிடைத்துள்ளது.

ரூ.1,250 கோடி மதிப்பிலான இந்தப் பாலம் 266 கிமீ வேகத்தைத் தாங்கக் கூடியது. மேலும் இதன் ஆயுட்காலம் 120 ஆண்டுகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தின் கட்டுமானப் பணி இறுதிக்கட்டத்தில் உள்ள நிலையில், பாலத்தின் கட்டுமான வீடியோவை ரயில்வே அமைச்சகம் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவேற்றியது. இதுகுறித்து மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தன்னுடைய ட்விட்டர் பதிவில் கருத்து பதிவிட்டுள்ளார். அதில் அவர் கூறியதாவது, "செனாப் ஆற்றின் மீது கட்டப்படும் ரயில்வே பாலத்தின் கீழ்பக்க வளைவு கட்டி முடிக்கப்பட்டுள்ளது, மேல்பக்க வளைவு விரைவில் கட்டிமுடிக்கப்படும். உலகின் மிகப்பெரிய கட்டுமானமாக உருவாகும் இப்பாலம் மிக முக்கிய வரலாற்று நிகழ்வாக இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பாலம் 2021 டிசம்பரில் முழுவதுமாக முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வர உள்ளது. காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதிகளை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்க இந்த ரயில்வே பாலம் பயன்படும் எனவும் அவர் கூறினார்.

இந்தப் பாலத்தின் தலைமை பொறியாளர் ஆர்.ஆர்.மாலிக். இந்த திட்டத்தை கொங்கன் ரயில்வே கார்ப்பரேஷன் லிமிடெட் உருவாக்கி வருகிறது. காஷ்மீர் பள்ளத்தாக்கை ஜம்மு மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் இணைக்கும் வகையில் இந்தப் பாலம் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பாலம் கட்டிமுடிக்கப்பட்டால் கத்ராவிலிருந்து ஸ்ரீநகருக்கு 5 மணி நேரத்தில் சென்றடைய முடியும்.

**63. "சிஏ, சிஎஸ், ஐசிடபிள்யுஏ ஆகிய படிப்புகள் இனி முதுநிலைப் படிப்புகளுக்கு இணையானவை என பல்கலைக்கழக மானியக்குழு தெரிவித்துள்ளது."**

சிஏ, சிஎஸ், ஐசிடபிள்யுஏ ஆகிய படிப்புகள் இனி முதுநிலைப் படிப்புகளுக்கு இணையானவை என பல்கலைக்கழக மானியக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து இணைச் செயலா் சுரேந்தா் சிங் ஐசிஏஐ அமைப்புக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கை: இந்தியக் கணக்குத் தணிக்கையாளா் அமைப்பு (ஐசிஏஐ), இந்தியக் கம்பெனிச் செயலா்கள் கல்விக் கழகம் (ஐசிஎஸ்ஐ), இன்ஸ்டிடியூட் ஆஃப் காஸ்ட் அக்கவுன்ட்ஸ் ஆஃப் இந்தியா ஆகிய அமைப்புகள் தாங்கள் வழங்கும் சிஏ, சிஎஸ், ஐசிடபிள்யுஏ ஆகிய படிப்புகளை முதுநிலைப் படிப்புகளுக்கு இணையாக கருத வேண்டும் என பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தன. இது குறித்து யுஜிசி சாா்பில் நடைபெற்ற 550-ஆவது கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவின் படி சிஏ, சிஎஸ், ஐசிடபிள்யுஏ ஆகிய படிப்புகள் இனி முதுநிலைப் படிப்புகளுக்கு இணையாகக் கருதப்படும்.

**64. தஞ்சை உள்பட 2 உணவு தொழில்நுட்ப நிறுவனங்களை தேசியமயமாக்கும் மசோதா: மாநிலங்களவை ஒப்புதல்**

தஞ்சை உள்பட இரண்டு உணவு தொழில்நுட்ப நிறுவனங்களை தேசிய நிறுவனங்களாக அறிவிக்கும் மசோதாவுக்கு மாநிலங்களவையில் திங்கள்கிழமை (15.03.2021) ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தமிழகத்தின் தஞ்சாவூரில் உள்ள இந்திய உணவு பதப்படுத்ததுதல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் ஹரியாணா மாநிலம் குண்ட்லியில் உள்ள தேசிய உணவு தொழில்நுட்ப தொழில்முனைவோா் பயிற்சி நிறுவனம் ஆகிய இந்த இரண்டு நிறுவனங்களையும் தேசிய நிறுவனங்களாக அறிவிக்கும் 'தேசிய உணவு தொழில்நுட்பம், தொழில்முனைவோா் பயிற்சி மற்றும் மேலாண்மை மசோதா, 2019' என்ற மசோதா குரல் வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அவையில் இந்த மசோதா மீதான விவாதத்துக்கு பதிலளித்துப் பேசிய மத்திய வேளாண்துறை அமைச்சா் நரேந்திர சிங் தோமா் கூறியதாவது: இந்த இரண்டு நிறுவனங்களும் தேசிய நிறுவனங்களாக ஆக்கப்படுவதன் மூலம், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடஒதுக்கீடு நடைமுறை உள்ளிட்ட அனைத்து கொள்கைகளும் இந்த நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த மசோதா முன்னதாக கடந்த 2019-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிறகு மசோதா நாடாளுமன்ற நிலைக் குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டது. மசோதாவில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கு மத்திய அமைச்சரவையும் ஒப்புதல் அளித்தது. அதன் மூலம், இப்போது இந்த மசோதா மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்து உறுப்பினா்களும் இதன் மீது ஆலோசனைகளை வழங்கியதோடு, இப்போது திருப்தியையும் வெளிப்படுத்தியிருக்கின்றனா்.

இந்த இரண்டு நிறுவனங்களும் முழு சுதந்திரத்துடன், ஐஐடி, ஐஐஎம் நிறுவனங்களுக்கு இணையாக செயல்பட முடியும்.

இந்தியா பல வகையான தானியங்கள் உற்பத்தியில் முன்னணி நாடாக விளங்கியபோதும், அவற்றை பாதுகாப்பாக குளிரூட்டிகளில் சேமித்து வைத்தல், பதப்படுத்துதல் துறைகளில் தொடா்ந்து சவால்களை சந்தித்து வருகிறது. எனவே, இந்தத் துறையில் அதிக கவனம் செலுத்தி பணியாற்றவேண்டியது அவசியம். அதன் மூலம், தானியங்கள் உள்ளிட்ட விளை பொருள்கள் வீணாவதைக் குறைக்கவும், வேலைவாய்ப்பை பெருக்கவும் முடியும் என்பதோடு, வேளாண் பொருள்கள் ஏற்றுமதியையும் ஊக்குவிக்க முடியும்.

மத்திய அரசின் 'கிசான் சம்பதா யோஜனா' திட்டத்தின் கீழ் 107 லட்சம் டன் உணவுப் பொருள்கள் பதப்படுத்தப்பட்டிருப்பதோடு, 444 லட்சம் வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மேலும், 147 லட்சம் விவசாயிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்திருக்கின்றனா் என்று அவா் கூறினாா்.

**65. நாட்டிலேயே கல்விக் கடன் அதிகம் பெற்ற மாநிலம் தமிழகம்**

நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் எம்பி கார்த்தி ப. சிதம்பரம் கேள்வி ஒன்று எழுப்பினார். அதில்,நாடு முழுவதும் கல்விக் கடன் பெற்ற மாணவா்கள், திருப்பிச் செலுத்த நடவடிக்கை தொடர்பான கேள்வி கேட்டார்.

இதற்கு மத்திய நிதியமைச்சா் நிா்மலா சீதாராமன் அளித்த பதில், 2020, டிசம்பா் வரை நாடு முழுவதும் 24,84,397 மாணவர்கள் ரூ.89,883.57 கோடி கல்விக் கடன் பெற்றுள்ளனா். இதில் ரூ.8,587.10 கோடி (9.55 சதவீதம்) திரும்பி வராத கடனாகவும், தவணை தவறிய கடனாகவும் (என்பிஏ) உள்ளது. ஆனால், இந்தக் கல்விக் கடனை அதிக அளவில் பெற்ற மாநிலங்களாக தமிழகம், கேரளம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம்ஆகியவை உள்ளன.

தமிழகத்தில் 6,97,066 மாணவா்கள் ரூ.17,193.58 கோடி கல்விக் கடன் பெற்றுள்ளனா். இதில் 1,68,410 மாணவா்கள் பெற்ற ரூ.3,490.75 கோடி (20.30 சதவீதம்) வாரக் கடனாக உள்ளது. நாட்டிலேயே கல்விக் கடன் அதிகம் பெற்ற மாநிலமாக தமிழகம் முதலிடத்தில் உள்ளது. தமிழகத்திற்கு அடுத்து கல்வியில் அதிக அளவில் கடன் பெற்ற மாநிலமாக கேரளம் உள்ளது. இந்த மாநிலத்தில் 3,25,703 மாணவா்கள் ரூ.10,236.12 கோடி வரை கல்விக் கடன் பெற்றுள்ளனா். இதில் 54,519 மாணவா்களின் ரூ.1,396.23 கோடி (13.64 சதவீதம்) வாராக் கடனாக உள்ளது.

இதே மாதிரி புதுச்சேரி மாநிலத்தில் 18,311 மாணவா்களுக்கு ரூ.481.80 கோடி கல்விக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 4,307 மாணவா்களின் ரூ.93.31 கோடி (19.37 சதவீதம்) வாராக் கடனாக உள்ளது. தேசிய அளவில் வாராக் கடனில் புதுச்சேரி 3-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

கல்விக் கடன் குறைவாகப் பெற்ற மாநிலம் பிகாா் ஆகும். ஆனால், வராக் கடன் விகிதத்தில் (25.76%) நாட்டிலேயே பிகாா் முதல் மாநிலமாக உள்ளது. கா்நாடகம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் கல்விக் கடன் அதிக அளவில் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், வாராக் கடன் விகிதம் குறைவாக உள்ளது. மேலும், வாராக் கல்விக் கடன் பட்டியலில் பொறியியல் மாணவா்கள் 12.13 சதவீதம், மருத்துவம் சாா்ந்த (நா்ஸிங்) மாணவா்கள் 14.15 சதவீதம் என உள்ளது. இது தவிர 2020, மாா்ச் நிலவரப்படி விவசாயம் (10.33 சதவீதம்), தொழில் துறை (13.60 சதவீதம்) ஆகியவற்றிலும் வாராக் கடன் அதிக அளவில் உள்ளது.

**66. டெல்லி பட்லா ஹவுஸ் என்கவுன்ட்டர் காவல் ஆய்வாளர் கொல்லப்பட்ட வழக்கில் ஆரிஸ் கான் குற்றவாளி: டெல்லி நீதிமன்றம் நேற்று தீர்ப்பு**

டெல்லியில் பட்லா ஹவுஸ் பகுதியில் நடைபெற்ற என்கவுன்ட்டர் தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஆரிஸ் கான் உள்ளிட்டோர் குற்றவாளி என டெல்லி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கடந்த 2008 செப்டம்பர் 13-ம்தேதி டெல்லியில் நிகழ்ந்த வெடிகுண்டு தாக்குதலில் 30 பேர் உயிரிழந்தனர். அடுத்த 6 நாட்களில் (19-ம் தேதி) பட்லா ஹவுஸ் பகுதியில் நடந்த என்கவுன்ட்டரில் 2 தீவிரவாதிகளும் காவல் ஆய்வாளர் மோகன் சந்த் சர்மாவும் கொல்லப்பட்டனர்.

இந்த வழக்கு விசாரணை டெல்லி நீதிமன்றத்தில் நடைபெற்றது. போலீஸார் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில், ஆரிஸ்கான் (அப்போது தலைமறைவானவர்) இந்தியன் முஜாகிதீன் தீவிரவாதி ஷாஜாத் அகமது, ஆடிப் அமீன் மற்றும் முகமது சஜித் ஆகியோரின் பெயர் இடம்பெற்றிருந்தது. இவர்கள் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இதனிடையே, 10 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த ஆரிஸ் கான் 2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. கூடுதல் செஷன்ஸ் நீதிபதி சந்தீப் யாதவ் வழங்கிய தீர்ப்பில், "என்கவுன்டரின் போது காவல் ஆய்வாளர் கொல்லப்பட்ட வழக்கில் ஆரிஸ்கான் உள்ளிட்டோர் மீதான குற்றச் சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகி உள்ளன. எனவே, அவர்கள் அனைவரும் குற்றவாளிகள் என அறிவிக்கப்படுகிறது. இவர்களுக்கான தண்டனை விவரம் பற்றிய விசாரணை வரும் 15-ம்தேதி நடைபெறும்" என கூறப்பட்டுள்ளது.

**67. காப்பீட்டு சட்டத்திருத்த மசோதாவை மத்திய நிதியமைச்சா் நிா்மலா சீதாராமன் மாநிலங்களவையில் திங்கள்கிழமை (15.03,2021) தாக்கல் செய்தாா்.**

மத்திய நிதியமைச்சா் நிா்மலா சீதாராமன் கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்தபோது காப்பீட்டு துறையில் அந்நிய நேரடி முதலீட்டை 49%-இல் இருந்து 74%-ஆக அதிகரிக்கும் வகையில் காப்பீட்டுச் சட்டம் 1938-இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருந்தாா்.

அதற்கேற்ப மாநிலங்களவையில் காப்பீட்டு சட்டத்திருத்த மசோதாவை மத்திய நிதியமைச்சா் நிா்மலா சீதாராமன் திங்கள்கிழமை தாக்கல் செய்தாா்.

பொருளாதாரம் மற்றும் காப்பீட்டு துறையின் வளா்ச்சிக்காக நீண்ட கால உள்நாட்டு மூலதனம், தொழில்நுட்பம் மற்றும் திறன்களை அதிகரிப்பதே மத்திய அரசின் அந்நிய நேரடி முதலீட்டு கொள்கையின் இலக்காக உள்ளது. அந்த இலக்கை அடையும் விதமாக காப்பீட்டு சட்டத்திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) ஆயுள் காப்பீட்டு பிரீமியத்தின் பங்கு 3.6%-ஆக உள்ளது. இது உலக ஜிடிபியின் சராசரியான 7.13%-ஐ விட குறைவு. பொதுக் காப்பீட்டின் நிலை இதைவிட மோசமாக உள்ளது. தற்போது நாட்டின் ஜிடிபியில் பொதுக் காப்பீட்டின் பங்கு 0.94%-ஆக உள்ளது. இது உலக ஜிடிபியின் சராசரியான 2.88%-ஐ விட மிகக் குறைவு. இதனைக் கருத்தில் கொண்டு காப்பீட்டு துறையில் அந்நிய நேரடி முதலீட்டை அதிகரிப்பது ஆயுள் காப்பீட்டு பிரிவின் வளா்ச்சிக்கு உதவும் என்று மத்திய அரசு தரப்பில் கூறப்படுகிறது.

காப்பீட்டு துறையின் இடைநிலை சேவைகளில் ஏற்கெனவே 100% அந்நிய நேரடி முதலீட்டை மத்திய அரசு அனுமதித்துள்ளது.

மருந்தியல் கல்லூரிகளுக்கு தேசிய முக்கியத்துவ அந்தஸ்து: தேசிய மருந்தியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் சட்டத்திருத்த மசோதா 2021-ஐ மத்திய ரசாயனத் துறை அமைச்சா் டி.வி.சதானந்த கௌடா திங்கள்கிழமை தாக்கல் செய்தாா். குஜராத் மாநிலம் ஆமதாபாத், அஸ்ஸாம் மாநிலம் குவாஹாட்டி, பிகாா் மாநிலம் ஹாஜிபூா், தெலங்கானா மாநிலம் ஹைதராபாத், மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தா மற்றும் உத்தர பிரதேச மாநிலம் ரேபரேலியில் உள்ள 6 மருந்தியல் கல்லூரிகளுக்கு தேசிய முக்கியத்துவ அந்தஸ்து வழங்க அந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

90 ஆண்டுகள் பழைமையான சட்டத்தை ரத்து செய்ய மசோதா: மத்திய கப்பல் மற்றும் துறைமுகங்கள் துறை இணையமைச்சா் மன்சுக் மாண்டவியா கடற்பயணத்துக்கான கடல்சாா் உதவிகள் மசோதா 2021-ஐ மக்களவையில் தாக்கல் செய்தாா். கடந்த 1927-ஆம் ஆண்டு காலனிய ஆட்சியின்போது அமல்படுத்தப்பட்ட கலங்கரைவிளக்கச் சட்டத்தை ரத்து செய்ய இந்த மசோதா வழிவகுக்கிறது.

**68. கேரளத்தில் முதுபெரும் கதகளி நடனக் கலைஞா் சேமஞ்சேரி குஞ்ஞிராமன் திங்கள்கிழமை காலமானாா். அவருக்கு வயது 105.**

கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டம் கொயிலாண்டி வட்டத்தில் உள்ள சேலியாவைச் சோ்ந்தவா் முதுபெரும் கதகளி நடனக் கலைஞா் சேமஞ்சேரி குஞ்ஞிராமன். குரு கருணாகரன் மேனன் நடத்திய கதகளி நடன குழுவில் இணைவதற்காக தனது 14-ஆவது வயதில் வீட்டைவிட்டு வெளியேறியதன் மூலம், குஞ்ஞிராமனின் கதகளியுடனான உறவு தொடங்கியது.

அதன் பின்னா் அந்தக் கலையை கற்பது, கற்பிப்பது, மேடைகளில் தோன்றி நடனமாடுவது என 90 ஆண்டுகள் தனது வாழ்க்கையை கதகளி நடனத்துக்காக அா்ப்பணித்தாா். கேரளத்தின் வடக்கு மலபாா் பகுதியில் கதகளி கலை பரவச் செய்வதில் முக்கிய பங்காற்றினாா்.

நடனத்தின்போது இவரின் முத்திரைகளும் அபிநயங்களும், வசீகரமும் கதகளி நடனம் மீது மிகுந்த ஆா்வம் கொண்டவா்களின் இதயங்களை கவா்ந்திருந்தன. கதகளியில் 'கல்லடிக்கோடன்' பாணி நடனத்தில் அவா் கைதோ்ந்தவராக இருந்தாா். பரதநாட்டியத்தை முதலில் கற்ற அவா், பின்னா் மோஹினியாட்டத்திலும் தனது கவனத்தைத் திருப்பினாா். பிறகு கதகளியில் முழுவதும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாா்.

கடந்த 1945-ஆம் ஆண்டு வடக்கு கேரளத்தின் முதல் நடனப் பள்ளியான பாரதிய நாட்டிய கலாலயத்தை தோற்றுவித்தாா். அதனைத் தொடா்ந்து தனது சொந்த கிராமத்தில் சேலியா கதகளி வித்யாலயம் உள்பட பல நடனப் பள்ளிகளை உருவாக்கினாா்.

கடந்த 2017-ஆம் ஆண்டு இவருக்கு மத்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்தது. இதுதவிர கேரள சங்கீத நாடக அகாதெமி விருது, கலாரத்னம் விருது, மயில்பீலி விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றுள்ளாா்.

**69. சிறார் நீதி சட்டத்தை அமல்படுத்த கலெக்டர்களுக்கு கூடுதல் அதிகாரம்; நாடாளுமன்றத்தில் திருத்த மசோதா தாக்கல்**

சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு) சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான மசோதா, நாடாளுமன்ற மக்களவையில் நேற்று (15.03.2021) தாக்கல் செய்யப்பட்டது. மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை மந்திரி ஸ்மிரிதி இரானி தாக்கல் செய்தார்.

நீதி பராமரிப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதாவை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சா் ஸ்மிருதி இரானி திங்கள்கிழமை அறிமுகப்படுத்தினாா். சிறாா் பாதுகாப்புச் சட்ட விதிமுறைகளை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டிய அமைப்புகளை மாவட்ட மாஜிஸ்திரேட்டும், கூடுதல் மாஜிஸ்திரேட்டும் கண்காணிப்பதற்கு அந்த மசோதா வழிவகை செய்கிறது.

மாவட்ட சிறாா் பாதுகாப்பு மையமும் புதிய மசோதாவின்படி மாவட்ட மாஜிஸ்திரேட்டின் கண்காணிப்புக்கு உள்ளாகும். சிறாா் நல பாதுகாப்புக் குழுவின் தலைவராக நியமிக்கப்படுபவரின் கல்வித் தகுதி, பின்னணி உள்ளிட்டவற்றை ஆராய்வதற்கும் புதிய மசோதா வழிவகை செய்கிறது.

அக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுபவா், சிறாா் நலன் தொடா்பான விவகாரங்களில் குறைந்தபட்சம் 7 ஆண்டுகளுக்குப் பணியாற்றியவராக இருத்தல் வேண்டும் என்று மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறாா் நல பாதுகாப்புக் குழு சாா்பில் நடைபெறும் கூட்டங்களில் தொடா்ந்து 3 மாதங்களுக்கு உறுப்பினா்கள் பங்கேற்கவில்லை எனில், உரிய விசாரணைக்குப் பிறகு அவா்களைப் பதவியில் இருந்து நீக்க மாநில அரசுகளுக்கு மசோதா அதிகாரம் வழங்குகிறது.

சிறாா் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள சில குறைபாடுகளைப் போக்குவதற்கும், சிறாா்களின் நலனைப் பாதுகாப்பதில் மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதற்கும் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்தனா்.

சிறாா் மறுவாழ்வு உள்ளிட்ட விவகாரங்களில் சம்பந்தப்பட்ட அமைப்புகளிடையேயான தொடா்பை வலுப்படுத்துவதற்கு மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு இந்த மசோதா அதிகாரம் வழங்குகிறது. குழந்தைகளைத் தத்தெடுக்கும் விவகாரங்களையும் மாஜிஸ்திரேட் இனி கண்காணிக்க முடியும்.

சிறாா் நலன் பாதுகாப்புக்கான குறைகளைத் தீா்க்கும் அதிகாரியாகவும் மாவட்ட மாஜிஸ்திரேட் செயல்படுவாா். சம்பந்தப்பட்ட சிறாருடன் தொடா்புடைய நபா்கள், குறைகளை அவரிடம் தெரிவிக்க மசோதா வழிவகை செய்கிறது.

கூடுதல் அதிகாரம்

சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு) திருத்த சட்டப்படி, இந்த சட்டத்தை அமல்படுத்தும் அமைப்புகளின் செயல்பாடுகளை கண்காணிக்க மாவட்ட கலெக்டர்கள் மற்றும் கூடுதல் கலெக்டர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. கலெக்டர் தலைமையில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு பிரிவு உருவாக்கப்படும்.

அந்த பிரிவில் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட நபரின் கல்வித்தகுதி மற்றும் பின்னணி குறித்து ஆராயப்படும். ஒரு உறுப்பினர், தொடர்ந்து 3 மாதங்களாக இந்த பிரிவின் கூட்டங்களுக்கு வராவிட்டால், விசாரணை நடத்தி அவரை நீக்குவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது.

குழந்தைகளை தத்தெடுத்தல் குறித்து உத்தரவு பிறப்பிக்க கலெக்டர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் மறுவாழ்வு பணிகளை ஒருங்கிணைக்கும் அதிகாரமும் கலெக்டர்களுக்கு உண்டு.

மேலும் 4 மசோதாக்கள்

3 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கத்தக்க குற்றங்கள், 'கடுமையான குற்றங்கள்' என வகைப்படுத்தப்படும்.

இந்த மசோதாவுடன், டெல்லி தேசிய தலைநகர் பிராந்திய திருத்த மசோதா, சுரங்கம் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா, தேசிய மருந்து தயாரிப்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி திருத்த மசோதா, கடற்பயணத்துக்கான கடல்சார் உதவி மசோதா ஆகிய மசோதாக்களும் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டன.

**70. இந்தியாவின் உயா் மதிப்புடைய 2000 ரூபாய் நோட்டுகள் கடந்த 2 ஆண்டுகளாக அச்சிடப்படவில்லை என்று மக்களவையில் மத்திய அரசு திங்கள்கிழமை தெரிவித்தது.**

கடந்த 2019-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்த நோட்டுகள் அச்சடிப்பது நிறுத்தப்பட்டுள்ளது. கணக்கில் காட்டப்படாத பணம் பதுக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் 500, 1000 ரூபாய் நோட்டுகள் புழக்கத்தை கடந்த 2016-ஆம் ஆண்டு நவம்பா் மாதத்துடன் மத்திய அரசு கைவிட்டது. அதன் பிறகு, புதிய 500 ரூபாய் நோட்டுகளை மத்திய அரசு அறிமுகம் செய்தபோதும், 1000 ரூபாய் நோட்டுகளை புதிதாக அறிமுகம் செய்யவில்லை. அதற்கு மாற்றாக, புதிய 2000 ரூபாய் நோட்டை மத்திய அரசு அறிமுகம் செய்தது. ஆனால், கடந்த சில மாதங்களாக ரூ. 2000 நோட்டுகள் புழக்கம் வெகுவாக குறைந்து காணப்பட்டது.

இந்த நிலையில், இதுதொடா்பாக மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய நிதித் துறை இணையமைச்சா் அனுராக் சிங் தாக்குா் அளித்த எழுத்துபூா்வ பதிலில் கூறியிருப்பதாவது:

2018-ஆம் ஆண்டு மாா்ச் 30-ஆம் தேதி நிலவரப்படி 336.2 கோடி ரூ. 2000 நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன. இது மொத்த பணப் புழக்கத்தில் 3.27 சதவீதமாகவும், பண மதிப்பில் 37.26 சதவீதம் என்ற அளவிலும் இருந்தது.

2021-ஆம் ஆண்டு பிப்ரவரி 26-ஆம் தேதி நிலவரப்படி 249.9 கோடி ரூ. 2000 நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன. இது மொத்த பணப் புழக்கத்தில் 2.01 சதவீதமாகவும், பண மதிப்பில் 17.78 சதவீதம் என்ற அளவிலும் இருந்தது.

குறிப்பிட்ட மதிப்புடைய ரூபாய் நோட்டுகள் அச்சடிப்பு என்பது, பொதுமக்களின் பரிவா்த்தனை தேவையைப் பூா்த்தி செய்வதற்காக மத்திய அரசு ரிசா்வ் வங்கியுடன் ஆலோசித்து முடிவுசெய்யும் விஷயமாகும். அந்த வகையில், 2019-20 மற்றும் 2020-21 ஆம் ஆண்டுகளில் புதிய ரூ. 2000 நோட்டுகள் அச்சடிப்பதற்கான உத்தரவுகள் எதுவும் அரசு அச்சகங்களுக்கு அளிக்கப்படவில்லை. கடந்த 2019-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் புதிய 2000 ரூபாய் நோட்டுகள் எதுவும் அச்சடிக்கப்படவில்லை. கணக்கில் காட்டப்படாத கருப்புப் பணம், உயா் மதிப்புடைய நோட்டுகளாகப் பதுக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஏப்ரல் மாதம் முதல் 2017-ஆம் ஆண்டு மாா்ச் மாதம் வரையிலான 2016-17 நிதியாண்டில் 354.2 கோடி ரூ. 2000 நோட்டுகள் அச்சடிக்கப்பட்டதாக ரிசா்வ் வங்கி சாா்பில் கடந்த 2019-ஆம் ஆண்டு தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், 2017-18 ஆம் நிதியாண்டில் 11.15 கோடி ரூ. 2000 நோட்டுகள் மட்டுமே அச்சடிக்கப்பட்டது. அது 2018-19 ஆம் நிதியாண்டில் 4.66 கோடி நோட்டுகளாக மேலும் குறைக்கப்பட்டது.

**71. நெதா்லாந்தில் பொதுமக்களுக்கு அஸ்டொ்ஸெனகா தடுப்பூசி செலுத்துவது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.**

அந்தத் தடுப்பூசியால் பக்கவிளைவுகள் ஏற்படும் அச்சம் காரணமா பல நாடுகள் அதன் பயன்பாட்டை நிறுத்திவைத்துள்ள நிலையில், அந்தப் பட்டியலில் தற்போது நெதா்லாந்தும் இணைந்துள்ளது.

பிரிட்டனின் ஆக்ஸ்ஃபோா்டு பல்கலைக்கழகமும் அஸ்ட்ராஸெனகா நிறுவனமும் உருவாக்கியுள்ள அந்தத் தடுப்பூசியால் ரத்தக்கட்டு ஏற்படுவதற்கான அபாயம் இல்லை என்று உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பியப் பிரிவு அறிவித்துள்ளது.

எனினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அஸ்ட்ராஸெனகா தடுப்பூசியை பொதுமக்களுக்குச் செலுத்துவது இந்த மாதம் 29-ஆம் தேதி வரை நிறுத்திவைக்கப்படுவதாக நெதா்லாந்து அதிகாரிகள் அறிவித்தனா்.

ஏற்கெனவே, ஜரிஷ் குடியரசு, டென்மாா்க், நாா்வே, பல்கேரியா, ஐஸ்லாந்து உள்ளிட்ட நாடுகள் அந்தத் தடுப்பூசிப் பயன்பாட்டை நிறுத்திவைத்துள்ளன.

திங்கள்கிழமை நிலவரப்படி, நெதா்லாந்தில் 11,57,192 பேருக்கு கரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. அவா்களில் 16,069 போ் அந்த நோய்க்கு பலியாகியுள்ளனா்.

**72. தேசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப்பில் போல்ட் வால்ட் பிரிவில் தமிழகத்தின் ரோஸி பால்ராஜ் தங்கம் வென்றார்.**

**73. அணுசக்தி ஒப்பந்தத்தில் அமெரிக்கா துரிதமாக இணைய வேண்டும்: ஈரான்**

தங்களுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைய விரும்பினால், அதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்று ஈரான் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து ஐரோப்பிய கொள்கைகள் தொடா்பாக பெல்ஜியம் தலைநகா் பிரஸ்ஸெல்ஸில் காணொலி மூலம் நடைபெற்ற கலந்துரையாடலில் அவா் கூறியதாவது:

வரும் ஜூன் மாதம் ஈரானில் தோ்தல் நடைபெறவிருக்கிறது. அதன் பிறகு சூழல்கள் மாறலாம்.

அணுசக்தி ஒப்பந்தத்தில் மீண்டும் இணைய விருப்பம் தெரிவித்துள்ள அமெரிக்கா, அதில் மந்தமாக இருக்கக் கூடாது. இந்த விவகாரத்தில் அந்த நாடு துரிதமாக செயல்பட வேண்டும்.

அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகியதாக அமெரிக்காதான், இதுதொடா்பான முயற்சிகளை முதலில் தொடங்க வேண்டும் என்றாா் அவா்.

அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் 5 நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜொ்மயை உள்ளடக்கிய பி5+1 நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த 2015-ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. தங்களது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்ய ஈரானும், அதற்குப் பதிலாக அந்த நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை விலக்கிக் கொள்ள பி5+1 நாடுகளும் ஒப்புக் கொண்டு அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

எனினும், ஒபாமா ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுதாக முன்னாள் அதிபா் டொனால்ட் அரசு 2018-ஆம் ஆண்டு அறிவித்தது. எனினும், அந்த ஒப்பத்தில் மீண்டும் இணைய தற்போதைய அதிபா் ஜோ பைடன் விருப்பம் தெரிவித்துள்ளாா்.

**74. பாரத் நெட் திட்டத்தில் தமிழகத்தில் 17,622 கிராமங்களுக்கு இணைய வசதி 25.03.2021 அன்று முதல் பணிகள் தொடங்கப்படும், என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.**

**75. 26 ஆவது பிரெஞ்சு – ஸ்பானிஷ் உச்சி மாநாடு பிரான்சில் நடைபெறுகிறது. (பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான்; ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ்)**

**76. தேசிய சீனியர் தடகளம்: ஈட்டி எறிதலில் அன்னு ராணி புதிய சாதனை**

24-வது பெடரேஷன் கோப்பைக்கான தேசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் நேற்று தொடங்கியது.

24-வது பெடரேஷன் கோப்பைக்கான தேசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் நேற்று தொடங்கியது. இதில் பெண்களுக்கான ஈட்டி எறிதலில் உத்தரபிரதேசத்தை சேர்ந்த 28 வயது வீராங்கனை அன்னு ராணி 63.24 மீட்டர் தூரம் வீசி புதிய தேசிய சாதனை படைத்ததுடன் தங்கப்பதக்கத்தையும் தனதாக்கினார். இதற்கு முன்பு 2019-ம் ஆண்டு தோகாவில் நடந்த உலக சாம்பியன்ஷிப் போட்டியில் அவர் 62.43 மீட்டர் தூரம் எறிந்ததே தேசிய சாதனையாக இருந்தது. நேற்று அவர் தனது சொந்த சாதனையை தகர்த்து புதிய சாதனை படைத்தார். இருப்பினும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கான தகுதி இலக்கை (64 மீட்டர்) அவரால் எட்ட முடியவில்லை. இந்த பந்தயத்தில் ராஜஸ்தான் வீராங்கனை சஞ்சனா சவுத்ரி (54.55 மீட்டர்) 2-வது இடமும், அரியானா வீராங்கனை குமாரி ஷர்மிளா (50.78 மீட்டர்) 3-வது இடமும் பெற்றனர். பெண்களுக்கான 10 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் உத்தரபிரதேச வீராங்கனை சவிதா பாலும், குண்டு எறிதலில் உத்தரபிரதேச வீராங்கனை கிரண் பாலியானும் முதலிடம் பிடித்தனர்.

**77. இந்தியாவுக்கு எண்ணெய் சவுதியை விஞ்சிய அமெரிக்கா.**

இந்தியாவுக்கு எண்ணெய் சப்ளை செய்யும் நாடுகள் பட்டியலில், இரண்டாவது மிகப் பெரிய நாடாக, அமெரிக்கா மாறி இருக்கிறது. சவுதி அரேபியா, நான்காவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி மாதத்தில், இந்தியாவுக்கு, அதிகளவில் கச்சா எண்ணெய்யை சப்ளை செய்த நாடுகளின் பட்டியலில், இரண்டாவது இடத்தை அமெரிக்கா பிடித்துள்ளது. முதல் இடத்தில் ஈராக் உள்ளது.

ஈராக்கிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்யின் அளவு, 23 சதவீதம் அளவுக்கு சரிவு கண்டிருப்பினும், அந்த நாடுதான் முதல் இடத்தில் உள்ளது. அதேசமயம், அமொக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்யின் அளவு, 45 சதவீதம் அளவுக்கு அதிகரித்துள்ளது. ஆனால், சவுதி அரேபியாவிலிருந்து இறக்குமதி, 42 சதவீதம் அளவுக்கு சரிவைக் கண்டுள்ளது. இந்தியாவுக்கு எண்ணெய் சப்ளை செய்யும் முதல் இரண்டு நாடுகளில், சவுதி அரேபியா ஒன்றாக இதுவரை இருந்து வந்தது. இந்நிலையில், கடந்த ஆண்டுக்குப் பிறகு, முதன் முறையாக நான்காவது இடத்துக்கு சென்றுள்ளது.

**78. மீண்டும் அதிகரித்த நாட்டின் சில்லரை விலை பணவீக்கம் – பிப்ரவரி 2021**

நாட்டின் சில்லரை விலை பணவீக்கம் கடந்த ஜனவரி மாதத்தில் 4.06 சதவீதமாக இருந்த நிலையில், தற்போது பிப்ரவரி மாதத்திற்கான பணவீக்க தகவல் வெளியிடப்பட்டுள்ளது. பிப்ரவரி 2021 மாதத்தில் நுகர்வோர் விலை பணவீக்கம்(Consumer price index) 5.03 சதவீதமாக சொல்லப்பட்டுள்ளது. இது சந்தை எதிர்பார்த்த 4.83 சதவீதம் என்ற அளவை காட்டிலும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உணவு பொருட்களில் காணப்பட்ட விலை உயர்வால் கடந்த மாத பணவீக்கம் அதிகரித்துள்ளது. கடந்த 2019ம் ஆண்டின் மே மாதத்தில் 1.89 சதவீதம் என்ற அளவை கொண்டிருந்த உணவுப்பொருட்களின் பணவீக்க விகிதம், தற்போது 3.87 சதவீதமாக உள்ளது.

இது போல பருப்பு வகைகளின் பணவீக்க விகிதம் 12.54 சதவீதமாக அதிகரித்துள்ளது கவனிக்கத்தக்கது. அதே வேளையில் காய்கறிகளின் விலை சற்று குறைந்து 6.24 சதவீதமாக பிப்ரவரி மாதத்தில் நிறைவு பெற்றுள்ளது. துணிமணிகள் மற்றும் காலணிகள் 3.82 சதவீதத்திலிருந்து 4.21 சதவீதமாக அதிகரித்துள்ளது.

புகையிலை பொருட்கள் மற்றும் வீட்டுமனை பணவீக்க விகிதங்களில் பெரிதான ஏற்ற–இறக்கம் இல்லை எனலாம். ஒளி மற்றும் எரிபொருட்களின் விலைவாசி 3.87 சதவீதத்திலிருந்து 3.53 சதவீதமாக குறைந்துள்ளது. கடந்த ஒரு வருட காலத்தில் பணவீக்க விகிதம் பெரும்பாலும் ஆறு சதவீதத்திற்கு மேலாக தான் இருந்துள்ளது. பாரத ரிசர்வ் வங்கியின் குறுகிய கால பணவீக்க விகித இலக்கு 2–6 சதவீதம் என்ற அளவிற்குள் சொல்லப்பட்டுள்ளது.

நாட்டின் பணவீக்க விகித அளவீட்டில் உணவு பொருட்கள் மற்றும் குளிர்பானங்கள் 45.86 சதவீத பங்களிப்பை கொண்டிருக்கின்றன. பால் பொருட்கள் 6.6 சதவீதமும், காய்கறிகள் 6.04 சதவீதமும், மாமிசம் மற்றும் மீன் வகைகள் 3.6 சதவீதத்தையும் கொண்டுள்ளது.

வீட்டுமனை 10 சதவீதத்தையும், கல்வி 4.46 சதவீதம் மற்றும் சுகாதாரம் 5.9 சதவீதத்தையும் பங்களிப்பாக பெற்றுள்ளது. எரிசக்தியில் பெரும்பாலும் இறக்குமதியை சார்ந்திருத்தல், பருவமழையின் நிச்சயமற்ற தன்மை, மோசமான சாலைகள் மற்றும் உட்கட்டமைப்பில் மேம்பாடு இல்லாதது, அதிக நிதி பற்றாக்குறை மற்றும் அத்தியாவசிய பொருட்களை கொண்டு செல்வதில் உள்ள சிக்கல் ஆகியவை சில்லரை விலை பணவீக்க ஏற்ற–இறக்கத்திற்கு பெரும்பாலும் காரணமாக உள்ளன.

**79. "புதுப்பிக்க கூடிய எரிசக்தி மற்றும் காடு வளர்ப்பு உள்ளிட்ட துறைகளில், பாரிஸ் ஒப்பந்தத்தில் அளித்த உறுதிமொழியை, 'ஜி–20' அமைப்பில், இந்தியா மட்டுமே சரியாககடைபிடிக்கிறது," என, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர், ராஜ்யசபாவில் நேற்று (15.03.2021) தெரிவித்தார்.**

புதுப்பிக்க கூடிய எரிசக்தி, வாகன புகையினால் ஏற்படும் மாசை குறைப்பது, காடுகளின் நிலப்பரப்பை அதிகரிப்பது உட்பட, பாரிஸ் ஒப்பந்தத்தில், பல்வேறு உறுதிமொழிகளை ஜி–20 நாடுகள் அறிவித்துள்ளன. அந்த உறுதிமொழிகளை, இந்தியா மட்டுமே சரியாக கடைப்பிடித்து வருகிறது.

கடந்த ஆறு ஆண்டு களில், மரங்கள் உள்ள நிலப் பரப்பு, நாடு முழுவதும், 15 ஆயிரம் சதுர கி.மீ., அதிகரித்துள்ளது. வரும் ஆண்டுகளில் இதன் வேகம் மேலும் அதிகரிக்கும். காடுகளின் நிலப்பரப்பை அதிகரிப்பதற்காக, மாநில அரசுகளுக்கு, 48 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை, மத்திய அரசு கடந்தாண்டு வழங்கியுள்ளது. வனப்பகுதிகளின் பரப்பை அதிகரிப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இவ்வாறு, அவர் கூறினார்.

**80. 'மார்ஷியல்' சட்டம் பிரகடனம் மியான்மர் ராணுவம் அதிரடி**

மியான்மரின் யாங்கூனில், முழு அதிகாரமும் ராணுவத்திற்கு கிடைக்க வழிவகுக்கும், 'மார்ஷியல்' சட்டம், நேற்று, பிரகடனம் செய்யப்பட்டது.

நம் அண்டை நாடான மியான்மரில், கடந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில், பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு, ஆளும் கட்சி மீண்டும் வெற்றிபெற்றதாக, ராணுவம் குற்றம் சாட்டியது. இது தொடர்பாக அரசுக்கும், ராணுவத்துக்கும் இடையே மோதல் நீடித்து வந்த நிலையில், கடந்த மாதம், ஆங் சான் சூச்சி தலைமையிலான அரசை கவிழ்த்து, ஆட்சி அதிகாரத்தை ராணுவம் கைப்பற்றியது. போராட்டம்மேலும், ஆங் சன் சூச்சி, அதிபர் வின் மைன்ட் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் பலர், சிறைக்காவலில் வைக்கப்பட்டனர்.

இதையடுத்து, ராணுவ புரட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து, நாடு முழுவதும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. எண்ணற்ற மக்கள், சாலைகளில் ஒன்று திரண்டு போராட்டம் நடத்தி வருவதால், நாடு முழுவதும் பெரும் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இதற்கிடையே, போராட்டக் காரர்களை கலைக்கும் பணிகளில், ராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.இதில் நடத்தப்படும் துப்பாக்கிச்சூட்டில், உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. யாங்கூனில், ராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில், நேற்று முன்தினம் மட்டும், 38 பேர் உயிரிழந்தனர்.

இதுவரை, நாடு முழுவதும், 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.ஆறு பகுதிஇந்நிலையில், போராட்டக்காரர்களை ஒடுக்கும் நோக்கத்தில், யாங்கூனில் உள்ள, வடக்கு டகோன், தெற்கு டகோன், டகோன் செய்க்கான், வடக்கு ஒக்கலபா, ஹிலைங் தார் யார் மற்றும் ஷ்வேபியிதா உள்ளிட்ட, ஆறு பகுதிகளில், நேற்று, மார்ஷியல் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் வாயிலாக, இந்த குறிப்பிட்ட பகுதிகளில், நிர்வாகம், நீதித் துறை மற்றும் சட்ட அமலாக்கத் துறை என அனைத்தும் ராணுவ கட்டுப் பாட்டின் கீழ் வந்துள்ளது.

**81. இசைத் துறைக்கான மிகப் பெரிய 'கிராமி' விருதுகளை, இந்தாண்டு அதிகமான பெண்கள் அள்ளிச் சென்றனர். அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில், 63வது கிராமி விருது விழா, ..."**

இசைத் துறைக்கான மிகப் பெரிய 'கிராமி' விருதுகளை, இந்தாண்டு அதிகமான பெண்கள் அள்ளிச் சென்றனர்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில், 63வது கிராமி விருது விழா, நடைபெற்றது. கொரோனா விதிகளை பின்பற்றி நடந்த இந்த விழாவில், ஆண்களை விட பெண்கள் அதிக விருதுகளை பெற்றனர்.ஒன்பது பிரிவுஇதில், பாடகி பியான்ஸ், மிக அதிக விருதுகளை வென்று, கிராமி வரலாற்றில் புதிய சாதனை படைத்துள்ளார். இவர், 'சேவேஜ், பிளாக் பரேட், பிரவுன் ஸ்கின் கேர்ள்' உட்பட, பாடல், வீடியோ என, ஒன்பது பிரிவுகளில் தேர்வாகி, அவற்றில் நான்கில் விருது களை அள்ளிச் சென்றார். இதன் மூலம், மொத்தம், 28 விருதுகளை வென்று, கிராமி வரலாற்றில் அதிகம் விருது வென்ற பெண் என்ற சிறப்பை, பியான்ஸ் படைத்துள்ளார்.

இவர், தற்போது, 31 கிராமி விருதுகளை வென்ற, இசையமைப்பாளர், சர்.ஜார்ஜ் சோல்டிக்கு அடுத்த இடத்தில் உள்ளார். பியான்சுடன் இணைந்து பாடிய அவரது, ஒன்பது வயது மகள், புளு ஐவி கார்ட்டருக்கு, சிறந்த இணை பாடகிக்கான கிராமி விருது கிடைத்துள்ளது. இதன் மூலம் குறைந்த வயதில் கிராமி விருது பெற்ற இரண்டாவது பெண் என்ற சிறப்பை, புளு ஐவி கார்ட்டர் பெற்றுள்ளார். இந்த ஆண்டிற்கான சிறந்த இசை ஆல்பமாக, டெய்லர் ஸ்விப்ட்டின், 'போக்லோர்' தேர்வு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது முறையாக இவ்விருது வென்ற முதல் பெண் என்ற சிறப்பை, டெய்லர் ஸ்விப்ட் பெற்று உள்ளார்.

இதற்கு முன், ஸ்டீவ் வன்டர், பிராங்க் சினாட்ரா, பால் சைமன் ஆகியோர் தான் மூன்று முறை விருதுகளை வென்றுள்ளனர். விரைவில் வெளியாக உள்ள, 'நோ டைம் டு டை' ஜேம்ஸ்பான்ட் படத்தின் 'டைட்டில்' பாடலுக்காக, எய்லிஷ் விருது வென்றார். முதன் முறையாக, வெளியாகாத ஒரு படத்தின் பாடலுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. புதிய பாடகிக்கான விருதை, 'வேப்' பாடலுக்காக, மெகன் தட்டிச் சென்றார். முக கவசம்இரட்டையர் பிரிவில், 'ரெய்ன் ஆன் மீ' பாடலுக்கான விருது, லேடி காகா, அரியனா கிராண்டே ஆகியோருக்கு கிடைத்தது.

இந்தாண்டு, சிதார் இசைக் கலைஞர், ரவி சங்கரின் மகள், அனுஷ்கா சங்கர், மும்பையைச் சேர்ந்த, பிரியதர்ஷனி ஆகியோரின் இசை ஆல்பங்கள், விருதுக்கு தேர்வான போதிலும், வெற்றி வாய்ப்பை இழந்தன. இந்நிகழ்ச்சியில், கனடாவில் வசிக்கும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த,

லில்லி சிங், டில்லி, விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முக கவசம் அணிந்து, பரபரப்பை ஏற்படுத்தினார்.

**82. டெல்லி ஆட்சி அதிகாரத்தில் ஆளுநருக்கு முழு அதிகாரமளிக்கும் மசோதா மக்களவையில் தாக்கல்**

ஆட்சி அதிகாரத்தில் டெல்லி துணைநிலை ஆளுநரின் பங்கு மற்றும் அதிகாரத்தை வரையறுக்கும் திருத்த மசோதா நேற்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. மத்திய உள்துறை இணையமைச்சர் கிஷண் ரெட்டி, டெல்லி தேசிய தலைநகர பிராந்திய திருத்த மசோதா (என்சிடிடி) 2021ஐ மக்களவையில் நேற்று தாக்கல் செய்தார்.

அதன்படி, முன்மொழியப்பட்டுள்ள திருத்தத்தில்,

* சட்டத்தின் 21வது பிரிவில், கூறப்பட்டுள்ள அரசு' என்ற வார்த்தை துணைநிலை ஆளுநரை' குறிப்பதாக மாற்றப்பட வேண்டும். இதற்காக பிரிவு 21ல் புதிதாக துணைப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். ஏனெனில், உச்ச நீதிமன்றம் அரசு என்று குறிப்பிட்டது துணைநிலை ஆளுநரையே சேரும்.

* சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட எந்தவொரு மசோதாவையும் ஏற்று கொள்ளவோ, நிறுத்தி வைக்கவோ அல்லது ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அனுப்பி வைக்கவோ துணைநிலை ஆளுநருக்கு அதிகாரம் உண்டு என்று கூறப்பட்டுள்ள 24வது பிரிவுடன், சட்டப்பேரவை அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட எந்தவொரு விஷயத்தையும் வெளியே சொல்லக் கூடாது என்ற புதிய உட்பிரிவு கூடுதலாக சேர்க்கப்பட வேண்டும்.

* 33வது துணைப்பிரிவு (1)ல் அதன் அலுவல் நடத்தை தொடர்பான' என்ற வார்த்தைகளுக்கு பிறகு, ₹மக்கள் சபையின் அலுவல் நடத்தை நடைமுறை மற்றும் விதிகளை பாதிப்பதாக இருக்காது,' என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட வேண்டும்.

* திருத்த மசோதா அமல்படுத்தப்படுவதற்கு முன்பு, தலைநகரின் அன்றாட நிர்வாகம் அல்லது நிர்வாக முடிவு தொடர்பாக விசாரணை நடத்த சட்டப்பேரவைக்கோ அல்லது அதன் குழுவுக்கோ அதிகாரம் உண்டு என்று உருவாக்கப்பட்ட விதிகள் ரத்து செய்யப்பட வேண்டும்.

* துணைநிலை ஆளுநர் அல்லது அவரது அதிகாரிகளால் எடுக்கப்படும் அனைத்து நிர்வாக நடவடிக்கை முடிவுகளையும் துணைநிலை ஆளுநர் கூறியதாக எடுத்து கொள்ள வேண்டும்.

* அரசியலமைப்பு சட்டம் 239ஏஏ.ன் கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, பேரவை செயல்பாடுகளுக்கு அப்பாற்பட்ட சில விஷயங்களில் துணைநிலை ஆளுநர் விதிகளை உருவாக்கலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இந்த மசோதா தவிர, சிறார் சீர்திருத்த மசோதாவை அமைச்சர் ஸ்மிருதி இரானி தாக்கல் செய்தார். அதன்படி, சிறார் சீர்திருத்த பள்ளிகளை கண்காணிக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியர்கள், கூடுதல் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சுரங்கங்கள் மற்றும் தாதுவளங்கள் மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல் திருத்த மசோதாவை அமைச்சர் பிரகலாத் ஜோஷி மக்களவையில் தாக்கல் செய்தார். கலங்கரை விளக்கம் கப்பல்களுக்கு வழிகாட்டியாக இருப்பதால், அதன் பெயரை கடல் வழிகாட்டுதல்' என்று மாற்றி கடல் வழிகாட்டுதல் உதவி மசோதாவை அமைச்சர் மான்சுக் மாண்டவியா தாக்கல் செய்தார். அகமதாபாத், கவுகாத்தி, ஹாஜிபூர், ஐதாராபாத், கொல்கத்தா, ரேபரேலி உள்ளிட்ட 6 மருந்தக நிறுவனங்களுக்கு தேசிய அங்கீகாரம் அளிக்கும் தேசிய மருந்தக கல்வி மற்றும் ஆராய்ச்சி மசோதாவை அமைச்சர் சதானந்த கவுடா தாக்கல் செய்தார். 74 சதவீத வெளிநாட்டு நேரடி முதலீடுகளை விற்க வகை செய்யும் வகையில் காப்பீடு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரும் மசோதாவை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மாநிலங்களவையில் தாக்கல் செய்தார்.

தமிழக நிறுவனத்துக்கு தேசிய அங்கீகாரம் தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் உள்ள தமிழ்நாடு உணவு தொழில்நுட்ப நிறுவனம், அரியானாவில் குண்ட்லியில் உள்ள உணவு தொழில்நுட்ப நிறுவனங்களை தேசிய நிறுவனங்களாக அறிவித்து மாநிலங்களவையில் மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

**83. ஏடிபி ஒற்றையர் தரவரிசை 2வது இடத்தில் மெட்வதேவ்**

ஏடிபி ஆண்கள் ஒற்றையர் பிரிவு தரவரிசையில் ரஷ்ய வீரர் டானில் மெட்வதேவ் ஒரு இடம் முன்னேறி 2வது இடத்தை பிடித்துள்ளார். மார்ஷெல் ஓபன் 13 தொடரின் பைனலில் பியரி ஹெர்பர்ட்டுடன் (பிரான்ஸ்) நேற்று முன்தினம் மோதிய மெட்வதேவ் 6–4, 6–7 (4–7), 6–4 என்ற செட் கணக்கில் போராடி வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இது அவரது 10வது ஏடிபி பட்டமாகும். இந்நிலையில், நேற்று வெளியான ஏடிபி தரவரிசையில் ஸ்பெயின் நட்சத்திரம் ரபேல் நடாலை பின்னுக்குத் தள்ளி மெட்வதேவ் 2வது இடத்தை பிடித்தார். செர்பியாவின் நோவாக் ஜோகோவிச் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். சுவிஸ் வீரர் ரோஜர் பெடரர் 6வது இடத்தை தக்கவைத்துள்ளார்.

ஆண்கள் ஒற்றையர் டாப் 10

| ரேங்க் | வீரர் | புள்ளி |
|---|---|---|
| 1 | நோவாக் ஜோகோவிச் (செர்பியா) | 12,008 |
| 2 | டானில் மெட்வதேவ் (ரஷ்யா) | 9,940 |
| 3 | ரபேல் நடால் (ஸ்பெயின்) | 9,670 |
| 4 | டொமினிக் தீம் (ஆஸ்திரியா) | 8,625 |
| 5 | ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் (கிரீஸ்) | 6,765 |
| 6 | ரோஜர் பெடரர் (சுவிஸ்) | 6,375 |
| 7 | அலெக்சாண்டர் ஸ்வெரவ் (ஜெர்மனி) | 5,635 |
| 8 | ஆந்த்ரே ருப்லேவ் (ரஷ்யா) | |
| 9 | டீகோ ஸ்வார்ட்ஸ்மேன் (அர்ஜென்டினா) | 3,640 |
| 10 | மேட்டியோ பெரட்டினி (இத்தாலி) | 3,453 |

**84. அல்டிமேட் கோ–கோ அறிமுகம்**

இந்திய கோ–கோ கூட்டமைப்பு (கே.கே.எஃப்.ஐ )சார்பில் முதன்முறையாக அல்டிமேட் கோ–கோ என்ற பெயரில் தொழில்முறை லீக் போட்டிகள் இந்த ஆண்டு இறுதியில் நடத்தப்பட உள்ளது. இதில் மொத்தம் 6 அணிகள் பங்கேற்க உள்ளன. கே.கே.எஃப்ஐ மற்றும் டாபர் இந்தியா நிறுவனம் இணைந்து இந்த போட்டிகளை நடத்துகின்றன. இதற்காக டாபர் நிறுவனம் 5 ஆண்டுகளுக்கு ₹200 கோடி முதலீடு செய்கிறது. கடந்த மாதம் குருகிராமில் நடந்த சிறப்பு முகாமில், சிறந்த 130 வீரர்களின் செயல்திறன் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மாநில சங்கங்களில் இருந்தும் வீரர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இந்த தொடரை அடுத்த 5 ஆண்டுகளுக்கு ஒளிபரப்பும் உரிமையை சோனி குழுமம் பெற்றுள்ளது.

**84. சமூக செயற்பாட்டாளரும், எழுத்தாளருமான ஹர்ஷ் மந்தர் எழுதிய 'லாக்கிங் டவுன் தி புவர்: தி பாண்டமிக் அண்ட் இந்தியாஸ் மாரல் சென்டர்' (Locking Down the Poor: The Pandemic and India's Moral Centre) என்ற ஆங்கில நூல் சென்னையில் இன்று (17.03.2021) வெளியிடப்படுகிறது.**

**85. நாடு முழுவதும் தினமும் உருவாகும் 146 டன் கரோனா மருத்துவக் கழிவுகள்: நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தகவல்**

நாடாளுமன்ற மாநிலங்களவையில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு மத்திய சுற்றுச்சூழல் துறை இணை அமைச்சர் பபுல் சுப்ரியோ அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் கரோனா வைரஸ் பரிசோதனை, நோயாளிகளை தனிமைப்படுத்துதல் மற்றும் சிகிச்சை அளித்தல் மூலம் தினமும் 146 டன் மருத்துவ கழிவுகள் உருவாவதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரிய புள்ளி விவரம் கூறுகிறது. கடந்த 2020–ம் ஆண்டு கரோனா பாதிப்பு உச்சத்தில் இருந்த காலகட்டத்தில் தினமும் சுமார் 616 டன் கழிவுகள் உருவானதாகவும் அந்த புள்ளி விவரம் கூறுகிறது.

அதேநேரம், இந்தக் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுவதை உறுதி செய்வதற்காக மாசு கட்டுப்பாட்டு வாரியம் விதிமுறைகளை வகுத்துள்ளது. மருத்துவக் கழிவு நிர்வாகவிதிகள் 2016–ன்படி, மாநில மற்றும்யூனியன் பிரதேச அரசுகள், மருத்துவக் கழிவுகளை பாதுகாப்பாகஅகற்றுவது மற்றும் சுத்திகரிப் பதற்கான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டியது அவசியம். இதன்படி, மாநில மாசு கட்டுப்பாட்டுவாரியங்கள் 202 பொது மருத்துவக் கழிவு சுத்திகரித்தல் மற்றும் அகற்றும் அமைப்புகளுக்கு அனுமதி வழங்கி உள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**86. பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஏப்ரலில் இந்தியா வருகை**

பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் வரும் ஏப்ரல் மாத இறுதியில் இந்தியா வருகை தரவுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

பிரிட்டன் பிரதமராக போரிஸ் ஜான்சன் கடந்த 2019–ம் ஆண்டு ஜூலை மாதம் பதவியேற்றார். பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டது முதலாக ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டனை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையில் அவர் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். இதன் தொடர்ச்சியாக, கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் அதிகாரப்பூர்வமாக வெளியேறியது.

இதையடுத்து, பிரிட்டனின் வர்த்தக நடவடிக்கைகளை முடுக்கிவிடும் விதமாக, வளர்ந்த நாடுகளுடன் அந்நாட்டு அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில், இந்தியாவுக்கு

கடந்த ஜனவரி மாதம் போரிஸ் ஜான்சன் வருகை தருவதாக இருந்தார். இந்தியக் குடியரசு தின விழாவில் பங்கேற்றுவிட்டு இருதரப்பு உறவுகள் குறித்து பிரதமர் நரேந்திர மோடியுடன் அவர் ஆலோசனை நடத்துவதாக இருந்தது. ஆனால், பிரிட்டனில் உருமாறிய கரோனா பரவல் அதிகரித்ததை அடுத்து இந்திய சுற்றுப்பயணத்தை போரிஸ் ஜான்சன் தற்காலிகமாக ரத்து செய்தார்.

இந்நிலையில், வரும் ஏப்ரல்மாத இறுதியில் போரிஸ் ஜான்சன் இந்தியா வரவுள்ளதாக பிரிட்டன் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்த சுற்றுப்பயணத்தின்போது இருதரப்பு வர்த்தக உறவுகள், பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து பிரதமர் நரேந்திர மோடியுடன் போரிஸ் ஜான்சன் ஆலோசிக்கவுள்ளதாக பிரிட்டன் அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பிரிட்டன் அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகிய பின்னர், போரிஸ் ஜான்சன் மேற்கொள்ளும் பெரிய சர்வதேசப் பயணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அவர் ஏப்ரல் இறுதியில் இந்தியா வருவதற்கான ஏற்பாடுகளை அந்நாட்டு அரசு முடுக்கிவிட்டுள்ளது. பிரெக்ஸிட் வெளியேறுதலுக்குப் பின்னர் பிரிட்டன் வர்த்தக தொடர்புகளை விரிவுபடுத்த அதுவும் குறிப்பாக ஆசிய, பசிபிக் பிராந்தியத்துடன் விரிவுபடுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆஸ்திரேலியா, கனடா, சிலி, ஜப்பான், மெக்ஸிகோ மற்றும் வியட்நாம் உள்ளிட்ட 11 பசிபிக் ரிம் நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிய–பசிபிக் சுதந்திர வர்த்தக தொகுதியான டிரான்ஸ்–பசிபிக் கூட்டாண்மை (சிபிடிபிபி) இல் சேர பிரிட்டன் கடந்த மாதமே விருப்பம் தெரிவித்திருந்தது. அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டது. அதேபோல் ஆசியான்(ASEAN) கூட்டமைப்பில் ஆலோசகராக இணைய விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்துள்ளது. இந்நிலையில் பிரிட்டன் பிரதமரின் இந்திய வருகை முக்கியத்துவம் பெறுகிறது.

**87. இந்திரா நூயி சுயசரிதை – 'மை லைப் இன் புல்'**

'பெப்சி' நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்த, சென்னையை பூர்விகமாக உடைய இந்திரா நூயி (65 வயது) வணிக நிறுவன செயல்பாடுகளில், சர்வதேச புகழ் பெற்றவர். இவர், தன் வாழ்க்கை மற்றும் பணி குறித்த தகவல்களை, 'மை லைப் இன் புல்' என்ற பெயரில், சுயசரிதை புத்தகமாக எழுதியுள்ளார். இந்த புத்தகம், செப்டம்பர் 28, 2021 இல் வெளியாக உள்ளது.

**88. இந்தியக் கடற்படையில் இணையும் ஐஎன்எஸ் துருவ் கப்பல்.**

எதிரி நாட்டு செயற்கைக்கோள்களைக் கண்காணிக்கவும், ஏவுகணை அச்சுறுத்தலைக் கண்டறியவும் உதவும் ஐஎன்எஸ் துருவ் கப்பல் இந்தியக் கடற்படையில் விரைவில் இணையவுள்ளது.

இந்தியப் பெருங்கடலில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், இந்தக் கப்பல் பயன்பாட்டுக்கு வருவது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ஐஎன்எஸ் துருவ் கப்பலானது முழுக்க முழுக்க உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ள 'பெருங்கடல் கண்காணிப்பு' கப்பல் ஆகும். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம் (டிஆர்டிஓ), தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் (என்டிஆர்ஓ) ஆகியவற்றால் இந்தக் கப்பல் உருவாக்கப்பட்டுள்ளது. 'இந்துஸ்தான் ஷிப்யார்ட்' நிறுவனத்தால் (சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ்) விசாகப்பட்டினத்தில் இக்கப்பல் கட்டமைக் கப்பட்டுள்ளது.

தற்போது இறுதிக்கட்ட சோதனைகளில் இருக்கும் ஐஎன்எஸ் துருவ் கப்பல் விரைவில் இந்தியக் கடற்படையில் இணையும்என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும், இதுதொடர்பான அறிவிப்புகள் அதிகாரப்பூர்வமாக வெளியாக வில்லை. ஐஎன்எஸ் துருவ் கப்பலில் அதிநவீன மின்னணு ரேடார்கள் பொருத்தப்பட்டுள்ளதால், இந்தியப் பகுதிகளைக் கண்காணிக்கும் செயற்கைக்கோள்களை எளிதில் அடையாளம் கண்டு ராணுவத்துக்கு தகவல் அளிக்க முடியும். அதுமட்டுமின்றி, இந்தியாவை நோக்கி வரும் எதிரி நாட்டு ஏவுகணைகளையும் ஐஎன்எஸ் துருவ் கப்பல் கண்டறிந்துவிடும். மேலும், இந்திய – பசிபிக் பிராந்திய நாடுகளில் பயன்படுத்தப்படும் ஏவுகணைகளின் உண்மையான திறனையும் இக்கப்பலால் மதிப்பிட முடியும். முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ள ஐ.என்.எஸ்., துருவ், 15 ஆயிரம் டன் எடை கொண்டது. இதில் அதிநவீன, 'ரேடார்' வசதிகள் உள்ளன. இதன் வாயிலாக, நம் நாட்டை கண்காணிக்கும் செயற்கைக்கோள் அலைக்கற்றைகளை எளிதில் கண்டறிந்து விடலாம்.

ஐஎன்எஸ் துருவ் கப்பல் இந்தியக் கடற்படையில் இணையும்பட்சத்தில், பெருங்கடல் கண்காணிப்பு கப்பல்களைக் கொண்ட 6–வது நாடு என்ற பெருமையை இந்தியா பெறும். தற்போது வரை அமெரிக்கா, பிரிட்டன், சீனா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் மட்டும்தான் இந்தக் கண்காணிப்பு ரக கப்பல்கள் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஐஎன்எஸ் துருவ் கப்பலால் கடற்படையின் வலிமை பல மடங்கு அதிகரிக்கும் டிஆர்டிஓ உயரதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

6. டோக்கியோவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டிக்கு இந்தியாவின் நீளம் தாண்டுதல் வீரரான முரளி ஸ்ரீசங்கர் தகுதி பெற்றுள்ளார்.

பஞ்சாப் மாநிலம் பாட்யாலாவில், 24வது பெடரேஷன் கோப்பை சீனியர் தேசிய தடகள சாம்பியன்ஷிப் நடக்கிறது. ஆண்களுக்கான நீளம் தாண்டுதலில் பங்கேற்ற கேரளாவின் முரளி ஸ்ரீசங்கர், முதல் நான்கு வாய்ப்பில் 8.02, 8.04, 8.07, 8.09 மீ., தாண்டினார். ஐந்தாவது வாய்ப்பில் அசத்திய இவர், அதிகபட்சமாக 8.26 மீ., தாண்டினார். இதன்மூலம் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார். டோக்கியோ ஒலிம்பிக் நீளம் தாண்டுதல் போட்டியில் பங்கேற்க தகுதி இலக்காக 8.22 மீ., நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தவிர் இவர், தனது சொந்த தேசிய சாதனையை முறியடித்தார். கடந்த 2018ல் இவர், 8.20 மீ., தாண்டியிருந்தது தேசிய சாதனையாக இருந்தது.

**89. ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் நிரந்தர உறுப்பினர் பதவி: போர்ச்சுகல் ஆதரவு**

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராகும் இந்தியாவின் முயற்சிக்கு போர்ச்சுகல் நாடு முழு ஆதரவு அளிக்கும் என்று சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் (ஐபியு) தலைவர் துவார்த்தே பச்சேகோ தெரிவித்தார்.

மேலும், இந்தியா தனது நலத்துக்கு மட்டுமலல்லாமல், சர்வதேச நலனிலும் அக்கறை கொண்ட நாடாக இருந்து, உலக நாடுகளுக்கு ஓர் முன்னுதாரணமாக திகழ்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

போர்ச்சுகல் நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினரான துவார்த்தே பச்சேகோ, சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைவராக சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து, 7 நாள்கள் பயணமாக இந்தியா வந்துள்ள அவர், நாடாளுமன்ற அவை நிகழ்ச்சிகளை திங்கள்கிழமை பார்வையிட்டார். இதையடுத்து, அவருக்கு மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா தலைமையில் நாடாளுமன்ற மைய மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை வரவேற்பு கொடுக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள், இரு அவையின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**இதைத் தொடர்ந்து துவார்த்தே பச்சேகோ பேசியதாவது:**

கரோனா தொற்று காலக்கட்டத்தில் சமூக, பொருளாதார ரீதியாக எவ்வாறு மீண்டு வருவது என்பது சர்வதேசத்துக்கும் சவாலாக இருந்தது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா, மற்ற நாடுகளால் மதிக்கப்படுவதோடு ஓர் முன்னுதாரணமாகவும் பார்க்கப்படுகிறது.

ஜனநாயக மாண்புகளில் இந்தியாவின் அர்ப்பணிப்புகளை நாள்தோறும் காணமுடியும். தனது நலத்துக்கு மட்டுமல்லாமல், சர்வதேச நலனிலும் அக்கறை கொண்ட நாடாக திகழ்கிறது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ் இந்தியா, பொருளாதாரத்திலும் சமூக வளர்ச்சியிலும் சாதனை புரிந்துள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்சில் சீர்திருத்தத்தை போர்ச்சுகல் வரவேற்கிறது. அதில் நிரந்தர உறுப்பினராகும் இந்தியாவின் முயற்சிக்கு போர்ச்சுகல் முழு ஆதரவை அளிக்கும் என்றார் அவர்.

**90. சீன தடுப்பூசி செலுத்திக்கொண்டால்தான் அனுமதி: இந்தியா உள்பட 20 நாட்டினருக்கு நிபந்தனை**

இந்தியா உள்பட 20 நாடுகளைச் சோ்ந்தவா்கள் சீனா திரும்ப வேண்டுமானால் அந்நாட்டு தடுப்பூசியை செலுத்திக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீனாவில் 23,000 இந்திய மாணவா்கள் தங்கி படித்து வந்தனா். அவா்களில் பெரும்பாலானவா்கள் மருத்துவம் பயின்று வந்தனா். இதுதவிர நூற்றுக்கணக்கான இந்தியா்கள் பணிபுரிந்து வந்தனா். கடந்த ஆண்டு கரோனா தீநுண்மி பரவத் தொடங்கியதால் அவா்கள் அனைவரும் இந்தியா திரும்பினா். கரோனா பரவல் காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால் அவா்கள் மீண்டும் சீனா திரும்ப முடியாமல் போனது.

அவா்கள் மீண்டும் சீனா திரும்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்நாட்டிடம் இந்திய தூதரகமும், மாணவா்களும் தொடா்ந்து வலியுறுத்தி வந்தபோதிலும், அதுகுறித்து சாதகமான பதில் எதையும் சீனா தெரிவிக்கவில்லை.

இந்நிலையில் சீனா திரும்ப விரும்பும் இந்தியா்கள் அந்நாட்டின் கரோனா தடுப்பூசியை செலுத்திக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதுதொடா்பான அறிவிப்பை தில்லியில் உள்ள சீன தூதரகம் வெளியிட்டுள்ளது.

ஆனால் சீன தடுப்பூசி இந்தியாவில் கிடைப்பதில்லை. அந்தத் தடுப்பூசிகளை எவ்வாறு பெறுவது என்பதை தனது அறிவிப்பில் சீன தூதரகம் தெரிவிக்கவில்லை.

சீன தடுப்பூசியை செலுத்திக்கொள்வது 20 நாடுகளைச் சோ்ந்தவா்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும், அவா்களில் இந்தியா்களும் அடங்குவா் என்றும் சீன அரசு நாளிதழான 'குளோபல் டைம்ஸ்' தெரிவித்துள்ளது.

**91. பின்தங்கியோா் பட்டியலை நாடாளுமன்றம் மட்டுமே உருவாக்க முடியுமெனில் மராத்தா இடஒதுக்கீடு செல்லாது: உச்சநீதிமன்றம் கருத்து (16.03.2021)**

சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கிய பிரிவினரின் மத்திய பட்டியலை நாடாளுமன்றம் மட்டுமே உருவாக்க முடியும் என்ற வாதம் ஏற்றுக்கொள்ளப்படுமானால், மராத்தா சமூகத்தினருக்கு இடஒதுக்கீடு அளிக்கும் சட்டத்துக்கு மகாராஷ்டிர மாநில அரசு ஒப்புதல் அளிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை கருத்து தெரிவித்தது.

மகாராஷ்டிர மாநிலத்தில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மராத்தா சமூகத்தினருக்கு இடஒதுக்கீடு அளிக்கும் வகையில், கடந்த 2018-ஆம் ஆண்டு 'சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கிய வகுப்பினருக்கான சட்டம் 2018 (எஸ்இபிசி)' என்ற சட்டத்தை மாநில அரசு இயற்றியது. அதை எதிா்த்து மும்பை உயா்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த உயா்நீதிமன்றம், மாநில அரசின் இடஒதுக்கீடு சட்டத்தை ஏற்றுக்கொண்டது.

இதை எதிா்த்து உச்சநீதிமன்றத்தில் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதில் ஒரு மனுவில், 'மகாராஷ்டிரத்தில் இயற்றப்பட்டுள்ள எஸ்இபிசி சட்டம், உச்சநீதிமன்றம் ஏற்கெனவே நிா்ணயித்துள்ள 50 சதவீத இடஒதுக்கீடு வரம்பை மீறுகிறது' என்று குறிப்பிடப்பட்டது. இந்த மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம், மகாராஷ்டிர மாநிலம் அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த தடை விதித்து, மனுக்கள் மீதான விசாரணையை 5 நீதிபதிகள் அமா்வுக்கு மாற்றி உத்தரவிட்டது.

அதன்படி, இந்த வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் அசோக் பூஷண், எல்.நாகேஸ்வரராவ், எஸ்.அப்துல் நசீா், ஹேமந்த் குப்தா, எஸ்.ரவீந்திர பட் ஆகியோா் அடங்கிய அமா்வு முன்பு அண்மையில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் நீதிபதிகள், மாநிலங்களின் சட்டம் இயற்றும் அதிகாரத்தை சட்டப் பிரிவு 342ஏ பாதிக்கிறதா? என்பன உள்ளிட்ட 5 கேள்விகளை எழுப்பி, அனைத்து மாநிலங்களும் பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்து கடந்த 8-ஆம் தேதி உத்தரவிட்டனா்.

இந்த வழக்கு திங்கள்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, பல்வேறு மாநிலங்கள் சாா்பில் ஆஜரான வழக்குரைஞா்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், இந்த விவகாரத்தில் அனைத்து மாநிலங்களும் எழுத்துபூா்வமான பதிலை சமா்ப்பிக்க ஒரு வார கால அவகாசம் அளித்து நீதிபதிகள் உத்தரவிட்டனா்.

இந்த வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதி அசோக் பூஷண் தலைமையிலான 5 நீதிபதிகள் அமா்வு முன்பு செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது ஆஜரான மூத்த வழக்குரைஞா் கோபால் சங்கரநாராயணன், '102-ஆவது அரசமைப்பு சட்டத் திருத்தத்தின்படி, சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கிய பிரிவினரின் மத்திய பட்டியலை (எஸ்இபிசி) நாடாளுமன்றம் மட்டுமே உருவாக்க முடியும். இந்த அரசமைப்பு சட்ட திருத்தத்துக்குப் பின்னா்தான், மராத்தா சமூகத்தினருக்கு இடஒதுக்கீடு அளிக்கும் சட்டத்தை மகாராஷ்டிர அரசு இயற்றியிருக்கிறது. எனவே, இந்த சட்டத்தை அனுமதிக்க முடியுமா என்பது பரிசீலிக்கப்பட வேண்டும்' என்றாா்.

இதைக் கேட்ட நீதிபதிகள், 'எஸ்இபிசி பட்டியலை நாடாளுமன்றம் மட்டுமே உருவாக்க முடியும் என்ற வாதம் ஏற்றுக்கொள்ளப்படுமானால், மராத்தா சமூகத்தினருக்கு இடஒதுக்கீடு அளிக்கும் சட்டத்துக்கு மகாராஷ்டிர மாநில சட்டப்பேரவை ஒப்புதல் அளிக்க முடியாது' என்று கருத்து தெரிவித்தனா்.

**92. இந்தியா-அமெரிக்கா நிதியமைச்சா்கள் தொலைபேசியில் பேச்சு**

அமெரிக்க நிதியமைச்சா் ஜேனட் யெல்லன், மத்திய நிதியமைச்சா் நிா்மலா சீதாராமனுடன் தொலைபேசி வாயிலாகப் பேச்சுவாா்த்தை நடத்தினாா்.

அமெரிக்காவின் புதிய அதிபராக ஜோ பைடன் கடந்த ஜனவரி 20-ஆம் தேதி பொறுப்பேற்றாா். அமெரிக்க ரிசா்வ் வங்கியின் முன்னாள் தலைவரான ஜேனட் யெல்லனை நிதியமைச்சராக அதிபா் பைடன் நியமித்தாா். அவா் அமெரிக்காவின் முதல் பெண் நிதியமைச்சா் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மத்திய நிதியமைச்சா் நிா்மலா சீதாராமனை திங்கள்கிழமை தொலைபேசி வாயிலாகத் தொடா்புகொண்டு ஜேனட் யெல்லன் பேச்சுவாா்த்தை நடத்தினாா். நிதியமைச்சா் நிா்மலா சீதாராமனுடன் அவா் உரையாடுவது இதுவே முதல் முறையாகும்.

இந்தப் பேச்சுவாா்த்தை தொடா்பாக, அமெரிக்க நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'கரோனா தொற்று பரவலில் இருந்து விரைவில் மீள்வது, சமத்துவமின்மைக்கு எதிரான போராட்டம், பருவநிலை மாற்றம் உள்ளிட்ட விவகாரங்களில் நெருங்கிப் பணியாற்றுவது தொடா்பாக தலைவா்கள் இருவரும் விவாதித்தனா்.

கரோனா தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்காவின் முக்கிய கூட்டாளியாக இந்தியா விளங்கி வருவதற்கு ஜேனட் யெல்லன் பாராட்டு தெரிவித்தாா். பரஸ்பர விவகாரங்களில் இருதரப்பு, பலதரப்பு ரீதியில் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கு ஆா்வமுடன் உள்ளதாக அவா் தெரிவித்தாா்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பன்னாட்டு அமைப்புகளில் ஒத்துழைப்பு: பேச்சுவாா்த்தை குறித்து மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட சுட்டுரைப் பதிவுகளில், 'சா்வதேச பொருளாதார விவகாரம் குறித்து ஜேனட் யெல்லனுடன் நிதியமைச்சா் நிா்மலா சீதாராமன் விவாதித்தாா். உலக நாடுகளுக்கு கரோனா தடுப்பூசியை விநியோகிப்பதற்காக இந்தியாவுக்கு ஜேனட் பாராட்டு தெரிவித்தாா்.

கரோனா தொற்று பரவலால் பாதிக்கப்பட்ட அமெரிக்காவின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக சுமாா் ரூ.135 லட்சம் கோடி மதிப்பிலான திட்டத்தை வடிவமைத்ததற்காக அந்நாட்டு நிதியமைச்சரை நிா்மலா சீதாராமன் பாராட்டினாா். ஜி20 உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகளில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு இருவரும் உறுதியேற்றனா்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**93. பில்லி ஜீன் கிங் கோப்பை டென்னிஸ்: அங்கிதா, சானியாவுடன் இந்திய அணி**

பில்லி ஜீன் கிங் கோப்பை உலக குரூப் பிளே-ஆப் சுற்றில் லாத்வியாவுக்கு எதிரான ஆட்டத்துக்காக அங்கிதா ரெய்னா, சானியா மிா்ஸா உள்ளிட்டோா் அடங்கிய இந்திய அணி செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டது.

அங்கிதா, சானியா தவிா்த்து கா்மான் கௌா் தண்டி, ஜீல் தேசாய், ருதுஜா போசலே ஆகியோா் இந்திய அணியில் சோ்க்கப்பட்டுள்ளனா். கடந்த சீசனில், விளையாடுவோா் பட்டியலில் இருந்த ரியா பாட்டியா இந்த சீசனில் ரிசா்வ் பிளேயராக நியமிக்கப்பட்டுள்ளாா். இரட்டையா் பிரிவுக்காக அனுபவமிக்க சானியா மிா்ஸா சோ்க்கப்பட்டுள்ளாா்.

சா்வதேச தரவரிசையில் 359-ஆவது இடத்தில் இருக்கும் ரியாவை விடுத்து, 614-ஆவது இடத்திலிருக்கும் ஜீல் தேசாயை நியமித்தது குறித்த கேள்விக்கு தோ்வுக் குழு உறுப்பினா் ஒருவா், 'சமீபத்திய ஆட்டங்களில் இருவரது செயல்பாடுகளின் அடிப்படையிலேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது' என்றாா்.

லாத்வியாவின் ஜுா்மாலா நகரில் ஏப்ரல் 16 முதல் 2 நாள்களுக்கு இந்தியா-லாத்வியா அணிகளின் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. லாத்வியா அணியில் முன்னாள் பிரெஞ்சு ஓபன் சாம்பியன் ஜெலினா ஒஸ்டாபென்கா, அமெரிக்க ஓபனில் அரையிறுதி வரை முன்னேறிய அனஸ்தாசிஜா செவஸ்டோவா ஆகியோா் இடம்பெறுவதால் இந்த சுற்று இந்தியாவுக்கு சவால் அளிக்கும் வகையில் இருக்குமெனத் தெரிகிறது.

**94. தேசிய ஜூனியா் மற்றும் இளையோா் டேபிள் டென்னிஸ் போட்டியில் முறையே ஸ்வஸ்திகா கோஷ், தியா சிதாலே ஆகியோா் செவ்வாய்க்கிழமை சாம்பியன் ஆகினா்.**

முன்னதாக இளையோா் பிரிவில் நடைபெற்ற அரையிறுதிகளில் மகாராஷ்டிரத்தின் தியா சிதாலே 11-8, 11-8, 11-4, 11-9 என்ற செட்களில் உத்தர பிரதேசத்தின் ராதாபிரியா கோயலை வென்றாா். கா்நாடகத்தின் யஷஸ்வினி கோா்படே 7-11, 11-3, 11-6, 11-8, 11-4 என்ற செட்களில் மகாராஷ்டிரத்தின் அனன்யா பாசக்கை வீழ்த்தினாா்.

பின்னா் நடைபெற்ற இறுதிச்சுற்றில் தியா சிதாலே 8-11, 11-7, 11-8, 10-12, 5-11, 11-8, 11-2 என்ற செட்களில் யஷஸ்வினி கோா்படேவை வீழ்த்தி சாம்பியன் ஆனாா்.

அதேபோல் ஜூனியா் பிரிவில் நடைபெற்ற அரையிறுதிச் சுற்றுகளில் தில்லியின் ஸ்வஸ்திகா கோஷ் 13–11, 11–6, 9–11, 5–11, 11–3, 11–5 என்ற செட்களில் தில்லியைச் சோ்ந்த லக்ஷிதா நரங்கை வென்றாா். ஹரியாணாவின் சுஹானா சைனி 8–11, 5–11, 11–6, 11–8, 11–8, 11–8, 11–4 என்ற செட்களில் தமிழகத்தின் நித்யஸ்ரீ மணியை வீழ்த்தினாா். இறுதிச்சுற்றில் ஸ்வஸ்திகா கோஷ் 7–11, 11–13, 11–7, 11–4, 11–6, 11–9 என்ற செட்களில் சுஹானா சைனியை தோற்கடித்து சாம்பியன் ஆனாா்.

**95. உலகின் மிகவும் மாசடைந்த 30 நகரங்களில் 22 இந்திய நகரங்கள்!**

உலகின் மிகவும் மாசடைந்த 30 நகரங்களில் 22 நகரங்கள் இந்தியாவில் இருப்பதாக சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஐ ஐகியூஏர் விஷுவல் நிறுவனம் என்ற நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஆய்வு செய்யும் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஐ ஐகியூஏர் விஷுவல் நிறுவனம் 'உலக காற்றின் தர அறிக்கை, 2020' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றைெள வெளியிட்டுள்ளது.

**அதன் விவரம்:** உலகில் உள்ள நாடுகளில் உள்ள 106 முக்கிய நகரங்களில் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்ததில், "மிகவும் மாசடைந்த நகரங்களின் தரவரிசையில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது, உலகளவில் மிகவும் மாசுபட்ட முதல் 30 நகரங்களில் 22 இடங்கள் உள்ளன." அதிக மாசடைந்த நகரங்களில் சீனாவில் சின்ஜியாங் மற்றும் ஒன்பது இந்திய நகரங்கள் இடம்பெற்றுள்ளன என்று அந்த அறிக்கை கூறப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகவும் மாசடைந்த நகரங்களில் 10 ஆவது மாசுபட்ட நகரமாக இந்தியாவின் தலைநகர் தில்லி திகழ்கிறது. 2019 முதல் 2020 வரை தில்லியின் காற்றின் தரம் ஏறக்குறைய 15 சதவீதம் அதிகரித்துள்ளது. உலகின் இரண்டாவது மாசுபட்ட நகரமாக காசியாபாத் உள்ளது என்று அறிக்கை கூறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாசடைந்த நகங்களில் பட்டியலில், காசிதாபாத், புலந்த்சஹார், பிஸ்ராக் ஜலாபூர், நொய்டா, கிரேட்டர் நொய்டா, கான்பூர், லக்னௌ, மீரத், ஆக்ரா மற்றும் உத்தரப்பிரேசத்தில் முசாபர் நகர், ராஜஸ்தானில் பிவாரி, பரிதாபாத், ஜிந்த், ஹிஸார், ஃபதேபாத், பந்த்வாரி, குருகிராம், யமுனா நகர், ஹரியானாவில் ரோஹ்டக் மற்றும் தாருஹேரா, பிகாரில் முசாபர்பூர் ஆகிய நகங்கள் இடம் பெற்றுள்ளன.

மனித செயல்பாடுகளால் 2021 ஆம் ஆண்டில் காற்று மாசுபாடு அதிகரிப்பதை மீண்டும் காண முடிகிறது. காற்று மாசுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கு அவசர நடவடிக்கை சாத்தியமானது மற்றும் அவசியமானது என்பதை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுவதாக நாங்கள் நம்புகிறோம். இது உலகின் மிகப்பெரிய சுற்றுச்சூழல் சுகாதார அச்சுறுத்தலாக உள்ளது, "என்று ஐ ஐகியூஏர் விஷுவல் நிறுவனம் தலைமை நிர்வாக அதிகாரி பிராங்க் ஹேம்ஸ் கூறியுள்ளார்.

இந்த பட்டியலில் தமிழகத்தை சேர்ந்த எந்த நகரமும் இடம்பெறவில்லை என்பது ஆறுதலுக்குரிய செய்தியாகும்.

**96. உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கு நிதி நிறுவனம்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

உள்கட்டமைப்பு வளா்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிக்கும் வகையில், நீண்டகால மூலதனத்தை ஈா்க்கும் 'மேம்பாட்டு நிதி நிறுவனம் (டிஎஃப்ஐ)' ஒன்றை அமைப்பதற்கான மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை செவ்வாய்க்கிழமை ஒப்புதல் அளித்தது.

இந்த நிதி நிறுவனத்தில் வரும் 2025–ஆம் ஆண்டிற்குள் ரூ. 111 லட்சம் கோடியை முதலிடு செய்ய மத்திய அரசு உத்தேசித்திருக்கிறது.

மத்திய நிதியமைச்சா் நிா்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் கடந்த பிப்ரவரி 1–ஆம் தேதி தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் வெளியிட்ட இந்த அறிவிப்பை செயல்படுத்தும் வகையில், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மேம்பாட்டு நிதி நிறுவனம் ரூ. 20,000 கோடி ஆரம்பகட்ட முதலீட்டுடன் தொடங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருந்தது.

இந்த நிலையில், மத்திய அமைச்சரவை கூட்டத்துக்கு பிறகு செய்தியாளா்களைச் சந்தித்த மத்திய நிதியமைச்சா் நிா்மலா சீதாராமன் கூறியதாவது: இந்த மேம்பாட்டு நிதி நிறுவனத்துக்கு மத்திய அரசு சாா்பில் ஆரம்பகட்ட முதலீடு வழங்கப்படும். இந்த நிறுவனம், நிதி மேலாண்மை நடவடிக்கைகள் மூலம் ஒரு சில ஆண்டுகளில் ரூ. 3 லட்சம் கோடி வரை மூலதனத்தை ஈா்க்கும் என எதிா்பாா்க்கப்படுகிறது. இந்த மேம்பாட்டு நிதி நிறுவனத்துக்கு 10 ஆண்டுகளுக்கு வரிச் சலுகையும் அளிக்கப்பட உள்ளது. ஓய்வூதிய நிதி, தங்க முதலீடு நிதி உள்ளிட்ட மிகப் பெரிய முதலீடு நிதிகளையும், தேசிய உள்கட்டமைப்பு முதலீடு நிதி திட்டத்தின் கீழ் இந்த நிறுவனம் ஈா்க்கும் என்ற எதிா்பாா்க்கப்படுகிறது.

இந்த மேம்பாட்டு நிதி நிறுவனம் 50 சதவீத அலுவல் சாரா இயக்குநா்கள் உள்பட அனுபவம் வாய்ந்த உறுப்பினா்களைக் கொண்ட நிா்வாகக் குழுவால் நிா்வகிக்கப்படும். வாரியத்தின் தலைமைப் பொறுப்பிலும், மிகுந்த நிபுணத்தவம் பெற்ற நபரே நியமிக்கப்படுவாா். இயக்குநா்கள் பொறுப்புக்கு சிறந்த அனுபவம் வாய்ந்த நபா்களை ஈா்க்கும் வகையில், மிகச் சிறந்த ஊதியம் அவா்களுக்கு நிா்ணயிக்கப்படும் என்று அவா் கூறினாா்.

மேலும், இதுபோன்ற மேம்பாட்டு நிதி நிறுவனத்தை அமைப்பதற்கான முயற்சிகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டது என்று ஐடிபிஐ வங்கியை சுட்டிக்காட்டி கூறிய மத்திய நிதியமைச்சா், 'இந்த வங்கிகள் பல்வேறு காரணங்களால் அவற்றின் வா்த்தக நடைமுறையை மாற்றிக்கொண்டுவிட்டன. அதன் பிறகு, வங்கிகளை இதுபோன்ற ஆபத்தான நீண்டகால நிதி மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது' என்று கூறினாா்.

**97. கருக்கலைப்புக்கான உச்ச வரம்பை 24 வாரமாக உயா்த்த அனுமதிக்கும் மசோதா: நாடாளுமன்றம் ஒப்புதல்**

சிறப்புப் பிரிவுகளின் கீழ் பெண்களுக்கு கருக்கலைப்பு செய்வதற்கான உச்ச வரம்பை 24 வாரங்களாக உயா்த்த அனுமதிக்கும் மசோதா நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்டது.

'மருத்துவ கருக்கலைப்பு (திருத்த) மசோதா, 2020' என்ற இந்த மசோதாவுக்கு மக்களவையில் ஓராண்டுக்கு முன்னரே ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்ட நிலையில், மாநிலங்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் மாநிலங்களவையில் செவ்வாய்க்கிழமை ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்த சட்ட மசோதாவில் சில திருத்தங்களை முன்வைத்த உறுப்பினா்கள், அதை மாநிலங்களவை தோ்வுக் குழு பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனா். இருந்தபோதும், இந்த சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதாக அவை துணைத் தலைவா் ஹரிவன்ஷ் நாராயண் சிங் அறிவித்தாா்.

இதன் மூலம், பாலியல் ரீதியில் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுமிகள் உள்ளிட்ட சிறப்புப் பிரிவுகளின்கீழ் பெண்ணின் கருவை கலைக்க அனுமதிக்கும் உச்ச வரம்பு இதுவரை 20 வாரங்கள் என்றிருந்தது, இனி 24 வாரங்களாக உயர உள்ளது.

இந்த மசோதா குறித்து அவையில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சா் ஹா்ஷ் வா்தன் கூறுகையில், 'கருக்கலைப்பு தொடா்பான சா்வதேச நடைமுறைகளை ஆய்வு செய்து, விரிவான ஆலோசனைகளை மேற்கொண்ட பிறகே இந்த மசோதாவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பிரதமா் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில், பெண்களை பாதிக்கக் கூடிய எந்தவொரு சட்டத்தையும் நாங்கள் உருவாக்க மாட்டோம். பெண்களின் கண்ணியத்தை பாதுகாக்கும் நோக்கத்துடனே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்றாா்.

**98. இலங்கையின் கடற்படைக்கு சுமாா் ரூ.81 லட்சம் மதிப்பிலான பயிற்சிக் கருவிகளை இந்தியக் கடற்படை வழங்கியது.**

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அந்நாட்டுக்கான இந்தியத் தூதா் கோபால் பாக்லே கடந்த ஞாயிற்றுக்கிழமை சுற்றுப்பயணம் மேற்கொண்டாா். அப்போது, ரூ.81 லட்சம் மதிப்பிலான பயிற்சிக் கருவிகளை இலங்கையிடம் அவா் அளித்தாா்.

இதற்காக திரிகோணமலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இலங்கை கடற்படையின் கிழக்கு பகுதி தளபதியிடம் அக்கருவிகள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டன.

இது தொடா்பாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்டஅறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: பிராந்திய நாடுகளின் கடற்படையை வலுப்படுத்துவதற்கு இந்தியக் கடற்படை உறுதி கொண்டுள்ளது. இதைக் கடந்த 2019–ஆம் ஆண்டில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்தியக் கடற்படையின் தலைமைத் தளபதி கரம்வீா் சிங் உறுதிப்படுத்தியிருந்தாா்.

இலங்கை கடற்படைக்குத் தேவையான பயிற்சிக் கருவிகள் வழங்கப்படும் என்றும் அவா் உறுதியளித்திருந்தாா். அதைத் தொடா்ந்து, நீருக்குள் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகள், நீருக்குள் இருப்பவரைத் தொடா்பு கொள்ள உதவும் தொலைபேசிகள், ஆழ்கடல் வெப்பநிலையை அளக்க உதவும் கருவிகள் உள்ளிட்டவை கடந்த ஆண்டில் இந்தியா சாா்பில் இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்டன.

தற்போது மேலும் சில பயிற்சிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை கடற்படை அகாதெமியின் நூலகத்துக்கு புத்தகங்களும் மின் நூல்களைப் படிக்க உதவும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நிலவும் நல்லுறவை மேம்படுத்துவதில், இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. இலங்கை கடற்படையை வலுப்படுத்துவதற்கான உதவியை இந்தியக் கடற்படை தொடா்ந்து வழங்கும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**99. கரோனா பாதிப்பின்போது உலக நாடுகளின் தேவையையும் இந்தியா பூா்த்தி செய்தது: பிரதமா்**

கரோனா பாதிப்பின்போது உள்நாட்டு சவால்களை திறம்பட சமாளித்தோடு, உலக நாடுகளின் தேவைகளையும் இந்தியா பூா்த்தி செய்தது என்று பிரதமா் நரேந்திர மோடி கூறினாா்.

பின்லாந்து பிரதமா் சன்னா மரினுடன் செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட காணொலி வழி மாநாட்டின் போது பிரதமா் இந்தக் கருத்தைத் தெரிவித்தாா்.

'இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 5.8 கோடிக்கும் அதிகமான கரோனா தடுப்பூசிகள் 70 நாடுகளை கடந்த சில வாரங்களில் சென்றடைந்துள்ளது' என்றும் பிரதமா் அப்போது கூறினாா்.

மேலும், 'வெளிப்படையான, மனிதாபிமான மற்றும் சா்வதேச சட்டத்தின் அடிப்படையில் செல்படுவதையே இந்தியாவும், பின்லாந்தும் நம்பிக்கை கொண்டுள்ளன. தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புகள், தூய்மையான எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் கல்வி உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளும் வலுவான கூட்டுறவை கொண்டிருக்கின்றன' என்று கூறிய பிரதமா் மோடி, 'இந்தியா சாா்பில் உருவாக்கப்பட்டு 121 வெப்ப பிரதேச நாடுகள் இணைந்துள்ள சூரியசக்திக்கான சா்வதேச கூட்டமைப்பிலும், பேரிடா் மீட்பு உள்கட்டமைப்புக்கான கூட்டமைப்பிலும் (சிடிஆா்ஐ) பின்லாந்து இணைய வேண்டும். அவ்வாறு இணைவது, பின்லாந்து நாட்டின் திறன் மற்றும் அனுபவத்தின் மூலம் இந்த இரு சா்வதேச அமைப்புகள் மேலும் வலுப்பெற உதவும்' என்று பின்லாந்து பிரதமரை கேட்டுக்கொண்டாா்.

பின்லாந்து பிரதமா் பேசுகையில், 'கல்வி, தொழில்நுட்பம் மற்றும் வா்த்தகம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளிடையேயான உறவை மேலும் விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன' என்று கூறினாா்.

**100. இந்தியஆயுள் காப்பீட்டு நிறுவனத்திற்கு (எல்ஐசி) 2019–20 ஆண்டில் ரூ.53,954.86 கோடி வருவாய் கிடைத்ததாக மத்திய நிதியமைச்சா் நிா்மலா சீதாராமன் மக்களவையில் தெரிவித்தாா்.**

மயிலாடுதுறை மக்களவை திமுக உறுப்பினா் எஸ்.ராமலிங்கம், பெரம்பலூா் மக்களவைத் தொகுதி இந்திய ஜனநாயகக் கட்சி உறுப்பினா் டாக்டா் பாரிவேந்தா் ஆகியோா், எல்ஐசிக்கு நாடு முழுவதும் எத்தனை கிளை அலுவலகங்கள் உள்ளன? ஊழியா்கள் எண்ணிக்கை, பாலிசிதாரா் எண்ணிக்கை மற்றும் கடந்த மூன்றாண்டுகளில் கிடைத்த வருவாய் எவ்வளவு? போன்றவை குறித்து மக்களவையில் திங்கள்கிழமை கேள்வி எழுப்பினா்.

இதற்கு மத்திய நிதியமைச்சா் மக்களவையில் அளித்த பதில் வருமாறு: எல்ஜசிக்கு நாடு முழுவதும் 4,962 அலுவலகங்கள் உள்ளன. இதில் 32,386 உயரதிகாரிகள் உள்பட 1,14,451 போ் பணியாற்றுகின்றனா். தமிழகத்தில் உள்ள 497 அலுவலங்களில் 2,181 உயரதிகாரிகள் உள்பட 8,929 ஊழியா்கள் பணியாற்றுகின்றனா். கடந்த பிப்ரவரி 28 –ஆம் தேதி வரை 21,08,37,085 போ் தனிப்பட்ட பாலிசிதாரா்கள் காப்பீடு செய்துள்ளனா். இந்த நிறுவனத்திற்கு 2019–20 ஆண்டில் மொத்தம் ரூ.53, 954.86 கோடி வரை காப்பீட்டு வருவாய் கிடைத்தது. இதில் பாலிசிதாரா்களுக்கு ரூ. 51,257.12 கோடியும், மத்திய அரசுக்கு ரூ. 2,697.74 கோடியும் கொடுக்கப்பட்டது. இதற்கு முந்தைய நிதியாண்டுகளான 2018–19, 2017–18 முறையே ரூ.53,211.91 கோடி மற்றும் ரூ. 48,436.45 கோடி காப்பீட்டு வருவாய் கிடைத்தது என்றாா் அமைச்சா்.

**101. செய்திகளுக்கு கட்டணம்: ஆஸ்திரேலிய நிறுவனத்துடன் முகநூல் ஒப்பந்தம்**

ஆஸ்திரேலியாவின் நியூஸ் காா்ப்பரேஷன் நிறுவனத்தின் ஊடகச் செய்திகளை வெளியிடுவதற்கு முகநூல் நிறுவனம் கட்டணம் செலுத்துவதற்கான ஒப்பந்தம் இரு நிறுவனங்களுக்கிடையே கையெழுத்தாகியுள்ளது.

முகநூல், கூகுள் போன்ற இணையதள பெரு நிறுவனங்கள், பிற ஊடக நிறுவனங்களின் செய்திகளை வெளியிடுவதற்குக் கட்டணம் செலுத்த வேண்டும் என்று ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்ட 3 வாரங்களுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. ஏற்கெனவே, கூகுள் நிறுவனத்துடனும் இதே போன்ற ஒப்பந்தத்தை நியூஸ் காா்ப்பரேஷன் மேற்கொண்டது நினைவுகூரத்தக்கது.

**102. அஸ்ட்ராஸெனகா தடுப்பூசியால் ஆபத்து இல்லை**

பிரிட்டனின் ஆக்ஸ்போா்டு–அஸ்ட்ராஸெனகா கரோனா தடுப்பூசியை செலுத்துக் கொள்வதால் ரத்தக் கட்டு ஏற்படும் அபாயம் இல்லை என்று ஐரோப்பிய மருந்துகள் ஒழுங்காற்று அமைப்பு (ஈஎம்ஏ) திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

அந்தத் தடுப்பூசியை செலுத்திக் கொள்வதால் ரத்தக் கட்டு ஏற்படுவதாக தகவல்கள் வெளியானதைத் தொடா்ந்து, உலகின் பல்வேறு நாடுகள் அடுத்தடுத்து அதன் பயன்பாட்டை நிறுத்திவைத்து வரும் சூழலில் ஈஎம்ஏ இவ்வாறு கூறியுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் தலைவா் எமா் கூக் செவ்வாய்க்கிழமை தெரிவித்ததாவது: ஐரோப்பிய பிராந்தியத்தில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கானவா்கள் ரத்தக் கட்டுப் பிரச்னையை சந்தித்து வருகின்றனா். பல்வேறு காரணங்களால் அவா்களுக்கு ரத்தக் கட்டு ஏற்பட்டு வருகிறது.

ஆனால், தற்போது சிலருக்கு ரத்தக் கட்டு ஏற்படுவதற்கும் அவா்களுக்கு அஸ்ட்ராஸெனகா தடுப்பூசி செலுத்தப்பட்டதற்கும் தொடா்பிருப்பதாகத் தெரியவில்லை.

அந்தத் தடுப்பூசியின் தன்னாா்வலா்களுக்குச் செலுத்தி மிகக் கடுமையாகப் பரிசோதித்தபோது, அதன் பக்கவிளைவாக யாருக்கும் ரத்தக் கட்டு ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

அஸ்ட்ராஸெனகா தடுப்பூசியால் ரத்தக் கட்டு ஏற்படுவதாகக் கூறப்படுவது குறித்து தீவிர ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதைய சூழலில், அந்தத் தடுப்பூசி கரோனா பரவலைத் தடுத்து நிறுத்துவற்கு பெரிதும் உதவும் என்பதே எங்களது நிலைப்பாடு.

அதனால் கிடைக்கக் கூடிய அனுகூலத்தை ஒப்பிடுகையில், அதன் அபாயம் மிகவும் குறைவே ஆகும் என்றாா் அவா்.

பிரிட்டனின் ஆக்ஸ்ஃபோா்டு பல்கலைக்கழகம் மற்றும் அஸ்ட்ராஸெனகா நிறுவனம் இணைந்து உருவாக்கியுள்ள கரோனா தடுப்பூசி, இந்தியா உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளில் பொதுமக்களுக்கு பரவலாக செலுத்தப்பட்டு வருகிறது.

உலக சுகாதார அமைப்பின் முன்முயற்சியில், பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கும் கரோனா தடுப்பூசி சரிசமமாகச் சென்றடையச் செய்வதற்காக தொடங்கப்பட்ட கோவாக்ஸ் திட்டத்தின் கீழ் இந்தத் தடுப்பூசிகள் ஏராளமாக வாங்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழலில், அஸ்ட்ராஸெனகா தடுப்பூசிகளைப் பயன்படுத்துவதால் பலருக்கு ரத்தக் கட்டு ஏற்படுவதாக தகவல்கள் வெளியாகின.

அதனைத் தொடா்ந்து, உலகின் பல்வேறு நாடுகள் அந்தத் தடுப்பூசி பயன்பாட்டை தற்காலிகமாக நிறுத்திவைத்தன.

ஏற்கெனவே, ஐரிஷ் குடியரசு, டென்மாா்க், நாா்வே, பல்கேரியா, ஐஸ்லாந்து, நெதா்லாந்து உள்ளிட்ட நாடுகள் அந்தத் தடுப்பூசிப் பயன்பாட்டை நிறுத்திவைத்துள்ள நிலையில், அந்தப் பட்டியலில் ஸ்வீடனும் செவ்வாய்க்கிழமை இணைந்தது.

இதனால், கரோனா தடுப்பூசி திட்டங்களில் பின்னடைவு ஏற்படும் என்ற அச்சம் எழுந்தது. இந்தச் சூழலில், ஐரோப்பிய மருந்துகள் ஒழுங்காற்று அமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை நிலவரப்படி, உலகம் முழுவதும் 12,09,05,070 பேருக்கு கரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. அவா்களில் 26,74,728 போ் அந்த நோய்க்கு பலியாகியுள்ளனா்.

தாய்லாந்து பிரதமருக்கு அஸ்ட்ராஸெனகா தடுப்பூசி

பாங்காக், மாா்ச் 16: தாய்லாந்தில் பிரதமா் பிரதமா் பிரயுத் சான்–ஓச்சாவுக்கு ஆக்ஸ்ஃபோா்டு–அஸ்ட்ராஸெனகா தடுப்பூசி செவ்வாய்க்கிழமை செலுத்தப்பட்டது.

அந்தத் தடுப்பூசியால் ரத்தக் கட்டு ஏற்படுவதாக தகவல் வெளியானவுடன், அதன் பயன்பாட்டை தாய்லாந்துதான் முதல்முறையாக நிறுத்திவைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், தற்போது தடுப்பூசி திட்டம் மீண்டும் தொடங்கப்பட்டு, பிரதமரே அதனை செலுத்திக் கொண்டுள்ளாா்.

**103. 20 நாள்களில் 40 ஆயிரம் நில அதிர்வுகளை பதிவு செய்த ஐஸ்லாந்து**

ஐஸ்லாந்து நாட்டில் கடந்த 20 நாள்களில் மட்டும் 40 ஆயிரம் நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டின் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

பல எரிமலைகளால் சூழப்பட்ட நாடு ஐஸ்லாந்து. ஐரோப்பாவில் சிறிய தீவு நாடாக உள்ள இந்த நாட்டில் அடிக்கடி நில அதிர்வுகள் ஏற்படுவது வழக்கம்.

இந்நிலையில் கடந்த 20 நாள்களில் மட்டும் 40 ஆயிரம் முறை நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளதாக அந்நாட்டின் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. வழக்கத்திற்கு மாறாக குறுகிய காலத்தில் அதிக அளவில் நில அதிர்வுகள் பதிவாகியுள்ளதாக அந்த அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

அதிக அளவிலாக எரிமலைகள் உள்ளதால் நில அதிர்வுகளின் காரணமாக அவற்றில் வெடிப்பு ஏற்பட வாய்ப்பிருப்பதாக எண்ணி மக்கள் கலக்கமடைந்துள்ளனர்.

**104. பிரதமர் சுகாதார பாதுகாப்பு நிதியத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

ரதமர் மோடி தலைமையில், மத்திய அமைச்சரவை சமீபத்தில் கூடியது. அப்போது, சுகாதாரம் மற்றும் கல்வித் துறைக்கான கூடுதல் வரி வருவாயை சேமிக்க, பிரதமர் சுகாதார பாதுகாப்பு நிதியம் ஏற்படுத்தும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

கூடுதல் வரி

ஒரு நிதியாண்டில், இந்த நிதியத்தில் சேகரிக்கப்படும் நிதி, அதே நிதியாண்டிற்குள், கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளுக்கு செலவிடப்பட வேண்டும். தவறினால், அந்த நிதி, நிதியமைச்சக கருவூலத்தில் சேர்க்கப்பட்டு விடும். தற்போது, கல்வி மற்றும் சுகாதாரத் துறைக்கு, 4 சதவீத கூடுதல் வரி வசூலிக்கப்படுகிறது.

இந்த திட்டத்தின் பயன்கள்:

* பொது கணக்கின் கீழ், சுகாதாரத் துறைக்கு அந்தந்த நிதியாண்டிற்குள் செலவிட முடியும்.

* சுகாதாரம் மற்றும் கல்விக்கான கூடுதல் வரி வருவாய், பிரதமர் சுகாதார பாதுகாப்பு நிதியத்தில் சேர்க்கப்பட்டு, அந்தந்த துறைகளுக்கு பிரித்து அளிக்கப்படும்.

* சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின், 'ஆயுஷ்மன் பாரத் – பிரதமர் சுகாதார திட்டம் மற்றும் ஆயுஷ்மன் பாரத் – சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் சார்ந்த சிறப்பு திட்டங்களுக்கு நிதி பயன்படுத்தப்படும்.

* பேரிடர் காலங்களில் சுகாதாரம் சார்ந்த அவசர உதவிகளுக்கு பயன்படுத்தப்படும்.

வளர்ச்சி நிதி அமைப்பு:

நடப்பு நிதியாண்டு மத்திய பட்ஜெட்டில், அடிப்படை கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க, வளர்ச்சி நிதி அமைப்பு ஏற்படுத்தப்படும் என, அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 20 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில், வளர்ச்சி நிதி அமைப்பு ஏற்படுத்த, மத்திய அமைச்சரவைக் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.

**105. வீடு தேடி வரும் சுகாதார திட்டம்**

மத்திய அரசின், 'வீடு தேடி வரும் சுகாதாரம்' என்ற திட்டத்தில், புதிய சாதனையாக, ஒரே நாளில், எட்டு லட்சத்திற்கும் அதிகமான பயனாளிகளின் விபரங்கள் சரிபார்க்கப்பட்டுள்ளன.

மத்திய அரசு, 'ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா' என்ற இலவச ஆரோக்கிய பராமரிப்பு சேவை திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில், ஒரு குடும்பம், ஆண்டுக்கு, 5 லட்சம் ரூபாய் வரையிலான மருத்துவ சேவைகளை இலவசமாக பெறலாம்.

இது குறித்து, தேசிய சுகாதார ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கை:ஆயுஷ்மான் திட்டம் குறித்து, குறிப்பாக குக்கிராமங்களில் உள்ளோரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், வீடு தேடி வரும் சுகாதாரம் என்ற திட்டம், பிப்.,1ல் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தில் தகுதியானோரை அடையாளம் கண்டு இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதில், கடந்த, 14ம் தேதி, 8.35 லட்சம் பயனாளிகளின் விபரங்கள் சரிபார்க்கப்பட்டன.

இது ஒரு சாதனையாகும். தகுதியுள்ளோருக்கு, ஆயுஷ்மான் அட்டைகள் வழங்கப்படுகின்றன. அவர்களின் குடும்பம், ஆண்டுக்கு, 5 லட்சம் ரூபாய் வரையிலான மருத்துவ சேவைகளை இலவசமாக பெறலாம்.ஆயுஷ்மான் அட்டை இல்லாதோரும், குறிப்பிட்ட மருத்துவமனைகளில், உரிய விபரங்களை வழங்கி, சுகாதார சேவைகளை இலவசமாக பெற முடியும்.இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

தற்போது, பீஹார், உ.பி., ம.பி., சத்தீஸ்கர், பஞ்சாப், உத்தரகண்ட், ஜம்மு – காஷ்மீர், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களில், வீடு தேடி வரும் சுகாதார திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில், இதர மாநிலங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இந்தாண்டு, 1.2 கோடி பேருக்கு, ஆயுஷ்மான் அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளன.

**106. தேசிய தரமதிப்பீட்டு கவுன்சில் (நாக்) நடத்திய ஆய்வில் மதுரை காமராஜ் பல்கலைக்கு உயர் அந்தஸ்து (ஏ++) வழங்கப் பட்டுள்ளது.**

இந்த ஆய்வில் பாடத் திட்டம், மாணவர்கள் சேர்க்கை, ஆசிரியர்கள் தகுதி, நிர்வாகம், ஆராய்ச்சி, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்து மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் மொத்தம் 3.54 புள்ளிகள் (சி.ஜி.பி.ஏ.,) வழங்கப்பட்டு உயர் தகுதிக்கு (ஏ++) தேர்வு பெற்றது.

துணைவேந்தர் கிருஷ்ணன் கூறுகையில் "அனைவரின் ஒத்துழைப்பு, உழைப்பால் இந்த உயர் அந்தஸ்து கிடைத்தது. மொத்தம் 7 பிரிவுகளில் நடத்திய ஆய்வில் பல்கலை பாடத்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்கு முழு மதிப்பெண் கிடைத்தது" என்றார்.

**107. பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக மார்ச் 26ல் வங்கதேசம் செல்கையில் இரு நாடுகளுக்கு இடையே மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.**

அண்டை நாடான வங்கதேசத்தின் 50வது பொன்விழா சுதந்திர தினம் மார்ச் 26ல் கொண்டாடப் படுகிறது. மேலும் வங்கதேசம் உருவாக காரணமானவரும் அந்நாட்டின் தந்தை என அழைக்கப் படுபவருமான ஷேக் முஜிபுர் ரஹ்மானின் 100வது பிறந்த நாள் விழாவும் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி இன்று துவங்கி இம்மாதம் 27 வரை 10 நாட்கள் விமரிசையாக கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.இந்த கொண்டாட்டங்களில் பிரதமர் நரேந்திர மோடி, மாலத்தீவு அதிபர் இப்ராஹிம் முகமது சோல்ஹி, இலங்கை பிரதமர் மஹிந்தா ராஜபக்சே, நேபாள அதிபர் பித்யா தேவி பண்டாரி, பூட்டான் பிரதமர் லொடாய் ஷெரிங் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

மொத்தம் 10 நாள் கொண்டாட்டங்களில் வெவ்வேறு தினங்களில் தலைவர்கள் பங்கேற்கின்றனர். பிரதமர் நரேந்திர மோடி இம்மாதம் 26 மற்றும் 27ல் இரண்டு நாள் பயணமாக வங்கதேசம் செல்கிறார்.இந்த பயணம் குறித்து வங்கதேச வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல் மோமென் கூறியதாவது:

ஐந்து நாடுகளை சேர்ந்த தலைவர்கள் 10 நாட்கள் இடைவெளியில் வங்கதேசத்துக்கு இதுவரை வந்ததில்லை. எனவே வரலாற்று சிறப்புமிக்க கொண்டாட்டமாக இதை கருதுகிறோம்.பிரதமர் மோடி, வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனாவை சந்தித்து பேசுகிறார். இரு நாடுகளுக்கு இடையே 3 புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. அவை எத்துறைகள் சார்ந்தது என்பது இன்னும் இறுதி செய்யப்படவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**108. தேசிய பாதுகாப்பு படை டி.ஜி.யாக கணபதி நியமனம்**

தற்போது விமான போக்குவரத்து பாதுகாப்பு பிரிவு டி.ஜி.யாக பதவி வகிக்கும் எம்.ஏ.கணபதி, தேசிய பாதுகாப்பு படை (என்.எஸ்.ஜி.) டி.ஜி.யாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர், 1986–ம் ஆண்டு பிரிவு உத்தரகாண்ட் கேடர் ஐ.பி.எஸ். அதிகாரி ஆவார். கணபதி, வருகிற 2024–ம் ஆண்டு பிப்ரவரி 29–ந் தேதி ஓய்வு பெறும்வரை இப்பதவி வகிப்பார்.

தற்போது மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சி.ஆர்.பி.எப்.) சிறப்பு டி.ஜி.யாக உள்ள குல்தீப் சிங், அதன் டி.ஜி.யாக நியமிக்கப்படுகிறார். 1986–ம் ஆண்டு பிரிவு மேற்கு வங்காள கேடர் ஐ.பி.எஸ். அதிகாரியான குல்தீப்சிங், வருகிற 2022–ம் ஆண்டு செப்டம்பர் 30–ந் தேதி ஓய்வு பெறும்வரை சி.ஆர்.பி.எப். டி.ஜி.யாக பதவி வகிப்பார்.

**109. நஷ்டத்தில் இயங்கி வரும் பொதுத்துறை நிறுவனமான கைத்தறி ஏற்றுமதி கழகத்தை மூட மத்திய மந்திரிசபை ஒப்புதல்**

பிரதமர் மோடி தலைமையில் மத்திய மந்திரிசபை கூட்டம் நேற்று நடைபெற்றது.அதில், மத்திய பொதுத்துறை நிறுவனமான கைவினை மற்றும் கைத்தறி ஏற்றுமதி கழகத்தை மூடுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.இந்த நிறுவனம் 2015–2016 நிதியாண்டில் இருந்து நஷ்டத்தில் இயங்கி வருகிறது. நிறுவனத்தை நடத்துவதற்கு தேவையான வருமானத்தை கூட ஈட்டவில்லை. நிறுவனத்துக்கு புத்துயிரூட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதால், அதை மூட முடிவு செய்யப்பட்டது.

நிறுவனத்தில் பணியாற்றும் 59 நிரந்தர ஊழியர்களும், 6 நிர்வாக பணியாளர்களும் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று மத்திய அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

உள்கட்டமைப்பு முதலீடு

உள்கட்டமைப்பு துறையில் முதலீட்டுக்கான நிதியை திரட்ட வளர்ச்சி நிதி நிறுவனம் ஒன்றை அமைப்பதற்கான மசோதாவுக்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்தது. பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட இத்திட்டத்துக்கு செயல்வடிவம் அளிக்கும்வகையில் மசோதா உருவாக்கப்பட்டுள்ளது.

மாலத்தீவுடன் ஒப்பந்தம்

மத்திய விளையாட்டு அமைச்சகத்துக்கும், மாலத்தீவு விளையாட்டு அமைச்சகத்துக்கும் இடையே கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் விவகாரத்தில் இரு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை அதிகரிக்க இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது. இந்த ஒப்பந்தம் குறித்து மத்திய மந்திரிசபை கூட்டத்தில் விளக்கம் அளிக்கப்பட்டது.

**110. டுவிட்டருக்கு தடை? – ரஷ்யா எச்சரிக்கை**

இந்தியாவில் விவசாயிகள் போராட்டம் குறித்து சர்ச்சைக்குரிய டுவிட்டர் பதிவுகளை நீக்க வேண்டும் என மத்திய அரசு வேண்டுகோள் விடுத்தது என்றும் ஆனால் அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளாததால் இதற்கு மாற்றாக வேறு செயலியை மத்திய அரசை ஏற்படுத்த இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் ரஷ்யாவில் டுவிட்டருக்கு தடை விதிக்கப்படும் என ரஷ்ய அரசு எச்சரித்துள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தடைசெய்யப்பட்ட உள்ளடக்க பதிவுகளை நீக்க் வேண்டும் என்றும் அவ்வாறு நீக்காவிட்டால் ரஷ்யாவில் டுவிட்டருக்கு தடை விதிக்கப்படும் என்றும் அந்நாட்டு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

**111. அமெரிக்கா – ஜப்பான் இடையே 2+2 பேச்சுவார்த்தை**

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அமெரிக்கா மற்றும் ஜப்பான் இடையே டூ ப்ளஸ் டூ பேச்சுவார்த்தை நடைபெற்றது. இரு நாடுகளின் வெளியுறவு மற்றும் ராணுவ மந்திரிகள் கிழக்கு மற்றும் தென் சீனக் கடலில் சீனாவின் ஆக்கிரமிப்பு அதிகரித்து வருவது குறித்த தங்களின் பொதுவான கவலைகள் பற்றி தீவிரமாக விவாதித்தனர்.

பைடன் நிர்வாகம் பொறுப்பேற்ற பிறகு, கேபினட் அந்தஸ்து கொண்டவர்கள் மேற்கொண்ட முதல் வெளிநாடு சுற்றுப்பயணம் இதுவாகும். கொரோனா பெருந்தொற்று மற்றும் பருவ நிலை மாற்றம் தொடர்பாக ஒத்துழைப்புடன் செயல்பட இருநாட்டு மந்திரிகளும் ஒப்புக்கொண்டனர்.

அதேபோல், வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல், மியான்மர் ஆட்சி கவிழ்ப்பு ஆகியவை குறித்து இரு நாடுகளும் விரிவாக ஆலோசித்ததாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது.

**112. ஜப்பானில் தனுஷின் 'அசுரன்' படத்திற்கு கிடைத்த அங்கீகாரம்**

தனுஷ் நடிப்பில் கடந்த 2019–ம் ஆண்டு வெளியாகி வெற்றிபெற்ற படம் அசுரன், இப்படத்தை வெற்றிமாறன் இயக்கி இருந்தார்.

அசுரன் படம் ஜப்பானில் ஒசாகா சர்வதேச தமிழ் திரைப்பட விழாவில் திரையிட தேர்வாகி உள்ளது. மேலும் சிறந்த தமிழ் பட பிரிவிலும் நாமினேட் ஆகி உள்ளது. இந்த விருது விழா மார்ச் 2021 – 27, 28 ஆகிய தேதிகளில் ஜப்பானில் உள்ள ஒசாகா நகரத்தில் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

**113. தேசிய தடகள 100 மீ., ஓட்டத்தில் தமிழக வீராங்கனை தனலட்சுமி தங்கம் வென்றார்.**

பஞ்சாப் மாநிலம் பாட்யாலாவில், 24வது பெடரேஷன் கோப்பை சீனியர் தேசிய தடகள சாம்பியன்ஷிப் நடக்கிறது. பெண்களுக்கான 100 மீ., ஓட்டத்தின் பைனலில், டுட்டீ சந்த், ஹிமா தாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தவறாக போட்டியை துவக்கிய அசாமின் ஹிமா தாஸ் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதனால் ஒடிசா வீராங்கனை டுட்டீ சந்த் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பந்தய தூரத்தை 11.39 வினாடியில் கடந்து முதலிடம் பிடித்த தமிழகத்தின் தனலட்சுமி 22, தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார். டுட்டீ சந்த் (11.58 வினாடி) 2வது இடம் பிடித்து ஏமாற்றினார். மற்றொரு தமிழக வீராங்கனை அர்ச்சனா சுசீந்திரன் (11.76 வினாடி) 3வது இடம் பிடித்தார்.

ஆண்களுக்கான 100 மீ., ஓட்டத்தில் இலக்கை 10.43 வினாடியில் கடந்த தமிழகத்தின் இலக்கியதாசன் 2வது இடம் பிடித்து வெள்ளி வென்றார். பஞ்சாப் வீரர் குரிந்தர்வீர் சிங் (10.32 வினாடி), மஹாராஷ்டிராவின் சதிஷ் கிருஷ்ணகுமார் (10.56 வினாடி) முறையே தங்கம், வெண்கலம் கைப்பற்றினர். 100 மீ., ஓட்டத்தில் தேசிய சாதனை படைத்துள்ள ஒடிசா வீரர் அமியா குமார் மாலிக் (10.75 வினாடி), 7வது இடம் பிடித்து ஏமாற்றினார்.

பெண்களுக்கான 400 மீ., ஓட்டத்தில் கர்நாடகாவின் பூவம்மா (53.57 வினாடி), தமிழகத்தின் சுபா வெங்கடேசன் (54.48 வினாடி) முறையே முதலிரண்டு இடங்களை பிடித்து தங்கம், வெள்ளி வென்றனர். ஹரியானாவின் கிரண் பாஹல் வெண்கலம் கைப்பற்றினார்.

**1. கலாநாமக் அரிசி விழா நடைபெறவுள்ள மாநிலம் எது?**

அ) அஸ்ஸாம்

**ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) கர்நாடகா

ஈ) ஆந்திர பிரதேசம்



✓ உத்தர பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், 'கலாநாமக் அரிசி விழா'வை நடத்துவதாக அறிவித்தார். உபியில் பயிரிடப்படும் 'கலா நாமக்' அரிசி, அம்மாநிலத்தின் சில கீழைமாவட்டங்களின் ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பாக உள்ளது. இதற்கு முன்னர் ஜான்சியில் ஸ்ட்ராபெரி விழா மற்றும் லக்னோவில் வெல்லம் திருவிழா ஆகியவற்றை உபி மாநில அரசு ஏற்பாடு செய்திருந்தது.

---

**2. "India FinTech: A USD 100 Billion Opportunity" என்றவோர் அறிக்கையை வெளியிட்டுள்ள இந்திய அமைப்பு எது?**

அ) ASSOCAM

**ஆ) FICCI ☑**

இ) CAIT

ஈ) NASSCOM

✓ இந்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை கூட்டமைப்பும் (FICCI) பாஸ்டன் ஆலோசனை குழுமமும் இணைந்து "India FinTech: A USD 100 Billion Opportunity" என்றவோர் அறிக்கையை வெளியிட்டன. இந்தியாவின் நிதியியல் தொழில்நுட்ப தொழிற்துறையின் மொத்த மதிப்பீடு $50 முதல் $60 பில்லியன் அமெரிக்க டாலராக மதிப்பிடப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டில் நிதியியல் தொழினுட்ப தொழிற்துறையின் மதிப்பீடு $150–160 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருக்கலாம் என இது கூறுகிறது.

---

**3. வரைவு மின்னணு வணிகக் கொள்கையை வெளியிடவுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

**ஆ) வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ☑**

இ) கனரக தொழில்துறை அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழுள்ள தொழில் ஊக்குவிப்பு மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத்துறையானது வரைவு மின்னணு வணிகக்கொள்கையை வெளியிடவுள்ளது. தொழிற்துறை வளர்ச்சியில் தரவு பயன்பாட்டிற்கான கொள்கைகளை இந்தக்கொள்கை வகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

✓ அங்கீகரிக்கப்படாதோர் தரவை தவறாகப் பயன்படுத்துவதையும் அணுகுவதையும் தடுக்க, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**4. நாட்டின் முதல் குளிரூட்டப்பட்ட இரயில் முனையம் அமையவுள்ள நகரம் எது?**

அ) சென்னை

**ஆ) பெங்களூரு ☑**

இ) மதுரை

ஈ) அகமதாபாத்



✓ இந்தியாவின் முதல் குளிரூட்டப்பட்ட ரயில் முனையமானது பெங்களூரு நகரத்தில் விரைவில் செயல்படவுள்ளது. இந்த இரயில் முனையத்திற்கு மூத்த கட்டுமான பொறியாளர், 'இந்திய மாமணி' சர் M விஸ்வேஸ்வரயாவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்புதிய ரயில் முனையம், நகரத்தின் பயப்பனஹள்ளியில் திட்டமிடப்பட்டுள்ளது. ₹314 கோடி செலவில் இந்தப் புதிய இரயில் முனையம் கட்டப்பட்டுள்ளது.

---

**5. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'கார்பன் எல்லை ஒப்பந்தங்களை' முன்மொழிந்த அமைப்பு எது?**

அ) G7 ஆ) G20

இ) QUAD **ஈ) ஐரோப்பிய ஒன்றியம் ☑**



✓ ஐரோப்பிய ஆணையமானது கடந்த 2020 டிசம்பரில் ஐரோப்பிய பசுமை ஒப்பந்தத்தை வெளியிட்டது. மேலும் முதல் ஐரோப்பிய காலநிலை சட்டத்தை முன்மொழிவதற்கு 2021 மார்ச்சை காலக்கெடுவாகவும் நிர்ணயம் செய்தது. 'கார்பன் எல்லை ஒப்பந்தத்தை' செயல்படுத்தும் திட்டங்களை இந்த ஆவணம் சிறப்பித்துக்காட்டுகிறது.

---

**6. தேசிய தலைநகர் பிராந்தியத்தில் காற்றின் தர மேலாண்மைக்கான அரசாங்க ஆணையத்தின் தலைவர் யார்?**

அ) இஞ்செட்டி ஸ்ரீநிவாஸ்

**ஆ) MM குட்டி ☑**

இ) சித்தார்த்த மொகந்தி

ஈ) அருந்ததி பெக்



✓ MM குட்டி தலைமையிலான இந்திய அரசின் "தேசிய தலைநகர பிராந்தியத்தில் காற்றின் தரமேலாண்மைக்கான ஆணையம்" அது அமைக்கப்பட்ட 5 மாதகாலங்களுக்குள் கலைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையம், கடந்த 2020 அக்டோபரில் ஓர் அவசர ஆணைமூலம் அமைக்கப்பட்டது. அண்மையில் இந்த அவசர ஆணை காலவதியானதை அடுத்து இந்த ஆணையம் கலைக்கப்பட்டது.

---

**7. "When God is a Traveller" என்ற கவிதைத்தொகுப்பை எழுதியவர் யார்?**

அ) ஹரீஷ் மீனாட்சி

**ஆ) அருந்ததி சுப்பிரமணியம் ☑**

இ) அனாமிகா

ஈ) R S பாஸ்கர்



✓ "When God is a Traveller" என்ற கவிதைத் தொகுப்பை இந்த ஆண்டின் சாகித்திய அகாதெமி விருது வென்ற கவிஞர் அருந்ததி சுப்பிரமணியம் எழுதியுள்ளார். 2020ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருதைப் பெற்ற 20 எழுத்தாளர்களில் இவரும் ஒருவர்.

✓ ஏழு கவிதை நூல்கள், நான்கு நாவல்கள், 5 சிறுகதை தொகுப்புகள், 2 நாடகங்கள், ஒரு பெருங்கவிதை நூல், ஓர் அனுபவ நூல் என மொத்தம் இருபது மொழிகளில் வெளியான இருபது நூல்கள் சாகித்திய அகாதெமி விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

---

**8. 'பை' நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ) மார்ச் 14 ☑**

ஆ) மார்ச் 15

இ) மார்ச் 16

ஈ) மார்ச் 17



✓ 'பை' நாள் என்பது π என்னும் புகழ்பெற்ற கணித மாறிலியைக் கொண்டாடும் நாளாகும். ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.14ஆம் தேதி 'பை' நாளாக கடைபிடிக்கப்படுகிறது. அமெரிக்க நாட்காட்டியின் படி 3/14 என்பது மார்ச் 14'ஐக்குறிக்கும். இந்த எண், அதாவது 3.14 என்பது அண்ணளவாக π'ஐயும் குறிக்கும். இது மார்ச் 14 1:59:26 என்ற குறிப்பிட்ட நேரத்திலும் கொண்டாடப்படுகிறது. (π = 3.1415926).

---

**9. வன்வாசி சமாகம் என்பது பின்வரும் எந்த மாநிலத்தில் உள்ள ஒரு பழங்குடியினர் அவையாகும்?**

அ) மத்திய பிரதேசம்

**ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) ஒடிஸா



✓ உத்தர பிரதேச மாநிலத்தின் சோன்பத்ரா மாவட்டத்தில், வன்வாசி சமாகம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக இந்தியக்குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் பங்கேற்றார். அப்போது, சேவா குஞ்ச் ஆசிரமத்தின் புதிய கட்டிடத்தையும் அவர் திறந்துவைத்தார். அப்பள்ளி மற்றும் விடுதியின் கட்டடப்பணிகளை NTPC மேற்கொண்டது.

---

**10.கலாச்சார அமைச்சரின் தலைமையில் அடுத்த ஈராண்டுகளுக்கு எந்த இந்திய ஆற்றைப்பற்றி ஆராய ஆலோசனைக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது?**

**அ) சரசுவதி ☑**

ஆ) சரயு

இ) மகாநதி

ஈ) நர்மதை



- ✓ அடுத்த ஈராண்டுகளுக்கு புராணகாலத்தில் இருந்ததாக நம்பப்படுகிற சரசுவதி ஆற்றைப்பற்றி ஆய்வதற்கான திட்டத்தை உருவாக்குவதற்காக ஆலோசனைக்குழுவை மத்திய அரசு மறுகட்டமைத்துள்ளது.
- ✓ 2017ஆம் ஆண்டில் இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் அமைத்த முந்தைய குழுவின் காலம் 2019'இல் முடிவடைந்தது. 27 பேர்கொண்ட குழுவில் பல்வேறு அமைச்சகங்கள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பிற நிபுணர்கள் அடங்குவர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ரூ.17 இலட்சத்தில் சிறப்பு செயலாக்கக் கண்காணிப்பு வாகனம்: போக்குவரத்து செயலாக்கப் பிரிவினரிடம் ஒப்படைப்பு**

போக்குவரத்து விதிகளை மீறுவோரைக் கண்டறிவதற்கான உபகரணங்கள் பொருத்தப்பட்டு, ₹17 இலட்சம் மதிப்பிலான சிறப்பு செயலாக்கக் கண்காணிப்பு வாகனம் உருவாக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது.

கடந்த 2020ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் அதிவேகமாக வாகனத்தை இயக்குதல் உள்ளிட்ட 6 வகை விதிமீறல்களுக்கு, வாகன ஓட்டிகள் மீது 1 இலட்சத்து 8,257 குற்றக் குறிப்பாணைகள் வழங்கப்பட்டு, அபராதமாக ₹44.96 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான விதிமீறல்களைக் கண்காணிக்கும் பொருட்டு, போக்குவரத்துத் துறையில் செயலாக்கப் பிரிவுக்கென, சாலைப்பாதுகாப்பு நிதியிலிருந்து புதிய சிறப்பு செயலாக்க கண்காணிப்பு வாகனம், சுமார் ₹17 இலட்சம் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

**வாகனத்தின் சிறப்பம்சங்கள்:** இதில், வாகன வேக அளவீட்டுக் கருவி, மது அருந்தியவர்களைக் கண்டறிவதற்கான சுவாச பகுப்பாய்வு கருவி, வாகனத்தின் ஒலி அளவைப் பதிவு செய்யும் கருவி, தானியங்கி வாகன பதிவெண் கண்டறியும் கருவி, வாகனக் கண்ணாடியில் பிலிமில் ஒளி ஊடுருவும் அளவை அளக்கும் கருவி, 360 டிகிரியில் சுழலும் விதிமீறல் கண்காணிப்பு விடியோ கேமரா ஆகியன பொருத்தப்பட்டுள்ளன.

---

**2. இந்திய இராணுவத்தின் புதிய DGMOஆக பி.எஸ். ராஜு விரைவில் பொறுப்பேற்பு**

இந்திய ராணுவத்தின் லெப்டினன்ட் ஜெனரலாக தற்போது இருந்துவரும் பி. எஸ். ராஜு விரைவில் ராணுவ நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குனராக (DGMO) பொறுப்பேற்கவுள்ளார். இதையடுத்து அவர் இதுவரை தான் கவனித்து வந்த காஷ்மீர் பள்ளத்தாக்கின் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டை பாதுகாக்கும் ராணுவத்தின் முக்கியப் பிரிவான 15 கார்ப்ஸ் பிரிவை லெப்டினென்ட் ஜெனரல் டி.பி. பாண்டேவிடம் புதன்கிழமை ஒப்படைத்தார். அவருக்கான பிரிவுபசார விழா ஸ்ரீநகரில் இயங்கும் 15 கார்ப்ஸ் தலைமை அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பி.எஸ். ராஜு பேசுகையில், அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைத்து நிலை அதிகாரிகள், காவல்துறையினர், மத்திய ஆயுத துணை ராணுவப் படையினர், ஜம்முவில் அமைதி நிலவ ஒத்துழைத்த மக்கள் அனைவருக்கும் தனது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

ராணுவ அதிகாரிகள் பேசுகையில், லெப்டினென்ட் ஜெனரல் பி.எஸ். ராஜு முன்னர் யூரி பிரிகேட் கமாண்டராகவும், விக்டர் படையின் ஜி.ஓ.சி.யாகவும், சினார் கிராப்ஸின் ஜி.ஓ.சி.யாகவும் பணிபுரிந்தபோது போர் நடவடிக்கைகளில் உயர் தொழில்முறை தரத்தையும், நடத்தை நெறிமுறைகளையும் வலுப்படுத்தி படைகளை நிறுவனமயமாக்கினார். இதனாலேயே அவர் இந்திய ராணுவத்தின் உயர் பொறுப்பான ராணுவ நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநராக (டி.ஜி.எம்.ஓ.) பதவியேற்கவுள்ளார் என்று பாராட்டினர். காஷ்மீரில் அமைதி நிலவ பி.எஸ். ராஜுவின் பங்களிப்பைப் பாராட்டி அண்மையில் நடைபெற்ற குடியரசு தினவிழா நிகழ்ச்சியில் அவருக்கு மதிப்புமிக்க உத்தம யுத்த சேவா (யு.ஒய்.எஸ்.எம்.) பதக்கம் அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**3. அமைப்பு சாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்புக்கு நடவடிக்கை**

அமைப்பு சாரா தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மாநிலங்களவையில் திமுக உறுப்பினர் திருச்சி சிவா எழுப்பிய கேள்விக்கு மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை இணையமைச்சர் சந்தோஷ் குமார் கங்வார் பதில் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள அமைப்பு சாரா துறை தொழிலாளர்கள் எண்ணிக்கை, அவர்களது வாழ்க்கை நிலை, புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் விவரங்கள், கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்திலிருந்து சென்றுள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களைத் தெரிவிக்குமாறு மாநிலங்களவையில் எழுத்துபூர்வமாக திமுக உறுப்பினர் திருச்சி சிவா கேள்வி எழுப்பினார்.

**இதற்கு மத்திய தொழிலாளர், வேலைவாய்ப்புத் துறை இணையமைச்சர் சந்தோஷ் குமார் கங்வார் அளித்த பதில் விவரம்:**

நாட்டில் 2017–18–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, அமைப்பு ரீதியாகவும், அமைப்பு சாரா துறை ரீதியாகவும் சுமார் 47 கோடி பேர் பணியில் உள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதில், 9 கோடி பேர் அமைப்பு ரீதியாகவும், 38 கோடி பேர் அமைப்பு சாரா பிரிவிலும் பணியாற்றி வருகின்றனர்.

அமைப்பு சாரா தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் மத்திய அரசின் திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கரோனா தொற்று காலகட்டத்தில் புலம் பெயர்ந்தவர்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்குத் திரும்பினர். இந்தக் கணக்கெடுப்பின்படி, நாட்டில் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் 1.14 கோடி பேர் இருப்பது தெரியவந்துள்ளது. இவர்களில் பிகார், உத்தர பிரதேசம், மேற்கு வங்கம், ராஜஸ்தான், ஒடிஸா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அதிகம் உள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த 72 ஆயிரம் பேர் வெளி மாநிலங்களுக்குப் புலம் பெயர்ந்திருந்தனர். இவர்கள் கரோனா தொற்று பரவலுக்குப் பிறகு, தமிழகம் திரும்பியுள்ளனர் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

---

**4. நாடு முழுவதும் தேசிய குடிமக்கள் பதிவேடு: எந்த முடிவும் எடுக்கவில்லை: மத்திய அரசு**

நாடு முழுவதும் தேசிய குடிமக்கள் பதிவேட்டை தயாரிக்கும் பணிகள் குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. அஸ்ஸாமில் உச்சநீதிமன்ற மேற்பார்வையில் தேசிய குடிமக்கள் பதிவேடு புதுப்பிக்கப்பட்டு கடந்த 2019–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31–ஆம் தேதி இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டது.

அந்த மாநிலத்தில் உள்ள இந்திய குடிமக்களை கண்டறிவதற்கு தயாரிக்கப்பட்ட அந்தப் பட்டியலில் தங்கள் விவரங்களை இணைப்பதற்கு 3,30,27,661 பேர் விண்ணப்பித்திருந்தனர். எனினும் 19.06 லட்சம் பேரின் பெயர்கள் அப்பட்டியலில் இடம்பெறவில்லை. இதனால் அவர்களின் இந்திய குடியுரிமை கேள்விக்குள்ளானது. இது நாடு முழுவதும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதையடுத்து தேசிய குடிமக்கள் பதிவேட்டை தயாரிக்கும் பணிகள் நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்று மத்திய அரசு தெரிவித்திருந்தது.

இதுதொடர்பாக மாநிலங்களவையில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் அளித்த எழுத்துபூர்வ பதிலில், 'தேசிய குடிமக்கள் பதிவேட்டை நாடு தழுவிய அளவில் தயாரிப்பது குறித்து மத்திய அரசு தற்போது எந்த முடிவும் எடுக்கவில்லை' என்றார். மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அவர், 'குடியுரிமைச் சட்டம் 1995–இல் தடுப்புக் காவல் மையங்கள் தொடர்பாக எந்தப்பிரிவும் இல்லை. மாநில அரசுகளும், யூனியன் பிரதேசங்களின் நிர்வாகங்களும் தேவைக்கேற்ப தடுப்புக் காவல் மையங்களை அமைக்கின்றன. தங்கள் சிறை தண்டனைக் காலத்தை நிறைவு செய்த சட்டவிரோத குடியேறிகள், வெளிநாட்டவர்களை அவர்களின் சொந்த தேசங்களுக்கு நாடு கடத்தும்போது தேவைப்படும் பயண ஆவணங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்பட்சத்தில், அவர்கள் தடுப்புக்காவல் மையங்களில் அடைக்கப்படுகின்றனர்' என்றார்.

---

**5. 6.5% கரோனா தடுப்பூசிகள் வீணடிப்பு: மத்திய அரசு**

நாட்டில் சராசரியாக 6.5% கரோனா தடுப்பூசிகள் வீணடிக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக மத்திய சுகாதாரத் துறை செயலர் ராஜேஷ் பூஷண் புதன்கிழமை கூறியது: தெலங்கானா, ஆந்திரம், உத்தர பிரதேசம், கர்நாடகம் ஆகிய 4 மாநிலங்கள் மற்றும் ஜம்மு–காஷ்மீர்

யூனியன் பிரதேசத்தில் அதிக அளவிலான கரோனா தடுப்பூசிகள் வீணடிக்கப்படுகின்றன. இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தில் வீணடிக்கப்படும் தடுப்பூசிகள் நாடு முழுவதும் சராசரியாக வீணடிக்கப்படும் 6.5% தடுப்பூசிகளைவிட அதிகம். அதிகபட்சமாக தெலங்கானாவில் 17.6% தடுப்பூசிகளும், ஆந்திரத்தில் 11.6% தடுப்பூசிகளும் வீணடிக்கப்படுகின்றன.

தடுப்பூசிகள் வீணடிக்கப்படுவதை வெகுவாக குறைக்க வேண்டும். தடுப்பூசிகள் வீணடிக்கப்படுவது குறைந்தால், அதிக அளவிலான மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படுகிறது என்று அர்த்தம். அதன் மூலம் கரோனா தீநுண்மி பரவலை தடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரிக்கும்.

**இந்தியாவின் பங்கு 36%:**

உலக அளவில் கடந்த 15–ஆம் தேதி 83.4 லட்சம் பேருக்கு கரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. இதில் 36% தடுப்பூசிகள் இந்தியாவில் செலுத்தப்பட்டன. இந்தியாவில் தினந்தோறும் சராசரியாக 13,12,215 தடுப்பூசிகள் செலுத்தப்படுகின்றன.

வட இந்தியாவில் பாதிப்பு அதிகம்: கடந்த 1–ஆம் தேதி முதல் 15–ஆம் தேதி வரை நாட்டின் 16 மாநிலங்களில் உள்ள சுமார் 70 மாவட்டங்களில் கரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 150%–க்கும் அதிகமாக அதிகரித்துள்ளது. 17 மாநிலங்களில் உள்ள 55 மாவட்டங்களில் கரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 100% முதல் 150% வரை அதிகரித்துள்ளது. இதில் பெரும்பாலான மாவட்டங்கள் வட மற்றும் மேற்கு இந்தியாவில் உள்ளன.

கரோனா நோய்த்தொற்றால் வாரந்தோறும் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சுமார் 43%–மும், வாரந்தோறும் பலியாவோரின் எண்ணிக்கை சுமார் 37%–மும் அதிகரித்துள்ளது என்றார்.

---

**6. வங்கதேசத்தில் சுதந்திர தினபொன் விழா கொண்டாட்டம் தொடக்கம்**

வங்கதேசத்தில் சுதந்திர தின பொன் விழா, "வங்கபந்து" ஷேக் முஜிபுர் ரஹ்மான் பிறந்த தின நூற்றாண்டு விழா கொண்டாட்டம் தொடங்கியது. பாகிஸ்தானிலிருந்து பிரிந்து வங்கேதசம் உருவாகி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும்வகையில் பொன்விழா, தேசத்தந்தை ஷேக் முஜிபுர் ரஹ்மான் பிறந்த தின நூற்றாண்டு விழா ஆகியவை 10 நாள்கள் கொண்டாடப்படவுள்ளன. இதில், பங்கேற்பதற்காக 3 நாள் பயணமாக மாலத்தீவு அதிபர் இப்ராஹிம் முகமது சோலி டாக்காவுக்கு வந்தார். அவரை வங்கதேச அதிபர் அப்துல் ஹமீது வரவேற்றார்.

---

**7. டி20 தரவரிசை: கோலி முன்னேற்றம்**

ஐசிசியின் டி20 தரவரிசையில் பேட்ஸ்மேன்கள் பிரிவில் இந்திய கேப்டன் விராட் கோலி ஓரிடம் முன்னேறி 5–ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

அவர் 744 புள்ளிகளுடன் அந்த இடத்தில் இருக்கிறார். டி20 தொடரின் 2 மற்றும் 3ஆம் ஆட்டங்களில் அருமையாக விளையாடியதன் அடிப்படையில் அவர் இம்முன்னேற்றத்தைக்கண்டுள்ளார். தொடர்ந்து 3 ஆட்டங்களிலும் சோபிக்காமல் போனபோதும் லோகேஷ் ராகுல் 771 புள்ளிகளுடன் 4ஆவது இடத்தில் இருக்கிறார்.

ஷ்ரேயஸ் ஐயர் 32 இடங்கள் ஏற்றம் கண்டு 31ஆவது இடத்துக்கும், ரிஷப் பந்த் 30 இடங்கள் முன்னேறி 80ஆவது இடத்துக்கும் வந்துள்ளனார். 3ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்தின் வெற்றிக்கு வேரூன்றிய ஜோஸ் பட்லர் 5 இடங்கள் முன்னேறி 19ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அவருடன் துணையாக நின்ற ஜானி பேர்ஸ்டோ 2 இடங்கள் ஏற்றம் கண்டு 14ஆவது இடத்தை எட்டியுள்ளார். ஜேசன் ராய் 4 இடங்கள் முன்னேறி 24ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

பௌலர்கள் பிரிவில் வாஷிங்டன் சுந்தர் 2 இடங்கள் முன்னேறி 11ஆவது இடத்துக்கும், ஷர்துல் தாக்குர் 14 இடங்கள் முன்னேறி 27ஆவது இடத்துக்கும், புவனேஷ்வர் குமார் 7 இடங்கள் முன்னேறி 45ஆவது இடத்துக்கும் வந்துள்ளனர். இங்கிலாந்தின் ஜோஃப்ரா ஆர்ச்சர் 43 இடங்கள் ஏற்றம் கண்டு 34ஆவது இடத்துக்கும், மார்க் வுட் 59 இடங்கள் முன்னேறி 39ஆவது இடத்துக்கும், சாம் கரன் 41 இடங்கள் முன்னேறி 74ஆவது இடத்துக்கும் வந்துள்ளனர்.

---

**8. ஒருநாள் தொடர்: கடைசி ஆட்டத்திலும் தென் ஆப்பிரிக்கா வெற்றி**

இந்திய மகளிரணிக்கு எதிரான கடைசி ஒருநாள் ஆட்டத்திலும் தென் ஆப்பிரிக்க மகளிரணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 5 ஆட்டங்கள் கொண்ட தொடரில் 3 ஆட்டங்களில் வென்று ஏற்கெனவே தொடரை கைப்பற்றிய தென் ஆப்பிரிக்காவுக்கு இது 4–ஆவது வெற்றியாகும். இந்திய அணி 2–ஆவது ஆட்டத்தில் மட்டும் வென்றது நினைவுகூரத்தக்கது. லக்னௌவில் புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த இந்தியா 49.3 ஓவா்களில் 188 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அடுத்து ஆடிய தென் ஆப்பிரிக்கா 48.2 ஓவா்களில் 5 விக்கெட் இழப்புக்கு 189 ரன்கள் அடித்து வென்றது. அந்த அணியின் அனிகே போஷ் ஆட்டநாயகியானாா்.

இந்திய அணியின் பிளேயிங் லெவனில் தீப்தி சா்மா, பூனம் யாதவ், மான்சி ஜோஷி, ராதா யாதவ் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டு, மோனிகா படேல், ஹேமலதா, பிரத்யூஷா, ஜுலன் கோஸ்வாமி ஆகியோா் சோ்க்கப்பட்டிருந்தனா். இதில் பிரத்யூஷாவுக்கு இது முதல் சா்வதேச ஆட்டமாகும். முன்னதாக டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா பௌலிங் வீசத் தீா்மானித்தது. பேட் செய்த இந்திய அணியில் அதிகபட்சமாக கேப்டன் மிதாலி ராஜ் 8 பவுண்டரிகள், 1 சிக்ஸா் உள்பட 79 ரன்கள் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தாா். தொடக்க வீராங்கனை பிரியா புனியா 18, உடன் வந்த ஸ்மிருதி மந்தனா 18, பூனம் ரௌத் 10 ரன்களுக்கு ஆட்டமிழக்க, ஹா்மன்பிரீத் கௌா் 30 ரன்கள் எடுத்திருந்தபோது காயமடைந்து வெளியேறினாா். எஞ்சியோரில் ஹேமலதா 2, ஜுலன் கோஸ்வாமி 5, மோனிகா படேல் 9, பிரத்யூஷா 2 ரன்களுக்கு ஆட்டமிழக்க, சுஷ்மா வா்மா, ராஜேஷ்வரி கெய்க்வாட் டக் அவுட்டாகினா். தென் ஆப்பிரிக்க தரப்பில் நாடினே டி கிளொ்க் 3, நோன்டுமிசோ ஷாங்கேஸ், டுமி சிகுகுனே ஆகியோா் தலா 2, மாரிஸானே காப் 1 விக்கெட் சாய்த்தனா்.

பின்னா் 189 ரன்களை இலக்காகக் கொண்டு ஆடிய தென் ஆப்பிரிக்காவில் தொடக்க வீராங்கனையாக வந்த கேப்டன் சுனே லஸ் 10 ரன்களுக்கு ஆட்டமிழக்க, உடன் வந்த லௌரா வோல்வாா்ட் டக் அவுட்டானாா். லாரா குட்டால் 1 ரன்னுக்கு வெளியேற்றப்பட, மிக்னான் டு பிரீஸ் 57, அனிகே போஷ் 58 ரன்கள் சோ்த்து வெற்றிக்கு அடித்தளமிட்டனா். மாரிஸானே காப் 36, நாடினே டி கிளொ்க் 19 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிக்கு வழி நடத்தினா். இந்திய தரப்பில் ராஜேஷ்வரி கெய்க்வாட் 3, ஹேமலதா, பிரத்யூஷா ஆகியோா் தலா 1 விக்கெட் சாய்த்தனா்.

---

**9. தேசிய சீனியா் தடகளம்: தமிழகத்துக்கு இரு தங்கம்**

ஃபெடரேஷன் கோப்பை சீனியா் தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழகத்துக்கு புதன்கிழமை இரு தங்கப் பதக்கம் கிடைத்தது. ஆடவருக்கான 110 மீட்டா் தடை தாண்டுதலில் தமிழகத்தின் பி.வீரமணி (14.57 விநாடிகள்) முதலிடம் பிடித்தாா். கா்நாடகத்தின் ஸ்ரீகாந்த் மத்யா (14.85), ஆந்திரத்தின் யஷ்வந்த்குமாா் லவேடி (15.01) ஆகியோா் முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வென்றனா். அதேபோல், மகளிருக்கான 100 மீட்டா் தடை தாண்டும் ஓட்டத்தில் தமிழகத்தின் சி.கனிமொழி 13.63 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றாா். தெலங்கானாவின் அகசரா நந்தினி (13.88), தமிழகத்தின் நித்யா ராமராஜ் (14.08) அடுத்த இரு இடங்களைப் பிடித்தனா்.

உயரம் தாண்டுதலில் மகாராஷ்டிரத்தின் சா்வேஷ் அனில் குஷாரே (2.15 மீட்டா்) முதலிடம் பிடிக்க, தமிழகத்தின் ஆதா்ஷ் ராம் (2.10;3), கேரளத்தின் ஜியோ ஜோஸ் (2.10), ஹரியாணாவின் சித்தா்த் யாதவ் (2.10) ஆகியோா் முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தனா். ஈட்டி எறிதலில் ஹரியாணாவின் நீரஜ் சோப்ரா 87.80 மீ தூரமும், யஷ்விா் சிங் 79.31 மீ தூரமும், உத்தர பிரதேசத்தின் ரோஹித் யாதவ் 78.88 மீ தூரமும் எறிந்து தங்கம், வெள்ளி, வெண்கலம் கைப்பற்றினா். நீரஜ் சோப்ரா எறிந்த தூரம் புதிய தேசிய சாதனையாகும். மகளிருக்கான நீளம் தாண்டுதலில் பிரியங்கா கொ்கெட்டா (6.10 மீ), கேரளத்தின் ரின்டு மேத்யூ (6.07;3 மீ), தமிழகத்தின் ஷெரின் அப்துல் கஃபூா் (6.07 மீ) ஆகியோா் முதல் 3 இடங்களைப் பிடித்தனா்.

ஆடவருக்கான 10,000 மீட்டா் ஓட்டத்தில் உத்தர பிரதேசத்தின் அபிஷேக் பால் (29.47 நிமிடம்) முதலிடமும், காா்திக் குமாா் (29.48) இரண்டாமிடமும், அா்ஜுன் குமாா் (29.49) மூன்றாமிடமும் பிடித்தனா். 3000 மீட்டா் ஸ்டீபிள்சேஸ் ஓட்டத்தில் மகாராஷ்டிரத்தின் அவினாஷ் சப்லே (8.20 நிமிடம்) தங்கம் வெல்ல, ராஜஸ்தானின் சங்கா்லால் ஸ்வாமி (8.34), ஹரியாணாவின் ராஜ்குமாா் (8.49) ஆகியோா் வெள்ளி, வெண்கலம் வென்றனா். அவினாஷ் கடந்த நேரம், புதிய தேசிய சாதனையாகும். குண்டு எறிதலில் பஞ்சாபின் தஜிந்தா்பால் சிங் தூா்

(20.58 மீ), கரன்வீர் சிங் (18.98 மீ), தேவிந்தா் சிங் (18.04 மீ) ஆகியோா் முதல் 3 இடங்களை எட்டினா்.

**10. வாராந்திர கரோனா தொற்று 10% உயா்வு**

உலகம் முழுவதும் புதிதாக கரோனா உறுதி செய்யப்பட்டவா்களின் எண்ணிக்கை கடந்த வாரம் 10 சதவீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள வாராந்திர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தொடா்ந்து 3–ஆவது முறையாக, கடந்த வாரத்தில் மட்டும் புதிய கரோனா நோயாளிகளின் எண்ணிக்கை 10 சதவீதம் அதிகரித்துள்ளது. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கரோனா பரவல் தீவிரமடைந்து வருவதன் எதிரொலியாக இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஹங்கேரி:** அதிகபட்ச தினசரி பலி மத்திய ஐரோப்பிய நாடான ஹங்கேரியில் தினசரி கரோனா பலி புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் அந்த நோய்க்கு 193 போ் பலியானதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனா்.

**பிலிப்பின்ஸ்: வெளிநாட்டினருக்குத் தடை**

பிலிப்பின்ஸில் தீவிரமடைந்து வரும் கரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, அந்த நாட்டு விமான நிலையங்களில் வெளிநாட்டுப் பயணிகளுக்குத் தடை விதிக்கவும் உள்நாட்டுப் பயணிகளின் அதிகபட்ச தினசரி எண்ணிக்கை 1,500–ஆக நிா்ணயிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**சோமாலியா: தடுப்பூசி திட்டம் தொடக்கம்**

சோமாலியாவில் பொதுமக்களுக்கு கரோனா தடுப்பூசி போடும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பிரிட்டனின் ஆக்ஸ்ஃபோா்டு–அஸ்ட்ராஸெனகா தடுப்பூசி மூலம் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

**11. கன்டெய்னர் பிரச்சினையைத் தீர்க்க – ஏற்றுமதியாளர்களுக்கு 'பியோ'வின் புதிய சேவை :**

கன்டெய்னர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, ஏற்றுமதியாளர்களுக்கு இந்திய ஏற்றுமதி ஆணையம் புதிய சேவையைத் தொடங்கி உள்ளது. இதுகுறித்து, இந்திய ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் ('பியோ') வெளியிட்ட செய்திக் குறிப்பு: ஏற்றுமதியாளர்களுக்கு தாங்கள் ஏற்றுமதி செய்யும் பொருட்களை அனுப்புவதற்கு கன்டெய்னர்கள் தேவைப்படுகின்றன. சில நேரங்களில் போதிய அளவு கன்டெய்னர்கள் கிடைக்காததால், குறித்த நேரத்துக்குள் ஏற்றுமதி செய்ய முடியாத நிலை உள்ளது.

இந்நிலையில், ஏற்றுமதியாளர்களுக்கு உதவுவதற்காக, இந்திய ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் 'இ–மாடுல்' என்ற ஆன்லைன் சேவையை அறிமுகப்படுத்தி உள்ளது. இதில், ஏற்றுமதியாளர்கள், தங்களுக்குத் தேவையான கன்டெய்னர்கள் குறித்த விவரத்தை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். இதன்மூலம், மொத்த இருப்பில் எவ்வளவு கன்டெய்னர்கள் உள்ளன என்பதை ஆய்வு செய்து, அதில் குறிப்பிட்ட ஏற்றுமதியாளருக்கு ஒதுக்க முடியும். அத்துடன், துறைமுகங்களில் சரக்குக் கப்பல்களில் கன்டெய்னர்களை ஏற்றுவதற்கான காலநேரம் மிச்சமாவதோடு, துறைமுகங்களில் போக்குவரத்து நெரிசலும் குறையும்.

**12. சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் ரூ.26 கோடியில் – எம்ஆர்எப் உதவியுடன் ஆராய்ச்சி பூங்கா : கம்ப்யூட்டர் சயின்ஸ் ஆய்வகங்களுடன் அமைகிறது**

சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் எம்ஆர்எப் உதவியுடன் ரூ.26 கோடியில் டேட்டா அனலிட்டிக்ஸ், கம்ப்யூட்டர் சயின்ஸ், சைக்கோமெட்ரிக் ஆய்வகங்களுடன் பிரம்மாண்டமான ஆராய்ச்சி பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. எம்ஆர்எப் டயர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கிழக்கு தாம்பரம் சென்னை கிறிஸ்தவக் கல்லூரி வளாகத்தில் 'எம்சிசி – எம்ஆர்எப் இன்னோவேஷன் பார்க்' என்ற பெயரில் ஆராய்ச்சி பூங்கா நிறுவப்பட உள்ளது. இதற்கு எம்ஆர்எப் நிறுவனத்தின் தலைவரும் பழைய மாணவருமான கே.எம்.மேமன் ரூ.26 கோடியே 9 லட்சம் நிதியை அளிக்க முன்வந்தார்.

ஆராய்ச்சி பூங்கா திட்டத்தை தொடங்கிவைத்த கே.எம்.மேமன், ரூ.26 கோடியே 9 லட்சத்துக்கான காசோலையை கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலாளர் பால் வில்சனிடம் வழங்கினார். இந்த ஆராய்ச்சி பூங்கா 68,636 சதுர அடி பரப்பில் அமைக்கப்படுகிறது. இங்கு டேட்டா அனலிட்டிக்ஸ் ஆய்வகம், கம்ப்யூட்டர் சயின்ஸ் ஆய்வகம், சைக்கோமெட்ரிக் ஆய்வகம், கணினி கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஃபேப் லேப், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகம், திறந்தவெளி கலையரங்கம், ஆராய்ச்சி ஆய்வகம், கற்பித்தல்–கற்றல் ஆய்வகம், தொழில்முனைவோர் அரங்கம், மாநாட்டு அரங்கம் போன்றவை அதிநவீன வசதிகளுடன் ஏற்படுத்தப்படும்.

**13. ஆசியாவிலேயே முதல்முறையாக ஒரே நாளில் 4 பேருக்கு மிட்ராகிளிப் சிகிச்சை செய்து அப்போலோ மருத்துவமனை சாதனை**

சென்னை அப்போலோ மருத்துவமனை ஒரே நாளில் அடுத்தடுத்து 4 பேருக்கு மிட்ராகிளிப் சிகிச்சையை வெற்றிகரமாக செய்து சாதனை படைத்துள்ளது. இதுகுறித்து அப்போலோ மருத்துவமனை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மிட்ராகிளிப் எனப்படும் மிகநுண்ணிய துளையிடல் முறையிலான சிகிச்சை மூலம் இதயத்துக்கு மிட்ரல் வால்வு பொருத்தும் சிகிச்சையை, அப்போலோ மருத்துவமனை டாக்டர்கள் ஒரே நாளில் 4 பேருக்கு வெற்றிகரமாக செய்துள்ளனர். இதன் வாயிலாக மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த நோயாளிகள் விரைந்து குணமடைந்து, மறுநாளே வீடு திரும்பியுள்ளனர்.

ஜப்பான் நாட்டில் ஒரே நாளில் 3 நோயாளிகளுக்கு மிட்ராகிளிப் சிகிச்சை செய்யப்பட்டதே சாதனையாக இருந்தது. தற்போது சென்னை அப்போலோவில் 4 மிட்ராகிளிப் சிகிச்சை செய்து புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

**14. தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலை.யில் சட்ட வளர்ச்சி இருக்கை தொடக்கம் :**

தஞ்சாவூர் சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக்கழக சட்டத் துறையில் சட்டம் மற்றும் அதன் வளர்ச்சிக்கான இருக்கை தொடங்கப்பட்டுள்ளது. இணையவழியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம் மற்றும் அதன் வளர்ச்சிக்கான இருக்கையை உச்ச நீதிமன்ற நீதிபதி ரோஹிண்டன் நாரிமன் தொடங்கி வைத்தார்.

**15. தேசிய தொலை மருத்துவ சேவை திட்டத்தின் கீழ் இதுவரை 30 லட்சம் பேருக்கு மருத்துவ ஆலோசனை**

நாடு முழுவதும் இ–சஞ்சீவனி திட்டத்தின் கீழ் இதுவரை 30 லட்சம் பேருக்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. தேசிய தொலைமருத்துவ சேவை என அழைக்கப்படும் இ–சஞ்சீவனி (ஏபி–எச்டபிள்யுசி) திட்டத்தை கடந்த 2019–ம் ஆண்டு நவம்பர் மாதம் மத்திய சுகாதார அமைச்சகம் அறிமுகம் செய்தது.

இதன்படி, வரும் 2022–க்குள் நாடு முழுவதும் உள்ள துணை சுகாதார மையங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் நகர சுகாதார மையங்கள் என 1.55 லட்சம் மையங்களை ஆயுஷ்மான் பாரத் ஆரோக்கிய மற்றும் நலவாழ்வு மையங்களாக (ஏபி–எச்டபிள்யுசி) மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு மருத்துவருக்கும் மற்றொரு மருத்துவருக்கும் இடையே இந்த சேவை வழங்கப்படுகிறது. இதன்படி இதுவரை 9 லட்சம் ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது.

இதுபோல, கடந்த ஆண்டு கரோனா பரவல் காரணமாக பொது முடக்கம் அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, இ–சஞ்சீவனி புறநோயாளிகள் பிரிவு (ஓபிடி) சேவை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது. இதன் மூலம் நோயாளிகளுக்கு தேவையான மருத்துவ ஆலோசனைகளை மருத்துவர்கள் இணைய வழியில் வழங்கி வருகின்றனர். 250–க்கும் மேற்பட்ட ஓபிடி மூலம் இந்த சேவை வழங்கப்படுகிறது. இவற்றின் மூலம் இதுவரை 21 லட்சம் பேருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இ–சஞ்சீவனி திட்டத்தின் கீழ் இதுவரை 30 லட்சம் பேருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இப்போது 31 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இ–சஞ்சீவனி சேவை அமலில் உள்ளது. இதன்மூலம் நாடு முழுவதும் தினமும் 35 ஆயிரம் நோயாளிகள் இணைய வழியில் மருத்துவ ஆலோசனைகளை பெற்று வருகின்றனர். அதிக ஆலோசனை பெறும் மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு, உத்தரபிரதேசம், கர்நாடகா ஆகியவை முதல் 3 இடங்களைப் பிடித்துள்ளன. இந்த தகவலை மத்தியசுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### 16. மார்ச் மாதத்திலும் ஏற்றுமதி அதிகரிப்பு

நாட்டின் ஏற்றுமதி, தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, மார்ச் மாதத்தில், 1 – 14 தேதி வரையிலான காலகட்டத்தில், ஏற்றுமதி, 17 சதவீதம் அளவுக்கு அதிகரித்துள்ளது. இதன் மதிப்பு, 1.04 லட்சம் கோடி ரூபாய் ஆகும்.

**இது குறித்து, மத்திய வர்த்தக துறை அமைச்சகம் தெரிவித்துள்ளதாவது:** கடந்த, 1 – 14ம் தேதி வரையிலான காலத்தில், நாட்டின் ஏற்றுமதி, இதற்கு முந்தைய ஆண்டின் இதே கால கட்டத்துடன் ஒப்பிடும்போது, 17 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. இறக்குமதி, இக்காலகட்டத்தில், 27.77 சதவீதம் அதிகரித்திருக்கிறது. ஏற்றுமதியை பொறுத்தவரை, பொறியியல் பொருட்கள், அரிசி, நவரத்தினம் மற்றும் ஆபரணங்கள் ஆகியவை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இருப்பினும், தோல், எண்ணெய் வித்துகள், ஆயத்த ஆடைகள், ஆகிய – வற்றின் ஏற்றுமதி சரிவைக் கண்டிருக்கின்றது. இறக்குமதியை பொறுத்தவரை, தங்கம், மின்னணு பொருட்கள், விலையுயர்ந்த கற்கள் ஆகியவை அதிகளவில் இறக்குமதி ஆகியுள்ளன. கடந்த பிப்ரவரியில், ஏற்றுமதி, 0.67 சதவீதம் அளவுக்கு அதிகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

---

### 17. தடுப்பூசி மையம்: வரைபடத்தில் அறியலாம்

சென்னையில், கொரோனா தடுப்பூசி மையங்களை, வரைபடம் வாயிலாக அறிந்து கொள்ளும் வசதியை, மாநகராட்சி ஏற்படுத்தி உள்ளது. சென்னை மாநகராட்சியில், 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 அரசு மருத்துவமனைகள், 97 தனியார் மருத்துவமனைகள் என, 266 மையங்களில், கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில், முதியவர்கள், நாள்பட்ட நோயாளிகள் தடுப்பூசி செலுத்திக் கொள்ள ஆர்வம் காட்டுகின்றனர்.

இதனால், நாளுக்கு நாள் சென்னையில் தடுப்பூசி செலுத்துவோர் எண்ணி –க்கை அதிகரித்து வருகிறது. இந்நிலையில், அருகில் உள்ள தடுப்பூசி மையங்களை அறிந்து கொள்ளவும், இணைய வழியே வரைபடத்தை பயன்படுத்தி, தடுப்பூசி மையங்களுக்கு செல்லும் வகையிலான வசதியை மாநகராட்சி ஏற்படுத்தி உள்ளது. அதன்படி, https://chennaicorporation.gov.in/gcc/covid–vaccine/ என்ற இணைய தளத்தில், கொரோனா தடுப்பூசி மையங்களை அறிந்து கொள்ளலாம். இதன் வாயிலாக, பிறரின் உதவியின்றி, முதியவர்கள் தாமாகவே, தடுப்பூசி மையங்களுக்கு சென்று, தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம் என, மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

### 18. செவ்வாயில் நீர்வளம்: 'நாசா' ஆய்வில் தகவல்

செவ்வாய் கிரகத்தின் உட்பரப்பில், மிகப் பெரிய அளவிலான நீர்வளம் மறைந்திருக்கலாம்' என, அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான, 'நாசா' தெரிவித்துள்ளது. நாசாவின், 'ஜே.எப்.எல்.,' அமைப்பும், கலிபோர்னியா தொழில்நுட்ப மையமும் இணைந்து, செவ்வாய் கிரக ஆய்வறிக்கையை, 'சயின்ஸ்' என்ற இதழில் வெளியிட்டுள்ளன; அதில் கூறப்பட்டுள்ளதாவது:செவ்வாய் கிரகத்தில், 400 கோடி ஆண்டுகளுக்கு முன், 100 – 1,500 மீட்டர் ஆழத்தில் பெருமளவு தண்ணீர் இருந்துள்ளது. இது, ஒரு கிரகத்தை மூழ்கடிக்கும் அளவிற்கு, கடல், குளம் போன்ற வடிவங்களில் காணப்பட்டு உள்ளது. அதன் பின், 100 கோடி ஆண்டுகள் கழித்து, செவ்வாய் கிரகத்தின் நீர்வளம் அடியோடு காணாமல் போய், தற்போதைய நிலையில் உள்ளது.

முந்தைய ஆய்வில், செவ்வாய் கிரகத்தின் ஈர்ப்பு விசை குறைவாக உள்ள காரணத்தால், நீர், விண்வெளியில் வெளியேறியிருக்கும் என, அனுமானிக்கப்பட்டது. தற்போதைய ஆய்வில், விண்வெளியில் ஓரளவு தான், நீர் வெளியேறி இருக்குமே தவிர, முழுதுமாக வெளியேற வாய்ப்பில்லை என, முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், செவ்வாயின் நீர்வளத்தில், 30 – 99 சதவீதம், அந்த கிரகத்தின் உட்புறத்தில் உள்ள கனிமங்களில் உறைந்திருக்கலாம் என, கருதப்படுகிறது. இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது. அமெரிக்கா அனுப்பிய, 'ரோவர்' தற்போது, செவ்வாய் கிரக ஆய்வில் ஈடுபட்டுள்ளது.

---

### 19. 'சந்திரயான் – 2 ஆயுள் ஏழு ஆண்டுகளுக்கு நீடிக்கும்

நிலவு குறித்து ஆய்வு செய்ய விண்ணில் செலுத்தப்பட்ட, 'சந்திரயான் – 2' செயற்கை கோள், ஓராண்டு செயல்படும் என, எதிர்பார்த்த நிலையில், அதன் ஆயுள், ஏழு ஆண்டுகளுக்கு நீடிக்கும் என, இந்திய விண்வெளி ஆய்வு மையமான, 'இஸ்ரோ' தெரிவித்துள்ளது. லோக்சபாவில் பிரதமர் அலுவலக இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறியதாவது:கடந்த, 2019, ஜூலை 22ல், நிலவின் தென் துருவம் குறித்து ஆய்வு செய்ய, 'சந்திரயான் – 2' செயற்கை கோள் விண்ணில் செலுத்தப்பட்டது. இத்திட்டத்தில், 'விக்ரம்' என்ற ரோவர் வாகனம், வேகமாக நிலவில் தரையிறங்கியதால் நொறுங்கியது. இதனால், விக்ரம் தொடர்பான ஆய்வு தவிர்த்து, நிலவில் உள்ள கனிமங்கள், ரசாயன கலவைகள் உள்ளிட்ட ஆய்வுகள் தொடர்பான இதர திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. சந்திரயான் – 2 செயற்கை கோள், ஓராண்டு மட்டுமே செயல்படும் என, துவக்கத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதன் ஆயுள், ஏழு ஆண்டுகளுக்கு நீடிக்கும் என, இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்து உள்ளனர். இவ்வாறு, அவர் கூறினார்.

கடந்த ஆண்டு, நிலவில் காணப்பட்ட பள்ளத்தை, சந்திரயான் – 2 படம் பிடித்து, பூமிக்கு அனுப்பியது. இதற்கு, 'இந்திய விண்வெளி திட்டத்தின் தந்தை' என அழைக்கப்படும், விக்ரம் சாராபாய் நினைவாக, 'சாராபாய் பள்ளம்' என, பெயர் சூட்டப்பட்டுள்ளது.

---

**1.சமீபசெய்திகளில் இடம்பெற்ற OTPRMS சான்றிதழ்கள் என்பதுடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

**அ) கல்வி அமைச்சகம் ☑**

ஆ) திறன் மேம்பாடு & தொழில்முனைவு அமைச்சகம்

இ) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

ஈ) வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ இணையவழி ஆசிரியர் மாணவர் பதிவு மேலாண்மை அமைப்பு Online Teacher Pupil Registration Management System (OTPRMS) என்பது தேசிய ஆசிரியர் கல்விக்கான கவுன்சிலின்கீழ் ஏதேனும் ஒரு தேர்வில் தேர்ச்சிபெற்ற (அ) படித்துவருபவர்களுக்கு, ஆசிரியர் பணி பெறுவதற்கு தங்களை பதிவு செய்துகொள்ள உதவுகிறது. OTPRMS சான்றிதழ்களை டிஜிலாக்கர் சேவையுடன் இணைக்க மத்திய கல்வி அமைச்சகம் முடிவு செய்துள்ளது. அது, சான்றிதழ்களை இலவசமாக அணுக உதவுகிறது.

---

**2.அகில இந்திய சுற்றுலா வாகனங்கள் அங்கீகாரம் மற்றும் அனுமதி விதிகள், பின்வரும் எந்தத் தேதியிலிருந்து பொருந்தும்?**

**அ) ஏப்ரல் 1, 2021 ☑**

ஆ) மே 1, 2021

இ) ஜூன் 1, 2021

ஈ) ஆகஸ்ட் 1, 2021



✓ 'அகில இந்திய சுற்றுலா வாகனங்களுக்கான அங்கீகாரம் & அனுமதி விதிகள், 2021' என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தை மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் அறிவித்துள்ளது.

✓ இந்தப்புதிய விதிகளின்கீழ், எந்தவொரு சுற்றுலா வாகன ஆபரேட்டரும் 'அகில இந்திய சுற்றுலா அங்கீகாரம் அல்லது அனுமதி'க்கு ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கலாம். தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்க-ப்பட்டு கட்டணம் செலுத்திய பிறகு, அத்தகைய விண்ணப்பங்களை சமர்ப்பித்த 30 நாட்களுக்குள் அனுமதி வழங்கப்படும்.

---

**3.சேத்ருஞ்சாய் மலைக்குன்றுகள் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) மகாராஷ்டிரா

**ஆ) குஜராத் ☑**

இ) கர்நாடகா

ஈ) இராஜஸ்தான்



✓ சேத்ருஞ்சாய் மலைக்குன்றுகள் காப்பு வனப்பகுதி குஜராத் மாநிலத்தில் அமைந்துள்ளது. இது ஏராளமான ஆசிய சிங்கங்களின் தாயகமாக உள்-ளது. அண்மையில், சேத்ருஞ்சாய் மலைக்குன்றுகள் காப்பு வனப்பகுதி-யில் பெரும் தீவிபத்து ஏற்பட்டது. இந்தத் தீ, 200 ஹெக்டேருக்கு மேல் பரவியதாகக் கூறப்படுகிறது.

---

**4.இந்திய ரயில்வேயின் செனாப் பாலம் கட்டப்பட்டுவருகிற மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) உத்தரகண்ட்

ஆ) ஹிமாச்சல பிரதேசம்

**இ) ஜம்மு & காஷ்மீர் ☑**

ஈ) அஸ்ஸாம்



✓ செனாப் பாலம் என்பது இந்திய இரயில்வேயால் கட்டப்பட்டு வரும் எஃகு மற்றும் கான்கிரீட் கலந்த பாலமாகும். இது ஜம்மு-காஷ்மீரின் பக்கலுக்கு-ம் கவுரிக்கும் இடையில் கட்டப்பட்டு வருகிறது. கட்டி முடிந்ததும், இந்தப் பாலம் உலகின் மிகவுயர்ந்த பாலமாக இருக்கும். சமீபத்தில், இந்த இரயி-ல்வே பாலத்தின் வளைவின் அடிப்பகுதியை நிர்மாணித்ததன்மூலம் ஒரு பொறியியல் சாதனை அடையப்பெற்றுள்ளது.

---

**5. நாடாளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியத்தின் தலை-மையகம் அமைந்துள்ள இடம் எது?**

**அ) ஜெனீவா ☑** ஆ) ரோம்

இ) பாரிஸ் ஈ) நைரோபி

✓ நாடாளுமன்ற முறைகள் மற்றும் பேச்சுவார்த்தைமூலம் அமைதியை மேம்படுத்துவதற்காக, 1889ஆம் ஆண்டில் நாடாளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியம் நிறுவப்பட்டது. நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் துவார்டே பச்சேகோ சமீபத்தில் புது தில்லிக்கு வருகை தந்து மாநிலங்களவையின் நடவடிக்கைகளை கண்டார். நாடாளுமன்றங்க-ளுக்கு இடையேயான ஒன்றியமானது 179 நாடாளுமன்ற உறுப்பினர்-களையும் 13 இணை-உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

---

**6. முதலாவது தேசிய மருந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்ட மாநிலம் எது?**

அ) குஜராத்

**ஆ) பஞ்சாப் ☑**

இ) இராஜஸ்தான்

ஈ) மகாராஷ்டிரா



✓ பஞ்சாபின் மொகாலியில் உள்ள தேசிய மருந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை தேசிய முக்கியத்துவம்வாய்ந்த ஒரு நிறுவனமாக அறிவிப்-பதற்காக 1998ஆம் ஆண்டின் தேசிய மருந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி சட்டம் இயற்றப்பட்டது. ஆமதாபாத், கௌகாத்தி, ஹாஜிபூர், ஹைதராபாத், கொல்கத்தா மற்றும் ரேபரேலி ஆகிய இடங்களில் ஆறு புதிய நிறுவனங்கள் 2007-08'ஆம் காலகட்டத்தில் அமைக்கப்பட்டன.

✓ ஆறு நிறுவனங்களுக்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த குறிச்சொல்லை வழங்க சமீபத்தில் ஒரு மசோதா மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

---

**7. சுரங்கங்கள் மற்றும் தாதுக்கள் திருத்த மசோதா-2021, DMF'க்கு வழிகாட்டுதல்களை வழங்க நடுவணரசுக்கு அதிகாரமளிக்க முயற்சி செய்கிறது. DMF என்றால் என்ன?**

அ) Deposit Mineral Fund

**ஆ) District Mineral Foundation ☑**

இ) Deep Mine Fund

ஈ) District Mine Fund

✓ சுரங்கங்கள் மற்றும் தாதுக்கள் (மேம்பாடு & ஒழுங்குமுறை) திருத்த மசோதா-2021 மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது, சுரங்கங்க-ள் மற்றும் தாதுக்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957'ஐ திருத்துகிறது. தன்பயன் மற்றும் வணிக சுரங்கங்களுக்கு இடையிலான வேறுபாட்டை நீக்க இந்தச்சட்டம் முயற்சி செய்கிறது.

✓ மாவட்ட கனிம அறக்கட்டளை (DMF) பராமரிக்கும் நிதிகளின் அமைப்பு மற்றும் பயன்பாடு குறித்த வழிமுறைகளை வெளியிடுவதற்கு இது நடுவணரசுக்கு அதிகாரமளிக்கிறது.

---

**8. 'My Life in Full: Work, Family and Our Future' என்பது பின்வரும் யாரின் நினைவுக்குறிப்பாகும்?**

அ) கிரண் மஜும்தார் ஷா

**ஆ) இந்திர நூயி ☑**

இ) சுதா மூர்த்தி

ஈ) விகா சர்மா



✓ 'My Life in Full: Work, Family and Our Future' என்பது 65 வயதான முன்னாள் பெப்சிகோ தலைமைச் செயல் அதிகாரி இந்திரா நூயியின் நினைவுக்குறிப்பாகும். இது, 2021 செப்டம்பர் மாதத்தில் போர்ட்போலி-யோ புத்தகங்கள் நிறுவனத்தால் வெளியிடப்படும்.

✓ இது, குழந்தைப் பருவத்திலிருந்து உலகின் மிகவும் ஆற்றல்வாய்ந்த பெண்களுள் ஒருவராக மாறும்வரை அவரது வாழ்க்கையை விவரிக்கி-றது. 24 ஆண்டுகள் பெப்சிகோவில் பணியாற்றிய இந்திரா நூயி, அதன் தலைமைச் செயல் அதிகாரியாக 12 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

---

**9. COVID-19 கொள்ளைநோய் காரணமாக MPLADS நிதி, எந்த ஆண்டு வரை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது?**

அ) 2021 **ஆ) 2022 ☑**

இ) 2023 ஈ) 2024

**2022**

- ✓ COVID-19 கொள்ளைநோய் காரணமாக 2020-21 மற்றும் 2021-22ஆம் ஆண்டுகளில், புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (MPLADS) நிதி வழங்கப்படமாட்டாது என்று மத்திய அரசு அறிவித்தது.
- ✓ 2019-20ஆம் ஆண்டிற்கான MPLADS நிதி, மத்திய நிதியமைச்சகத்தால் விடுவிக்கப்பட்டு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக நடுவண் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மாநிலங்களவைக்குத் தெரிவித்தார்.

---

**10. 'ஆசியா மற்றும் பசிபிக் SDG முன்னேற்ற அறிக்கை-2021'ஐ வெளியிட்ட அமைப்பு எது?**

அ) ADB

**ஆ) UN ESCAP ☑**

இ) IMF

ஈ) AIIB

- ✓ ஆசிய மற்றும் பசிபிக் நாடுகளுக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (UN ESCAP) ஆசியா மற்றும் பசிபிக் SDG முன்னேற்ற அறிக்கையின் 2021 பதிப்பை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, COVID-19 கொள்ளைநோய்க்குள் நுழைவதற்கு முன்னர், இப்பகுதி 2020 இலக்குகளை வெகுவாக அடையவில்லை.
- ✓ உலகளாவிய பைங்குடில் வாயு வெளியேற்றத்தில் பாதிக்கும்மேலானது ஆசிய-பசிபிக் பிராந்தியத்துடையதாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழகத்தில் 1940 கி.மீ. தொலைவு சாலைகள் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றம்: நிதின் கட்கரி**

தமிழ்நாட்டில் உள்ள மாநில தேசிய சாலைகளில் 1940 கிலோ மீட்டர் தொலைவு சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றப்பட்டு தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 235 மாநில நெடுஞ்சாலைகள் 11,175 கிலோ மீட்டர் தொலைவுக்கு உள்ளது. 50 தேசிய நெடுஞ்சாலைகள் 6,858 கிலோ மீட்டர் தொலைவுக்கு உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் 1940 கிலோ மீட்டார் சாலைகள் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டு தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சி மேம்பாட்டிற்கு மத்திய அரசு நடப்பு நிதியாண்டு வரை கடந்த மூன்று ஆண்டுகளில் ₹8,395 கோடி வரை செலவிட்டுள்ளது.

---

**2. காப்பீட்டுத் துறையில் 74% அந்நிய நேரடி முதலீடு: மாநிலங்களவையில் மசோதா நிறைவேறியது**

காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டை 74 சதவீதமாக உயர்த்த வழிவகுக்கும் காப்பீட்டு சட்டதிருத்த மசோதா (2021) மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.

**உயரும் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பு:** காப்பீட்டுத்துறையில் அந்நிய நேரடி முதலீடு இப்போது 49 சதவீதம் அனுமதிக்கப்படுகிறது. இதனை, 74 சதவீதமாக உயர்த்த காப்பீட்டு சட்டதிருத்த மசோதா - 2021 வழிவகை செய்கிறது. மேலும், இதன்மூலம் வெளிநாட்டு நிறுவனங்கள், இந்திய காப்பீட்டு நிறுவனங்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியு-ம் என்பது குறிப்பிடத்தக்கது.

காப்பீட்டுச்சட்டம், 1938 ஏற்கனவே இருமுறை திருத்தப்பட்டுள்ளது. முதல் முறையாக வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் காப்பீட்டுச் சட்டம் திருத்தப்பட்டது. அப்போது 26% அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டது. அதன்பிறகு 2015'இல் அந்நிய நேரடி முதலீட்டை 49 சதவீதமாக உயர்த்தி திருத்தம் செய்யப்பட்டது. தற்போது, அதனை 74 சதவீதமாக உயர்த்த திருத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**₹26,000 கோடி அந்நிய நேரடி முதலீடு:**

மாநிலங்களவையில், அந்நிய நேரடி முதலீடு உயர்த்தப்படுவதற்கான காரணத்தை விளக்கிய நிர்மலா சீதாராமன், 'காப்பீட்டு நிறுவனங்களின் பணப்புழக்கத்தில் பிரச்சனைகள் உள்ளன. இப்போது அந்நிய நேரடி முதலீட்டு வரம்பு உயர்த்தப்பட்டுள்ளதன்மூலம் காப்பீட்டு நிறுவனங்களின் முதலீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். அந்நிய நேரடி முதலீட்டு வரம்பு உயர்வு, காலனியாதிக்கம்போன்ற நிலையை மீண்டும் உருவாக்-கும் என்ற கருத்து தவறானது. 2015'இல் காப்பீட்டுத் துறையில் நேரடி அந்நிய முதலீடு 49 சதவீதமாக உயர்த்தப்பட்ட பிறகு ₹26,000 கோடி முதலீடு கிடைத்துள்ளது.

---

**3. ஓர் ஆண்டுக்குள் தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கச்சாவடிகள் அகற்றப்பட்டு GPS கட்டண முறை அமல்படுத்தப்படும்: நிதின் கட்கரி**

நாட்டில் ஓராண்டுக்குள் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச் சாவடிகள் அகற்றப்பட்டு GPS அடிப்படையில் கட்டணம் வசூலிக்கும் முறை அமல்படுத்தப்படும் என சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்தார்.

சுங்கப்பாதைகளில் வாகனங்கள் கட்டணங்களை செலுத்துதற்கு பதிலாக மின்னணு முறையில் கட்டணம் செலுத்தப்பட்ட, 'Fastag' முறை கடந்த 2016ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

நாட்டிலேயே மின்னணு மூலமான சுங்கக்கட்டணத்தை அதிக அளவில் செலுத்திய மாநிலமாக தமிழ்நாடு இருப்பதாகவும், தமிழ்நாட்டில் 2019-20 ஆம் ஆண்டில் வசூலான சுங்கக்கட்டணம் ₹782.03 இலட்சமாகும்.

---

**4. பழைய வாகன அழிப்பு சான்றிதழ் சமா்ப்பித்தால் புதிய வாகன விலையில் 5% தள்ளுபடி: நிதின் கட்கரி**

பழைய வாகன அழிப்பு சான்றிதழை சமர்ப்பித்தால் புதிய வாகன விலையி-ல் 5% தள்ளுபடி அளிக்கப்படும் என்று மத்திய சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி கூறினார். 2021-22 மத்திய நிதிநிலை அறிக்கையில் பழைய வாகனங்களுக்கான அழிப்புக் கொள்கை அறிவிக்கப்பட்டது. அதில், 15 ஆண்டுகளைக் கடந்த பேருந்துகள், சரக்கு உந்துகளையும், 20 ஆண்டுகளைக்கடந்த கார், பைக் உள்ளிட்ட தனிநபர் பயன்பாட்டு வாகனங்களையும் பயன்பாட்டிலிருந்து அப்புறப்படுத்தும் வகையில் திட்டங்கள் இடம்பெற்றிருந்தன.

---

**'கரோனாவால் இறந்தவர்களைவிட சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்கள் அதிகம்'**

*புது தில்லி, மார்ச் 18:* கடந்த ஆண்டு கரோனா தொற்றால் உயிரிழந்தவர்களைவிட சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி கூறினார்.

மக்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு அவர் வியாழக்கிழமை அளித்த பதில்:

கடந்த ஆண்டு கரோனா தொற்றால் 1.46 லட்சம் பேர் உயிரிழந்தனர். ஆனால், அதை விட அதிகமாக, கடந்த ஆண்டு சாலை விபத்துகளில் 1.5 லட்சம் பேர் உயிரிழந்தனர். குறிப்பாக, சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் 18 முதல் 35 வயதுக்கு உள்பட்டவர்கள்.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, சாலை விபத்துகளை பெருமளவு குறைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுத்து வருகிறது என்றார் அவர்.

**ஐ.டி. துறையில் 2 லட்சம் வேலைவாய்ப்புகள்**



கடந்த 2019-இல் இருந்து தகவல் தொழில்நுட்பத் துறையில் (ஐ.டி.) புதிதாக 2 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் கூறினார். மாநிலங்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு அவர் அளித்த பதில்:

ஐ.டி. துறையில் 14 லட்சம் பெண்கள் உள்பட 46 லட்சம் பேர் பணியாற்றி வருகின்றனர். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 8 சதவீதம் ஐ.டி. துறையில் இருந்து கிடைக்கிறது. இந்தத் துறையில் கடந்த 2019-க்குப் பிறகு புதிதாக 2 லட்சம் பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர் என்றார் ரவிசங்கர் பிரசாத்.

ஏஐஜேஎஸ்: ஐஏஎஸ், ஐபிஎஸ் பணிகளைப் போன்று நீதித் துறையை வலுப்படுத்துவதற்கு அகில இந்திய சட்டப் பணிக்கான அமைப்பு (ஏஐஜேஎஸ்) உருவாக்கப்பட வேண்டியது அவசியம் என்று மத்திய சட்டத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் கூறினார். மாநிலங்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு அவர் அளித்த பதில்:

அகில இந்திய அளவில் சட்டப் பணிகளுக்கான அமைப்பை தொடங்குவது குறித்து கடந்த 2012-ஆம் ஆண்டில் இருந்து மாநில அரசுகளுடன் மத்திய அரசு கலந்தாலோசித்து வருகிறது.

இந்த அமைப்பை உருவாக்குவதன் மூலமாக, அகில இந்திய அளவில் தகுதியான வழக்குரைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு வாய்ப்பு வழங்க முடியும் என்றார் அவர்.

**2020-இல் 26,100 இந்திய வலைதளங்கள் முடக்கம்**

கடந்த ஆண்டு இந்தியாவில் 26,100-க்கும் மேற்பட்ட வலைதளங்கள் முடக்கப்பட்டதாக, நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது. மாநிலங்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் சஞ்சய் தோத்ரி எழுத்துபூர்வமாக அளித்த பதில்:

இந்தியாவைச் சேர்ந்த வலைதளங்கள் அவ்வப்போது முடக்கப்பட்டு வருகின்றன. கடந்த 2020-இல் மட்டும் 26,121 வலைதளங்கள் முடக்கப்பட்டுள்ளன. அவற்றில் 59 வலைதளங்கள், மத்திய, மாநில அரசுத் துறைகளைச் சேர்ந்தவை.

இந்திய கணினிசார் அவசர நடவடிக்கை குழு (சிஇ-ஆர்டி-இன்) அளித்த தகவல்படி, இந்த வலைதளங்கள் பிரேசில், சீனா, பாகிஸ்தான், பிரான்ஸ், ஜெர்மனி, ஹாங்காங், இந்தோனேசியா, நெதர்லாந்து, வடகொரியா, ரஷியா, செர்பியா, தென்கொரியா, தாய்லாந்து, அமெரிக்கா, வியத்நாம் உள்ளிட்ட நாடுகளில் இருந்து முடக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

**5. தான்சானியா அதிபர் மறைவு**

இதய நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த தான்சானியா அதிபர் ஜான் மகுஃபுலி காலமானார். அவருக்கு வயது 61. இதனை அந்நாட்டின் துணை அதிபர் சமியா சுலுஹூ அறிவித்தார்.

---

**6. கரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் ரத்த தானம் செய்யலாமா?**

இந்தியாவில் 'கோவிஷீல்டு', 'கோவேக்ஸின்' எனும் 2 தடுப்பூசிகள் புழக்கத்தில் உள்ளன. 'கோவிஷீல்டு' தடுப்பூசியில் சிம்பன்ஸி குரங்கை பாதிக்கும் அடினோவைரஸில் மரபணுவை மாற்றி, அதனுள் வீரியம் இழந்த 'நாவல்கரோனா' வைரஸின் 'கூர்ப்புரத'த்தைச் செலுத்திவிடுகின்றனர். இந்த வைரஸால் மனித உடலுக்குள் பிரதி எடுத்து வளர்ச்சியடைய முடியாது. 'கோவேக்ஸின்' தடுப்பூசியில் இறந்த நிலையில் உள்ள 'நாவல்கரோனா' வைரஸைப் பயன்படுத்துகின்றனர். இந்த வைரஸாலும் மனிதஉடலுக்குள் வளர்ச்சியடைய முடியாது.

மாடர்னா, பைசர் நிறுவனங்கள்தயாரித்துள்ள கரோனா தடுப்பூசிகளில் நாவல் கரோனா வைரஸ் 'mRNA' பயன்படுத்தியுள்ளனர். இதனாலும் மனித உடலுக்குள்சென்றதும் கரோனா வைரஸாக உருவாக முடியாது. எனவே தடுப்பூசிபோட்டுக் கொண்டவர்கள் ரத்ததானம் செய்வதால் அந்த ரத்தத்தைப் பெற்றுக்கொண்டவருக்கு கரோனா தொற்று ஏற்பட்டுவிடுமோ என்று பயப்பட வேண்டியதில்லை. எப்போதும்போல் இரத்த தானம் செய்யலாம். இரத்தம் அளித்த பிறகு கொடையாளரின் உடலில் உருவாகும் புதிய இரத்தத்திலும் கரோனா எதிரணுக்கள் உற்பத்தியாகிவிடும்.

**உலக நடைமுறை**

சிலருக்கு தடுப்பூசி போட்டுக்கொண்ட ஒரு வாரத்துக்குள் மிதமான காய்ச்சல், உடல்வலி, தலைவலி, அசதிபோன்ற சிறிய அளவிலான தொல்லைகள் ஏற்படக்கூடும். அப்போது ரத்த தானம் செய்யக்கூடாது. ஒரு வாரம் கழித்து ரத்ததானம் செய்யலாம் என்ற வழிமுறை உலகளவில் பின்பற்றப்படுகிறது.

**இந்திய நடைமுறை**

இந்தியாவில் ரத்த தானம் செய்ய, உலக நடைமுறையிலிருந்து ஒருமாற்றத்தைக் கொண்டுவந்துள்ளனர். 'கோவிசீல்டு', 'கோவேக்சின்' இரண்டில் எதுவானாலும் இரண்டாம் தவணை தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகு 28 நாட்கள் கழித்து இரத்த தானம் செய்யலாம் என்று 'தேசிய இரத்தமேற்றும் கழகம்' அறிவித்துள்ளது.

ஒருவேளை கரோனா தடுப்பூசிபோட்டுக்கொண்டவரின் ரத்தத்தைப் பெற்றுக் கொள்பவருக்கு 'சுயத்தடுப்பாற்றல் சீர்குலைவு' (Auto immune disorder) இருந்தால், புதிதாக செலுத்தப்பட்ட ரத்தத்தில் உள்ள கரோனா எதிரணுக்கள் அந்தநோயுள்ளவரின் உடலையும் பாதிக்க வாய்ப்புள்ளது என்பதுதான்காரணம். 28 நாட்கள் கழித்து ரத்ததானம் செய்தால் அந்த எதிரணுக்கள் பயனாளி உடலுக்குப் பாதகம் செய்யாது என்று ஒரு மருத்துவக் கணிப்பு உள்ளது. இதைக் கருத்தில் கொண்டும் மிக அரிதாக நிகழும்இந்தப் பாதிப்பைக் கவனத்தில் கொண்டும் 28 நாட்கள் கழித்து ரத்த தானம் செய்யும் வழிமுறையை இந்தியாவில் பின்பற்ற ஆலோசனை வழங்கியுள்ளனர்.

**'தேற்றாளர் ரத்தத் திரவம்' தானம் செய்யலாமா?**

கரோனா தொற்றாளர்களுக்கு 'தேற்றாளர் ரத்தத் திரவம்' (Convalescent plasma) வழங்கப்படுவது ஒரு சிகிச்சை முறையாக உள்ளது. இவர்களுக்கு கரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களின் ரத்தத் திரவத்தை எடுத்து சிகிச்சைக்குப் பயன்படுத்த முடியாது.

தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களின் ரத்தத்தில் உருவாகும் எதிரணுக்கள் கரோனாவுக்கு எதிரான தடுப்பாற்றலைத் தரும். அதாவது, கரோனா வைரஸ்கள் உடலுக்குள் நுழையும்போதே அவற்றை கண்டறிந்து எதிர்த்துப் போராடி கரோனாவை வெற்றிகொள்ளும். ஆனால், கரோனா தொற்றாளர்கள் உடலில் ஏற்கெனவே கரோனா வைரஸ்கள் குடிபுகுந்திருக்கும். அவற்றுக்கு எதிராக தடுப்பூசி மருந்துகள் போராட முடியாது.

தடுப்பூசி என்பது நோயைக் குணப்படுத்தும் மருந்து அல்ல; நோய் வருவதை தடுக்கும் மருந்து. ஆகவே, கரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் 'தேற்றாளர் ரத்தத் திரவ' தானம் செய்ய முடியாது.

**ரத்த வங்கிகளின் பிரச்சினைக்கு தீர்வு என்ன?**

இரண்டாம் தவணை தடுப்பூசிபோட்டுக்கொண்டபிறகு 28 நாட்கள் கழித்து இரத்ததானம் செய்யலாம் எனும் அறிவிப்பு இந்திய இரத்த வங்கிகளுக்குப் பிரச்சினையாகி உள்ளது. ஏற்கெனவே கரோனா தடுப்பூசி இரண்டாம் தவணைக்கு 28 நாட்கள் இடைவெளி தேவைப்படுகிறது. இரண்டாம் தவணையைப் போட்டுக்கொண்ட பிறகு 28 நாட்கள் கழித்து ரத்த தானம் செய்யலாம் என்றால், மொத்தத்தில் 56 நாட்கள் காத்திருக்க வேண்டும். கரோனா பாதிப்பால் ரத்த தானம் செய்வோர் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில் இந்த அறிவிப்பு ரத்த வங்கிகளின் நிலைமையை இன்னும் மோசமாக்கிவிடும். தகுதியான கொடையாளர்கள் முதலில் ரத்ததானம் செய்துவிட்டு, அடுத்ததாக கரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டால், இந்த நிலைமையைச் சமாளிக்க முடியும்.

---

**7. தலைமன்னார் – தனுஷ்கோடி இடையே 30 கி.மீ. தூரம் கொண்ட பாக் ஜலசந்தியை நீந்திக் கடக்கும் சியாமளா: அனிமேஷன் பட இயக்குநரின் சாதனை முயற்சி**

தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையிலான சுமார் 30 கிமீ தூரம் கொண்ட பாக் ஜலசந்தி கடற்பகுதியை ஹைதராபாத்தை சேர்ந்த நீச்சல் வீராங்கனை கோலி சியாமளா நீந்தியே கடக்கவுள்ளார். இதன்மூலம், பாக் ஜலசந்தி கடற்பகுதியை நீந்திக் கடந்த முதல் இந்தியப் பெண் என்ற பெருமையை கோலி சியாமளா பெறுவார். இவர் அனிமேஷன் படங்களின் இயக்குநர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தையும், இலங்கையையும் பாக் ஜலசந்தி கடற்பகுதி பிரிக்கிறது. ராமேசுவரம் தீவும், அதை தொடர்ந்துள்ள மணல் திட்டுக்களான ராமர் பாலமும் பாக்ஜலசந்தி கடற்பகுதியை மன்னார் வளைகுடாவிலிருந்து பிரிக்கிறது. தமிழ்நாட்டிலேயே மிகவும் ஆழம்குறைந்த, அதே சமயம் பாறைகளும் ஆபத்தான ஜெல்லி மீன்களும் நிறைந்த கடற்பகுதி இது.

பாக் ஜலசந்தி கடற்பகுதியை இலங்கை வல்வெட்டித்துறையைச் சார்ந்த நவரத்தினசாமி என்ற தமிழர் முதன்முதலாக 1954ஆம் ஆண்டு நீந்திக் கடந்தார். தொடர்ந்து கடந்த 1966'இல் கொல்கத்தாவைச் சார்ந்த மிகிர்சென் என்பவர் பாக் ஜலசந்தியை தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை நீந்திக்கடந்தார். வல்வெட்டித்துறையைச் சார்ந்த நீச்சல் வீரரான குமார் ஆனந்தன் 1971'இல் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கு நீந்தி வந்து, மீண்டும் தலைமன்னாருக்கு 51 மணி நேரத்தில் நீந்திச் சென்று சாதனை படைத்தார்.

2019'இல் தேனி மாவட்டம் அல்லிநகரத்தை சேர்ந்த ஜெய் ஜஸ்வந்த் என்ற 10 வயது பள்ளி மாணவர் பாக் ஜலசந்தியை நீந்திக்கடந்தார். அதுபோல, கடந்த 2020 பிப்ரவரியில் அமெரிக்காவைச் சார்ந்த எடி ஹு (45) என்பவர் முதல் பெண்ணாக பாக் ஜலசந்தி கடற்பகுதியை நீந்திக்கடந்தார்.

---

**8. கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழாய்வு பணி தொடக்கம்**

அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில், தமிழக தொல்லியல் துறை அகழாய்வை தொடங்கியுள்ளது. தமிழக தொல்லியல் துறை சார்பில், தமிழகத்தில், ஏழு இடங்களில் இந்தாண்டு அகழாய்வு செய்யப்பட உள்ளன. இதில், அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரம் எனும் ஊர், 1000 ஆண்டுகளுக்குமுன், இராஜேந்திர சோழனின் தலைநகராக விளங்கியது.

இங்கு, ஏற்கனவே, தமிழக தொல்லியல் துறை சார்பில் நடந்த அகழாய்வில், இராஜேந்திர சோழனின் அரண்மனை இருந்த தடயங்கள் கண்டறியப்பட்டன. இந்நிலையில், கடந்த மாதம், இங்கு கள ஆய்வுப் பணிகள் நடந்தன. அதில், தொல்பொருட்கள் இருக்கும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு, ஒரு வாரத்திற்கு முன், அகழாய்வுப்பணிகள் தொடங்கின.

---

**9. தேசிய சீனியர் தடகளம்: 200 மீட்டர் ஓட்டத்தில் பி.டி. உஷாவின் சாதனையை முறியடித்தார் தனலட்சுமி**

24ஆவது பெடரேஷன் கோப்பைக்கான தேசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் நடந்துவருகிறது. இதில், 4ஆவது நாளன்று நடந்த பெண்களுக்கான 200 மீட்டர் ஓட்டத்தின் தகுதி சுற்றில் தமிழ்நாட்டின் S தனலட்சுமி (23.26 வினாடி), முன்னணி வீராங்கனையான அசாமைச்சார்ந்த ஹிமா தாஸை (24.39 வினாடி) பின்னுக்கு தள்ளி தனது பிரிவில் முதலிடத்தை பிடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். அத்துடன் இந்தப் போட்டியில் தனலட்சுமி புதிய சாதனையும் படைத்தார். இதற்குமுன்பு கடந்த 1998ஆம் ஆண்டில் சென்னையில் நடந்த பெடரேஷன் கோப்பை போட்டியில் முன்னாள் பிரபல வீராங்கனை P T உஷா (கேரளா) 23.30 வினாடியில் பந்தய தூரத்தை கடந்ததே சாதனையாக இருந்தது. அந்தச் சாதனையை தனலட்சுமி முறியடித்தார். 100 மீட்டர் ஓட்டத்தில் தனலட்சுமி, ஒடிசாவின் டுட்டீ சந்தை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்று இருந்தது குறிப்பிடத்தக்கது. உயரம் தாண்டுதலில் தமிழக வீராங்கனை கிரேஸ்னா கிலிஸ்டஸ் மேரி 1.84 மீட்டர் தாண்டி தங்கப்பதக்கத்தை தனதாக்கினார். 20 வயதான அவர் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்தவர் ஆவார். அரியானா வீராங்கனை ரேகா (1.75 மீட்டர்) வெள்ளிப்பதக்கமும், தமிழக வீராங்கனை ஜிஜி ஜார்ஜ் ஸ்டீபன் (1.70 மீட்டர்) வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

**1.** **மக்களவையில், தேசிய தலைநகர் தில்லி (திருத்த) மசோதா, 2021 'ஐ அறிமுகப்படுத்திய அமைச்சகம் எது?**

அ) கல்வி அமைச்சகம்

**ஆ) உள்துறை அமைச்சகம் ☑**

இ) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

ஈ) வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ மத்திய உள்துறை அமைச்சகமானது அண்மையில், தேசிய தலைநகர் தில்லி (திருத்த) மசோதா, 2021 'ஐ மக்களவையில் அறிமுகம் செய்தது. இம்மசோதா, 'தில்லி அரசு' என்பதன் பொருளை 'தில்லியின் துணைநி-லை' என்று மறுவரையறை செய்ய முயற்சி செய்கிறது. இந்த மசோதா தில்லியின் துணைநிலை ஆளுநருக்கு அவரது விருப்பப்படி அதிகாரங்க-ளை வழங்க முற்படுகிறது.

---

**2.** **2020-21 காலப்பகுதியில் MGNREGS'இன்கீழ், வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் முதலிடம் வகித்த மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) கோவா

**இ) இராஜஸ்தான் ☑**

ஈ) ஹரியானா

✓ 2020-21 காலப்பகுதியில், MGNREGS'இன்கீழ், இந்தியா, ஒட்டுமொத்த-மாக 366 கோடி நபர்களின் வேலை நாட்களை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகளிலே-யே இதுதான் அதிகபட்சமாகும். மாநிலங்களில், ராஜஸ்தான் 43 கோடி நபர்களின் வேலை நாட்களை உருவாக்கி முதலிடத்தில் உள்ளது. அதைத்தொடர்ந்து மேற்கு வங்கம், உத்தரபிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் உள்ளன.

---

**3.** **உலக மறுசுழற்சி நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) மார்ச் 18 ☑**

ஆ) ஏப்ரல் 18

இ) மே 18

ஈ) ஜூன் 18



✓ உலக மறுசுழற்சி நாளானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.18 அன்று அனுச-ரிக்கப்படுகிறது. நமது புவியின் இயற்கை வளங்கள் விரைவாகப் பயன்-படுத்தப்படுவது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்நாள் அமைந்துள்ளது. மறுசுழற்சி செய்வதற்கான கருத்தை-யும் பழக்கத்தையும் இந்த நாள் ஊக்குவிக்கிறது.

✓ "Recycling Heroes" என்பது நடப்பாண்டில் (2021) வரும் உலக மறுசுழற்சி நாளுக்கான கருப்பொருளாகும்.

---


**4.** **உலக கவிதைகள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) மார்ச் 20

**ஆ) மார்ச் 21 ☑**

இ) மார்ச் 22

ஈ) மார்ச் 23




✓ கவிதைகளைப் படித்தல், படைத்தல், பயிற்றுவித்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.21 அன்று உலக கவிதைகள் நாள் கொண்டாடப்படுகிறது.

✓ ஐநா அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பான UNESCO நிறுவனத்தால் 1999ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 30ஆவது அமர்வின்போது அறிவிக்கப்பட்டு, உலக நாடுகள் முழுவதும் இந்த நாள் கொண்டாடப்பட்டுவருகிறது.

---

**5.** **நடப்பாண்டில் (2021) வரும் பன்னாட்டு மகிழ்ச்சி நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Share Happiness

ஆ) Angry Birds Happy Planet

இ) Reclaim Happiness

**ஈ) Happiness for all, forever ☑**



✓ மகிழ்ச்சியாக இருப்பது மானுடர்களின் அடிப்படை உரிமை என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மார்ச். 20 அன்று உலகம் முழுவதும் பன்னாட்டு மகிழ்ச்சி நாள் கொண்டாடப்ப-டுகிறது. "Happiness for all, forever" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**6.** **உலக சிட்டுக்குருவிகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ) மார்ச் 20 ☑**

ஆ) மார்ச் 21

இ) மார்ச் 22

ஈ) மார்ச் 23



✓ நவீன உட்கட்டமைப்பு, நுண்ணலை கோபுரங்கள் மற்றும் பூச்சிக்கொல்-லிகளால் ஏற்படும் மாசுகள் மற்றும் குறைந்துவரும் பசுமைவெளிகள் போன்ற காரணங்களால் அருகிவரும் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்-கையை மக்களுக்கு எடுத்துக்கூறி அதன்மூலம் அவர்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கடந்த 2010ஆம் ஆண்டிலிருந்து உலக சிட்டுக்குருவிகள் நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

✓ "I Love Sparrows" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். Nature Forever Society of India என்னும் அமைப்பு, பிரான்ஸைச் சார்ந்த Eco-Sys Action Foundation என்னும் தொண்டு நிறுவனம் மற்றும் பல்வேறு பன்னாட்டு அமைப்புகளால் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

---

**7.** **2021 உலக தூக்க நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ) மார்ச் 19 ☑**

ஆ) மார்ச் 20

இ) மார்ச் 21

ஈ) மார்ச் 22



✓ ஒவ்வோர் ஆண்டும் இளவேனிற்கால சம இரவு நாளுக்கு முந்தைய நாளன்று உலக தூக்க நாள் அனுசரிக்கப்படுகிறது. நடப்பாண்டு (2021) மார்ச்.19 அன்று இந்நாள் வருகிறது. இதை உலக தூக்க சங்கத்தின் உலக தூக்க நாள் குழுமம் ஏற்பாடு செய்கிறது. "Regular Sleep, Healthy Future" என்பது நடப்பாண்டு வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**8.** **நடப்பாண்டில் (2021) வரும் பன்னாட்டு காடுகள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Forests and Water

ஆ) Forests and Energy

இ) Forests and Sustainable Cities

**ஈ) Forest restoration: a path to recovery and well-being ☑**



✓ அனைத்து வகையான காடு மற்றும் மரங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான ஒரு நாளாகவும், அவைகள் தம்மையும் தம்மை சார்ந்திருக்கும் மற்றவையையும் பாதுகாக்க பயன்ப-டுத்தும் வழிகளை கொண்டாடுவதையும் நோக்கமாகக்கொண்டு ஒவ்-வோர் ஆண்டும் மார்ச்.21 அன்று பன்னாட்டு காடுகள் நாள் கடைப்பிடிக்-கப்படுகிறது. "Forest restoration: a path to recovery and well-being" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**9.** **நடப்பாண்டில் (2021) வரும் உலக தண்ணீர் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Why Waste Water?

**ஆ) Valuing Water ☑**

இ) Water is Life

ஈ) Better Water, Better Jobs




✓ தண்ணீரின் முக்கியத்துவம்பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.21 அன்று உலக தண்ணீர் நாள் கடைபிடிக்க-ப்படுகிறது. "Valuing Water" என்பது நடப்பாண்டில் (2021) வரும் உலக தண்ணீர் நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**10.மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு, 2020'இன்படி, சிறப்புவகை பெண்களுக்கு கருக்கலைப்பு செய்ய அனுமதிக்கப்படும் உச்சவரம்பு காலம் என்ன?**

அ) 20 வாரங்கள்

**ஆ) 24 வாரங்கள் ☑**

இ) 28 வாரங்கள்

ஈ) 32 வாரங்கள்

✓ மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு செய்வதற்கு தற்போதுள்ள 20 வார உச்சவரம்பிலிருந்து 24 வாரங்களாக அதை மாற்ற அனுமதிப்பதற்கான திருத்த மசோதாவை மாநிலங்களவை நிறைவேற்றியது.

✓ பாலியல் வண்புணர்விலிருந்து தப்பியவர்கள், தகாத உறவுமுறையால் பாதிக்கப்பட்டவர்கள், பருவ வயதினை எட்டாதோர் & மாற்றுத்திறனாளி–கள் உள்ளிட்ட சிறப்புவகை பெண்களுக்கு இந்த வரம்பு பொருந்தும். இந்த மசோதாவை, மக்களவை, ஓராண்டுக்கு முன்பு நிறைவேற்றியது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேவேந்திர குல வேளாளர் மசோதா மக்களவையில் நிறைவேற்றம்**

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இருந்த ஏழு பிரிவினரை அதிலிருந்து விலக்கி தேவேந்திர குல வேளாளராக அறிவிக்கும் மசோதா மக்களவையில் நிறைவேறியது. தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் இனப் பிரிவில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. இதிலுள்ள தேவேந்திரகுலத்தான், கடையன், காலாடி, குடும்பன், பள்ளன், பன்னாடி, வாதிரியான் ஆகிய ஏழு பிரிவினர்கள், தங்களை பட்டியல் இனப்பிரிவிலிருந்து விலக்கி ஒன்றாக இணைத்து தேவேந்திர குல வேளாளராக அறிக்கும்படி தமிழ்நாடு அரசிடமும் மத்திய அரசிடமும் கோரிவந்தனர்.

இதைத் தொடர்ந்து, அரசியலமைப்புச் சட்டம் 1950, பிரிவு 341'இன்கீழ் தகுந்த திருத்தங்கள் மேற்கொள்ள மத்திய அரசை, தமிழ்நாடு அரசு வலியுறுத்தி கேட்டுக்கொண்டது. மத்திய அமைச்சரவை ஒப்புதலின் பேரில் அரசியல் சாசன (தாழ்த்தப்பட்டோர் பிரிவு) திருத்த மசோதா – 2021, மக்களவையில் கடந்த பிப்.13 அன்று தாக்கலானது. மத்திய சமூக நீதித் துறை அமைச்சர் தாவர்சந்த் கெலாட் மசோதாவை தாக்கல் செய்தார்.

இம்மசோதா நிறைவேற்றப்பட்டதன்மூலம் தற்போது பட்டியலினப்பிரிவில் உள்ள தேவேந்திரகுலத்தான், கடையன், காலாடி, குடும்பன், பள்ளன், பன்னாடி, வாதிரியான் ஆகிய 7 பிரிவினரும் இனி 'தேவேந்திரகுலவேளா–ளர்' என அழைக்கப்படுவர்.

இதில் முக்கியமாக திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், புதுக்கோ–ட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 7 மாவட்டங்க–ளின் கடற்கரைபகுதியிலுள்ள 'கடையன்' பிரிவினர் மட்டும் தேவேந்திர குலவேளாளர் பிரிவில் சேர்க்கப்படவில்லை. மீனவர்களான அவர்கள், 'தேவேந்திரகுலவேளாளர்' பிரிவுக்குவர விருப்பமில்லை எனக்கூறியதால், அவர்கள் இந்தப்பிரிவில் சேர்க்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

---

**2. நீர் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான கட்டமைப்புகள் அவசியம்**

நீர் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான கட்டமைப்புகளை உலக நாடுகள் ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று ஐநா'இல் இந்தியா வலியுறுத்தி உள்ளது. உலக தண்ணீர் நாள் மார்ச்.22 அன்று கொண்டாடப்படுகிறது. அதையொட்டி, 'நீர்குறித்த ஐநாஇன் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை 2030ஆம் ஆண்டுக்குள் அடைதல்' என்ற தலைப்பிலான விவாதம் காணொலி வாயிலாக நடைபெற்றது.

அதில் மத்திய ஜல்சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் கூறு–கையில், "உலகில் சுமார் 110 கோடி மக்களுக்கு குடிநீர் முறையாகக் கிடைப்பதில்லை. சுமார் 270 கோடி மக்கள் ஆண்டில் ஒரு மாதமாவது குடிநீர்த்தட்டுப்பாட்டை எதிர்கொள்கின்றனர்". என்றார்.

2018–2028'ஆம் ஆண்டு வரையிலான தசாப்தத்தை 'தண்ணீருக்கான தசாப்தமாக' ஐநா அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**3. சுரங்க மேம்பாட்டு சட்டத்திருத்த மசோதா: மக்களவையில் நிறைவேற்றம்**

கனிமச்சுரங்க மேம்பாடு & ஒழுங்குமுறை சட்டத்திருத்த மசோதா, மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. கடந்த 1957'ஆம் ஆண்டைய சுரங்கங்கள், தாதுக்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான மசோதா, மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவது, இறக்கும–தியைக் குறைத்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வது ஆகிய நோக்கங்களுக்காக சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதன்மூலம், நேரடியாகவும் மறைமுகமாகவும் 55 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். தாதுவளஆராய்ச்சியில் தனியா–ருக்கு அனுமதியளிக்கப்படும். அந்நிறுவனங்கள் அதிநவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஆராய்ச்சியில் ஈடுபடும். அதிக எண்ணிக்–கையிலான சுரங்கங்களும் ஏலத்துக்கு விடப்படும். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுரங்கத்துறையின் பங்களிப்பு 1.75 சதவீதமா–க உள்ளது. இந்தச் சீர்திருத்தம்மூலம், அத்துறையின் பங்களிப்பு 2.5 சதவீதமாக அதிகரிக்கும்.

---

## 4 ஆண்டுகளில் 14,500 குழந்தைகள் தத்தெடுப்பு

*புது தில்லி, மார்ச் 19:* கடந்த 2017–ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 14,500–க்கும் மேற்பட்ட குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு மத்திய மகளிர், குழந்தைகள் நல மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி வெள்ளிக்கிழமை எழுத்துபூர்வமாக அளித்த பதில்:

கடந்த 2017–ஆம் ஆண்டில் இருந்து 2021–ஆம் ஆண்டு மார்ச் 16–ஆம் தேதி வரை 14,50–க்கும் மேற்பட்ட குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டனர். அவர்களில், 2,094 குழந்தைகள் வெளிநாட்டினராலும், 12,867 குழந்தைகள் இந்தியர்களாலும் தத்தெடுக்கப்பட்டனர்.

குறிப்பாக, 2017–18–இல் 3,927 குழந்தைகளும், 2018–19–இல் 4,027 குழந்தைகளும், 2019–20–இல் 3,745 குழந்தைகளும், 2020–21–இல் 3,260 குழந்தைகளும் தத்தெடுக்கப்பட்டனர் என்று அவர் கூறினார்.

## உணவு பாதுகாப்புச் சட்டம்: 12 ஆய்வுக் குழுக்கள்

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தால் ஏற்படும் தாக்கம் குறித்து ஆய்வு செய்ய 12 நிறுவனங்களின் குழுக்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாநிலங்களவையில் உணவு பாதுகாப்புத் துறை இணையமைச்சர் தன்வே ராவ்சாஹிப் தாதாராவ் கூறியதாவது:

கடந்த 2018–2020 வரையிலான காலகட்டத்தில் பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் என 26 குழுக்கள் ஆய்வுக்கு நியமிக்கப்பட்டன. தற்சமயம் 12 குழுக்ககள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்த குழுக்கள் உணவு பாதுகாப்புச் சட்டத்தை அமல்படுத்தியதால் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் என்றார் அவர்.

உணவு பாதுகாப்புச் சட்டம், கடந்த 2013–ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது. அந்த சட்டத்தின்படி, ஒரு குடும்பத்துக்கு மாதம் ஒன்றுக்கு 35 கிலோ உணவு தானியம் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் 81.83 கோடி பயன்பெறுகிறார்கள்.

---

**4. தான்சானியாவுக்கு முதல் பெண் அதிபர்**

கிழக்கு ஆப்பிரிக்க நாடான தான்சானியாவின் முதல் பெண் அதிபராக சமியா சுலுஹி ஹஸன் (61) பதவியேற்றார். அந்த நாட்டின் துணை அதிபராக இதுவரை பொறுப்பு வகித்து வந்த அவர், உடல்நலக்குறைவு காரணமாக அதிபர் ஜான் மெகுபுலி காலமானதைத்தொடர்ந்து அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இன்னும் ஐந்தாண்டுகளுக்கு சமியா சுலுஹி ஹஸன் அதிபர் பதவியை வகிப்பார்.

---

**5. இந்தியப்பொருளாதாரம் 12% வளர்ச்சி காணும்: மூடிஸ்**

இந்தியப்பொருளாதாரத்தின் வளர்ச்சி 2021'ஆம் ஆண்டில் 12 சதவீத–மாக இருக்கும் என சர்வதேச தர மதிப்பீட்டு நிறுவனமான மூடிஸ் அனாலிடிக்ஸ் தெரிவித்துள்ளது. கரோனா பொதுமுடக்கத்தின் விளை–வாக செப்டம்பர் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 7.5 சதவீதம் அளவுக்கு வீழ்ச்சியை சந்தித்தது. இந்த நிலையில், கட்டுப்பாடுகளில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டதன் எதிரொலியால் அண்மைக்காலமாக

பொருளாதார நடவடிக்கைகள் வேகமெடுத்துள்ளன. இது வளர்ச்சிக்கு மிகவும் உகந்த சூழலை உருவாக்கியதன் விளைவாக டிசம்பர் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி எதிர்பார்த்ததைக் காட்டிலும் வலுப்பெற்று 0.4 சதவீத வளர்ச்சி விகிதத்தை எட்டிப்பிடித்தது.

கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதிலிருந்து உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் மக்களிடையே நுகர்வுக்கான தேவை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இது, அண்மைக்காலங்களில் தயாரிப்புத்துறை உற்பத்தியை மேம்படுத்த வழிவகுத்துள்ளது. 2020'இல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.1 சதவீதமாக சரிவைக் கண்டிருந்தது. இந்த நிலையில், வளர்ச்சிக்கு உகந்தசூழல் காணப்படுவதால் நடப்பு 2021'இல் நாட்டின் பொருளாதாரம் 12 சதவீத வளர்ச்சியை எட்டுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது என மூடிஸ் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

---

### 6. TATA கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்திலிருந்து வெளியேறியது மத்திய அரசு

TATA கம்யூனிகேஷன்ஸின் பத்து சதவீத பங்குகளை விற்பனை செய்ததையடுத்து அந்த நிறுவனத்திலிருந்து வெளியேறியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து மத்திய தொலைதொடர்புத் துறை SEBI'க்கு அளித்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: TATA கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்தில் மத்திய அரசு 2,85,00,000 பங்குகளை வைத்திருந்தது. இது, அந்த நிறுவனத்தின் மொத்த பங்கு மூலதனத்தில் 10 சதவீதமாகும். இந்த 10 சதவீத பங்கு மூலதனத்தை TATA சன்ஸின் துணை நிறுவனமான பானாடோன் ஃபின்வெஸ்ட்டுக்கு 2021 மார்ச்.18'இல் விற்பனை செய்யப்பட்டது.

இதன்மூலம், TATA கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்திலிருந்து மத்திய அரசு முழுமையாக வெளியேறியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரிவர்த்தனைக்கு முன்னதாக, TATA கம்யூனிகேஷனில் மத்திய அரசுக்கு 26.12 சதவீத பங்குகளும், பானாடோன் ஃபின்வெஸ்ட்டுக்கு 34.80 சதவீத பங்குகளும், டாடா சன்ஸுக்கு 14.07 சதவீத பங்குகளும், பொதுமக்களிடம் எஞ்சிய 25.01 சதவீத பங்குகளும் இருந்தன. இதில், மத்திய அரசு 16.12 சதவீத பங்குகளை ஏற்கெனவே பங்கு ஒன்று ₹1,161 என்ற அடிப்படை விலையில் சில்லறை முதலீட்டாளர்களுக்கு விற்பனை செய்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**சர்வதேச சவால்கள் குறித்து ரிசர்வ் வங்கி குழு ஆய்வு**



*மும்பை, மார்ச் 19:* ரிசர்வ் வங்கியின் மத்திய இயக்குநர் வாரியக் குழு தற்போதைய பொருளாதார சூழல் குறித்தும் அதனால் எதிர்கொள்ள வேண்டிய சர்வதேச சவால்கள் குறித்தும் வெள்ளிக்கிழமை மதிப்பாய்வு நடத்தியது.

இதுகுறித்து ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையில் மத்திய இயக்குநர் வாரியக் குழுவின் 588–ஆவது ஆலோசனை கூட்டம் வெள்ளிக்கிழமை காணொலி மூலமாக நடைபெற்றது. இதில், தற்போதைய பொருளாதார சூழல் குறித்தும், சர்வதேச மற்றும் உள்நாட்டு அளவில் எழுந்துள்ள சவால்கள் குறித்தும் விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது. அடுத்த 2021–22 கணக்கியல் ஆண்டுக்கு மாறுவதற்கு 2020 ஜூலை முதல் 2021 மார்ச் வரையிலான ரிசர்வ் வங்கியின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து அலசப்பட்டது. மேலும் வரும் 2021–22 கணக்கியல் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்துக்கும் வாரியக் குழு ஒப்புதல் அளித்தது என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

---

### 7. மலிவான விலையில் குடிநீர் கிடைக்கும் நகரங்கள் பட்டியலில் பெங்களூரு!

மலிவான விலையில் குடிநீர் கிடைக்கும் உலக நகரங்கள் பட்டியலில் பெங்களூரு இரண்டாவது இடத்தைப்பிடித்துள்ளது. உலக நாடுகளின் முக்கிய நகரங்களில் உள்ள பல்பொருள் அங்காடிகளில் குடிநீர் போத்தல் சராசரியாக எவ்வளவு விலைக்கு விற்கப்படுகிறது என்பது குறித்த ஆய்வை தனியார் சுற்றுலா நிறுவனம் மேற்கொண்டது.

அமெரிக்காவின் முப்பது நகரங்கள், உலக நாடுகளின் நூற்றுக்கும் மேற்பட்ட நகரங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

குடிநீரின் விலை அதிகமாகக் காணப்படும் நகரங்களின் பட்டியலில் நார்வேயின் ஓஸ்லோ முதலிடத்தில் உள்ளது. அங்கு ஒரு போத்தல் குடிநீர் சுமார் ₹130'க்கு விற்கப்படுகிறது. இந்தப் பட்டியலின் முதல் 5 நகரங்களில் அமெரிக்காவைச்சார்ந்த 3 நகரங்கள் இடம்பெற்றுள்ளன.

குடிநீர் மலிவான விலைக்குக் கிடைக்கும் நகரங்கள் பட்டியலில் லெபனானின் பெய்ரூட் முதலிடத்தில் உள்ளது. அந்தப்பட்டியலில் கர்நாடக மாநிலத் தலைநகரான பெங்களூரு இரண்டாவது இடத்தில் உள்ளது. அங்கு ஒரு போத்தல் குடிநீரின் விலை சுமார் ₹9'ஆக உள்ளது. குடிநீரின் விலையுடன் சேர்த்து தரம் தொடர்பான ஆய்வையும் அந்த நிறுவனம் மேற்கொண்டது.

பெங்களூரில் குடிநீரின் தரம் சராசரி நிலையில் உள்ளதாக அந்த நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குடிநீர் விலை அதிகமாகக் காணப்படும் நகரங்கள்**

ஓஸ்லோ, நார்வே – ₹130

விர்ஜினியா கடற்கரை, அமெரிக்கா – ₹115

லாஸ் ஏஞ்சலீஸ், அமெரிக்கா – ₹110

நியூ ஓர்லியன்ஸ், அமெரிக்கா – ₹107

ஸ்டாக்ஹோம், சுவீடன் – ₹106

**குடிநீர் விலை மலிவாகக் காணப்படும் நகரங்கள்**

பெய்ரூட், லெபனான் – ₹3

பெங்களூரு, இந்தியா – ₹9

அக்ரா, கானா – ₹11

லாகோஸ், நைஜீரியா – ₹12

இஸ்தான்புல், துருக்கி – ₹13

---

### 8. தமிழ் உள்ளிட்ட 8 மொழிகளில் பொறியியல் பாடப்புத்தகம்– வரும் கல்வியாண்டு முதல் தாய்மொழி கல்வி அமல்: ஏஐசிடிஇ தலைவர் அனில் சகஸ்ரபுத்தே தகவல்

தமிழ் உள்ளிட்ட 8 பிராந்திய மொழிகளில் பொறியியல் பாடநூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகவும், வரும் கல்வியாண்டுமுதல் தாய்மொழிக்கல்வி அமலுக்கு வரவுள்ளதாகவும் AICTE தலைவர் அனில் சகஸ்ரபுத்தே தெரிவித்தார். நம் நாட்டின் தேசிய கல்விக்கொள்கை 1968ஆம் ஆண்டு முதன்முதலில் உருவாக்கப்பட்டது. பின்னர், 1986 & 1992 ஆகிய ஆண்டுகளில் கல்விக்கொள்கை திருத்தப்பட்டது. அதன்பின் கடந்த 2016ஆம் ஆண்டும் கல்விக்கொள்கையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், தேசிய கல்விக்கொள்கையில் 2019ஆம் ஆண்டு பல்வேறு திருத்தங்களும், மாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டு, கஸ்தூரி இரங்கன் தலைமையில் பரிந்துரைக்கப்பட்ட தேசிய கல்விக்கொள்கை, 2020'க்கு மத்திய அமைச்சரவை கடந்த ஆண்டு ஒப்புதல் அளித்தது.

---

### 9. ரூ.1,188 கோடியில் 4,960 ஏவுகணைகள்

தரைதளத்திலிருந்து, எதிரிகளின் பீரங்கிகளை தாக்கியழிக்கும், 4,960 ஏவுகணைகளை, ₹1,188 கோடி மதிப்பில் கொள்முதல்செய்ய, இராணுவ அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டது. கடந்த சில மாதங்களாக, நாட்டின் மூன்று படைப்பிரிவுகளின் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை, ராணுவ அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது.

இவற்றை, இராணுவ பொதுத்துறை நிறுவனமான பாரத் டைனமிக்ஸ், பிரான்ஸ் நாட்டின் தொழினுட்ப உதவியுடன் தயாரிக்கவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தான நிலையில், மூன்று ஆண்டுகளில் தயாரிப்பு பணிகள் நிறைவடையும் என, இராணுவ அமைச்சகம் கூறியுள்ளது.

---

### 10. புதிய தேசிய சாதனையோடு வட்டு எறிதல் வீராங்கனை கமல்பிரீத் கவுர் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி

24ஆவது பெடரேஷன் கோப்பைக்கான தேசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் நடந்தது. 5ஆம் நாளன்று நடந்த பெண்களுக்கான வட்டு எறிதலில் பஞ்சாப் வீராங்கனை கமல்பிரீத் கவுர் 65.06 மீ தூரம் எறிந்து தேசிய சாதனையோடு தங்கப்பதக்கத்தை சொந்தமாக்கினார். தனது முதல் முயற்சிலேயே நீண்டதூரம் வீசி அசத்திய கமல்பிரீத் கவுர் (25) ஜூலை–ஆகஸ்டில் நடக்கும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கும் தகுதி பெற்றார். ஒலிம்பிக் போட்டிக்கான தகுதி இலக்கு 63.5 மீட்டர் தூரமாகும். தடகளத்தில் தனிநபர் பிரிவில் இருந்து ஒலிம்பிக்குக்கு தகுதி பெற்ற 10ஆவது இந்தியர் கமல்பிரீத் கவுர் ஆவார்.

கமல்பிரீத் வட்டு வீசிய தூரம் புதிய தேசிய சாதனையாகவும் பதிவானது. இதற்கு முன்பு நட்சத்திர வீராங்கனை கிருஷ்ண பூனியா 2012-ம் ஆண்டில் 64.76 மீட்டர் தூரம் வீசியதே தேசிய சாதனையாக இருந்தது. அந்த 9 ஆண்டு கால சாதனையை முறியடித்தார்.

பெண்களுக்கான 200 மீ ஓட்டத்தில் அஸ்ஸாம் வீராங்கனை ஹிமா தாஸ் புதிய போட்டி சாதனையுடன் (23.21 வினாடி) தங்கப்பதக்கத்தை வசப்படுத்தினார். அத்துடன் தகுதிச்சுற்றில் தன்னை பின்னுக்கு தள்ளிய தமிழக வீராங்கனை திருச்சியைச் சார்ந்த தனலட்சுமியை வீழ்த்தி பதிலடி கொடுத்தார். தனலட்சுமி 23.39 வினாடிகளில் இலக்கை கடந்து 2ஆவது இடத்தைப்பிடித்து வெள்ளிப்பதக்கத்துடன் திருப்தி அடைந்தார். மற்றொரு தமிழக வீராங்கனை அர்ச்சனா சுசீந்திரன் வெண்கலப்பதக்கம் (23.60 வினாடி) பெற்றார். இதன் ஆண்கள் பிரிவில் தமிழக வீரர் இலக்கியதாசன் (21.19 வினாடி) தங்கப்பதக்கத்தை வென்றார். மற்றொரு தமிழக வீரர் விக்னேசுக்கு (21.57 வினாடி) வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

ஆண்களுக்கான 400 மீட்டர் தடை ஓட்டத்தில் தமிழக வீரர்கள் முதல் 3 இடங்களை பிடித்து பதக்கத்தை அறுவடை செய்தனர். தருண் ஐயாசாமி 50.16 வினாடிகளில் இலக்கை எட்டி தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார். சந்தோஷ்குமார் (51.49 வினாடி), சதீஷ் (52.11 வினாடி) அடுத்த இரு இடங்களை பெற்றனர். இதன் பெண்கள் பிரிவில் தமிழக வீராங்கனை வித்யா இராம்ராஜ் 59.59 வினாடிகளில் ஓடி முதலாவதாக வந்து தங்கப்பதக்கத்தை பெற்றார்.

**11. சென்னை, விசாகப்பட்டனம் இடையே பாய்மரப் படகு நல்லெண்ணப் பயணம்**

இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் தளமான INS வீரபாகு பொன்விழாவைக்கொண்டாடும் வகையில் சென்னை, விசாகப்பட்டனம் இடையே பாய்மரப் படகுப் பயணம் தொடங்கியது. கிழக்குப் பிராந்திய கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள இக்கப்பல் தளம் 1971 மே 19 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. தற்போது 50 ஆண்டுகளை எட்டியுள்ளதையடுத்து இக்கப்பல் தளத்தின் பொன்விழா ஆண்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

பொன்விழாவினையொட்டி கடற்படைசார்பில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு நிகழ்ச்சியாக கடற்படையின் பாய்மரக் கப்பலான நீல்காந்த் தனது சிறப்பு பயணத்தை சென்னையில் வெள்ளிக்கிழமை தொடங்கியது.

**மூன்று நாள்கள் பயணம்:** சென்னைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட நீல்காந்த் பாய்மரப் படகுப் பயணத்தை தமிழ்நாடு, புதுச்சேரி கடற்படை அதிகாரி புனீத் சத்தா கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். பாய்மரப் படகு சிறப்புப்பயணத்தில் கமாண்டர் தீபக்ராஜ் தலைமையில் INS வீரபாகு கப்பல் தளத்தைச் சார்ந்த 5 வீரர்கள் பங்கேற்றுள்ளனர். 366 கடல் மைல் தூரத்தை 3 நாள்களில் பயணித்து விசாகப்பட்டினம் அடைய உள்ளது இப்படகு. இப்பயணத்தின் மூலம் வீரர்களிடையே மனவுறுதி, கட்டுப்பாடு, அர்ப்பணிப்பு, கடல் பயணத்தில் ஏற்படும் ஆபத்துகளை எதிர்கொள்ளும் சாகசத்தில் நிபுணத்துவம் உள்ளிட்டவற்றை வளர்க்க இயலும்.

### உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல்

## தேஷ்வாலுக்கு தங்கம், மானுவுக்கு வெள்ளி

*புது தில்லி, மார்ச் 20: உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் இந்தியாவின் யாஷாஸ்வினி சிங் தேஸ்வால் தங்கமும், மானு பாக்கர் வெள்ளியும் வென்றுள்ளனர்.*

*தில்லியில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் மகளிர் 10 மீ. ஏர் ரைபிள் பிரிவில் பங்கேற்ற யாஷாஸ்வினி சிங் தேஸ்வால் 238.8 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து தங்கம் வென்றார். இதே பிரிவில் பங்கேற்ற மற்றொரு இந்திய வீராங்கனையான மானு பாக்கர் 236.7 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றார். பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா சாய்கா 215.9 புள்ளிகளுடன் வெண்கலம் வென்றார். தேஷ்வால், மானு ஆகிய இருவருமே டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க ஏற்கெனவே தகுதி பெற்றுவிட்டது குறிப்பிடத்தக்கது.*

### சர்வதேச குத்துச்சண்டை

## ஜரீன், சோலங்கிக்கு வெண்கலம்

*புது தில்லி, மார்ச் 20: சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் நிகத் ஜரீன், கௌரவ் சோலங்கி ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றனர்.*

*துருக்கியின் இஸ்தான்புல் நகரில் பாஸ்போரஸ் சர்வதேச குத்துச்சண்டை போட்டி நடைபெற்று வருகிறது. இதில், சனிக்கிழமை நடைபெற்ற அரையிறுதியில் நிகத் ஜரீன் (51 கிலோ எடைப் பிரிவு) 0-5 என்ற கணக்கில் துருக்கியின் புஸெனஸ் காகிரோக்லுவிடம் தோல்வி கண்டார். இதனால் நிகத் ஜரீன் வெண்கலப் பதக்கத்தோடு வெளியேற நேர்ந்தது.*

*மற்றொரு அரையிறுதியில் இந்தியாவின் கௌரவ் சோலங்கி (57 கிலோ) 0-5 என்ற கணக்கில் ஆர்ஜென்டீனாவின் நிர்கோ சியூலோவிடம் தோற்று வெண்கலப் பதக்கத்தோடு வெளியேறினார்.*

### டேபிள் டென்னிஸ்

## சரத்-மணிகா ஜோடி ஒலிம்பிக்கிற்கு தகுதி

*தோஹா, மார்ச் 20: டோக்கியோ ஒலிம்பிக்கில் டேபிள் டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் விளையாட இந்தியாவின் சரத் கமல்-மணிகா பத்ரா ஜோடி தகுதி பெற்றுள்ளது.*

*கத்தார் தலைநகர் தோஹாவில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டிக்கான ஆசிய தகுதிச்சுற்று போட்டியில் கலப்பு இரட்டையர் பிரிவில் பங்கேற்ற சரத் கமல்-மணிகா பத்ரா ஜோடி தங்களின் இறுதிச்சுற்றில் 8-11, 6-11, 11-5, 11-6, 13-11, 11-8 என்ற கணக்கில் தென் கொரியாவின் சாங் லீ-ஜிஹீ ஜியோன் ஜோடியை வீழ்த்தியது. இதன்மூலம் சரத் கமல்-மணிகா பத்ரா ஜோடி ஒலிம்பிக்கில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளது.*

**12. மகளிர் உரிமை ஒப்பந்தத்திலிருந்து துருக்கி விலகல்**

பெண்களுக்கு சம உரிமை அளிப்பதற்காக ஐரோப்பிய நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திலிருந்து துருக்கி விலகியுள்ளது. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் துருக்கின் மிகப்பெரிய நகரான இஸ்தான்புல்லின் பெயரிடப்பட்ட அந்த ஒப்பந்தத்திலிருந்து அந்த நாடு விலகியுள்ளது. துருக்கியிலும் ஐரோப்பாவின் பிறபகுதிகளிலும் வசிக்கும் பெண்களுக்கு மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக மனித உரிமை ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகளைத் தடுக்க வகை செய்யும் இந்த ஒப்பந்தத்திலிருந்து துருக்கி விலகியிருப்பது, அத்தகைய வன்முறைச் சம்பவங்களை அதிகரிக்கும் என்று மகளிர் உரிமை ஆர்வலர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். 47 நாடுகளை உறுப்பினர்களாகக்கொண்ட ஐரோப்பிய கவுன்சில், துருக்கியின் இஸ்தான்புல் நகரில் கடந்த 2011'ஆம் ஆண்டு நடத்திய மாநாட்டில் மகளிர் உரிமை ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பத்தில் முதலாவது நாடாக துருக்கி கையெழுத்திட்டது.

அந்த ஒப்பந்தத்தில், ஆண்களுக்கு நிகரான அனைத்து உரிமைகளையும் பெண்களுக்கு அளிக்க அனைத்து நாடுகளும் ஒப்புக்கொண்டன. இதன் மூலம், பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் கொடுமைகளைத் தடுக்கவும் அத்தகைய குற்றங்களில் ஈடுபடுவோருக்கு தண்டனை பெற்றுத் தரவும் வழிவகை செய்யப்பட்டது.

**13. மகிழ்ச்சிகரமான நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு 139ஆவது இடம்**

ஐநா வெளியிட்டுள்ள மகிழ்ச்சிகரமான நாடுகள் பட்டியலில் இந்தியா 139ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. 'உலக மகிழ்ச்சி அறிக்கை 2021'ஐ ஐநா அமைப்பு அண்மையில் வெளியிட்டது. 149 நாடுகளின் மக்கள் கடந்த ஆண்டில் எந்த அளவுக்கு மகிழ்ச்சியாக இருந்தார்கள் என்பது குறித்து ஆராய்ந்து, அந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

அதில், இந்தியா 139ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டுக்கான பட்டியலில் இந்தியா 140ஆவது இடத்தைப் பிடித்திருந்தது.

பன்னாட்டு மகிழ்ச்சி நாளான மார்ச்.20 தேதியையொட்டி, ஐநா அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், 'மக்களின் வாழ்வில் கரோனா நோய்த்தொற்று பரவல் எந்த மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும், அத்தொற்றை உலக நாடுகள் எவ்வாறு எதிர்கொ–ண்டன என்பதும் ஆராயப்பட்டது.

கரோனாவை எதிர்கொள்வதில் ஒரு சில நாடுகள் மற்ற நாடுகளை விடச் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது ஆய்வில் தெரியவந்தது. இந்தியாவைப் பொருத்தவரையில், மக்களை நேரடியாகச் சந்தித்தும் தொலைபேசி வாயிலாகவும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டுள்–ளது. மகிழ்ச்சிகரமான நாடுகள் பட்டியலில் பின்லாந்து முதலிடத்தில் உள்ளது. அமெரிக்கா 19ஆவது இடத்தில் உள்ளது.

பாகிஸ்தான், சீனா, வங்கதேசம் உள்ளிட்ட அண்டை நாடுகள் இந்தப் பட்டியலில் இந்தியாவைவிட முன்னணியில் உள்ளன. போரால் பாதிக்கப்–பட்டுள்ள ஆப்கானிஸ்தான், பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது. தனிந–பருக்கான ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), சுகாதார நிலை, மக்களுக்கு நிலவும் சுதந்திரம் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்–டு இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

**மகிழ்ச்சி நிறைந்த மக்கள் வாழும் முதல் 5 நாடுகள்**

1–பின்லாந்து; 2–ஐஸ்லாந்து; 3–டென்மார்க்;

4–சுவிச்சர்லாந்த; 5–நெதர்லாந்து.

**பட்டியலில் கடைசி இடங்களில் உள்ள நாடுகள்**

149–ஆப்கானிஸ்தான்; 148–ஜிம்பாப்வே;

147–ருவாண்டா; 146–போட்ஸ்வானா; 145–லெசோதோ.

**இந்தியாவின் அண்டை நாடுகளின் நிலை**

84–சீனா; 87–நேபாளம்; 89–மாலத்தீவுகள்;

101–வங்கதேசம்; 105–பாகிஸ்தான்; 126–மியான்மர்; 129–இலங்கை.

---

**14. தமிழகத்தில் 28% இருந்த குழந்தைத் தொழிலாளர்கள் கரோனாவுக்கு பின்னர் 79 சதவீதமாக அதிகரிப்பு: கணக்கெடுப்பில் அதிர்ச்சி தகவல்**

தமிழகத்தில் 28.2 சதவீதமாக இருந்த குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை கரோனாவுக்கு பின்னர் 79.6 சதவீதமாக அதிகரித்துள்ளது என குழந்தை உழைப்பு எதிர்ப்பு பிரச்சாரம் என்ற அமைப்பு நடத்திய கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

கடந்த செப்டம்பர் முதல் நவம்பர் வரை தமிழகத்தில் 24 மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர் தொடர்பான கணக்கெடுப்பு நடத்தப்பட்டன. கரோனா தொற்றுக்கு முன்னர் 28.2 சதவீதமாக இருந்த குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை, தொற்றுக்குப் பின்னர் 79.6 சதவீதமாக அதிகரித்துள்ளது.

குறிப்பாக சென்னை, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, சேலம், கோவை, ஈரோடு, திருப்பூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், நீலகிரி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, விருதுநகர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் குழந்தைத்தொழிலாளர் எண்ணிக்–கை வேகமாக அதிகரித்துள்ளது. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், காரைக்கால், தேனி, பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகரிப்பு சதவீதம் குறைவாக உள்ளது.

இதில், 30.8 சதவீதம் குழந்தைகள் உற்பத்தித் துறையிலும், 26.4 சதவீதம் குழந்தைகள் சேவைத் துறையிலும் பணிபுரிகின்றனர். மூன்றாவதாக உழவுத்துறையிலும் அதிக குழந்தைத்தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

குழந்தைத் தொழிலாளர்கள் 4 மணி நேரம் முதல் 8 மணி நேரம் வரை பணிபுரிகின்றனர். குழந்தைத்தொழிலாளர்களில் 94% பேர் பொருளாதார நெருக்கடி காரணமாக பணிபுரிவதாகக் கூறுகின்றனர். குழந்தைத் தொழிலாளர்களில் 81 சதவீதம் பேர் மீண்டும் பள்ளிக்கு செல்வோம் என்று கூறியுள்ளனர். 14% குழந்தைகள் பள்ளிக்கு திரும்ப மாட்டோம் என்றும் 5.1 சதவீதம் குழந்தைகள் பள்ளிக்கு செல்வது தொடர்பாக முடிவெடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.

---

**15. நெல், தானியங்களை சேமித்து வைக்க உதவிய மண் கலன் கண்டுபிடிப்பு**

அகரத்தில் அகழாய்வின் போது நெல், தானியங்களை சேமித்து வைக்க உதவிய பழங்கால மண் கலன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அகழாய்வு பணி சிவகங்கை மாவட்டம் கீழடியில் தற்போது 7ஆம்கட்ட அகழ்வாராய்ச்சி நடந்துவருகிறது. இந்தப் பணிகள் முதலில் கீழடியிலும் பிறகு கொந்தகை, அகரத்திலும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. கீழடியில் தோண்டப்பட்ட ஒரு குழியில் பாசி மணிகள், சில்லுவட்டுக்கள் மற்றும் பானை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. கொந்தகையில் வாய்ப்பகுதி மூடிய நிலையில் உள்ள முழுமையான முதுமக்கள்தாழி மற்றும் சேதமுற்ற முதும–க்கள்தாழிகள் என பல கண்டுபிடிக்கப்பட்டன.

**மண்கலன் கண்டுபிடிப்பு**

அகரத்தில் ஒரு குழிதோண்டி அகழாய்வு மேற்கொண்டபோது முதலில் சேதமுற்ற நிலையில் சிறிய பானை ஓடுகள் கிடைத்தன. தொடர்ந்து குழியை ஆழமாக தோண்டியபோது சேதமுற்ற நிலையில் தானியங்கள் சேமித்து வைக்கும் மண்கலன் கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் கலன் சேதமுற்ற நிலையில் சுவருடன் ஒட்டிய நிலையில் உள்ளது.

முந்தைய காலத்தில் களிமண்ணால் வட்ட உறையாக செய்து வீடுகளில் ஒன்றின்மேல்ஒன்றாக அடுக்கிவைத்து பூசியிருக்கிறார்கள். இக்கலன்களி–ல் நெல், தானியம் சேமித்து வைத்து, தேவைப்படும் போது சிறுக, சிறுக எடுத்து பயன்படுத்தி இருப்பதாக தொல்லியலாளர்கள் தெரிவித்தனர்.

---

**1.தேசிய பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ) ஸ்வபன் தாஸ்குப்தா



**ஆ) M கணபதி ☑**

இ) P K சின்ஹா

ஈ) A P மகேஸ்வரி

✓ மூத்த இ கா ப அதிகாரியான M A கணபதி, தேசிய பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது அவர், உள்நாட்டு வான் போக்குவரத்து பாதுகாப்பகத்தின் தலைமை இயக்குநராக பணியாற்றி வருகிறார். மற்றொரு இ கா ப அதிகாரியான குல்தீப் சிங், மத்திய சேமக்காவல்படையின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**2.பின்வரும் எவ்வாண்டில், கட்சித்தாவல் தடைச்சட்டம் என்றழைக்கப்படும் 10ஆவது அட்டவணை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது?**

அ) 1972




**ஆ) 1985 ☑**

இ) 1992

ஈ) 2005

✓ கட்சித்தாவல் தடைச்சட்டம் என்று பொதுவாக அறியப்படும் பத்தாவது அட்டவணை, 1985ஆம் ஆண்டில் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது. கட்சித்தாவல் தடைச்சட்டத்தின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்வபன் தாஸ்குப்தா தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு ஓராண்டுக்கு முன்னதாகவே மாநிலங்களவையில் இருந்து விலகினார்.

✓ மேற்கு வங்க மாநில சட்டமன்றத் தேர்தலில் அவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். 2016'இல் அவர் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு நியமன நாடாளுமன்ற உறுப்பினர், பதவி ஏற்ற 6 மாதத்துக்கு பிறகு ஏதேனும் ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்தால் அவர் தகுதிநீக்கம் செய்யப்பட வேண்டும் என அரசியல் சட்டத்தின் பத்தாவது அட்டவணை கூறுகிறது.

---

**3.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற P K சின்ஹா, தனது எந்தப் பதவியிலிருந்து அண்மையில் விலகினார்?**

அ) பொருளாதார விவகாரங்கள் செயலாளர்



**ஆ) பிரதமரின் முதன்மை ஆலோசகர் ☑**

இ) நிதி செயலாளர்

ஈ) NITI ஆயோக்கின் தலைமைச் செயலதிகாரி

✓ பிரதமரின் முதன்மை ஆலோசகராக பதவி வகித்து வந்த P K சின்ஹா, சமீபத்தில் தனது பதவியிலிருந்து விலகினார். பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கத்தின் முதல் பதவிக்காலத்தில், அமைச்சரவை செயலாளராக P K சின்ஹா பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**4. திறன் மேம்பாட்டிற்காக, ₹81 இலட்சம் மதிப்புள்ள பயிற்சிக்கருவிகளை, எந்த நாட்டில் உள்ள இந்திய தூதர் ஒப்படைத்தார்?**

அ) நேபாளம்



ஆ) மியான்மர்

இ) மாலத்தீவு

**ஈ) இலங்கை ☑**

✓ இலங்கையில் உள்ள இந்திய தூதர், அண்மையில், சுமார் ₹81,00,000 மதிப்புள்ள பயிற்சிக்கருவி உதவிகளை இலங்கையின் கடற்படைக்கு திறன் மேம்பாட்டிற்காக வழங்கியுள்ளார். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்தபோது, உயராணையர் கோபால் பாக்லே பயிற்சிக்கருவிகளை முறையாக வழங்கினார். அவர், கின்டெல் மின்னூல்களையும் கடற்படை மற்றும் கடல்சார் அகாடமியின் நூலகத்தில் ஒப்படைத்தார்.

---

**5.இந்திய கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி ஏற்றுமதிக் கழகம் அமைந்துள்ள இடம் எது?**

அ) புது தில்லி

**ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) குஜராத்

ஈ) மத்திய பிரதேசம்

✓ உத்தர பிரதேச மாநிலத்தின் நொய்டாவில் அமைந்துள்ள கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி ஏற்றுமதிக்கழகத்தை மூட, அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி ஏற்றுமதிக்கழகம் என்பது மத்திய ஜவுளி அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள, அரசுக்கு சொந்தமான ஒரு நிறுவனமாகும்.

✓ இது, கடந்த 2015-16 காலகட்டம் முதல் தொடர்ச்சியாக இழப்புகளைச் சந்தித்ததாக கூறப்படுகிறது. அந்நிறுவனத்தின் ஊழியர்களுக்கு விருப்ப ஓய்வு வழங்கப்படவுள்ளது.

---

**6. 'உலகின் பழங்குடி மக்களின் நிலை' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

அ) உலக வங்கி

ஆ) பன்னாட்டு செலவாணி நிதியம்

**இ) ஐக்கிய நாடுகள் அவை ☑**

ஈ) ஆசிய வளர்ச்சி வங்கி

✓ ஐநா பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையானது 'உலகின் பழங்குடி மக்களின் நிலை' குறித்த அறிக்கையின் அண்மைய பதிப்பை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, பழங்குடி மக்கள் புவியின் பல்லுயிர் வகைமையில் 80% பகுதிகளில் வாழ்கின்றனர். ஆனால் அவர்களுள் பலர், நிலம் மற்றும் வளங்களுக்கான சட்ட உரிமைகளை காப்பதற்கு இன்னும் போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

---

**7. 'பேரிடர் தடுப்பு உட்கட்டமைப்பிற்கான கூட்டணி'யின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ) ஜெனிவா

ஆ) பாரிஸ்

**இ) புது தில்லி ☑**

ஈ) ஜாகர்த்தா

✓ பேரிடர் தடுப்பு உட்கட்டமைப்பிற்கான கூட்டணி என்பது நாடுகள், ஐநா முகமைகள், பலதரப்பு வளர்ச்சி வங்கிகள், தனியார்துறை மற்றும் கல்வியாளர்களின் ஓர் உலகளாவிய கூட்டணியாகும். இது பேரிடர் நெகிழ் திறன்மிக்க உட்கட்டமைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.

✓ பேரிடர் தடுப்பு உட்கட்டமைப்பிற்கான கூட்டணியானது அதன் உறுப்பு நாடுகள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து, பேரிடர் தடுப்பு உட்கட்டமைப்பு தொடர்பான பன்னாட்டு மாநாட்டை சமீபத்தில் நடத்தியது.

---

**8. எந்தத் திட்டத்தின்கீழ், CSIR, இந்தியப் பெருங்கடலில், மரபணு வேறுபாட்டை வரைபடமாக்க உள்ளது?**

அ) Project IOR

ஆ) Project Bio



**இ) Project TraceBioMe ☑**

ஈ) Project 21

✓ 'TraceBioMe' திட்டத்தின்கீழ், – கோவாவில் உள்ள அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி கழகத்தின் தேசிய கடல்சார் நிறுவனமானது (CSIR-NIO) இந்தியப்பெருங்கடலில் உள்ள உயிரினங்களின் மரபணு வேறுபாட்டை வரைபடமாக்கத் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டத்தில், மரபணு வரைபடத்தை உருவாக்குவதற்கு கடலின் வெவ்வேறு இடங்களில் உள்ள நீர், வண்டல், மிதவை நுண்ணுயிரிகள் மற்றும் பல்வேறு உயிரினங்களின் பெரிய அளவிலான மாதிரிகள் சேகரிக்கப்படும்.

---

**9.** IBSA (இந்தியா–பிரேசில்–தென்னாப்பிரிக்கா) பெண்கள் மன்றக் கூட்டம் நடைபெற்ற இடம் / முறை எது?

அ) இந்தியா

ஆ) சீனா

இ) பிரேஸில்

**ஈ) மெய்நிகர் முறையில் ☑**

- ✓ IBSA (இந்தியா–பிரேசில்–தென்னாப்பிரிக்கா) பெண்கள் மன்றக் கூட்டம் சமீபத்தில் மெய்நிகர் முறையில் நடைபெற்றது. இது, சந்திப்பின் 6ஆவது பதிப்பாகும். இந்தியாவைச்சார்ந்த தூதுக்குழுவிற்கு மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தலைமைதாங்கியது.
- ✓ இக்கூட்டத்தின்போது ஒரு கூட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டது. அது, IBSA இலக்குகள் மற்றும் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் பாலின சமத்துவத்தை அடைவதற்கான உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

---

**10.** பிரிட்ஸ்கர் பரிசுடன் தொடர்புடைய துறை எது?

அ) இலக்கியம்

ஆ) இதழியல்

**இ) கட்டுமானக்கலை ☑**

ஈ) அறிவியல் & தொழில்நுட்பம்



- ✓ பிரிட்ஸ்கர் பரிசு என்பது கட்டடக்கலைத் துறையில் வழங்கப்படும் மிக உயரிய கௌரவமாகும். 2021 பிரிட்ஸ்கர் கட்டடக்கலை பரிசு, அன்னே லாகடன் மற்றும் ஜீன்–பிலிப் வசல் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✓ இவ்விரு பிரெஞ்சு வெற்றியாளர்களும் லாகடன் & வசாலின் நிறுவனத்தின் நிறுவனர்களாவர். தி ஹையாத் அறக்கட்டளையின் தலைவர் வெற்றியாளர்களை அறிவித்தார். அன்னே லாகடன், இந்த விருதை வென்ற முதல் பிரெஞ்சு பெண் கட்டடக்கலைஞராவார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. ஓய்வூதியதாரர்கள் ஆயுள்சான்று பெற ஆதார் இனி கட்டாயமில்லை

ஓய்வூதியதாரர்கள் மின்னணுமுறையில் ஆயுள்சான்றுபெற ஆதார் அட்டை எண்ணை அளிக்க வேண்டியது கட்டாயமில்லை என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. ஓய்வூதியதாரர்கள் தொடர்ந்து ஓய்வூதியம்பெற ஆண்டுதோறும் தங்கள் ஆயுள்சான்றை அளிக்க வேண்டியது கட்டாயமாகும். அப்போதுதான் அவர்களுக்கு தடையில்லாமல் ஓய்வூதியம் அளிக்கப்படும்.

இந்த ஆயுள்சான்றைப்பெற ஆதார் எண்ணை அளிக்க வேண்டியது கட்டாயமாக இருந்தது. இந்நிலையில், இதனை மாற்றி மத்திய மின்னணு, தகவல்தொழில்நுட்பத்துறை அமைச்சகம் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி மின்னணு முறையில் ஆயுள்சான்றுபெற ஆதார் எண் கட்டாயமில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், விருப்பத்தின் பேரில் ஆதார் எண்ணை அளிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்கள் ஆதார் அல்லாத வேறு அடையாள சான்றை அளித்தால் போதுமானது. அரசு அலுவலகங்களில் வருகைப்பதிவு நிர்வாகத்துக்கும், மத்திய தகவல் மையம் உருவாக்கிய சந்தேஷ் செயலியை (வாட்ஸ்அப் போன்றது) உபயோகிக்கவும் ஆதார் எண் கட்டாயமில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

### 2. ஆறு கோடி கரோனா தடுப்பூசிகளை 76 நாடுகளுக்கு இந்தியா அனுப்பி வைப்பு: ஹர்ஷ் வர்தன்

இந்தியா இதுவரையில் 6 கோடி கரோனா தடுப்பூசிகளை 76 நாடுகளுக்கு அனுப்பியுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் தெரிவித்துள்ளார். சண்டிகரில் உள்ள நுண்ணுயிர் தொழில்நுட்ப நிறுவனத்தில் (CSIR–IMTech) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: 76 நாடுகளுக்கு 6 கோடிக்கும் அதிகமான கரோனா தடுப்பூசிகளை இந்தியா அனுப்பி வைத்துள்ளது. நமது நாட்டைப் பொருத்தவரையில் இதுவரையில் பயனாளர்களுக்கு 4.5 கோடி தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கரோனா தடுப்பூசி திட்டம் மிகப்பெரிய மக்கள் இயக்கமாக (ஜன்–அந்தோலன்) மாறவேண்டும் என இந்தியப் பிரதமர் மோடி அழைப்புவிடுத்துள்ளார் என்றார் அவர்.

### 3. முதல் ATP டூர் பட்டம் வென்றார் அஸ்லான்

துபாய் ஓப்பன் டென்னிஸ் போட்டியில், ரஷியாவின் அஸ்லான் கராட்சேவ் சாம்பியன் ஆனார். இது அவரது முதல் ATP டூர் பட்டமாகும். முன்னதாக நடைபெற்ற இறுதிச்சுற்றில் அவர் தென்னாப்ரிக்காவின் லாய்ட் ஹாரிஸை 6–3, 6–2 என்ற செட்களில் வீழ்த்தினார். இந்த வெற்றியின்மூலம், கடந்த 1997'க்குப் பிறகு துபாய் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் வைல்டு கார்டு வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

---

### 4. டி20 தொடரை வென்றது தென் ஆப்பிரிக்க மகளிரணி

தென்னாப்பிரிக்க மகளிரணிக்கு எதிரான இரண்டாவது டி20 ஆட்டத்தில் இந்திய மகளிரணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்விகண்டது. ஏற்கனவே முதல் ஆட்டத்தில் வென்ற தென்னாப்பிரிக்கா, இவ்வெற்றியால் 3 ஆட்டங்கள் கொண்ட தொடரை தன்வசப்படுத்தியுள்ளது.

லக்னோவில் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் முதலில் பேட் செய்த இந்தியா 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 158 ரன்கள் அடித்தது. அடுத்து ஆடிய தென்னாப்பிரிக்கா 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 159 ரன்கள் அடித்து வென்றது.

---

### 5. உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றது.

உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கத்தை வென்றது. புது தில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் குழுப்பிரிவில் யஷஸ்வினி சிங் தேஸ்வால், மனு பாக்கர், ஸ்ரீநிவேதா ஆகியோரைக்கொண்ட அணி 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் தங்கப்பதக்கத்தை வென்றது.

ஆடவர் பிரிவில் சௌரவ் சௌத்ரி, அபிஷேக் வர்மா, சாஷர் ரிஸ்வி ஆகியோரைக்கொண்ட அணி இறுதிப்போட்டியில் வியட்நாமை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது. மற்றோர் ஆடவர் குழுப்பிரிவில் இந்தியாவுக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது. இப்போட்டியில் இந்தியா இதுவரை மூன்று தங்கம், மூன்று வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

---

### 6. உலகின் பலம்வாய்ந்த இராணுவம்: இந்தியாவுக்கு 4ஆவது இடம்

உலகின் பலம்வாய்ந்த இராணுவத்தைக்கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்திய இராணுவம் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது. இப்பட்டியலில் சீனா முதலிடத்தில் உள்ளது.

பாதுகாப்புத்துறை தொடர்பான இணையதளமான 'மிலிட்டரி டைரக்ட்' இது தொடர்பாக ஆய்வுநடத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த ஆய்வில் இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீடு, இராணுவத்தில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை, தரைப்படை, கடற்படை, வான்படைகளின் பலம், அணு ஆயுதங்கள், தளவாடங்களின் அளவு, இராணுவத்தினருக்கான சராசரி ஊதியம் உள்ளிட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:**

உலகில் பல்வேறு பிரிவுகளில் சிறப்பான செயல்பாடுகளுடன் பலம் வாய்ந்த இராணுவத்தை சீனா கொண்டுள்ளது. அந்நாடு நூற்றுக்கு 82 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்தபடியாக அமெரிக்கா அதிக செலவுசெய்து பலம்வாய்ந்த ராணுவத்தைக் கட்டமைத்து வைத்துள்ளது. அந்நாட்டு ராணுவம் 74 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. இப்பட்டியலில் ரஷியா 69 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், இந்தியா 61 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் உள்ளன.

பிரான்ஸ் (58 புள்ளிகள்) 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. பிரிட்டன் 43 புள்ளிகளுடன் 9ஆவது இடத்தில் உள்ளது. அதே நேரத்தில் வான்படை பலத்தில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அந்நாட்டிடம் 14,141 போர் விமானங்கள் உள்ளன. இதற்கு அடுத்து ரஷியாவிடம் 4,682 போர் விமானங்களும், சீனாவிடம் 3,587 போர் விமானங்களும் உள்ளன.

அதே நேரத்தில் தரைப்படையில் பயன்படுத்தும் பீரங்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களில் ரஷியா, அமெரிக்கா, சீனா ஆகியவை முறையே முதல் மூன்று இடங்களில் உள்ளன. கடற்படையில் 406 போர்க் கப்பல்களுடன் சீனா முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து ரஷியாவிடம் 278 போர்க் கப்பல்கள் உள்ளன. இதற்கு அடுத்து அமெரிக்கா மற்றும் இந்தியாவிடம் தலா 200'க்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள் உள்ளன.

உலகிலேயே மிகவதிகமாக அமெரிக்க, ராணுவத்திற்காக ஆண்டுதோறும் 732 பில்லியன் டாலர் (சுமார் ₹53 இலட்சம் கோடி) வரை செலவிடுகிறது.

இதற்கு அடுத்து சீனா 261 பில்லியன் டாலர் (சுமார் ₹18 இலட்சம் கோடி), மூன்றாவதாக இந்தியா 71 பில்லியன் டாலர் (₹5 லட்சம் கோடி) செலவிட்டு வருகிறது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

**முதல் 5 நாடுகள்**

1) சீனா – 82 புள்ளிகள்

2) அமெரிக்கா – 74 புள்ளிகள்

3) ரஷியா – 69 புள்ளிகள்

4) இந்தியா – 61 புள்ளிகள்

5) பிரான்ஸ் – 58 புள்ளிகள்

---

**7. கரோனா ஊரடங்கால் சேமிப்பில் கடும் வீழ்ச்சி; நாட்டு மக்களின் கடன் சுமை அதிகரிப்பு: இந்திய ரிசர்வ் வங்கி தகவல்**

கரோனா வைரஸ் பரவலால் கடந்த ஆண்டில் அமல்படுத்தப்பட்ட ஊரடங்கால் நாட்டு மக்களின் கடன்சுமை அதிகரித்துள்ளதாகவும் சேமிப்பு கடுமையாக சரிந்துள்ள தாகவும் ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது. நடப்பு 2020–21 நிதியாண்டின் 2ஆவது காலாண்டில் நாட்டு மக்களின் கடன்சுமை நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியி–ல் (GDP) 37.1 சதவீதமாக அதிகரித்துள்ளது.

வீடுகளில் சேமிக்கும் அளவு GSP'இல் 10.4 சதவீத அளவுக்கு சரிந்துள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டின் (2020–21) முதல் காலாண்டில் வீடுகளின் சேமிப்பு அளவு GDP'இல் 21 சதவீதமாக இருந்தது, இரண்டாம் காலாண்டில் 10.4 சதவீதமாக சரிந்துவிட்–டது. இதேபோன்று 2008–09ஆம் நிதியாண்டில் சர்வதேச பொருளாதார தேக்கநிலை ஏற்பட்டபோது சேமிப்பு அளவு 170 அடிப்படை புள்ளிகள் வரை அதிகரித்தது. 2019–20 நிதியாண்டின் முதல் காலாண்டிலிருந்தே குடிமக்–களின் கடன்வாங்கும் அளவு படிப்படியாக அதிகரித்துள்ளது. இது 2020–21 நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் 37.1 சதவீத அளவை எட்டியது.

இப்போது கரோனா தடுப்பூசி போடும் நடவடிக்கை தொடங்கியுள்ளதால் வீடுகளின் சேமிப்பு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பும் என RBI அறிக்கை தெரிவித்துள்ளது. வங்கிகள் கடன் வழங்கும் அளவு இரண்டாம் காலாண்டில் 20 புள்ளிகள் அதிகரித்து ₹102.7 லட்சம் கோடியாக உள்ளது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

**1. சுகாதார அமைச்சகம் வழங்கும் தொலைமருத்துவ சேவையின் பெயரென்ன?**

அ) இ–ஆரோக்கியா

ஆ) இ–ஸ்வஸ்தியா




இ) இ–சுரக்ஷா

**ஈ) இ–சஞ்சீவனி ☑**

- ✓ மத்திய சுகாதார அமைச்சகத்தின் இ–சஞ்சீவனி என்ற தொலைமருத்து–வ சேவையானது 31 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் செயல்பட்டு வருகிறது. இ–சஞ்சீவனி திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் இதுவரை முப்பது இலட்சம் பேருக்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்ப–ட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- ✓ இதன்மூலம், நாடு முழுவதும் தினமும் 35,000 நோயாளிகள் இணைய வழியில் மருத்துவ ஆலோசனைகளை பெற்றுவருகின்றனர். அதிக ஆலோசனை பெறும் மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு, உத்தர பிரதேசம், கர்நாடகா ஆகியவை முதல் 3 இடங்களைப்பிடித்துள்ளன.

---

**2.அண்மையில், மத்திய இந்தியாவில் விபத்துக்குள்ளான இந்திய வான்படையின் வானூர்தி எது?**

**அ) MiG–21 பைசன் ☑**



ஆ) மிராஜ் 2000

இ) சுகோய் சு –30

ஈ) ரபேல்

- ✓ மத்திய இந்தியாவில் அமைந்துள்ள இந்திய வான்படைதளம் ஒன்றில் இருந்து, பயிற்சிக்காக புறப்பட்ட MiG–21 பைசன் இரக விமானம் ஒன்று எதிர்பாராதவிதமாக விபத்தில் சிக்கியது. இந்தக் கோர விபத்தில் இந்திய வான்படை குழு கேப்டனான ஆஷிஷ் குப்தா உயிரிழந்தார். உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட இலகுரக போர்விமானமான தேஜஸ் விமானங்கள், MiG–21 இரக விமானங்களுக்கு மாற்றாக உள்ளன. MiG –21 இரக விமானங்கள் தொடர்ந்து விபத்துக்களில் சிக்கி வருகின்றன.

---

**3.தொடங்கிடு இந்தியா விதை நிதிய திட்டத்திற்காக அமைக்கப்பட்ட நிபுணர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவின் தலைவர் யார்?**

அ) இஞ்செட்டி சீனிவாஸ்



ஆ) கீதா கோபிநாத்

**இ) H K மிட்டல் ☑**

ஈ) S C குந்தியா

- ✓ தொடங்கிடு இந்தியா விதை நிதிய திட்டத்தின் ஒட்டுமொத்த செயல்பாட்–டுக்கும் கண்காணிப்பிற்குமாக நிபுணர்கள் அடங்கிய ஓர் ஆலோசனை குழுவை அரசாங்கம் அமைத்துள்ளது. DPIIT படி, இந்தக்குழு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையைச் சார்ந்த H K மிட்டல் தலைமையில் இரு–க்கும். DPIIT, உயிரி தொழில்நுட்பம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம், NITI ஆயோக் மற்றும் துளிர் நிறுவன சுற்றுச்சூழல் அமைப்பின் வல்லுநர்கள் இதன் மற்ற உறுப்பினர்களாக இருப்பார்கள்.

---

**4.கீழ்காணும் எந்த இந்திய பொதுத்துறை வங்கி தனது கடனட்டை வணிகத்திற்காக புதிய சொந்தமான இணை–நிறுவனத்தை உரு–வாக்கியுள்ளது?**

அ) யூனியன் பாங்க் ஆப் இந்தியா

**ஆ) பஞ்சாப் தேசிய வங்கி ☑**

இ) இந்தியன் வங்கி

ஈ) கனரா வங்கி

- ✓ பஞ்சாப் தேசிய வங்கி சமீபத்தில் வங்கியின் முழு உரிமையாளரான பிஎன்பி கார்டுகள் மற்றும் சேவைகளை இணைத்துள்ளது. இந்தப் புதிய நிறுவனம் வங்கியின் கடனட்டை வணிகத்துடன் தொடர்புடைய நிதி சாராத ஆதரவு சேவையை மேற்கொள்ளும்.
- ✓ PNB அட்டைகள் & சேவைகள் நிறுவனமானது 25 கோடி அனுமதிக்கப்ப–ட்ட மூலதனத்தையும், 15 கோடி செலுத்திய மூலதனத்தையும் கொண்டு–ள்ளது. இவ்வங்கி, யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் ஓரியண்டல் பாங்க் ஆஃப் காமர்ஸ் ஆகியவற்றை தன்னுடன் இணைத்துள்ளது.

**5.புதிதாக உருவாக்கப்பட்ட இந்தியன் எண்ணெய் நிறுவனம் – பினெர்ஜி ஆகிய கூட்டு நிறுவனமானது, மின்சார வாகனங்களுக்கு மின்கலங்களை உருவாக்குவதற்காக லித்தியத்திற்கு மாற்றாக எந்த உலோகத்தை பயன்படுத்தவுள்ளன?**

அ) வெள்ளி



ஆ) தாமிரம்

**இ) அலுமினியம் ☑**

ஈ) பாதரசம்

- ✓ அரசுக்கு சொந்தமான இந்தியன் எண்ணெய் நிறுவனமும் இஸ்ரேலிய மின்கல உற்பத்தியாளரான பினெர்ஜியும் மின்சார வாகனங்களுக்கு அதி–லேசான உலோகக்காற்று மின்கலங்களை தயாரிப்பதற்காக ஒரு கூட்டு நிறுவனத்தை உருவாக்கியுள்ளன. இந்தக் கூட்டு நிறுவனம், மின்சார வாகனங்களுக்கு மின்கலங்களை உருவாக்குவதற்காக லித்தியத்திற்கு மாற்றாக அலுமினியத்தை பயன்படுத்தும்.
- ✓ இதன்மூலம், விரைவாக மின்னேற்றம் செய்யவும் முடியும், அதிக நேரம் வேலைசெய்ய வைக்கவும் முடியும். மாருதி சுசூகியும் அசோக் லேலண்ட் நிறுவனமும் அந்நிறுவனத்தின் முதல் வாடிக்கையாளர்களாக மாறியுள்–ளன. இந்தியன் எண்ணெய் நிறுவனமானது கடந்த ஆண்டில், பினெர்ஜி நிறுவனத்தில் சிறு பங்குகளை வாங்கியது.

---

**6.மிகை–பணவீக்கம் காரணமாக பெருமதிப்புள்ள பணத்தாட்களை வெளியிட்ட நாடு எது?**

அ) ஈரான்



**ஆ) வெனிசுலா ☑**

இ) சூடான்


ஈ) நைஜீரியா

- ✓ மிகை–பணவீக்கம் காரணமாக வெனிசுலா சமீபத்தில் பெருமதிப்புள்ள பணத்தாட்களை வெளியிட்டது. தென்னமெரிக்க நாடான வெனிசுலாவி–ன் பொலிவர் பணம் அதன் மதிப்பை பெருமளவில் இழந்துவருகிறது. முறையே 10 மற்றும் 27 அமெரிக்க சென்ட் மதிப்புள்ள 200,000 மற்றும் 500,000 பொலிவர் பணம் அந்நாட்டில் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன.
- ✓ வெனிசுலாவின் மத்திய வங்கி, வெறும் 50 அமெரிக்க சென்ட் மதிப்புள்ள 1 மில்லியன் பொலிவரை வெளியிடவும் திட்டமிட்டுள்ளது.

---

**7. கரியமிலவாயுவை (CO2) பிடித்து சூரிய எரிபொருளாக மாற்றும் செயல்முறைக்கு என்ன பெயர்?**

**அ) செயற்கை ஒளிச்சேர்க்கை ☑**



ஆ) இயற்கை ஒளிச்சேர்க்கை

இ) ஆற்றல் மாற்றம்

ஈ) ஆற்றல் உற்பத்தி

- ✓ அண்மையில், ஜவஹர்லால் நேரு மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சிக்கான மையத்தின் ஆராய்ச்சியாளர்கள் வளிமண்டலத்திலிருந்து கரியமில வாயுவைப்பிடித்து சூரிய எரிபொருளாக மாற்றக்கூடிய ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளனர். இந்தச் செயல்முறை செயற்கை ஒளிச்சேர்க்கை என்று அழைக்கப்படுகிறது.
- ✓ இச்செயல்முறை, உயிர்வளியை துணைப்பொருளாக உருவாக்குகிறது. இந்தச்செயல்முறை புதைபடிவ எரிபொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம், ஏற்படும் தீங்குகளைத் தணிக்கும் என்று கூறப்படுகிறது.

---

**8.கீழ்காணும் எந்தக்கொள்கையின்படி, 2024 ஜூன்.1 முதல் இருபது ஆண்டுக்கும் மேற்பட்ட தனிப்பட்ட வாகனங்களின் பதிவு நீக்கம் செய்யப்படும்?**

அ) புதிய வாகன கொள்கை



ஆ) உமிழ்வுக் கட்டுப்பாட்டுக் கொள்கை

இ) பாரத் நிலை – 7

**ஈ) பழைய வாகனங்களை அழித்தல் கொள்கை ☑**


- ✓ மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகம் அறிவித்துள்ள பழைய வாகனங்களை அழித்தல் கொள்கையின்படி, தானியங்கு உடல்தகுதி

பரிசோதனையில் தோல்வியுற்றால், 20 ஆண்டுக்கும் மேற்பட்ட பழைய வாகனங்கள், 2024 ஜூன்.1 முதல் பதிவு நீக்கம் செய்யப்படும்.

- ✓ வணிக வாகனங்களைப் பொருத்தவரை, 2023 ஏப்ரல்.1 முதல் 15 ஆண்டுக்கும் மேற்பட்ட பழைய வாகனங்கள் பதிவு நீக்கம் செய்யப்படும்.

---

**9.சமீப செய்திகளில் இடம்பெற்ற, "Baikal–GVD" என்றால் என்ன?**



அ) விண்கலம்

**ஆ) ரஷிய தொலைநோக்கி ☑**

இ) கிரிப்டோகரன்சி

ஈ) புதிய கோள்

- ✓ ரஷிய அறிவியலாளர்கள், "பைக்கால்–GVD" என்ற தொலைநோக்கியை உருவாக்கியுள்ளனர். இத்தொலைநோக்கி தெற்கு சைபீரியாவில் உள்ள பைக்கால் ஏரியின் அடியாழத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த ஏரி, பூமியின் மிகஆழமான ஏரியாகும். இந்தத் தொலைநோக்கியைப் பயன்ப–டுத்தி, பிரபஞ்சத்தில் இதுவரை அறியப்பட்ட மிகச்சிறிய துகளான நியூட்–ரினோவை அறிவியலாளர்கள் கண்டறியவுள்ளனர்.

---

**10.புதிய கொரோனா வைரஸுக்கு எதிரான பிறபொருளெதிர்ப்பி உடன் பிறந்த உலகின் முதல் குழந்தை, பின்வரும் எந்த நாட்டில் பிறந்தது?**



அ) ரஷியா

**ஆ) அமெரிக்கா ☑**

இ) பிரேசில்

ஈ) இத்தாலி

- ✓ புதிய கொரோனா வைரஸுக்கு எதிரான பிறபொருளெதிர்ப்பிகளைக் கொண்ட உலகின் முதல் குழந்தை அமெரிக்காவில் பிறந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கருவுற்று 36ஆவது வாரத்தில் தாய்க்கு COVID–19 தடுப்பூசி போடப்பட்டது. இதன் விளைவாக தாய் மற்றும் குழந்தை இருவருக்கும் பிறபொருளெதிர்ப்பிகள் உருவாகியுள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கோவிஷீல்ட்: இரண்டு 'டோஸ்'களுக்கான காலத்தை நீட்டிக்க மத்திய அரசு அறிவுறுத்தல்**

கரோனா தொற்றுக்கு எதிரான சீரம் நிறுவனத்தின் 'கோவிஷீல்ட்' தடுப்பூசியின் இரண்டு 'டோஸ்'களுக்கான கால இடைவெளியை நீட்டிக்க மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. தடுப்பூசி குறித்த தேசிய தொழில்நுட்ப ஆலோசனைக்குழுவும், கரோனா தடுப்பூசி போடுவதற்கான தேசிய நிபுண–ர் குழுவும் அளித்த அறிவுரைப்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி 'கோவிஷீல்ட்' தடுப்பூசியை முதல்முறை போடுவதற்கும் இரண்–டாவதுமுறை போடுவதற்கும் தற்போது நடைமுறையில் உள்ள 4–6 வார இடைவெளியை 4–8 வாரமாக மாற்ற பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் 'கோவிஷீல்ட்' தடுப்பூசிக்கு மட்டுமே பொருந்தும், பாரத் பயோடெக் நிறுவனத்தின் 'கோவேக்ஸின்' தடுப்பூசிக்கு பொருந்தாது.

அறிவியல் ஆதாரங்களை கருத்தில்கொண்டு, 'கோவிஷீல்டு' தடுப்பூசியின் இரண்டு டோஸ்களுக்கும் இடையிலான கால இடைவெளி உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, இரண்டு டோஸ்களுக்கும் இடையிலான கால இடைவெளி, 28 நாட்களில் இருந்து, ஆறு முதல் எட்டு வாரங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. பாரத் பயோடெக்கின் 'கோவாக்சின்' தடுப்பூசிக்கு, பழைய நடைமுறையே தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: கலப்பு அணிகளில் இந்தியாவுக்கு 2 தங்கம்**

உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் மற்றும் 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவுகளில் இந்தியாவின் கலப்பு அணிகள் தங்கப்பதக்கம் வென்றன. அதேபோல் ஆடவர் ஸ்கீட் அணிகள் பிரிவிலும் இந்தியர்கள் முதலிடம் பிடித்தனர். இப்போட்டியில், 22.03.21 நிலவரப்படி இந்தியா 6 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலம் என 14 பதக்கங்களுடன் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

முன்னதாக 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் செளரவ் செளதரி, மானு பாக்கர் கூட்டணி 16 ஷாட்களுடன் முதலிடம் பிடித்து தங்கம் வென்றது. உலகக்கோப்பை போட்டியில் கலப்பு அணிகள் பிரிவில் செளரவ்–மானு கூட்டணிக்கு இது 5ஆவது தங்கப்பதக்கமாகும்.

அதே பிரிவில் இந்தியாவின் யஷஸ்வினி சிங் தேஸ்வால், அபிஷேக் வர்மா கூட்டணி வெண்கலப்பதக்கம் வென்றது. ஈரானின் கோல்னௌஷ் செபடொலாஹி, ஜாவித் ஃபருகி இணை வெள்ளிப்பதக்கத்தை தட்டிச் சென்றது. 10 மீட்டர் ஏர் ரைபிள் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் இளவேனில் வாளரிவன், திவ்யான்ஷ் சிங் பன்வார் இணை 16 ஷாட்களுடன் தங்கம் வென்றது. சீனியர் உலகக்கோப்பை போட்டியில் இளவேனிலுக்கு இது முதல் தங்கம்; திவ்யான்ஷுக்கு இது நான்காவது தங்கமாகும்.

ஹங்கேரியின் இஸ்த்வான் பெனி, எஸ்தர் டெனஸ் 10 ஷாட்களுடன் வெள்ளியை வென்றனர். இதே பிரிவில் பங்கேற்ற மற்றொரு இந்திய ஜோடியான அஞ்சும் முட்கில், அர்ஜுன் பபுதா தகுதிச்சுற்றில் ஐந்தாம் இடம் பிடித்து இறுதிச்சுற்று வாய்ப்பை நழுவவிட்டனர். ஆடவருக்கான ஸ்கீட் அணிகள் பிரிவில் இந்தியாவின் குர்ஜோத் காங்குரா, மைராஜ் அகமது கான், அங்கத் வீர் சிங் பாஜ்வா ஆகியோர் கூட்டணி 6–2 என்ற கணக்கில் கத்தாரின் நாசர் அல் அட்டியா, அலி அகமது அல் இஷாக், ரஷீத் ஹமாத் கூட்டணியை வீழ்த்தி தங்கத்தை கைப்பற்றியது. அதே போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் பரினாஸ் தலிவால், கார்த்திகி சிங் ஷெகாவத், கனிமத் சிகோன் ஆகியோர் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

---

**3. நாட்டின் தங்கம் இறக்குமதி 3% குறைந்தது: வர்த்தக அமைச்சகம்**

நாட்டின் தங்கம் இறக்குமதி நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாத காலத்தில் 3.3 சதவீதம் குறைந்துள்ளது என மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**இதுகுறித்து அந்த அமைச்சகம் மேலும் கூறியுள்ளதாவது:** நடப்பு 2020–21ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாதங்களில் 2,611 கோடி டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ₹1.95 லட்சம் கோடி) மதிப்புக்கு தங்கம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த 2019–20ஆம் நிதியா–ண்டின் இதே காலகட்ட தங்கம் இறக்குமதி அளவான 2,700 கோடி டாலருடன் ஒப்பிடுகையில் 3.3 சதவீதம் குறைவாகும்.

அதேசமயம், நடப்பாண்டு பிப்ரவரியில் தங்கம் இறக்குமதியானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 236 கோடி டாலரிலிருந்து 530 கோடி டாலராக அதிகரித்துள்ளது. தங்கம் இறக்குமதி சரிவடைந்துள்ளது நாட்டின் வர்த்தக பற்றாக்குறை குறைவதற்கு வழிவகுத்துள்ளது. அதன்படி, கடந்த நிதியாண்டில் 15,137 கோடி டாலராக காணப்பட்ட வர்த்தக பற்றாக்குறை நடப்பு நிதியாண்டின் முதல் 11 மாதங்களில் 8,462 கோடி டாலராக குறைந்–துள்ளது. வெள்ளி இறக்குமதி கடந்த 11 மாதங்களில் 70.3% குறைந்து 78 கோடி டாலராக இருந்தது.

ஆபரண துறையில் தேவை அதிகரித்து காணப்படுவதையடுத்து இந்தியா தங்கத்தை அதிகம் இறக்குமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக உள்ளது. ஆண்டுக்கு 800–900 டன் வரையிலான தங்கத்தை இந்தியா இறக்குமதி செய்கிறது. ஏற்றுமதி துறையை ஊக்குவிக்க வேண்டி பட்ஜெட்டில் தங்கத்–துக்கான இறக்குமதி வரி 7.5 சதவீதமாக குறைக்கப்பட்டது.

2020–21 ஏப்ரல்–பிப்ரவரியில் நவரத்தினங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதி 33.86% சரிவடைந்து 2,240 கோடி டாலராக குறைந்ததாக வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**4. 67ஆவது திரைப்பட விருதுகள் அறிவிப்பு: முழுப்பட்டியல்**

67ஆவது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஆண்டிலும் ஏப்ரல் மாதம் திரைப்பட தேசிய விருதுகள் குறித்த அறிவிப்பு வெளியாகும். ஆனால் கடந்தாண்டு COVID அச்சுறுத்தல் மற்றும் ஊரடங்கு காரணமாக தேசிய விருது அறிவிப்பு ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில், தற்போது அறிவிக்கப்பட்ட தேசிய விருதுகளுக்கான பட்டியலில் அசுரன் மற்றும் ஒத்த செருப்பு ஆகிய இரு தமிழ்ப்படங்களுக்கும் தலா 2 விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தனுஷ் நடிப்பில் வெற்றிமாறன் இயக்கிய அசுரன் படம், சிறந்த தமிழ்ப் படத்துக்கான தேசிய விருதைப் பெற்றுள்ளது. அத்துடன் ₹1,00,000 பணமுடிப்புடன் ரஜத் கமல் விருது வழங்கப்பட்டது. அஜித்குமார் நடித்த விஸ்வாசம் படத்தின் பாடல்களுக்காக இசையமைப்பாளர் D. இமானுக்கு சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது கிடைத்துள்ளது.

அசுரன் படத்தில் நடித்ததற்காக தனுஷுக்குச் சிறந்த நடிகருக்கான விருதும் சூப்பர் டீலக்ஸ் படத்தில் நடித்ததற்காக விஜய் சேதுபதிக்கு சிறந்த துணை நடிகருக்கான விருதும் அறிவிக்கப்பட்டுள்ளன.

பார்த்திபன் நடித்து இயக்கிய ஒத்தசெருப்பு படத்துக்கு நடுவர்களின் சிறப்புப் பரிசு கிடைத்துள்ளது. இந்தப் படத்துக்காக ரசூல் பூக்குட்டிக்கு சிறந்த ஒலிப்பதிவுக்கான விருது கிடைத்துள்ளது. கேடி (எ) கருப்புதுரை படத்தில் நடித்த நாக விஷால் சிறந்த குழந்தை நட்சத்திரமாகத் தேர்வாகியுள்ளார்.

**சிறந்த படம்** – மரைக்காயர் (மலையாளம்)

**சிறந்த இயக்குநர்** – சஞ்சய் பூரண் சிங் சௌகான் (ஹிந்தி)

**சிறந்த நடிகை** – கங்கனா ரணாவத் (மணிகர்னிகா & பங்கா)

**சிறந்த நடிகர்** – தனுஷ் (அசுரன்); மனோஜ் பாஜ்பாய் (போஸ்லே)

**சிறந்த அறிமுக இயக்குநர்** – மதுகுட்டி சேவியர் (ஹெலன்)

**நர்கீஸ் தத் தேசிய ஒருமைப்பாடு விருது** – தாஜ்மஹால் (மராத்தி)

**சிறந்த பொழுதுபோக்குப் படம்** – மஹர்ஷி (தெலுங்கு)

**சமூக நலனுக்கான சிறந்த படம்** – ஆனந்தி கோபால் (மராத்தி)

**சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான சிறந்த படம்** – வாட்டர் பரியல் (மோன்பா)

**சிறந்த துணை நடிகர்** – விஜய் சேதுபதி

**சிறந்த துணை நடிகை** – பல்லவி ஜோஷி

**சிறந்த குழந்தை நட்சத்திரம்** – நாக விஷால் (கேடி (எ) கருப்புதுரை)

**சிறந்த பாடகர்** – பி ப்ராக் (கேசரி, ஹிந்தி)

**சிறந்த பாடகி** – சவானி ரவிந்திரா (பார்டோ, மராத்தி)

**சிறந்த வசனம்** – தி தாஷ்கண்ட் ஃபைல்ஸ் (ஹிந்தி)

**சிறந்த திரைக்கதை (தழுவல்)** – கும்நமி

**சிறந்த அசல் திரைக்கதை** – ஜேயஸ்தோபுத்ரோ (வங்காளம்)

**சிறந்த ஒலி அமைப்பு** – ரசூல் பூக்குட்டி (ஒத்த செருப்பு)

**சிறந்த ஒலி அமைப்பு** – லியுடஹ் (காஸி)

**சிறந்த படத்தொகுப்பு** – நவீன் நூலி (ஜெர்ஸி, தெலுங்கு)

**சிறந்த கலை இயக்கம்** – ஆனந்தி கோபால் (மராத்தி)

**சிறந்த ஒப்பனை** – ரஞ்சித் (ஹெலன், மலையாளம்)

**சிறந்த இசையமைப்பாளர்** – D. இமான் (விஸ்வாசம்)

**சிறந்த பின்னணி இசை** – பிரபுத்தா பானர்ஜி (வங்காளம்)

**சிறந்த பாடலாசிரியர்** – பிரபா வர்மா (கொலாம்பி, மலையாளம்)

**சிறந்த ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ்** – மரைக்காயர் (மலையாளம்)

**சிறந்த நடனம்** – ராஜு சுந்தரம் (மஹர்ஷி, தெலுங்கு)

**திரையுலகுக்கு ஏற்ற மாநிலம்** – சிக்கிம்

**சிறப்பு விருது** – ஒத்த செருப்பு

**சிறந்த ஆடை வடிவமைப்பு** – சுஜித் சுதாகரன், வி. சாய் (மரைக்காயர், மலையாளம்)

**சிறந்த சண்டை இயக்கம்** – அவனே ஸ்ரீமன்நாராயணா (கன்னடம்)

**சிறந்த ஒளிப்பதிவு** – கிரிஷ் கங்காதரன் (ஜல்லிக்கட்டு, மலையாளம்)

**சிறந்த குழந்தைகள் படம்** – கஸ்தூரி (ஹிந்தி)

---

**5. தெலங்கானா அரசு ஊழியர்களுக்கு 30 சதவீத ஊதிய உயர்வு: ஓய்வு வயது 61 ஆக உயர்வு**

தெலங்கானா அரசு ஊழியர்களுக்கு 30% ஊதிய உயர்வு அளிப்பதுடன் அவர்களின் பணி ஓய்வு வயது 58'இலிருந்து 61 ஆக உயர்த்தப்படுவதாக அம்மாநில முதல்வர் கே சந்திரசேகர ராவ் அறிவித்துள்ளார்.

---

**6. ஷேக் முஜிபூர் ரஹ்மானுக்கு காந்தி அமைதி விருது**

2020ஆம் ஆண்டுக்கான 'காந்தி அமைதி' விருது 'வங்கபந்து' என அழைக்கப்படும் ஷேக் முஜிபூர் ரஹ்மானுக்கு வழங்கப்படுவதாக மத்திய கலாசார துறை அறிவித்துள்ளது. 2019ஆம் ஆண்டுக்கான இந்த விருது மறைந்த ஓமன் சுல்தான் கபூஸ் பின் சையது அல் சையதுவுக்கு வழங்கப்ப–டுவதாகவும், இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த விரும்பிய அவரது நோக்கத்துக்கும், வளைகுடா பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிக்கும் அங்கீகாரம் அளிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி தலைமையிலான நடுவர் குழுவானது கடந்த மார்ச் 19ஆம் தேதி கூடி, காந்தி அமைதி விருதுக்கு ஷேக் முஜிபூர் ரஹ்மானையும், ஓமனின் நீண்டகால ஆட்சியாளரான சுல்தான் கபூஸையும் ஒருமனதாகத் தேர்ந்தெடுத்ததாக மத்திய கலாசார துறை தெரிவித்துள்ளது.

மகாத்மா காந்தியின் 125ஆவது பிறந்த ஆண்டு கொண்டாட்டத்தையொட்டி 1995'ஆம் ஆண்டுமுதல் காந்தி அமைதி விருதானது மத்திய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. தேசியம், இனம், மொழி, ஜாதி, மத வேறுபாடின்றி வழங்கப்படும் இவ்விருது, ₹1 கோடி ரொக்கப்பரிசு, பாரம்பரிய கைவினைப் பொருள்களை உள்ளடக்கியது ஆகும்.

---

**1.கன்வர்ஜென்ஸ் எனர்ஜி சர்வீசஸ் லிட் அறிமுகப்படுத்திய கிராம் உஜாலா திட்டத்தின்கீழ் வழங்கப்படும் LED விளக்குகளின் விலை என்ன?**

அ) ரூ.5

**ஆ) ரூ.10 ☑**

இ) ரூ.25

ஈ) ரூ.1




✓ LED விளக்குகளை ஒரு விளக்குக்கு ₹10 என்ற விலையில் வழங்கும் 'கிராம் உஜாலா' என்ற புதிய திட்டத்தை மின் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் இராஜ்குமார் சிங் தொடங்கினார். இந்தத் திட்டம், பீகாரிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது.

✓ உலகிலேயே மிகக் குறைந்த விலை கொண்ட இந்த LED விளக்குகளை, எரிசக்தி திறன் சேவைகள் நிறுவனத்தின் துணை நிறுவனமான கன்வர்ஜென்ஸ் எனர்ஜி சர்வீசஸ் லிட் தயாரிக்கின்றது.

---

**2.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பிராட்காஸ்ட் எஞ்சினியரிங் கன்சல்டன்ட்ஸ் இந்தியா லிட் (BECIL) என்பது எந்த அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு பொதுத்துறை நிறுவனமாகும்?**

**அ) தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ☑**

ஆ) உள்துறை அமைச்சகம்

இ) எரிசக்தி அமைச்சகம்

ஈ) ஜவுளி அமைச்சகம்

BECIL

✓ பிராட்காஸ்ட் இன்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ் இந்தியா லிமிடெட் என்பது மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் ஒரு பொதுத்துறை நிறுவனமாகும்.

✓ சமூக ஊடக தளங்களில் பதியப்படும் தகவல்களின் உண்மைதன்மை –யை சரிபார்ப்பதற்கும் தவறான தகவல்களைக் கண்டறிவதற்குமான தீர்வுகள் மற்றும் சேவைகளை வழங்க, முகமைகளுக்கு அழைப்புவிடுக் –கும் ஒப்பந்தப்புள்ளியை BECIL சமீபத்தில் வெளியிட்டது. BECIL, முகமை –களை அதிகாரபூர்வ பட்டியலில் வைத்திருக்க முற்படுகிறது.

---

**3. 2021ஆம் ஆண்டுக்கான மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

**அ) 139 ☑**

ஆ) 145

இ) 108

ஈ) 5

139

✓ உலக மகிழ்ச்சி அறிக்கை–2021 ஐநா நீடித்த வளர்ச்சிக்கான தீர்வுகள் வலையமைப்பால் சமீபத்தில் வெளியிடப்பட்டது. வாழ்க்கை மதிப்பீடுகள், நேர்மறை உணர்ச்சிகள் மற்றும் எதிர்மறை உணர்ச்சிகள் ஆகிய 3 முக்கிய குறிகாட்டிகளின்கீழ் இவ்வறிக்கை நல்வாழ்வை அளவிடுகிறது. 149 நாடுகளில், இந்தியா 139ஆவது இடத்திலுள்ளது. அறிக்கையின்படி பின்லாந்து உலகின் மகிழ்ச்சியான நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**4.கீழ்காணும் எந்த நாட்டோடு இணைந்து, இந்தியா, சமீபத்தில் ஒரு செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி & மேம்பாட்டு முன்னெடுப்பைத் தொடங்கியது?**

அ) ஜப்பான்

ஆ) பிரான்ஸ்

**இ) அமெரிக்கா ☑**

ஈ) பின்லாந்து



✓ இந்தோ–அமெரிக்க அறிவியல் & தொழில்நுட்ப மன்றமானது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் செயலர் முன்னிலையில் அமெரிக்க இந்தியா செயற்கை நுண்ணறிவு முன்னெடுப்பைத் தொடங்கியது.

✓ இந்தோ–அமெரிக்க அறிவியல் மற்றும் தொழினுட்ப மன்றம் என்பது இரு நாடுகளாலும் 2000ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இருதரப்பு அமைப்பாகும். இது, பரஸ்பர தொடர்புகளின்மூலம் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்துகிறது. அமெரிக்க இந்தியா செயற்கை நுண்ணறிவு முன்னெடுப்பின்கீழ், புதிய ஆராய்ச்சி & வளர்ச்சிப்பகுதிகள் மற்றும் வாய்ப்புகள் அடையாளம் காணப்படும்.

---

**5.இந்திய கடற்படையானது எந்த அமைப்பால் கட்டப்பட்ட நீர்ப்படை கப்பலான L58'ஐ பணியில் சேர்த்துள்ளது?**

அ) DRDO

ஆ) ISRO

**இ) GRSE ☑**

ஈ) HAL

✓ போர்ட் பிளேரில் நடந்த ஒரு நிகழ்வில், இந்திய கடற்படை நீர்ப்படை கப்பலான L58'ஐ அறிமுகப்படுத்தியது. இது, நீர்ப்படை கப்பல் Mk–IV வகுப்பு கப்பலின் வரிசையில் எட்டாவதும் கடைசியுமாகும். இந்தக் கப்பல் கொல்கத்தாவின் அரசு ரீதியான கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் அண்ட் எஞ்சினியர்ஸ் நிறுவனத்தால் (GRSE) உள்நாட்டிலேயே வடிவமைத்து கட்டப்பட்டது. போர் பீரங்கிகள் மற்றும் கனரக ஆயுத அமைப்புகள் போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்கு இது பயன்படுத்தப்படும்.

---

**6.ஆபரேஷன் சங்கல்பின்கீழ் பாரசீக வளைகுடாவில், பின்வரும் எந்த நாட்டோடு இணைந்து, இந்திய கடற்படை, 'பாஸேஜ்' என்னும் பயிற்சியை (PASSEX) மேற்கொண்டது?**

அ) ஐக்கிய அரபு அமீரகம்

ஆ) கத்தார்

**இ) பக்ரைன் ☑**

ஈ) ஓமான்



✓ ஆபரேஷன் சங்கல்பின்கீழ் பாரசீக வளைகுடாவில் ராயல் பக்ரைன் கடற்படையுடன் இந்திய கடற்படை 'பாஸேஜ்' என்னும் பயிற்சியை (PASSEX) மேற்கொண்டது. இப்பயிற்சியானது இந்திய நட்பு நாடுகளின் கடற்படையினருடன் இணைந்து இந்திய கடற்படையால் தவறாமல் நடத்தப்படுகின்றது. கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற குறியீட்டு பெயரிலான 'ஆபரேஷன் சங்கல்ப்', கடந்த 2019'இல் வளைகுடாவில் தொடங்கப்பட்டது.

---

**7.காப்பீட்டு (திருத்த) மசோதா, 2021'இன்படி, காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டின் புதிய வரம்பு என்ன?**

அ) 26%

ஆ) 49%

**இ) 74% ☑**

ஈ) 100%

74%

✓ அண்மையில் மாநிலங்களவையால் காப்பீட்டு (திருத்த) மசோதா, 2021 அங்கீகரிக்கப்பட்டது. காப்பீட்டுத்துறையில் அந்நிய நேரடி முதலீட்டு வரம் –பை தற்போதைய 49 சதவீதத்திலிருந்து 74 சதவீதமாக உயர்த்த இது முற்படுகிறது. மசோதாவின்படி, இயக்குநர்கள் குழுவில் உள்ளவர்களில் பெரும்பாலோர் மற்றும் முக்கிய நிர்வாக நபர்கள், குடியுரிமைபெற்ற இந்தியர்களாக இருப்பார்கள், குறைந்தபட்சம் 50 சதவீத இயக்குநர்கள் சுயாதீன இயக்குநர்களாக இருப்பார்கள்.

---

**8. மேகக்கணிமை குறித்து மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக கீழ்காணும் எந்த தொழில்நுட்ப நிறுவனத்துடன் NITI ஆயோக் கூட்டு சேர்ந்துள்ளது?**

அ) HP

**ஆ) அமேசான் ☑**

இ) சாம்சங்

ஈ) ஹுவாவே

amazon web services

✓ அடல் டிங்கரிங் ஆய்வகங்கள்மூலம் மேகக்கணிமையின் அடிப்படைகள் குறித்து மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக NITI ஆயோக், அமேசன் வலைத்தள சேவைகள் (AWS) உடன் கூட்டுசேர்ந்துள்ளது. திட்டத்தின் கீழ், கிளவுட் ஸ்டோரேஜ், வெப் ஹோஸ்டிங், செயற்கை நுண்ணறிவு, எந்திரகற்றல் மற்றும் மெய்நிகர்போன்ற மேகக்கணிமை கருத்துக்களை AWS, மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும்.

**9. 'ஆற்றல் சுவராஜ் யாத்திரை' பேருந்தை உருவாக்கிய நிறுவனம் எது?**

**அ) IIT பாம்பே ☑**

ஆ) IIT மெட்ராஸ்

இ) IIT கௌகாத்தி

ஈ) IISc, பெங்களூரு

✓ மத்திய கல்வி அமைச்சர் இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்', ஆற்றல் சுவராஜ் யாத்திரை பேருந்தில் பயணம் செய்தார். இந்தப் பேருந்தை, பாம்பே இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் பேராசிரியர் டாக்டர் சேதன் சிங் சோலங்கி வடிவமைத்து உருவாக்கியுள்ளார். இது, சூரிய ஆற்றலில் இயங்கும் ஒரு வாகனமாகும்.

---

**10.இந்தியாவின் H2Ooooh – நீர்குறித்த விழிப்புணர்வுத்திட்டத்திற் –கு தனது ஆதரவை நீட்டித்துள்ள நிறுவனம் எது?**

அ) உலக வங்கி

**ஆ) UNESCO ☑**

இ) UNICEF

ஈ) OECD

✓ நீர் பாதுகாப்பு விழிப்புணர்வு திட்டத்திற்காக, UNESCO யுனைடெட் ஸ்கூ –ல்ஸ் ஆர்கனைசேஷன் இந்தியா (USO இந்தியா), வாட்டர் டைஜஸ்ட் இதழ் மற்றும் டூன்ஸ் மீடியா குழுமத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது.

✓ H2Ooooh! – நீர்குறித்த விழிப்புணர்வுத்திட்டமானது தேசிய தூய்மை கங் –கை திட்டத்துடன் இணைந்து பள்ளிமாணவர்களுக்காக நடத்தப்படுகி –றது. மாணவர்கள் உருவாக்கிய அனிமேஷன் காணொளிகள் உலக நீர் நாளான மார்ச்.22 அன்று வெளியிடப்பட்டன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இலங்கைக்கு எதிராக ஐநா'வில் தீர்மானம்: இந்தியா புறக்கணிப்பு**

இலங்கை இறுதிக்கட்டப்போரில் போர்க்குற்றங்கள் நடைபெற்ற குற்றச்சா –ட்டில் அந்நாட்டு அரசுக்கு எதிராக ஐநா மனிதவுரிமைகள் ஆணையத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை இந்தியா புறக்க –ணித்தது. எனினும், அந்தத் தீர்மானம் பிறநாடுகளின் ஆதரவுடன் நிறை –வேற்றப்பட்டது. இதுகுறித்து PTI செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த 2009'ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிக்கட்டப்போரின்போது, இருதரப்பிலு –ம் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஐநா மனித உரிமைகள் ஆணையம் பலமுறை தீர்மானம் நிறைவேற்றியது. அதனைத்தொடர்ந்து, சர்வதேச உறுப்பினர்கள் அடங்கிய விசாரணைக் குழுவை அதிபர் சிறிசேனா தலைமையிலான முந்தைய அரசு அமைத்தது. எனினும், கடந்த 2019'ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, கோத்தபய இராஜபட்ச அதிபராகப் பொறுப்பேற்ற பிறகு அந்தக்குழு கலைக்கப்பட்டது.

இந்தச் சூழலில், இலங்கை விவகாரத்துக்கான ஐநா மனித உரிமைகள் ஆணையத்தின் மையக்குழு, வரைவுத் தீர்மானமொன்றை தாக்கல் செய்தது. பிரிட்டன், கனடா, ஜெர்மனி, மலாவி, மான்டனீக்ரோ, வடக்கு மாசிடோனியா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கும் அந்தக்குழு, போர்க் குற்றங்கள் தொடர்பான நியாயமான விசாரணையை மேற்கொள்வதற் –கான வாக்குறுதியை இலங்கை அரசு நிறைவேற்றத் தவறியதாக அந்த வரைவுத்தீர்மானத்தில் குற்றம்சாட்டியிருந்தது.

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்புகளின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடப்பட்டுள்ளதாக அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. போர்க் குற்றங்கள் தொடர்பாக நடுநிலையான விசாரணையை இலங்கை அரசு நடத்த வேண்டும் என்று தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது. 47 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஆணையத்தில், 22 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.

பாகிஸ்தான், சீனா, வங்கதேசம், ரஷியா உள்ளிட்ட பதினொரு நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட 14 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்காமல் புறக்கணித்தன.

---

**2. மண்டல அளவிலான துப்பாக்கி சுடும் போட்டி: சென்னை ரயில்வே கோட்ட அணி முதலிடம்**

ரயில்வே பாதுகாப்புப் படை வீரர்களுக்கு இடையே மண்டல அளவிலான துப்பாக்கிச்சுடும் போட்டியில் சென்னை இரயில்வே கோட்டஅணி 8 தங்கம் உள்பட 16 பதக்கங்களை வென்று முதலிடம் பிடித்தது. தெற்கு இரயில்வே சார்பில், இரயில்வே பாதுகாப்புப் படை வீரர்களுக்கு இடையே மண்டல அளவிலான துப்பாக்கிச்சுடும் போட்டி 3 நாள்கள் திருச்சியில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் தெற்கு இரயில்வேக்கு உட்பட்ட சென்னை, மதுரை, சேலம், திருச்சி, திருவனந்தபுரம், பாலக்காடு ஆகிய ஆறு இரயில்வே கோட்டங்களில் இருந்து வீரர்கள் கலந்துகொண்டனர். இதில் ஆய்வாளர் விரேந்திர சிங் தலைமையிலான சென்னை இரயில்வே கோட்ட அணி 8 தங்கம் உள்பட 16 பதக்கங்களைக் கைப்பற்றி முதலிடம் பிடித்தது.

---

**3. காசநோய்க்கு ஓராண்டுக்கு சுமார் 4.5 இலட்சம் பேர் பலி: ஜெ இராதாகிருஷ்ணன்**

இந்தியாவில் காசநோயினால் பாதிக்கப்பட்டு ஆண்டுக்கு சுமார் 4.5 லட்சம் பேர் மரணமடைகின்றனர் என சுகாதாரத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ இராதாகிருஷ்ணன் சென்னையில் தெரிவித்தார். உலக காச நோய் ஒழிப்பு விழிப்புணர்வு நாளையொட்டி சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சுகாதாரத்துறை முதன்மைச்செயலாளர் Dr ஜெ இராதாகிரு –ஷ்ணன் கலந்துகொண்டு 'மறைமுக காசநோய்', 'சிகிச்சைக்கு கடினமா –ன காசநோய்' ஆகிய இரண்டு சிறுபுத்தகங்களை வெளியிட்டார்.

காசநோயினால் உலகம் முழுவதும் ஆண்டுக்கு சுமார் ஒரு கோடி பேர் பாதிக்கப்படுகின்றனர். இதில் சுமார் 14 இலட்சம் பேர் நோய் முற்றிய நிலையில் இறந்துபோகின்றனர். இந்தியாவில் ஆண்டுக்கு சுமார் 26 இலட்சம் பேர் பாதிப்பு உள்ளாகின்றனர். இதில் சுமார் 4.5 லட்சம் பேருக்கு மரணம் ஏற்படுகிறது. 2030ஆம் ஆண்டுக்குள் இந்நோயை முற்றிலுமாக ஒழிப்பதற்கு உலக சுகாதார நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

---

**4. உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: அங்கத் – கனிமத் ஜோடிக்கு தங்கம்**

தில்லியில் நடைபெறும் உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் ஸ்கீட் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் அங்கத் வீர்சிங் பாஜ்வா, கனிமத் சிகோன் இணை தங்கப்பதக்கம் வென்றது. பதக்கத்துக்கான சுற்றில் அங்கத்–கனிமத் இணை 33 ஷாட்களுடன் முதலிடம் பிடித்தது. இத்தங்கத்துடன் சேர்த்து, இப்போட்டியில் இதுவரை இந்தியா 7 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலம் என 15 பதக்கங்கள் வென்றுள்ளது.

---

**5. டி20 தரவரிசை: ஷஃபாலி முதலிடம்**

மகளிர் கிரிக்கெட்டில் ICC T20 தரவரிசையில் பேட்ஸ்வுமன்கள் பிரிவில் இந்தியாவின் ஷஃபாலி வர்மா ஓரிடம் முன்னேறி முதலிடம்பிடித்தார். தீப்தி சர்மா 4 இடங்கள் முன்னேறி 40ஆவது இடத்துக்கும், ரிச்சா கோஷ் 59 இடங்கள் ஏற்றங்கண்டு 85ஆவது இடத்துக்கும் வந்துள்ளனர்.

ஆல்–ரவுண்டர் ஹர்லீன் தியோல் 262 இடங்கள் ஏற்றங்கண்டு 99ஆவது இடத்துக்கு வந்துள்ளார். தென்னாப்பிரிக்க வீராங்கனை லிஸெலெ லீ 3 இடங்கள் முன்னேறி 11ஆவது இடத்துக்கும், லௌரா வோல்வார்ட்ட் 5 இடங்கள் முன்னேறி 24ஆவது இடத்துக்கும் வந்துள்ளனர்.

தென்னாப்பிரிக்க கேப்டன் சுனே லஸ் ஐந்து இடங்கள் ஏற்றங்கண்டு 38ஆவது இடத்தையும், நாடினே டி கிளெர்க் 3 இடங்கள் முன்னேறி 74ஆவது இடத்துக்கும் வந்துள்ளனர். பௌலர்கள் பிரிவில் இந்தியாவின் ஹர்லீன் தியோல் 76 இடங்கள் முன்னேறி 146ஆவது இடத்துக்கு வர, இராஜேஷ்வரி கெய்க்வாட் 34ஆவது இடத்திலிருந்து 25ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

---

**6. 45 வயதுக்கு மேற்பட்டோர் ஏப்.1 முதல் தடுப்பூசி செலுத்தலாம்; சான்றிதழ் தேவையில்லை: மத்திய அரசு அறிவிப்பு**

45 வயதுக்கு மேற்பட்ட இணை நோய்கள் இருப்போர், இல்லாதோர் அனைவரும் ஏப்ரல் 1 முதல் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம் என்று மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது. இரண்டாம்கட்ட கரோனா தடுப்பூசி முகாமின் இணை நோய்கள் இருக்கும் 45 வயதுக்கு மேற்பட்டோர் மருத்துவரிடம் சான்று பெற்று வந்து தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், ஏப்.1 தொடங்கும் முகாமில் 45 வயதுக்கு மேற்பட்டோர் இணை நோய்கள் இருந்தாலும் சான்றிதழ்பெறவேண்டிய அவசியமில்லை என அரசு தெரிவித்துள்ளது.

நாட்டில் கரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் வகையில் இரு தடுப்பூசிகளை மத்திய அரசு அறிமுகம் செய்தது. ICMR, பாரத் பயோடெக் நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட்ட கோவாக்ஸின் மருந்தும், சீரம் மருந்து நிறுவனத்துடன் அஸ்ட்ராஜென்கா நிறுவனம் இணைந்து தயாரித்த கோவிஷீல்ட் மருந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

முதல் கட்ட தடுப்பூசி முகாம் கடந்த ஜனவரி 16 அன்று தொடங்கியது. இந்த முகாமில் முன்களப்பணியாளர்கள், மருத்துவர்கள், மருத்துவப்பணியாளர் –களுக்கு கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது. அதன்பின் இரண்டாவது கட்ட தடுப்பூசி முகாமில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர், 45 வயது முதல் 59 வயதுக்கு உட்பட்ட இணைநோய்கள் இருப்போர் கரோனா தடுப்பூசியைச் செலுத்திக்கொள்ள அரசு கேட்டுக்கொண்டது.

அரசு மருத்துவமனைகளிலும், தேர்வுசெய்யப்பட்ட தனியார் மருத்துவமனைகளிலும் கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏப்.1 முதல் 45 வயதுக்கு மேற்பட்டோர் அனைவரும் COVID தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

**1.** சாமர் (SAAMAR) என்ற திட்டம் தொடங்கப்பட்ட மாநிலம் எது?

அ) பீகார்

**ஆ) ஜார்க்கண்ட் ☑**

இ) ஹரியானா

ஈ) உத்தர பிரதேசம்

✓ ஜார்க்கண்ட் மாநில அரசானது SAAMAR (Strategic Action for Alleviation of Malnutrition and Anaemia Reduction) என்ற திட்டத்தைத்தொடங்கியது. இரத்தசோகை உடைய பெண்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள சிறார்களை அடையாளங்காண்பதன்மூலம் ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஊட்டச்சத்து குறைபாட்டை கையாளுவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம், ஜார்க்கண்ட் மாநிலத்தில் இரத்தசோகை நோயை திறம்பட குறைப்பதற்காக பல்வேறு மாநில துறைகள் மற்றும் நிறுவனங்களை ஒன்றிணைக்கும்.

---

**2.** 67ஆவது தேசிய திரைப்பட விருதுகளில் 'சிறந்த திரைப்படம்' விருதை வென்ற இந்திய திரைப்படம் எது?



அ) அசுரன்

**ஆ) மரைக்காயர்: அரபிக்கடலின் சிங்கம் ☑**

இ) ஒத்த செருப்பு

ஈ) சூரரைப்போற்று

✓ 67ஆவது தேசிய திரைப்பட விருதுகள், கடந்த 2019ஆம் ஆண்டைச் சார்ந்த திரைப்படங்களை கௌரவிப்பதாக அறிவிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியை திரைப்பட விழாக்கள் இயக்குநரகம், தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம் ஏற்பாடு செய்தன. இயக்குநர் பிரியதர்ஷனின் மலையாளப் போர் காவியமான மோகன்லால் நடித்த 'மரைக்காயர்: அரபிக்கடலின் சிங்கம்' என்ற திரைப்படம் 'சிறந்த திரைப்படத்'துக்கான விருதை வென்றது.

✓ சிறந்த நடிகருக்கான விருது 'போன்ஸ்லே' திரைப்படத்தில் நடித்ததற்காக மனோஜ் பாஜ்பாய்க்கும், தமிழ்ப்படமான 'அசுரனுக்காக' தனுஷுக்கும் வழங்கப்பட்டது.

---

**3.** இமயமலை பனிப்பாறைகளின் தடிமனை மதிப்பிடுவதற்காக வான்வழி ரேடார் ஆய்வுகளை நடத்தும் நாடு எது?



அ) நேபாளம்

**ஆ) இந்தியா ☑**

இ) வங்காளதேசம்

ஈ) ரஷியா

✓ இமயமலை பனிப்பாறைகளின் தடிமனை மதிப்பிடுவதற்காக, இந்தியா, வான்வழி ரேடார் ஆய்வுகளை நடத்தவுள்ளது. இமாச்சல பிரதேசத்தின் லஹால்–ஸ்பிட்டி படுகையில் சோதனை அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்படவுள்ளது. இந்தச் சோதனை திட்டத்திற்குப் பிறகு, சிந்து, கங்கா மற்றும் பிரம்மபுத்திரா துணைப்படுகைகளிலும் இதேபோன்ற ஆய்வுகள் நடத்தப்படும். துருவ & பெருங்கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையம், புவி அறிவியல் அமைச்சகம் இந்த ஆய்வை முன்மொழிந்தது.

---

**4.** அண்மையில், 'டயல் 112' ERSS மற்றும் மாநில அவசரநிலை பதிலளிப்பு மையத்தை தொடங்கிய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) கர்நாடகா

**இ) ஒடிஷா ☑**

ஈ) மத்திய பிரதேசம்

✓ ஒடிஸா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் ₹157 கோடி மதிப்புள்ள 'டயல் 112' – மாநில அவசரகால ஆதரவு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளார். காவல்துறை, தீயணைப்பு துறை மற்றும் நலவாழ்வு உள்ளிட்ட அனைத்து அவசர சேவைகளுக்கும், இந்தக் கட்டணமில்லா எண்ணை மக்கள் பயன்படுத்தலாம். மாநில அவசரநிலை பதிலளிப்பு மையம் மற்றும் மொபைல் டேட்டா டெர்மினல்கள் பொருத்தப்பட்ட அவசரகால மீட்பு வாகனங்களும் தொடங்கிவைக்கப்பட்டன.

---

**5.** தேசிய கணக்குகள் புள்ளிவிவரங்கள் – 2021'இன்படி, எந்தத் துறையின் தனியார் இறுதி நுகர்வு செலவு அதிகபட்ச உயர்வைக் கொண்டிருந்தது?



அ) கல்வி

ஆ) உணவகங்கள்

**இ) நலவாழ்வு ☑**

ஈ) மதுபானங்கள்

✓ நடுவண் புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தேசிய கணக்குகள் புள்ளிவிவரங்கள் – 2021'இன்படி, சுகாதாரம், கல்வி மற்றும் உணவகங்களுக்கான தனியார் இறுதிநுகர்வு செலவு, 2019–20ஆம் ஆண்டில் அதிகபட்ச உயர்வைக் கொண்டுள்ளன.

✓ சுகாதாரத்துறையில் இந்த உயர்வு 9.5% ஆக பதிவாகியுள்ளது. அதைத் தொடர்ந்து கல்வி மற்றும் உணவகங்கள் உள்ளன. மதுபானங்கள், ஆடை & காலணிகள் இக்காலகட்டத்தில் வீழ்ச்சியை பதிவுசெய்தன.

---

**6.** ஐநா அறிவித்தபடி, உலகம் முழுவதும் பன்னாட்டு மகிழ்ச்சி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) மார்ச் 18

**ஆ) மார்ச் 20 ☑**

இ) மார்ச் 22

ஈ) மார்ச் 24

✓ ஐநா அவையின் பொது அவை, கடந்த 2012ஆம் ஆண்டில், மார்ச்.20'ஐ பன்னாட்டு மகிழ்ச்சி நாளாக அறிவித்தது. உலகெங்குமுள்ள மக்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சியின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க, இது, 2013 முதல் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. உலக மகிழ்ச்சி அறிக்கையின்படி, இந்த ஆண்டு, பின்லாந்து, உலகின் மகிழ்ச்சியான நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**7.** கிராமப்புற இந்தியாவில் பெண்கள் தொழில்முனைவோரை வளர்த்தெடுப்பதற்காக 'சகி திஷா' திட்டத்தைத் தொடங்கியுள்ள அமைப்பு எது?

அ) உலக வங்கி

**ஆ) ஐநா வளர்ச்சித் திட்டம் ☑**


இ) ஆசிய வளர்ச்சி வங்கி

ஈ) புதிய வளர்ச்சி வங்கி

✓ ஐநா வளர்ச்சித் திட்டமானது கிராமப்புற இந்தியாவில், பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் தொழில்முனைவை மேம்படுத்துவதற்காக 'சகி திஷா' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டமானது ஐநா வளர்ச்சித் திட்டம் மற்றும் IKEA அறக்கட்டளைக்கு இடையிலான ஐந்தாண்டு ஒப்பந்தமாகும். தில்லி NCR, மகாராஷ்டிரா உள்ளிட்ட ஐந்து மாநிலங்களில் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை அணுக, இது, ஏற்கனவே ஒரு மில்லியன் பெண்களுக்கு ஆதரவளித்துள்ளது.

---

**8.** INSACOG கூட்டமைப்பானது சமீப செய்திகளில் இடம்பெற்றது. இதில், IN என்பது கீழ்காணும் எதைக்குறிக்கிறது?



அ) Integrated

**ஆ) Indian ☑**

இ) Inspection

ஈ) Innovation

✓ INSACOG என்பது இந்திய SARS–CoV–2 ஜெனோமிக்ஸ் கூட்டமைப்பைக் குறிக்கிறது. இது, நாடு முழுவதும் SARS–CoV–2 கண்காணிப்புக்காக இந்திய அரசால் அமைக்கப்பட்டுள்ளது. புவனேசுவரம், புனே, ஹைதராபாத், பெங்களூரு மற்றும் புது தில்லி ஆகிய இடங்களில் உள்ள 10 பிராந்திய மரபணு வரிசைமுறை ஆய்வகங்களால் இந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

---

**9.அண்மையில், ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்றதாக செய்திகளில் இடம்பெற்ற ஷரத் கமல், சத்தியன், சுதிர்தா முகர்ஜி ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ) பூப்பந்து

**ஆ) டேபிள் டென்னிஸ் ☑**

இ) மல்யுத்தம்

ஈ) வாள் சண்டை



✓ சமீபத்தில் தோகாவில் நடைபெற்ற ஆசிய ஒலிம்பிக் தகுதிப்போட்டியில் நான்கு இந்திய டேபிள் டென்னிஸ் வீரர்கள் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிபெற்றனர். மூத்த டேபிள் டென்னிஸ் வீரர் ஷரத் கமல், நான்காவது முறையாக ஒலிம்பிக்கில் பங்கேற்கவுள்ளார். G சத்தியன், மணிகா பத்ரா மற்றும் சுதிர்தா முகர்ஜி ஆகியோர் பிற மூன்று வீரர் / வீரங்கனைகளாவர்.

---

**10. உயர்தொழில்நுட்ப பகுதியில் உற்பத்தி மேற்கொள்வதற்கான அரசாங்கக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ) நிர்மலா சீதாராமன்

**ஆ) பியூஷ் கோயல் ☑**

இ) இராஜ்நாத் சிங்

ஈ) நரேந்திர மோடி



✓ உயர்தொழினுட்ப பகுதிகளில் உற்பத்தி மேற்கோள்வதற்கான குழுவை இந்திய அரசு அமைத்துள்ளது. அலுவல்பூர்வ அறிவிப்பின்படி, இக்குழுவுக்கு மத்திய வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தலைமை தாங்கவுள்ளார். இந்நடவடிக்கை, முதலீடுகளை மேம்படுத்துவதோடு தீவிர தொழில்நுட்ப துறைகளில் உற்பத்தியை ஊக்குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சேலம் இரயில்வே கோட்டத்துக்கு செயல்திறன் கேடயம்**

தெற்கு இரயில்வே சார்பில், 65ஆவது இரயில்வே வார விழாவில், ஒட்டுமொத்தமாக கோட்ட அளவில் பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டதற்காக, சேலம் கோட்டத்துக்கு செயல்திறன் கேடயமும், இயந்திரவியல் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளில் சிறந்த செயல்பாட்டுக்காக சென்னை இரயில்வே கோட்டத்துக்கும் கேடயம் வழங்கப்பட்டது.

கடந்த 1853ஆம் ஆண்டில், மும்பையில் இருந்து தானே வரை முதல் பயணிகள் இரயில் இயக்கப்பட்டதை நினைவுகூரும் விதமாக, ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 10ஆம் தேதி முதல் ஏப்ரல் 16ஆம் தேதி வரை இரயில்வே வாரம் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவில் சிறப்பாகச் செயல்பட்ட ஊழியர்கள், அதிகாரிகளைக் கௌரவிப்பது வழக்கம்.

இதில், மதுரை கோட்டம் 2ஆமிடத்தைப்பிடித்தது. மனிதவள திட்டமிடல், பொறியியல், மின்சாரம், திட்டப்பணி ஆய்வு, பயணிகளின் வசதிகள் உள்ளிட்ட பிரிவுகளில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக சேலம் இரயில்வே கோட்டத்துக்கு செயல்திறன் கேடயம் வழங்கப்பட்டது. வர்த்தகம், மருத்துவம், மின்சாரம், மின்சேமிப்பு ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக மதுரை இரயில்வே கோட்டத்துக்கு செயல்திறன் கேடயம் வழங்கப்பட்டது.

இயந்திரவியல் மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளில் சிறந்த செயல்பாட்டுக்காக சென்னை இரயில்வே கோட்டத்துக்கும், பாதுகாப்பு மற்றும் இயக்கக்கப் பிரிவில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக திருவனந்தபுரம் இரயில்வே கோட்டத்துக்கும், சிக்னல் மற்றும் தொலைதொடர்பு மற்றும் பணியாளர் திறன் பிரிவில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக திருச்சிராப்பள்ளி கோட்டத்துக்கும் செயல்திறன் கேடயம் வழங்கப்பட்டது.

---

**2. கரோனா பலி: 88% பேர் 45 வயதுக்கு மேற்பட்டவர்கள்**

இந்தியாவில் COVID நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு பலியானவர்களில் 88 சதவீதம் பேர் 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**3. சிறார் பாதுகாப்பு சட்டத் திருத்த மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல்**

சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்திருத்த மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல் வழங்கியது. சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்திருத்த மசோதாவை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சர் ஸ்மிருதி இரானி கடந்த மார்ச்.15 அன்று மக்களவையில் அறிமுகப்படுத்தினார். சிறார் பாதுகாப்புச் சட்ட விதிமுறைகளை முறையாக நடைமுறைப்படுத்தவேண்டிய அமைப்புகளை மாவட்ட ஆட்சியரும், கூடுதல் ஆட்சியரும் கண்காணிப்பதற்கு அந்த மசோதா வழிவகை செய்கிறது. அடுத்ததாக, மாநிலங்களவையின் ஒப்புதலைப் பெறுவதற்காக மசோதா அனுப்பிவைக்கப்படவுள்ளது.

---

**4. வாரத்தில் 4 நாள்கள் மட்டும் பணி: மத்திய அரசு அலுவலகங்களில் அமல்படுத்தும் திட்டமில்லை**

மத்திய அரசு அலுவலகங்களின் வேலைநாள்களை வாரத்தில் நான்கு நாட்களாக குறைக்கும் திட்டமில்லை என்று மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் சந்தோஷ் கங்வர் தெரிவித்தார். இதுதொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் எழுத்துபூவமாக அளித்த பதில்:

மத்திய அரசு அலுவலகங்களின் வேலைநாட்களை வாரத்தில் நான்கு நாட்களாக குறைக்க அல்லது வாரத்தில் 40 மணிநேரம் பணிபுரிய வேண்டும் என்ற திட்டத்தை அமல்படுத்தும் எந்தத் தீர்மானமும் மத்திய அரசிடம் இல்லை. மத்திய அரசு அலுவலகங்களின் வேலைநாட்கள், விடுமுறை நாட்கள், பணிநேரம் ஆகியவற்றை மத்திய ஊதியக் குழுக்கள் பரிந்துரைக்கின்றன. நான்காவது ஊதியக்குழு பரிந்துரையின்படி, மத்திய அரசு அலுவலகங்களின் வேலைநாட்கள் வாரத்தில் 5 நாட்களாகவும், நாள்தோறும் 8½ மநே பணிபுரியவேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. தற்போதுள்ள இந்த நிலையே தொடர வேண்டும் என ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைத்துள்ளது என்றார் அவர்.

---

**5. 6.5 இலட்சம் கிராமங்களுக்கு கண்ணாடி இழை கேபிள் இணைப்பு: இரவிசங்கர் பிரசாத்**

நாடு முழுவதும் 6.5 இலட்சம் கிராமங்களுக்கு கண்ணாடி இழை கேபிள் இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கையை நடுவண் அரசு எடுத்து வருகிறது என்று மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் இரவி சங்கர் பிரசாத் கூறினார். மாநிலங்களவையின் கேள்விநேரத்தின்போது இதுகுறித்து மத்திய அமைச்சர் இரவிசங்கர் பிரசாத் கூறியதாவது:

டிஜிட்டல் தகவல்தொடர்பு உட்கட்டமைப்பை விரைந்து மேம்படுத்தும் வகையிலும், அனைவருக்குமான குறைந்தவிலை அகண்ட அலைவரிசை பயன்பாட்டு வசதி கிடைக்கச்செய்யும் நோக்கத்துடனும் தேசிய அகண்ட அலைவரிசை இயக்கத்தை நடுவண் அரசு கடந்த 2019ஆம் ஆண்டு டிச.17 அன்று அறிமுகம் செய்தது. இந்தத்திட்டத்தின்கீழ், உலகளாவிய சேவை நிதிமூலமாக ₹70,000 கோடி செலவில் பீகார், உத்தர பிரதேசம் உள்ளிட்ட நாட்டின் அனைத்து மாநிலங்களில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் அகண்ட அலைவரிசை சேவையை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

---

**6. இந்தியா–சீனா இடையே நம்பிக்கையின்மை அதிகரிப்பு**

அண்டை நாடுகளான இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நிலவும் நம்பிக்கையின்மை வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் அட்மிரல் ஜான் சி அக்குலினோ, அமெரிக்காவின் இந்தோ–பசிபிக் படைக்கான தளபதியாக அதிபர் ஜோ பைடனால் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது நியமனத்தை உறுதிசெய்யும் நடைமுறை அந்நாட்டின் செனட் அவையில் நடைபெற்றது. அப்போது, அந்த அவையின் ஆயுதப்படைக் குழு உறுப்பினர்களிடம் அக்குலினோ கூறியதாவது:

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பாதுகாப்புத் துறையில் நிலவும் ஒத்துழைப்பு வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளது. ஆனால், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நம்பிக்கையின்மை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கிழக்கு லடாக் எல்லைப் பகுதிகளில் நிலவிவரும் பதற்றமான சூழல் காரணமாக, இருநாடுகளிடையேயான உறவும் பாதிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வணிக வழித்தடத்திட்டத்தை மிகுந்த சந்தேகப் பார்வையுடன் இந்தியா அணுகுகிறது. பாகிதானின் குவாடர் துறைமுகம், இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகம் உள்ளிட்டவற்றில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துவருவது இந்தியாவை நெருக்கடிக்குத் தள்ளியுள்ளது.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்திலும் தனது அத்துமீறல் நடவடிக்கைகளை சீனா தொடர்ந்து வருகிறது. அதன்காரணமாக பிராந்தியத்தின் பாதுகாப்புக் -கும் நிலைத்தன்மைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதனால், நட்பு நாடுகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டு -ள்ளது. இருதரப்பு உறவுகளிலும் பன்னாட்டமைப்புகளிலும் இந்தியாவும் அமெரிக்காவும் நெருங்கிப் பணியாற்றி வருகின்றன.

இருநாடுகளின் இராணுவங்களுக்கிடையே கூட்டுப்பயிற்சியும் மேற்கொள் -ளப்பட்டு வருகிறது. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட வேண்டியது மிகவும் முக்கியமானது என்றார் அவர்.

---

**7. கடந்த நான்கு ஆண்டுகளில் NGO'கள் பெற்ற வெளிநாட்டு நன்கொடை ரூ.50,975 கோடி: மத்திய அரசு**

இந்தியாவில் செயல்பட்டு வரும் அரசு சாரா தன்னார்வ அமைப்புகள் (NGO) கடந்த நான்கு ஆண்டுகளில் வெளிநாடுகளிலிருந்து ₹50,975 கோடியை நன்கொடையாகப் பெற்றுள்ளன. இதில் அமெரிக்காவிலிருந்தே அதிக நிதி வந்துள்ளது என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக எழுந்த கேள்விக்கு மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் மாநிலங்களவையில் அளித்த எழுத்துப்பூர்வ பதிலில் கூறியிருப்பதாவது:

வெளிநாட்டு நன்கொடை (ஒழுங்குமுறை) சட்டத்தின்கீழ் பதிவுசெய்துள்ள இந்தியாவில் செயல்பட்டு வரும் NGO'கள் கடந்த நான்கு ஆண்டுகளில் வெளிநாடுகளிலிருந்து ₹50,975 கோடி நிதியைப்பெற்றுள்ளன. இதில், அமெரிக்காவிலிருந்து மட்டும் அதிகபட்சமாக ₹19,941 கோடி நன்கொடை வந்துள்ளது. குறிப்பாக, கடந்த 2016-17'ஆம் ஆண்டில் 18,304 NGO'கள் வெளிநாடுகளிலிருந்து ₹15,355 கோடி நிதிபெற்றுள்ளன.

அதில் அமெரிக்காவிலிருந்து மட்டும் ₹5,869 கோடி வந்துள்ளது. 2017-18 ஆம் ஆண்டில் 18,235 NGO'கள் ₹16,940 கோடி நிதியைப்பெற்றுள்ளன. அதில் அமெரிக்காவிலிருந்து ₹6,199 கோடி வந்துள்ளது. 2018-19'ஆம் ஆண்டில் 17,540 NGO'கள் ₹16,490 கோடி நிதியைப் பெற்றுள்ளன. அதில் அமெரிக்காவிலிருந்து மட்டும் ₹6,907 கோடி வந்துள்ளது. 2019-20'ஆம் ஆண்டில் 3,475 NGO'கள் வெளிநாடுகளிலிருந்து ₹2,190 கோடி நிதி பெற்றுள்ளன. அதில், அமெரிக்காவிலிருந்து ₹9,66 கோடி வந்துள்ளது.

---

**8. தேசிய சுகாதாரப் பணிகள் ஆணைய மசோதா: நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்**

ஒருங்கிணைந்த மற்றும் சுகாதாரப் பணிகளுக்கான கல்வித்தரத்தை ஒழுங்குபடுத்துவதற்கான ஆணையத்தை அமைப்பதற்கு வழிவகுக்கும் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஒருங்கிணைந்த மற்றும் சுகாதாரப் பணிகள் தேசிய ஆணைய மசோதாவை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன் மக்களவையில் தாக்கல் செய்தார். அதையடுத்து மசோதா மீது விவாதம் நடைபெற்றது.

ஒருங்கிணைந்த மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் பணிகள், அவர்களு -க்கான கல்வித்தரம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான ஆணையத் -தை அமைப்பதற்கு இந்த மசோதா வழிவகுக்கிறது. அந்த ஆணையத்துக் -கான தலைவர்களும் துணைத்தலைவர்களும் ஈராண்டுகள் பதவிக் காலத்தில் நியமிக்கப்படுவர். மாநில அளவில் இதேபோன்ற ஆணையங்க -ளை அமைக்கவும் இம்மசோதா வழிவகுக்கிறது.

---

**9. பொது முடக்கம் அறிவிக்கப்பட்டு ஓராண்டு நிறைவு: வேலையின்மை பிரச்னையிலிருந்து மீண்டு வருகிறது இந்தியா**

கரோனா பரவலைத் தடுக்க நாடு முழுவதும் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டு 25-03-21 உடன் ஓராண்டு நிறைவு பெறும் நிலையில், வேலையின்மை பிரச்னையிலிருந்து நாடு மெல்மெல்ல மீண்டு வருகிறது. கரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, கடந்த ஆண்டு மார்ச் 24 ஆம் தேதி நாடு முழுவதும் முதல் முறையாக 21-நாள் தொடர் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டது. மறுநாள் அதிகாலை முதல் அமலுக்கு வந்தது. இதனால் தொழில் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டன.

இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணியிழந்தனர். பணியில்லாததால், புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்குத் திரும்பிச் சென்றனர். நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. பின்னர் கரோனாவின் தாக்கம் குறையத் தொடங்கியதையடுத்து பொது முடக்கத்தில் படிப்படியாக தளர்வுகள் அளிக்கப்பட்டன. இதனால், தொழில் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் மீண்டும் செயல்படத் தொடங்கின.

**இது தொடர்பாக இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் (CMIE) வெளியிட்டுள்ள தரவுகள் விவரம்:** கடந்த ஆண்டு பிப்ரவரியில் நாட்டில் வேலையின்மை விகிதம் 7.8 சதவீதமாக இருந்தது. பொது முடக்கம் அறிவிக்கப்பட்ட மார்ச் மாதத்தில் இது 8.8 சதவீதமாக இருந்தது.

இந்த ஆண்டு பிப்ரவரியில் 6.9 சதவீதமாக பதிவாகியுள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வேலையின்மை விகிதம் அதிகபட்சமாக 23.5 சதவீதமாக உயர்ந்தது. இது மே மாதத்தில் 21.7 சதவீதமாக இருந்தது. இந்த விகிதம் ஜூன் மாதத்தில் இருந்து குறையத் தொடங்கியது. ஜூனில் 10.2 சதவீதமாக -வும், ஜூலை மாதத்தில் 7.4 சதவீதமாகவும் பதிவாகியது. ஆகஸ்டில் மீண்டும் 8.3 சதவீதமாக உயர்ந்து, செப்டம்பரில் 6.7 சதவீதமாக இருந்தது. அக்டோபரில் மீண்டும் 7 சதவீதமாக உயர்ந்து, நவம்பரில் 6.5 சதவீதமாக குறைந்தது. டிசம்பரில் வேலையின்மை விகிதம் 9.1 சதவீதமாகவும், ஜனவரியில் 6.5 சதவீதமாகவும் பதிவாகியது என்று அந்தத் தரவுகளில் கூறப்பட்டுள்ளது.

**வேலையின்மை சதவீதம் 2020: (இந்திய பொருளாதார கண்காணிப்பு மைய தரவு)**

| | |
|---|---|
| பிப்ரவரி - 7.8 | மார்ச் - 8.8 |
| ஏப்ரல் - 23.5 | மே - 21.7 |
| ஜூன் - 10.2 | ஜூலை - 7.4 |
| ஆகஸ்ட் - 8.3 | செப்டம்பர் - 6.7 |
| அக்டோபர் - 7.0 | நவம்பர் - 6.5 |
| டிசம்பர் - 9.1 | 2021 ஜனவரி - 6.5 |
| | 2021 பிப்ரவரி - 6.9 |

---

**10. உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று 2 தங்கம் உட்பட 4 பதக்கங்களை வென்றது.**

உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று 2 தங்கம் உட்பட 4 பதக்கங்களை வென்றது. புது தில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 50 மீட்டர் பிரிவில் ஐஷ்வரி பிரதாப் சிங் தோமரும், மகளிர் 25 மீட்டர் பிரிவில் சிங்கி யாதவும் தங்கப்பதக்கம் வென்றனர். இப் போட்டியில் இந்தியா இதுவரை 9 தங்கம், 5 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

---

**11.கடலோர காவல்படையில் இணைக்கப்பட்ட புதிய ரோந்துகப்பல்: 'வஜ்ரா' இணைப்பு**

சென்னையை அடுத்த காட்டுப்பள்ளி கப்பல்கட்டுந்தளத்தில் கட்டப்பட்ட 'வஜ்ரா' என்ற ரோந்துகப்பல் கடலோர காவற்படையில் இணைக்கப்பட்டது. சென்னை துறைமுகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இராணுவ தலைமை தளபதி பிபின் ராவத் கப்பலை நாட்டுக்கு அர்ப்பணித்தார். சென்னையை அடுத்த காட்டுப்பள்ளியில் L&T தனியார் கப்பல்கட்டும்தளம் உள்ளது. இங்கு பாதுகாப்பு அமைச்சகத்துக்குத் தேவையான கப்பல்கள் கட்டப்பட்டு வருகி -ன்றன. குறிப்பாக கடற்படை, கடலோரக் காவல்படைக்குத் தேவையான ரோந்துக்கப்பல்கள், இடைமறிக்கும் படகுகள் உள்ளிட்டவை இங்கு தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இங்கு 7 ரோந்து கப்பல்கள் கட்டுவதற்காக பாதுகாப்பு அமைச்சகம் சார்பில் பணி ஆணை வழங்கப்பட்டிருந்தது. இதில் 6ஆவது கப்பலான 'வஜ்ரா' கடந்தாண்டு பிப்ரவரியில் கடலோர காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

**அதிநவீன வசதிகள்:** 2,100 மெட்ரிக் டன் எடையும் 98 மீட்டர் நீளமும், 15 மீட்டர் அகலமும் கொண்ட இக்கப்பல் மணிக்கு அதிகபட்சமாக 26 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியது. மேலும் கரைக்குத் திரும்பாமல் சுமார் 5000 கடல் மைல் தூரம் பயணிக்கும் வகையில் பல்வேறு நவீன கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் கப்பலின் அனைத்து விதமான நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் வசதி ஒரே அறையில் கட்டமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதில் ஹெலிகாப்டர் இறங்கும் வசதி உள்ளது. மேலும் மாசுக்கட்டுப்பாட்டு -க்கருவிகள், கண்காணிப்புக் கருவிகள் அதிநவீன இரக துப்பாக்கிகள் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. 2 கடல்வழி ரேடார்கள், அதிநவீன துப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. இக்கப்பல்களின் பெரும்பான்மையா -ன பாகங்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆறாவது ரோந்துக் கப்பல்**

நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆறாவது ரோந்துக்கப்பலான 'வஜ்ரா', கீழை பிராந்திய ஆளுகைக்குட்பட்ட தூத்துக்குடி பகுதியில் ரோந்துப்பணியில் ஈடுபடுத்தப்படும் எனக் கடலோர காவல்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

**12.தமிழ்நாடு உட்பட கடல்சார் மாநிலங்களில் நீலப்புரட்சிக்கு ₹20,000 கோடி முதலீடு: மக்களவையில் அமைச்சர் தகவல்**

நீலப்புரட்சியை நீடித்த வளர்ச்சியாக மாற்றும் வகையில், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ₹20,000 கோடிக்கும் மேலாக தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து கடல்சார் மாநிலங்களில் முதலீடுசெய்யப்படுவதாக மத்திய மீன் வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத்துறை இணையமைச்சர் பிரதாப் சந்திர சாரங்கி தெரிவித்தார்.

---

**13. சி–விஜில் செயலி மூலம் தமிழகத்தில் 2,313 புகார்கள்: தலைமை தேர்தல் அதிகாரி தகவல்**

தமிழகத்தில் சி–விஜில் செயலி மூலம் 2,313 புகார்கள் பெறப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரத சாஹூ தெரிவித்தார். பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை புகைப்படம், வீடியோவுடன் சி–விஜில் (cVIGIL) செயலி மூலம் அளிக்கலாம். சி–விஜில்மூலம் இதுவரை 2,313 புகார்கள் பெறப்பட்டு, அதில் 1,607 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டவாரியாக கரூரில் 487 புகார்கள், கோயம்புத்தூரில் 365, திருப்பூரில் 131, சென்னையில் 130 புகார்கள் வந்துள்ளன.

---

**14. சர்வதேச விண்வெளி நிலையத்தில் காணப்பட்ட பாக்டீரியாவுக்கு தமிழக விஞ்ஞானியின் பெயர்**

சர்வதேச விண்வெளி நிலையத்தில் காணப்பட்ட ஒரு வகை பாக்டீரியாவு –க்கு தமிழக விஞ்ஞானி சையது அஜ்மல் கானின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளால் விண்ணில் சர்வதேச விண்வெளி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பல்வேறு இடங்களில் இருந்து 4 இன பாக்டீரியாக்கள் கண்டுபிடிக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட் –டுள்ளன. இது தொடர்பான ஆய்வுப்பணியில் நாசாவுடன் ஹைதராபாத் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களும் பங்கேற்றுள்ளனர்.

இதில் ஒரு வகை பாக்டீரியா, மெத்திலோரூப்ரம் ரோடீசியனம் ஆக அடை –யாளம் காணப்பட்டாலும் மற்ற வகை பாக்டீரியாக்கள் அடையாளம் காண –ப்படாமல் இருந்தது. இந்நிலையில் தற்போது புதிதாக அடையாளம் காண –ப்பட்டுள்ள ஒரு வகை பாக்டீரியாவை தமிழகத்தின் அண்ணாமலை பல்கலைக்கழக பேராசிரியராக இருக்கும் சையத் அஜ்மல் கான் பெயரில் 'மெத்திலோ பாக்டீரியம் அஜ்மலி' என்று அழைக்கலாம் என ஆராய்ச்சியாள –ர்கள் குழு பரிந்துரைத்துள்ளது. உருளை வடிவிலான இந்த பாக்டீரியா, வளிமண்டல நைட்ரஜன் வாயுவை தாவரங்கள் மற்றும் பிற உயிரினங்க –ள் பயன்படுத்தக்கூடிய வடிவமாக மாற்றுவது, தாவர வளர்ச்சி, தாவர நோ –ய்க்கிருமிகளுக்கு எதிரான செயல்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடையது ஆகும். எனவே இந்த பாக்டீரியா விண்வெளியில் பயிர்களை வளர்ப்பதற் –கான திறவுகோலை கொண்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருது –கின்றனர். என்றாலும் இதனை நிரூபிக்க தொடர் பரிசோதனைகள் தேவைப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

---

**1. NDHM பயிற்சியக சூழலானது சமீப செய்திகளில் காணப்பட்டது. NDHM'இல் 'H' என்பது எதைக் குறிக்கிறது?**

**அ) Health ☑**

ஆ) Horticulture

இ) Hurricane

ஈ) Hospital

✓ 'NDHM' என்பது தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கத்தைக் குறிக்கிறது. NDHM பயிற்சியக சூழலானது நலவாழ்வுச் சேவை வழங்குநர்கள் முதல் செயலி உருவாக்குநர்கள் வரை அனைவருக்குமானதாகும். NDHM'இன் பயிற்சியக சூழல் சேவையானது, NDHM சேவைகளுடன் ஒருங்கிணை-க்கப்படவேண்டிய மென்பொருள் சேவைகள் & செயலிகள் உருவாக்க விரும்பும் எவருக்கும் பயனுள்ள கட்டமைப்புச் சூழலை வழங்குகிறது.

---

**2. 'Threadit' என்பது கீழ்காணும் எந்தத் தொழில்நுட்ப நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட ஒரு முழுமையான வலைத்தளமாகும்?**

அ) இன்டெல்

ஆ) மைக்ரோசாப்ட்

இ) சாம்சங்

**ஈ) கூகிள் ☑**

✓ 'Threadit' என்பது கூகிள் அதன் பணியிடங்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு முழுமையான வலைத்தளமாகும். தொலைநிலையிலிருந்து ஒரு பணியை மிகத்திறமையாக செய்வதற்காக இப்புதிய கருவி உருவாக்கப்-பட்டுள்ளது. பணிதொடர்பான சிக்கல்களை, குழு உறுப்பினர்களுக்கு சிறு காணொளிகளாகப் பதிவுசெய்து அனுப்ப, 'Threadit' பயனர்களுக்கு உதவுகிறது. இது டிக்–டாக் செயலியைப்போல உருவாக்கப்பட்டுள்ளது.

---

**3. NIT'களில் மூன்று விண்வெளி அடைவு மையங்களை தொடங்கி-யுள்ள அமைப்பு எது?**

அ) NASA

ஆ) DRDO

**இ) ISRO ☑**

ஈ) BARC

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையமான (ISRO) அண்மையில் NIT – நாக்பூர், போபால் மற்றும் ரூர்கேலா ஆகியவற்றில் மூன்று விண்வெளி அடைவு தொழில்நுட்ப மையங்களை திறந்துவைத்தது.

✓ இது இந்தியாவில் உள்ள விண்வெளிதுறைசார் தொழில்முனைவோரு-க்கு ஊக்கமளிப்பதற்கு ஒரு தளத்தை வழங்குவதை நோக்கமாகக் கொ-ண்டுள்ளது. ISRO, ஏற்கனவே NIT அகர்தலா, திருச்சி மற்றும் ஜலந்தரில் இதுபோன்ற மூன்று மையங்களைத் திறந்துள்ளது.

---

**4. "பப்பி–ஆன்டிடெரர்–2021", என்ற கூட்டு பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சியை நடத்தவுள்ள அமைப்பு எது?**

அ) ஐக்கிய நாடுகள் அவை

**ஆ) SCO ☑**

இ) BIMSTEC

ஈ) ASEAN

✓ இந்தியா, பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பி-ன் உறுப்பினர்கள் இந்த ஆண்டு பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சியை நடத்துவார்கள். உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பு கவுன்சிலின் 36ஆவது கூட்டத்தின்போது, 'பப்பி–ஆன்டிடெரர்–2021' என்ற கூட்டுப்பயிற்சி அறிவிக்கப்பட்டது. SAARC என்பது காத்மாண்டுவை தலைமையிடமாகக்கொண்ட எட்டு உறுப்பு நாடுகளின் பலதரப்பு சங்கமாகும்.

---

**5.இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நிரந்தர சிந்து ஆணையத்தின் 116ஆவது கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ) லாகூர் **ஆ) புது தில்லி ☑**

இ) ஜெய்ப்பூர் ஈ) ஜலந்தர்



✓ இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நிரந்தர சிந்து ஆணை-யக்கூட்டத்தின் 116ஆவது கூட்டம் சமீபத்தில் புது தில்லியில் நடந்தது. இந்தச் சந்திப்பு, இரண்டரை ஆண்டுகளுக்கு மேலான இடைவெளிக்குப் பின்னர் நடந்தது. பாகிஸ்தான் தேசிய நாளுடன் இச்சந்திப்பு ஒத்துப்போ-னது. இரண்டு நாள் நடைபெற்ற இக்கூட்டம், இந்திய தரப்பில் சிந்து நீர் ஆணையர் பிரதீப் குமார் சக்சேனா தலைமையில் நடைபெற்றது.

---

**6. நடப்பாண்டில் (2021) வரும் இனப்பாகுபாட்டை ஒழிப்பதற்கான பன்னாட்டு நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Disqualify Racism

ஆ) Racial profiling and incitement to hatred, including in the context of migration

இ) Mitigating and countering rising nationalist populism and extreme supremacist ideologies

**ஈ) Youth standing up against racism ☑**

✓ சமத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அனைத்து வகையான இனவெறி மற்றும் இனப்பாகுபாடுகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்குமாக, ஐநா அவை, மார்ச்.21'ஆம் தேதியை இனப் பாகுபாட்டை ஒழிப்பதற்கான சர்வதேச நாளாகக் கடைபிடித்து வருகிறது. "Youth standing up against racism" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**7. உலக வானிலை நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) மார்ச் 20

ஆ) மார்ச் 21

இ) மார்ச் 22

**ஈ) மார்ச் 23 ☑**




✓ ஆண்டுதோறும், மார்ச்.23 அன்று உலக வானிலை நாள் கடைபிடிக்கப்ப-டுகிறது. இது, 1950 மார்ச்.23 அன்று உலக வானிலை அமைப்பு (WMO) உருவாக்கப்பட்டதை நினைவுகூர்கிறது. புவியின் வளிமண்டலத்தைப் பாதுகாப்பதில் மனிதர்களும், அமைப்புகளும் ஆற்றிய பங்கையும் இந்தச் சிறப்பு நாள் எடுத்துக்காட்டுகிறது. "The Ocean, Our Climate and Weather" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**8. உலக காசநோய் நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) மார்ச் 21

ஆ) மார்ச் 22

இ) மார்ச் 23

**ஈ) மார்ச் 24 ☑**

✓ ஒவ்வோர் ஆண்டும், உலக நலவாழ்வு அமைப்பு இந்த நோய் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மார்ச்.24 அன்று உலக காசநோய் நாளை நினைவுகூர்கிறது. 1882ஆம் ஆண்டு இதேநாளில், மருத்துவர் இராபர்ட் கோச், காசநோயை ஏற்படுத்தும் பாக்டீ-ரியத்தை கண்டுபிடித்ததாக அறிவித்தார். "The Clock is Ticking" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**9.அட்லாண்டிக் பகுதிகளில் நிகழும் அடிமைத்தனம் மற்றும் அடிமை-கள் வர்த்தக முறையால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் பன்னாட்டு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) மார்ச் 23

ஆ) மார்ச் 24

**இ) மார்ச் 25 ☑**

ஈ) மார்ச் 26



✓ ஆண்டுதோறும் மார்ச்.25 அன்று, அட்லாண்டிக் பகுதிகளில் நிகழும் அடிமைத்தனம் மற்றும் அடிமைகள் வர்த்தக முறையால் பாதிக்கப்பட்டவ-ர்களை நினைவுகூரும் பன்னாட்டு நாள் ஐக்கிய நாடுகள் அவையால் அனுசரிக்கப்படுகிறது. மிருகத்தனமான அடிமை முறையின் கைகளில் துன்பப்பட்டு இறந்தவர்களை இந்த நாள் நினைவுகூர்கிறது. இனவெறி மற்றும் ஓரவஞ்சனையின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இந்நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- "Ending Slavery's Legacy of Racism: A Global Imperative for Justice" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**10. கைதுசெய்யப்பட்ட மற்றும் காணாமல்போன பணியாளர்களுக்கான பன்னாட்டு ஒன்றிணையும் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**



அ) மார்ச் 23

ஆ) மார்ச் 24

**இ) மார்ச் 25 ☑**

ஈ) மார்ச் 26

- ஆண்டுதோறும் மார்ச்.25 அன்று, "கைதுசெய்யப்பட்ட மற்றும் காணாமல்போன பணியாளர்களுக்கான பன்னாட்டு ஒன்றிணையும் நாள்" ஐநா அவையால் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளானது ஒவ்வோர் ஆண்டும் அலெக் கோலெட் என்பவர் கடத்திச்செல்லப்பட்ட நாளினை நினைவுகூரும் விதமாக கடைபிடிக்கப்படுகிறது. அவர், கடந்த 1985'இல், துப்பாக்கிமுனையில் கடத்தப்பட்டபோது, பாலசுதீனத்தில் ஐக்கிய நாடுகள் – நிவாரண மற்றும் பணி நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நாளை (மார்ச் 26) வங்கதேசம் செல்கிறார் மோடி**

பிரதமர் நரேந்திர மோடி மார்ச்.26 அன்று வங்கதேசத்திற்கு இரண்டு நாள் பயணமாக செல்கிறார். வங்கதேசத்தின் தேசிய நாள் நாளை கொண்டாடப்படவுள்ளது. இந்த நிகழ்விற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா சிறப்பு விருந்தினராக அழைத்துள்ளார். இதனையடுத்து கரோனா பொதுமுடக்கத்திற்கு பின்பு, முதன்முறையாக வெளிநாட்டிற்கு பிரதமர் மோடி பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

---

**2. முகநூல் அரசியல் விளம்பர செலவினம்: இரண்டாமிடத்தில் தமிழகம்**

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவிருக்கும் மாநிலங்களில் மேற்கு வங்க மாநிலமே முகநூல் அரசியல் விளம்பரங்களுக்கு அதிகம் செலவு செய்திருப்பது தெரியவந்துள்ளது. இதற்காக அந்த மாநில தேர்தலில் களம் காணும் அரசியல் கட்சிகள் கடந்த 90 நாள்களில் ₹3.74 கோடியை செலவழித்துள்ளன. மேற்கு வங்க மாநிலத்துக்கு அடுத்த இடத்தில் தமிழ்நாடு உள்ளது. முகநூல் அரசியல் விளம்பரத்துக்காக தமிழக அரசியல் கட்சிகள் ₹3.3 கோடியை செலவழித்துள்ளன.

சமூக ஊடக வலைதளம் அண்மையில் வெளியிட்ட புள்ளி விவரத்தின் மூலம் இது தெரியவந்துள்ளது.

மேற்கு வங்க மாநிலத்தைத் தவிர தமிழ்நாடு, அஸ்ஸாம், கேரளம் ஆகிய மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த மாநிலங்களில் தேர்தலை எதிர்கொள்ள அரசியல் கட்சிகள் கடந்த 22'ஆம் தேதி வரையிலான 90 நாள்களில், முகநூலில் அரசியல் விளம்பரத்துக்கு செலவழித்த விவரங்களின் அடிப்படையில் இந்தப் புள்ளி விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்கு வங்க மாநில அரசியல் கட்சிகள் ₹3.74 கோடியை செலவழித்துள்ளன. இதில், மாநிலத்தில் புதிதாக ஆட்சியைப் பிடிக்க தீவிரம் காட்டிவரும் பாஜகவைக் காட்டிலும், மூன்றாவது முறையாக ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள முயற்சி செய்துவரும் திரிணமூல் காங்கிரஸ் கட்சி முகநூல் அரசியல் விளம்பரத்துக்கு அதிகம் செலவழித்துள்ளது. இந்தக்கட்சி மட்டும் ₹1.69 கோடி செலவழித்துள்ளது. திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் இந்த தேர்தல் டிஜிட்டல் விளம்பரங்களை, தேர்தல் அரசியல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோரின் ஐ–பேக் நிறுவனம் நிர்வகித்து வருகிறது.

'மேற்கு வங்கத்தின் பெருமை மம்தா' என்பன உள்ளிட்ட விளம்பரங்களை இந்த கட்சி செய்து வருகிறது. இந்த கட்சியின் முகநூல் பக்கத்தை 13 லட்சம் பேர் பின்பற்றி வருகின்றனர்.

அதுபோல, பாஜக மேற்கு வங்கத்தில் முகநூல் அரசியல் விளம்பரத்துக்காக ₹25.31 இலட்சம் செலவழித்துள்ளது. 'எனது குடும்பம் பாஜக குடும்பம்' என்பன உள்ளிட்ட விளம்பரங்களை இந்த கட்சி செய்து வருகிறது. மேற்கு வங்க பாஜகவின் முகநூல் பக்கத்தை 17 லட்சம் பேர் பின்பற்றுகின்றனர். இந்த மாநிலத்தில், காங்கிரஸ் கட்சி முகநூல் விளம்பரத்துக்கு ₹5 லட்சம் செலவழித்துள்ளது. இடதுசாரி கட்சிகள் மிகக்குறைந்த அளவில் செலவழித்துள்ளன. மேற்கு வங்கத்துக்கு அடுத்தபடியாக தமிழ்நாடு ₹3.3 கோடியும், அஸ்ஸாம் ₹61.77 இலட்சமும், கேரளம் ₹38.86 இலட்சமும், புதுச்சேரி ₹3.34 இலட்சமும் முகநூல் அரசியல் விளம்பரங்களுக்கு செலவழித்துள்ளன.

**மாநிலம் – கட்சிகள் செலவழித்த தொகை**

மேற்கு வங்கம் – ₹3.74 கோடி

தமிழ்நாடு – ₹3.3 கோடி

அஸ்ஸாம் – ₹61.77 இலட்சம்

கேரளம் – ₹38.86 இலட்சம்

புதுச்சேரி – ₹3.34 இலட்சம்

---

**3. சூயஸ் கால்வாய் போக்குவரத்துத் தடை: மணிக்கு ரூ.2,900 கோடி இழப்பு**

சூயஸ் கால்வாயில் பிரம்மாண்டமான சரக்குக் கப்பல் குறுக்கே திரும்பி சிக்கி, அந்த கடல்வழிப்பாதையில் போக்குவரத்து தடைபட்டுள்ளதன் காரணமாக மணிக்கு 40 கோடி டாலர் இழப்பு ஏற்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 1869'ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்ட அக்கால்வாய் வழியாக உலக வர்த்தகத்தின் 12% நடைபெற்றுவருவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

குறுக்கே சிக்கிக்கொண்ட கப்பலின் உரிமையாளரான ஜப்பானின் ஷோயேய் கிசேன், சர்வதேச வர்த்தகத்துக்கு இழப்பை ஏற்படுத்திய இந்த விபத்துக்கு மன்னிப்பு கோரினார். 400 மீட்டர் நீளமும் 2 இலட்சம் டன் எடையும் கொண்ட அந்தக் கப்பலை மணலில் இருந்து வெளியே கொண்டு வர முடியாமல் மீட்புக் குழுவினர் திணறி வருகின்றனர்.

---

**4. மூன்று ரபேல் போர் விமானங்கள் அடுத்த வாரம் இந்தியா வருகின்றன: விமானப்படை பலம் அதிகரிக்கும்**

பிரான்ஸ் நாட்டில் இருந்து அடுத்த வாரம் 3 ரபேல் போர் விமானங்கள் இந்தியா வருகின்றன. அடுத்த மாதம் 9 விமானங்கள் ஒப்படைக்கப்பட உள்ளன. இவற்றின்மூலம் இந்திய வான்படையின் பலம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரிக்கவுள்ளது. பிரான்ஸ் நாட்டின் டஸ்ஸோல்ட் விமான தயாரிப்பு நிறுவனத்திடம் இருந்து 36 அதிநவீன ரபேல் போர் விமானங்கள் வாங்க கடந்த 2016இல் இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டது.

₹59, 000 கோடியில் இந்த விமானங்கள் வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி, இதுவரை 11 ரபேல் போர் விமானங்களை அந்த நிறுவனம் இந்தியாவிடம் ஒப்படைத்துள்ளது. அந்த விமானங்கள் அம்பாலா விமானப் படை தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

தவிர இந்திய வான்படை வீரர்கள் பயிற்சி பெறுவதற்காக 7 விமானங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், அடுத்த வாரம் 3 ரபேல் விமானங்கள் இந்தியாவுக்கு வருகின்றன. இந்த விமானங்களும் அம்பாலா விமானப் படை தளத்துக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், அடுத்த மாதம் 9 ரபேல் விமானங்கள் வழங்கப்படவுள்ளன. இவற்றின் மூலம் இந்திய வான்படையின் பலம் பன்மடங்கு அதிகரிக்கும்.

அண்டைநாடுகள் சீனா, பாகிஸ்தான் ஆகியவை இந்தியாவுடன் இணக்கமான போக்கை கடைபிடிக்காமல் அவ்வப்போது உரசலில் ஈடுபட்டு வருகின்றன. இச்சூழ்நிலையில் அதிநவீன ரபேல் போர் விமானங்களின் எண்ணிக்கை கூடுவது, இந்திய வான்படைக்கு பெரும் பலமாக அமையும்.

தற்போது புதிதாக வரவுள்ள ரபேல் விமானங்கள், மேற்குவங்க மாநிலத்தில் உள்ள ஹசிமாரா விமானப்படை தளத்தில் இணைக்கப்பட உள்ளன. இவற்றுடன் சேர்த்து ஹசிமாரா தளத்தில் ஐந்து போர் விமானங்கள் பாதுகாப்புப் பணியில் இருக்கும். இதன்மூலம் இந்தியாவின் கிழக்குப் பகுதியின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

---

**1. "PRANIT" என்ற பெயரில் மின்னணு வணிக வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ள பொதுத்துறை நிறுவனம் எது?**

**அ) பவர் கிரிட் ☑**

ஆ) NTPC

இ) HAL

ஈ) IOL

✓ மத்திய எரிசக்தி அமைச்சகத்தின் 'மகாரத்னா' தகுதிபெற்ற பொதுத்துறை நிறுவனமான பவர் கிரிட், மின்னணு முறையிலான ஒப்பந்தப்புள்ளி கோரும் "PRANIT" என்ற வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வலைத்தளம், ஒப்பந்தப்புள்ளி செயல்முறையை மிகவும் வெளிப்ப–டையானதாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், தாள் செயல்பாடுகளை குறைக்கிறது. இவ்வலைத்தளத்திற்கு மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் தரப்படுத்தல், சோதனை மற்றும் தரச்சான்றிதழ் இயக்குநரகம் சான்றளித்துள்ளது.

---

**2. பெப்சு முசாரா இயக்கம் என்பது எந்த இந்திய மாநிலத்தில் நடந்த ஒரு விவசாயிகள் இயக்கமாகும்?**



அ) கர்நாடகா

ஆ) இராஜஸ்தான்

**இ) பஞ்சாப் ☑**

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

✓ முசாரா இயக்கமானது 1930'களில் பஞ்சாப் கிராமங்களில் தொடங்கியது. விடுதலைக்குப் பிறகு பஞ்சாப் என்று பெயரிடப்படுவதற்கு முன்னர் வரை இந்த மாகாணம் பெப்சு என்று அழைக்கப்பட்டது.

✓ 'முசாரா' என்றால் ஒருவரின் நிலத்தில் வேலை செய்த நிலமற்ற உழவர் என்று பொருளாகும். இவ்வியக்கம் பல்லாண்டுகளாக நிலத்தை உழுத–வர்களுக்கே நிலம் என்ற கோட்பாட்டைக் கொண்டது. இறுதியாக, 1952ஆம் ஆண்டில், ஒருமுறை இழப்பீடு செலுத்திய பின்னர் மக்களுக்கு நிலவுரிமை வழங்கப்பட்டது. அண்மையில், புது தில்லியில் நடந்த விவசா–யிகள் போராட்ட இடங்களிலும், பஞ்சாப் மாநிலத்திலும் இந்த இயக்கம் நினைவுகூரப்பட்டது.

---

**3. பின்வரும் எந்த மாநிலம், மியான்மருடன் 510 கிலோமீட்டர் நீள எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது?**



அ) அஸ்ஸாம்

**ஆ) மிசோரம் ☑**


இ) மணிப்பூர்

ஈ) மேகாலயா

✓ மிசோரம் மாநிலம் மியான்மருடன் 510 கிமீ நீள எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது. மியான்மரைச் சார்ந்த "அரசியல் ஏதிலிகளுக்கு" அரசியல் தஞ்சம் வழங்குமாறு மிசோரம் மாநில முதலமைச்சர் சோரம்தங்கா நடுவணரசிடம் கேட்டுக்கொண்டுள்ளார். முன்னதாக, எந்தவொரு வெளி நாட்டினருக்கும் "ஏதிலி" என்ற அந்தஸ்தை வழங்க மாநில அரசுகளுக்கு அதிகாரம் இல்லை என்றும், 1951 ஐநா அகதிகள் மாநாடு மற்றும் அதன் 1967 நெறிமுறையில் இந்தியா கையெழுத்திடவில்லை என்றும் மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்தது.

---

**4.சமீப செய்திகளில் இடம்பெற்ற, 2011 இஸ்தான்புல் மாநாட்டுடன் தொடர்புடைய பிரச்சினை எது?**



**அ) குடும்ப வன்முறை மற்றும் பாலின சமத்துவம் ☑**

ஆ) பருவநிலை மாற்றம்

இ) நிதியியல் உள்ளடக்கம்

ஈ) பரவா நோய்

✓ இசுதான்புல்லில் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய கவுன்சில் ஒப்பந்தமானது, குடும்ப வன்முறைகளைத் தடுக்கவும், வழக்குத் தொடரவும், ஒழிக்கவும், சமத்துவத்தை ஊக்குவிக்கவும் உறுதியளித்தது. துருக்கி அதிபர் தயிப் எர்டோகன், பெண்களைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட இந்தப் பன்னாட்டு ஒப்பந்தத்திலிருந்து, துருக்கியை வெளியேற்றினார்.

✓ எவ்வாறாயினும், அதிகரித்துவரும் குடும்ப வன்முறைகளை எதிர்ப்பதற்–கான ஒரு கருவியாக இந்த ஒப்பந்தத்தை காணும் மக்கள், தங்கள் கவலைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

---

**5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற திவ்யன்ஷ் சிங் பன்வார் மற்றும் இளவேனில் வாலறிவன் ஆகியோர் கீழ்காணும் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்களாவர்?**



அ) டென்னிஸ்

**ஆ) துப்பாக்கிச்சுடுதல் ☑**

இ) தடகளம்

ஈ) டேபிள் டென்னிஸ்

✓ தில்லியில் நடைபெற்று வரும் ISSF உலகக்கோப்பையில் 10 மீட்டர் ஏர் ரைபிள் கலப்பு அணி போட்டியில் இந்தியாவின் இளம் துப்பாக்கி சுடும் வீரர்களான திவ்யன்ஷ் சிங் பன்வார் மற்றும் இளவேனில் வாலறிவன் ஆகியோர் தங்கம் வென்றனர். பெண்கள் ஸ்கீட் போட்டியில் மற்றொரு இந்திய துப்பாக்கிச்சுடும் வீராங்கனை கணேமத் சேகோன் வெண்கலம் வென்றார். முன்னதாக, புது தில்லியில் நடந்து வரும் ISSF உலகக்கோப்–பையில், 10 மீட்டர் ஏர் பிஸ்டல் போட்டிகளில் இந்திய பெண்கள் மற்றும் ஆண்கள் அணிகள் தங்கப்பதக்கங்களை வென்றன.

---

**6. முதல் பழங்குடி கல்வி அமைப்புப் பள்ளியான, 'நியுபு நைவ்காம் யெர்கோ' திறக்கப்பட்டுள்ள மாநிலம் எது?**



அ) ஒடிஸா

**ஆ) அருணாச்சல பிரதேசம் ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) மிசோரம்

✓ அருணாச்சலபிரதேச மாநில முதலமைச்சர் பேமா கந்து, அம்மாநிலத்தின் முதல் முதல் பழங்குடி மொழிவழிக்கல்வி அமைப்புப் பள்ளியைத் திறந்து வைத்துள்ளார். 'நியுபு நைவ்காம் யெர்கோ' என்று பெயரிடப்பட்ட இந்தப் பள்ளி, பழங்குடி மரபுகள், கலாச்சாரம் மற்றும் மொழி ஆகியவற்றை மேம்–படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் உதவும். பள்ளியின் வளர்ச்சி மற்றும் பராமரிப்புக்காக ₹3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

**7. ஓமான் வளைகுடா அருகே, 'அரபிக்கடல் குழு போர்ப்பயிற்சி'யை நடத்தவுள்ள நாடு எது?**



அ) இந்தியா

**ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ) சீனா

ஈ) ஜப்பான்

✓ அமெரிக்க கடற்படையானது பெல்ஜியம், பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகியவற்றுடன் இணைந்து மைடாஸ்டில் ஒரு மிகப்பெரிய கடற்படைப் பயிற்சியை நடத்தவிருப்பதாக அறிவித்துள்ளது. 'அரபிக்கடல் குழு போர்ப் பயிற்சி'யில் நான்கு நாடுகளைச் சார்ந்த கப்பல்கள் பங்கேற்கவுள்ளன. ஈரானின் அணுவாற்றல் திட்டம் குறித்த பதட்டங்களுக்கு மத்தியில் அந்த பிராந்தியத்தில் இப்பயிற்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

---

**8. "Forest restoration: a path to recovery and well-being" என்ற கருப்பொருளுடன், நடப்பாண்டு (2021) மார்ச்.21 அன்று ஐநா'ஆல் கொண்டாடப்பட்ட நாள் எது?**




அ) பூச்சிகளுக்கான பன்னாட்டு நாள்

ஆ) இனங்களுக்கான பன்னாட்டு நாள்

**இ) வனங்களுக்கான பன்னாட்டு நாள் ☑**

ஈ) மரங்களுக்கான பன்னாட்டு நாள்

✓ மார்ச்.21ஆம் தேதியை ஐநா அவை வனங்களுக்கான பன்னாட்டு நாள் எனக்கொண்டாடுகிறது. இந்நாள், உலகம் முழுவதுமுள்ள பசுமையான காடுகளின் முக்கியத்துவத்தை நினைவுகூர்கிறது. "Forest restoration: a path to recovery and well-being" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். இந்த நாள், முதன்முதலில் ஐநா'ஆல் கடந்த 2012ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

**9. கென்–பெட்வா திட்டத்தைச் செயல்படுத்தும் நடுவண் அமைச்சகம் எது?**




அ) பாதுகாப்பு அமைச்சகம்

**ஆ) ஜல் சக்தி அமைச்சகம் ☑**

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) சுற்றுச்சூழல் அமைச்சகம்

✓ இந்தியாவின் முதல் ஆறுகள் இணைப்புத்திட்டமான கென்–பெட்வா திட்டத்தை மத்திய ஜல் சக்தி அமைச்சகம் செயல்படுத்தவுள்ளது. மத்திய பிரதேச மாநிலத்தில் பாய்ந்தோடும் கென் ஆற்றை உத்தர பிரதேசத்தில் பாயும் பெட்வா ஆற்றுடன் இணைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தை ஒரு தேசிய திட்டமாக செயல்படுத்த, பொது முதலீட்டு வாரியத்தின் ஒப்புதலை ஜல் சக்தி அமைச்சகம் கோரியுள்ளது.

**10. மாவட்டங்களின் ஆண்டு ஏற்றுமதி தரவரிசைக் குறியீட்டைத் தயாரிப்பதில் மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு உதவுவது எது?**

அ) NITI ஆயோக்

**ஆ) வணிக அமைச்சகம் ☑**

இ) திட்ட ஆணையம்

ஈ) தேசிய வளர்ச்சிக் கழகம்

✓ பல்வேறு மாவட்டங்களின் ஆண்டு ஏற்றுமதி தரவரிசைக் குறியீட்டைத் தயாரிக்க மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் உதவும் என மத்திய வணிகம் & தொழிற்துறை அமைச்சகம் அறிவித்தது. இக்குறியீடு ஒவ்வொரு மாவட்டத்தையும் அதன் ஏற்றுமதி போட்டித்தன்மைக்கு ஏற்ப வரிசைப்படுத்தும். மாவட்டத்தில் ஏற்றுமதி திறன்கொண்ட பொருட்கள் மற்றும் சேவைகளை அடையாள –ங்காண்பதே மாவட்ட ஏற்றுமதி செயல்திட்டமாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஜப்பான் ₹15,322 கோடி நிதி**

இந்திய உட்கட்டமைப்புத் திட்டங்களுக்காக ஜப்பான் அரசு கடனாகவும், மானியமாகவும் ₹15,322 கோடி நிதியளித்துள்ளது. தில்லி மெட்ரோ ரயில் திட்டத்தின் நான்காம் கட்டப்பணிகள் உள்பட பல்வேறு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்பட இருக்கிறது. இது தொடர்பாக தில்லியில் உள்ள ஜப்பான் தூதரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

இருநாடுகள் இடையிலான மானியம், கடன் தொடர்பான ஒப்பந்தத்தை இந்திய நிதியமைச்சகத்தின் பொருளாதாரத்துறை கூடுதல் செயலர் C S மோகபத்ராவும், ஜப்பான் தூதர் சுகோஷி சுசூகியும் பரிமாறிக்கொண்டனர். முதல்கட்டமாக ₹2.65 கோடி மானியம் அந்தமான்–நிகோபார் மின்சார திட்டங்களுக்கு வழங்கப்படும். பெங்களூரு மெட்ரோ இரண்டாம் கட்டத் திட்டத்துக்கு ₹3,442 கோடியும், தில்லி மெட்ரோ நான்காம் கட்டத்திட்டத்து –க்கு ₹7,932 கோடியும் கடனளிக்கப்படும்.

தில்லி மெட்ரோ ரயில் திட்டத்துக்காக 1997 முதல் இப்போது வரை சுமார் ₹47 கோடி வரை ஜப்பான் கடனுதவி அளித்துள்ளது. இது தவிர ஹிமாச்சல பிரதேசத்தில் பயிர் பகுப்பு முறை திட்டத்தின் இரண்டாவது கட்டத்துக்கு ₹737 கோடி கடனுதவி அளிக்கப்படும். இதன்மூலம் வேளாண் பொருள் உற்பத்தி அதிகரிக்கும். இராஜஸ்தானில் குடிநீர் திட்டத்தை செயல்படுத்த ₹3,032 கோடி கடனுதவி அளிக்கப்படவிருக்கிறது என்று அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**2. இந்தியப் பொருளாதாரம் மெதுவாக மீண்டு வருகிறது: IMF**

இந்தியப் பொருளாதாரம் மெதுவாக மீண்டு வருகிறது என்று சர்வதேச நிதியம் (IMF) தெரிவித்துள்ளது. அடுத்த மாதம் IMF – உலக வங்கி இடையிலான கூட்டம் நடைபெறவுள்ள நிலையில இத்தகவல் வெளியாகி உள்ளது. IMF செய்தித்தொடர்பாளர் கேரி ரைஸ் கூறுகையில், "இந்தியப் பொருளாதாரம் மெதுவான முறையில் மீண்டு வருகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மோசமான நிலையில் இருந்து இப்போது மெதுவாக வளர்ச்சி கண்டுள்ளது. 2020'ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டிலேயே இந்த வளர்ச்சி தெரியத் தொடங்கிவிட்டது.

இந்தியாவில் மூலதன உருவாக்கம் மேம்பட்டுள்ளது. COVID–19 பெருந் தொற்றால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு இப்போது நிலைமை மேம்பட்டுள்ளது. அதே நேரத்தில் வர்த்தகம், பொருள்கள்–சேவைகளின் விநியோகம் ஆகியவை இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரத்தில் இப்போது சில இடங்களில் உள்ளூரளவில் அமல்படுத்தப்ப –டும் பொதுமுடக்கம் சிலபாதிப்புகளை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது" என்றார். உலகப்பொருளாதாரம் தொடர்பான IMF அறிக்கை ஏப்ரல் 6ஆம் தேதியன்று வெளியிடப்படவுள்ளது.

**3. தில்லியில் நடைபெற்றுவரும் உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியா ஆடவர் 50 மீட்டர் ரைபிள் குழுப்பிரிவில் தங்கம் வென்றனர்.**

தில்லியில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியி –ல், இந்தியாவின் நிரஜ் குமார், ஸ்வப்னில் குசாலே, செயின் சிங் ஆகியோர் ஆடவர் 50 மீட்டர் ரைபிள் குழுப் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றனர். 50 மீட்டர் ரைபிள் கலப்பு இரட்டையர் குழுப்பிரிவில் இந்தியாவின் சஞ்சீவ் ராஜ்புத் – தேஜஸ்வினி சாவந்த் இணை தங்கப்பதக்கம் வென்றது.

இதேபிரிவில், இந்தியாவின் பிரதாப் சிங் – சுனிதி சௌகான் இணை வெண்கலம் வென்றது. ஆடவர் 25 மீட்டர் ரேபிட் பயர் பிஸ்டல் பிரிவில், விஜய்வீர் சித்து வெள்ளிப்பதக்கம் வென்றார். இந்தப்போட்டியில் இதுவரை இந்தியா 12 தங்கம், 7 வெள்ளி, 6 வெண்கலங்களை வென்றுள்ளது.

**4. ஏப்.2–ம் தேதி வரை 20 மாவட்டங்களில் அதிக வெப்பநிலை**

தமிழ்நாட்டில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு வேலூர், இராணிப்பேட் –டை, திருப்பத்தூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, நாமக்கல், கரூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், மயிலாடுதுறை ஆகிய 20 மாவட்டங்களில் ஏப்.2 வரை வெப்பநிலை உயரக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமைய –ம் தெரிவித்துள்ளது.

**5. இந்தியா – வங்கதேசம் இடையே 5 ஒப்பந்தங்கள் கையெழுத்து**

இந்தியா – வங்கதேச நாடுகளிடையே வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம், விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக வங்கதேசம் வந்துள்ள நிலையில், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. தலைநகர் டாக்காவில் நடைபெற்ற வங்கதேச சுதந்திர பொன்விழா ஆண்டு கொண்டாட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

முன்னதாக, கோபால்கஞ்ச் என்ற இடத்தில் உள்ள ஒரகண்டி கோயிலுக்கு பிரதமா் மோடி சென்று வழிபாடு நடத்தினார். பின்னர் கோபால்கஞ்ச் பகுதியில் வசிக்கும் மதுவா ஹிந்து சமூகத்தினரிடையே மோடி உரையாடினார். அப்போது அவர் பேசியதாவது:

**தொடக்கப்பள்ளி கட்டித்தரப்படும்:** மேலும், ஒரகண்டியில் இந்தியா சார்பில் ஒரு தொடக்கப்பள்ளி கட்டித்தரப்படும். அதோடு இங்குள்ள பெண்கள் நடுநிலைப்பள்ளி ஒன்று இந்தியா சார்பில் தரம் உயர்த்தித்தரப்படும் என்ற அறிவிப்பை பிரதமர் மோடி அப்போது வெளியிட்டார்.

**இந்தியா சார்பில் சமூக நலக்கூடம்:** பின்னர் சத்கிரா என்ற இடத்தில் உள்ள ஜெஸோரேஸ்வரி காளி கோயிலுக்கு பிரதமர் சென்றார்.

**புதிய இரயில்:** வங்கதேசத்தின் டாக்கா – மேற்கு வங்கத்தின் நியூ ஜல்பைகுரி இடையிலான புதிய பயணிகள் இரயிலை பிரதமர் மோடியும், ஷேக் ஹசீனாவும் காணொலி முறையில் தொடங்கிவைத்தனர். இருநாடு –களுக்கு இடையே இயக்கப்படும் மூன்றாவது பயணிகள் இரயில் இதுவா –கும். ஏற்கனவே, டாக்கா–கொல்கத்தா, குலானா–கொல்கத்தா இடையே பயணிகள் இரயில் உள்ளது.

**6. கோவோவாக்ஸ் தடுப்பூசி செப்டம்பரில் அறிமுகம்: சீரம் நிறுவனம்**

புதிய கோவோவாக்ஸ் தடுப்பூசி வரும் செப்டம்பர் மாதம் அறிமுகம் செய்யப்பட வாய்ப்புள்ளது என்று சீரம் இந்தியா நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி அடார் புனேவாலா கூறினார். புனேவில் உள்ள சீரம் நிறுவனம் ஏற்கனவே 'கோவிஷீல்ட்' கரோனா தடுப்பூசியை தயாரித்து இந்தியா மற்றும் பிற நாடுகளுக்கு விநியோகித்து வரும் நிலையில், அமெரிக்காவைச் சார்ந்த 'நோவாவாக்ஸ்' என்ற தடுப்பூசி தயாரிப்பு நிறுவனத்துடன் இணைந்து 'கோவோவாக்ஸ்' என்ற இரண்டாவது

கரோனா தடுப்பூசியையும் தயாரித்து வருகிறது. இந்தத் தடுப்பூசியின் ஒட்டுமொத்த நோய் எதிர்ப்புத்திறன் 89% என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய தடுப்பூசி வரும் ஜூன் மாதம் அறிமுகம் செய்யப்படும் என்று எதிர்பார்ப்பதாக கடந்த ஜனவரியில் அடார் புனேவாலா கூறியிருந்த நிலையில், இப்போது வரும் செப்டம்பரில் அறிமுகப்படுத்த வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

---

**7. போலந்து நாட்டில் இரண்டு தமிழ் இருக்கைகளுக்கு 7 ஆண்டுகளுக்கு பின் பேராசிரியர் பணி நியமன அறிவிப்பு**

மத்திய கலாச்சாரத் துறையின் கீழ் ICCR அமைப்பு செயல்படுகிறது. இதன் சார்பில் 1970ஆம் ஆண்டு முதல் பல்வேறு நாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் இந்திய அரசு சார்பிலான இருக்கைகள் அமைக்கப்பட்டுள் –ளன. இதில் ICCR அமைப்பால் தேர்வுசெய்யப்பட்டு அனுப்பப்படும் பேராசி –ரியருக்கான ஊதியத்தை மத்திய அரசு வழங்கும்.

வெளிநாடுகளின் 69 கல்வி நிறுவனங்களில் இந்திய இருக்கைகள் உள் –ளன. இதில் அதிகபட்சமாக இந்திக்கு 25'க்கும் மேற்பட்ட இருக்கைகளும் இதையடுத்து சமற்கிருதத்துக்கும் உள்ளன. தமிழுக்கு வெறும் இரண்டு இருக்கைகள், போலந்து நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றாக வார்ஸா நகரின் வார்ஸா பல்கலையில் இந்திய மொழிகள் துறையில் 47 ஆண்டுகளாக தமிழ் இருக்கை உள்ளது. இதன் அருகிலுள்ள கிராக்கூப் நகரின் கிராக்கூப்யாகி எலோனியன் பல்கலைக்கழகத்தில் 2008 முதல் தமிழ் இருக்கை உள்ளது.

இவற்றுக்கு 7 ஆண்டுகளாக பேராசிரியர்கள் அமர்த்தப்படவில்லை. இந்தச் சூழலில் போலந்தின் இரண்டு தமிழ் இருக்கைகளுக்கும் பேராசிரியர் பணி நியமன அறிவிப்பை ICCR தற்போது வெளியிட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் தமிழ்ப்பேராசிரியர்கள் அயல்பணியில் இங்கு பணியாற்ற விண்ணப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

---

**1.** முதன்முறையாக 'கட்டற்ற விண்வெளி குவாண்டம் தகவல்தொட-ர்பை' விளக்கிக்காட்டிய இந்திய அமைப்பு எது?

அ) HAL

ஆ) BEL

**இ) ISRO ☑**

ஈ) DRDO

- ✓ முதன்முறையாக, இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) சமீபத்தில் 300 மீட்டர் உயரத்திற்குமேல் விண்வெளி குவாண்டம் தகவல்தொடர்பு-களின் இருப்பை நிரூபித்துள்ளது. குவாண்டம்–கீ–மறைகுறியாக்கப்பட்-ட சமிக்ஞைகளைப் பயன்படுத்தி நேரலையில் இதனை நிரூபித்தது. ஆமதாபாத்தில் உள்ள விண்வெளி பயன்பாட்டு மையத்தில், கட்டற்ற–விண்வெளி குவாண்டம் விசை விநியோகம் நிரூபிக்கப்பட்டது.

---

**2.** கடந்த ஈராண்டுகளில் தனது 4ஆவது நாடாளுமன்ற தேர்தலை நடத்துகிற நாடு எது?



அ) வெனிசுலா

ஆ) தான்சானியா

**இ) இஸ்ரேல் ☑**

ஈ) சிலி

- ✓ கடந்த ஈராண்டுகளில் இஸ்ரேல் தனது 4ஆவது நாடாளுமன்றத் தேர்த-லை நடத்தியுள்ளது. இந்தத் தேர்தல், 2020 டிசம்பரில், அந்நாட்டின் நாடாளுமன்றம் ஒரு பட்ஜெட்டை ஏற்கத்தவறியதை அடுத்து தூண்டப்பட்-டது. இது, நேதன்யாகு மற்றும் அவரது முக்கிய போட்டியாளரான பென்னி காண்ட்ஸ் இடையே ஏழுமாதகால அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டை முடிவுக்குக் கொண்டு வந்தது.

---

**3.** எந்த நாடு தனது சோயுஸ்–2.1 என்ற ஏந்தி ஏவூர்தியைப் பயன்படு-த்தி 18 நாடுகளைச் சார்ந்த 38 செயற்கைக்கோள்களை வெற்றிகர-மாக விண்ணில் ஏவியது?



அ) சீனா

ஆ) ஜப்பான்

**இ) இரஷ்யா ☑**

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

- ✓ கஜகஸ்தானில் உள்ள பைக்கானூர் காஸ்மோட்ரோமில் இருந்து 38 வெளிநாட்டு செயற்கைக்கோள்களை இரஷ்யா வெற்றிகரமாக ஏவியது. இந்தச் செயற்கைக்கோள்கள் தென் கொரியா, ஜப்பான், ஜெர்மனி உள்ளிட்ட 18 நாடுகளைச் சார்ந்தவை. சோயுஸ்–2.1 என்ற ஏந்தி ஏவூர்தி, அனைத்து 38 செயற்கைக்கோள்களையும் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தியது. இச்செயற்கைக்கோள்களுள் சேலஞ்ச்–1 ஆனது, துனிசியா-வில் முழுமையாக தயாரிக்கப்பட்ட முதல் செயற்கைக்கோள் ஆகும்.

---

**4.** நீர்வளத்துறையில் ஒத்துழைப்பிற்காக, பின்வரும் எந்நாட்டுடனா-ன ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?



அ) நேபாளம்

**ஆ) ஜப்பான் ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) ஜெர்மனி

- ✓ இந்திய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்தின்கீழ் இயங்கும் நீர்வளம், ஆறுகள் மேம்பாடு மற்றும் கங்கை புத்தாக்கத் துறை மற்றும் ஜப்பான் அரசின் நிலம், உட்கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் சுற்றுலா அமைச்சகத்தின்கீழ் இயங்கும் நீர் மற்றும் பேரிடர் மேலாண்மை அலுவலகம் ஆகியவற்றுக்கிடையே நீர்வளம் தொடர்பான ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ தகவல், அறிவு, தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் அறிவியல்சார்ந்த அனுபவம் ஆகியவற்றை அதிகரிக்கவும், இருநாடுகளுக்கு இடையேயான கூட்டுத்திட்டங்களை செயல்படுத்தவும், நீர் மற்றும் டெல்டா மேலாண்மை, மற்றும் நீர் தொழில்நுட்பத் துறையில் நீண்டகால ஒத்துழைப்பை உருவாக்குவதற்காகவும் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. நீர் பாதுகாப்பு, மேம்படுத்தப்பட்ட நீர்ப்பாசன வசதிகள் மற்றும் நீர்வள மேம்பாட்டில் நிலைத்தன்மை ஆகியவற்றை அடைவதற்கு இந்த ஒத்துழைப்பு ஒப்பந்தம் உதவும்.

---

**5.** 'COVID–19'உம் சுற்றுலாவும்' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ள பன்னாட்டு அமைப்பு எது?

அ) NITI ஆயோக்

ஆ) NCAER

**இ) UNCTAD ☑**

ஈ) TERI

- ✓ ஐநா வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பான UNCTAD, அண்மையில், 'COVID–19'உம் சுற்றுலாவும்' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, உலக சுற்றுலாத்துறை குறைந்தது $1.2 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை அல்லது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.5 சதவீதத்தை இழக்கக்கூடும்.
- ✓ 8 மாதங்களுக்கும் மேல் பன்னாட்டு சுற்றுலா நடைபெறாமல் இருந்தால், இந்த இழப்பு சதவீதம் $2.2 டிரில்லியன் அமெரிக்க டாலர் அல்லது உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.8% ஆக உயரக்கூடும்.

---

**6.** மூத்தோர்களுக்காக போஷான் அபியான் திட்டத்தைத் தொடங்க-வுள்ள மத்திய அமைச்சகம் எது?

அ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

இ) சுகாதாரம் & குடும்பநல அமைச்சகம்

ஈ) ஊரக மேம்பாட்டு அமைச்சகம்

- ✓ மூத்தோர்களுக்காக போஷான் அபியான் திட்டத்தைத் தொடங்கவுள்ள-தாக சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் அறிவித்துள்ளது. கிராமப்பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகள் இத்திட்டத்தை செயல்படுத்து-ம் முகவர்களாக இருக்கும். முதியோர் இல்லங்களில் தங்கியிராத & கடுமையான ஊட்டச்சத்துக்குறைபாட்டால் பாதிக்கப்பட்ட பெரியவர்களு-க்கு இது ஊட்டச்சத்து ஆதரவை வழங்கும்.

---

**7.** ஐநா உலக நீர் மேம்பாட்டு அறிக்கை–2021'இன் தலைப்பு என்ன?




**அ) Valuing Water ☑**

ஆ) Water and Sanitation for All

இ) Water is Prime

ஈ) Water during COVID

- ✓ ஐநா அவையானது ஆண்டுதோறும், மார்ச்.22'ஐ உலக தண்ணீர் நாளாக கொண்டாடுகிறது. இந்த நாளைக் கொண்டாடுவதற்கான முக்கிய நோக்கம், "நீடித்த வளர்ச்சி இலக்கு 6 – 2030ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் நீர் மற்றும் நலவாழ்வை அடைவதற்கு ஆதரவளிப்பதா-கும்". இது தொடர்பான தீர்மானம், 1992 டிசம்பர் 22 அன்று ஐநா பொதுச் சபையால் நிறைவேற்றப்பட்டது.

---

**8.** ஒப்பந்தங்கள் மற்றும் சமரச வழிமுறைகளை அமல்படுத்துவதற்கா-ன செயல்திட்டங்களை உருவாக்குவதற்காக இந்திய அரசாங்கம் உருவாக்கிய 2 உயர்மட்ட பணிக்குழுக்களின் தலைவர்கள் யார்?



அ) நரேந்திர மோடி & இராஜ்நாத் சிங்

ஆ) நிர்மலா சீதாராமன் & அமித் ஷா

**இ) இராஜீவ் குமார் & அமிதாப் காந்த் ☑**

ஈ) Y M தியோஸ்தலி & உர்ஜித் படேல்

- ✓ ஒப்பந்தங்கள் மற்றும் சமரச வழிமுறைகளை அமல்படுத்துவதற்கான முறையான செயல்திட்டத்தை அமைப்பதற்காக இந்திய அரசு இரண்டு உயர்மட்ட பணிக்குழுக்களை அமைத்துள்ளது.
- ✓ பணிக்குழுவில் ஒன்று NITI ஆயோக் துணைத்தலைவர் இராஜீவ் குமார் தலைமையிலும் மற்றொரு குழு NITI ஆயோக் தலைமைச்செயலதிகாரி அமிதாப் காந்த் தலைமையிலும் உள்ளது. இப்பணிக்குழுக்கள், நாட்டில் உட்கட்டமைப்பு வளர்ச்சியை விரைவாக செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**9.** **மது அருந்துவதற்கான வயதை 25'லிருந்து 21'ஆக குறைத்த மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) உத்தர பிரதேசம்

ஆ) மத்திய பிரதேசம்

**இ) தில்லி ☑**

ஈ) ராஜஸ்தான்

Government of the National Capital Territory of Delhi

✓ தில்லி அரசு அதன் புதிய கலால் கொள்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அக்கொள்கையின்கீழ், தில்லியில் மது அருந்துவதற்கான குறைந்தபட்ச வயதை 25'லிருந்து 21 ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளது. தில்லி அரசு அமைத்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

---

**10.** **பாதுகாப்பின் பார்வையில், சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற 'வஜ்ரா' என்றால் என்ன?**

அ) ஆளில்லா வானூர்தி

**ஆ) கடலோர ரோந்துக்கப்பல் ☑**

இ) பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை

ஈ) தொலைநிலை கட்டுப்பாட்டு துப்பாக்கி



✓ இந்திய கடலோர காவல்படையின் ரோந்துக்கப்பலான 'வஜ்ரா' கப்பல் முறையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இது, லார்சன் மற்றும் டூப்ரோ நிறுவனத்தால் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டது. ஏழு கடல் ரோந்து கப்பல்களுள் இது ஆறாவது கப்பலாகும். இந்தக்கப்பலில் ஆயுத தளவாடங்கள், தொலைத்தொடர்பு கருவிகள், கட்டமைப்பு வசதிகள் பாதுகாப்பு அம்சங்கள் உள்ளிட்டவை நிரம்ப உள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய–அமெரிக்க கூட்டு கடற்படை பயிற்சி: கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதியில் தொடக்கம்**

இந்தியா – அமெரிக்கா இடையிலான கூட்டு கடற்படை பயிற்சி கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இரு நாடுகளிடையே வளா்ந்து வரும் பாதுகாப்பு மற்றும் ராணுவ ஒத்துழைப்பை பிரதிபலிக்கும் வகையில் இந்த இரண்டு நாள் கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்படுவதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனா். 'பாஸ்எக்ஸ்' என்ற இந்த கூட்டுப் பயிற்சியில் இந்தியா சாா்பில் 'ஷிவாலிக்' போா்க் கப்பலும், நீண்டதூர கண்காணிப்பு போா் விமானமான 'பி8ஐ' ஆகியவை ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அமெரிக்கா யுஎஸ்எஸ் தியோடோா் ரூஸ்வெல்ட் போா் விமானம் தாங்கி கப்பல் குழுவை ஈடுபடுத்தியுள்ளது. இந்த கப்பல் குழுவில் சிறிய போா் கப்பல்களும், ஏராளமான போா் விமானங்களும் இடம்பெற்றிருக்கும் என்ற அதிகாரிகள் தெரிவித்தனா்.

இதுகுறித்து இந்திய கடற்படை செய்தித்தொடா்பாளா் ஒருவா் கூறுகையில், 'இந்த கூட்டு பயிற்சியில் முதன் முறையாக இந்திய விமானப்படை போா் விமானங்களும் சோ்க்கப்பட்டுள்ளன. அமெரிக்க கப்பல் படையுடன் இணைந்து கூட்டுப் பயிற்சி மற்றும் அனுபவத்தை பெறும் வகையில் இந்திய விமானப் படைக்கு இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது' என்றாா். அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சா் லாய்ட் ஆஸ்டின் கடந்த வாரம் இந்திய பயணம் மேற்கொண்ட நிலையில், இந்த கூட்டு கடற்படை பயிற்சியை இரு நாடுகளும் தொடங்கியுள்ளன. அவருடைய பயணத்தின்போது, இந்தோ–பசிபிக் பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இரு நாடுகளிடையேயான பாதுகாப்பு மற்றும் ராணுவ ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது என்று இரு தரப்பிலும் தீா்மானக்கப்பட்டது.

---

2. தில்லி துணைநிலை ஆளுநருக்கு முதன்மை அதிகாரம்: மசோதாவுக்கு குடியரசுத் தலைவா் ஒப்புதல்

தில்லியில் மாநில அரசைவிட துணைநிலை ஆளுநருக்கு முதன்மை அதிகாரம் வழங்கும் மசோதாவுக்கு குடியரசுத் தலைவா் ராம்நாத் கோவிந்த் ஞாயிற்றுக்கிழமை ஒப்புதல் அளித்தாா். 'தில்லி அரசு திருத்த மசோதா 2021' என்ற அந்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவா் ஒப்புதல் அளித்திருப்பதை அரசிதழ் அறிவிக்கையின் மூலம் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்தச் சட்டத்தின்படி, தில்லி அரசானது எந்த நிா்வாக நடவடிக்கையை எடுக்கும் முன் துணைநிலை ஆளுநரின் கருத்தை கேட்க வேண்டும். இந்த மசோதா மக்களவையில் மாா்ச் 22–ஆம் தேதியும், மாநிலங்களவையில் மாா்ச் 24–ஆம் தேதியும் நிறைவேற்றப்பட்டது.

---

**3. ராணுவ தளவாடங்கள் கூட்டுத் தயாரிப்பு: இந்தியா, தென் கொரியா முடிவு**

இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு உறவை விரிவுபடுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக ராணுவ தளவாடங்களை கூட்டாகத் தயாரிப்பது, ஏற்றுமதி செய்வது, சைபா் மற்றும் விண்வெளித் துறைகளில் உளவுத் தகவல்கள் பரிமாற்றத்தை விரிவுபடுத்துவது உள்ளிட்டவற்றை மேற்கொள்ள இந்தியாவும் தென் கொரியாவும் ஒப்புக்கொண்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தன. பாதுகாப்புத் துறை அமைச்சா் ராஜ்நாத் சிங், தென்கொரிய பாதுகாப்புத் துறை அமைச்சா் சூ வூக் ஆகியோா் இடையே வெள்ளிக்கிழமை நடைபெற்ற பேச்சுவாா்த்தையின்போது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்கொரிய பாதுகாப்புத் துறை அமைச்சா் சூ வூக் 3 நாள் பயணமாக வியாழக்கிழமை இந்தியா வந்தாா். அவரும், பாதுகாப்புத் துறை அமைச்சா் ராஜ்நாத் சிங்கும் வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினா். இந்தப் பேச்சுவாா்த்தையின்போது, பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பில் இரு நாடுகளும் இணைந்து ஆராய்ச்சி, கூட்டு தயாரிப்பு, கூட்டு ஏற்றுமதியில் கவனம் செலுத்த முடிவு செய்தன. உத்தரபிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இரு பாதுகாப்புத் தொழில்துறை முனையங்களை ஏற்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சுயசாா்பு இந்தியா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இந்த முனையத்தில் முதலீடு செய்வதன் மூலம், அதில் உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள தென்கொரிய அமைச்சா் விருப்பம் தெரிவித்தாா்.

---

**4. உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல்: கடைசி நாளில் இந்தியாவுக்கு இரு தங்கம்**

உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் கடைசி நாளான ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்கு மேலும் இரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. தில்லியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் தொடக்க நாள் முதலே ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி, கடைசி நாளில் இரு தங்கம், ஒரு வெள்ளியை வென்றதோடு 30 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலிலும் முதலிடத்தைப் பிடித்தது. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆடவா் டிராப் அணி பிரிவில் பிருதிவிராஜ் தொண்டைமான், லக்ஷய் ஷியோரன், கினான் செனாய் ஆகியோா் அடங்கிய இந்திய அணி தங்கம் வென்றது. இதேபோல் மகளிா் டிராப் அணி பிரிவில் ஷ்ரேயஸி சிங், ராஜேஸ்வரி குமாரி, மணிஷா கீா் ஆகியோா் அடங்கிய இந்திய அணி 6–0 என்ற கணக்கில் கஜகஸ்தானை வீழ்த்தி தங்கம் வென்றது.

ஆடவா் 25 மீ. ரேபிட் ஃபயா் பிஸ்டல் பிரிவில் விஜய் வீா் சித்து, குருபிரீத் சிங், ஆதாா்ஷ் சிங் ஆகியோா் அடங்கிய இந்திய அணி வெள்ளிப் பதக்கம் வென்றது. இந்தப் போட்டியில் இந்தியா 15 தங்கம், 9 வெள்ளி, 6 வெண்கலம் என மொத்தம் 30 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

---

**5. 10–க்கும் மேற்பட்ட மாநிலங்களில் அதிகரித்து வரும் பாதிப்பு – கரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்த 5 அம்ச திட்டம் : மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியீடு**

நாட்டில் கரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த 5 அம்ச திட்டத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. கடந்த பிப்ரவரி முதல் கரோனா வைரஸ் மீண்டும் அதிக அளவில் பரவத் தொடங்கியுள்ளது. நாடு முழுவதும் கரோனா வைரஸ் தொற்று பரவல் இல்லாவிட்டாலும் கூட, 10–க்கும் மேற்பட்ட மாநிலங்களில் பாதிப்பு அதிகமாக இருக்கிறது. நேற்று ஒரே நாளில் 62 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கரோனா வைரஸ் தொற்று பாதிப்பு உறுதி செய்யப் பட்டுள்ளது.

மகாராஷ்டிராவில் 37 ஆயிரம் பேர் பாதிப்புக்கு ஆளான நிலையில், தமிழகம், கர்நாடகா, சத்தீஸ்கர், மத்தியபிரதேசம், டெல்லி ஆகிய மாநிலங்களில் தலா 1500–க்கு மேற்பட்டவர்களுக்கு தொடர்ந்து 2–வது நாளாக தொற்று பாதிப்பு பதிவாகி உள்ளது. இந்நிலையில் வேகமாக பரவி வருகிற கரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து விவாதிப்பதற்காக மத்திய அரசு நேற்று காணொலி காட்சி வழியாக உயர் மட்ட ஆலோசனை கூட்டம் நடத்தியது. இந்த கூட்டத்துக்கு மத்திய சுகாதாரத்துறை செயலாளர் ராஜேஷ் பூஷன்

தலைமை தாங்கினார். இதில் மகாராஷ்டிரா, குஜராத், ஹரியாணா, தமிழ்நாடு, சத்தீஸ்கர், மத்தியபிரதேசம், மேற்கு வங்கம், டெல்லி, ஜம்மு–காஷ்மீர், கர்நாடகா, பஞ்சாப் மற்றும் பிஹார் ஆகிய 12 மாநிலங்களின் சுகாதாரத்துறை செயலாளர்கள், கரோனா பாதிப்பு அதிகமாக உள்ள நாட்டின் 46 மாவட்டங்களை சேர்ந்த ஆட்சியர்கள், நகராட்சி ஆணையர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது ராஜேஷ் பூஷண் பேசியதாவது: அதிகளவு பாதிப்பை கொண்டுள்ள 46 மாவட்டங்களில் கடுமையான கட்டுப்பாடு மற்றும் பொது சுகாதார நடவடிக்கைகளில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். கரோனா பாதிப்பு அதிகம் உள்ள மாநிலங்கள் அனைத்தும் பரிசோதனையை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக ஆர்.டி–பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகளவில் சார்ந்து இருக்க வேண்டும். அதிக பாதிப்பு உள்ள பகுதிகளில் முகாம்களை அமைத்து தடுப்பூசிகளை போடவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

மேலும், தொற்று உறுதி செய்யப்படுகிறவர்களை உடனடியாக தனிமைப்படுத்தவும், அவர்களோடு தொடர்பில் இருந்தவர்களை விரைவாக கண்டறிந்து, அவர்களையும் பரிசோதித்து தனிமைப்படுத்த 72 மணி நேரத்துக்குள் நடவடிக்கை எடுக்குமாறும் அப்போது கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த கூட்டத்தின் முக்கிய நடவடிக்கையாக கரோனாவை கட்டுப்படுத்துவதற்கு 5 அம்ச திட்டம் ஒன்றை மத்திய அரசு அப்போது அறிவித்தது. அந்த 5 அம்ச திட்டம் வருமாறு:

1) பரிசோதனைகளை மிக அதிகளவில் நடத்துதல்.

2) பாதிக்கப்பட்டவர்களை உடனுக்குடன் தனிமைப்படுத்தி அவர்களின் தொடர்புகளை கண்டறிதல்.

3) பொது மற்றும் தனியார் சுகாதார வளாகங்களை மீண்டும் தயார்நிலையில் வைத்தல்.

4) சரியான கோவிட்–19 நடத்தை விதிமுறையை உறுதி செய்தல்.

5) அதிகளவில் பாதிப்புகள் பதிவாகி வரும் மாவட்டங் களில் தடுப்பு மருந்து வழங்கு வதற்கான இலக்கு சார்ந்த அணுகுமுறை ஆகியவையே இந்த 5 அம்சத் திட்டம் ஆகும். இதனை தீவிரமாக செயல் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், மாநிலங்கள் கரோனா கால விதிமுறைகளை பின்பற்றா தவர்களுக்கு கடுமையான அப ராதம் விதிக்குமாறும் அறிவுறுத் தப்பட்டது. இந்த கூட்டத்துக்கு பின்னர் மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் ஓர் அறிக்கையை வெளி யிட்டது. அதில் கூறியுள்ளதாவது: 70 சதவீத பாதிப்புகளை கரோனா கால விதிமுறைகளை பின்பற்ற செய்து கட்டுப்படுத்த முடியும். முன்னுரிமை பிரிவினருக்கு தடுப் பூசிகளை போடுவதில் கவனம் செலுத்தவேண்டும். சென்னை, மும்பை, கொல்கத்தா, கர்னால் ஆகிய 4 இடங்களில் உள்ள தடுப்பூசி கிடங்குகளில் போதுமான தடுப்பூசி இருப்பு வைக்கப்பட்டு உள்ளது.

---

### 6. 15 ஆண்டுகளுக்கு மேல் பழசான வாகனங்களின் எண்ணிக்கை 4 கோடி– 70 லட்சத்துடன் கர்நாடகா முதலிடம்

இந்திய சாலைகளில் இயங்கும் மொத்த வாகனங்களில் 4 கோடி வாகனங்கள் 15 ஆண்டுகளுக்கு மேலானவை என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதில் அதிகபட்சமாக கர்நாடக மாநிலத்தில் மட்டும் 70 லட்சம் இயங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சக இணையதளத்தில் 15 ஆண்டுகளுக்கு மேலாக சாலைகளில்இயங்கும் வாகனங்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஆந்திரா, மத்தியப் பிரதேசம், தெலங்கானா, லட்சத்தீவுகள் ஆகிய பகுதிகளில் இயங்கும் வாகனங்களின் விவரங்கள் தங்களிடம் இல்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4 கோடி பழைய வாகனங்களில் 2 கோடிக்கும் அதிகமானவை 20 ஆண்டுகளுக்கு மேலானவை என அமைச்சகம் தெரிவித்துள்ளது. பழைய வாகனங்கள் மீதுகடுமையான வரி விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி மாநில அரசுகளுடன் கலந்து பேசி பசுமை வரியை விதிக்கப்போவதாக கடந்த ஜனவரி மாதம் அறிவித்தது. சுற்றுச் சூழல் மாசுபடுவதைக் குறைக்க இத்தகைய நடவடிக்கையை எடுக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன்படி தகுதிச் சான்றுஅளிக்கும்போது பழைய வாகனங்களுக்கு தற்போது விதிக்கப்படும் கட்டணத்தை விட 10 சதவீதம் முதல் 25சதவீதம் வரை கூடுதலாக விதிக்க முடிவு செய்யப்பட்டுள் ளது. இவற்றின் மீது சாலைவரியும் கூடுதலாக விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் சுற்றுச் சூழலை மாசுபடுத்தாத பேட்டரியில் இயங்கும் வாகனங்களுக்கு வரி விலக்கு அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல சிஎன்ஜி மற்றும் எல்பிஜி–யில் இயங்கும் வாகனங்களுக்கு கூடுதல் வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, எதிர்வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டில் பழைய வாகனங்களை முற்றிலும் அழிப்பது தொடர்பான புதிய கொள்கையும் அறிவிக்கப்பட்டுள் ளது. இதன்படி பழைய வாகனங்களை அழித்து புதிய வாகனங்களை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு 5 சதவீதம் வரையில் விலைக் கழிவு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் 15 ஆண்டுகளுக்கு மேலான வாகனங்களின் எண்ணி'கை 56.54 லட்சம். இதில் 24.55 லட்சம் வாகனங்கள் 20 ஆண்டு பழமையானவையாகும். டெல்லியில் 49.93 லட்சம் வாகனங்கள் உள்ளன. இவற்றில் 35.11 லட்சம் வாகனங்கள் 20ஆண்டுகளுக்கு மேலானவை யாகும். கேரளாவில் 34.64 லட்சம் பழைய வாகனங்கள் 15 ஆண்டுகளுக்கு மேலான வையாகும். தமிழகத்தில் 33.43 லட்சம் வாகனங்களும், பஞ்சாபில் 25.38 லட்சம் வாகனங்களும், மேற்கு வங்கத்தில் 22.69 லட்சம் பழைய வாகனங் களும் உள்ளன.

---

### 7. 4 கோடி கிராமப்புற குடும்பங்களுக்குகுழாய் மூலம் குடிநீா்: அமைச்சகம்

இந்தியாவில் 2019–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 4 கோடி கிராமப்புற குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிநீா் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக ஜல் சக்தி அமைச்சகம் திங்கள்கிழமை தெரிவித்தது. இதுதொடா்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: 2024–ஆம் ஆண்டுக்குள் அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் குழாய் மூலம் குடிநீா் வழங்கும் நோக்கில் ஜல் ஜீவன் திட்டத்தை பிரதமா் நரேந்திர மோடி 2019, ஆக. 15–ஆம் தேதி அறிவித்தாா். அத்திட்டத்தில், 4 கோடி கிராமப்புற குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிநீா் விநியோகம் செய்யப்பட்டுள்ளதன் மூலம் புதிய மைல்கல் எட்டப்பட்டுள்ளது.

மாநில அரசுகளுடன் இணைந்து இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது 7.24 குடும்பங்கள் (38 சதவீதம்), அதாவது மூன்றில் ஒரு பங்கு ஊரக குடும்பங்கள் குழாய் மூலம் குடிநீரைப் பெறுகின்றன. இதில் 100 சதவீதம் குழாய் மூலம் குடிநீா் வழங்கி கோவா முதல் மாநிலமாகவும், அடுத்த இடங்களில் தெலங்கானா, அந்தமான் மற்றும் நிகோபாா் தீவுகளும் உள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 8. தமிழக காவல் துறையில் இருந்து முதல்முறையாக தேசிய ஆணழகன் போட்டிக்கு தேர்வான தலைமைக் காவலர்

சென்னை அடையாறு போக்குவரத்து காவல் துறையில் தலைமைகாவலராக பணிபுரிபவர் புருஷோத்தமன். இவர் கடந்த 2002–ம் ஆண்டு தமிழ்நாடு காவல்துறையில் 2–ம் நிலை காவலராக பணியில் சேர்ந்தார். அதற்கு முன்பே, தனது 18 வயது முதல் பல்வேறு ஆணழகன் போட்டிகளில் பங்குபெற்று 'மிஸ்டர் சென்னை', 'மிஸ்டர் தமிழ்நாடு' என பல பட்டங்களை பெற்றுள்ளார். ஏற்கெனவே 2000, 2001–ம் ஆண்டுகளில் 'மிஸ்டர் தமிழ்நாடு' பட்டம் வென்ற இவர், 2002–ல் காவல் பணியில் இணைந்த பிறகும்,போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்றார். 2004 முதல் 2008 வரை தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் என மொத்தம் 7 ஆண்டுகள் 'தமிழ்நாடு ஆணழகன்' போட்டியில் கலந்துகொண்டு 7 முறை 'மிஸ்டர் தமிழ்நாடு' பட்டம் பெற்றார்.

கடந்த 2008–ல் எதிர்பாராதவித மாக ஒரு விபத்தில் சிக்கியதால், புருஷோத்தமனுக்கு எந்தவித கடுமையான உடற்பயிற்சியும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.அதில் இருந்து மீண்டு வந்து, தீவிர உடற்பயிற்சி மேற்கொண்டார். சென்னையில் 2018–ல் நடந்த 'மிஸ்டர் ஆணழகன் தமிழ்நாடு' போட்டியில் கலந்துகொண்டு, 80 கிலோ பிரிவில் தங்கம் வென்றார்.மேலும், அனைத்து எடைப் பிரிவுகளிலும் சாம்பியன் பட்டத்தை வென்று 'மிஸ்டர் தமிழ்நாடு' பட்டத்தை மீண்டும் வென்றார்.

இந்நிலையில், 49–வது சீனியர் மிஸ்டர் தமிழ்நாடு போட்டி கடந்த 28–ம் தேதி நடைபெற்றது. அதில் தமிழ்நாடு காவல்துறை சார்பாக 80 கிலோ எடைப் பிரிவில் பங்கேற்ற புருஷோத்தமன், வெண்கலப் பதக்கம் வென்றார். இதையடுத்து, டெல்லியில் வரும் ஏப்ரல்4–ம் தேதி நடக்க உள்ள ஃபெட ரேஷன் கோப்பை மற்றும் ஏப்ரல் 23, 24–ம் தேதிகளில் நடைபெறும் இந்திய அளவிலான ஆணழகன் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

---

**9. சேதி தெரியுமா?**

மார்ச் 19: பஞ்சாபில் நடைபெற்ற தேசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 200 மீ. ஓட்டப் போட்டியில் திருச்சியைச் சேர்ந்த தனலட்சுமி 23.26 விநாடிகளில் தொலைவைக் கடந்து புதிய சாதனைப் படைத்தார். 1998இல் இதே இலக்கை 23.30 விநாடிகளில் பி.டி.உஷா கடந்திருந்த சாதனையைத் தனலட்சுமி முறியடித்தார்.

மார்ச் 20: தமிழகத்தில் பட்டியலினத்தைச் சேர்ந்த தேவேந்திர குலத்தார், கல்லாடி, குடும்பர், பள்ளர், பண்ணாடி, வாதிரியார், கடையன் ஆகிய 7 சாதியினரைத் தேவேந்திர குல வேளாளர் என்கிற பொதுப் பெயரில் அழைக்கும் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

மார்ச் 21: சர்வதேச காசநோய் தடுப்புக் கூட்டாண்மை வாரியத்தின் தலைவராக மத்திய சுகாதார துறை அமைச்சர் ஹர்ஷவர்தன் நியமிக்கப்பட்டார்.

மார்ச் 22: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 4,220 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அதிக பட்சமாக கரூரில் 77 பேர், குறைந்த பட்சமாக தியாகராய நகரில் 14 பேர் போட்டியிடுகின்றனர். புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளில் 324 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மார்ச் 23: 2020ஆம் ஆண்டுக்கான காந்தி அமைதி விருது 'வங்க பந்து' என்றழைக்கப்படும் ஷேக் முஜிபூர் ரஹ்மானுக்கு வழங்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்தது. இந்த விருது 1995ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுவருகிறது.

மார்ச் 23: 67ஆவது தேசியத் திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டன. 'அசுரன்' சிறந்த தமிழ் திரைப்படமாகவும், அப்படத்தில் நடித்த தனுஷ் சிறந்த நடிகராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். விஜய்சேதுபதி (சிறந்த துணை நடிகர்), நாகவிஷால் (சிறந்த குழந்தை நட்சத்திரம்), டி.இமான் (சிறந்த இசையமைப்பாளர்– பாடல்கள்) ஆகியோரும் விருதுகளுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

மார்ச் 25: உச்ச நீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாவதற்கு என்.வி.ரமணாவின் பெயரைத் தற்போதைய தலைமை நீதிபதி போப்டே பரிந்துரைசெய்தார். இவருடைய பதவிக்காலம் ஏப்ரல் மாதத்துடன் நிறைவடைகிறது.

மார்ச் 26: அமெரிக்க வரலாற்றில் முதன்முறையாக அதிபர் ஜோ பைடனின் அமைச்சரவையில் துணை சுகாதார அமைச்சர் பதவிக்குத் திருநங்கையான மருத்துவர் ரேச்சல் லெவின் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**1. இந்தியாவுடன் தாயக பாதுகாப்பு பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்கவுள்ள நாடு எது?**



அ) ஜப்பான்

**ஆ) அமெரிக்கா ☑**

இ) ஐக்கியப் பேரரசு

ஈ) இரஷ்யா

✓ US தாயக பாதுகாப்புத் துறையின் அறிவிப்பின்படி, US – இந்தியா தாயக பாதுகாப்பு பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க இந்தியாவும் அமெரிக்காவும் முடிவு செய்துள்ளன. இணைவெளிப் பாதுகாப்பு மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பம் போன்ற முக்கியமான விஷயங்களைப் பற்றி விவாதிப்பதை இப்பேச்சுவார்த்தை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ வன்முறை தீவிரவாதத்தை ஒழித்துக் கட்டுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இருநாடுகளுக்கும் இடையிலான முதல் தாயக பாதுகா–ப்பு பேச்சுவார்த்தை, கடந்த 2011ஆம் ஆண்டில் நடைபெற்றது.

---

**2. எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தில் ஷாஹீத் பகத் சிங் ஸ்மாரக்கை, மத்திய கல்வி அமைச்சர் திறந்துவைத்தார்?**



அ) பஞ்சாப்

**ஆ) புது தில்லி ☑**

இ) உத்தர பிரதேசம்

ஈ) ஹரியானா

✓ தில்லி பல்கலைக்கழகமானது பகத்சிங், சுக்தேவ் தாப்பர் மற்றும் சிவராம் இராஜ்குரு ஆகியோரின் தியாகத்தின் 90 ஆண்டுகால நிறைவை நினைவுகூருவதற்காக 'ஷாஹீத் திவாஸ்' என்றவொரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. மத்திய கல்வியமைச்சர் ரமேஸ் பொக்ரியால், மெய்நிக–ராக இந்த நிகழ்வைத் தொடங்கிவைத்தார்.

✓ பகத்சிங் ஸ்மராகில் தற்போதுள்ள விடுதலைப் போராளிகள் பற்றிய நூல்–களின் தொகுப்பு "ஷாஹீத் ஸ்மிருதி புஸ்தகாலயா" என்று மாற்றப்படுவ–தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**3.'Global Economic Outlook – GEO' என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிடுகிற உலகளாவிய மதிப்பீட்டு நிறுவனம் எது?**

**அ) Fitch Ratings ☑**

ஆ) CRISIL

இ) Standard & Poor

ஈ) Ind–RA

Fitch Ratings

✓ அமெரிக்க வரவு மதிப்பீட்டு நிறுவனமான பிட்ச், 'Global Economic Outlook – GEO' என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிடுகிறது. அதன் அண்மைய பதிப்பில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி மதிப்பீட்டை அடுத்த நிதியாண்டில் 12.8% ஆக மாற்றியுள்ளது. முன்னதாக, இம்மதிப்பீட்டு நிறுவனம், இந்தியாவின் வளர்ச்சி விகிதத்–தை 11% என மதிப்பிட்டிருந்தது.

✓ தளர்வான நிதிநிலைப்பாடு மற்றும் சிறந்த வைரஸ் கட்டுப்பாடு அம்சம் ஆகியவை இதற்கான காரணங்களாக கூறப்பட்டுள்ளன. 2023ஆம் நிதி ஆண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி 5.8 சதவிகிதத்துக்கு குறையும் என்றும் பிட்ச் எதிர்பார்க்கிறது.

---

**4. 7.5% என்ற விகிதத்தில், காசநோய் பாதிப்பில் மிகப்பெரிய சரிவை பதிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) கேரளம் ☑**

இ) மகாராஷ்டிரம்

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

✓ கேரள மாநிலத்தில், 2015–20'க்கு இடையில் காசநோய் பாதிப்பு 37.5% குறைந்துள்ளது. இதன்மூலம், ஆண்டு சரிவு விகிதத்தை 7.5% ஆக அம்மாநிலம் பதிவுசெய்துள்ளது. உலகளாவிய சரிவு விகிதம் 2–3% மட்டுமே இருக்கும் நிலையில், கேரளத்தின் இந்தச் சரிவு விகிதம் மிகவும் குறிப்பிட–த்தக்கதாகும்.

✓ காசநோய் ஒழிப்பை நோக்கிய முன்னெடுப்புகளுக்காக, மத்திய சுகாதார அமைச்சகத்தால் வழங்கப்படும் சான்றிதழில், வெண்கலப்பதக்கத்தையும் கேரள மாநில அரசு வென்றுள்ளது.

---

**5. அண்மைய பன்னாட்டு அறிவுசார் சொத்துக் குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ) 20

ஆ) 30

**இ) 40 ☑**

ஈ) 50

40

✓ பன்னாட்டு அறிவுசார் சொத்துக் குறியீட்டின் சமீபத்திய ஆண்டு பதிப்பில் இந்தியா 40ஆம் இடத்தில் உள்ளது. இக்குறியீட்டை, US Chamber of Commerce Global Innovation Policy Centre (GIPC) ஆண்டுதோறும் வெளியிடுகிறது. காப்புரிமை மற்றும் பதிப்புரிமை கொள்கைகள் முதல் அறிவுசார் சொத்துக்களை வணிகமயமாக்குதல் வரை பல கூறுகளில், 53 உலக பொருளாதாரங்களில் உள்ள அறிவுசார் சொத்துரிமைகளை இந்தக் குறியீடு மதிப்பிடுகிறது.

---

**6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "மன்யங்கொண்டா ஜாதரா" என்றால் என்ன?**



அ) பண்டைய ஹரப்பர் தளம்

ஆ) புத்த விகாரம்

**இ) மாநிலங்களுக்கு இடையேயான மதஞ்சார் விழா ☑**

ஈ) விடுதலைக்கு முந்தைய இயக்கம்

✓ மன்யங்கொண்டா ஜாதரா என்பது ஆந்திர பிரதேசம் மற்றும் ஒடிஸா ஆகிய மாநிலங்களுக்கு இடையேயான மதஞ்சார் விழாவாகும். இந்த விழாவில், ஆந்திர பிரதேச மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டத்தின் மொத்துகுதேம் மண்டலத்தில் உள்ள பொல்லூரு கிராமத்தில் ஒடிஸா மாநிலத்திற்கு கடவுளர் சிலைகளை மாற்றுவதும் அடங்கும்.

✓ கடந்த காலங்களில், இந்தத் திருவிழாவின்போது விரும்பத்தகாத நிகழ்வு–களும் இடதுசாரி தீவிரவாதங்களும் பதிவாகியுள்ளன. ஆனால், ஏராள–மான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக, இந்த ஆண்டின் திருவிழா அமைதியாக நடந்தேறியது.

---

**7.இந்தியாவின் UPSC'க்கும் பின்வரும் எந்த நாட்டின் தேர்வாணை–யத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**

அ) இலங்கை

ஆ) வங்காளதேசம்

**இ) ஆப்கானிஸ்தான் ☑**

ஈ) பாகிஸ்தான்

✓ இந்தியாவின் மத்திய பணியாளர் தேர்வாணையம் (UPSC) மற்றும் ஆப்கானிஸ்தானின் சுயாதீன நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் குடிமைப் பணிகள் ஆணையம் (IARCSC) ஆகியவற்றுக்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. IARCSC மற்றும் UPSC ஆகியவற்றுக்கு இடையேயான உறவை இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வலுப்படுத்தும்.

✓ பணியாளர்கள் தேர்வில் இருதரப்புக்கும் உள்ள அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தை பகிர்ந்துகொள்ளவும் இது வழிவகுக்கும்.

---

**8. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நிரந்தர சிந்து ஆணையத்தின் 116ஆவது கூட்டம் நடைபெற்ற இடம் எது?**



அ) லாகூர்

**ஆ) புது தில்லி ☑**

இ) ஜெய்ப்பூர்

ஈ) ஜலந்தர்

✓ இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நிரந்தர சிந்து ஆணை–யக்கூட்டத்தின் 116ஆவது கூட்டம் சமீபத்தில் புது தில்லியில் நடந்தது. இந்தச் சந்திப்பு, இரண்டரை ஆண்டுகளுக்கு மேலான இடைவெளிக்குப்

பின்னர் நடந்தது. பாகிஸ்தான் தேசிய நாளுடன் இச்சந்திப்பு ஒத்துப்போ–னது. இரண்டு நாள் நடைபெற்ற இக்கூட்டம், இந்திய தரப்பில் சிந்து நீர் ஆணையர் பிரதீப் குமார் சக்சேனா தலைமையில் நடைபெற்றது.

**9. 1921'இல், பின்வரும் எந்த இந்தியத்தலைவரின் ஒடிஸா பயணம் குறித்த நினைவு அஞ்சல்தலை அண்மையில் வெளியிடப்பட்டது?**




அ) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

ஆ) பாபாசாகேப் அம்பேத்கர்

**இ) 'மகாத்மா' காந்தி ☑**

ஈ) 'கர்மவீரர்' காமராஜர்

✓ 'மகாத்மா' காந்தி, கடந்த 1921ஆம் ஆண்டில் (100 ஆண்டுகளுக்கு முன்பு) முதன்முறையாக ஒடிஸா மாநிலத்துக்கு வருகைதந்தார். மேலும் அவரது ஒத்துழையாமை இயக்கத்தின் ஒருபகுதியாக மக்கள் கூட்டத்தின்முன் அவர் உரையாற்றினார். இந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில், 'மகாத்மா காந்தியின் ஒடிஸாவுக்கான முதல் வருகையின் நூறாம் ஆண்டு' குறித்த நினைவு அஞ்சல்தலை சமீபத்தில் வெளியிடப்பட்டது.

**10. இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



அ) பங்கஜ் குமார்

ஆ) குருபிரசாத் மோகபத்ரா

இ) அருண்குமார்

**ஈ) சஞ்சீவ் குமார் ☑**

✓ மகாராஷ்டிர கேடரின் 1991ஆம் ஆண்டு தொகுதி இ. ஆ. ப அதிகாரியான சஞ்சீவ் குமார், இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையத்தின் (AAI) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். பணியாளர் அமைச்சகம் பிறப்பித்த உத்தரவின்படி, ஆதிஷ் சந்திரா, இந்திய உணவுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக இருப்பார். வெவ்வேறு அமைச்சகங்களுக்–கு, 22 அதிகாரத்துவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. டி20 தரவரிசை: முதலிடத்தில் தொடரும் ஷஃபாலி வர்மா**

மகளிருக்கான ICC டி20 தரவரிசையில் பேட்ஸ்வுமன்கள் பிரிவில் இந்தியாவின் தொடக்க வீராங்கனை ஷஃபாலி வர்மா தொடர்ந்து முதலிட–த்தில் நீடிக்கிறார். தென்னாப்பிரிக்க மகளிர் அணிக்கு எதிரான தொடர் நிறைவடைந்த நிலையில், அவர் 776 புள்ளிகளுடன் அந்த இடத்தில் இருக்க, ஆஸ்திரேலியாவின் பெத் மூனி 741 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், நியூஸிலாந்தின் சோபி டிவைன் 712 புள்ளிகளுடன் 3'ஆம் இடத்திலும் இருக்கின்றனர்.

இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா ஓரிடம் முன்னேறி 693 புள்ளிகளுடன் 6ஆவது இடத்துக்கு வந்துள்ளார். முதல் 10 இடங்களுக்குள்ளாக மற்றொரு இந்தியராக ஜெமிமா ரோட்ரிகஸ் 640 புள்ளிகளுடன் 9ஆவது இடத்தில் உள்ளார். தென்னாப்பிரிக்க அணியில் கேப்டன் சுனே லஸ் ஓரிடம் முன்–னேறி 37ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

பௌலர்கள் பிரிவில் இந்தியாவின் இராஜேஷ்வரி கெய்க்வாட் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான கடைசி டி20 ஆட்டத்தில் 3 விக்கெட் வீழ்த்தி வெற்றிக்கு வழிவகுத்ததன் பேரில் 12 இடங்கள் முன்னேற்றம் கண்டுள்ளா–ர். தரவரிசை வரலாற்றில் முதல்முறையாக அவர் 13ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அவர் 658 புள்ளிகளுடன் அந்த இடத்திலிருக்க, அருந்ததி ரெட்டி 15 இடங்கள் முன்னேறி 56ஆவது இடத்தை எட்டியுள்ளார். முதல் 10 இடங்களுக்குள்ளாக தீப்தி சர்மா 705 புள்ளிகளுடன் 7ஆம் இடத்திலும், இராதா யாதவ் 702 புள்ளிகளுடன் 8ஆம் இடத்திலும் உள்ளனர்.

தென்னாப்பிரிக்காவின் டுமி சிகுகுனே 7 இடங்கள் முன்னேறி 42ஆவது இடத்தை எட்டியுள்ளார். நாடினே கிளார்க் 2 இடங்கள் முன்னேறி, சக நாட்டவரான மொஸ்லின் டேனியல்ஸுடன் 66ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார். இங்கிலாந்தின் சோபி எக்லஸ்டன் (799), தென் ஆப்பிரிக்காவின் ஷப்னிம் இஸ்மாயில் (763), இங்கிலாந்தின் சாராகிளென் (755) ஆகியோர் பௌலர்கள் பிரிவில் முறையே முதல் 3 இடங்களில் உள்ளனர்.